டாக்டர் நா. மகாலிங்கம்

மாணிக்க வாசகர்

சேக்கிழார்

காரைக்கால் அம்மையார்



ஞானபரம்பரை

தொகுதி 2

வர்த்தமானன்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அருட்செல்வர்

டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள்

வழங்கும்

ஞான பரம்பரை

அருளாளப் பெருமக்களின்

வாழ்வு - வாக்கு - பணி

பற்றிய நூல் தொகுப்பு

தொகுதி இரண்டு

வர்த்தமானன் பதிப்பகம்

சென்னை - 17.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முதற் பதிப்பு : 2006
(இராமானந்த அடிகளார் அறக்கட்டளை)

இரண்டாம் பதிப்பு : 2009
(இராமானந்த அடிகளார் அறக்கட்டளை)

மூன்றாம் பதிப்பு : 2014
(வர்த்தமானன் பதிப்பகம்)

பத்து தொகுதிகளும் சேர்த்து
விலை ரூ. 2500/-

வெளியீடு :
வர்த்தமானன் பதிப்பகம்
21, இராமகிருஷ்ணா தெரு, சென்னை -17.

அச்சிடல் :
அருணா கிராபிக்ஸ், சென்னை -17. போன் : 24345058
ஈஸ்வரி ஆப்செட், சென்னை -5. போன் : 28480481, 42157817

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அருட்செல்வர் முன்னுரை

ஞானம் என்றால் என்ன?

மெய்யுணர்வினை – செம்பொருளைக் கட்டிக்காப்பது ஞானம். ஞாத்தல் என்றால் கட்டுதல். ஞாண் கட்டும் கயிறு என்று பொருள்படுவதைக் காணலாம்.

ஐம்புலன்களைக் கட்டி உள்ளத்தை ஓரிடத்தே நிறுத்துவது ஞானம்.

திருவள்ளுவர்,

"சென்ற இடத்தால் செலவிடா தீது ஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

என்கிறார்.

புலன்களை அவை மேயும் பக்கமெல்லாம் அலையவிடாமல் தடுத்து, ஒரு நல்ல குறிக்கோளோடு பிணைப்பது அறிவு என்பது இத்திருக்குறளின் பொருள்.

ஆன்மிகவாதிகளின் குறிக்கோள் "பிரமத்தில் - பரம்பொருளில் லயிப்பது - ஒன்றுவது"; அறிவியல்வாதிகளின் குறிக்கோள் "ஒரு பௌதீகப் பொருளின் அல்லது நிகழ்வின் காரண காரியங்களை ஆராய்ந்து அவற்றை உறுதிசெய்து உலக நன்மைக்குப் பயன்படுத்துவது."

ஆன்மிகம்கூட அறிவியலின் ஒரு பகுதியே என்பார்கள். களங்கள் வேறானாலும் நோக்கம், சமுதாய நன்மையாகவே முடியவேண்டும்.

பாரதியார் மிக அழகாகக் கூறினார்:

"ஊருக்கு உழைத்திடல் யோகம் - நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும்போதும் - உளம்
பொங்கல் இலாத அமைதி மெய்ஞ்ஞானம்."

உள்ளுணர்வாகிய மெய்யுணர்வால் உலக ஈடேற்றத்தைப் பற்றிச் சிந்திப்பது ஞானம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவ்வறிவால் காணப்படுவது செம்பொருள். ஆகையால், ஞானியருடைய உபதேச மொழிகளைச் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் என்பர்.

பாரதியார் கூறும் மெய்ஞ்ஞானம் வாய்க்கவேண்டுமானால் ஒருவன் தன் புலன்கள்மீது முழு அதிகாரம் செலுத்த வல்லவனாக வேண்டும்.

கண்ணபிரான் போர்க்களத்தில் பார்த்தனுக்குக் கீதையைப் போதித்தான். போர் தொடங்க ஆயத்தமாய் அணிவகுத்திருந்த போது 18 அத்தியாயம் கொண்ட முழு நூலைப் போதிப்பது சாத்தியமா எனில், சாத்தியமே! சீடனோ புலன்களை வென்ற புண்ணியன். ஆசிரியனோ கடவுளின் அவதாரம். அருளாளர்களுக்குக் காலம் இடம் அவர் வசத்திற்கு உள்ளாகும். ஒரு நொடியில் மாணவன் உள்ளத்தில் எழுந்த கேள்வி களுக்கெல்லாம் விடையும் கிடைத்தது, விளக்கம் கிடைத்தது.

கல்லால மரத்தின்கீழ் மௌனத்திலேயே கைவிரல் காட்டிக் குறிப்பினால் விளங்கவைக்கும் உபதேசம் மாணவர்களுக்குக் கிடைத்தது. வள்ளற்பெருமான் தமக்கு ஒரு நொடிப்பொழுதிலே இறைவன் சாகாக்கலையை உணர்த்தினாரெனக் கூறுவார்.

ஆக, மெய்ஞ்ஞானிகள் ஐந்தவித்தவர் என்பதும் அருள் ஞான வித்தகர்கள் என்பதும் அவர்கள் காலத்தையும் இடத்தையும் கட்டியாள வல்லவர்கள் என்பதும் தம் அனுபவங்களைத் தம் மாணவப் பரம்பரை வாயிலாக இன்றுவரை உலகிற்கு வழங்கி வருகின்றனர் என்பதும் நாம் உணரலாம்.

இந்திய நாட்டில் அப்படி என்னதான் இருக்கிறது என்று கேட்டால், பாரதியார் கூறிய உரை நம் நினைவில் நிற்க வேண்டும்:

பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு,

பன்னரும் உபநிட நூல் எங்கள் நூலே,
பார்மிசை ஏதொரு நூலிது போலே!

பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு.
பாரத நாடு பழம்பெரு நாடு.
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே

என்று போற்றுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இன்றைய நிலை என்ன?

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே
அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

என்பது ஓரளவு உண்மைதான். அறிவியல் மேற்கே தோன்றி வாழ்க்கை நிலை மெத்தவும் உயர்ந்துவருகிறது. எங்கும் தொழில்கள் வளர்கின்றன. செல்வம் கொழிக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் ஆஸ்திரேலியாவுக்கும் நம் இளைஞர்கள் தங்கள் வாழ்க்கை முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, 'விமானமே வீடுபேற்றுக்குரிய தவம்' என்று காத்துள்ளனர்.

எல்லாமிருந்தும் அங்கே வழிகாட்டுவாரில்லை! வாழ்வில் எல்லாப் போகங்களையும் அனுபவிக்க அங்கே வசதி இருக்கிறது. அந்த இன்பங்கள் நிறைவளிக்காமல் மக்கள் மன இறுக்கத்தால் அவதிப்படுகிறார்கள். அதிகார போதை ஒரு புறம். மித மிஞ்சிய போகத்தால் குடும்ப வாழ்க்கை சீர்குலைந்து போவது ஒருபுறம். அன்புப் பிணைப்பு அறவே மாறி, வெற்று முகமன் வார்த்தைகளாக அவற்றின் முகவரி அமைந்துவிட்டது.

இதனால்தான் மகான்களைத் தேடி இந்தியா நோக்கி வருகிறார்கள் வெளி நாட்டவர்கள். அப்படியானால் இந்துமதம் என்று சொல்லப்படுகிற இந்தியப் பண்பாட்டினைக் காலங்காலமாகக் கட்டிக் காத்து வருகிறவர்கள் யார்? அதுதான் நமது ஞான பரம்பரை. 'ஞானம் என்ற சொல்லுக்கே கட்டிக்காத்தல் என்றுதான் பொருள்' என்று முன்பு சொன்னோம்.

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரைச் சமய குரவர் என்கிறோம். குரவர் என்றால் முதல்நிலையில் பெற்றோர்கள் என்று பொருள்படும். இரு முதுகுரவர் என்றால் தாய் தந்தையர் என்று பொருள்.

அடுத்த நிலையில் ஆசிரியன் குரவனாகிறான். குரவன்தான் குரு. பெரியவன் என்று பொருள். அருமையாகக் கிடைப்பதுதான் பெருமை. ஆகையால் அருமையுடையன் ஆசிரியன் ஆகிறான். ஆசிரியன் = குரு.

இந்தியப் பண்பாடு குருவைப் போற்றுவது

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

என்று திருமந்திரம் கூறுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தெளிவு என்பது அறிவு - தெள்ளிய அறிவு - குற்றங்களைந்து இதுவென்று அறிந்து குணம் கொள்ளும் அறிவு - அதாவது ஞானம். ஆசிரியன் ஞானத்தைத் தருகிறான். எழுத்தறிவித்தவன் இறைவன் என்று கூறுவார்கள்.

கல்வி கொடுத்தவன் வித்தியா குரு
தீக்கை அளிப்பவன் தீட்சா குரு
ஞானம் அளிப்பவன் ஞான குரு

தீட்சா குரு தனிப்பட்டவனுக்கு ஞானம் அளிப்பவன். ஞான குருமார் சந்ததிகளுக்கே ஞானம் அளிப்பவர்கள். அவர்கள் உலக குரு என்றே சொல்லப்படுபவர்கள். புத்த பெருமான், திருஞானசம்பந்தர், ஏசு பெருமான், நபிகள் நாயகம், வள்ளற் பெருமான் முதலியயாவரும் உலக குருக்கள்.

மெய்கண்டார் முதலியவர்களைச் சந்தான குரவர் என்கிறோம். சந்தானம் என்பது தொடர்ச்சி. நமது மரபு தொடர்வது பிள்ளைகளால்தானே! ஆகையால், பிள்ளைகளுக்குச் சந்தானம் என்று பெயர்.

சந்தான ஆசாரியார்கள் சைவ சமய குரவர்களின் கருத்துக்களைத் தந்தை > மகன் என்னும் உறவுவழியே பரப்புவதை மேற்கொண்டார்கள். ஆழ்வார்கள் கூறிய கருத்துக்களை ஆச்சாரியர்கள் மக்களிடையே பரப்பினார்கள்.

இந்த ஞானத்தை இறையருளால் பெற்ற சான்றோர்கள் தங்கள் மாணவர்களுக்குச் சொன்னார்கள். அவர்கள் ஞானத்தைப் பெறக் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பரம்பரையில் காப்பாற்றிவந்தார்கள். இந்தப் பரம்பரையில் வந்தவர்களில் சிலர் மடங்களை உருவாக்கினார்கள். வைணவர்களும், சைவர்களும் இவர்களில் அடங்குவார்கள்; நூல்களை இயற்றினார்கள். போதனைகள் செய்தார்கள். சமுதாயத் தொண்டுகள் செய்தார்கள். சிலர் இயக்கங்களையே உருவாக்கினார்கள். குரு நானக் சீக்கிய இயக்கம் தோன்றக் காரணமானார். குரு கோவிந்த சிங் முதலாக இந்த இயக்கம் ஒரு சமயமாகவே உருவாகிவிட்டது. வள்ளற்பெருமான் அவ்வாறு ஓர் இயக்கத்தை உருவாக்கியவர்தான்.

பகவான் ரமணர் முதலியவர்களின் கொள்கை உலகெங்கும் பரவினாலும் மடங்களாக - இயக்கங்களாக மாறாமலேயே ஆன்மிக நாட்டமுடையவர்களுக்கு வழிகாட்டி வருகின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எப்படியிருந்த போதிலும் பாரதப் பெரும் பண்பாடு என்னும் ஜீவ நதியில் தோய்ந்து நீராடித் திளைத்து மகிழும் துறைகளாக இந்த ஞான பரம்பரை விளங்குகிறது.

வள்ளற் பெருமான் 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ' என்று தம்மை அந்த ஞான பரம்பரையில் வந்தவராகக் காட்டிக்கொள்வதைக் காண்கின்றோம்.

பரம்பரையில் பெறுவதைத்தான் நாம் சிறப்பாக ஞானம் என்று கொள்கிறோம்.

பாரதியார் சொல்கிறார் : 'ஒரு தேசத்தின் நாகரிகத்துக்கு அந்தத் தேசத்தின் இலக்கியமே மேலான அடையாளம்.'

இந்திய நாட்டின் மிகப் பெரிய அறிவுக் கருவூலமாகப் பெரியோர்கள் செய்த இலக்கியங்கள் கொட்டிக் கிடக்கின்றன. வடமொழியிலும் தமிழிலும்தான் ஆயிரக்கணக்கான நூல்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வற்றாத அறிவூற்றாக விளங்கிவருகின்றன.

வேதம், உபநிடதம், அவைகளிலிருந்து பிறந்த அறிவாராய்ச்சி நூல்கள், மனித வாழ்க்கையின் படப்பிடிப்புக்களாகிய இலக்கியங்கள், தேவாரம், திவ்வியப்பிரபந்தம் முதலாகிய அருள் நூல்கள், தத்துவ சாத்திர நூல்கள், புராணங்கள், இதிகாசங்கள் என இந்நூல்கள் பல வகைப்படுகின்றன. பெரியவர்களின் வாக்குகள் அல்லாமல் அவர்கள் வாழ்க்கையும் இந்த இலக்கியங்களில் ஒரு பகுதியே. அவை பெரியபுராணம், பக்த விஜயம் முதலிய நூல்களாக அமைகின்றன.

இந்தியத் தத்துவ ஞானம் வேதங்களில் வேரூன்றி, உபநிடதமென்னும் மரமாய் வளர்ந்து, பல கிளைகளைப் பரப்பி, அரிய கனிகளை வழங்கிவந்துள்ளது. இந்த மரம் இன்னும் வேர்களையும் விழுதுகளையும் நெடுகப் பரப்பி இந்த நிலத்தின் பண்பாட்டைக் காப்பாற்றிவரும் என்பது உறுதி.

விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் முழங்கினார்: ''ஒரு ஹிந்து நடந்து செல்கையில் அவன் தனியாக நடந்து செல்வதில்லை. அவனுக்குப் பின்னால் ஐந்தாயிரம் ஆண்டுக் கலாசாரம் அணிவகுத்துச் செல்கிறது'' என்றார்.

மாக்ஸ்முல்லர் கூறியதை இங்கு நாம் நினைவுகூர்வது நல்லது.

'மறுபிறப்பு என்று ஒன்று உண்டென்றால், நான் இந்தியாவில்தான் பிறக்க ஆசைப்படுகிறேன். அதுவும் ஒரு புழுவாகப் பிறந்தால் கூடப் போதும்.' தம் நண்பர்களிடம் இவ்வாறு எழுதிவைக்குமாறு அவர் கூறிச் சென்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இந்து மதம், மாணிக்கவாசகர் சொல்வதைப் போல், "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்; பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியது;" என்றுமிருப்பது. அதனுடைய உலகளாவிய பொருள் தன்மையால் யாவரையும் தன் வசமாக்கும் இயல்புடையது. சத்தியம் எந்தத் திசையிலிருந்து வந்தாலும் அதை வரவேற்கத் தன் கதவுகளை அகலத்திறந்து வைத்துள்ளது. ஆகவே, நம் ஞானிகள் இந்தியாவுக்கு மட்டுமல்ல. உலகத்துக்கே சொந்தமானவர்கள்.

"இந்து தேசத்திலுள்ள ஜீவனை யுகயுகாந்தரங்களாக அழியாதபடி பாதுகாத்து வருவோர் அந்த யோகிகளே. கடூரமான கலியில் உலகம் தலைகீழாகக் கவிழ்ந்துபோகும் சமயத்தில்கூட இந்துஸ்தானம் அழியாமல் தானும் பிழைத்து மற்றவர்களையும் காக்கக்கூடிய ஜீவசக்தி இந்நாட்டிற்கு இருப்பது அந்த யோகிகளின் தபோபலத்தாலன்றி வேறில்லை."

— குள்ளச்சாமியார் என்னும் சித்தர் வாக்காக இவ்வாறு சொல்லிக் கொண்டேவரும் பாரதியார், "மனவலிமையும் பொருள் வலிமையுமற்ற இந்திய அரசர்களாலோ, வேதமந்திரங்களைப் பொருள் தெரியாமல் திரும்பத் திரும்பத் சொல்லிக்கொண்டிருக்கும் பிராமணர்களாலோ, கொடைக்குணம் மறந்த வணிகர்களாலோ, மூடத்தன்மை மிக்க மற்றவர்களாலோ இந்தியாவுக்கு அமரத்தன்மை கிடைக்கவில்லை" என்கிறார்.

இந்து தர்மத்தின் பெருமையைச் சொல்ல வந்த பாரதியார்,

"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன் என்றுரைத்தான் கண்ணபெருமான். எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை இந்தியா உலகிற்களிக்கும் - ஆம் இந்தியா உலகிற்களிக்கும் - ஆம் ஆம் இந்தியா உலகிற்களிக்கும். வாழ்க" என்று கூறினார்.

அமர கவியின் கண்களில் நமது ஞானபரம்பரை ஒன்றே சர்வ மத சமரசத்தைப் பேணிப் பாதுகாக்க வல்லது; அது ஒன்றே உலகிற்குத் தலைமை தாங்கி வழிகாட்டி உலகையே வாழ்விக்க வல்லது என்ற உண்மை தெரிகிறது.

அவரது வாக்குப் பொய்க்கவில்லை. பிற நாடுகளுக்கு நம் பெரியோர்கள் சென்றார்கள். சுவாமி விவேகானந்தர், சுவாமி இராமதீர்த்தர், பரஹம்ஸ யோகானந்த கிரி, இன்று மகேஷ் யோகி, முக்தானந்தர், பிரபுபாத பக்திவேதாந்த மகராஜ், சுவாமி சச்சிதானந்தர், பகவான் ரஜனீஷ், ரவிசங்கர், சின்மயாநந்தர், வேதாத்திரி மஹரிஷி ... என்று எத்தனை எத்தனை பேர்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவர்கள் சென்று ஆன்மிக ஒளியைப் பரப்பினார்கள். இங்கிருந்தவாறே தம் கதிரொளி பாய்ச்சியவர்களில் ரமண மகரிஷி, அரவிந்தர், சிவானந்தர், சத்திய சாயி இவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். எண்ணற்ற வெளிநாட்டவர்கள் தங்கள் ஒளியிழந்து, வாழ்க்கைக் களையிழந்து, மன இறுக்கத்தின் பிடியிலிருந்து விடுபட வேண்டுமானால் இந்தியாவே கதி என்று இங்கு வருகிறார்கள்.

சுவாமி சச்சிதானந்தர் இரண்டு லட்சத்திற்கு மேலான அமெரிக்கர்களின் வாழ்க்கைமுறையைச் செம்மைப்படுத்தி யிருக்கிறார்கள். வெளிநாட்டு உபதேசியார்கள் பொதுவாகக் கடைப்பிடிக்கும் மதமாற்ற வேலையை இவர்கள் செய்வதில்லை. ஒழுக்கம், இறையுண்மை, சமுதாயத் தொண்டுணர்வு என்பனவற்றில் மட்டும் அவர்களுடைய மனம் செல்லும் வண்ணம் மடை மாற்றினார்கள்.

ஞான பரம்பரையைக் காத்துவந்த நல்லாசிரியர்கள் வாழ்ந்த காலத்தைப் பலவாறு ஆராய்ந்து நிர்ணயித்துள்ளார்கள். புத்தர் முதல் சேக்கிழார்வரை இந்த நிலையே நீடிக்கிறது. பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு காலநெறிப்படி முறையாக எழுதப்படாத காரணமென்ன? இதற்கு முக்கியக் காரணம் ஒன்றைச் சொல்லலாம். மனிதர்கள் வாழ்வைக் காட்டிலும் மனிதர்களின் வாக்கு அல்லது அவர்கள் கடைப்பிடித்த நெறிகளே மேலானவையாக நம் முன்னோர்க்குத் தோன்றியிருக்க வேண்டும். புத்தருடைய வாழ்வைவிட அவர் போதனைகளே நாம் நினைவில் வைக்க வேண்டியவை. இராமானுஜர் செய்த அற்புதங்களைவிட அவர் தொண்டே நாம் போற்ற வேண்டியது. எனினும், பெரும்பாலும் உலகத்தின் ஏனைய பகுதிகளில் பெரியோர்களின் வாழ்க்கைகளைக் கால முறைப்படி நன்கு கணித்துப் பதிவு செய்திருக்கிறார்கள். நாம் அதுபோல நம் பெரியோர்களின் வரலாற்றைச் செம்மையாகப் பதிவு செய்து வைப்பது இன்றைய நிலையில் கட்டாயமானதுதான்.

இவர்களுடைய கால வரலாற்றின் பின்னணியில் நமது இதிகாச புராண வரலாறுகளின் காலங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த மறு ஆய்வு அடிப்படையில் சங்க காலச் சான்றோர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலங்களை வரையறுத்து நிறுவும் முயற்சியையும் நாம் இப்போது செய்துகொண்டுவருகிறோம் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

நம் பெரியோர்கள் வானத்தில் சப்தரிஷி நட்சத்திரங்களின் இயக்கத்தைக் கவனித்து, வைவஸ்தவ மனுகாலத்திலிருந்து கணக்கிட்டுவந்திருக்கிறார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சப்தரிஷி மண்டலத்தின் இயக்கத்தை வைத்தே சப்தரிஷி சகாப்தம் என்பது வைவஸ்தவ மனுவின் காலத்தில் தொடங்கப்பட்டது. அது கி.மு. 15261 ஆகும்.

இதனடிப்படையில் வழக்கத்தில் உள்ள யுகக்கணக்கு முறையில் திருத்தம் காண முடிந்தது. இப்போது நடைபெறுவதாக நாம் சொல்லும் கலியுகம் என்றோ முடிந்துவிட்டது. கிருதயுகம் முடிந்து, உண்மையில் இப்போது திரேதாயுகம்தான் நடைபெறுகிறது.

சென்னையில் நாம் அமைத்துள்ள அனைத்துலகத் தொன்மை வரலாற்று ஆய்வுக் கழகத்தின்மூலம் இந்த ஆய்வுகள் செய்யப் பட்டுவருகின்றன. அதன்மூலம் பழைய ஆய்வு முடிவுகள் திருத்தம் பெற்றன.

ஆதிசங்கரருடைய காலம் கி.மு. 509 என்றும், ஒரு சதுர்யுகம் 12160 ஆண்டுகள் கொண்டது என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார்களில் ஐந்து பேர் கிருஷ்ண பரமாத்மாவுக்கு முந்தியவர் என்று தெரிகிறது. சப்தரிஷி மண்டலம் (Great Bear) பற்றி இதுவரை வான நூலுள் விரிவான ஆய்வு செய்யப்படவில்லை. நாம் இப்போது அந்த ஆய்வுக்கு ஏற்பாடு செய்துள்ளோம். கூடிய விரைவில் சரியான கணக்குகள் நிர்ணயம் செய்யப்படும்.

பொள்ளாச்சி நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி வாயிலாக நூல் வெளியீட்டுப் பணி மிகச் சிறப்பாக நடந்துவருகிறது.

மாணவர்களுக்கு நமது இந்தியப் பண்பாடு நாகரிகம் குறித்த பாடத் திட்டத்தைப் பத்து ஆண்டுகளுக்குமுன் நடைமுறைப்படுத்தி, அதற்கான சிறுசிறு நூல்களைத் தக்கவர்களைக் கொண்டு அக்கல்லூரி வெளியிட்டது. அப்புத்தகங்கள் வேறு சில கல்லூரிகளுக்கு முன் மாதிரியாக அமைந்தன.

பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தினர் நம்முடைய தேசியத் தலைவர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், பெரியோர்கள் வரலாறுகளைச் சிறுசிறு நூல்களாக வெளியிட்டார்கள்.

ஈரோடு திரு. ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் சுதந்திரப் போராட்ட வரலாற்று வீரர்களின் சரித்திரத்தை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார்கள். அதுபோல் நமது இந்திய ஞான பரம்பரையைச் சேர்ந்த அருளாளர்கள் வரலாற்றைச் சிறு நூல்களாகக் கொண்டு வரவேண்டுமென்ற எனது விருப்பத்தைத் தமிழ்ச் சான்றோரும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பேரறிஞருமாகிய டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்களிடம் கூறி, நிறைவேற்றித் தருமாறு வேண்டினேன்.

என்னுடைய வேண்டுகோளை ஏற்று, மூதறிஞர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் நமது ஞான பரம்பரையைச் சேர்ந்த 30 அருளாளர்கள் - காரைக்காலம்மையார் முதல் சித்பவானந்தர் வரை - வாழ்க்கை பற்றியும் அவர்களின் வாக்குகள் பற்றியும் பல நல்லறிஞர்களைக் கொண்டு எழுதுவித்து, அரிய முறையில் மேற்பார்த்துத் தொகுத்து நூல்கள் வெளிவரச் சிறந்த முறையில் உதவியிருக்கிறார்கள்.

டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூல்களை அரிய முறையில் எழுதியுதவிய அறிஞர் பெருமக்களைப் பாராட்டுகிறேன்.

இந்த வரலாறுகளை ஐந்து தொகுதிகளாக* அழகிய முறையில் முதல் பதிப்பாக வெளியிட்ட பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி முதல்வர் அவர்களுக்கும், பதிப்புத்துறையில் உதவிசெய்த ஏனையோர்களுக்கும் எனது நன்றி.

முதல் பதிப்பு வந்து சில மாதங்களிலேயே பிரதிகள் தீர்ந்து விட்டன. இப்போது இரண்டாம் பதிப்பு எனது தலைமையில் இயங்கும் இராமானந்த அடிகளார் அறக்கட்டளை ஆதரவாலும் அந்த அறக்கட்டளையின் மூலம் நடைபெறும் குமரகுரு பொறியியல் கல்லூரியின் உதவியாலும் வெளிவருகிறது.

நூல்களை அற்புதமாக அச்சிட்டு முடித்த ருக்மணி அச்சக மேலாளர் திரு. பாலசண்முகம் அவர்களுக்கும், வேண்டிய படங்களைப் பயன்படுத்திக்கொள்ள உதவிய பெரியோர் களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ் உலகமும், இளைஞர் சமுதாயமும் இதனை வரவேற்றுப் பயனடைய வேண்டும் என்பது என் பேரவா.

நா. மகாலிங்கம்

*முதற் பதிப்பிற்கானது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பதிப்புரை

முதற் பதிப்பிற்கானது

மாணவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு வெறும் ஏட்டுக்கல்விமட்டும் போதாது. அதனுடன் விழுப்பொருள் உணர்வும் (sense for higher values) மாணவர்களிடையே பதிந்திட வேண்டும் என்பது எங்கள் நிர்வாகத்தின் லட்சியமாகும். இந்தக் குறிக்கோளை முன் நிறுத்தி அறவியல் மற்றும் சமயம் முதலான செவ்வியல் கருத்துக்களை மாணவர்களிடையே பரப்பி வருகிறோம்.

அந்தப் பணியின் வளர்நிலையில் தமிழ் ஞானிகள் முப்பதுபேர்பற்றி நூல்கள் வெளியிட வேண்டும் என்று அருட்செல்வரவர்கள் விரும்பினார்கள். எங்களை எல்லா வகையிலும் வழிநடத்துகின்ற அருட்செல்வரவர்களின் விருப்பத்தை முழுமனத்தோடு ஏற்று, இந்த நூல்வரிசையை வெளியிடுவதில் எம் அறக்கட்டளை பெருமை கொள்கிறது.

இந்தப் பணியில் உறுதுணையாக இருந்து பணியாற்றிய பேராசிரியர் ம.ரா.போ. குருசாமிக்கும், அவருக்கு உதவியாகப் பிழைதிருத்தம் முதலான பணிகளை உவப்போடு செய்த பேராசிரியர் இருசுப் பிள்ளை, புலவர்மணியன், பேராசிரியர் தரணி பாஸ்கர், முனைவர் மனோன்மணி ஆகியோர்க்கும் எம் நன்றி உரியது.

வெளியிட்டுள்ள நூல்களை இளைஞர் உலகம் ஏற்றுப் போற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இராமானந்த அடிகளார் அறக்கட்டளை
கோயமுத்தூர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நுழையுமுன் ஒரு சொல்

நரை திரை இன்றி இளமை நலத்தோடு விளங்கிய முதியவர் பிசிராந்தையார்; அவர் தம் இளமைத் தோற்றத்துக்குப் பல காரணம் சொல்லியுள்ளார். அவற்றுள் ஒன்று: 'சான்றோர் பலர் யான் வாழும் ஊரே!' அதாவது, 'நான் வாழும் ஊரில் சான்றோர்கள் பலர் வாழ்கின்றனர்; அதனால் நரை திரை மூப்புத் தோன்றாமல் நான் வாழ்கிறேன்' என்கிறார். வாழும் முறையாலும் வழங்கும் மொழிகளாலும் மனநலம் காத்தவர்கள் அந்தச் சான்றோர்கள். அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தும் வாசகங்களைக் கேட்டும் பிசிர் என்ற ஊரில் இருந்தவர்கள் மனவளம் பெற்றிருந்தார்கள். மனவளம் பெற்றமையால் வாழ்க்கையில் நிறைவு இருந்தது. பொறாமை, பொய் போன்ற தீமைகள் சாராமல் அன்பு, அருள், அறம் போன்ற நல்லவற்றில் நாட்டம் கொண்டவர்களுக்கு முதுமை நோய் வாராது. இது பெரியோர் அனுபவ மொழி.

அத்தகைய சான்றோர்களின் வாக்கு, வாழ்வு, வழிகளைத் தெரிந்து போற்றினால், சமூக வாழ்வு சிறக்கும்; குறிப்பாக, இளைஞர்கள் நலம் பெற்று, நாட்டை நன்கு வளர்ப்பார்கள்.

இந்தக் குறிக்கோளை நெஞ்சில் நிறுத்தித் தமிழகத்துச் சான்றோர் சிலரைப் பற்றி நூல்கள் வெளியிடும் முயற்சியில் உருவானது இது.

நல்லிளைஞர் மனவளம் பெற்று - அறிவு, அறம், அன்பு, பண்பாடு ஆகியவற்றைப் பேணி, நாட்டுக்கு நலம் செய்வர் என்ற நம்பிக்கையோடு அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் இந்த நூல் வரிசை பற்றித் திட்ட மிட்டார். அவர் தந்த திட்டத்தின் பயன் மக்களைச் சென்று அடைய நூல்களை வெளியிடும் பொறுப்பைப் பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி* நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

பயன் பெறுக! பயன் பெறுக!

ம.ரா.போ. குருசாமி
ஒருங்கிணைப்பாளர்

---

*முதற் பதிப்பிற்கான செய்தி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வாதவூரர் - பாண்டிய நாட்டு அமைச்சர்... செல்வமும் செல்வாக்கும் பெற்றவர்; அத்தனையையும் குரு தரிசனம் பெற்ற கணத்திலேயே துறந்தவர். பிறிது ஒரு சொல் வெல்லுவதற்கு இடம் இல்லாமல் மாணிக்கச் சொற்களைப் பக்தியரங்கிலே பதித்து வைத்த மாணிக்கவாசகரைப் பற்றி - அவர் அருளிய திருவாசகம் பற்றி விரித்துச் சொல்வதற்கு இன்னொரு மாணிக்கவாசகர்தான் வர வேண்டும். 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற பழைய வழக்கே இவரையும் இவர் நூலையும் புரிந்து கொள்ளப் போதுமானது. இலக்கிய அரங்கிலும் சமய அரங்கிலும் தமிழறிந்து பேசும் மிகச் சிலருள் ஒருவராய் - மணி வாசகங்களைக் கையாளும் வல்லாளராகிய முனைவர் தெ. ஞானசுந்தரம் மணிவாசகரைப் பற்றி எழுதியுதவியிருக்கிறார். ஆராய்ச்சி என்றாலே வறண்ட வாதப் பாலையாக இருக்கும் என்பதைப் பொய்யாக்கி ஈரப் பசையோடு பக்தியை அடையாளப்படுத்தியுள்ளார் ஞானசுந்தரம். ஆம், ஞான சுந்தரம்! வடமொழி, ஆங்கிலம், மலையாளம் - இவை அறிந்த பன்மொழிப் புலவர்; பச்சையப்பர் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்; சைவத்திற் போலவே வைணவத்திலும் ஆழங்காற் பட்டவர்.

தமிழகச் சைவ அருளாளர்களில் - நாயன்மார்களில் - காலத்தால் முற்பட்டவர் காரைக்கால் அம்மையார். பிறந்து மொழி பயின்ற குழந்தைப் பருவத்திலிருந்தே இறைவன் புகழிலே நெஞ்சம் தோய்ந்தவர் அவர். சைவ உலகில் அம்மை ஒருத்தி; பார்வதி தேவி. அம்மையார் ஒருவர்; காரைக்கால் அம்மையார். அவரைப் பற்றி விளக்கி எழுதியிருப்பவர் புலமை நலமும் வாழ்நெறிச் செம்மையும் கொண்ட முனைவர் திருமதி தரணி பாஸ்கர். இவர் பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ.யின் மாணவி என்ற ஒரு தகுதியே போதும். கோவை பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் இவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவர்' எனப் பிள்ளையவர்களால் அடையாளம் காட்டப்பட்டவர், தொண்டர்சீர் பரவுவாராகிய **சேக்கிழார்**. அருண்மொழித் தேவர் என்ற இயற்பெயர் மறந்து போகும் அளவுக்குத் தாம் பிறந்த குலத்தின் பெயரால் புகழ் பெற்றவர். அரசாட்சி நுட்பங்களை அறிந்து சோழப் பெரு மன்னனால் பட்டமளித்துச் சிறப்பிக்கப் பட்டவர். நேற்றுத் தோன்றி, இன்று ஓங்கி, நாளை இருக்குமோ என்ற குழப்பத்துக்கு இடம் தரும் அரசியலுக்குள் இவரைச் சிக்க வைத்தோமே என வருந்தி, அந்தச் சோழ மன்னனே 'சிவநெறிச் செம்மல்களைச் செந்தமிழில் வடித்துத் தரவேண்டு'மெனச் சேக்கிழாரைக் கேட்டுக் கொண்டான். அம்பலவாணரே அடியெடுத்துக் கொடுக்க, எழுந்தது பெரிய புராணம். திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராண ஆசிரியரைப்பற்றி ஆய்வு வளமும் அடியார்கள் நேயப் பாங்கும் பொலியும் வகையில் நூல் இயற்றிக் கொடுத்தவர் செந்தமிழ் வாரிதி **முனைவர் செல்வக் கணபதியாவார்**. தத்துவத் தெளிவு, இலக்கிய வளம், சமய நாட்டம் இவை மூன்றும் கொண்டவரே சேக்கிழாரைப் பற்றி எழுத முடியும். ஆம், பேராசிரியர் செல்வக் கணபதி அவர்கள் இந்த மும்மைச் சீரும் பெற்றவர். தருமையாதீனக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி, சைவ மரபின் மாண்புகளை உணர்ந்து வாழ்க்கையை அமைத்துக் கொண்ட இவருடைய நாவளம் கடல் கடந்தும் சைவத் தமிழ் பரப்பும் பாங்குடையது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தொகுதி இரண்டு

மாணிக்கவாசகர்

முனைவர் தெ. ஞானசுந்தரம்

காரைக்கால் அம்மையார்

முனைவர் திருமதி தரணி பாஸ்கர்

சேக்கிழார்

முனைவர் செல்வக்கணபதி

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாணிக்கவாசகர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாணிக்கவாசகர்

பொருளடக்கம்

1.	மாணிக்கவாசகர் வரலாறு	-	1
2.	மாணிக்கவாசகர் காலம்	-	25
3.	மாணிக்கவாசகர் அருளிய நூல்கள்	-	35
4.	மாணிக்கவாசகரின் ஆளுமை	-	86

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாணிக்கவாசகர்

1. மாணிக்கவாசகர் வரலாறு

அருளாளர்

தமிழகத்தில் தோன்றிய அருளாளர்களில் ஒருவர் மாணிக்க வாசகர். அவருக்குத் திருவாதவூரர், ஆளுடைய அடிகள் என்னும் வேறு பெயர்களும் வழங்குகின்றன. மாணிக்கவாசகர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் அல்லர். எனினும், அவருடைய தேனூறும் பாடல்களையும் அவரைப்பற்றி வழங்கும் வரலாற்றை யும் அறிந்து உணர்ந்தவர்கள் அவரையும் நாயனார் என்றே போற்றியுள்ளனர். பழைய கல்வெட்டுகளில் அவர் திருவாதவூராளி நாயனார் என்றே குறிக்கப்பெற்றுள்ளார். அவரது வாழ்க்கை வரலாற்றைத் தெரிவிக்கும் நூல்கள் சில உள்ளன. அவை செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி அருளிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணம், கடவுள் மாமுனிவர் யாத்த திருவாதவூரடிகள் புராணம், திருவுத்தரகோசமங்கைப் புராணம், கடம்பவன புராணம், திருப்பெருந்துறைப் புராணம் என்பன. இவற்றுள் காலத்தால் முற்பட்டது பெரும்பற்றப்புலியூர் நம்பியின் நூல் ஆகும். இறுதியாக எழுந்தது திருப்பெருந் துறைப் புராணம்; மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றியது; இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்தது. இவற்றுள் எந்த நூலும் மாணிக்கவாசகர் காலத்திலேயே எழுந்தது அன்று. எல்லா நூலும் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றியவையே. இவற்றின் வாயிலாக மாணிக்கவாசகரின் வாழ்க்கையை ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. இவற்றினிடையே சிற்சில வேறுபாடுகள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

காணப்படுகின்றன. பெரும்பற்றப்புலியூர் நம்பியின் புராணத்தை யொட்டியே ஏனைய புராணங்கள் அமைந்துள்ளன.

பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறும் வரலாறு

மாணிக்கவாசகர் பாண்டியநாட்டில் திருவாதவூரில் தோன்றினார். அவர் மான மங்கலத்தார் என்று போற்றப் பெற்ற அமாத்தியர் குலத்தைச் சார்ந்தவர். மாணிக்கவாசகர் பதினாறாண்டு நிரம்புவதற்கு முன்னரே கல்வியறிவில் சிறந்து விளங்கினார். 'அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்' என்பது மெய்ம்மைப் பெருவார்த்தையல்லவா? மாணிக்கவாசகரின் புலமை நலத்தைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அவரை அழைத்துத் தன் அமைச்சராக அமர்த்திக்கொண்டான். அவருக்குத் 'தென்னவன் பிரமராயர்' என்னும் சிறப்புப் பெயரினையும் சூட்டினான். அவர்தம் அமைச்சுத் தொழிலால் நாடு செல்வச் செழிப்போடு திகழ்ந்தது.

அந்நாளில் அம்மன்னனின் குதிரைப்படைகள் தேய்ந்து குறைந்தன. பெரும்பாலான குதிரைகள் நோயுற்று இறந்தன. அதனை அறிந்த மன்னன் தன் படையினை வலிமைப் படுத்துதற்குப் புதிய குதிரைகள் வாங்க எண்ணங் கொண்டான். மாணிக்க வாசகரைக் கருவூலத்திலிருந்து தேவையான பொருள்களை எடுத்துச்சென்று கடற்கரையில் வந்து இறங்கும் நல்ல குதிரைகளை வாங்கி வருமாறு பணித்தான். அவர் அங்கயற்கண்ணியோடு அமர்ந்த ஆலவாய் இறைவனை வணங்கிக் குதிரைகள் வாங்கிவரப் புறப்பட்டார். அவரோடு ஏவலாளர் சிலரும் துணையாகச் சென்றனர். வழியில் கானப்பேரில் கோயில் கொண்டுள்ள பெருமானை வணங்கிப் பல காத தூரம் கடந்து திருப்பெருந் துறையை, அடைந்தார்.

திருப்பெருந்துறையை அடைந்தவுடன் அவர் நெஞ்சம் அனலில் இட்ட மெழுகாய் உருகிற்று. அங்கேயே தங்க வேண்டும் என்னும் உணர்ச்சி தலையெடுத்தது. ஏவலாளர்களிடம் தாம் ஆவணித்திங்களில் குதிரைகளை வாங்கிக்கொண்டு வருவதாகச் சொல்லி, அவர்களைத் திரும்பிப் போகச் செய்தார். அவர் அங்குள்ள பொய்கையில் நீராடி வெண்ணீறு அணிந்து வழிபாட்டிற்காகக் கோயிலுக்குள் நுழைந்தார். அங்கே குருந்த மரத்தடியில் சிவபெருமான் ஆசிரியத் திருமேனி கொண்டு எழுந்தருளி யிருந்தான். அருகில் மாணாக்கர்கள் அமர்ந்திருந்தனர். அப் பெருமானைக் கண்டவுடன் திருவாதவூரர் உடல்நடுங்கி நிலத்தில் விழுந்து அவரை வணங்கினார். ஆசிரியக் கோலத்தில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருந்த இறைவன் அவரைத் தன் அருட்பார்வையால் தூயராக்கினான்; திருவைந்தெழுத்தை அவருக்கு அறிவுறுத்தினான்; தன் திருவடிகளை அவர் முடிமேல் சூட்டியருளினான். அவரை நோக்கி, ''அன்பனே, நீ சிவபுண்ணியம் செய்துள்ளாய்; அதனால் மனத்தால் உணர வேண்டுவதனைக் கண்களால் காணும் பேறு பெற்றாய்; நம்மைப் பாடுவாயாக'' என்று பணித்தான். அவர் தம் மணிவாயால் பாடத் தொடங்கினார். அவை திருவாசகம் ஆயின. திருவாதவூரர் மாணிக்கவாசகர் ஆனார். அந்நிலையில் அருளாசிரியராகக் காட்சியருளியவர் தம் மாணாக்கர்களோடு மறைந்தார். அதனால் துயரம் அடைந்த மாணிக்கவாசகர் இறைவனைப் பாடி உருகியவாறு அவ்வூரிலேயே தங்கினார். தாம் கொண்டுவந்த பொருள்களையெல்லாம் அடியாருக்கு வாரி வழங்கினார்.

பாண்டிய மன்னன் அவர் திருப்பெருந்துறையிலேயே தங்கிவிட்டார் என்பதனை அறிந்தான். அவரைக் குதிரைகளோடு விரைவில் வருமாறு தெரிவித்து ஓலை அனுப்பினான். அவ்வோலையினைக் கண்டு அவர் கலங்கினார். திருப்பெருந்துறைப் பெருமானிடம் சென்று தம் குறையினைக் கூறி முறையிட்டார். 'விரைவில் குதிரைகள் வரும்' என்று அரசனுக்குத் திருமுகம் விடுக்குமாறு வானத்திலிருந்து அருள் வாக்கு எழுந்தது. அவரும் அவ்வாறே செய்தார். பின்னர் மதுரைக்குத் திரும்பி மன்னனைக் கண்டு குதிரைகள் விரைவில் வந்து சேரும் என்று தெரிவித்தார். குறித்த காலத்தில் குதிரைகள் வந்து சேரவில்லை. அமைச்சர்கள் அரசனை அணுகி, மாணிக்கவாசகர் பெருந்துறையை அடைந்து பித்தனாகிப் பொருள்களை மனம் போனபடி செலவழித்து விட்டார் என்றார்கள். அவரைத் தண்டித்துப் பொருள்களை வாங்குதல் வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதனால் அரசன் அவர் மீது சினங்கொண்டான். அவரைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான். மாணிக்கவாசகர் துயரம் தாங்காமல் இறைவனை இறைஞ்சி நின்றார்.

சிவபெருமான் மிழலைநாட்டுக் காட்டில் திரிந்த நரிகளையெல்லாம் பரிகளாக மாற்றினான். தம் கணநாதர்களைக் குதிரை வீரர்கள் ஆக்கினான். தானும் ஒன்றின்மீது ஏறிக்கொண்டான். குதிரைகளோடு மதுரை நோக்கிச் சென்றான். சிறைக்காவலர்கள் குதிரைகள் வருவதனைக் கண்டார்கள். மாணிக்கவாசகரை விடுவித்துவிட்டுக் குதிரைகள் வரும் செய்தியினை மன்னனிடம் தெரிவிக்குமாறு கூறினார்கள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதற்கிடையில், மாணிக்கவாசகர் சொன்னதைக் கேட்டுக் குதிரைகள் வரவினை நோக்கி மன்னன் வீதியில் உள்ள மண்ட பத்தில் வந்து அமர்ந்திருந்தான். நெடும்பொழுது கழிந்தது. குதிரைகள் வரவில்லை. ஆத்திரம் அடைந்த அரசன் அவரைத் துன்புறுத்துமாறு தண்டத் தலைவர்களைப் பணித்தான். அவர்கள் மாணிக்க வாசகரைப் புளியம்வளாரால் அடித்தார்கள். அவ்வளவில் குதிரைகள் மதுரை நகருக்குள் புகுந்தன. மன்னன் மாணிக்க வாசகரிடம் தன் செயலுக்கு வருந்திப் பிழைபொறுத்தருள வேண்டினான்.

இறைவன் குதிரைகளோடு மதுரை வீதி வழியே வந்தான். ஆவணிமூலநாளில் குதிரைகளைக் கயிறுமாறிக் கொடுத்தான். அவற்றைப் பணியாளர்கள் பந்தியில் சேர்த்தனர். குதிரைச் சேவகன் அரசன் பரிசாகத் தந்த ஆடையினைத் தன் பரிக்கோலின் முனையால் வாங்கித் தலையில் அணிந்துகொண்டான். அரசன் அவன் செயலினை அவமதிப்பாகக் கருதினான். மாணிக்கவாசகர் ‘அவர்கள் நாட்டு வழக்கம் அது’ என்று தெரிவித்து, அரசனை அமைதிப் படுத்தினார். குதிரைச் சேவகன் மன்னனிடம் விடைபெற்றுப் புறப்பட்டான். அரசன் மாணிக்கவாசகருக்கு வரிசைகள் நல்கி விடைகொடுத்தான். அவர் தமது மாளிகையை அடைந்தார்.

அன்றிரவு குதிரைகளாய் வந்த நரிகளெல்லாம் மீண்டும் நரிகளாயின. பந்தியில் இருந்த பழைய குதிரைகளையெல்லாம் கடித்துக் கொன்றுவிட்டு நகரின் பல பகுதிகளிலும் புகுந்து ஊளையிட்டன. அதனை அறிந்த மன்னன் மீண்டும் சினங் கொண்டான். மறுபடியும் மாணிக்கவாசகரைச் சிறையில் தள்ளினான்.

மாணிக்கவாசகர் துயரத்தைப் போக்கக் கருதிய இறைவன் வருணனைக் கொண்டு வைகையில் வெள்ளப் பெருக்கு ஏற்படுமாறு செய்தான். அவ்வெள்ளம் கரையினை உடைத்துக் கொண்டு மதுரைநகருக்குள் புகுந்தது. அவ்வூரில் வாழ்வோர் ஒவ்வொருவருக்கும் கரையினை அடைக்கும் பணி அரசன் ஏவலால் அளந்து ஒதுக்கப்பட்டது. தன் பங்கினை அடைப்பதற்கு ஆள் கிடைக்காமல் முதிய பிட்டு வாணிச்சி ஒருத்தி வருந்திக் கொண்டிருந்தாள். இறைவன் வேலையாளாய் அங்குச் சென்றான். அவள் கூலியாகக் கொடுத்த பிட்டினை உண்டு வைகைக் கரையினை அடைக்க முற்பட்டான். ஆனால், கரையினை அடைக்காமல் உடைத்துக் கொண்டு அங்கும் இங்கும் திரிந்தான். தண்டத் தலைர்கள் அங்கு வந்தார்கள். அவன் கரையினைச் செப்பனிடாமல் செய்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குறும்புகளையெல்லாம் கேட்டு அறிந்தார்கள். அவன் முதுகு சிவக்கும்படி அடித்தார்கள். தன் முதுகில் அடியேற்ற கூலியாள் கூடை மண்ணைக் கரை உயரும்படி கொட்டிவிட்டு மறைந்தான். அம்மூதாட்டியும் சொக்கநாதப் பெருமான் அருளால் சிவலோகம் சேர்ந்தாள். இறைவன் பொன்மேனியில் பட்ட அடி எல்லா உயிர்களின் மேலும் பட்டு வலியை உண்டாக்கிற்று. அப்பொழுது வானில் ஓர் அருள்வாக்கு ஒலித்தது. மாணிக்கவாசகர் பொருட்டு அத்திருவிளையாடல் நிகழ்ந்தது என்றும் அவரைச் சிறைநீக்கி அவர் விரும்பிய வண்ணம் வாழும்படி செய்ய வேண்டும் என்றும் அவ்வருள்வாக்கு பாண்டிய மன்னனுக்குக் கட்டளையிட்டது.

பாண்டிய மன்னன் மாணிக்கவாசகர் மலரடிகளில் வீழ்ந்து வணங்கினான். அவர் ஆலவாய்ச் சொக்கனை வணங்கி அங்கிருந்து புறப்பட்டார். ஆலவாய்ப் பெருமான் அவரை உத்தரகோச மங்கை, கழுக்குன்றம் ஆகிய தலங்களில் தன்னைக் கண்டு மகிழ்ந்து 'கோவை' என்னும் நூலைப் பாடிக் கொண்டு தில்லைக்கு வருமாறு பணித்தான். மாணிக்கவாசகர் அவ்வாறே பல தலங்களைப் பணிந்து பாடிப் பரவியவாறு தில்லைப் பதியினை அடைந்தார். அங்குப் புத்தர்களை வாதில் வென்று புகழ்பெற்றார். பின்னர்த்தில்லைக் கூத்தன் திருவடிகளை அடைந்து மாறிலா மகிழ்ச்சியில் திளைத்தார். இவ்வாறு மாணிக்கவாசகர் வரலாற்றைத் தெரிவித்துள்ளார் பெரும்பற்றப்புலியூர் நம்பி. மாணிக்கவாசகர் வரலாற்றைச் சொல்லும்போதே எங்கெங்கே எந்த எந்தத் திருவாசகப் பகுதிகள் பாடப்பட்டன என்பதனையும் குறித்துள்ளார்.

மாணிக்கவாசகர் வரலாறு பெற்ற மாற்றங்கள்

நம்பியின் புராணத்திற்குப் பின்னர் வந்த புராணங்கள் கூறும் மாணிக்கவாசகர் வரலாற்றில் சிற்சில மாற்றங்களும் புதிய சேர்க்கைகளும் இடம்பெற்றுள்ளன. அவை அவற்றை இயற்றிய புராண ஆசிரியர்களின் கற்பனையை யொட்டி அமைந்தன.

கணநாதரின் அவதாரம்

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கயிலையில் இருந்த கணநாதருள் ஒருவரே மாணிக்க வாசகராகப் பிறந்தார் என்று குறிக்கிறது. ஆனால், திருவுத்தரகோசமங்கையில் இருந்த கணநாதர்களில் ஒருவரே மாணிக்கவாசகராகப் பிறந்தருளினார் என்கிறார் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை. திருவுத்தர கோசமங்கையில் சிவபெருமான் அந்தணனாக எழுந்தருளி, அங்கே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இருந்த ஆயிரம் சிவகண நாதர்களுக்கு ஆகமப் பொருளை அருளிச் செய்யத் தொடங்கினான். அப்பொழுது இந்திரன் அணிநலம் விளங்க உலா வந்தான். கணநாதரில் ஒருவர் அவ்வுலாக் காட்சியில் மனத்தைச் செலுத்தி ஆகமப்பொருள் கேட்பதில் நாட்டமின்றி இருந்தார். அதனால் சிவபெருமான் அவரை நோக்கி, "நீ எம்மிடம் கேட்டவற்றை மறந்து நிலவுலகில் பிறந்து விரும்பிய செல்வமெல்லாம் எய்தப் பெற்றுப் பின் நம்மை அடைவாயாக" என்றான். அது கேட்ட கணநாதர் அழுது அரற்றினார். இறைவன் அவரை நோக்கி, "அஞ்சாதே, நாமே ஆசிரியனாக வந்து உன்னை ஆட்கொண்டருளுவோம்" என்று தேற்றினான். அக்கணநாதரே திருவாதவூரில் சம்புபாதாசிருதர்க்கும் சிவஞானவதிக்கும் மைந்தராகப் பிறந்தார். அவரே பிற்காலத்தில் மாணிக்க வாசகர் என்று போற்றப் பெற்றார் என்பது பிள்ளை அவர்கள் கற்பித்துள்ள புராணமாகும். இதனைப் பெரியபுராணத்தில் மிகவும் தோய்வுடைய பிள்ளை அவர்கள் பெரிய புராணத்தையொட்டி அமைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. பெரிய புராணம், கயிலையில் இருந்த ஆலாலசுந்தரரே கமலினி, அநிந்திதை என்னும் பெண்கள்பால் சென்ற காதற் குறிப்புக் காரணமாக மண்ணுலகில் சுந்தரராக அவதரித்தார் என்றும் அவரை இறைவன் தான் முன்னர் வாக்களித்திருந்தவாறு உரிய நேரத்தில் தடுத்தாட் கொண்டான் என்றும் கூறுகிறது. அதனை ஒத்ததாக இப்பகுதி அமைத்திருத்தல் காணலாம்.

பெற்றோர் பெயர்கள்

மாணிக்கவாசகரின் பெற்றோர் பெயர் பழைய புராணங்களில் காணப்படவில்லை. வடமொழி நூலான ஆலாசியம், சுந்தரநாதர் என்பது தந்தையின் பெயர் என்று குறிக்கிறது என்பர் (திருவாதவூரர் - சிவபோத வாழ்க்கை, திருவாவடுதுறை ஆதீனம், 1957, ப.65) இக்காலத்தில் அவர் தந்தையார் பெயர் சம்புபாதாசிருதர் என்றும், தாயார் பெயர் சிவஞானவதி என்றும் வழங்குகின்றன. இப்பெயர்கள் முதன்முதலில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் திருப்பெருந்துறைப் புராணத்திலேயே காணப்படுகின்றன. இதனால் இப்பெயர்கள் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால் படைக்கப்பட்ட பெயர்கள் என்பது தெளிவு.

திருஞானசம்பந்தரின் தந்தையார் பெயராகிய சிவபாத ஹிருதயர் என்பதனையொட்டிச் சம்புபாதாசிருதர் என்பதும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருநாவுக்கரசரின் தமக்கையார் பெயராகிய திலகவதி, காரைக்கால் அம்மையாரின் இயற்பெயராகிய புனிதவதி ஆகியவற்றை யொட்டிச் சிவஞானவதி என்பதும் படைக்கப்பட்டுள்ளன எனலாம்.

ஞானாசிரியனைச் சந்தித்தல்

குதிரை வாங்கச் சென்ற திருவாதவூரர் திருப்பெருந்துறையில் ஞானாசிரியனைக் கண்டார். அவர் எவ்வளவு பொன்னை எடுத்துச் சென்றார் என்ற குறிப்பினை மற்றவர்கள் சொல்லவில்லை. ஆனால், கடவுள் மாமுனிவர் திருவாதவூரர் குதிரை வாங்கிவர நாற்பத் தெட்டாயிரம் கோடிப் பொன்னுடன் சென்றார் என்று அவர் எடுத்துச் சென்ற பொன்னின் அளவினைத் தெரிவிக்கிறார். பரஞ்சோதியார் திருப்பெருந்துறையில் வீற்றிருந்த ஞானாசிரியன் கையில் 'சிவஞான போதம்' என்னும் ஏடு இருந்ததாகக் குறித்துள்ளார். கடவுள்மாமுனிவரும் இதனைத் தம் நூலில் கூறியுள்ளார். சிவஞான போதம் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் தோன்றிய நூல். அந்நூல் அதற்குமுன் நிகழ்ந்த வரலாற்றில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது கால முரண் ஆகும். இது சிவஞான போதம் போற்றப்பட்ட காலத்தில் தோன்றிய பரஞ்சோதியார் புராணம் அந்நூலுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சேர்த்தது என்று கொள்வதற்குரியது.

திருவாதவூரருக்கு 'மாணிக்கவாசகன்' என்னும் பெயர் அவருடைய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்த இறைவனால் சூட்டப்பட்டது என்கிறார். இதற்கு என்ன ஆதாரம் என்பது தெரியவில்லை. இறைவன் சூட்டியது என்றால் அது பெருமைக் குரியதாக அமையும் என்னும் கருத்து இப்புனைந்துரைக்கு அடியாகலாம்.

கடவுள்மாமுனிவர், பாண்டிய மன்னன் அனுப்பிய ஓலையைக் கண்டு யாது செய்வது என்று கலங்கிய மாணிக்கவாசகரிடம் மாணிக்க மணியொன்றினை அளித்து அதனை அரசனுக்குக் கையுறையாகக் கொடுத்து ஆவணி மூலத்தில் குதிரைகள் வந்துசேரும் என்று அறிவிக்குமாறு ஞானாசிரியன் பணித்தான் என்னும் புதிய செய்தியினைச் சேர்த்துள்ளார். இதனை யொட்டியே இன்றும் ஆவணி மூலத்தில் விழா எடுக்கப்படுகிறது.

பரிமேல் வந்த அழகன்

நம்பி கூறியுள்ளதற்கு மாறாகப் பாண்டிய மன்னன் பரிசாகத் தந்த ஆடையினைக் குதிரைச் சேவகனாக வந்த இறைவன் பணிந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஏற்றுத் தன் முடியில் சூடிக்கொண்டான் என்று பாடியுள்ளார் பரஞ்சோதிமுனிவர். இம்மாற்றத்தால் இறைவனின் எளிவந்த தன்மை என்னும் பண்பு மேலும் ஏற்றம் பெறும் என்று கருதினார்போலும்!

பிட்டுக்கு மண்சுமந்த வரலாறு

பரஞ்சோதி முனிவர், நரைமுதாட்டியின் பெயர் வந்தி என்றும், கூலியாளாக வந்த இறைவனை அரசனே அடித்தான் என்றும் மாற்றிப் பாடியுள்ளார். இவை வரலாற்றுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்னும் நோக்கத்தில் செய்யப்பட்ட மாற்றங்களாகவே தோன்றுகின்றன. கடவுள்மாமுனிவர் தண்டத்தலைவரோ அரசனோ கூலியாளாய் வந்த இறைவனை அடித்ததாகப் பாடாமல் தண்டத் தலைவன் ஏவக் கொடியவன் ஒருவன் அடித்தான் என்று பாடியுள்ளார். அரசன் அடித்ததாகக் காட்டினால் அவன் கொடியவனாகக் கருதப்படலாம் என்று எண்ணினார் போலும்! மேலும், கடவுள்மாமுனிவர் இறைவன் கங்கைக்குக் கட்டளையிட, அதனால் வைகையில் வெள்ளப் பெருக்கு உண்டாயிற்று என்கிறார்.

ஊமைப் பெண்ணைப் பேச வைத்தல்

பரஞ்சோதிமுனிவர், மாணிக்கவாசகர் தில்லையில் ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார் என்கிறார். இது புதியது; நம்பி சொல்லாத அற்புத நிகழ்ச்சி. பெரிய புராணம் அருளாளர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கிறது. சமயவாதம் நிகழ்கின்றபோது இறைவன் திருவருளால் திருஞானசம்பந்தர் அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அவருக்கும் சமணர்களுக்கும் இடையே வாதம் நிகழ்ந்தபோது, கூன்பாண்டியன் வெப்பு நோயினை நீக்கும் போட்டி நிகழ்ந்தது. அதில் திருஞானசம்பந்தர் வெற்றி பெற்றார். அவற்றைக் கற்ற தாக்கத்தால் அதுபோல ஓர் அற்புத நிகழ்ச்சியைப் படைத்தல் சிறப்பாக அமையும் என்று பரஞ்சோதியார் எண்ணியுள்ளார். அதனால் ஊமைப் பெண்ணைப் பேசவைக்கும் போட்டி மாணிக்கவாசகருக்கும் பவுத்தருக்கும் இடையே நிகழ்வதாகக் காட்டி அதில் மாணிக்கவாசகர் வெற்றி பெறுவதாகப் பாடியுள்ளார்.

கடவுள்மாமுனிவர் புராணத்தில் இன்னும் சில வேறுபாடுகள் உள்ளன. பாண்டிய மன்னனிடமிருந்து விடைபெற்ற மாணிக்க வாசகர் திருப்பெருந்துறைக்கு மீண்டும் சென்று குருநாதரைச் சந்தித்தார் என்றும், அவர் அதுவரை அங்கு இருந்தார் என்றும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குறிப்பது இவர்மட்டும் குறிக்கும் செய்திகளாகும். திருவாசகப் பாடற்பகுதிகள் எங்கெங்கே பாடப்பட்டன என்ற குறிப்பும் தந்துள்ளார். அக்குறிப்புகள் பெரும்பற்றப்புலியூர் நம்பி கூறும் குறிப்புகளுக்கு மாறாக உள்ளன.

இறைவன் எழுதிக்கொண்ட நூல்கள்

கடவுள்மாமுனிவர் திருவாசகத்திற்கும் திருக்கோவையாருக்கும் ஏற்றம் தரும் அழகிய நிகழ்ச்சி ஒன்றினைத் தம் புராணத்தில் புனைந்துள்ளார். இது முந்தைய புராணங்களில் காணப்படாதது. ஒருநாள் இறைவன் வேதிய வடிவங்கொண்டான். தில்லையை அடைந்தான். அங்கு மாணிக்கவாசகர் பன்னசாலையில் தங்கி யிருந்தார். அவரிடம் சென்று தான் பாண்டி மண்டலத்தைச் சார்ந்தவன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். அவரிடம் அவர் இறைவனைப் பரிமேல் அமர்ந்து வரச்செய்த சிறப்பால் பாண்டிநாடே உயர்வடைந்து விட்டதாகத் தெரிவித்தான். அவர் பவுத்தர்களை வாதில் வென்றமையால் யாவரும் மகிழ்வு அடைந்தனர் என்றான். தான் அவர் பாடல்கள் முழுவதையும் ஓதி மகிழ விரும்புவதாகக் கூறினான். அவரிடம் தான் எழுதிக்கொள் வதற்கு வாய்ப்பாக அவர் விளங்கச் சொல்ல வேண்டும் என்று வேண்டினான். மாணிக்கவாசகர் அவன் விரும்பியவாறு திருவாசகம் முழுவதையும் சொல்ல, அவன் எழுதிக்கொண்டான். அதன் பின்னர்த் தில்லைப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கோவை நூலொன்று பாடுமாறு வேண்டினான். அவரும் அவ்வாறே அதனை இயற்றிச் சொல்லி வந்தார். அவ் வேதியன் அக் கோவையினையும் எழுதிக்கொண்டு விரைந்து மறைந்தான். மாணிக்கவாசகரால் எங்குத் தேடியும் அவ் வேதியனைக் காண முடியவில்லை. அவர் இங்ஙனம் வேதியனாய் வந்தவன் இறைவனே என்று தெளிந்து இன்ப வெள்ளத்தில் தோய்ந்தார்.

மாணிக்கவாசகர் அருளிய நூல்களை எழுதிக்கொண்டு சென்ற சிவபெருமான் அவ்வோலையின் இறுதியில், 'அழகிய சிற்றம்பல முடையான் எழுத்து' என்று தன் கையொப்பமும் இட்டு அதனைச் சிற்றம்பலமுடையான் 'திருவாசற்படியில்' வைத்தருளினான். மறுநாள் வழிபாடு செய்ய வந்த அந்தணர் அதனைக் கண்டு நகரத்தாருக்கு அறிவித்தனர். எல்லோரும் கூடி அவ்வேடு என்ன ஏடு என்று அறிய முற்பட்டனர். தில்லை வாழ் அந்தணர்களில் ஒருவர் அவ்வேட்டின் மீது மலரிட்டு வணங்கி அவிழ்த்துப் பார்த்தார். அதில் திருவாசகமும் திருக்கோவையும் எழுதப் பெற்றிருந்தன. முடிவில்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'திருவாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையார் எழுதியது' என்று கைச்சாத்து இடப்பட்டிருந்தது. அதனைக் கண்டு அனைவரும் திருவருளை வியந்து போற்றினர். அந்நூலின் பொருளினை மாணிக்கவாசகரிடம் சென்று கேட்டறிய விழைந்து அவரிடம் சென்றனர். அவரை அத்திருமுறைக்குப் பொருள் விரித்து உரைக்குமாறு வேண்டிநின்றனர். அவர் எல்லோரையும் அழைத்துக் கொண்டு பொன்னம்பலத்தை அடைந்தார். 'திருவாசகத்திற்குப் பொருளாவார் பொன்னம்பலவர் ஆகிய இவரே' என்று காட்டி, எல்லாரும் காணத் தில்லை அம்பலத்துள் புக்கு மறைந்தார். இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்டோர் அனைவரும் திருவருளை வியந்து திருவாசகத் தேனை நுகர்ந்து மகிழ்ந்தனர்.

கடவுள்மாமுனிவரின் நல்ல நோக்கம் நிறைவேறியது. அவரது இப்புனைவினைக் கற்பனைக்களஞ்சியம் சிவப்பிரகாசரும், குமரகுருபரரும் ஏற்றுப் போற்றிக் கொண்டாடினர்.

" பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம்; அதற்கு வாச்சியம்
தூசுஅகல் அல்குல்வேய்த் தோள்இடத் தவனே "

என்று நால்வர் மணிமாலையில்(40) சிவப்பிரகாசரும்,

" பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள்எனச் சுட்டிய ஒருபெருஞ் செல்வ "

என்று சிதம்பர மும்மணிக்கோவையில் (23) குமரகுருபர அடிகளும் குறித்துச் செல்வது காணலாம்.

மீட்டுருவாக்கம்

மாணிக்கவாசகர் வரலாறு காலப்போக்கில் கூடுதல் செய்திகளைப் பெற்று எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதனைப் புராணங்கள் வழி அறியமுடிகிறது. இவற்றைக் கூர்ந்து நோக்கும்போது, திருவாசகமும் திருக்கோவையாரும் பெருஞ்சிறப்போடு போற்றப் பட அவற்றைத் தந்த நூலாசிரியரைப் பற்றி அவர் திருவாதவூரில் பிறந்தவர் என்பது தவிர,வேறொன்றும் அறியப்படாத காலம் ஒன்று இருந்தது என்று தெரிகிறது. பெரும்பற்றப்புலியூர் நம்பி தொடங்கிப் பின் வந்தோர் அனைவரும் திருவாசகத்தில் வரும் குறிப்புகளைத் தொகுத்து அவற்றின் துணைகொண்டு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாணிக்கவாசகர் வரலாற்றினை மீட்டுருவாக்கம் செய்துள்ளனர் என்றே தோன்றுகிறது.

ஊரும் பேரும்

பாண்டிய நாட்டில் உள்ள திருவாதவூர் மாணிக்கவாசகர் தோன்றிய ஊராகும். இதனை மரபுவழியாகப் புராணம் பாடிய வர்கள் அறிந்திருத்தல் வேண்டும். திருவாசகத்தில் ஓரிடத்தில் அவ்வூர் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. கீர்த்தித் திருஅகவலில்,

" வாத வூரினில் வந்துஇனிது அருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும் " (2:52-53)

என்று அவ்வூர் சுட்டப்படுகிறது. அது மதுரைக்கு வடகிழக்கே சுமார் 7 கல் தொலைவில் உள்ளது.



மாணிக்க வாசகப் பெருமான் பிறந்த திருவாதவூரில் அமைந்துள்ள மாணிக்கவாசகரின் தனிக்கோயில்

மாணிக்கவாசகர், மணிவாசகர், ஆளுடை அடிகள் என்பவை பிற்காலத்தில் வழங்கிய பெயர்களாகும். அவர்தம் இயற்பெயர் திருவாதவூரர் என்று புராணங்கள் குறிக்கின்றன.

" திருவாத வூரர்எனும் திருநாமம் தரித்தார்கள் " (6)

என்று கடவுள்மாமுனிவரும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" பேர்வாத வூரர்எனப் பெற்றுத்தம் பிறங்குமறைச்
சார்வாய நூல்வழியால் சடங்குஎலாம் நிறைவுஎய்தி
நீர்வாய இளமதிபோல் நிரம்புவார் வேதமுதல்
பார்வாய எண்கலையும் பதினாறுஆண் டினில்பயின்றார் "

என்று பரஞ்சோதியாரும் பாடியுள்ளனர். இவற்றைக் காணும்போது திருவாதவூரர் என்பதே இயற்பெயராக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ஊர்ப்பெயரை யொட்டிப் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்துள்ளது. சுந்தரமூர்த்தி நாயனாருக்கு நம்பி ஆரூரர் என்ற பெயர் இருந்தமையே சான்றாகும். ஆனால், புராணங்கள் பலவற்றைக் கற்பித்துக் கூறுவதால் அவர் பிறந்த ஊரையொட்டிப் படைத்து வழங்கிய பெயரே திருவாதவூரர் என்று கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது. தவத்திரு மறைமலையடிகளார் இப் பெயரினை இயற்பெயராகத் தோன்ற வில்லை என்கிறார்.

இவருடைய இயற்பெயர் சிவபாத்தியன் என்று கருதுவோரும் உண்டு. அவர்கள் தமக்குச் சான்றாக நம்பியாண்டார் நம்பிகள் நூலில் வரும்

" வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயுமற் றப்பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே "

(கோயில் திருபண்ணியர்விருத்தம், 58)

என்னும் பாட்டினைக் காட்டுவர்.

சிவபாத்தியன் என்பதற்குச் 'சிவனடி சென்னி வைத்தவர்' என்பது பொருளாகும். இது சிறப்புப் பெயர் என்பது வித்துவான் க. வெள்ளை வாரணனார் கருத்து.

ஆமாத்தியர் குலம்

மாணிக்கவாசகர், "முனிவர் ஆமாத்தியர் குலத்தில் பிறந்தார்" என்று பெரும்பற்றப்புலியூர் நம்பியும், "அமாத்தியர் குடியில் அவதரித்தார்" என்று பரஞ்சோதி முனிவரும், "அருள்புனை மாத்தியர் குலத்தில் அந்தணனுக்குப் புதல்வராக வாதவூரர் தோன்றினார்" என்று கடவுள்மாமுனிவரும் குறித்துள்ளனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவ்வாறு ஒரு குலம் இருந்ததாகத் தெரியவில்லை. அவர் ஏற்ற பதவியே அமாத்தியர் என்று குறிக்கப்படும் அமைச்சர் பதவி. இதற்கு மாறாக வடமொழியில் உள்ள ஆலாசிய மான்மியம் என்னும் நூல் அவர் ஆதிசைவ குலத்தில் பிறந்ததாகக் குறிப்பிடுகிறது என்பர் அறிஞர் கா. சுப்பிரமணிய பிள்ளை (பன்னிரு திருமுறை வரலாறு ப. 61). இக்குறிப்புகள் அவர் தோன்றிய குலம் பற்றியும் கருத்து வேறுபாடு இருத்தலைக் காட்டுகின்றன.

"ஈண்டியமாயா இருள்கெட
எப்பொருளும் விளங்கத்
தூண்டியசோதியை மீனவனும்
சொல்ல வல்லன்அல்லன்" *(531)*

என்றும்,

"மதுரையர் மன்னன் மறுபிறப்போடே
மறித்திடுமே" *(527)*

என்றும்,

"நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி" *(4:213-4)*

என்றும் மணிவாசகர் தம் நூலில் பாண்டிய மன்னனைக் குறித்துள்ளார்.

அக்குறிப்புகளையொட்டியே அவர் தோன்றிய குலம் அமைச்சர் குலம் என்று பொருள்படும் ஆமாத்தியர் குலம் என்று புனைந்துள்ளனர் எனலாம்.

மாணிக்கவாசகர்

நூலுக்கு மாணிக்கவாசகம் என்னும் பெயர் வழங்க, அதனை யொட்டி நூலாசிரியருக்கு மாணிக்கவாசகர் என்னும் பெயர் வழங்கத் தொடங்கியுள்ளது. இதனை வித்துவான் க. வெள்ளை வாரணனார் அழகுற விளக்கியுள்ளார்: "இறைவனது பொருள் சேர் புகழை" விரித்துரைக்கும் திருப்பாடல்களை 'மணி வார்த்தை' என்ற பெயரால் அடிகள் திருவாசகத்திற் குறிப்பிட்டுள்ளார்.

"சிந்தனைநின் றனக்குஆக்கி நாயி னேன்தன்
கண்இணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கி" *(30)*

எனவும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" பேசும் பொருளுக்கு இலக்கிதமாம் பேச்சுஇறந்த
மாசுஇல் மணியின் வார்த்தை " (631)

எனவும் வரும் திருவாசகத் தொடர்களால் இக்குறிப்பு இனிது புலனாதல் காணலாம். அடிகள் குறித்த மணிவார்த்தை என்ற தொடருக்கு 'மாணிக்க மணி போலும் வாசகம்' எனப் பொருள் கொண்ட உமாபதி சிவாசாரிய சுவாமிகள், தாம் இயற்றிய கோயிற் புராணத்தில்,

" பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்துபெருந்
துறைக்கடல் உண்டு
ஆசில்எழில் தடித்துஅயர அஞ்செழுத்தால்
அதிர்த்துஎழுந்து
தேசம்மலி தரப்பொதுவார் சிவபோகம்
மிகவிளைவான்
வாசகமா மாணிக்க மழைபொழிமா
முகில்போற்றி "

எனத் திருவாதவூரடிகளை இறைஞ்சிப் போற்றியுள்ளார். இதன் கண் 'வாசகமா மாணிக்க மழைபொழி மாமுகில்' எனத் திருவாத ஊரடிகளைப் போற்றுமுகத்தால் அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்களை 'மாணிக்கவாசகம்' என்ற பெயரால் உமாபதி சிவம் குறித்துப் போற்றியுள்ளமை காணலாம். இக்குறிப்பினைக் கூர்ந்து நோக்குங்கால் திருவாசகத்திற்கு வழங்கிய 'மாணிக்கவாசகம்' என்னும் இப்பெயரின் அடியாகவே இத்திருமுறையை அருளிச் செய்த திருவாதவூரடிகளுக்கு மாணிக்கவாசகர் என்ற சிறப்புப் பெயரும் தோன்றி வழங்கியது என்பது நன்கு புலனாம். இப் பெயர்க் காரணத்தை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் திருப்பெருந்துறைப் புராணம் உபதேசப் படலத்தில்,

" மன்ன நன்மணியே வார்த்தையாய்த் திரண்டு
வரும்ஒரு காரணக் குறியால்
அன்ன மாணிக்க வாசகர் எனும்பேர்
ஆகஇன்று ஆதி என்று அறைந்தார் "

என வரும் தொடரில் தெளிவாக விளக்கியுள்ளமை இவண் கருதத்தகுவதாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அரிமர்த்தனன்

மாணிக்கவாசகர் காலத்தில் ஆண்ட மன்னன் அரிமர்த்தன பாண்டியன் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அப் பெயரில் பாண்டியர் வரலாற்றில் எந்த மன்னனும் ஆட்சி புரிந்ததாகக் குறிப்புக் காணப்படவில்லை. 'அரிகேசரி' என்னும் சிறப்புப் பெயருடைய மன்னன் ஒருவன் இருந்திருக்கிறான். அரிகேசரி, பரகேசரி என்னும் பெயர்கள் மன்னர்களுக்குப் பட்டப் பெயராக வழங்கியுள்ளன. அரி என்னும் சொல்லுக்கு பகைவர் என்பதும், கேசரி என்பதற்குச் சிங்கம் என்பதும் பொருளாகும். அப்பெயரால் பகைவர்களுக்குச் சிங்கம் போல் அஞ்சத்தக்கவனாய் இருந்தவன் என்பது குறிக்கப்படுகிறது. இப்பெயரினை யொட்டியே 'பகைவரைக் கலக்குபவன்' என்று பொருள்படும் அரிமர்த்தனன்' என்னும் பெயர் உருவாக்கப்பட்டுள்ளது.



பரிச தீட்சை நயன தீட்சையும் உபதேசமும் பூவார் அடிச்சுவடு பொறித்தல்

ஆட்கொண்டருளிய அந்தணன்

மாணிக்கவாசகர் வாழ்வில் பெருமாற்றம் நிகழக் காரணமாய் அமைந்தது திருப்பெருந்துறையில் அவர் குருபரனாக வந்த சிவபெருமானால் ஆட்கொள்ளப் பெற்ற நிகழ்ச்சியாகும். அஃது அவர் பெற்ற ஆன்ம அனுபவம். அதனை அவர் தெரிவித்தா லன்றிப் பிறரால் அறிய இயலாது.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் பாடிய அருட்பத்தில் பாடல்தோறும் குருந்தமரத்தின்கீழ் வீற்றிருக்கும் பெருமானைக் குறித்துப் போற்றியுள்ளார். குருந்தம் மேவிய சீர்ஆதி, அருத்தன், அங்கணன் என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார். அற்புதப் பத்தும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அங்கே அருளியதாகக் கூறப்படுகிறது. அதில் மண்ணில் பொய் பேசி நடித்து அகங்காரத்தோடு திரிந்த தம்மைப் பிடித்து அடித்து அடித்து இன்னடிசில் ஊட்டினான் என்கிறார்.

" நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நான்எனது எனும்மாயம்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்நின்றுஅப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்துஅ டித்துஅக் காரம்முன் தீற்றிய
அற்புதம் அறியேனே " (571)

என்பது அற்புதப்பத்துப் பாடல்.

இறைவன் தம்மைக் குருவடிவில் வந்து ஆட்கொண்டதாகத் தெரிவித்துள்ளார். ''கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க' *(1:3)* என்று அக்குருபரனை இறைவனாகவே போற்றுகிறார். அவன் மனிதனாக வந்தான் என்பதனை,

" ஈறுஇலாத நீளளியை ஆகி வந்து!
ஒளிசெய் மானிடம் ஆக நோக்கியும் " *(95)*

என்று குறித்துள்ளார்.

" பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்றுஉன்
பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றுஎன்று அருளிய அருளும்
பொய்யோ? எங்கள்பெருமானே! " (600)

என்று அக் குருபரனைப் பெரியோனாகக் குறித்துள்ளார். அப்படிக் குருவடிவில் வந்த பெருமான் அந்தணக் கோலத்தில் திகழ்ந்ததாகக் குறித்துள்ளார்.

" தன்நேர் இல்லோன் தானேஆன தன்மை
என்நேர் அனையார் கேட்க வந்துஇயம்பி
அறைகூவி ஆட்கொண் டருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும் " *(3:146-9)*

" கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனை " *(179)*

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" அருவாய் மறைபயில் அந்தணனாய்
ஆண்டு கொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ " (228)

" உருநாம் அறியஓர் அந்தணனாய்
ஆண்டு கொண்டான் " (235)

" முன்னே எனையாண்ட
பார்ப்பானே " (447)

என்னும் பாடற்பகுதிகள் இறைவன் அந்தணக்கோலத்தில் வந்து ஆட்கொண்டதனைக் காட்டுகின்றன.

அமைச்சர் கோலத்தில்
மாணிக்கவாசகர்

ஆண்டிக் கோலத்தில்
மாணிக்கவாசகர்

(திருப்பெருந்துறை கோயிலில் உள்ள சிலைகளின் வரையோவியம்)

அந்தணக் கோலத்தில் வீற்றிருந்த பெருமான் மாணிக்க வாசகரைக் கண்களால் நோக்கித் திருவைந்தெழுத்தை அறிவுறுத்தித் திருவடிகளை அவரது தலைமேல் சூட்டி ஆட்கொண்டான்.

திருச்சதகத்தில்,

" புணர்ப்பது ஒக்க எந்தை என்னை ஆண்டு
பூண நோக்கினாய் " (75)

என்று ஆசிரியனாய் வந்த இறைவன் தம்மீது அருட்பார்வை பதித்ததனையும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" மன்ன என்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றினாய் (399)

" யானேயோ தவம்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன் " (553)

என்று முறையே செத்திலாப்பத்து, திருவேசறவு ஆகியவற்றில் குறித்துள்ளவற்றால் அப்பெருமான் திருவைந்தெழுத்தைத் தமக்கு அறிவுறுத்தியதனையும் புலப்படுத்தியுள்ளார். போற்றித் திருஅகவலில்,

" என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி " (4:129 30)

என்றும், திருப்பூவல்லியில்,

" இணைஆர் திருவடிஎன் தலைமேல் வைத்தலுமே
துணைஆன சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன் "
(275)

" பேராசை யாம்இந்தப் பிண்டம்அறப்
பெருந்துறையான்
சீரார் திருவடிஎன் தலைமேல்
வைத்தபிரான் " (284)

என்றும், ஆசைப்பத்தில்,

" கருடக் கொடியோன் காண மாட்டாக்
கழற்சே வடிஎன்னும்
பொருளைத் தந்துஇங்கு என்னை ஆண்ட
பொல்லா மணியேயோ " (418)

என்றும் வரும் குறிப்புகளால் தமக்கு அப்பெருமான் திருவடி சூட்டி ஆட்கொண்டதனையும் தெரிவித்துள்ளார்.

திருவாசகத்தில் காணப்படும் இக்குறிப்புகளையொட்டியே புராணங்கள் இறைவன் குருபரனாய் வந்து ஆட்கொண்ட நிகழ்ச்சியை விளக்கமாகப் புனைந்துரைத்துள்ளன. இவை இல்லையெனில் மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் பெற்ற இறையனுபவத்தை அவருடைய பெயர், குலம், பெற்றோர் பற்றிக்கூடச் சரியாக அறியப்படாத நிலையில் இருந்த புராணம் பாடிய ஆசிரியர்களால் அருமையாக விரித்துரைத்ததற்கு இயலாது என்பது தெளிவு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவிளையாடல்கள்

சிவபெருமான் பாண்டிய மன்னனுக்குக் குதிரைகளை விற்றான் என்றும் (2:38-40) குதிரைச் சேவகனாய் மதுரை மாநகரில் இருந்தான் என்றும் (2:44-45) பரிமாவின்மேல் ஏறி வந்தான் என்றும் (2; 116) பெருந்துறைப்பெருமான் வெற்றி பொருந்திய குதிரையின்மேல் வந்தருளித் தன் அடியார் குற்றங்களைப் போக்கிக் குணங்களை ஏற்றுச் சீராக்கிச் சுற்றத் தொடர்பினை அறுப்பான் என்றும் (194) சிவபெருமான் பரிமேல் வருபவன் என்றும் (353, 354, 526, 532, 592, 625, 629) பொதுவாகக் குறிப்பிட்டுள்ளதேயன்றி மாணிக்கவாசகருக்காகக் குதிரையில் வந்தான் என்று காணப்படவில்லை. கீர்த்தித் திருஅகவலில் முதல் 101 அடிகளில் இறைவன் பல்வேறு இடங்களில் நிகழ்த்திய திருவிளையாடல் களைக் கூறி, 102ஆம் அடி முதற்கொண்டே தமக்கும் தம்மைச் சார்ந்தோருக்கும் புரிந்த அருள்திறத்தைப் பேசுகின்றார். இதனால் அதற்கு முன் குறிக்கப் பெறும் குதிரைச் சேவகனாய் வந்த நிகழ்ச்சி மாணிக்கவாசகர் பொருட்டு நிகழ்ந்தது அன்று என்பது தெளிவாகிறது.

கீர்த்தித் திருஅகவலில், ''நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்'' (2:36) என்று சிவபெருமான் இயற்றிய நரியைப் பரியாக்கியதும் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அத் திருவிளையாடல் யாருக்காக நிகழ்ந்தது என்னும் குறிப்புக் காணப்படவில்லை.

மற்றோர் இடத்தில் இந்நிகழ்ச்சியை மாணிக்கவாசகர் உவமை யாகக் காட்டியுள்ளார். ''பெருமானே, இரும்பு மனத்தையுடைய என்னை ஆட்கொண்டு உருக்கிக் கரும்புச் சுவையை உணருமாறு செய்தாய். அது நரிகளை யெல்லாம் பெரிய குதிரைகளாக ஆக்கிய செயலைப் போன்றது'' என்கிறார்.

'' இரும்புதரு மனத்தேனை
ஈர்த்துஈர்த்துஎன் என்புஉருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக்
காட்டினைஉன் கழல்இணைகள்
ஒருங்குதிரை உலவுசடை
உடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறு
அன்றேஉன் பேர்அருளே. '' (546)

என்பது திருஏசறவு. இப்பகுதியின் நான்காவது பாட்டில் எனக்கு அருளியது நாய்க்குப் பொற்றவிசு இட்டது போன்றது என்று கூறியுள்ளார். அதுபோன்றதே இதுவும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆனந்தமாலையில் வரும் குறிப்பும் மாணிக்கவாசகர் பொருட்டு நரியைப் பரியாக்கினான் என்று தெரிவிக்கவில்லை. பெருந்துறையில் உறையும் பெருமான் நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி உலகத்தில் நடப்பித்துப் பாண்டியன் ஆளும் மதுரையில் உள்ளாரையெல்லாம் மயல் கொள்ளுமாறு செய்தான்.

" நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞாலம் எல்லாம் நிகழ்வித்து
பெரிய தென்னன் மதுரைஎல்லாம்
பிச்சது ஏற்றும் பெருந்துறையாய் " (649)

என்கிறார்.

நரி பரியானது

இறைவன் மாணிக்கவாசகருக்காக வந்தி என்னும் மூதியவளின் கூலியாளாய் வந்து பிட்டுக்கு மண்சுமந்தான் என்று புராணங்கள் கூறுகின்றன.

" ஆங்கது தன்னில் அடியவட்கு ஆகப்
பாங்காய் மண்சுமந்து அருளிய பரிசும் " (2:47-47)

என்று மூதாட்டிக்காக மண்சுமந்தான் என்பது சுட்டப்படுகிறது. திருஅம்மானை, பாண்டிய மன்னனால் அடியுண்டு சிவபெருமான்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பொன்மேனியில் புண் பெற்றான் என்று உருக்கமாகக் குறிப்பிடுகிறது.

" பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய். " *(182)*

திருப்பூவல்லியிலும் இதே செய்தி வேறு சொற்களால்,

" திண்போர் விடையான் சிவபுரத்தார் போர்ஏறு
மண்பால் மதுரையில் பிட்டுஅமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ! " *(290)*

என்று கூறப்படுகிறது.

திருக்கழுக்குன்றப் பதிகத்தில் உண்ட பிட்டுக்கு ஈடாக மண் சுமந்தவனாக இறைவன் குறிக்கப்பெறுகிறான்.

பிட்டுக்கு மண் சுமந்தது

" பிட்டுநேர்பட மண்சுமந்த
பெருந்துறைப் பெரும்பித்தனே! " *(466)*

என்கிறார் மாணிக்கவாசகர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிவபெருமான் தம்மைக் காப்பதற்காக வைகையில் வெள்ளப் பெருக்கு ஏற்படுமாறு செய்தான் என்பதாகவோ அப்பொழுது வந்தி என்னும் மூதாட்டிக்காகக் கூலியாளாக வந்தான் என்பதாகவோ மாணிக்கவாசகர் எங்கும் குறிப்பிடவில்லை. இவ்விரு திருவிளை யாடல்களையும், புராணம் பாடியவர்கள் மாணிக்க வாசகரோடு இணைத்து அவரது வாழ்க்கை வரலாற்றை உருவாக்கியுள்ளார் என்றே கருத வேண்டியுள்ளது.

திருக்கழுக்குன்றக் காட்சி

புராணங்கள் குருபரனாக வந்த இறைவன் மாணிக்கவாசகரைத் திருவுத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம் ஆகிய இடங்களுக்குச் சென்று தன்னைக் கண்டு தில்லைக்கு வருமாறு பணித்தான் என்று தெரிவிக்கின்றன. திருக்கழுக்குன்றப் பதிகத்தில், பாடல்தோறும் இறைவன் தமக்குக் கழுக்குன்றிலே தன் திருக்கோலத்தைக் காட்டினான் என்று பாடியுள்ளார். இறுதிப் பாடலில்,

" மயக்கம் ஆயதுஓர் மும்மலப் பழ
வல்வினைக்குள் அழுந்தவும்
துயக்கு அறுத்துஎனை ஆண்டு கொண்டுநின்
தூமலர் கழல்தந்து எனைக்
கயக்க வைத்து, அடியார் முனேவந்து
காட்டினாய் கழுக்குன்றிலே " (472)

என்று தம்மை எவ்வாறு கலங்கச் செய்து காட்சி தந்தான் என்பதனை விளக்கமாகக் கூறியுள்ளார்.

கீர்த்தித் திருஅகவலில்,

" நாயினேனை நலமலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகஎன
ஏல என்னை இங்கு ஒழித்தருளி " (2:127-129)

என்று தம்மை ஆட்கொண்ட இறைவன் தில்லைக்கு வருமாறு கட்டளையிட்டுச் சென்றதாகத் தெரிவித்துள்ளார். இது திருப்பெருந் துறையில் நடந்த நிகழ்ச்சியாகும்.

மாணிக்கவாசகர் உத்தரகோசமங்கையில் உள்ள இறை வனிடம் தம்மை விட்டுவிடாமல் காத்தருள வேண்டும் என்று நீத்தல் விண்ணப்பத்தில் வேண்டுகிறார். இது திருப்பெருந்துறை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நிகழ்ச்சிக்குப் பின்னரே நடந்திருத்தல் வேண்டும். இவற்றை யெல்லாம் உளங்கொண்டு புராணம் இயற்றியவர்கள் இறைவன் திருவுத்தரகோசமங்கை, திருக்கழுக்குன்றம் ஆகியவற்றைக் கண்டு தில்லைக்கு வருக என்று மாணிக்கவாசகருக்கு ஆணையிட்டதாகக் கற்பனை செய்து பாடியுள்ளார்கள்.

தில்லைக்கூத்தன் திருவடி சேர்தல்

இறுதியாக மாணிக்கவாசகர் தில்லையில் நடமாடும் பெருமானே தம் பாடல்களுக்குப் பொருள் என்று காட்டி அவன் திருவடிகளை நோக்கி நடந்து அவற்றில் ஒன்றினார் என்பது தில்லையின் பெருமையையும் மாணிக்கவாசகர் பத்திமைச் சிறப்பையும் காட்டுமாறு புனையப்பட்ட கற்பனைச் சித்திரமாகும். மாணிக்க வாசகர்,

" தில்லையுட் கூத்தனே " (1:90)

" இறைவன் ஈண்டி யடியவரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்குஇனிது அருளினன் " (2:144-45)

" தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி " (4:92)

" நல்தில்லைச் சிற்றம்பலத்தே தீஆடும் கூத்தன் " (166)

" தில்லைநகர் புக்குச் சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானை " (179)

போன்ற தொடர்களால் தில்லையைப் போற்றியுள்ளார். அருளாளர்கள் மறைவினை இறைவன் திருவடியில் சென்று கலந்தனர் என்று பாடுவது சமயமரபு. வைணவ சமயத்தாரும் ஆண்டாள் நாச்சியார் திருவரங்கனை நோக்கி நடந்துசென்று அவனோடு ஒன்றினார் என்று புகல்வது இங்கு நினைவுகூர்தற்குரியது.

தெளிவான செய்திகள்

இதுகாறும் கண்டவற்றால் மாணிக்கவாசகர் வரலாற்றைப் புராணங்கள் அவர் பாடல்களில் காணப்படும் சில குறிப்புகளைத் துணையாகக் கொண்டு கற்பனை செய்து அமைத்துள்ளன என்பது தெளிவாகும். பின்னர் மாணிக்கவாசகர்பற்றித் தெளிவாக அறியப்படும் வரலாறுதான் என்ன? திருவாசகத்தைத் தக்க அறிஞர்களைக் கொண்டு ஏடுகளைச் சோதித்துத் திருத்தமாக

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வெளியிட்டுள்ள மர்ரே அண்டு கம்பெனியாரின் பதிப்பில் பதிப்புரையில் எழுதியுள்ள கருத்துகளே ஏற்புடையனவாகத் தோன்றுகின்றன: ''இப் பேரருளாளர் பாண்டி நாட்டில் பல அறிஞர்களுக்குப் பிறப்பிடமும் உறைவிடமுமாக விளங்கிய 'திருவாதவூர்' என்னும் ஊரில் தோன்றியவர்; உலகியல் நூல்களையும், சமய நூல்களையும், தத்துவ நூல்களையும் நன்கு பயின்றவர். பல்வேறு கருத்து உடையவர்களோடும் கலந்து பயின்று உண்மை காணும் முயற்சியில் இளமையில் ஈடுபட்டவர்; அரசர்களோடு நெருங்கிப் பழகி உலகியலில் உயர்ந்த நிலையி லிருந்து, ஏதோ மாறுபாட்டால் அந்த நிலைகளை விடுத்து, அடியவர் கூட்டமும் தெய்வ வழிபாடுமே நிலையான பேற்றை அளிக்கவல்லன என்னும் துணிவு கொண்டு தம் வாழ்க்கையைத் தெய்வத்தொண்டுக்கே உரிமையாக்கியவர்; புறம்பான தோற்றங் களில் புலன்களைப் போகவொட்டாமல் தடுத்து, அகத்தே தோன்றும் பேரொளியைக் கொண்டு, இறைவனைக் காணும் முயற்சியில் ஈடுபட்டவர்; அவ்வாறு முயலும் போது தாம் பெற்ற இன்பத்தை உலகத்தாரும் பெற வேண்டும் என்னும் பரிவால், சொல்லுக்கு அடங்காதவற்றைச் சொல்லால் வெளியிட முயன்றவர் ; எல்லாப் பருவத்தினரும், எல்லா மனநிலை உடையவரும், எல்லாச் செயல்களிலும் 'தெய்வ உணர்ச்சி' கொண்டிருக்க வேண்டும் என்னும் பெருநோக்கம் உடையவர்; இந்த நோக்கத்தை நிறை வேற்றுவதற்காக, துயில் எழும்போதும், புனலாடும்போதும், விளையாடும்போதும் பயன்படுவதற்காகப் பலவகையான பாடல்களை அருளியவர்; 'சிவபெருமான்' கோயில் கொண்டுள்ள பல திருப்பதிகளுக்கும் சென்று வணங்கும் பழக்கம் உடையவர்; திருப்பெருந்துறையில் பெரிதும் ஈடுபாடு உடையவர்; பின்னர், தில்லையிலேயே நிலையாகத் தங்கி, கூத்தப்பிரானை வணங்கி, அவன் திருவருளில் கலந்தவர் என்ற அளவில்தான் நாம் இப்போது வரலாற்று முறையில் கூறலாம்.'' (ப. IV)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. மாணிக்கவாசகர் காலம்

மாணிக்கவாசகர் காலம் குறித்து இருவகைக் கருத்துகள் நிலவுகின்றன. தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவர் என்று சிலரும் பிற்பட்டவர் என்று சிலரும் கருதுகின்றனர். தவத்திரு மறைமலை யடிகளார் போன்றோர் முதற்பிரிவையும், தஞ்சைச் சீனிவாச பிள்ளை போன்றோர் இரண்டாம் பிரிவையும் சேர்ந்தவராவர். அண்மைக்கால ஆராய்ச்சிகளால் மாணிக்கவாசகர் தேவார மூவர்க்கும் காலத்தால் பிற்பட்டவர் என்னும் கருத்து வலிமை பெற்றுள்ளது. மாணிக்கவாசகர் காலம் குறித்து நீள ஆராய்ந்து முடிவு செய்தவர் களில் குறிப்பிடத்தக்கவர் வித்துவான் க. வெள்ளைவாரணனார் ஆவார். அவர் கூறும் காரணங்களை முறையே காணலாம்.

மூவர்க்கும் முற்பட்டவர் அல்லர்

1. மறைமலையடிகளார் நந்திகளுள் ஒருவரே மாணிக்க வாசகராக நிலவுலகில் பிறந்தருளினார் என்றும், 'குழமுட நந்தீசனை வாசகனாக் கொண்டார்' என்னும் திருநாவுக்கரசர் தேவாரம் இதனைத் தெரிவிக்கிறது என்றும் குறித்துள்ளார். தமிழ் நூல்களில் எதுவும் நந்தீசரே மாணிக்கவாசகராகப் பிறந்தார் என்று கூறவில்லை. நந்திகள் நால்வர் என்று தொகை குறித்துள்ள திருமூலர் அவர்களில் ஒருவராக மாணிக்கவாசகரைக் குறிப்பிடவில்லை. தன் கூத்திற்கேற்ப முழவினை முழங்கும் நந்திதேவரைத் தன்னைத் தொழவந்த அடியார்களை இன்னின்னார் என்று தெரிவித்துத் தன்முன் அழைத்துவரும் தூதுவனாக அமைத்துக்கொண்டார் என்பதே மேற்குறித்த திருநாவுக்கரசரின் தேவாரத் தொடரின் பொருளாகும். திருவாதவூரடிகளை மாணிக்கவாசகர் என்று குறிக்கும் வழக்கம் கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வெளியிட்டுள்ள மர்ரே அண்டு கம்பெனியாரின் பதிப்பில் பதிப்புரையில் எழுதியுள்ள கருத்துகளே ஏற்புடையனவாகத் தோன்றுகின்றன: ''இப் பேரருளாளர் பாண்டி நாட்டில் பல அறிஞர்களுக்குப் பிறப்பிடமும் உறைவிடமுமாக விளங்கிய 'திருவாதவூர்' என்னும் ஊரில் தோன்றியவர்; உலகியல் நூல்களையும், சமய நூல்களையும், தத்துவ நூல்களையும் நன்கு பயின்றவர். பல்வேறு கருத்து உடையவர்களோடும் கலந்து பயின்று உண்மை காணும் முயற்சியில் இளமையில் ஈடுபட்டவர்; அரசர்களோடு நெருங்கிப் பழகி உலகியலில் உயர்ந்த நிலையிலிருந்து, ஏதோ மாறுபாட்டால் அந்த நிலைகளை விடுத்து, அடியவர் கூட்டமும் தெய்வ வழிபாடுமே நிலையான பேற்றை அளிக்கவல்லன என்னும் துணிவு கொண்டு தம் வாழ்க்கையைத் தெய்வத்தொண்டுக்கே உரிமையாக்கியவர்; புறம்பான தோற்றங்களில் புலன்களைப் போகவொட்டாமல் தடுத்து, அகத்தே தோன்றும் பேரொளியைக் கொண்டு, இறைவனைக் காணும் முயற்சியில் ஈடுபட்டவர்; அவ்வாறு முயலும் போது தாம் பெற்ற இன்பத்தை உலகத்தாரும் பெற வேண்டும் என்னும் பரிவால், சொல்லுக்கு அடங்காதவற்றைச் சொல்லால் வெளியிட முயன்றவர்; எல்லாப் பருவத்தினரும், எல்லா மனநிலை உடையவரும், எல்லாச் செயல்களிலும் 'தெய்வ உணர்ச்சி' கொண்டிருக்க வேண்டும் என்னும் பெருநோக்கம் உடையவர்; இந்த நோக்கத்தை நிறை வேற்றுவதற்காக, துயில் எழும்போதும், புனலாடும்போதும், விளையாடும்போதும் பயன்படுவதற்காகப் பலவகையான பாடல்களை அருளியவர்; 'சிவபெருமான்' கோயில் கொண்டுள்ள பல திருப்பதிகளுக்கும் சென்று வணங்கும் பழக்கம் உடையவர்; திருப்பெருந்துறையில் பெரிதும் ஈடுபாடு உடையவர்; பின்னர், தில்லையிலேயே நிலையாகத் தங்கி, கூத்தப்பிரானை வணங்கி, அவன் திருவருளில் கலந்தவர் என்ற அளவில்தான் நாம் இப்போது வரலாற்று முறையில் கூறலாம்.'' (ப. IV)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. மாணிக்கவாசகர் காலம்

மாணிக்கவாசகர் காலம் குறித்து இருவகைக் கருத்துகள் நிலவுகின்றன. தேவார ஆசிரியர்களுக்கு முற்பட்டவர் என்று சிலரும் பிற்பட்டவர் என்று சிலரும் கருதுகின்றனர். தவத்திரு மறைமலை யடிகளார் போன்றோர் முதற்பிரிவையும், தஞ்சைச் சீனிவாச பிள்ளை போன்றோர் இரண்டாம் பிரிவையும் சேர்ந்தவராவர். அண்மைக்கால ஆராய்ச்சிகளால் மாணிக்கவாசகர் தேவார மூவர்க்கும் காலத்தால் பிற்பட்டவர் என்னும் கருத்து வலிமை பெற்றுள்ளது. மாணிக்கவாசகர் காலம் குறித்து நீள ஆராய்ந்து முடிவு செய்தவர் களில் குறிப்பிடத்தக்கவர் வித்துவான் க. வெள்ளைவாரணனார் ஆவார். அவர் கூறும் காரணங்களை முறையே காணலாம்.

மூவர்க்கும் முற்பட்டவர் அல்லர்

1. மறைமலையடிகளார் நந்திகளுள் ஒருவரே மாணிக்க வாசகராக நிலவுலகில் பிறந்தருளினார் என்றும், 'குழமுட நந்தீசனை வாசகனாக் கொண்டார்' என்னும் திருநாவுக்கரசர் தேவாரம் இதனைத் தெரிவிக்கிறது என்றும் குறித்துள்ளார். தமிழ் நூல்களில் எதுவும் நந்தீசரே மாணிக்கவாசகராகப் பிறந்தார் என்று கூறவில்லை. நந்திகள் நால்வர் என்று தொகை குறித்துள்ள திருமூலர் அவர்களில் ஒருவராக மாணிக்கவாசகரைக் குறிப்பிடவில்லை. தன் கூத்திற்கேற்ப முழவினை முழங்கும் நந்திதேவரைத் தன்னைத் தொழவந்த அடியார்களை இன்னின்னார் என்று தெரிவித்துத் தன்முன் அழைத்துவரும் தூதுவனாக அமைத்துக்கொண்டார் என்பதே மேற்குறித்த திருநாவுக்கரசரின் தேவாரத் தொடரின் பொருளாகும். திருவாதவூரடிகளை மாணிக்கவாசகர் என்று குறிக்கும் வழக்கம் கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அதனை முற்காலத்தவராகிய திருநாவுக்கரசர் வழங்கினார் என்பது முரண்பாடாக அமையும் என்கிறார் அறிஞர் க. வெள்ளை வாரணனார்.

2. திருநாவுக்கரசர் தேவாரம் நரியைக் குதிரையாக்கியது, பிட்டுக்கு மண் சுமந்தது ஆகிய திருவிளையாடல்களைக் குறிக்கிறது என்று கூறி, அதற்குச் சான்றாக,

" நரியைக் குதிரைசெய் வானும்
நரகரைத் தேவுசெய் வானும்
விரதங் கொண்டாட வல்லானும்
விச்சின்றி நாறுசெய் வானும் "

" முரசதிர்ந் தானைமுன் னோட
முன்பணிந் தன்பர்கள் ஏத்த
அரவரைச் சாத்திநின் றானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே "

" மணியார் வைகைத் திருக்கோட்டில்
நின்றதோர் திறமும் தோன்றும் "

என்னும் தேவாரப் பாடல்களைக் காட்டியுள்ளார் மறைமலை யடிகளார்.

'நரியைக் குதிரை செய்வானும்' என்னும் பாடலில் இறைவன் அருங்குணங்களே பேசப்படுகின்றன. அதில் உள்ள 'விச்சின்றியே நாறுசெய்தல்' என்பது எந்தத் திருவிளையாடலையும் குறிக்காதது போன்றே நரியைக் குதிரை செய்தல், நரகரைத் தேவுசெய்தல், விரதங் கொண்டாடுதல் என்பனவும் திருவிளையாடல்களைக் குறிக்கவில்லை. இவற்றைத் திருநாவுக்கரசர் திருவிளையாடல் களாகக் கருதவில்லை. இச் செயல்களை அவர் எதிர்காலத்தில் வைத்துக் கூறியுள்ளதே அதனைக் காட்டுகிறது என்று தெளிவு தந்துள்ளார் அறிஞர் க. வெள்ளை வாரணனார்.

அடுத்து, 'மணியார் வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்' என்னும் தொடருக்கு, மணிகள் நிறைந்த வைகைக்கரையில் அமைந்த திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஒப்பற்ற சிறப்பும் தோன்றும் என்பதே பொருளாகும். அதில் பிட்டுக்கு மண்சுமந்த வரலாறுக்கான குறிப்பு ஏதுமில்லை. திருப்பூவணத்து இறைவன் திருநாவுக்கரசருக்கு நேரே தோன்றிக் காட்சியளித்தார் என்பதே வரலாறு. இத்தலம் வைகைக் கரையில் நில மட்டத்திற்குக் கீழே அமைந்திருத்தலை இன்றும் காணலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. திருத்தொண்டத்தொகையில், 'பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்' என்பதில் குறிக்கப்படும் அடியார் மாணிக்கவாசகர் என்பதும், அவர் வடக்கிலிருந்து போந்த வீர சைவ மரபினர் என்பதால் சுந்தரமூர்த்தி நாயனார் அவர் பெயரை வெளிப்படையாகச் சுட்டவில்லை என்பதும் மறைமலையடிகளார் கருத்து. பொய்யடிமையில்லாத புலவர் என்று போற்றப் பெற்றவர் தனியடியார் அல்லர்; தொகையடியாரே. திருத்தொண்டத் தொகையின் விளக்கமாக அமைந்த திருத்தொண்டர் திருவந்தாதியும், திருத்தொண்டர் புராணமும் தொகையடியார் என்றே தெரிவிக்கின்றன. மேலும், பாண்டி நாட்டுத் திருவாதவூரில் பிறந்த மாணிக்கவாசகரை வடக்கிலிருந்து வந்த வீரசைவ மரபினர் என்பது ஏற்புடைத்தாக அமையவில்லை என்று கூறி மறுக்கிறார் அறிஞர் க. வெள்ளை வாரணனார்.

4. மாணிக்கவாசகர் பாடல்களில் மூவரைப் பற்றிய குறிப்பு ஏதும் காணப்படவில்லை. ஆனால், அவர் முன்னைய அடியார் களான கண்ணப்பரையும் சண்டேசரையும் போற்றியுள்ளார். அவர் காலத்துக்கு முன்னே மூவர் முதலிகள் வாழ்ந்திருந்தால் அவர்களைப் பற்றி மறவாமல் குறித்திருப்பார். ஆதலின், மூவருக்கும் முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்று முடிவுகட்டுகிறார் மறைமலையடிகளார். மாணிக்கவாசகர் சுந்தரரைப்போல் அடியார் வரலாறுகளை முறையாகக் கூற முற்பட்டவர் அல்லர். இறைவன் மேன்மையையும் தம் சிறுமையையும் இடையறாது எண்ணி உருகிய அவர், அடியார் சிலரின் அன்பின் பெற்றியை அவ்வப்பொழுது எண்ணி வியந்துள்ளார். அப்போக்கிலேயே அவர் கண்ணப்பரையும் சண்டேசரையும் பாடியுள்ளார். திருவாசகத்தில் வரும் 'பண்சுமந்த பாடல்' என்பது தேவார ஆசிரியர்களின் அருட்பாடல்களைக் குறிப்பதாகும். மேலும் தேவாரப் பாடல்களின் சொல்லும் பொருளும் மாணிக்கவாசகர் பாடல்களில் நிறைந்திருக்கின்றன என்று மறுக்கிறார் அறிஞர் க. வெள்ளை வாரணனார்.

5. விநாயகர் வழிபாடு கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்துதான் தமிழ்நாட்டில் உளதாயிற்று. மாணிக்கவாசகர் நூல்களில் விநாயகர் பற்றிய குறிப்பு இல்லை. ஆதலின், அவர் அக்காலத்திற்கு முற்பட்டவர் என்பது அடிகளாரின் கருத்து. இக்கூற்றும் பொருத்தமாக அமையவில்லை என்கிறார் அறிஞர் க.வெள்ளை வாரணனார். தேவார ஆசிரியர்கள் சிவனையே முழுமுதற் பொருளாகப் போற்றியவர்கள். ஏனைய கடவுளர்களை அவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆணைக்குக் கட்டுப்பட்ட துணைத் தெய்வங்களாகக் கருதினார்கள். மாணிக்கவாசகரும் அந்நெறியில் சென்றவரே. அதனாலேயே அவர் விநாயகரைப் பற்றிக் குறிப்பிடவில்லை. இதனால் அக்காலத்தில் அவ்வழிபாடு இல்லை என்று கருத இயலாது என்பது அவர் தரும் விளக்கம்.

6. மறைமலையடிகளார் நிலவமைப்பையொட்டி ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். மாணிக்கவாசகர் காலத்தில் தில்லைநகர் அருகில் கடல் இருந்தாகக் குறிக்கிறார்.'வங்கமலி கலிநீர்த் தில்லை' (85) 'கடல் தில்லை' (122,296) 'புலியூர் சுற்றும் போர்க் கடலே' (183) என்பவை திருக்கோவையாரில் காணப்படும் குறிப்புகள். ஆனால், திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் கடல் சூழ்ந்த தில்லை என்று குறிப்பிடாமல் வயல் சூழ்ந்த தில்லை என்றும் கழிசூழ்ந்த தில்லை என்றும் குறிக்கின்றனர். இதனால் மாணிக்கவாசகர் காலத்தில் தில்லைக்கு அருகில் கடல் இருந்தது என்றும் தேவார ஆசிரியர் காலத்தில் அது விலகிச் சென்றுவிட்டது என்றும், இது நிகழ்வதற்கு 225 ஆண்டுகளாவது சென்றிருக்க வேண்டும் என்றும் கூறி, மாணிக்கவாசகர் கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கும் முற்பட்டவர் என்கிறார் மறைமலை யடிகளார்.

சீகாழி கடலுக்கு ஐந்தாறு கல் மேற்கே உள்ளது. திருஞான சம்பந்தர், "தண்கடல் சூழ்ந்த பொன்னார் வயற் புகலிந் நகர் தானே" (1:30:2) என்று கடல் அருகில் இருப்பதாகக் குறிக்கிறார். இந்த மரபினைத்தான் மாணிக்கவாசகரிடமும் காண்கிறோம். உண்மையில் தேவார ஆசிரியர்கள் காலத்தில்மட்டு மன்றி மாணிக்கவாசகர் காலத்திலும் தில்லையையொட்டிக் கடல் இருந்ததில்லை; உப்பங்கழிகளே இருந்தன. அதன் ஏனைய மூன்று பகுதிகளையும் காவிரிநீர் பாய்ந்து வயப்படுத்தியது. இதனை,

" பொன்னி வளைத்த புனல்சூழ் நிலவிப் பொலிபுலியூர் "

(கோவை317)

" சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலவன் " (கோவை 20)

" தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன் " (268)

" செறிபொழில்சூழ் தில்லை நகர்த்திருச் சிற்றம்பலம் " (480)

என்று மாணிக்கவாசகரே குறித்துள்ளார். எனவே, இப்புனைந் துரையைக் கொண்டு மாணிக்கவாசகர் காலம் தேவார மூவர்க்கும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முற்பட்டது என்பது பொருந்தாது என்கிறார் அறிஞர் க. வெள்ளை வாரணனார்.

7. கல்லாடம் என்னும் நூலில் சாக்கிய நாயனார், இடைக் காடர், காரைக்காலம்மையார் ஆகியோர் குறிக்கப்பெற்றுள்ளனர். அதில் தேவார மூவர் பற்றிய குறிப்பு இல்லை. ஆனால், மாணிக்கவாசகர் பற்றிய குறிப்பு உள்ளது. அதன் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியும் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும். ஆதலின், மாணிக்கவாசகர் மூவர்க்கும் முந்தியவர் என்று முடிவு செய்துள்ளார் மறைமலையடிகளார். கல்லாடம் அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் தொகுத்து, 'எட்டு எட்டு இயற்றிய கட்டமர் சடையோன்' (13) என்று சுட்டுகிறது. மேலும், அதில் சுந்தரமூர்த்தி நாயனாரின் தோழரான சேரமான் பெருமாள் நாயனார் நடராசப் பெருமானின் சிலம்பொலி கேட்டது, ஆலவாய் இறைவன் பாணபத்திரன் பொருட்டு அவருக்குத் திருமுகப்பாசுரம் கொடுத்தது ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. எனவே, அதன் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு என்பது விளங்கும். ஆதலின், கல்லாடம் என்னும் நூல்கொண்டு மாணிக்கவாசகர் மூவர் முதலிகளுக்கு முற்பட்டவர் என்பது ஏற்புடைத்தன்று. இது அறிஞர் க.வெள்ளை வாரணனார் தரும் தெளிவு.

8. மாணிக்கவாசகர் பவுத்தரோடு வாதம் நிகழ்த்தியுள்ளார். புத்த சமயம் தலையெடுத்த காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முந்தைய காலம் ஆகும். அதனால், மாணிக்கவாசகர் அதற்கு முன்பே வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பது மறைமலையடிகளாரின் கருத்து. அறிஞர் க. வெள்ளை வாரணனார் கீழ்க்காணுமாறு இதனை மறுத்துரைக்கிறார்: மாணிக்கவாசகரோடு வாதம் புரிந்தவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த பவுத்தர்கள் அல்லர்; இலங்கையைச் சேர்ந்தவர்கள். ஆதலின், திருவாதவூரர் காலத்தை உறுதி செய்வதற்குப் பவுத்தரை வாதில் வென்ற நிகழ்ச்சியைச் சான்றாகக் கொள்வது பொருந்தாமற் போகிறது.

மூவர்க்கும் பிற்பட்டவர்

மேற்கண்ட காரணங்களால் மாணிக்கவாசகர் தேவார மூவர்க்கும் முற்பட்டவர் அல்லர் என்பது தேற்றம். இனி, அவர்களுக்குப் பிற்பட்டவர் என்பதற்கான சான்றுகளைக் காணலாம்.

1. உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் சமய குரவர் நால்வர் என்றும், அவர்கள் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாணிக்கவாசகர் ஆகியோர் என்றும் காணப்படுகிறது. மாணிக்க வாசகர் சமயகுரவரில் நான்காமவராகவே கருதப்படுகிறார்.

'' வித்தகப் பாடல் முத்திறத் தடிகளும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும் ''

என்று மாணிக்கவாசகரை மூவர் முதலிகளுக்குப் பின்பு நான்காம வராகவே பட்டினத்தடிகள் குறித்துச் சென்றுள்ளார். இதனால், மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர்களுக்குப் பின்னும் பட்டினத் தடிகள் காலத்துக்கு முன்னும் வாழ்ந்தவர் ஆவார்.

2. தம் காலத்திற்கு முன்னும் தம் காலத்தும் வாழ்ந்த திருத்தொண்டர்கள் வரலாற்றைத் தொகுத்துத் திருத் தொண்டத் தொகையாக ஆணைப்படுத்தியவர் சுந்தரமூர்த்தி நாயனார். பெருஞ்சிறப்புக்குரிய மாணிக்கவாசகர் அவர் காலத்துக்கு முற்பட்டவராக இருந்திருப்பின் திருத்தொண்டத் தொகையில் குறிப்பிட்டுப் போற்றியிருப்பார். ஆதலின், மாணிக்கவாசகர் உறுதியாகச் சுந்தரர் காலத்திற்குப் பிற்பட்டவர் ஆவார்.

3. தில்லை நடராசப் பெருமான் கோயிலில் கோவிந்தராசப் பெருமாள் சந்நிதி பல்லவ மன்னன் நந்திவர்ம பல்லவனால் அமைக்கப்பட்டது. அவன் காலம் கி.பி. 710 முதல் 775 வரை என்பர் வரலாற்றாய்வாளர். இத்திருமால் திருமுற்றத்தை,

'' வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே ''
(கோவை 86)

என்று மாணிக்கவாசகர் குறித்துள்ளார். ஆகவே, அவர் வாழ்ந்த காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன் ஆகாது என்பது தெளிவு.

4. மாணிக்கவாசகர் தம் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னனைப் பற்றித் திருக்கோவையாரில் குறித்துள்ளார். ''வரகுணனாம் தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான்'' (306) என்றும், ''சிற்றம்பலம் புகழும் மயலோங்கு இருங்களி யானை வரகுணன்'' (327) என்றும் குறித்து உள்ளமையால் அவன் பெயர் வரகுணன் என்பதும் அவன் சிறந்த சிவபக்தன் என்பதும் விளங்குகின்றன. இவ் வரகுணனின் பத்திமையைப் பட்டினத்தடிகள் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையிலும் (38) நம்பியாண்டார் நம்பிகள் கோயில் திருப்பண்ணியர் விருத்தத்திலும் (62) வியந்து போற்றியுள்ளார்.

பாண்டியர்குடியில் வரகுணன் என்ற பெயரில் வேந்தர் இருவர் இருந்துள்ளனர். முதல் வரகுணன் கி.பி. 792 முதல் 835 வரை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆட்சிபுரிந்தவன் என்றும், இரண்டாம் வரகுணன் கி.பி. 862 முதல் 880 வரை ஆட்சிபுரிந்தவன் என்றும் இவர்களுள் முதல் வரகுணன் காலத்தில் வாழ்ந்தவர் மாணிக்கவாசகர் என்றும் அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் முடிவு செய்துள்ளார்.

5. தேவாரத்தில் மாயா வாதம்பற்றிய குறிப்பு இல்லை. ஆனால், திருவாசகத்தில்,

" மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்துஅடித்து ஆர்த்து "

என்ற தொடரால் அது குறிக்கப்படுகிறது. அக்கொள்கையை நிலைபெறச் செய்தவர் ஆதிசங்கரர் ஆவார். அவர் தம்முடைய சௌந்தரியலகரி என்ற நூலில் திருஞானசம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று குறித்துள்ளார். ஆதலின், அவர் வாழ்ந்த காலம் திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலமாகிய கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகும். சங்கரரின் மாயாவாதக் கொள்கையைக் குறிப்பிடும் மாணிக்கவாசகரின் காலம் தேவார மூவர்க்கும் பிற்பட்டது என்பது தேற்றம்.

6. சமணப்பள்ளியாய் இருந்து மகேந்திர பல்லவனால் சைவத்தலமாக மாற்றப்பட்டது திருச்சிராப்பள்ளி. அத் தலத்தினை, ''சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி'' என்று மாணிக்க வாசகர் குறித்துள்ளார். இதனால் மகேந்திர பல்லவனுக்கும் அவனால் வழிபடப் பெற்ற திருநாவுக்கரசருக்கும் காலத்தால் பிற்பட்டவர் மாணிக்கவாசகர் என்பது நன்கு தெளியப்படும்.

7. திருவாசகம் போற்றித் திருஅகவலில் அரிகேசரி என்னும் திருத்தலம் பற்றிய குறிப்பு, "கலையார் அரிகேசரியாய் போற்றி" (4:190) என்னும் அடியில் காணப்படுகிறது. இவ்வூர் திருஞான சம்பந்தரால் வெப்புநோய் தீர்க்கப்பெற்ற நின்ற சீர் நெடுமாறன் பெயரால் அமைக்கப்பட்டதாகும். அரிகேசரி என்பது அவனது சிறப்புப்பெயராகும். இதனால் திருஞானசம்பந்தருக்குப் பிற்பட்டவர் மாணிக்கவாசகர் என்பது உறுதி.

8. தேவாரத் திருமுறைகளைக் காட்டிலும் திருவாசகத்தில் வடசொற்கலப்பு மிகுதி. அஞ்ஞானம், இருதயம், சந்தீவரம், சூக்கம், தூலம், பயங்கரம், பயோதரம் போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. தவத்திரு மறைமலையடிகளார் தம் விளக்கவுரையில் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ள வடசொற்களை அங்கங்கே சுட்டியுள்ளமை கருதத்தக்கது. இதுமட்டு மன்றி, அந்தோ,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அதெந்துவே, குதுகுதுப்பு, விதுவிதுப்பு, சட்டோ, துரை, எத்தன் போன்ற பிற்காலச் சொற்களும் காணப்படுகின்றன.

9. கோகழி, கல்லாடம், வேலம்புத்தூர், சாந்தம்புத்தூர், உத்தர கோசமங்கை, பூவலம், பட்டமங்கை, அரிகேசரி, ஓரியூர், பாண்டூர், கவைத்தலை, குவைப்பதி ஆகிய ஊர்கள் திருவாசகத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றின் தலபுராணக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வூர்களும் தலபுராணச் செய்திகளும் தேவாரத் திருமுறைகளில் காணப்படவில்லை.

10. தேவாரத்தில் காணப்படாத சதகம், தசாங்கம், அந்தாதி போன்ற பிரபந்த வகைகளும், ஏழுசீர் ஆசிரிய விருத்தம் முதலான யாப்பு விகற்பங்களும் திருவாசகத்தில் உள்ளன. திருவாசகம் குறிக்கும் பஞ்சமலம், வினையொப்பு முதலிய தத்துவ விளக்கங்கள் மூவர் முதலிகளுக்குப் பின்னர்த் தோன்றியவைகளாகத் தெரிகின்றன.

மேற்காட்டிய காரணங்களின் அடிப்படையில் வித்துவான் க. வெள்ளைவாரணனார் அவர்கள் மாணிக்கவாசகர் கி.பி. 792 முதல் 835 வரை ஆட்சிபுரிந்த வரகுண பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர் என்று வரையறை செய்துள்ளார்.

மாணிக்கவாசகர் காலம்

அறிஞர் டி.என். இராமச்சந்திரன் தம் திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பு நூலில் கல்வெட்டு ஆய்வாளர் குடந்தை என். சேதுராமன் நால்வர் காலம் குறித்துக் கணித்துள்ள ஆய்வு முடிவில் மாணிக்கவாசகர் காலம் குறித்து வரும் கருத்தினைத் தெரிவித்துள்ளார். அக்குறிப்பிலிருந்து புலப்படும் செய்திகள் வருமாறு:

முதலாம் வரகுணன் கி.பி. 768 முதல் 811 வரை நாற்பத்து மூன்று ஆண்டுகள் அரசு புரிந்தான். அவனுக்குப் பின் கி.பி. 811இல் அவன் மகன் சீமாறன் சீவல்லபன் அரசுகட்டில் ஏறினான். தன் பதினெட்டாம் ஆட்சியாண்டில் அஃதாவது கி.பி. 829இல் இலங்கையை வென்றான். இச் சீமாறன் சீவல்லபனைக் கி.பி. 851இல் இலங்கையில் முடிசூடி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இரண்டாம் சேனன் தன் ஒன்பதாம் ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 860இல் வெற்றி கொண்டான். சீமாறன் சீவல்லபன் போர்க் களத்தில் மாண்டான். சீமாறன் சீவல்லபனுக்கு எதிராக அவன் மகன் கிளர்ச்சி செய்தான். அவனுக்கு உதவி புரிவதற்காகவே இலங்கை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மன்னன் சீமாறன் சீவல்லபனோடு போரிட்டு அவனை வீழ்த்தினான்.

கல்வெட்டுகளால் சீமாறன் சீவல்லபனுக்கு மைந்தர் இருவர் இருந்ததாகத் தெரிய வருகிறது. ஒருவன், சடையவருமன் என்னும் இரண்டாம் வரகுணன். மற்றொருவன், அவன் தம்பி சடையவருமன் பராந்தகன் வீரநாராயணன். இரண்டாம் வரகுணன் கி.பி. 863இல் முடிசூடிக்கொண்டுள்ளான். அவன் ஆட்சி கி.பி. 911இல் முடிவுற அவன் தம்பி வீரநாராயணன் அதன்பின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ளான்.

சீமாறன் சீவல்லபன் கி.பி.860இல் மறைந்தான். இரண்டாம் வரகுணன் கி.பி.863இல் முடிசூடினான். இதற்கிடைப்பட்ட மூன்று ஆண்டுகள் பாண்டிய நாட்டை ஆண்டவர் யார் என்னும் வினா எழுகிறது.

கல்வெட்டு ஆய்வாளர் குடந்தை என். சேதுராமன் சீமாறன் சீவல்லபனுக்கு மக்கள் மூவர் இருந்திருத்தல் வேண்டும் என்றும், அவர்களுள் மூத்தவனே இலங்கை அரசன் உதவியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியவன் என்றும் அவன் ஆட்சியே கி.பி. 860 முதல் 863 வரை நடைபெற்றது என்றும் ஊகிக்கிறார். இதன்படி பாண்டிய நாட்டு ஆட்சிவரலாறு கீழ்வருமாறு அமையும்.

1. கி.பி. 768 முதல் 811 வரை முதலாம் வரகுணன்
2. கி.பி. 811 முதல் 860 வரை சீமாறன் சீவல்லபன்
3. கி.பி. 860 முதல் 863 வரை சீமாறன் சீவல்லபனின் மூத்தமகன்
4. கி.பி. 863 முதல் 911 வரை இரண்டாம் வரகுணன்
5. கி.பி. 911 முதல் ....வீரநாராயணன்

பஞ்சாப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள கே.வி. சர்மாவின் மொழிபெயர்ப்பான 'பாண்டிய குலோதயா' என்னும் நூல் இரண்டாம் வரகுணனை அவன் உடன்பிறந்தவன் மதுரையிலிருந்து விரட்டினான் என்றும், அவன் துறவியாக அலைந்தான் என்றும், வாதபுரி நாயகரான மாணிக்கவாசகரின் அருளால் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினான் என்றும் அவனுக்கு மாணிக்கவாசகர் அமைச்சராக இருந்தார் என்றும் தெரிவிக்கிறது. இதனோடு பாண்டியர் வரலாற்றை இணைத்துப் பார்க்கும்போது இரண்டாம் வரகுணனை அவன் தமையன், தான் முடிசூடிக்கொள்வதற்கு முன் விரட்டினான் என்றும் அது கி.பி. 860இல் நிகழ்ந்தது என்றும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இரண்டாம் வரகுணன் திருவாதவூரரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றது கி.பி. 860ஆம் ஆண்டுக்கும் கி.பி. 863ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் என்றும் தெரிகிறது. முதலாம் வரகுணன் வைணவ அன்பனாகக் கருதப்பெறுவதால் மாணிக்கவாசகர், இரண்டாம் வரகுணன் காலமாகிய கி.பி. 863-911இல் வாழ்ந்தவர் என்று கொள்வது தக்கதாகத் தோன்றுகிறது.

மேலும் திருச்சதகம், திருவுந்தியார், திருக்கோத்தும்பி, திருப் பூவல்லி, திருப்பொற்சுண்ணம் என்று குறித்தலைப் போன்று திருப்பாவை என்று குறித்தற்குரிய பகுதி திருவெம்பாவை என்று குறிக்கப்படுகிறது. இதற்குக் காரணம், ஆண்டாள் பாடிய பாவைக்குத் திருப்பாவை என்ற பெயர் அமைந்துவிட்டமையால் அதிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதே ஆகும். பெரியாழ்வாரும் ஆண்டாளும் சீமாறன் சீவல்லபன் காலத்தவர் என்பது குரு பரம்பரை தெரிவிக்கும் செய்தியாகும். ஆதலின், மாணிக்கவாசகர் அவனுக்குப் பின் வந்த இரண்டாம் வரகுணன் காலத்தில் வாழ்ந்தவர் என்பதே பொருத்தமாகும். மாணிக்கவாசகர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் ஆவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. மாணிக்கவாசகர் அருளிய நூல்கள்

மாணிக்கவாசகர் அருளிய நூல்கள் இரண்டு. அவை திருவாசகமும் திருக்கோவையாரும் ஆகும். இவை எட்டாம் திருமுறையாகச் சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் திருவாசகம் மாணிக்கவாசகரின் ஆன்ம யாத்திரையைத் தெரிவிப்பது. இஃது இறையின்பச் சுவையை ஆசிரியன் அருளால் சிறிதே சுவைத்தறிந்த ஆன்மா இறைவனோடு ஒன்றுவதற்குத் துடித்த துடிப்பினைத் தெரிவிக்கிறது. இதில் அவ்வான்மாவின் தவிப்பு, ஏக்கம், சோகம், அச்சம் போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளன. அருள் நூல்களில் திருவாசகம் போல் கற்போர் நெஞ்சினைக் கரையச் செய்வது பிறிதொன்று இல்லை என்றே கூறலாம். சிவப்பிரகாசர், இராமலிங்க அடிகள் போன்றோர் அதனைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். சிவப்பிரகாசர் நால்வர் நான்மணிமாலையில் திருவாசகத்தை வேதத்தினும், மேலானதாகக் கொண்டாடுகிறார். வேதம் அறிவுக்கு விருந்தாகலாம். ஆனால், அஃது உள்ளத்தை உருக்குவதன்று என்கிறார். ஆனால் திருவாசகத்தை ஒருமுறை ஓதினால் கருங்கல் மனமும் கரைந்து உருகுகிறது; மணலில் தோண்டப்பட்ட கேணி போல் கண்ணீர் பெருகுகிறது. ஓதியவர் இறையன்பர் ஆகிறார். இத்தகைய நிலை வேதம் ஓதுபவர்க்கு ஏற்படுவதில்லை.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கண்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்குவீர் ஆயின்
வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம்நெக் குருகி நிற்பவர்க் காண்கிலம்
திருவா சகம்இங்கு ஒருகால் ஓதின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே."

என்று சிவப்பிரகாசர் தம் நால்வர் நான்மணிமாலையில் (40) திருவாசகத்தைக் கொண்டாடுகிறார்.

திருவாசகம்

திருவாசகம் ஐம்பத்தொரு பகுதிகளைக் கொண்டு உள்ளது. அதன் அமைப்பு முறையை நோக்கின் முதலில் நீண்ட தனிப் பாக்கள் நான்கினையும் (4) அவற்றைத் தொடர்ந்து நூறு பாடல் களைக் (100) கொண்ட திருச்சதகத்தையும், அடுத்து ஐம்பது பாக்களால் (50) ஆகிய நீத்தல் விண்ணப்பத்தையும், அதனைத் தொடர்ந்து இருபது பாக்களால் ஆகிய பகுதிகளையும் இறுதியாகப் பத்துப் பாடல்களால் ஆகிய பகுதிகளையும் அமைத்துள்ளார்கள் என்பது விளங்குகிறது. திருவெம்பாவை முதல் திருவுந்தியார் வரை எட்டும் ஒவ்வொரு பகுதியும் இருபது பாக்களால் ஆகியனவாகும் (8 x 20=160). இவற்றுள் திருத்தோள் நோக்கத்தில் பதினான்கு பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றுள் நான்கு பாடல்கள் மிகையாகத் தோன்றுகின்றன. எனவே, திருத் தோள்நோக்கம் முதல் அச்சோப்பதிகம் வரையிலான முப்பத்தேழு பகுதிகளும் ஒவ்வொரு பகுதியும் பத்துப் பாட்ல்களால் ஆகியன வாகும் (37 x 10=370). இவ்வாறு கணக்கிட்டால் திருவாசகம் மொத்தம் 684 பாடல்களைக் கொண்டதாக அமையும். இன்று கிடைக்கும் திருவாசகப் பதிப்புகளில் திருத்தோள் நோக்கத்தில் 14 பாடல்களும், திருக்கழுக்குன்றப் பதிகத்தில் 7 பாடல்களும், திருப்புலம்பல் பகுதியில் 3 பாடல்களும் எண்ணப் பதிகத்தில் 6 பாடல்களும், திருப்படையெழுச்சியில் 2 பாடல்களும், பண்டாய நான்மறையில் 7 பார்டல்களும், திருப்படையாட்சியில் 8 பாடல்களும், ஆனந்தமாலையில் 7 பாடல்களும் அச்சோப்பதிகத்தில் 9 பாடல்களும் காணப்படுகின்றன. இவற்றில் எஞ்சிய பாடல்கள் நெடுங்காலத்திற்கு முன்பே காணாமல் போய்விட்டன போலும்! திருத்தோள் நோக்கத்தில் நான்கு பாடல்களும் பிரார்த்தனைப் பத்திலும் திருவெண்பாவிலும் ஒவ்வொரு பாடலும் மிகுதியாக உள்ளன. இவற்றை நோக்கும்போது செறிவான அமைப்பில் இருந்த திருவாசகமும்- காலப்போக்கில் சில பாடல்களை இழந்து சில

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாடல்களை ஏற்று மாற்றம் பெற்றுள்ளது என்பது தெளிவு. திருவாசகம் முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை என்று கருதுவோர் உண்டு. அவர்கள் கருத்து ஏற்றுக்கொள்வதற்கு உரியதாகவே அமைந்துள்ளது.

திருவாசக அமைப்பு முறையைப் பார்க்கும்போது பாடல்கள் பாடப்பட்ட முறையில் தொகுக்கப்படவில்லை என்பது தெரிகிறது. பாடல்களின் அளவினைக் கருத்தில் கொண்டு தொகுக்கப்பட்டு உள்ளது என்னும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது. திருவாசகத்தின் பதிகத் தலைப்புகள் பிற்காலத்தில் இடப்பட்டனவாகும். இனித் திருவாசகம் தெரிவிக்கும் செய்தியினை அது அமைந்த முறையினை யொட்டிக் காணலாம்.

சிவபுராணம்

முதலில் அமைந்துள்ளது சிவபுராணம். இது 'நமச்சிவாய வாழ்க' என்று இறைவன் திருநாமத்தை வாழ்த்தித் தொடங்குகிறது. இவ்வாறு இறைவன் திருப்பெயரொடு தொடங்குவதனாலேயே அதனை முதலில் அமைத்தனரோ என்று எண்ணத் தோன்றுகிறது. முற்பகுதி வாழ்க, வெல்க, போற்றி என்று முடியும் தொடர்களால் இறைவன் திருவடிகளை ஏத்துகின்றன. பின்பு சிவபுராணம் உரைக்கப்படுகிறது. அப்பகுதியில் இறைவன் தன்மைகளும் மாணிக்கவாசகருக்கு இறைவன் அருளிய திறமும் பேசப்படுகின்றன. இறைவன் பண்புகளே சிவபுராணமாகக் குறிக்கப்படுகின்றன. இறுதி நான்கு அடிகள் இப்படி இறைவன் புகழினை அமைத்து அவன் முன்னிலையில் பாடிய இப்பாட்டின் பொருளினை உணர்ந்து சொல்லுவார் பல்லோரும் பணிந்துஏத்தச் சிவனடிக் கீழ்ச் செல்வர் என்று அறிவுறுத்துகின்றன. இங்கு வரும் 'சொல்லிய பாட்டு' என்பது சிவபுராணத்தை மட்டும் குறிக்காமல் திருவாசகம் முழுமையையும் குறிப்பதாகக் கொள்வதற்கும் இடமளிக்கிறது. அவ்வாறு கொண்டால் சிவபுராணத்தைத் திருவாசகத்தின் பாயிரம் என்று கொள்ள வேண்டும்.

" இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்
தாள்வாழ்க " *(1:2)*

" கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று "

" பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் " *(1:46-48)*

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே " (1:60-61)

போன்ற இனிய பகுதிகள் உள்ளன.

கீர்த்தித் திருஅகவல்

கீர்த்தித் திருஅகவல் தலபுராணக் களஞ்சியமாகத் திகழ்கிறது. முதல் 101 அடிகளில் சிவபெருமான் பல்வேறு தலங்களில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் பேசப்படுகின்றன. எஞ்சிய பிற்பகுதியில் தசாங்கங்களோடு கூடிய சிவபெருமான் தமக்கு இட்ட கட்டளையை மாணிக்கவாசகர் தெரிவிக்கிறார். இதில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களும் அவற்றில் குறிக்கப்படாத தலங்களும் பாடப்பட்டுள்ளன. மயேந்திர மலை, கல்லாடம், பஞ்சப்பள்ளி, நந்தம்பாடி, குடநாடு, வேலம்புத்தூர், சாந்தம்புத்தூர், மொக்கணி, உத்தரகோசமங்கை, வாதவூர், திருப்பெருந்துறை, பூவலம், பட்டமங்கை, ஓரியூர், பாண்டூர், தேவூர்த்தென்பால் தீவு, சந்திரதீபம், பாலை ஆகிய தேவாரப்பாடல் பெறாத தலங்களில் இறைவன் நிகழ்த்திய திருவருட்செயல்கள் பாடப்படுகின்றன. இதில் குறிக்கப்படும் தர்ப்பணம், காடு என்பனவும் தலங்கள் என்று ஐயுறுவாரும் உண்டு. மேற்குறித்த தலங்களில் பூவலம் என்பது தலமன்று என்ற குறிப்புத் தருமை ஆதீனப் பதிப்பில் காணப்படுகிறது.

இத்தலங்களுள் சில மட்டும் எங்குள்ளன என்று அறிந்து கொள்ள முடிகிறது. உத்தரகோசமங்கை, திருப்பெருந்துறை, திருவாதவூர் ஆகியவை பலரும் அறிந்த தலங்கள். பட்டமங்கை என்னும் தலம் திருப்பத்தூருக்கும் காரைக்குடிக்கும் இடையில் உள்ளது. ஓரியூரும் பாண்டூரும் திருவாடானைப் பக்கம் இருக்கின்றன. மொக்கணி என்பது மொக்கணீச்சுரம்; அது கொங்கு நாட்டில் உள்ளது. தேவூர்த் தென்பால் தீவு என்பது இலங்கையைக் குறிக்கும் என்று மகாவித்துவான் அருணை வடிவேலு முதலியார் குறித்துள்ளார். அது தேவூருக்குத் தெற்கே தீவு போல உள்ள இடத்தில் அமைந்த கோயில் என்றும் அங்கு இறைவன் பசுவிற்கு அருள் புரிந்தான் என்றும் தமிழ்க்கடல் ராய.சொ. தம் 'திருத்தலப்பயணம்' என்னும் நூலில் குறித்துள்ளார். குடநாடு என்பதற்கு மதுரையைக் குறிப்பதாகச் சொல்வது பொருத்தமாக அமையவில்லை. மதுரை தமிழகத்தின் தென் பகுதியில் உள்ளதாகும். குடநாடு என்பது கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்றாகக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குறிக்கப்படும் குடநாட்டைக் குறிப்பதாக இருக்கலாம். மயேந்திரமலை, கல்லாடம், பஞ்சப்பள்ளி, நந்தம்பாடி, வேலம்புத்தூர், சாந்தம்புத்தூர், பூவலம், சந்திரதீபம், பாலை ஆகியவை எங்குள்ளன என்று அறிய முடியவில்லை.

இதன் பிற்பகுதியில் இறைவன் தம்மைத் தில்லைக்கு வருமாறு பணித்துவிட்டு அங்கிருந்த அடியார்கள் தன்னுடன் ஒன்றப் புலியூருக்குச் சென்றான் என்றும், அங்கு அப்பொழுது வந்து சேராதவர்களில் சிலர் தங்களை மாய்த்துக் கொண்டனர் என்றும் சிலர் ஏங்கிநின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

" கோலம் ஆர்தரு பொதுவினில், வருகென
ஏல என்னை ஈங்குஒழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும் " *(2:128-131)*

என்பது மாணிக்கவாசகர் வாழ்வில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சியினைக் குறிப்பதாகும்.

திரு அண்டப்பகுதி

இது முதற்குறிப்பினால் பெற்ற பெயர். 'அண்டப்பகுதியின்' என்று இப்பாடல் தொடங்குவதால் இப்பெயர் பெற்றது. இறைவன் கணக்கற்ற பெரிய அண்டங்கள் எல்லாம் சிறியன என்று சொல்லும்வண்ணம் அவற்றைக் காட்டிலும் பெரியவன் என்றும் ஐம்பெரும்பூதங்களுக்கு வெம்மை தண்மை முதலிய அவற்றிற்குரிய தன்மாத்திரைகளை அமைத்தவன் என்றும் கூறுகிறார். இறைவன் பண்புகளையும் செயல்களையும் ஒவ்வொன்றாக எடுத்துக்கூறுகிறார். முதற்பகுதியில் ஒவ்வொரு தொடரும் காண்க என்றும் அடுத்து வரும் பகுதியில் வாழ்க என்றும் இறுதிப்பகுதியில் போற்றி என்றும் முடிகிறது.

இதில் இறைவனை மேகமாக உருவகித்துப் பாடுவது அழகிய பகுதியாகும். பேரானந்தம் என்னும் பழங்கடலே முகிலாய்த் தோன்றியது. அது பெருந்துறை என்னும் மலையில் ஏறியது; அழகு பொருந்திய மின்னலாகிய ஒளியை எங்கும் பரப்பியது; அதன் இடியோசையால் ஐம்புலக்கட்டு என்னும் கொடிய பாம்பு கெட்டழிந்தது; கொடிய கோடை என்னும் விலங்கு தலைமறை வாகச் சென்றது; அழகு என்னும் தோன்றிப் பூக்கள் மலர்ந்து மிக்க ஒளி வீசின; எங்கள் பிறவிகள் போலும் பல இந்திரகோபப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பூச்சிகளை அம்மேகம் உண்டாக்கிற்று; முரசு எறிந்து கருணையினால் முழங்கியது; அப்பொழுது கூப்பிய கைகள் காந்தள்மலர்களைப் போல் காட்சி அளித்தன; குறையாத இனிய அருள் என்னும் மழைத்துளி பெய்தது; செவ்விய ஞானமாகிய வெள்ளம் எல்லாத் திசைகளிலும் பரவியது; மலைபோலும் குற்றம் தூர்ந்து போகும்படி பெருகிற்று; விடாய் மிக்க மான்கூட்டம் ஆறு சமயம் என்னும் கானல்நீரைப் பருகித் தாகம் தணியாமல் சோர்ந்து நின்றது; அக்காலத்தில் அவ்வெள்ளம் கங்கை போல என் அகத்தில் பாய்ந்து இன்பச் சுழி கொண்டு ஓடியது; அஃது எங்கள் மயக்கவுணர்வாகிய கரையினைத் தாக்கி அலைத்து இடித்தது; அதனால் காலங் காலமாக வளர்ந்துநின்ற எங்கள் இருவினைகள் என்னும் மரங்கள் வேரோடு சாய்ந்தன; அருள் என்னும் நீர் ஓடியது; தொண்டர்களாகிய உழவர்கள் சந்தனமரத்தினால் கரை கட்டி, மணம் வீசும் மலர்கள் நிறைந்த குளம் அமைத்தார்கள்; அதில் வெள்ளம் பாய்ந்து நிறைந்து உயர்தல் கண்டு மேலும் மேலும் மகிழ்ந்தார்கள்; அவர்கள் வழிபாடு என்னும் வயலில் அன்பு என்னும் விதையைத் தெளித்து நிறைவடைகிறார்கள். இப்படி அருள்புரியும் மேகம் போன்றவன் வாழ்க என்று வாழ்த்துகிறார்.

திருவண்டப்பகுதியின் இறுதிப்பகுதி மாணிக்கவாசகர் பெற்ற சொல்லுக்கு அடங்கா இறையனுபவத்தைச் சொற்களில் தேக்கி வைத்துள்ளது. "பாற்கடல் அலைபோலும் அலைகளையுடைய கடல் உவாநாளில் பொங்குவது போல் வெள்ளம் என் உள்ளே பொங்கியது; மயிர்க்கால்தோறும் அமுதத்தைத் தேக்கினான்; இழிந்த உடலில் இனிய தேனைப் பாய்ச்சினான்; எலும்புத் துளைதோறும் அற்புதமான அமுத தாரைகளை ஏற்றினான்; உருகும் பொருளைக் கொண்டு உடம்பு அமைத்ததுபோல் உருகும் உடலை அமைத்தான்; கரும்பினை உண்ணும் யானை போல என்னை இருக்கும்படி செய்தான்; என்பால் கருணை என்னும் சிறந்த தேன் கலக்குமாறு பேரின்பம் உண்டாக்கி வைத்தான்" என்கிறார்.

" சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையில் படுவோன் காண்க " *(3:41-42)*

" ஏதிலர்க்கு ஏதில்எம் இறைவன் வாழ்க
காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க " *(3:104-105)*

" அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந்து உள்ளம் களிப்போன் போற்றி " *(3:120-121)*

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போன்ற பொருட் செறிவு மிக்க தொடர்களும்,

" சிவன்என யானும் தேறினன் காண்க
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க " (62-63)

" இன்றுஎனக்கு எளிவந்து அருளி
அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்றுஎனக்கு அளிவந்து இருந்தனன் போற்றி " (117-119)

என்னும் மாணிக்கவாசகர் இறையனுபவத்தைத் தெரிவிக்கும் தொடர்களும் காணப்படுகின்றன.

போற்றித் திருஅகவல்

இது 'போற்றி' என்று முடியும் தொடர்களால் ஆகியதால் இப்பெயர் பெற்றது. இதில் மொத்தம் 159 போற்றிகள் உள்ளன. மர்ரே பதிப்பின் இறுதியில் மிகைப்பாடல்கள் பகுதியில் 156-157 ஆகிய அடிகளுக்கு இடையில், "நாகம் அணியும் ஆகா, போற்றி!" என்னும் ஓர் அடி சில சுவடிகளிலும், அச்சுப் புத்தகங்களிலும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைக் காணும் போது 160 போற்றிகள் அமையும்வண்ணம் பாடப் பட்டதோ என்னும் எண்ணம் உண்டாகிறது. அல்லது பிற்காலத்தில் எவரேனும் அவ்வெண்ணிக்கை வருமாறு ஓர் அடியைச் சேர்த்திருக்கவும் கூடும்.

இதில் முதல் போற்றி மிக நீண்ட தொடரால் ஆகியது. அதில் இறையன்பு உண்டாவதற்கு என்னென்ன தடைகள் இருக்கின்றன என்பது தெரிவிக்கப்படுகிறது. "ஒருவன் பிற உயிரினங்களில் பிறப்பதிலிருந்து தப்ப வேண்டும்; தாயின் வயிற்றில் பத்துமாதம் வளருங்கால் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு கேட்டிலிருந்து தப்பவேண்டும்; அதன்பின் வளரும் பருவத்தில் சில துன்பங்களிலிருந்து தப்ப வேண்டும். வளர்ந்த நிலையில் பெண்களின் கவர்ச்சியிலிருந்து தப்பவேண்டும்; அவா என்னும் யானை, கல்வி ஆகிய கடல், செல்வமாகிய அல்லல், வறுமை என்னும் விடம், இவை போலும் இழிந்த கேடுகள் இவற்றிலிருந்து தப்ப வேண்டும்; இவற்றைத் தப்பித் தெய்வம் உண்டு என்னும் நம்பிக்கை உண்டாக வேண்டும். அந்நிலையில் நாத்திகம், மீமாஞ்சகம், மாயாவாதம், உலோகாயதம் ஆகிய நெறியில் சாராமல் தப்ப வேண்டும். இவற்றையெல்லாம் தப்பிப் பிறந்து வளர்ந்து தழலில் இட்ட மெழுகாய் உருகிக் கசிந்து கடலென மருகி வணங்கும் தளராத அன்பினரைத் தாயாகி வளர்ப்பவன் வாழ்க" என்பது முதல் தொடரின் பொருளாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" ஏகம் பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி " (4:151-152)

" தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி " (4:165-167)

என்னும் இப்பகுதியில் வரும் தொடர்கள் மனமுருகி இறையன்பர்களால் அடிக்கடி சொல்லப்படுவனவாகும்.

வானத்திலிருந்து காற்றும், அதிலிருந்து தீயும், அதிலிருந்து நீரும், அதிலிருந்து மண்ணும் தோன்றின என்று உபநிடதம் தெரிவிக்கிறது. அதனையே இப்பகுதி,

" பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி " (4;137-141)

என ஏறு வரிசையில் தெரிவிக்கிறது.

இதில் குறிக்கப்படும் கவைத்தலை, குவைப்பதி ஆகிய தலங்கள் எங்குள்ளன என்று அறிய முடியவில்லை. அரிகேசரி என்பது சின்னமனூர் என்று கண்டறிந்துள்ளார் அறிஞர் க. வெள்ளை வாரணர் அவர்கள். "அரிகேசரியென்ற பெயருடைய பாண்டியன் திருஞானசம்பந்தரால் வெப்புநோய் தீர்த்து ஆட் கொள்ளப் பெற்ற நின்ற சீர் நெடுமாறனாவான். இவனது பெயரால் அமைக்கப்பட்ட ஊர் பாண்டிய நாட்டிலுள்ள அரிகேசரிநல்லூர் என்பதாகும். இதனை இக்காலத்தார் சின்னமனூர் என வழங்குவர்" என்பது அவர் தரும் விளக்கம் (பன்னிரு திருமுறை வரலாறு ப. 130)

முதலில் அமைந்துள்ள இந்நான்கு பாடல்களில் சிவபுராணம் கலிவெண்பாவாலும், கீர்த்தித் திருஅகவல், போற்றித் திருஅகவல் இரண்டும் நிலைமண்டில ஆசிரியப்பாவாலும், திருஅண்டப்பகுதி இணைக்குறள் ஆசிரியப்பாவாலும் ஆகியன. இந்நான்கினையும் அகவல்கள் என்று வழங்கும் வழக்கு உள்ளது. தவத்திரு மறை மலை அடிகளாரும் இவ்வாறே குறித்துள்ளார். இது பிழைபட்ட வழக்கன்று. தலைமை பற்றியும் பெரும்பான்மை பற்றியும் பெயரிடுதல் மரபு. அதனையொட்டி அமைந்ததே இவ்வழக்கம்.

திருச்சதகம்

இது நூறு பாடல்களைக் கொண்டது. அந்தாதித் தொடையில் அமைந்தது. ஒவ்வொரு பத்துப்பாடல்களும் வெவ்வேறு யாப்பு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வடிவில் அமைந்துள்ளன. அதனால் ஒவ்வொரு பத்தும் ஒவ்வோர் உண்மைகளைச் சொல்வதாக அகத்தியர் அருளிய திருவாசகத் திருவுள்ளக்கிடை தெரிவிக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருவாசகத்திற்கு அனுபூதிவுரை எழுதிய காழித் தாண்டவராயர் இவ்வகத்தியர் அருளிய திருவுள்ளக்கிடையை எடுத்து ஒவ்வொரு பதிகத்தின் தலைப்பிலும் அமைத்து 'அகத்தியர் அனுபவ சூத்திரம்' என்று பெயர் கொடுத்திருக்கிறார். ஒரு பத்தில் காணப்படும் செய்திகளே பிறிதொரு பத்திலும் காணப்படுகின்றன. அறிவுறுத்தல் என்னும் தலைப்பில் அமைந்த இரண்டாவது பத்தில்,

" ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமான்நன் திருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதிராலே சார்வானே " *(18)*

என்னும பாடலில் உள்ள கருத்தே ஆன்ம சுத்தி என்னும் தலைப்பில் அமைந்த நான்காம் பத்தில்,

" ஆடு கின்றிலை, கூத்துடை யான்கழற்கு அன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை, பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன்றறியேனே "
(35)

என்னும் பாடலிலும் காணப்படுகிறது. இவ்வாறே, இரண்டாம் பத்தில் உள்ள 'வேனில்வேள் மலர்க்கணைக்கும்' (23) என்னும் பாடற்கருத்தே நான்காம் பத்தில் உள்ள 'வேனில் வேள்கணை' என்னும் பாடலில் இடம்பெற்றுள்ளது. 'வேனில் வேள்கணை' என்னும் பாட்டின் ஈற்றடி ''ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும் உண்டுடுத் திருந்தேனே'' (44) என்பதே சில சொல் மாற்றத்தோடு ஆறாம் பத்தின் இரண்டாம் பாட்டில் ''பொய்யனேன் நான் உண்டுடுத்திங்கு இருப்பதானேன் போரேறே'' (56) என்று இறுதியடியாக உள்ளது. ஆதலின் இவற்றைத் தனித்தனிப் பிரிவாகக் கொண்டு தனித்தனிக் கருத்துகளைத் தெரிவிப்பனவாகச் சொல்வது எவ்வளவு பொருந்தும் என்பது விளங்கவில்லை. பழைய திருப்பெருந்துறைப் புராணத்தில் இடம் பெற்றுள்ள திருவாசக உண்மை, திருச்சதகத்தின் நூறு பாடல்களையும் ஒரே பகுதியாகக் கொண்டு ''சத்திய ஞானம் தரு தேசிகர் மோகம் சதகமதாம்'' என்பதனை அதன் கருத்தாகத் தெரிவிப்பது கருதற்குரியது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முதற்பத்துப் பாடல்களில், ''சிவபெருமானே, உன்னை உருகிக் கண்ணீர்பெருக்கி வணங்குவதை விடமாட்டேன்; என்னை ஏற்றுக்கொள்வாய்; இந்திரன், திருமால், பிரமன் ஆகியோர் பதவியையும் வேண்டேன்; உன் திருவருளால் நரகம் கிடைத்தாலும் அதனை வெறுக்க மாட்டேன்; உன்னையன்றிப் பிற தெய்வத்தை மனத்தாலும் நினைக்கமாட்டேன்; ஊரவர் எல்லாம் பைத்தியம் பிடித்தவன் என்ற நினைப்பில் பலப்பல பேச யான் முனைப்பு அழிவது என்றுகொலோ? தக்கன் வேள்வியில் அவியாக இடப்பட்ட ஆட்டினைத் தின்ற நம்மைப் போன்ற மும்மூர்த்திகளும் மண்மேல் தேவர் என்று இறுமாந்து திரிகிறார்களே, என்ன கொடுமை! உன்னை வணங்கும் பிறப்பை எனக்கு அருள்வாய். அன்பர் உள்ளத்தில் மறைக்காமல் வெளிப்படுவோனே! உன் திருவடிகளுக்கு நிரந்தரமாக அன்பு செலுத்துமாறு அருள்புரிவாய். திருமாலும் நான்முகனும் தேடிக் காண முடியாதவனும் சுடுகாட்டில் ஆடித் திரிபவனும் ஆனவனே! ஊழிமுடிவில் கூத்தாடுபவனே! என் வினையை மாய்த்துக் காப்பாய். என் சிறுமை கண்டும் என்னை ஆண்டு கொண்டாய். உன்னை எனக்குத் தலைவனாகவும், என்னை உனக்கு அடியவனாகவும் உலகம் அறிந்துகொள்வது எவ்வாறு? தகுதியில்லாத என்னை உனக்கு அடிமையாகக் கொண்டு என்னை நீ செய்த நாடகத்தை நினைத்தால் சிரிப்புத்தான் உண்டாகும்'' என்கிறார்.

இரண்டாம் பத்தில், முதல் எட்டுப் பாடல்களில் இறைவன் பெருமையையும், தாம் அவனை வழிபடாமல் அழிவதையும் தெரிவிக்கிறார். ''இறைவா, உன் மீது மாறாத அன்பினை எனக்குத் தா. யான் பிறப்பு இறப்புக்கு அஞ்சேன். உன் அருளை என்று பெறுவது என்றே ஏங்குவேன். நீ அருள் புரியாவிட்டால் வருந்துவேன்'' என்கிறார். இறுதி இரு பாடல்கள் நெஞ்சுக்கு அறிவுறுத்துவனவாக அமைந்துள்ளன. ''பாழாய்ப் போன நெஞ்சே, மன்மதனின் மலர்க்கணையால் அழகிய பெண் களின் உறவுக்காகப் பதைத்து உருகுகின்றாயே! என் உடம்பெல்லாம் உருகும்படி என் நெஞ்சில் புகுந்து ஆட்கொண்டவன் இன்று போய் வானத்தில் இருக்கிறான். அதனை எண்ணாமல் வீணாக வாழ்கின்றாயே!'' என்று இடித்துரைக்கிறார். இறுதிப் பாடல் மிகவும் சிறப்பான பாடல். நெஞ்சை நோக்கி நீ துன்பக்கடலில் வீழ்கின்றாய் என்று அறிவுறுத்துவது

'' வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே '' (24)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மூன்றாவது பத்துப் பாடல்களில், சிவபெருமான் தம்மை ஆட்கொண்டதைச் சொல்லி உருகுகிறார். ''எத்தனையோ சிறந்த அடியார் இருக்க, என்னை ஆட்கொண்டாயே, உன்னை நினைந்து யான் உருகவில்லையே'' என்று புலம்புகிறார்.

'' வெள்ளம்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம்தாழ் உறுபுனலில் கீழ்மேல்ஆகப் பதைத்துருகும்
அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளம்தாள் நின்றுச்சிஅளவும் நெஞ்சாய் உருகாதால்
உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளம்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாம்தீ வினையி னேற்கே '' (25)

இறைவன் தமக்குத் தன் வண்ணத்தையும், வடிவையும், மலரடிகளையும் காட்டிப் பின்னும் காட்டாதன எல்லாம் காட்டிக் கேளாதன எல்லாம் கேட்பித்து மீண்டும் பிறவாமல் ஆட்கொண்ட திறத்தைப் பேசுகிறார். அதனால் ''யாம் ஆர்க்கும் குடி அல்லோம்; யாதும் அஞ்சோம்'' என்று முழங்குகிறார்.

நான்காவது பத்துப் பாடல்களில், இறைவனைப் பிரிந்த துன்பம் தாளாமல் கதறுகிறார். தம்மை நல்வழியில் செல்லவிடாத நெஞ்சை நொந்துகொள்கிறார். 'துணையிலி பிண நெஞ்சே', 'பிணநெஞ்சே', 'எம் மதி இலி மடநெஞ்சே', 'கிற்றவா மனமே', 'நெஞ்சே' என்றெல்லாம் நெஞ்சை விளித்து அதனைக் கடிந்து கொள்கிறார். இறைவனைப் பிரிந்தும் உயிரை வைத்துக்கொண் டிருக்கும் தம்மை நொந்துகொள்கிறார்.

'' வினைஎன் போல்உடை யார்பிறர்
ஆர்உடை யான்அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பு
அன்றுமற்று அதனாலே
முனைவன் பாதநல் மலர்பிரிந் திருந்துநான்
முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை இரும்புகல் மனம்செவி
இன்னதுஎன்று அறியேனே '' (41)

என்னும் பாடல் அவருடைய ஆற்றாமையின் ஆழத்தைக் காட்டுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஐந்தாவது பத்துப் பாடல்களிலும் சென்ற பத்துப் பாடல்களில் காணப்படும் பிரிவின் ஏக்கமே தொடர்கிறது. ''என்னை வருக என்று பணித்து, உன்னைக் காட்டினாய். யான் உன்னைக் குரங்குக் குட்டி தாயைப் பற்றிக்கொள்வதுபோல் பற்றிக்கொள்ளுமாறு அறியாமல் புலனின்பத்தையே பெரிதாகக் கருதினேன். உன்னை அன்பால் வழிபடவில்லை; என் கருத்து, உன்னோடு மாறுபட்டு உன் திருவடியைப் பெற்ற யமனது கருத்துப் போன்றது. அரும் பொருளாகிய கழல் கண்டும் பிரிந்தேனே!'' என்று அழுங்குகிறார்.

ஆறாவது பத்துப் பாடல்களிலும் பிரிவாற்றாமையே வெளிப் படுகிறது. ''என்னை ஆண்ட உன்னை நினைக்காமல் இருக்கிறேன். மெய்யடியார்கள் உன் திருவடிகளை அடைந்தமை கேட்டும் உண்டு உடுத்து இவ்வுலக வாழ்க்கையைப் போற்றி இருந்தேனே! தவம் புரியும் முனிவர்களும் வாடப் பாவியாகிய என்னை ஆட் கொண்டாய். யானோ மலம் நிறைந்து புழுக்கூடாக இருக்கும் உடலைப் போற்றி இருந்தேனே! நீ அடியார்களை ஆட்கொண்ட திறத்தை எண்ணித் தளராமல் பெண்ணின்பத்தையே எண்ணித் தளர்ந்து எனக்கு யானே கேட்டினைத் தேடிக் கொண்டேனே! என்னைப் புறத்தே செல்ல விட்டு விடுவாயோ?'' என்கிறார்.

ஏழாவது பத்துப் பாடல்களில் இறைவனைப் பல்வகையால் போற்றி, தம் விண்ணப்பத்தைத் தெரிவிக்கிறார். ''புறத்தே என்னைப் போக்கிவிடாதே; என்னை உள்ளே உருக்கி ஆட்கொள்ள வேண்டும்; இவ்வாழ்வினைப் பொறுத்துக்கொள்ள மாட்டேன்; இதனை ஒழித்திடுவாய்'' என்பதே அவர் வேண்டுகோள்.

எட்டாவது பத்தில், ''உன்னை வணங்கிக் கண்ணீர் பெருக்கி நிற்க வேண்டும். மெய்யன்பர்கள் உன்னிடம் செலுத்தும் அன்பு எனக்கும் உன்பால் உண்டாக வேண்டும். பெருமானே, உன்னைப் பல பிறவிகளிலும் வந்து வணங்கும்படி எனக்கு அருள்புரிவாய். உன்னைத் தவிரப் பிறிதொரு தேவர் உள்ளார் என்று என் சிந்தை சிந்தித்து அறியாது. முன்பே உன்னை அடைந்திடாத யான் என்னை முடித்துக் கொள்ளாமல் இருக்கிறேனே! என்னைப் பிரிந்து சென்றுவிட்டாய்; நெருப்பில் விழுந்து என்னை முடித்துக் கொண்டிருக்கலாம்; ஆயினும், அவ்வாறு செய்யாமல் உன்னிடம் எனக்கு விருப்பம் உண்டு என்று சொல்வது என்ன மாய வித்தை!'' என்று தம் வேண்டுகோளினையும் பிரிவுத் துன்பத்தையும் ஒருசேர இதில் புலப்படுத்துகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஒன்பதாவது பத்துப் பாடல்களில், ''அடியார்கள் எல்லாரும் உன் பொன்னடிகள் கண்டு உன்னைத் தொடர்ந்தார்கள். யான்மட்டும் தொடராமல் வீணானேன். பொய்ம்மைப் பயிரின் விதைக்குக் கேடு வரக்கூடாது என்று என்னை இங்கே விட்டுச் சென்றாய். வலிய மூங்கில் போன்றவன் யான். யானும் பொய்யன்; என் நெஞ்சமும் பொய்யானது; இந்நிலையில் என் அன்பும் பொய்யாகுமானால் தீவினையேன் அழுதால் மட்டும் உன்னைப் பெறமுடியுமா? பெருமானே, உன்னை வந்தடையுமாறு அடியே னுக்கு அருள்புரிவாய்'' என்று தாம் மட்டும் இறைவன் திருவடி அடையாமல் இருப்பதை எண்ணி ஏங்குகிறார்.

இறுதிப் பத்துப் பாடல்களில், ''எளிய மானிடமாக வந்து என்னை நோக்கினாய்; ஆனால் யான் குழந்தையின் கையில் உள்ள பொற்கிண்ணம் போல் உன் அருமையை அறிந்தேன் இல்லை. மெய்யன்பர்கள் உன்னை அடைந்தார்கள். நீ என்னை மட்டும் இப்பொய்யுலகில் கிடந்து உழலுமாறு விட்டுப் போவது முறையாகுமோ? கல்லைக் கனியாக்கும் வித்தை கொண்டு என்னை உன் கழலுக்கு உரியவன் ஆக்கினாய். உன் கழல் காட்டி என்னை மீண்டும் மீட்க மாட்டாயா? என்னை நின் அடியவன் ஆக்கினாய். என்னை இவ்வுலகத்திலேயே வைப்பது முறையோ? சொல்வாய். உன்னைப் பாடி நைந்துருகி யான் ஆட வேண்டும். இப் புழுக்கூடாகிய உடலை நீக்கி வீடுபேறு நல்குவாய்'' என்று வேண்டுகிறார்.

திருச்சதகத்தில், தம்மைச் சிவபெருமான் முதலில் கழல்காட்டி ஆட்கொண்டதனையும் அதனைத் தாம் முற்றும் உணராமல் அவனைப் பிரிந்ததனை எண்ணித் துடிப்பதனையும் மீண்டும் தம்மை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்னும் வேண்டு கோளினையும் மாணிக்கவாசகர் தெரிவிக்கிறார். இப்பகுதியில் பெரும்பாலான பாடல்கள் பிரிவுத் துன்பத்தைத் தெரிவிப்பன வாகும். அவரது பிரிவுத் துன்பத்தைத் தெரிவிக்கும் பாடல்களைச் சமயவுலகத்தின் விழுமிய பாலைப் பாடல்கள் என்று அறிஞர் குறிப்பர்.

நீத்தல் விண்ணப்பம்

நீத்தல் விண்ணப்பத்தின் பாடுபொருள் ஒன்றே. அது 'பெருமானே என்னைக் கைவிட்டு விடாமல் காத்தருள்வாய்' என்பதே ஆகும். அந்தாதித் தொடையில் அமைந்த ஐம்பது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாடல்களால் ஆகியது இது. 'விட்டிடுதி கண்டாய்' என்பதில் 'விட்டிடுதி' என்பது விடுகிறாய் என்று பொருள்படும் முன்னிலை ஒருமைவினைமுற்று. கண்டாய் என்பது இறந்தகால ஒருமை வினைமுற்று. இத்தொடருக்கு 'விட்டுவிடுவாயோ?' என்று வினாப்பொருள் கொள்வதனினும், 'என்னைக் கைவிடுகிறாய் பார்த்தாயா' என்று பொருள்கொள்வது சிறப்பாகும். ஒரு சுமையைச் சிலர் கூடித் தூக்கும்போது யாரேனும் சுமையைத் தாழ விட்டால் அடுத்தவர், 'விடுகிறாய் பார்த்தாயா' என்பார். அதற்குப் பொருள் 'விட்டுவிடாதே' என்பதாகும். அது போன்றதுதான் 'விட்டிடுதி கண்டாய்' என்பதுமாகும்.

இதில் புலனின்பத்திலும், பெண்ணின்பத்திலும் தாம் மிகவும் ஈடுபட்டிருத்தலைத் தெரிவித்து, அத்தகைய தம்மைக் கை விட்டுவிடக் கூடாது என்று இரந்து நிற்கிறார். யானைகளின் போரினால் குறுகிய புதர் அழிவதுபோல ஐம்புலனால் அலைப் புண்டு தாம் அழிந்ததாகக் கூறுகிறார். நெய்க்குடத்தை எறும்பு மொய்ப்பதுபோல ஐம்புலன்கள் தம்மைச் சூழ்ந்துகொண்டு இறைவன்பால் வரவொட்டாமல் தடுத்தன என்கிறார். எறும்புகளால் பற்றப்பட்ட நாங்கூழ்ப் புழுப்போல ஐம்புலன்களால் அரிக்கப்பட்டதாகவும், மத்தினால் தயிர் கலங்குவதுபோலத் தாம் கலங்கியதாகவும் தெரிவிக்கிறார். வலையில் சிக்கிய மான் போன்ற மருண்ட பார்வையுடைய வனிதையர் கண்வலையில் சிக்கியும், பற்றியதனை விடாத முதலை போன்ற சிவந்த வாயினையுடைய பெண்கள் மீது கொண்ட வேட்கை என்னும் வெந்நீரில் மிகவும் மூழ்கியும் வேல்போலும் கண்களையுடைய மங்கையர் என்னும் கொடிய நெருப்பில் உருகும் நெய்போன்று உருகியும் தாம் பெண்ணின்பத்தில் வேர்கொண்டு நின்றதாகப் புகல்கிறார்.

" ஏசினும் யான்உன்னை ஏத்தினும்
என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண்
டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாய்என்னை ஆளுடை
யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண் டாய்அமு
துண்ணக் கடையவனே " (154)

என்பது இதன் இறுதிப்பாடலாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மகளிர் பாடும் பாடல்கள் - 10

மாணிக்கவாசகர் தமிழகத்து மகளிர் பாடிக்கொண்டே விளையாடுவதனைக் கண்டார். அப்பாடற்போக்கில் இறைவன் பெருமையைத் தெரிவிக்கும் பல பாடல்களைப் புனைந்தார். அத்தகைய போக்கில் பாடப்பட்டவையே திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோள்நோக்கம், திருப்பொன்னூசல் ஆகியனவாகும். இப்பாடல்களில் மகளிர் கூட்டத்தின் தலைவியாக மாணிக்கவாசகர் மாறி நின்று பெண்குரலில் பேசுகிறார்.

1. திருவெம்பாவை

இருபது பாடல்களைக் கொண்ட திருவெம்பாவை மார்கழி மாதத்தில் அடியார்களால் வைகறையில் பாடிப் போற்றப்படுகிறது. இதில் பாவை நோன்பு நோற்கும் பெண்கள் வைகறையில் எழுந்து ஒருவரை ஒருவர் எழுப்பிக்கொண்டு சென்று திருக் குளத்தில் நீராடி இறைவனை வழிபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இரண்டாம் பாடலின் 'ஈசனார்க்கு அன்பார்யாம் ஆரேலோர் என்பாவாய்' என்னும் ஈற்றடி சிந்தனைக்குரியது. இதற்கு உரையாசிரியர்கள் வெவ்வேறு பொருள் கூறியுள்ளனர். சிலர், "ஈசனுக்குச் செய்ய வேண்டிய அன்பு யாது, நாம் யார்" என்று பொருள் கொண்டுள்ளனர். வேறு சிலர், "ஈசனார்க்கு அன்பர் யாம்" என்று பொருள் கண்டுள்ளனர். இப்பாட்டில் சிவபெருமான் தங்கள்மீது கொண்டுள்ள பேரன்பினையும் தாங்கள் அதனை உணராமல் விளையாடிக் கொண்டிருக்கும் தாழ்வினையும் உறழ்ந்து காட்டுகிறாள் உறக்கத்திலிருந்து எழும் பெண். "இரவும் பகலும் இறைவனிடத்தில் அன்பு என்று பேசுபவளே, அந்த அன்பை எல்லாம் இப்பொழுது படுக்கையின் மீது வைத்துவிட்டாயோ?" என்கிறார்கள் எழுப்பும் பெண்கள். அதற்கு உள்ளே இருப்பவள், "பெண்களே, இப்படி நமக்குள் ஏசிக்கொண்டிருத்தற்குரிய நேரமா இது? வானவர்களும் ஏத்துதற்குத் தயங்குகின்ற மலர்ப் பாதங்களையுடைய ஒளி வடிவினனவனும், சிவலோகனும், தில்லையில் உறைபவனுமான பெருமான் நமக்கு அருள்பாலிக்க வருகிறான். அவனுடைய அன்பு எத் தன்மைத்து? நம்முடைய அன்பு எத்தன்மைத்து?" என்கிறாள். 'ஈசனார்க்கு' என்பதற்கு ஈசனுடைய என்பது பொருள். 'யானைக்குக் கோடு கூரிது' என்றால், யானையது கோடு கூர்மையானது என்பது பொருளாகும். அது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போன்றதே இத்தொடர். 'ஆர்' என்பதற்குத் தன்மை என்று பொருள். 'நான் ஆர்' என்பதில் ஆர் என்பது யான் எத்தன்மையுடையவன் என்று பொருள் தருதல் காணலாம். இதில் பாவை நோன்பு நோற்கும் பெண்கள் தங்களுக்குச் சிவனடியார் ஒருவரே கணவராக வருதல் வேண்டும் என்னும் வேண்டுகோளைச் சிவபெருமானிடம் தெரிவிக்கின்றார்கள்.

" உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்குஒன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றுஒன்றும் காணற்க
இங்குஇப் பரிசே எமக்குஎங்கோன் நல்குதியேல்
எங்குஎழில்என் ஞாயிறு எமக்குஏலோர் எம்பாவாய் "

என்னும் பாடல் பெண்களின் சைவசமய உறைப்பினைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

2. திருவம்மானை

திருவம்மானை திருவண்ணாமலையில் பாடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதில் திருப்பெருந்துறைப் பெருமானே பதினான்கு இடங்களில் சுட்டப்படுகிறான். தில்லை, அண்ணா மலை, ஐயாறு, ஆனைக்கா ஆகியன ஒவ்வோர் இடத்திலேயே சுட்டப்படுகின்றன. இதனைத் திருவண்ணாமலையில் பாடியதாகக் கொள்வதனினும் திருப்பெருந்துறையில் பாடியதாகக் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

" கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய் " (179)

என்று திருப்பெருந்துறைப் பெருமான் தம்மை ஆட்கொண்ட திறத்தை அம்மானை பாடும் பெண்களுள் ஒருத்தியாய் நின்று மாணிக்கவாசகர் பாடுவதனைக் காணலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. திருப்பொற்சுண்ணம்

இறைவனுக்குக் குளியற்பொடி இடிக்கும் பெண்கள் பாடும் பாடல்களாக அமைந்துள்ளது இப்பகுதி. பெண்களுள் ஒருத்தியாக நின்று மாணிக்கவாசகர் அவர்களோடு கூடி இறைவனுக்குரிய பொற்சுண்ணத்தை இடிக்கிறார். அப்பெண், முதற்பாடலில் சில பெண்களை மாலைகளைக் கொண்டு அலங்காரம் செய்யும்படியும், முளைக்குடம், தூபம், தீபம் ஆகியவற்றை அமைக்கும்படியும், சிலரைப் பல்லாண்டு இசைக்கும்படியும், சிலரைக் கவரி வீசும்படியும் பணித்துப் பொற்சுண்ணம் இடிப்பதற்கு வருமாறு அழைக்கிறாள்.

இதனைத் தில்லையில் அருளிச் செய்யப்பட்டதாகக் குறிப்பது பொருத்தமே ஆகும். ஐயாறன், திருவேகம்பன், பெருந் துறையான் ஆகியோர் குறிக்கப்பட்டாலும், தில்லைப் பெருமானே முதன்மைப் படுத்தப்பட்டுள்ளான். இதனை, ''ஐயன் அணிதில்லை வாணனுக்கே ஆடப்பொற்சுண்ணம் இடித்தும் நாமே'' (203) ''அம்பலத் தாடினானுக்கு ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே'' (205) ''தென்தில்லை பாடிச் சிற்றம்பலம் பாடி.....ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே'' (213) என்றும் வரும் குறிப்புகள் அறிவிக்கின்றன.

'' முத்துநல் தாமம்பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் தீபம் வைம்மின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியும் கௌரி யும்பார்ப் பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே '' (195)

என்பது முதற்பாடல். சித்தாந்தப் போக்கில் உரை காணும் ஒரு சிலர் இதில் சத்திகளை அழைப்பதாகக் கருதுகிறார்கள். அதனினும் இவற்றைப் பெண்களின் இயற்பெயர்களாகக் கொள்வது சிறப்பாக அமையும். சத்தி, சோமி, பூமா, சரஸ்வதி, சித்தி, கௌரி, பார்வதி, கங்கை என்னும் பெயர்கள் அன்றும் இன்றும் பெண்களின் இயற்பெயர்களாக இருத்தல் வெளிப்படை.

4. திருத்தெள்ளேணம்

இஃது இருபது பாடல்களால் ஆகியது; தில்லையில் அருளிச் செய்யப்பட்டது. கும்மி போன்ற விளையாட்டினை ஆடும் மகளிர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இறைவனைப் போற்றி ஆடுவதாகப் பாடப்பட்டுள்ளது. இதில் வரும்

" கறங்குஓலை போல்வதுஓர் காயப் பிறப்போடு இறப்பு என்னும்
அறம்பாவம் என்றுஇரண்டு அச்சம் தவிர்த்துஎன்னை ஆண்டு கொண்டான்
மறந்தேயும் தன்கழல்நான் மறவா வண்ணம் நல்கியஅத்
திறம்பாடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ " (242)

என்னும் பாடல் சிந்தனைக்குரியது. மாணிக்கவாசகர் உள்ளத்தில் பிறப்பு, இறப்புப் பற்றிய அச்சம் இருந்தது என்பதனை இப் பாடல் காட்டுகிறது. இதில் இறைவன் தம்மை ஆண்டுகொண்டதனால் தாம் பெற்ற நலன்களை,

" நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமாய வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ " (238)

" அயல்மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண்டு என்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ " (245)

5. திருச்சாழல்

திருச்சாழல் என்பது மகளிர் விளையாட்டுகளில் ஒன்று. அவ்விளையாட்டில் பாடும் பாடல் அமைப்பில், இறைவன் செயல்களையும் அவற்றால் விளங்கும் உண்மைகளையும் விளக்குவது; இருபது பாடல்களைக் கொண்டது. ஒரு பெண் சிவனிடம் காணப்படும் மாறுபட்ட இயல்பினைப் பாட, மற்றொரு பெண் அதன் உண்மையை விளக்கிப் பாடுவதாக அமைந்துள்ளது. திருமாலும் பிரமனும் காணாவகையில் சிவன் அழல் உருவாய் நின்றது அவர்கள் ஆங்காரம் தவிர்ப்பதற்கு ஆகும் என்றும், சிவன் தன் இடப்பாகத்தில் உமையைக் கொண்டிருப்பது அனைவரும் யோகநெறியில் செல்லாமல் மனைவியோடு கூடி இல்லறம் இயற்றுவதற்கு ஆகும் என்றும் தெரிவிப்பது அறியலாம்.

" தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகுஎய்தி வீடுவர்காண் சாழலோ " (263)

என்பது பலரும் அறிந்த பாடல் ஆகும். மாணிக்கவாசகர் பவுத்தரோடு வாதிட்டபோது ஊமைப்பெண்ணை அழைத்து அவர்கள் கேட்ட வினாக்களுக்கு விடையிறுக்கச் சொன்னதாகவும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவ்வாறு சொல்லப்பட்ட விடைகளே திருச்சாழல் என்னும் இப்பகுதியில் இடம்பெற்றிருப்பதாகவும் கூறுவர். அதற்கு எவ்வகை அகச்சான்றும் இல்லை.

6. திருப்பூவல்லி

இறைவன் குணங்களையும், தமக்கு அருளிய திறத்தையும், நிகழ்த்திய வீரச்செயல்களையும் பாடிப் பூக்கொய்வோம் என்று மகளிர் கூறுவதாக அமைந்துள்ளது இப்பகுதி. இதில் இருபது பாடல்கள் உள்ளன. இதில் உள்ள இருபதாவது பாடல்

" மாவார ஏறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ " (294)

என்பதாகும். இது சில சுவடிகளிலும் அச்சுப் புத்தகங்களிலும் காணப்படுவதாகக் கூறி மிகைப் பாடலாகத் தந்துள்ளது மர்ரே பதிப்பு. இதனை மிகைப்பாடலாகத் தள்ளுவதனினும் ஏடு எழுதுவோரால் நழுவவிடப்பட்ட பாடலாகக் கொள்வதே பொருத்தமாகும். அண்மைப் பதிப்புகளிலும் இப்பாடல் நூலின் உள்ளேயே காணப்படுகிறது. இப்பாடலமைப்பு இதனை மாணிக்கவாசகர் வாக்காகவே கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

யார் யார் சிவபெருமானால் சிறுமையுற்றனர் என்று பட்டிய லிட்டுப் ஒரு பாட்டில் பெண்கள் பாடுகின்றனர்.

" அங்கி அருக்கன் இராவணன்அந் தகன்கூற்றன்,
செங்கண் அரிஅயன் இந்திரனும் சந்திரனும்
பங்கம்இல் தக்கனும் எச்சனும்தம் பரிசுஅழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ " (289)

என்பதே அப்பாட்டு.

7. திருவுந்தியார்

உந்தி என்பது மகளிர் உந்திக் குதித்து ஆடும் ஓர் ஆட்டம். இக்காலத்தில் ஆடும் நொண்டி ஆட்டமாக இருக்கலாம். இதில் இருபது பாடல்கள் உள்ளன. ஆனால், 'ஏகாச மிட்ட' என்னும் இறுதிப்பாடல் மிகைப்பாடலாகக் கருதப்படுகிறது. அதனையும் மாணிக்கவாசகர் வாக்ககாகக் கொள்வதே தக்கதாகும். இதில் முதல் நான்கு பாடல்கள் முப்புரம் எரிந்த வரலாற்றைக் கூறியும் அடுத்த பன்னிரண்டு பாடல்கள் தக்கன்வேள்வியில் பங்கு பெற்றோர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அடைந்த இன்னல்களைக் கூறியும், இறுதி நான்கு பாடல்கள் முறையே உபமன்யுவுக்குப் பாற்கடல் ஈந்தது, பிரமன் தலையை அரிந்தது, இராவணன் தலைகளை நெரித்தது, முனிவர்களுக்காக ஆகாசத்தைக் காத்தது ஆகியவற்றைக் கூறியும் உந்தீபற என்று பணிக்கும் வகையில் அமைந்துள்ளன.

8. திருத்தோள் நோக்கம்

ஒருவர் தோளை ஒருவர் தொட்டுக்கொண்டோ, பார்த்துக் கொண்டோ விளையாடும் மகளிர் விளையாட்டுத் தோள்நோக்கம் என்பது. அவ்விளையாட்டில் பாடுவதாகப் பாடியுள்ள பாடல் களைக் கொண்டது இப்பகுதி. இதில் பதினான்கு பாடல்கள் எல்லாப் பதிப்புகளிலும் காணப்படுகின்றன. 'பிணக்கற்று' என்று தொடங்கும் மிகைப்பாடல் ஒன்றும் உள்ளது. இவற்றைக் கூர்ந்து நோக்கின் இதுவும் பத்துப்பாடல்களைக் கொண்ட பகுதியாக இருந்து, பின்னர் எவராலோ நான்கு பாடல்கள் சேர்க்கப்பட்டு இருக்கலாம் என்னும் ஐயம் எழுகிறது. திருவாசகத்தில், இறுதியில் சில சொற்களை மகுடமாகக் கொண்டு முடியும் பதிகங்கள் உள்ளன. அவற்றில் எல்லாம் மகுடமாக வரும் சொற்கள் முன் பின்னாக மாறுவதில்லை. ஆனால், 'தோள்நோக்கம் ஆடாமோ' என்னும் மகுடத்தைப் பெற்று வரும் திருத்தோள் நோக்கத்தில் மட்டும் நான்கு பாடல்கள் 'கூடும் வண்ணம் தோள் நோக்கம்'; 'பற்றினவா தோள்நோக்கம்' 'ஆடாமோ தோள்நோக்கம்' 'மாண்டனர்காண் தோள்நோக்கம்' என்று வேறு வகையான மகுடம் கொண்டு முடிகின்றன. அதனால் இவை மிகைப்பாடலாக இருக்கலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது. சில சுவடிகளில் மட்டும் காணப்படும் மிகைப்பாடல் இதனைப் பதினைந்து பாடல்கள் கொண்ட பகுதியாக மாற்ற எண்ணிய ஒருவரால் பாடப்பட்ட பாடலாக இருக்கலாம்.

இதில் கண்ணப்பர் இறைவனுக்குச் செருப்பு அணிந்த அடி, வாயாகிய கலசம், மாமிசமாகிய உணவு, ஆற்றுநீராகிய தீர்த்தம் இவை கொண்டு நிகழ்த்திய வழிபாடு அழகுறப் பாடப்படுகிறது.

" பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடெறிய மெய்குளிர்ந்தங்கு
அருள்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ " (317)

இதில் 'சேட்டெறிய' என்பதே செம்மையான பாடம். மர்ரே பதிப்பு இதனையே பாடமாகக் கொண்டுள்ளது. 'சேடறிய' என்பது பொருட் சிறப்பு இல்லாத பிழைபட்ட பாடம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம்
பாழுக்கு இறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதல் சிந்தாத நன்மணிவந்து என்பிறவித்
தாழைப் பறித்தவா தோள்நோக்கம் ஆடாமோ " (327)

" உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந்து உளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோள்நோக்கம் ஆடாமோ " (328)

போன்ற மாணிக்கவாசகரின் எளிமையையும், இன்ப அனுபவத்தை யும் காட்டும் பாடல்கள் கற்பார் நெஞ்சைக் கவர்வனவாகும். பிறவித்தாழ் என்பதற்குப் பிறவியாகிய தாழ்ப்பாள் என்று பொருள் கொள்வதனினும் பிறவியாகிய வேர் என்று பொருள் கொள்ளுவது சிறப்பாக அமையும். தாழ் என்பது தாழ்ந்து செல்வது என்னும் பொருளைத் தந்து வேரைக் குறிப்பதாகும்.

9. திருப்பொன்னூசல்

இஃது ஊஞ்சலாடும் பெண்கள் பாடும் பாட்டாகும். இதில் ஒன்பது பாடல்களே உள்ளன. இப்பாடல்கள் அனைத்திலும் உத்தரகோசமங்கைத்தலமே குறிக்கப்பட்டுள்ளது. ஓரிடத்தில் கூடத் தில்லைப்பதி குறிக்கப்படவில்லை. ஆனால், இது தில்லையில் பாடப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது. இக்கருத்து, பொருத்தமாகப் படவில்லை. இதனை உத்தரகோசமங்கையில் பாடப்பட்டதாகக் கொள்வதே சிறப்பு. இதில் மாணிக்கவாசகர் ஒரு பெண்ணாக நின்று பெண்களை விளித்து, "அடியேனுக்குத் திருவடியை உறைவிடமாகத் தந்த அமுதம் போன்றவனும், தேவர்களும் காணாத திருவடிகளையுடையவனும், என்னுள்ளே தங்கி உருக்குபவனும், திருநீறு அளித்து என்னைக் கருணை வெள்ளத்தில் திளைக்கச் செய்தவனும், அடியவர்கள் நெஞ்சில் நின்று அவர்கள் பிறப்பு இறப்பை அறுப்பவனும், திருமாலும் பிரமனும் இன்ன தன்மையன் என்று அறிய முடியாதவனும் கருணையினால் நஞ்சை உண்டு தேவர்களைக் காத்தவனும், என்னை அடியாருள் ஒருவனாக ஆட்கொண்டு பிறப்பை அறுப்பவனும், பணிந்து இறைஞ்சப் பாவங்களைப் போக்குபவனும், மலையில் எழுந்தருளி, உலகில் பிச்சையேற்று உண்டு, பரிமேல் எழுந்தருளி நம்மை ஆண்டவனும் ஆகிய உத்தரகோச மங்கையில் வந்தருளி எங்கள் பிறப்பை அறுத்திட்டு ஆட்கொள்பவனுமாகிய சிவபெருமானைப் பாடிப் பொன்னூசல் ஆடுவோம்" என்கிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

10. தசாங்கம்

தசாங்கம் பாடப்படும் தலைவனின் பத்து உறுப்புகளைப் போற்றிப் பாடுவதாகும். இதில் சிவபெருமானுக்குரிய பத்து உறுப்புகள் கூறப்படுகின்றன. இது மகளிர் கூடி விளையாடும் விளையாட்டு அன்று. தலைமகள் ஒருத்தி தன் தலைவன் சீர்களைச் சொல்லுமாறு தான் வளர்க்கும் கிளியிடம் வேண்டும் போக்கில் பாடப்பட்டுள்ளது. இதில் மாணிக்கவாசகரே தலைமகளாக மாறித் தம் தலைவனாகிய சிவன் சிறப்புகளைப் பாடுகிறார்.

சிவபெருமானுக்குத் தேவதேவன் திருப்பெயர் என்றும், பாண்டியநாடு நாடு என்றும், உத்தரகோசமங்கை ஊர் என்றும், ஆனந்தம் ஆறு என்றும், மூத்தி மலை என்றும் குதிரை ஊர்தி என்றும், சூலம் படை என்றும், நாதப்பறை பறை என்றும், அறுகம்புல்மாலை மாலை என்றும், ஏற்றுக்கொடி கொடி என்றும் தெரிவிக்கப்படுகிறது. எல்லாப் பாடல்களும் கிளியை நோக்கி இவற்றைத் தெரிவிக்கும்படி வேண்டுவனவாக அமைந்துள்ளன. அக்கிளி, 'ஏர்ஆர் இளங்கிளி', 'இன்சொல் மரகதம்', 'கிஞ்சுகவாய் அஞ்சுகம்', 'தேன்மொழிக் கிள்ளாய்' போன்ற அடைமொழிகளால் அழைக்கப்படுகிறது. இதற்கு வேறு பெயர் சூட்ட விரும்பினால் 'கிள்ளைப்பத்து' என்று பெயர் சூட்டலாம்.

பத்துகள்

திருவாசகத்தில் மொத்தம் பத்தொன்பது பத்துகள் உள்ளன. அவை 1. அன்னைப் பத்து, 2. குயில் பத்து, 3. செத்திலாப் பத்து, 4. அடைக்கலப் பத்து, 5. ஆசைப் பத்து, 6. அதிசயப் பத்து, 7. புணர்ச்சிப் பத்து, 8. வாழாப் பத்து, 9. அருட் பத்து, 10. கண்ட பத்து, 11. பிரார்த்தனைப் பத்து, 12. குழைத்த பத்து, 13. உயிருண்ணிப் பத்து, 14. அச்சப் பத்து, 15. பிடித்த பத்து, 16. குலாப் பத்து, 17. அற்புதப் பத்து, 18. சென்னிப் பத்து, 19. யாத்திரைப் பத்து என்பன. இவற்றில் அன்னைப் பத்தும், குயில்பத்தும் தலைமகள் நிலையில் பாடப்பட்டன. ஏனைய அனைத்துப் பத்துகளும் மாணிக்கவாசகர் தாமான தன்மையில் பாடியன ஆகும்.

இவற்றில் செத்திலாப் பத்து, அடைக்கலப் பத்து, ஆசைப் பத்து, அதிசயப் பத்து, புணர்ச்சிப் பத்து, வாழாப் பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப் பத்து, குழைத்த பத்து, உயிருண்ணிப் பத்து, அற்புதப் பத்து, சென்னிப் பத்து ஆகிய பன்னிரண்டும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருப்பெருந்துறையில் பாடப்பட்டன என்றும், அன்னைப் பத்து, குயிற் பத்து, கண்ட பத்து, அச்சப் பத்து, குலாப் பத்து, யாத்திரைப் பத்து ஆகிய ஆறும் தில்லையில் பாடப் பட்டனவாகவும், பிடித்த பத்து மட்டும் திருத்தோணிபுரத்தில் பாடப்பட்டது என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

திருப்பெருந்துறைப் பத்துகள் - 12

1. செத்திலாப் பத்து

செத்திலாப் பத்து ஆட்கொண்ட இறைவனுடைய திருவடி களைப் பிரிந்ததால் உண்டாகிய எல்லையற்ற வருத்தத்தைப் புலப்படுத்துகிறது. ''ஐயனே, உன்னைப் பிரிந்தும் சாகாமல் இருக்கிறேனே!'' என்று கதறுகிறார். அதனால் இதற்குச் செத்திலாப் பத்து என்னும் பெயர் அமைந்துள்ளது.

" பொய்யனேன் அகம்நெகப் புகுந்துஅமுது ஊறும்
புதும லர்க்கழல் இணைஅடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன் " *(398)*

என்று உருகுகிறார். இப்பத்தில் உள்ள சிக்கலான பாடல்,

" ஆட்டுத் தேவர்தம் விதிஒழித்து அன்பால்
ஐயனே என்றுஉன் அருள்வழி இருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே
நாத னேஉனைப் பிரிவுறா அருளைக்
காட்டித் தேவநின் கழல்இணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்துஅருள் செயாய்
சேட்டைத் தேவர்தம் தேவர் பிரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே " *(402)*

என்பதாகும். உபநிடதங்களில் 'தேவ' என்னும் சொல் புலன்களைக் குறிப்பதைச் சான்று காட்டி ஆட்டுத் தேவர் தம் விதி ஒழித்து என்பதற்கு, 'என்னை ஆட்டிவைக்கின்ற ஐம்புலன்களின் அதிகாரத்தை ஒழித்து' என்றும், 'நாட்டுத் தேவர்' என்பதற்கு 'உலகத்தார் தெய்வமென்று கருதி வழிபடுகின்ற மூர்த்திகள்' என்றும், 'சேட்டைத் தேவர்' என்பதற்குச் 'சிறுதெய்வங்கள்' என்றும் தெளிவு நல்கியுள்ளார் அறிஞர் மூ. அருணாசலம் அவர்கள். (திருவாசகக் குறிப்புக்கள், ப.*122,125*)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. அடைக்கலப் பத்து

அடைக்கலப் பத்தில் தம்மைக் கல்வி, ஞானம் இல்லாதவன் என்றும், பெண்ணின்பத்தில் ஈடுபட்டு அழிந்தவன் என்றும், இறைவனை வழிபடும் நெறி அறியாதவன் என்றும் சொல்லி, பிழையைப் பொறுப்பவனும், பிறவியை வேர் அறுப்பவனுமாகிய இறைவன் அடைக்கலம் தரவேண்டும் என்று வேண்டுகிறார். பெண்ணின்பத்தில் விழுந்து அழிவதனைத் துன்பமாகிய கடலில் பெண்கள் என்னும் அலைகள் வீசக் காமம் என்னும் சுறாமீன் தாக்கத் தாம் அழிவதாக உருவகப்படுத்திக் கூறியுள்ளார்.

" பொழிகின்ற துன்பப் புயல்வெள்ளத் தில்நன்
கழற்புணைகொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்யான்
இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச்
சுறவுஎறிய
அழிகின் றனன்உடை யாய்அடி யேன்உன்
அடைக்கலமே " (411)

3. ஆசைப் பத்து

ஆசைப் பத்தில், ''என்னைக் கழல்தந்து ஆண்ட பொல்லா மணியே, உன் அருளைப் பெறுவதற்கும், ஆரமுதம் போன்று உன்னைக் காண்பதற்கும், உன்முகம் காண்பதற்கும், உன் திருப்பாதம் காண்பதற்கும், நீ என்மேல் அளியன் என்று இரக்கங் காட்டுவதற்கும், உன்னை ஏத்துவதற்கும், உன்னைப் போற்றி அரற்றி உருகுவதற்கும், உன் அடியார் கூட்டம் காண்பதற்கும், நீ அஞ்சேல் என்று சொல்வதனைக் கேட்பதற்கும் ஆசைப்பட்டேன்'' என்கிறார். நரம்பு என்னும் கயிற்றால் எலும்பையும் தோலையும் போர்த்துக் கட்டப்பட்ட உடற் பை என்றும், சீழ் ஒழுகி, ஈக்கள் மொய்த்து அழுக்கொடு திரிகின்ற சிறுகுடிசை என்றும், அளிந்த புண்ணை உள்ளே வைத்து மூடிய யாக்கை என்றும் உடலை இழிவாகக் கூறி, அது நீங்கும்படி தமக்கு அருள்புரிய வேண்டும் என்கிறார்.

4. அதிசயப் பத்து

அதிசயப் பத்திலும் தாம் உலகியல் இன்பத்தில் மயங்கி நின்றதனையும், உடலின் இழிவினையும் தெரிவித்துத் தம்மை அடியார்களோடு கூட்டியதனை அதிசயம் என்று போற்றுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5. புணர்ச்சிப் பத்து

புணர்ச்சிப் பத்து இறைவனாகிய மணியைச் சேர்ந்து பக்கத்தில் இருப்பதும், ஊற்று மணல்போல் உருகி ஓலமிட்டுப் போற்றிப் புகழ்வதும், மலரடிகளில் மலர்தூவித் தழுவிக் கிடப்பதும், இனிய பெருமானைப் புல்லிக் கிடப்பதும், தம்மை ஆட்கொண்ட தன்மையைப் புகழ்வதும், அழகிய திருவடிகளை அணைவதும் என்றுகொலோ என்று ஏங்குகிறார். தம்மை ஆண்ட இறைவனைப் பேதை என்று குறிப்பதன்மூலம் தாம் ஆட்கொள்ளப்படுவதற்குத் தகுதி இல்லாமல் இருந்ததாகத் தெரிவிக்கிறார்.

" தாதாய் மூவேழ் உலகுக்கும்
தாயே நாயேன் தனைஆண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர் மருந்தே
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதுஆம் மணியேஎன்றுஎன்று ஏத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போதாய்ந்து அணைவது என்றுகொல்என்
பொல்லா மணியைப் புணர்ந்தே " (446)

என்பது நயமான வெளிப்பாடாகும்.

6. வாழாப் பத்து

வாழாப் பத்தில் சிவனுடைய இயல்புகளையும் செயல்களையும் சொல்லி அழைத்துத் தமக்கு அவனைத் தவிர வேறொரு பற்று இல்லாமையைச் சொல்கிறார். சிவபுரத்து அரசனாகவும் திருப்பெருந்துறையில் உறைபவனாகவும் விளங்கும் சிவபெருமானை விளிக்கிறார்; தம்மைக் கூவி ஆண்டுகொண்டருள வேண்டும் என்று வேண்டுகிறார். ஒவ்வொரு பாடலிலும் 'நான் மற்றுப் பற்றிலேன்', 'சிவபுரத்து அரசே', 'திருப்பெருந்துறை உறை சிவனே' என்னும் தொடர்கள் வருகின்றன. இரண்டாம் பாடல் நீங்கலாக ஏனைய பாடல்கள் அனைத்திலும், 'வாழ்கிலேன் கண்டாய், வருக என்று அருள்புரியாயே' என்னும், தொடர் இடம்பெற்றுள்ளது. தாம் இறைவன் அளித்த அருளினை மயக்கத்தினால் மறந்ததாகவும், அவனைத் தவிரப் பிறரைத் தொழுவதோ துதிப்பதோ அறியாதவர் என்றும் நினைக்க மாட்டாதவர் என்றும் தெரிவிக்கிறார். ''இறைவன் அருள் புரியாவிட்டால் நான் வாழமாட்டேன்'' என்பதால் இது வாழாப் பத்து என்னும் பெயர் பெற்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

7. அருட் பத்தில்

அருட் பத்தில் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் பொருந்தியுள்ள பெருமானை நோக்கிப் பேசுகிறார். திருப்பெருந் துறையை, 'செல்வத் திருப்பெருந்துறை', 'திமில நான்மறை சேர் திருப்பெருந்துறை', 'செடிகொள் வான் பொழில் சூழ் திருப் பெருந்துறை', 'செப்பம் ஆம் மறை சேர் திருப்பெருந்துறை', 'தெருளும் நான்மறை சேர் திருப்பெருந்துறை', 'திருந்துவார் பொழில் சூழ் திருப்பெருந்துறை' ஆகிய தொடர்களால் சிறப்பித்துக் கூறுகிறார். ஒவ்வொரு பாட்டிலும் 'செழுமலர்க் குருந்தம் மேவிய' என்னும் அடைமொழியோடு இறைவனை விளிக்கிறார். அவனிடம் ''எளியேன் விழைந்து அழைத்தால், 'அது என்ன?' என்று கூறியவாறு வந்து அருள்புரிவாய்'' என்கிறார். ''அடியேன் ஆதரித்து அழைத்தால் அதெந்துவே என்று அருளாயே'' என்பது முதல் ஒன்பது பாடல்களில், மகுடமாக அமைந்துள்ளது. இறுதிப் பாட்டுப் ''போதராய் என்று அருளாயே'' என்று முடிகிறது. சிவபெருமானிடம் அவன் அருளை வேண்டிநிற்பதால் அருட் பத்து என்னும் பெயர் இதற்கு அமைவதாயிற்று.

" முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டுஅறா மலர்பறித்து, இறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்துஅருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தம்மே வியசீர்
அத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே " (465)

என்பது போன்ற எழுசீர் விருத்தத்தில் அமைந்த பாடல்களைக் கொண்டது.

8. பிரார்த்தனைப் பத்து

பிரார்த்தனைப் பத்தில் பதினொரு பாடல்கள் காணப்படு கின்றன. ஒரு பாட்டு மிகையாக உள்ளது. பத்து என்ற பெயரே பத்துப் பாடல்களைக் கொண்டிருந்தால் மட்டுமே அமைவதாகும். இப்பத்து அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. அதனை யொட்டி நோக்கினால், 'வேண்டும் வேண்டும்' என்று தொடங்கும் நான்காவது பாடல் மிகைப்பாட்டாக இருக்கலாம் என்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தோன்றுகிறது. அப்பாட்டை நீக்கினாலும் அந்தாதித்தொடை கெடாமல் மூன்றாம் பாடல் 'வேண்டுமே' என்று முடிய அச்சீரின் ஈற்றெழுத்தை முதலாகக் கொண்டு 'மேவும் உன்றன் அடியாருள்' என்று ஐந்தாம்பாட்டு அடுத்த பாட்டாக அமைகிறது. இறைவனாகிய இன்பக் கடலைச் சேர்ந்து யான் எனது அற்று இருக்க வேண்டும்; அதற்கு அருள் செய்தல் வேண்டும்; மெய்யன்பைப் பெற வேண்டும்; என் அறியாமைஇருள் நீங்க உளங்கொள வேண்டும்; காலதாமதம் இன்றி விரைந்துவந்து திருவடிகளைத் தாராய்; பேரானந்தத்தை நீங்காதவாறு வைக்க வேண்டும்; அதற்கு அருள்வாய் என்று இரந்து நிற்பதால் இதற்குப் பிரார்த்தனைப் பத்து என்னும் பெயர் அமைந்தது.

" அறவே பெற்றார் நின்அன்பர்
அந்தம் இன்றி அகம்நெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியா பிரிவுஇல்லா
மறவா நினையா அளவுஇலா
மாளா இன்ப மாகடலே " (490)

என்ற பாடலின் கருத்தே இப்பதிகம் எங்கும் பரவிக் கிடக்கிறது எனலாம். இஃது எத்தலத்தில் உள்ள இறைவனை நோக்கிப் பாடப்பட்டது என்பதற்கான குறிப்பு ஏதும் இதில் இல்லை.

9. குழைத்த பத்து

குழைத்தல் என்றால் வருந்துதல் என்பது பொருள். இறைவனை நோக்கி என்னை வருத்தினாயே என்று கூறுவதால் இது குழைத்த பத்து என்று பெயர் பெற்றது. குழைத்த என்று முதற்பாடல் தொடங்குவதால் முதற்குறிப்பால் பெற்ற பெயராகவும் கொள்ள வாய்ப்புண்டு. இறைவன் தமக்கு நன்மையும் பிழையும் செய்ததாக இதில் குறிப்பிடுகிறார்.தம்மைப் பணிகொண்டது தமக்குச் செய்த நன்மை என்றும், பெரிய பதம் தாராதது பிழை என்றும் கருதுகிறார். தமக்கு அருளாது ஒழியலாமா என்றும், தம் குற்றங்களையெல்லாம் பொறுத்துக்கொண்டால் அதனால் இறைவனுக்கு என்ன தீங்கு நேரிடும் என்றும், தேறும் வகை தெரியாமல் தவிக்கும் தம்மைத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தேற்ற வேண்டாமோ என்றும் வினவுகிறார். நன்மையும் தீமையும் செய்வாய், அதற்கு யான் பொறுப்பாக முடியுமா என்கிறார்.

" அழகே புரிந்திட்டு அடிநாயேன்
    அரற்றுகின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
    காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம்எனக்கு
    புராண நீ தந்து அருளாதே
குழகா கோல மறையோனே
    கோனே என்னைக் குழைத்தாயே. " (505)

என்னும் பாடல் தலைப்பின் பொருத்தத்தைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது.

10. உயிருண்ணிப் பத்து

இது திருப்பெருந்துறையில் பாடப்பட்டது. ஒவ்வொரு பாட்டிலும் திருப்பெருந்துறை குறிக்கப்படுகிறது. மாணிக்கவாசகர் தம்மோடு இறைவன் கலந்ததனைத் தெரிவிக்கிறார். ''ஊன்ஆர் உடல் புகுந்தான் உயிர் கலந்தான் உளம்பிரியான்'' என்றும், ''என் உடலும் எனதுஉயிரும் புகுந்து ஒழியாவண்ணம் நறைந்தான்'' என்றும், ''நச்சம்என நெஞ்சில் மன்னி யானாகி நன்றானே'' என்றும் இறைவன் தம்மைத் தனதாக்கிக் கொண்டதனைத் தெரிவித்தலால் உயிருண்ணிப் பத்து என்னும் பெயர் பெற்றது. இறைவன் தம்ள் புகுந்தபின் தாம் அடைந்த நலையினை,

" எனைநான்என்ப தறியேன்பகல் இரவாவதும் அறியேன்
மனவாசகம் கடந்தான்எனை மத்தோன்மத்தன் ஆக்கிச்
சினமால்விடை உடையான்மன்னு திருப்பெருந்துறை உறைவான்
பனவன்எனைச் செய்தபடிறு அறியேன் பரம்சுடரே " (508)

என்று பாடுகிறார்.

11. அற்புதப் பத்து

இறைவன் தம்மை ஆண்டுகொண்டது புதுமையான செயல் என்று அவன் கருணைத்திறத்தை வியந்து போற்றுவது இப்பத்து. பாடல்களின் இறுதிப் பகுதி 'அற்புதம் விளம்பேனே' என்றோ 'அற்புதம் அறியேனே' என்றோ முடிவதால் அற்புதப் பத்து என்னும் பெயர் பெற்றது. வாழ்க்கைக்கடலில் சிக்கித் தையலார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மையலில் வீழ்ந்து அகங்கார மமகாரங்களோடு இருந்த தம்மைத் தன் திருவடிகளைக்காட்டி அகம்புகுந்து ஆண்டு கொண்டருளியது அற்புதம் என்கிறார். இப்பத்தின் கருத்தினைச் சுருக்கமாகத் தெரிவிப்பதுபோல் அமைந்துள்ளது ஐந்தாம் பாடல். அப்பாடல் வருமாறு:

" மாடும் சுற்றமும் மற்றுஉள போகமும்
மங்கையர் தம்மோடும்
கூடிஅங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடுதந்து என்றன் வெம்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
ஆடு வித்துஎனது அகம்புகுந்து
ஆண்டுகொண்டதுஓர் அற்புதம் அறியேனே " (573)

இது திருப்பெருந்துறையில் பாடப்பட்டது என்பதற்கான வெளிப்படையான குறிப்பு ஏதும் இதன்கண் இல்லை. மாணிக்க வாசகரைத் திருப்பெருந்துறையில் குருவடிவில் வந்த சிவ பெருமான் ஆட்கொண்டான் என்னும் குறிப்பினையொட்டி இறைவன் ஆட்கொண்ட திறத்தைக் கூறும் இப்பத்துத் திருப்பெருந்துறையில் பாடப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது போலும்.

12. சென்னிப் பத்து

இறைவன் திருவடி தமது தலையில் மிளிர்கின்ற தன்மை யினைக் கூறுவது இது. 'சேவடிக்கண்நம் சென்னி மன்னி' என்னும் தொடர் பாடல்தோறும் வருவதால் இப்பெயர் பெற்றது. இதனைச் சேவடிக்கள் நம் சென்னி மன்னி என்று பிரித்து, சேவடிக்கள் என்பதனை விரித்தல் விகாரமாகக் கொண்டு, இறைவன் சேவடிகளாகிய மலர்கள் நம் சென்னியில் மன்னி மலரும் என்று பொருள் காண்பாரும் உண்டு. அதனினும் நம்தலைகள் இறைவன் சேவடிகளில் பொருந்தி மலரும் என்று பொருள் கொள்வதே சிறப்பாக அமையும்.

" மங்கைமார் கையில் வளை யும்கொண்டுஎம்
உயிரும் கொண்டுஎம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவடிக்கண்நிம்
சென்னி மன்னிப் பொலியுமே " (581)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்று இறைவன் மங்கைமார் வளையல்களையும் தங்கள் உயிரையும் கொண்டு செல்வதாகத் தெரிவிக்கிறார். இது சிவ பெருமான் உலாப்போங் காலத்து நிகழ்வதனைக் குறிக்கிறது.

" காயத் துள்அமுது ஊறஊறநீ
கண்டு கொள் என்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கண்நம்
சென்னி மன்னித் திகழுமே " (583)

என்று இறைவன் தமக்கு அருளியபொழுது உண்டான இனிய அனுபவத்தைப் புலப்படுத்துகிறார். இது திருப்பெருந்துறையில் பாடப்பட்டது என்பதனை உணர்த்தும் வகையில் இதில் திருப் பெருந்துறை நாயகன் நான்கு பாடல்களில் சுட்டப்படுகிறான்.

தில்லைப் பத்துகள் - 6

1.அன்னைப் பத்து

அன்னைப் பத்து அகத்துறையில் அமைந்த பத்து ஆகும். இறைவன்மீது காதல்கொண்ட பெண்ணொருத்தி அவன் அடை யாளங்களையும் பண்புகளையும் ஒவ்வொன்றாகச் சொல்லி 'அம்மா, அம்மா' என்று புலம்புவதைக் கண்டோர் கூறுவதாக அமைந்துள்ளது. அவள் தன் உள்ளம் கவர்ந்த இறைவனை அவர் என்று மரியாதையோடு குறிக்கிறாள். தன்னை மையல் கொள்ளச் செய்தவர் வேதத்தை மொழிபவர், வெண்ணீறு அணிந்தவர், நாதப் பறையினையுடையவர், நான்முகனுக்கும் திருமாலுக்கும் தலைவர், கண்ணில் அஞ்சனம் பூசியவர், கருணைக்கடலாகத் திகழ்பவர், உள்ளத்தை உருக்குபவர், ஆனந்தக் கண்ணீர் தருபவர், நித்தமணாளர், மிகவும் அழகானவர், சித்தத்தில் இருப்பவர், பெருந்துறைக்குத் தலைவர், ஆனந்தர், பாம்பு, தோல் இவற்றை அணிந்து நீறுபூசிய வேடத்தர், நீண்ட கைககளையுடையவர், சுருண்ட முடியினர், பாண்டியநாட்டினர், உத்தரகோசமங்கையில் இருப்பவர், என் நெஞ்சில் உறைபவர், வெள்ளை ஆடை அணிந்தவர், திருநீறு பூசிய நெற்றியினர், பள்ளிக் குப்பாயத்தர், குதிரைமேல் உலாப் போந்து என் உள்ளத்தைக் கவர்ந்தவர், அறுகம்புல் மாலை அணிந்தவர், சந்தனம் பூசியவர், மங்கையை இடப்பாகத்தில் கொண்டவர், தாபதக்கோலத்தினர். ''அவர் பிச்சை ஏற்றுச் சென்றார். அதனால் என் உள்ளம் வருந்தியது. அவர் தலையில் கொன்றை, பிறைச்சந்திரன், கூவிளம், உன்மத்தம்பூ ஆகியவற்றைச் சூடி இருந்தார். அவர் தலையில் இருந்த உன்மத்தம் கண்டு நான் உன்மத்தம் கொண்டேன், அம்மா'' என்கிறாள்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. குயில் பத்து

குயில் பத்து, தலைமகள் கூற்றாக அமைந்துள்ளது. மாணிக்க வாசகர் தலைமகளாக மாறிநின்று பேசுகிறார். இது தலைவி கூற்று என்பது, ''குயிலே, உன்னை மிகவும் விரும்புவேன். அதனோடு உனக்கு நல்ல தோழியும் ஆவேன். நீ என் உள்ளங் கவர்ந்த பெருந்துறைப் பெருமான் என்னிடம் வருமாறு கூவுவாய்'' என்று வேண்டுவதால் வெளிப்படுகிறது. ''உன்னையும் உகப்பன் குயிலே உன்துணைத் தோழியும் ஆவன்'' (354) என்பது அவள் பேச்சு. இங்குக் குயில் 'கீதம் இனிய குயிலே' 'தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயிலே' 'சுந்தரத்து இன்பக் குயிலே' போன்ற இனிய தொடர்களால் விளிக்கப்படுகிறது. சிவபெருமான் இராவணன் மனைவி மண்டோதரிக்கு அருள்புரிந்த செய்தி தெரிவிக்கப்படுகிறது. சிவபெருமானின் எளிவந்த தன்மை,

> '' வான்பழித்து இம்மண் புகுந்து மனிதரை
> ஆட்கொண்ட வள்ளல் '' (351)

என்று சுட்டப்படுகிறது.

தில்லையைப்பற்றி ஒரு குறிப்பும் இப்பகுதியில் இல்லை. ஆனால் பெருந்துறை, உத்தரகோசமங்கை ஆகியவைபற்றிக் குறிப்புகள் உள்ளன. இது தில்லையில் பாடப்பட்டதாக எதனால் குறிப்பிட்டுள்ளனர் என்பது விளங்கவில்லை.

3. கண்ட பத்து

இதன் பத்துப் பாடல்களும் 'தில்லையைக் கண்டேனே' என்று முடிவதால் இதற்குக் கண்ட பத்து என்னும் பெயர் வழங்குகிறது. இதில் தில்லை, 'அணிகொள் தில்லை', 'அனைத்துலகும் தொழும் தில்லை', எல்லோரும் இறைஞ்சு தில்லை', 'குலாவு தில்லை', 'செறிபொழில் சூழ் தில்லை', 'விளங்கு தில்லை', 'களவு இலா வானவரும் தொழும் தில்லை', 'நான்கு மறை பயில் தில்லை', 'வேதங்கள் தொழுது ஏத்தும் விளங்குதில்லை' என்னும் தொடர்களால் கொண்டாடப்படுகிறது. இறைவனுடைய ஆனந்தக் கூத்தினை ஞானக்கண்ணால் கண்ட மகிழ்ச்சியின் வெளிப்பாடாக இஃது அமைந்துள்ளது. இதில் பெருமான் சிவமாக்கித் தம்மை ஆண்டவனாகவும், உருத் தெரியாத காலத்திலேயே உள்ளத்தில் புகுந்து நிலையாகத் தங்கி ஆண்டுகொண்டவனாகவும், தமது பசு பாசம் அறுத்தவனாகவும், பேதைமை, யான், எனது என்னும் செருக்கு முதலியவற்றை அழித்தவனாகவும், வான்கருணை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தந்தவனாகவும், துன்பங்கள் கெடுத்து ஆண்டவனாகவும் மாணிக்கவாசகரால் போற்றப்படுகிறான். 'சிவமாக்கி எனையாண்ட' என்னும் தொடர் அச்சோப்பதிகத்தை நினைவு ஊட்டுகிறது. இதில் இன்று குத்தாலம் என்று வழங்கும் திருத்துருத்தி என்னும் தலம் குறிக்கப்படுகிறது.

4. அச்சப் பத்து

இதில் உலகில் அஞ்சத்தக்கனவாக இருப்பனவற்றை யெல்லாம் தொகுத்துக் கூறி 'அவற்றிற்கெல்லாம் அஞ்ச மாட்டேன். ஆனால், சிவனை அறியாதவராகவும், பிற தெய்வங்களை இகழாதவராகவும், சிவனுக்கு அன்பு இல்லாதவராகவும் சிவனை நினைந்து உருகாதவராகவும் வெண்ணீறு அணியாதவராகவும் சிவன் மலரடிகளை மலர்கொண்டு வணங்காதவராகவும் சிவனை ஏத்தி மகிழ்ந்திருக்க அறியாதவராகவும் கண்ணீர் பெருக வாழ்த்தி நின்று ஏத்தமாட்டாத ஆண் அல்லாதவராகவும் இருப்பவரைக் கண்டால் மிகவும் அஞ்சுகிறேன்' என்கிறார். பாம்பு, பொய்யர் கூறும் மெய், வேட்கை, வினை, வேற்படை, மாதர் கண், கிளிபோன்றவர் பேச்சு, பிணி, பிறப்பு இறப்பு, நெருப்பு, மலையின் நடுக்கம், நீக்க இயலாத பழி, சாவு, மதங்கொண்ட யானை, சீற்றம் மிக்க புலி, இடி, மன்னர் உறவு, கூரிய அம்பு, யமனின் கோபம் இவற்றை மாணிக்கவாசகர் உலகில் அஞ்சத்தக்கனவாகப் பட்டியல் இடுகிறார். இப் பத்தில் மாணிக்கவாசகரின் சைவப்பற்று மேலோங்கி நிற்றல் காணலாம். 'அம்ம நான் அஞ்சுமாறே' என்ற மகுடத்தோடு பாடல்கள் எல்லாம் முடிவதால் அச்சப் பத்து என்னும் பெயர் பொருத்தமாக அமைந்துள்ளது. இது தில்லையில் பாடப்பட்டது என்பதற்கான அகக்குறிப்பு ஏதும் இதில் காணப்படவில்லை.

5. குலாப் பத்து

தில்லைப் பெருமானைக் கண்டதால் உண்டான மகிழ்ச்சிப் பெருக்கில் பிறந்த சொற்களைக் கொண்டது இப்பத்து. மாணிக்க வாசகர், தாம் ஆடுகின்ற மகிழ்ச்சிக்கூத்துத் தில்லைப் பெருமானைப் பொருளாகக் கொண்டது என்கிறார். வித்துவான் க. வெள்ளை வாரணன் அவர்கள் இப்பாடல்களில் எழுவாய் எது, பயனிலை எது என்பதனைத் தெளிவாக்கியுள்ளார். குலா என்பது எழுவாய், கொண்டன்று என்பது பயனிலை என்பது அவர் தரும் தெளிவு (பன்னிரு திருமுறை வரலாறு, ப. 259). திருவோட்டையும், கோவணத்தையும் உறவாகக் கொண்டு தேடுவதற்குரிய பொருள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிவன் திருவடிகளே என்று கொண்டு உடலும் உயிரும் மகிழத் தாம் ஆடும் மகிழ்ச்சிக் கொண்டாட்டம், தில்லையில் ஆடும் பெருமானைப் பற்றியதாகும் என்கிறார். தில்லைப்பெருமான், பெண்ணின்பத்தில் தாம் எத்தனை ஈடுபட்டுக் கிடந்தாலும் தம்மைத் தன் திருவடிகளில் முயங்குவிப்பவன்; துன்பங்களைப் போக்கிப் பிறப்பு இறப்பு, நல்வினை தீவினை போன்ற இரட்டைகளை நீக்கி உள்ளத்தில் புகுந்தவன்; அமுதம் போன்றவன். தொண்டர்கள் திரளும் வகையிலும், கொடியில் அரும்பு தோன்றி மலராகிப் பின் காயாகி இறுதியில் பழுத்து விழுவதுபோல் தம் உடல் விழாத வகையிலும் தாம் ஆடும் குலா அத் தில்லைப் பெருமானைப் பற்றியதாக அமையும் என்கிறார்.

" இடக்கும் கருமுருட்டு ஏனப்பின் கானகத்தே
நடக்கும் திருவடி என்தலைமேல் நட்டமையால்
கடக்கும் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லரட்டை
அடக்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே " (566)

என்ற பாட்டில் வல்லரட்டை என்பதற்கு மாறாக வல்லாட்டை என்னும் பாடம் சில பதிப்புகளில் காணப்படுகிறது. அறிஞர் மு. அருணாசலம் திருநாவுக்கரசர் தேவாரத்தில் வரும்,

" முருட்டு மெத்தையில் முன்கிடத் தாமுனம்
அரட்டர் ஐவரை ஆசுஅறுத் திட்டுநீர்
முரட்ட டித்தஅத் தக்கன்தன் வேள்வியை
அரட்ட டக்கிதன் ஆரூர் அடைமினே "

என்னும் பாடலை மேற்கோள் காட்டி வல்லரட்டை (வல்அரட்டு - வலிய குறும்பு) என்பதே செம்மையான பாடம் என்று தெளிவு செய்துள்ளார். மர்ரே பதிப்பிலும் இப்பாடமே போற்றிக் கொள்ளப்பட்டுள்ளது.

6. யாத்திரைப் பத்து

இதில் அடியார்களை எல்லாம், "சிவன் திருவடிகளில் புகும் காலம் வந்துவிட்டது. ஐம்புலன்களில் மனத்தை விடாதீர்கள். அவன் திருக்குறிப்பை எதிர்நோக்கி இருங்கள். அது நம்மை அவன் திருவடிகளில் புகுமாறு செய்யும். சிவபுரத்துக்கு உள்ளே நேரே சென்று நிற்காமல் பக்கத்தில் ஒதுங்கிநின்று உருகிப் போற்றுவோம். இங்கே நிற்பவர்கள் நிற்கட்டும். நாம் செல்வோம். காலம் தாழ்த்தாமல் புறப்படுங்கள். இப்பொழுது தவற விட்டுவிட்டுப் பின்பு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வருந்திநின்றால் அவன் அடைதற்கு அரியவன். சிவபுரத்துத் திருக்கதவம் திறந்தபோதே அவன் திருவடிகளைச் சென்று வணங்குவோம். தெளிவு இருந்தால் அதனை மேற்கொள்ளுங்கள்'' என்று அழைக்கிறார்.

ஒன்பதாம் பாட்டு, 'போரப் புரிமின் சிவன் கழற்கே, பொய்யில் கிடந்து புரளாதே' என்று முடிகிறது. இதில் 'போர' என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. அது பேச்சுவழக்குச் சொல். போகிறான் என்பதனைப் 'போரான்' என்று கூறுவர். 'போர' என்னும் சொல்லுக்குப் போக என்பது பொருளாகும். இப் பத்து அந்தாதித்தொடையில் அமைந்துள்ளது. ஆனால், முதற்பாட்டின் முதற்சீரும் இறுதிப்பாட்டின் இறுதிச்சீரும் ஒன்றி மண்டலிக்க வில்லை. இதில் சிவபுரம் என்னும் இடம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறதேயன்றித் தில்லைபற்றி எக்குறிப்பும் பாடல்களில் இல்லை. சிவபுரம் என்பது கயிலாயத்தைக் குறிக்கும் என்பர்.

திருத்தோணிபுரப் பத்து-1

பிடித்த பத்து

இப் பத்தில் மாணிக்கவாசகர் சிவன் கழலைத் தாம் சிக்கென விடாமல் பற்றிக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு பாடலும் 'சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருள்வது இனியே' என்னும் மகுடத்தோடு முடிவதால் பிடித்த பத்து என்னும் பெயர் பெற்றுள்ளது. இது திருத்தோணிபுரத்தில் பாடப்பட்டதாகக் கூறுகின்றனர். திருத்தோணிபுரம் என்பது சீகாழியைக் குறிக்கும். அத்தலம் பற்றிய குறிப்பு இதில் இடம்பெறவில்லை.

பதிகங்கள்-6

திருவாசகத்தில் பதிகங்கள் என்று முடியும் பகுதிகள் ஆறு இருக்கின்றன. அவை கோயில் மூத்த திருப்பதிகம், கோயிற் பதிகம், திருக்கழுக்குன்றப் பதிகம், திருப்பாண்டிப் பதிகம், எண்ணப் பதிகம், அச்சோப் பதிகம் என்பன.

1. கோயில் மூத்த திருப்பதிகம்

இதில் மாணிக்கவாசகர் தில்லையில் பொன்னம்பலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை நோக்கித் தம் வேண்டுகோளை வைக்கிறார். ''என்னை அடியார் நடுவுள் இருக்கும்படி செய்வாய்; என்னை 'வா' என்று ஏற்றுக் கொள்ளாவிட்டால் உன் அடியார்கள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'இவன் யார்?' என்று வினவுவார்கள் அன்றோ? உன் திரு முகத்தைக் காட்டாவிட்டால் அடியேன் இறந்துபோவேன்; உன் அருளுக்காக இரங்கி அழுதலன்றி என்னால் வேறு என்ன செய்ய முடியும்? உன் அருள்வேண்டி மீனுக்காகக் காத்திருக்கும் கொக்குப்போலக் காத்திருந்து வருந்துகின்றேன்; அடியார்க்குக் காட்சி கொடுத்து எனக்கு மட்டும் பாலில் மறைந்திருக்கும் நெய் போல மறைந்திருந்து பேசாமல் இருந்தால் என்னைப் பிறர் எல்லாம் ஏசமாட்டார்களா? அடியார் சூழ்ந்திருக்கும் நன் திருவோலக்கம் காண விழைந்து நின்றேன்; யான் பயன்படுத்துவோர் இல்லாத செல்வம்போல் ஆகிவிடுவேனோ? அடியார்களுடன் நீயும் கூடியிருக்கும் இடத்தில் பக்கத்தில் வருவதற்கு என்னை அழைத்திட வேண்டும். என்னை அழைத்து உன் அடியார் கூட்டத்தைக் காட்டாவிட்டால் யான் செத்துப்போவேன். அதனைக் கண்டு பிறர் எல்லாம் சிரிக்க மாட்டார்களா? உன்னை வணங்கி மகிழ்ந்திருக்கும் இறையன்பர் முன்னே வெறுக்கத் தக்கவனாய் யான் இருப்பேனா? உன்னை நினைந்து உருகி வணங்கிப் 'பொன்னம்பலம்' என்று கூறித் தளரும் இந்த உயிர்க்கு இரங்கி அருள்புரிவாய்?'' என்று வேண்டுகிறார். இதில் பாடல் தோறும் பொன்னம்பலத்தில் ஆடும் கூத்தனைப் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. ஆதலின், தில்லையில் அருளிச் செய்யப்பட்டது என்று கூறுவது பொருத்தமாகும்.

2. கோயில் பதிகம்

இதில் முதற்பாடலில், ''இறைவா, உன்னை உள்ளவாறு யான் காணும் வகை வந்தருள்வாய்'' என்று வேண்டுகிறார். இரண்டாம் பாடல் தொடங்கி எஞ்சிய பாடல்களில் தமக்கு இறைவன் செய்த கருணையை எண்ணி நன்றி பாராட்டுகிறார். ''என் உயிரும் உடலும் கசிந்து உருக மிகுந்த அருள் புரிந்தாய், இதற்கு என்ன கைம்மாறு செய்ய வல்லேன்? உன்னை எவ்வாறு விளக்குவது என்பதனை எனக்கு உணர்த்துவாய்; உன்னை அடைந்த எனக்கு இனி என்ன குறை உள்ளது? நீ என் உடலை உறையும் இடமாகக் கொண்டாய். இனி உன்னிடம் யான் வேண்டிப் பெறுவதற்கு யாது உள்ளது? இன்று உன்னை என் கண்ணாரக் கண்டு களித்தேன். நீ உலகத்தில் காணப்படும் ஒரு பொருளும் அல்லை; ஆனால், நீ இல்லாமல் எப்பொருளும் இல்லை. உன்னை அறியக் கூடியவர் யார்? உன்னைப் பெற்ற எனக்கு உறவினர் யார்? அயலார் யார்? ஒருவரும் இல்லை. என்பால் வந்து உன் திருவடிகளைத் தந்து அதன்பின் என்னை விட்டுச் செல்லும் வகையினை எனக்குப் புகல்வாய்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உன்னை எனக்குத் தந்தாய். என்னை நீ பெற்றாய். நம்மிருவரில் யார் கெட்டிக்காரர்? யான் முடிவில்லா ஆனந்தத்தைப் பெற்றேன். உனக்கு என்னால் என்ன கிடைத்தது? என் உடலை உறையும் இடமாகக் கொண்டாய். இதற்கு யான் செய்யும் கைம்மாறு ஒன்றும் இல்லை'' என்கிறார்.

" தந்ததுஉன் தன்னைக் கொண்டதுஎன் தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதுஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடல்இடம் கொண்டாய்
யான்இதற்கு இலன்ஓர் கைம்மாறே " (397)

என்பது பலரும் அறிந்த சிறப்பான பாடல்.

இப்பதிகத்தில் பாடல்தோறும் திருப்பெருந்துறை உறையும் பெருமான் விளித்துப் பேசப்படுகிறான். இது தில்லையில் அருளிச்செய்யப்பட்டது என்பது பொருத்தமா என்பது சிந்தித்ததற் குரியது. இதனைத் திருப்பெருந்துறையில் பாடப்பட்டதாகக் கொள்வதே தக்கதாகும். இதற்கு முந்தைய பதிகம் கோயில் மூத்த திருப்பதிகம் என்றும் இது கோயில் பதிகம் என்றும் குறிக்கப் பட்டுள்ளன. இப்பதிகம் அருள் பெற்றதனையும், முன்னைய பதிகம் அருளை வேண்டி நிற்பதனையும் தெரிவிப்பதால் அது முதலில் பாடப்பட்டது என்பது தெரிகிறது. ஆதலின், அதனை மூத்த பதிகம் என்றும் இதனை வறிதே கோயிற் பதிகம் என்றும் குறித்தனர் போலும்.

3. திருக்கழுக்குன்றப் பதிகம்

இப் பதிகத்தில் மாணிக்கவாசகர் தமக்குத் திருப்பெருந்துறைப் பெருமான் மீண்டும் திருக்கழுக்குன்றத்தில் காட்சி தந்ததனை எண்ணி மகிழ்ந்து பாடுகிறார். ''பெருந்துறைப் பெருமானே, எனக்கு இருவினைகள் செயலற்று ஒடுங்கியபின் உன் முடிவில்லாத கோலத்தைக் காட்டி என்னை ஆட்கொள்வதற்காக வந்தாய், என் குற்றங்களைப் போக்கிய திருப்பெருந்துறையை விட்டு விலகிக் கலங்கினேன். நீ வந்து தோன்றினாய், மிக்க அன்புகொண்டு வாழ்ந்த யான் உலகியல் என்னும் கடலில் வீழ்ந்து அழுந்திப் பின் பெருந்துறை என்னும் தோணி பற்றிக் கடந்து வரவும் நீ வந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தோன்றினாய். தீங்கற்ற அடைக்கலம் என்று உன்னைச் சொல்ல நீ வந்து தோன்றினாய். மும்மலமாகிய பழைய வல்வினையில் மயங்கிக் கிடக்கவும் என் துன்பத்தைப் போக்கித் திருவடி தந்து, கலங்க வைத்துப் பின் அடியார் முன்னே வந்து தோன்றினாய்!'' என்று திருக்கழுக்குன்றில் தமக்கு இறைக்காட்சி கிடைத்ததை அக மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறார். இப்பதிகத்தில் ஏழு பாடல்களே இருக்கின்றன. சில பதிப்புகளில் காணப்படும் இரு மிகைப்பாடல்கள் மாணிக்கவாசகர் வாக்காகத் தோன்றவில்லை. அவை கிடைக்காமல் போன மூன்று பாடல்களை நிரப்பும் முயற்சியில் ஈடுபட்ட ஒருவரின் முயற்சியாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. பாடல்கள் எல்லாம் 'வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்னும் மகுடத்தோடு முடிகின்றன.

4. திருப்பாண்டிப் பதிகம்

இப்பதிகத்தில் இறைவன் பாண்டியற்கு ஆரமுதாக இருப் பவன் மட்டுமன்றிப் பாண்டியனாகவும் இருக்கிறான் என்று போற்றப்படுகிறான். 'பாண்டியற்கு ஆர்அமுதாம் ஒருவர்' என்றும், 'ஆலம் உண்டான், எங்கள் பாண்டிப்பிரான்', 'பரவிய அன்பரை என்பு உருக்கும் பரம் பாண்டியனார்' என்று வரும் தொடர்களால் இதனைத் திருப்பாண்டிப் பதிகம் என்று குறித்துள்ளனர்.

இது பரியின்மேல் எழுந்தருளிய இறைவனைக் கண்டு பாடியதாகத் தெரிகிறது. பெருமான் குதிரையின்மேல் எழுந்தருளி வர, அக்காட்சியினால் கவரப்பட்ட பெண்கள் உணர்ச்சியற்றுத் தம்மை மறந்தனர் என்று குறிக்கிறது ஒன்பதாம் பாடல். மாணிக்கவாசகர், இறைவன் தன் அருட் களஞ்சியத்தைத் திறந்து அடியவர்களுக்கு வழங்குகிறான் என்று கூறி, அதனைப் பெற முந்துமாறு மற்றவர்களை வேண்டுகிறார். இதனை,

'' காலம்உண் டாகவே காதல்செய்து
உய்ம்மின் கருதரிய
ஞாலம்உண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலம்உண் டான்எங்கள் பாண்டிப்
பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே '' (530)

என்னும் பாடல்இனிது விளக்குகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5. எண்ணப் பதிகம்

இப் பதிகத்தில் ஆறு பாடல்களே உள்ளன. எஞ்சிய நான்கு பாடல்கள் கிடைக்கவில்லை. இதில், அடியார் கூட்டத்தில் தாமும் இருக்க இறைவனை அருள்புரியுமாறு வேண்டுகிறார். ஞானாசிரியன் தமக்கு இறைவன் திருவடிகளைக் காட்டிக் கொடுத்ததனை,

" பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுஉன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றுஎன்று அருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே " (600)

என்று குறிக்கிறார். இறைவனைப் பிரிந்து தம்மால் ஆற்றியிருக்க இயலாது என்றும், தாம் இறையன்புக்குரிய செயல்களைச் செய்யாமல் ஒழிந்ததாகவும் கூறித் தமக்கு அருள்புரிய வேண்டும் என்றும் வேண்டி நிற்கிறார்.

6. அச்சோப் பதிகம்

இது திருவாசகத்தின் இறுதிப்பகுதியாக இடம் பெற்றுள்ளது. மாணிக்கவாசகர் இதில் தமக்குக் கிடைத்த பேற்றினை எண்ணி மகிழ்கிறார். மூர்க்கரோடு திரிந்தும், மடவார்கள் மயக்கத்தில் வீழ்ந்து துன்புற்றும், பிறப்பு இறப்பு என்னும் சுழலில் சிக்கியும் தடுமாறிய தம்மைக் காத்துக் குற்றங்களைப் போக்கிச் சிவமாக்கி ஆண்டான் என்றும் கூறி இத்தகைய பேற்றினைப் பெறுவார் உண்டோ என்று வினவுகிறார்.

" செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதல்ஆய முதல்வன்தான்
நம்மையும்ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக்கு அருளியஆறு ஆர்பெறுவார் அச்சோவே " (658)

என்பது அவர் பெற்ற பேற்றினை எண்ணி வியக்கும் நிலையினைக் காட்டுகிறது.

அச்சோப் பதிகம் என்பது அச்சோப் பத்து என்று வழங்கப் படுவதாக அறிஞர் க. வெள்ளை வாரணனார் அவர்கள் தெரிவித் துள்ளார்கள். அவ்வாறு இருந்திருக்கவும் வாய்ப்பு உள்ளது. பெரும்பாலான பத்துகளில் பாடல்கள் அனைத்தும் ஒரே மகுடத் தோடு முடிகின்றன. இதுவும் அப்படி முடிவதால் இதனைப் பத்து என்று குறிப்பதும் பொருந்தும். இதனையும் பத்தாக ஏற்றால் மொத்தம் இருபது பத்துகள் திருவாசகத்தில் உள்ளன என்று ஆகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பல்வேறு தலைப்புப் பாடல்கள் - 10

திருவாசகத்தில் - மகளிர் விளையாட்டு, பத்து, பதிகம் என்னும் பகுப்பினுள் அடங்காமல் பல்வேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் பத்து ஆகும். அவை திருக்கோத்தும்பி, திருப்பள்ளி யெழுச்சி, திருவேசறவு, திருப்புலம்பல், திருவார்த்தை, திருப்படையெழுச்சி, திருவெண்பா, பண்டாய நான்மறை, திருப்படையாட்சி, ஆனந்த மாலை என்பன.

1. திருக்கோத்தும்பி

திருக்கோத்தும்பி இருபது பாடல்களைக் கொண்டது. இதில் மாணிக்கவாசகர் தம் நல்லறிவைக் கோத்தும்பியாக உருவகித்து அதனைப் பெருமானிடத்தில் சென்று ஒலிக்குமாறு வேண்டுகிறார். அவன் சேவடிகள் தேவர்கள் எவரும் அறியாதவை என்கிறார். தம்மை அவன் ஆட்கொள்ளாது இருந்தால் தாம் எங்கே? தம் உள்ளம் எங்கே? தாம் பெற்றிருக்கும் அறிவு எங்கே? தம்மை எவர் அறிவார்? என்று நினைந்து நெகிழ்கிறார். அவன் ஆனந்தத் தேன் சொரிபவன்; சிறந்த கருணையாளன்; மெய்த்தேவர் தேவர்; தம் சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த வித்தகன்; குன்றாத செல்வன்; கருணைக்கடல்; தாய் போன்றவன்; வானும் திசைகளும் கடலும் ஆகிய பெருமான்; மங்கைபங்கனாகத் திகழ்பவன் என்று கூறி, அவன் கழலில் சென்று ஒலிப்பாய் என்று வண்டினை நோக்கிக் கூறுகிறார். 'தினைத்தனை உள்ளதோர்' 'கண்ணப்பன் ஒப்பதோர்' தோலும் துகிலும் போன்ற அழகிய பாடல்கள் இப்பகுதியில் உள்ளன. இதில் மாணிக்கவாசகர் தாம் நோயுற்று மூத்து நுந்து கன்றாய் (224) இருந்ததாகத் தெரிவித்துள்ளார். 'நுந்து கன்றாய்' என்பதற்கு, 'வெறுத்துச் செலுத்தப்பட்ட கன்றைப் போன்று' என்பது பொருள் ஆகும். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை இப்பொருளைத் தமக்குத் தெரிவித்ததாகத் 'தமிழ்த்தாத்தா' உ.வே.சா. தெரிவித்துள்ளார். (மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, *11* ப. *241*)

2. திருப்பள்ளியெழுச்சி

இது பத்துப் பாடல்களால் ஆகியது. இதில் திருப்பெருந் துறையில் உள்ள பெருமான் பள்ளியுணர்த்தப் பெறுகிறான். இப்பாடல்களில் சிவபெருமான் சிறப்புகளை எடுத்துக் கூறி, அவனிடம் காலைப்பொழுது மலர்ந்துவிட்டதனையும் அடியார்கள் காத்திருப்பதனையும் சொல்லி எழுந்தருளுமாறு வேண்டுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதில் தமக்கு இறைவன் முன்பு தன் தீவண்ணத்தையும், திருப்பெருந்துறைக் கோயிலையும், அந்தணக் கோலத்தையும் காட்டி ஆட்கொண்டதனைக் குறிப்பிடுகிறார். இது மாணிக்க வாசகர் தாமான தன்மையில் பாடியதாகும்.

3. திருவேசறவு

இறைவன் தமக்குச் செய்த அருளை நினைந்து நினைந்து நெகிழ்ந்து உருகுகிறார். இரும்பு போன்ற மனத்தைக் கொண்ட தம்மைக் கவர்ந்து எலும்பை உருக்கித் தன் திருவடிகளைக் காட்டிக் கரும்பு போலும் இனிய சுவையைத் தமக்கு வழங்கினான் என்றும் அச்செயல் நரியைப் பெரிய குதிரையாக மாற்றுவது போன்ற அருஞ்செயல் என்றும் கூறுகிறார். அவன் திருவடி கண்டு தாம் உய்ந்ததாகவும், தம்மைப் பிறப்பு இறப்பில் வீழாமல் அவன் காத்து விட்டதாகவும் கூறுகிறார். தமக்கு இறைவன் அருள் செய்தது நாய்க்குப் பொன்னால் ஆகிய தவிசு இட்டது போன்ற செயல் என்று தம் தகுதியின்மையைத் தெரிவித்து நெகிழ்கிறார். பெண்களிடம் விருப்புற்றுக் கிடந்த தம்மை அன்பால் ஆட்கொண்ட தன்மையை வியக்கிறார். தம்மை இவ்வுலக வாழ்க்கையை வெறுக்குமாறு அருள் செய்தான் என்றும் கூறுகிறார். 'இதற்கு நாம் தவம் செய்தோமா? சிவாய நம என்று அறிவுறுத்தப் பெற்றோமோ?' என்று திகைப்புற்று நிற்கிறார்.

" நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுஉள்ளம்புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊன்ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்துஅன்றே வெறுத்திடவே "

(555)

என்னும் பாடல் இறைவன் அருள்பெற்ற அவர் மனநிலையினைத் தெளிவாக உணர்த்துகிறது.

4. திருப் புலம்பல்

இதில் மூன்று பாடல்களே உள்ளன. இதில் பத்துப் பாடல்கள் இருந்திருத்தல் வேண்டும். ஆனால், ஏழு பாடல்கள் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. இப்பகுதியில் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு திருத்தலத்தில் உறையும் பெருமானை நோக்கிப் பாடப்பட்டதாக அமைந்ததாகும். முதற்பாடல் திருவாரூரிலும், இரண்டாம்பாடல் திருப்பெருந்துறையிலும், மூன்றாம் பாடல் திருக்குற்றாலத்திலும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கோயில் கொண்டுள்ள இறைவனைப் பற்றியனவாகும். இதில் இறைவன் திருவடிகளைத் தவிரப் பிற எதனையும் புகழ மாட்டேன் என்றும், அவனைத் தவிரத் தமக்கு உற்ற துணை வேறொன்று இல்லை என்றும், அவன் திருவடிகளுக்கே கன்றின்மேல் தாய்ப்பசு காட்டும் கசிவுபோல் தாமும் கசிந்து உருகுதல் வேண்டும் என்னும் விருப்பம் ஒன்றே தமக்கு இருக்கிறது என்றும் புகல்கிறார்.

"உற்றாரை யான்வேண்டேன்
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத்து அமர்ந்துஉறையும்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துஉருக வேண்டுவனே" (559)

என்னும் பாடல் கற்பவர் நெஞ்சையும் கசிந்துருகச் செய்யும் தன்மை கொண்டதாகும்.

5. திருவார்த்தை

சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களைச் சொல்லி அவற்றை அறிபவரே எங்களுக்குத் தலைவர் என்கிறார். "பெருந்துறையில் எழுந்தருளி அவன் வெளிப்படுத்திய அருளினை அறிபவரும், இடவை என்னும் ஊரில் தோன்றிய பெண்மணிக்குச் செய்த கருணையை அறிபவரும், கடலில் சிறந்த மீன்களுக்காக வலை வீசிய தன்மையை அறிபவரும், முன்பு திருப்பெருந்துறையில் அடியார்களை ஆட்கொண்ட இயல்பினை அறிபவரும், இலங்கையில் வாழ்ந்த மண்டோதரிக்கு அருள்புரிந்த திறம் அறிபவரும், பன்றியாகத் தோன்றிப் பன்றிக் குட்டிகளுக்குப் பால் ஊட்டிய செயலை அறிபவரும், மண்ணில் தோன்றி வேற்றுமைகளை அறுத்து அருள்செய்த பெருமையை அறிபவரும், வலைஞர் மகளாகத் தோன்றிய அழகிய உமா தேவியை மணந்தவர் கோலத்தை அறிபவரும், முன்பு மண்ணில் தோன்றி எங்கள் பாசம் அறும் வகையிலும், மேலான இன்பம் எய்தும் வகையிலும் பெண்கள் தங்கள் வளையல்களை இழக்குமாறு மங்கையர்கள் நிறைந்த மதுரையில் பெருங்கூட்டமாக எழுந்தருளிய வகையினை அறிந்தவரும் எங்கள் தலைவர் ஆவார்" என்கிறார். இறைவன் புகழினைச் சொல்வதால் இதற்குத் திருவார்த்தை என்னும் பெயர் இடப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

6. திருப்படையெழுச்சி

பேரின்ப உலகினை முற்றுகையிடத் தொண்டர்களைப் போர்க்கோலம் கொள்ளுமாறு வேண்டும் வகையில் அமைந்தது இப்பகுதி. இதில் இரு பாடல்களே கிடைத்துள்ளன. மாணிக்க வாசகர் தாமும் அப்படையில் ஒருவராக நின்று மற்றவர்களைப் பார்த்து, ''ஞானத்தையே வாட்படையாகக் கொண்ட நம் தலைவரது நாதப் பறையினை முழக்குங்கள்; குதிரைமீது ஏறும் நம் தலைவர்க்கு வெண்குடை பிடியுங்கள்; திருநீற்றுக் கவசத்தில் புகுந்து கொள்ளுங்கள்; நாம் பேரின்பவுலகினைக் கைக்கொள்வோம்'' என்றும், ''தொண்டர்களே முன்னணிப் படையாகச் செல்லுங்கள்; பத்தர்களே சூழ்ந்து செல்லுங்கள்; வலிமை மிக்க சித்தர்களே, பின்னணியாகச் செல்லுங்கள்; நாம் துன்பப் படைகள் வாராமல் காத்து வானுலகத்தை ஆள்வோம்'' என்றும் கட்டளையிட்டுப் படைகளை எழுமாறு தூண்டுகிறார்.

'' தொண்டர்காள் தூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நாடு ஆள்வோம்நாம் அல்லற்படை வாராமே'' *(616)*

இந்த இரண்டாம் பாட்டில் செல்லீர்,போகீர், உந்தீர் என்னும் சொற்கள் எதிர்மறைப் பொருளில் வாராமல் உடன்பாட்டுப் பொருளில் வந்துள்ளன. அவற்றிற்கு முறையே செல்வீர், போவீர், உந்துவீர்கள் என்பது பொருள் ஆகும். இதனை மூன்றாம் அடியில் வரும் செல்மின்கள் என்னும் உடன்பாட்டு ஏவல் உணர்த்துகிறது.

7. திருவெண்பா

திருவெண்பாவில் பதினொரு பாடல்கள் உள்ளன. இவற்றில் எது மிகைப்பாடல் என்று கண்டறிவது அரிய முயற்சியாக உள்ளது. மற்றப் பத்துப் பாடல்களிலும் இறைவன் படர்க்கையில் குறிக்கப்பட்டிருக்க, 'யாவர்க்கும் மேல்ஆம்' என்னும் ஒரு பாட்டில் மட்டும் 'வைத்தாய்க்கு' என்று முன்னிலையில் குறிக்கப் பட்டுள்ளதால் அப்பாடல் மிகைப் பாடலாக இருக்கலாம். இப் பகுதியில் மாணிக்கவாசகர் திருவருள் பெற்ற நிலையினை உணர்த்துகிறார். தம்முடைய அறியாமையை அகற்றிக் குற்றத் தினைப் போக்கி அன்பினை அமைத்துச் சோதிவடிவில் தம் சிந்தையையே உறையும் ஊராகக் கொண்டு தங்கினான் என்கிறார். இப்பகுதியில் முதற்பாடலில் பெருந்துறைப் பெருமானை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நினைக்காமல் இருந்தபோது இரு வினைகள் அழியாமலும் மெய் உருகாமலும் உடம்பு பொடியாகாமலும் இருந்த நிலையினைத் தெரிவிக்கிறார். அதனைத் தொடர்ந்து வரும் பாடல்களில் அப்பெருமான் தம் நெஞ்சத்தில் பிரியாமல் தங்கினான் என்கிறார். இறுதிப் பாடலில் தமக்கு அருள்புரிந்த திறத்தை அழகுற எடுத்துக் கூறுகிறார். அவர் நெஞ்சில் இறைவன் புகுந்திருந்ததனை,

" இன்பம் பெருக்கி இருள்அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வுஅறுத்துச் சோதியாய் அன்புஅமைத்துச்
சீர்ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊர்ஆகக் கொண்டான் உவந்து " (625)

என்று கூறுகிறார்.

8. பண்டாய நான்மறை

முதற் குறிப்பால் இதற்கு இப்பெயர் அமைந்துள்ளது. இதுவும் குறையாகக் காணப்படும் பகுதியே ஆகும். இதில் ஏழு பாடல்களே உள்ளன. அந்தாதித் தொடையில் அமைந்திருத்தலால் பிற்பகுதியின் மூன்று பாடல்களே காணாமற் போய்விட்டன என்பது தெரிய வருகிறது.

" பண்டாய நான்மறையும் பால்அணுகா மாலயனும்
கண்டாரும் இல்லை கடையேனைத் தொண்டாகக்
கொண்டருளும் கோகழிஎம் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மாறு உரை " (628)

என்பது முதற்பாடல்

இதில் ஆறு பாடல்களில் பெருந்துறை குறிக்கப்படுகிறது. முதற்பாடலில் மட்டும் பெருந்துறை என்பதற்கு மாறாகக் கோகழி என்று குறிக்கப்படுகிறது. இதனால் கோகழி என்பது பெருந் துறையைக் குறிக்கிறது என்பது தெளிவு. ஆனால், ஐந்தாம் பாட்டில். பெருந்துறையும் கோகழியும் குறிக்கப்படுகின்றன. இதனால் பெருந்துறையும் கோகழியும் வேறுவேறு என்பது தெளிவாகிறது. இது குறித்து நீள நினைந்து தெளிவு தந்துள்ளார் அறிஞர் மு. அருணாசலம். பெருந்துறை என்பது ஊரின் பெயர் என்றும் கோகழி என்பது கோயிலின் பெயர் என்றும் விளக்கியுள்ளார். திருக்கோவலூர் என்பது ஊரின் பெயராகவும் இடைக்கழி ஈசர் (இடைக்கழீசர்) என்பது அங்குள்ள பெருமானின் பெயராகவும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வழங்கப்படுவதனை நோக்கின் அவர் கருத்து மிகவும் பொருத்தமாக அமைகிறது. இவ்வாறு கொள்ளும்போது முதற்பாட்டில் வரும் கோகழி என்பது பெருந்துறைக் கோயிலில் உள்ள பெருமானைக் குறிப்பதாக அமைந்து எல்லாப் பாடல்களிலும் பெருந்துறை குறிக்கப்படுதல் சிதையாமல் அமைந்து சிறக்கிறது.

இதில் நெஞ்சை நோக்கியும் பிறரை நோக்கியும் பெருந்துறைப் பெருமானை வாழ்த்தி உய்யும்படி வேண்டுகிறார். ''நெஞ்சே, நம்மை ஆட்கொண்ட அப்பெருமானுக்கு நம்மால் செய்யக் கூடிய கைம்மாறு இல்லை; மருள் கெட அவனை வாழ்த்துவாய்; பெருந்துறையை அடையப் புறப்படுவாய்; அங்குக் கோகழியில் இருப்பவனைக் காண்பாய்; அவனை வாயாரப் பேசுவாய் என்று பணிக்கிறார். பிறரை நோக்கி, ''பெருந்துறையை வாழ்த்துங்கள்; பிறவிக்காடு முதலோடு அழியும் என்றும், அதனை வணங்கு பவர்கள் வாழ்ந்தவர்களும், வினையைப் போக்கிக் கொண்டவர் களும், உலகத்தால் வணங்கப்படுவோரும் ஆவர் என்றும் கூறுகிறார். இறுதிப் பாட்டில், பேச்சுக்குப் பொருளாய் இருப்பவனுடைய மணிபோலும் புகழ்மொழிகளைப் பேசித் தம் பிறவியை அறுத்துக்கொண்டதாகத் தெரிவிக்கிறார்.

9. திருப்படையாட்சி

இறைவன் திருக்காட்சி தந்தால் எல்லா நன்மைகளும் உண்டாகும் என்றும் எவ்விதத் தீமைகளும் அணுகா என்றும் தெரிவிப்பது இது. இதன் தொடர் அமைப்புகள் சில புரிந்து கொள்வதற்கு அரியனவாக உள்ளன. சில தொடர்களுக்கு உரைகாரர்கள் வெவ்வேறு பொருள் கூறியுள்ளனர். அதுவே இப்பகுதி சரியாக விளங்கவில்லை என்பதற்குச் சான்றாகும். திருவாசகத்துக்கு விளக்கம் எழுதியுள்ள பேராசிரியர் அ.ச.ஞா. இப்பகுதி தமக்கு விளங்கவில்லை என்று சான்றாண்மையோடு குறித்திருத்தல் காணலாம். இப்பதிகத்தில் பயின்றுவரும் 'ஆகாதே' என்னும் சொல் அன்றே என்னும் சொற்போன்று 'அல்லவா' என வினவும் குறிப்புடைய இடைச்சொல்லாகும் என்கிறார் அறிஞர் க. வெள்ளை வாரணம். (பன்னிரு திருமுறை வரலாறு, ப.277) மூன்றாவது பாடல் பெண்பேச்சோ என்னும் ஐயம் உண்டாகிறது. இப்பாடல்கள் வெண்டளை பிறழாமல் வந்த பன்னிருசீர் ஆசிரிய விருத்தங்களால் ஆகியன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

10. ஆனந்த மாலை

இதன்கண் ஏழு பாடல்களே காணப்படுகின்றன. தம்மை ஆட்கொண்ட இறைவனை அடையாமல் பிற்பட்டதனை எண்ணி வருந்தித் தம்மைத் தேற்றுமாறு வேண்டுகிறார். இதில், "அடியார்கள் பேரின்ப உலகத்தினை அடைந்தார்கள். கல் போன்ற யான் மட்டும் துன்பக்கடலில் விழுந்தேன். எனக்கு யான் அறியாத பதம் தந்தாய். அதனை அறியாமல் கெட்டேன். பழைய அடியார்களோடு கூடாமல் பிற்பட்டேன். ஒழுக்கம், நோன்பு, அடக்கம், அறிவு எதுவும் இன்றித் தோற்பாவை போல் உணர்ச்சியின்றிச் சுழன்று வீழ்ந்து கிடக்கின்றேன். உன்னைக் கூடுவது எந்நாளோ? உன்னைத் தாயாகக் கருதி உன் தாள் அடைந்தேன். உனக்கு என்மேல் கருணை இல்லையா? இனி யான் உனக்கு வேண்டுவதில்லையோ? எனக்கு அஞ்சேல் என்று ஆறுதல் சொல்பவர் யார்? திகைத்தேன். நீதான் என்னைத் தேற்ற வேண்டும். அப்பா, எனக்கு என்ன செய்வது என்று தெரிய வில்லை'' என்று ஏங்குகிறார்.

இவ்வாறு திருவாசகம் மாணிக்கவாசகரின் ஆன்ம யாத்திரையைத் தெரிவிக்கும் ஆவணமாகத் திகழ்கிறது. அவருடைய ஆளுமையைத் தெரிந்துகொள்ளப் பெரிதும் பயன்படுவது அவரது வாக்காகிய இந்நூலேயாகும்.

திருக்கோவையார்

மாணிக்கவாசகர் இயற்றிய மற்றொரு நூல் திருக்கோவையார். இது நானூறு பாடல்களைக் கொண்டது. இதனைத் திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் குறிப்பர். இதனை மாணிக்கவாசகர் இயற்ற வில்லை என்று கருதியவர்களும் உண்டு. ஆயினும், அக்கருத்து நிலைபெறவில்லை. இது திருவாசகம் போல் சிவபெருமானை நேரடியாகப் பாடாமல், பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடுவதால் அத்தகைய எண்ணம் எழுந்தது போலும்! சங்க இலக்கிய மரபினையொட்டி எழுந்த பிற்கால இலக்கிய வகை கோவை ஆகும். இதில் தலைமகன் ஒருவன் தலைமகள் ஒருத்தியை எதிர்பாராமல் கண்டு, அவள்மேல் காதல் கொண்டு அவளைக் கூடி அவ்வொழுக்கத்தை ஊர் அறியாத வகையில் சில நாள் பாங்கன், தோழி ஆகியோர் உதவியோடு நிகழ்த்துவான். பின் ஊரார் அதனை எப்படியோ அறிய, அந்நிலையில் சிறிது காலம் தலைவியைக் காணாது பிரிந்துறைதல், தலைமகளைத் தன்னுடன் அவள் பெற்றோர் அறியாதவகையில் கொண்டு செல்லுதல்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வரைந்துகோடல் இவற்றில் ஒன்றினை மேற்கொள்வான். அதன்பின் அவர்கள் இல்லறம் தொடங்கும். அவ்வாறு வாழுங் காலத்தில் படிப்பதற்காகவோ, மக்களைக் காத்ததற்காகவோ, தம்முள் மாறுபட்டுப் போரிடும் அரசர் இருவரிடை அமைதியுண்டாக்கு வதற்காகவோ, பகைவனால் அழிந்து தன்னை நாடி வந்த ஒருவனுக்கு உதவுவதற்காகவோ, பொருள் ஈட்டுவதற்காகவோ, பரத்தையிடம் உறவு கொள்வதற்காகவோ பிரிந்து செல்வான். அக்காலத்தில் தலைமகள் வருந்துவாள். அப்பொழுது அவளுக்குத் தோழி உற்ற துணையாக அமைந்து ஆறுதல் கூறுவாள். பின்னர்ப் பிரிந்த தலைமகன் திரும்பி வந்து தலை மகளைக் கூடுவான். இந்நிகழ்வுகள் பாட்டுடைத்தலைவன் நாட்டில் நிகழ்வதாகக் காட்டி அவர் உயர்வினையும் பெருமையினையும் விளக்குவதே அனைத்துக் கோவை நூல்களின் நோக்கமாகும். திருச்சிற்றம்பலக் கோவையார் தில்லையில் உள்ள கூத்தப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. இதில் அவன் பலபடப் பேசப்படுகிறான்.

இதன் இடம்பெற்றுள்ள பாடற் பகுதிகள் சில திருவாசகத்தை நினைவூட்டுகின்றன.

" இமைப்பொழுதும் என்னெஞ்சில்நீங்காதான் தாள்வாழ்க " *(1:2)*

என்னும் சிவபுராணக் கருத்து,

" என் நெஞ்சகத்தே
பயில்எனப் பேர்ந்துஅறி யாதவன் " *(224)*

என்றும்

" பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதுஆர் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே " *(163)*

என்னும் திருவெம்பாவைப் பாடலின் கருத்து

" விண்ணுக்கு மேல்வியன் பாதலக்
கீழ்விரி நீர்உடுத்த
மண்ணுக்கு நாப்பண் நயந்து தென்
தில்லைநின் றோன் " *(162)*

என்றும்

" திருமாலும் பன்றியாய்ச் சென்று
உணராத் திருவடியை
உருநாம் அறியஓர்அந்தணனாய்
ஆண்டுகொண்டான் " *(235)*

என்னும் திருத்தெள்ளேணப் பாடற்கருத்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

"அடிச்சந்த மால்கண் டிலாதன
காட்டிவந்து ஆண்டுகொண்டுஎன்
முடிச்சந்த மாமலர் ஆக்கும் முன்னோன்" (78)

என்றும்,

"என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான் இம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்த கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடி" (207)

என்னும் திருப்பொற்சுண்ணப் பாடற்கருத்து

"தவளத்த நீறுஅணி யும்தடந்
தோளண்ணல் தன்னொருபால்
அவள்அத்தன் ஆம்மகன் ஆம்தில்லை யான்" (112)

என்றும் திருக்கோவையாரில் இடம்பெற்றுள்ளன.

திருக்கோவையார் சிறந்த இலக்கியமாகத் திகழ்வது. சான்றாகச் சில பாடல்களைக் காணலாம். தலைமகளோடு இன்பம் துய்த்து மீளும் தலைமகன் உடல் மெலிவு கண்டு அதற்குக் காரணம் வினவுகிறான் தோழன். "தேக்கிய மிக்க நீரையுடைய தில்லைச் சிற்றம்பலத்திலும், என் நெஞ்சத்தும் தங்குபவன் உயர்ந்த மதிலால் சூழப்பட்ட கூடலின்கண் இருந்து ஆராய்ந்த ஒள்ளிய இனிய தமிழின் அகமும் புறமுமாகிய துறைகளில் புகுந்தனையோ? அன்றி ஏழிசையினைக் கற்க முற்பட்டனையோ? தலைவனே, மலைபோலும் உன் தோள்கள் எதனால் மெலிவுற்றன? கூறுவாய்" என்று வினவுகிறான் பாங்கன். இது பலரும் அறிந்த சிறந்த பாடல்.

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்தும்என் சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின்
ஆய்ந்தஒண் தீம்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி
ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்குஎன்கொ
லாம்புகுந்து எய்தியதே" (20)

தலைமகன் தலைமகளின் கண்களின் அழகினை விரும்பிப் போற்றுகிறான். அதில் தலைமகள் மீது அவன் கொண்ட ஈடுபாடு மட்டுமன்றிச் சிவன்மீது கொண்ட ஈடுபாடும் புலப்படுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

''அப்பெரிய கண்கள் சிவன் மீது யான் வைத்த அன்புபோல அகன்றவை; அவனால் வாங்கப்பட்ட கொடிய பாசம்போலே கருமை உடையன; அவனுடைய தில்லையின் ஒளியைப் போன்று ஒளி பெற்றுள்ளன; அவனுடைய சிவந்த திருப்புயங்களிலே சாத்துகின்ற திருநீறு போலே வெண்மையுடையன; அவன் திருவடி குறித்த நாம் சொல்லும் புகழ்மொழிகளைப் போலே நீளம் உடையன''.

" ஈசற்(கு) யான்வைத்த அன்பின்
அகன்றுஅவன் வாங்கியஎன்
பாசத்தின் கார்என்று அவன்தில்லை
இன்ஒளி போன்றுஅவன்தோள்
பூசுஇத் திருநீறு எனவெளுத்து
ஆங்குஅவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யின்பெரு
நீளம் பெருங்கண்களே " *(109)*

என்கிறான் தலைமகன்.

செவிலித்தாய் உடன்போக்குச் சென்ற தன் மகளைத் தேடிச் சுரத்திடைச் செல்கிறாள். அங்கு விட்டாருக்குத் தெரியாமல் புறப்பட்ட ஒரு தலைமகளும் அவளை அழைத்துக் கொண்டு புறப்பட்ட ஒரு தலைமகனும் வருகிறார்கள். அவர்களைக் கண்ட செவிலித்தாய், ''உங்களைக் கண்டு என்மகளும் அவள் உள்ளம் கவர்ந்தவனும் தான் வருகிறார்கள் என்று நினைத்து மகிழ்ந்தேன்; அது கிடக்கட்டும், இவ்வாறு உங்களைப் போன்ற ஒழுக்கத்தினராய்ப் போகின்ற இருவரை நீங்கள் கண்டீர்களா?'' என்று வினவுகிறாள். அதற்குத் தலைமகன் விடை தருகிறான். அவன் பேச்சு அவன் பண்புடைமையைக் காட்டுவதாக அமைகிறது. அவன் தன் காதலியை நோக்கி, ''தூண்டப்படாமல் இயல்பாகவே ஒளி வீசும் விளக்குப் போன்றவளே, புலியூரில் என்னை ஆட்கொண்டவனது கிட்டுதற்கரிய மலையில், சிங்கம் போன்றவனைக் கண்டேன்; அவனுக்குப் பக்கத்தில் சென்ற வடிவம் எத்தன்மையது? கூறுவாய்'' என்கிறான்.

" மீண்டார் எனஉவந் தேன்கண்டு
நும்மைஉம் மேதகவே
பூண்டார் இருவர்முன் போயின
ரேபுலி யூர்எனைநின்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஆண்டான் அருவரை ஆளியன்
னானைக்கண் டேன்அயலே
தூண்டா விளக்குஅனை யாய்என்னை
யோஅன்னை சொல்லியதே '' (244)

இப்பாடல் தமிழ்ப்பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்வது. தன் காதலியைத் தவிர மற்றொரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்காத பண்பாளனாகிய தலைமகன் சிறந்த ஆடவனுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைகிறான்.

இளங்காதல் இணையினைச் சிவனும் பார்வதியுமாகக் காணும் பத்திமை நிறைந்த மக்களைக் காட்டும் வகையில் அமைந்த பாடல் ஒன்று இதில் உள்ளது. செவிலித்தாய் உடன்போக்கு நிகழ்த்திய தன் மகளைத் தேடிக்கொண்டு செல்கிறாள். வழியில் வருபவர்களைக் கண்டு, தன் மகளையும் அவள் விரும்பி ஏற்ற காளையையும் அவர்கள் கண்டதுண்டோ என்று கேட்கிறாள். அவர்கள் "தாயே, நீ சொன்ன கருத்துடையவர்களைக் குன்றத்தில் கண்டோம்; அவன் காலில் ஒளிவிடும் கழல் அணிந்திருந்தான்; அவள் காலில் மின்னும் சிலம்பு பூண்டிருந்தாள். அவன் வெள்ளைப்பட்டு உடுத்திருந்தான்; அவள் செம்பட்டுப் புனைந்திருந்தாள். அவ்விருவரும் தம்முள் இயைந்து சென்றனர். அதனால் அவ்விருவரும் ஒரு வடிவம் போலக் காட்சியளித்தனர். அவ்விடிவினை, உமாதேவியுடன் ஒன்றாகக் காட்சிதரும் புலியூரன் என்றே கருதினோம். அவ்வழகைத் தொழக் கருதினோம். ஆகா! அஃது எத்தகைய பெரும் பேறு! அது சொல்லக்கூடிய ஒன்று அன்று'' என்கிறார்கள். தலைமகனும் தலைமகளும் இணைந்து செல்லும் காட்சியில் வழிச்செல்வோர் மங்கைபங்கனைக் காணும் காட்சி அழகான ஒன்று. மக்களின் பத்திமைச் சிறப்பைக் காட்டுவதுமாகும். அப்பாடல் வருமாறு:

" மின்தொத்து இடுகழல் நூபுரம்
வெள்ளைசெம் பட்டுமின்ன
ஒன்றுஒத் திடஉடை யாளொடுஒன்று
ஆம்புலி யூரன்என்றே
நன்றுஒத்து எழிலைத் தொழ உற்
றனம்என்னது ஓர்நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனம்அன்னை
நீசொன்ன கொள்கையரே " (246)

திருக்கோவையார் "காமஞ் சான்ற ஞானப் பனுவல்'' என்று போற்றப்பெறுகிறது. திருமுறைகளுக்கு உரைகூறுதல் பாவம் என்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கருதப்பட்ட முற்காலத்தில் இந்நூலுக்கு மட்டும் பேராசிரியர் என்னும் உரையாசிரியர் ஒருவராலும் அவருக்கு முற்பட்ட பெயர் தெரியாத ஒருவராலும் உரை காணப்பட்டுள்ளமை வியப்பாக உள்ளது. இதனை ஞானப் பனுவல் என்பதற்குக் காரணம் இதில் காமப்பொருள் கிளவித்தலைவன் வாயிலாக விளக்கப்பட்டாலும், ஞானம் பாட்டுடைத் தலைவன் பற்றிய புனைந்துரை வாயிலாக விளக்கப்படுவதே ஆகும். ஆனால், இதனைப் பேரின்ப நூலாகக் கொண்டு சித்தாந்தப் பார்வையில் இதற்குத் 'திருக்கோவையார் உண்மை விளக்கம்' என்னும் உரையும் தோன்றியுள்ளது. தருமை ஆதீனப் புலவர் முத்து சு.மாணிக்கவாசகனார், இத்திருக் கோவையாரின் பொருளும் இதற்குப் பின் தோன்றிய துகளறு போதம் என்னும் சாத்திர நூலின் பொருளும் ஒன்று என்பார். (திருக்கோவையார், திருப்பனந்தாள் பதிப்பு, முன்னுரை (ப. xi)



சீரார் பெருந்துறைச் செல்வன் உறைகோயில்

இவ்வாறு சாத்திரப் போக்கில் உரை கூறுவது பொருத்தமா என்பது சிந்தனைக்குரியது. எல்லாக் கோவைகளும் பெரும்பாலும் களவு கற்பு என்னும் கைகோள்களையும் அவற்றிற்குரிய துறைகளையும் பாடுவனவாய் ஒரே மாதிரி அமைப்பில் திகழ்கின்றன. இங்குச் சொல்லப்படும் சாத்திர விளக்கங்களை ஏனைய கோவை நூல்களுக்கும் பொருத்திக் கூறலாம். இதனை மற்றொரு தருமை ஆதீனப் புலவரும் சிறந்த சைவசித்தாந்தப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புலவருமான வித்துவான் அருணை வடிவேலு முதலியார் அவர்களே தம்முடைய திருக்கோவையார் உரையின் தொடக்கத்தில் தெரிவித்தல் காணலாம். ஞானப்பனுவல் என்பதற்கு ஆழ்ந்து பொருள் கண்டதன் விளைவு ஆகும் இது.

திறனாய்வாளர்கள் ஓமர் காப்பியத்தில் ஓமருக்குத் தெரிந்ததைவிட அதிகமாகத் தெரிந்துகொள்கிறார்கள் என்கிறார் ஜொனாதன் ஸ்விப்டு (As learned commentators view in Homer more than Homer knew - Jonathan Swift, `On Poetry')

இக்கூற்றுத் திருக்கோவையாருக்குச் சித்தாந்தப் போக்கில் உரைகாண்பவருக்கும் மிகவும் பொருந்தும் வகையில் உள்ளது. அவர்களுக்குத் திருக்கோவையாரில் மாணிக்கவாசகருக்குத் தெரிந்ததைவிட அதிகமாகத் தெரிகிறது எனலாம். திருக்கோவை யாரில் மாணிக்கவாசகர் வாழ்க்கையை அறிந்துகொள்ளத்தக்க நேரடி யான குறிப்புகள் ஏதும் இல்லை. அவர் தில்லையில் ஆடும் கூத்தப் பெருமான்மீது ஆராக் காதல் கொண்டவர் என்பது அவர் அப்பெருமானைக் குறிப்பிடும் இடங்களிலிருந்து விளங்குகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

4. மாணிக்கவாசகரின் ஆளுமை

மாணிக்கவாசகரின் பண்பு நலன்களையும், எண்ண வோட்டத்தினையும் அறிந்து கொள்ள உதவுவன அவர் படைத்துள்ள நூல்களே ஆகும். அவையே அடிப்படை ஆதாரங்கள்; உற்ற துணை. அவருடைய இரு நூல்களினுள்ளும் திருவாசகமே பெருந்துணையாக அமைந்துள்ளது. திருவாசகத்தில் சிவ பெருமானும் அவன் திருவருளுக்கு ஏங்கி அழுத மாணிக்க வாசகருமே பாடுபொருளாக அமைந்துள்ளனர் எனலாம். திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் பற்றி நேரடியாக அறிந்து கொள்ள இயலாது என்றாலும், அதன் ஆசிரியர் என்ற முறையில் அவருடைய உள்ளத்தை ஓரளவு ஊகித்தறியலாம்.

மாணிக்கவாசகர் சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்தவர். அவர் பல தலங்களின் வரலாறுகளை அறிந்தவர். அவருடைய புராண அறிவு கற்பார்க்கு மலைப்பினை ஊட்டுகிறது. அவர் நெடுங்காலம் கல்வியில் ஆரா வேட்கையுடையவராக இருந்துள்ளார். 'கற்பனவும் இனி அமையும்' என்று குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தனிடம் கூறுவதால் இது புலனாகிறது. அவர் அமைச்சராக இருந்தார் என்பது இதனை உறுதிப்படுத்துகிறது. அமைச்சர்க்குரிய முதன்மைத் தகுதிகளில் அறிவுடையனாக இருத்தலும் ஒன்று. திருவும் அறிவும் ஒருங்கே பெற்று அமைச்சராகச் சிறக்க வாழ்ந்தவர் எவ்வாறு அடியவராக மாறினார். அந்த மாற்றத்திற்கு என்ன காரணம் என்பது சிந்தனைக்குரியது.

பிறப்பு இறப்பு என்னும் அச்சம்

அருளாளர்கள் பலர் உலக நிலையாமையை உணர்ந்து அமைதி தேடித் தத்துவ ஆராய்ச்சியில் தலைப்பட்டுள்ளார்கள். மரணம், பிணி, மூப்பு இவற்றைக் கண்டு அதிர்ந்து புத்தர் மெய்ப் பொருளை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நாடித் தவம் மேற்கொண்டுள்ளார். தம் பெற்றோர், தம் தமக்கைக்குக் கணவராக வர இருந்தவர் ஆகியோர் இறப்பு மருள்நீக்கியாரைத் தருமசேனராகவும் பின்னர்த் திருநாவுக்கரசராகவும் மாற்றியுள்ளது. இதுபோல் ஏதாவது மாணிக்கவாசகர் வாழ்வில் நிகழ்ந்ததா? அவ்வாறு நிகழ்ந்ததற்கான குறிப்பு எதுவும் அவருடைய நூலில் காணப்படவில்லை. அவருடைய அமைதிக் குளத்தில் எது கல்லை எறிந்து தவிப்பு அலைகளை உண்டாக்கிற்று?

உயர்ந்தோர், தாழ்ந்தோர், கற்றோர், கல்லாதவர், ஆண், பெண் என்று எல்லாருக்கும் இறப்பைப் பற்றிய எண்ணம் தலைதூக்குகிறது. அது கோட்டைச்சுவரில் பறவையின் எச்சமாக விழுந்த விதை பெரிய ஆலமரமாக முளைத்துக் கோட்டையினையே தகர்ப்பது போல் மனிதனின் ஆணவம், வலிமை முதலிய அனைத்தினையும் குலையச் செய்கிறது.

" கறங்குஓலை போல்வதுஓர்
காயப்பிறப்போடு இறப்பென்னும்
அறப்பாவம் என்றுஇரண்டு
அச்சம்தவிர்த்துஎன்னை ஆண்டுகொண்டான் " *(242)*

என்று பிறப்பு இறப்புகளை அஞ்சத்தக்க பொருளாகக் குறிக்கிறார்.

" மரணம் பிறப்புஎன்ற
இவைஇரண்டின் மயக்குஅறுத்த
கருணைக்கடல் " *(223)*

என்று இறைவனைப் போற்றுகிறார்.

"யான் பிறப்புக்கு அஞ்சமாட்டேன்; இறப்பைத் தடுக்க எதுவும் செய்யேன்; உன் அருளைப் பெறும் நாள் என்று என்றே வருந்துவேன்" என்கிறார்.

" யான் ஏதும் பிறப்பு அஞ்சேன்
இறப்பதனுக்கு என்கடவேன்
மானேஉன் அருள்பெறும்நாள்
என்றுஎன்றே வருந்துவனே " *(16)*

என்பதில் அவை வருத்தம் தருவன என்பதும் அவற்றை வருத்தாமல் போக்கும் ஆற்றல் அவன் அருளுக்கே உண்டு என்பதும் உட்பொருளாய் அமைந்துள்ளன. மரண பயத்தைப் போக்கிக் கொள்வதற்காக இறைவன் திருவடிகளை அருளாளர்கள் பற்றிக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொண்டுள்ளார்கள். எருமை வாகனத்தில் எமன் தம்மை நோக்கி வரும்போது எழில் மயில்வாகனத்தில் முருகன் எழுந்தருளித் தம் பயத்தைப் போக்க வேண்டும் என்பது அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் வைக்கும் முதன்மை வேண்டுகோளாக அமைந்திருத்தலைத் திருப்புகழிலும் அவர்தம் பிற நூல்களிலும் காணலாம். கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காக என்று மார்க்கண்டேயன் வரலாற்றை நினைவூட்டித் தில்லைக் கூத்தனிடம் ஆற்றுப்படுத்துகிறார் திருநாவுக்கரசர். இவற்றால் இறப்பைப் பற்றிய அச்சம் அருளாளர்களை இறைநெறிக்குத் திருப்பியுள்ளமை அறியலாம். அச்சவுணர்ச்சி, குறிப்பாக மரணம் பற்றிய அச்சம் சமயவுலகில் கருதத்தக்க இடத்தினைப் பெற்றிருக்கிறது.

மாணிக்கவாசகருக்கும் அவ்வெண்ணமே அரசியல் துறையிலிருந்து அருளியல் துறைக்கு மாறுவதற்குக் காரணமாக அமைந்தது. அவர் இறைவன் திருவடிகளில் அமைதி தேட விழைந்தார். அவர் இறையன்பரானார். இந்நிலையினையே வள்ளற்பெருமான் அன்புருவம் என்று குறிக்கிறார். அவ்வச்சம் திருப்பெருந்துறையில் ஆசிரியனாக வந்த இறைவனால் அகற்றப்பட்டது. அவர் பிறப்பு இறப்பைப் போக்கி ஆனந்தம் நல்க வல்லவன் சிவபெருமானே என்று குருவருளால் அவர் தெளிந்தார். அவர் திருப்பெருந்துறைக் கோயிலினுள்ளே குடிகொண்டிருந்த மூர்த்தத்தில் இறைவன் திருக்கோலத்தினைக் கண்டார். அவர் கண்ணால் கண்டது அங்குக் கோயில் கண்ட இறைவன் திருமூர்த்தம்; அகத்தால் உணர்ந்தது இறைவன் திருக்காட்சி. ஞானாசிரியன் உபதேசத்தால் அவருக்கு அவ்வனுபவம் உண்டாயிற்று. அது மின்னல் போன்று தோன்றி மறைந்த அனுபவம் ஆதல் வேண்டும். அவ்வனுபவ வெள்ளம் திருஅண்டப் பகுதியின் இறுதியில் பொங்கி வழிவதனைக் காணலாம். அவருக்கு மட்டுமன்றி இன்னும் பலருக்கும் அவ்வாசிரியன் இறைநெறியை உணர்த்தினான். இதனைக் ''குருபரனாக வந்து அருளிய பெருமையினைத் தாழ்வானதாகக் கருதாமல் இறைவன் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றி நைந்து உருகிச் சாயாத அன்பினை நாள்தோறும் பெருகச் செய்து நிற்பவர்க்குத் தாயாக நின்று வளர்த்தவனே போற்றி'' (3;75-87) என்று போற்றித் திரு அகவலின் முதல் போற்றியில் குறித்துள்ளார்.

அந்நிலையில் அவருக்கு இவ்வுலக வாழ்க்கையில் பற்று நீங்கியது. இவ்வுடல் நீங்கி இறைவன் திருவடியில் இன்பம் காணத் துடித்தார். அவருக்கு இறைநெறியை உணர்த்திய ஞானாசிரியன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவரை விட்டுத் தம் மாணாக்கரோடு நீங்கினார். அதனால் அவர் மீண்டும் இறையனுபவத்திற்காக ஏங்கினார். அவ் ஏக்கத்தினைத் திருவாசகத்தின் பெரும்பாலான பாடல்களில் காணலாம்.

பணிவின் எல்லை

அவர் தமக்குத் திருக்காட்சி நல்கிய சிவபெருமானை இடையறாது நினைக்காமல் உலகியலிலும் சிற்றின்பத்திலும் திரும்பும் தம்மையும் தம் நெஞ்சையும் இகழ்ந்துகொண்டார். சிவபெருமானின் எல்லையற்ற பெருமைகளையும் தம் சிறுமைகளையும் எண்ணி எண்ணிக் கரைந்தார். அவருக்கு இறைவன் அறப்பெரியவன் என்றும் தாம் மிகத் தாழ்ந்தவன் என்றும் தெளிவு பிறந்தது. தம்மை,

அவா வெள்ளக் கள்வனேன்	(28)
அறவையேன்	(541)
கடியன்	(233)
கடையவன்	(105)
கலதி	(233)
பேதையேன்	(82)
பேயேன்	(226)
பொய்ம்மையேன்	(77)
மூர்க்கனேன்	(83)
வஞ்சனேன்	(77)
வஞ்சகப் பெரும் புலையனேன்	(100)
வம்பனேன்	(449)
வன்னெஞ்சக் கள்வன்	(225)
வெறுவியன்	(482)

போன்ற சொற்களால் மிகவும் இழிந்தவன் என்று குறிக்கிறார். தம் நெஞ்சம் வன்மையானது என்பதனை,

நெஞ்சம் கல்ஆம்	(25)
வன்பராய் முருடு ஒக்கும் என் சிந்தை	(401)
திணி ஆர் மூங்கில் அனையேன்	(93)
திணி ஆர் மூங்கில் சிந்தையேன்	(492)
இரும்பின் பாவை அனைய நான்	(26)

என்ற சொற்களால் தெரிவிக்கிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாணிக்கவாசகர் அங்கங்கே இறைவன் பெருமையோடு தம் சிறுமையை உறழ்ந்து காட்டி அவன் எவ்வளவு உயர்ந்தவன் என்பதனையும் தாம் எவ்வளவு தாழ்ந்தவன் என்பதனையும் காட்டுகிறார். உலகத்தில் உயர்ந்த பொருளாகத் தாயையும் இழிந்த பொருளாக நாயையும் கண்டார். தாய் தன்னலம் இல்லாமல் தன் குழந்தைக்காகத் தன் இன்பங்களை இழந்து பாலூட்டி வளர்க்கிறாள். அவளினும் அன்பிற் சிறந்தவர் உலகத்தில் இல்லை. தாயோடு இறைவனை ஒப்பிட்டுப் பார்த்தார். அவன் கருணை பல மடங்கு உயர்ந்ததாக இருந்தது. உலகத்தில் இழிந்த விலங்கு நாய். அது இழிந்த மலத்தினை உண்கிறது; திறந்து கிடக்கும் வாசல் தோறும் நுழைகிறது. தனக்கு உரிமை இல்லாப் பொருளைக் கவர்ந்து கொண்டு ஓடுகிறது. அதனால் அடிபட்டுத் துன்புறுகிறது. குறிக்கோள் இல்லாமல் பரபரப்பாக ஓடுவதும் நிற்பதுமாகப் பொழுதைக் கழிக்கிறது. நாய்க்கு 'நிற்க நேரமில்லை, செய்ய வேலையும் இல்லை' என்பது பழமொழி. விலங்குகளிலேயே நாய் இன்பத்திற்காக மிகவும் அலைகிறது. ஒரு பெண்நாயைப் பல ஆண்நாய்கள் துரத்துவதும் பலரும் அறிய நாணமின்றிக் கண்ட இடங்களில் கூடி இன்புறுவதும் அவற்றினிடம் காணப்படும் இயல்பு. மாணிக்கவாசகர் தம்மிடம் அந்த நாயின் இயல்புகள் அதிகமாக இருப்பதாகக் கருதுகிறார். அறிவோடு பிறந்தும் தாம் அவ்வியல்புகளைப் பெற்றிருப்பதால் தம்மை நாயினும் கீழானவனாகக் கருதுகிறார். இறைவனைப் பல இடங்களில் தாயினும் சிறந்தவனாகவும் தம்மை நாயினும் இழிந்தவனாகவும் குறிப்பிடுகிறார். மாணிக்கவாசகர் தம் பெயருக்கு மாற்றுப் பெயராக (பரியாயப் பெயர்) நாய் என்பதனைக் கையாளுகிறாரோ என்று எண்ணும் வகையில் பல இடங்களில் தம்மை நாய் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்.

நாயினேன்	*(2:127)*
நாயேன்	*(3:164)*
நாய்அடியேன்	*(20)*
அடிநாயேன்	*(38)*
பொல்லாநாய்	*(55)*
சிறுநாயேன்	*(56)*
ஊர்நாயின் கடையானேன்	*(60)*
ஏண்நாண் இல்லா நாயினேன்	*(88)*
கடைப்பட்ட நாயேன்	*(179)*
புலைநாயேன்	*(490)*
புழுத்து அலை நாய்	*(577)*

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்று அடைமொழி கொடுத்துத் தம்மை நாய்களிலும் இழிந்த நாயாகக் குறிப்பிடுகிறார். அவருக்கு அப்பொழுதும் தம்மை உயர்ந்தவனாகக் கருதுவதாகவே தோன்றியது. அதனால்,

" நாயிற்கடை ஆம் நாயேனை " (503)

" நாயிற்கடையாய்க் கிடந்த அடியேன் " (1:60)

என்று நாயைவிடத் தாழ்ந்தவன் என்றார். இவையெல்லாம் மாணிக்கவாசகரின் பணிவுக்குச் சான்றுகளாக அமைகின்றன.

அவர் தாம் கடைத்தேறுவதற்கு ஒரே வழி சிவன் கழலடிகளை நிரந்தரமாக அடைவதே என்று தெளிந்தார். தாம் பல்வேறு பிறப்புகளில் பிறந்து இளைத்ததாகத் தெரிவிக்கிறார். புல்லாகவும் பூடாகவும் புழுவாகவும் மரமாகவும் பலவேறு விலங்குகளாகவும் பறவைகளாகவும் பாம்பாகவும் பேதை மனிதராகவும் பேயாகவும் கணங்களாகவும் வலிய அசுரராகவும் முனிவராகவும் தேவராகவும் அமைந்துள்ள இயங்காப் பிறப்பு, இயங்கும் பிறப்பு என்னும் எல்லாப் பிறப்புகளிலும் பிறந்து இளைத்ததாகக் கூறுகிறார்.

" புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந் திளைத்தேன்" (1:26-31)

என்கிறார்.

இதில் எல்லாப் பதிப்புகளிலும் 'கல்லாய் மனிதராய்' என்றே காணப்படுகிறது. இதன் பொருத்தத்தை ஆராய்வது அறிஞர்கள் கடன். கல் ஒரு பிறப்பாகுமா? தொல்காப்பியர் தொடுவுணர்ச்சியை மட்டும் உடைய மரத்தை ஓரறிவுடைய உயிர் என்றும் ஐம்புல அறிவுகளோடு மனவுணர்ச்சியும் உடைய மனிதர்களை ஆறறிவுயிர் என்றும் கூறியுள்ளார். உயிர் என்று கொள்வதற்குக் குறைந்தது தொடுவுணர்ச்சியாவது இருத்தல் வேண்டும். கல்லுக்கு உணர்ச்சியுண்டா? கல் அறுவகை உயிர்களில் எப்பிரிவில் அடங்கும்? உணர்ச்சியற்றவனைக் கல் என்று சொல்வதனை உலக வழக்கிலும் காணலாம். இறைவனை நினைந்து உருகாத தம் நெஞ்சத்தை மாணிக்கவாசகரே கல் என்று குறித்துள்ளதைக் காணலாம். "நெஞ்சம் கல்லாம்" (25) என்று குறித்தல் கருதத் தக்கது. மேலும் மனிதப்பிறவி இளைப்புக்கு மட்டும்தான் காரணமாக அமையுமா? மனிதனாய்ப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிறந்தால் உய்வுக்கு வழியில்லையா? மாணிக்கவாசகரும் மனிதப்பிறவியில் பிறந்துதானே இறைவன் திருவடியை அடைந்தார். திருநாவுக்கரசரும் "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்று வேண்டுவது மனிதப்பிறவி உய்வுக்கு வழிகாட்டுவது என்பதை அறிவிக்கவில்லையா? நாயன்மார்கள் எல்லாம் மனிதராகப் பிறந்து தானே இறைவன் திருவடியை அடைந்துள்ளனர். இவற்றையெல்லாம் சிந்தித்தால், மனிதப் பிறப்பு இளைப்புக்கே உரியதன்று; உய்வுக்கும் உரியது என்பது விளங்கும். "இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற இடம் என்றும் மண்ணுலகில் போய்ப் பிறவாமல் தாங்கள் நாள்களை வீணே கழிப்பதாகவும் திருமாலும் நான்முகனும் பேசிக்கொள்வதாக மாணிக்கவாசகரே திருப்பள்ளி யெழுச்சியில் தெரிவித்துள்ளார் **(377).** அசுரராகிப் பிறந்து இறைவன் திருவடியை நினைந்து உய்வு பெற்றோர் உண்டு. அதனால்தான் அசுரராய்ப் பிறந்து என்று கூறாமல் வல்லசுரர் என்று அடை கொடுத்துக் குறித்துள்ளார்.

" கல்லா மனத்தேன் " (60)
" கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேன் " (179)
" கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நாயேன் " (477)

என்று வரும் இடங்களால் இறைவனை உணராத அறிவற்ற நலையே இளைப்புக்குரியது என்பது உணர்த்தப்படுகிறது.

" ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்து இறந்து எய்த்தேன் " (188)

என்று வரும் திருவம்மானைக்கு, மதம் பிடித்த யானையாய்ப் புல்லிய புழுவாய்க் கல்லாத மனிதராய் இறைவனை விழையாமல் பிற பயன்களை நாடிய தேவராய்ப் பிறந்து இறை யுணர்ச்சியில்லாமல் இளைத்தேன் என்று பொருள் காண்பதே தக்கதாகும். மேலும் அப்பிறவிகளில் பிறந்த உயிரினங்களில் சில இறைவழிபாட்டால் உய்ந்திருத்தலைப் புராணங்கள் கூறுகின்றன. யானையும் சிலந்தியும் வழிபட்டு மேன்மையடைந்தன என்று தல புராணங்கள் சில தெரிவிக்கின்றன. அவை அரிதாக நிகழ்வனவாகும். 'கல்லா மனிதாய்' என்பது ஏடெழுதுவோரால் தவறாகக் கருத்தின்றிக் கல்லாய் மனிதராய் என்று எழுதப்பட்டுள்ளது. ஆதலால், 'கல்லா மனிதராய்' என்பதே திருத்தமான பாடம் ஆகும். இது திருவாசகத்தைத் திருத்துவது ஆகாது. ஏடெழுதுவோர் செய்த பிழையைத் திருத்துவது ஆகும். இது போன்ற திருத்தங்கள் சிலவற்றை மகாவித்துவான் அருணை வடிவேலு முதலியார் தம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உரையில் அங்கங்கே காட்டியுள்ளார். 'கொள்ளுங் கில்லெனை அன்பரிற் கூய்ப்பணி' என்பது 'கொள்ளுங் கொல்லென அன்பரிற் கூய்ப்பணி' (50) என்றும், 'வாணிலாப் பொருளே' (48) என்பது 'வாணிலாம் பொருளே' என்றும், 'ஏகநின்க மூலிணைய லாதி லேன்என் எம்பிரான்' (76) என்பது 'ஏக நின்க மூல்லி ணைய லாதி லேன்என் எம்பிரான்' என்றும் இருத்தல் வேண்டும் என்று காட்டியுள்ளமை கருதற்குரியது.

பிரிவுத் துன்பம்

இவ்வாறு பிறந்து பிறந்து இளைக்கும் தம்மைப் பெருந்துறைப் பெருமான் ஆட்கொண்ட நிலையில், அவனை அடையாமல் இவ்வுலகில் பிரிந்துறையும் வாழ்வை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனிடம், தமக்கு அவன்பால் அன்பு நிரந்தரமாகச் செல்லவேண்டும் என்று வேண்டுகிறார் (11). அவனைப் பிரிந்த தாம் தீயில் விழுந்தோ மலையிலிருந்து உருண்டோ கடலில் குதித்தோ மாண்டிருக்கவேண்டும் என்கிறார். அவ்வாறு மாயாமல் இருப்பதற்காகத் தம்மை நொந்து கொள்கிறார்.

> " தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்
> செழுங்கடல் புகுவேனே " (43)

என்பது அவர் வாக்கு.

இந்த எண்ணம் அவருக்குத் தோன்றுவதற்குக் காரணம் திருப்பெருந்துறையில் தம்மைத் தில்லையில் எழுந்தருளுமாறு பணித்து இறைவன் தன்னுடன் இருந்த அடியார்களோடு மறைந்தான். அப்பொழுது அங்கு இல்லாமல் பிற்பட்டு வந்தோர் சிலர் பிரிவாற்றாமை தாங்காமல் தங்களை முடித்துக் கொண்டனர். இதனை,

> " எய்தவந் திலாதார் எரியில் பாயவும்
> மாலது வாகி மயக்கம் எய்தியும்
> பூதலம் அதனில் புரண்டுவீழ்ந்து அலறியும்
> கால்விசைத்து ஓடிக் கடல்புக மண்டி
> நாத நாத என்றுஅழுது அரற்றிப்
> பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
> பதஞ்சலிக்கு அருளிய பரம நா டகஎன்று
> இதம்சலிப்பு எய்தநின்று ஏங்கினர் ஏங்கவும்...
> இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
> பொலிதரு புலியூர்ப் புக்குஇனிது அருளினன் " (2:132-145)

என்று தெரிவித்துள்ளார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இதில் 'பாதம் எய்தினர் பாதம் எய்தவும்' என்னும் அடிக்கு உரைகாரர் எல்லாரும் இறைவன் திருப்பாதத்தை அடைந்தவர் எல்லாம் அதனை அடையவும் என்று உரை எழுதியுள்ளனர். இங்கு முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் இறைவனொடு கூடுதற்குரிய காலத்தில் வந்து சேராமல் காலம் தாழ்த்து வந்தவர் அடைந்த நிலை கூறப்பட்டுள்ளது. முதலில் சிலர் எரியில் பாய்ந்து இறந்தமையும் இறுதியில் சிலர் இதயம் சலிப்புற்று ஏங்கி நின்றமையும் குறிக்கப்படுகின்றன. இடையில், 'பாதம் எய்தினர் பாதம் எய்தவும்' என்னும் அடி காணப்படுகிறது. இதற்கு இறைவன் பாதத்தை அடைந்தவர்கள் பாதத்தை அடைந்தனர் என்பது பொருளாகக் கூறப்பட்டுள்ளது. இடையில் எய்த வந்திலாத சிலர் அவன் பாதத்தை வணங்கிப் பாதத்தை அடைந்தனர் என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. எனவே இவ்வடி, 'பாதம் எய்திலார் பாதம் எய்தவும்' என்று இருக்க வேண்டும். அப்படி அமையும் பொழுது இறைவன் திருவடியை அடையாத சிலர் நீரில் மூழ்கி உயிர் நீத்தனர் என்று பொருள்பட்டுப் பொருத்தமாக அமையும். அஃதாவது எய்த வந்திலாதார் எரியில் மூழ்கவும்,பாதம் எய்திலார் பாதம் எய்தவும், ஏங்கினர் ஏங்கவும் இறைவன் அடியவர்களோடு புலியூர்ப் புக்கு இனிது அருளினன் என்று அமையும். இதில் இரண்டாவதாக வரும் பாதம் என்பதற்குத் தண்ணீர் என்று பொருள். அது வடசொல். மாணிக்கவாசகர் பல வடசொற்களைத் திருவாசகத்தில் பயன் படுத்தியுள்ளதனைத் தனித்தமிழ்த்தந்தை தவத்திரு மறைமலை யடிகளே தம் உரையில் எடுத்துக்காட்டியுள்ளார். (இங்கு இறுதியில் வரும் பாதம் என்பதற்குத் தண்ணீர் என்பது பொருள் என்பதனை மட்டும் எனக்குப் பல்லாண்டுகளுக்கு முன்பு தெரிவித்தவர் 'கல்விக்கடல்' எஸ்.கே. இராமராசன் ஆவார்.) 'எய்திலார்' என்று பாடம் இருந்தால்தான் பின்பு வரும் 'செழுங் கடல் புகுவேனே' என்பதற்கு ஏற்ப அமையும். அறிஞர் உலகம் இதனைச் சிந்தித்து ஏற்கும் எனக் கருதுகிறேன்.

இறைவனோடு சேராமல் இந்த உடலோடு இவ்வுலக வாழ்க்கையில் இருப்பதை எண்ணிப் பதைக்கிறார். இறையருள் பெற்று அதனைப் போக்கிப் பிறவாநிலை அடைய வேண்டும் என்னும் பெரும் வேட்கையில் பல தலங்களையும் சென்று வழிபடுகிறார். 'இறைவனே என்னை விட்டுவிடாதே' என்று உருகி உருகி வேண்டுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புலன் இன்பத் தீ

சிவன் அருளுக்காக ஏங்கும் நிலையிலும் அவருக்குப் புலனின்பங்களிலும், ஐம்புலன்களுக்கும் ஒருசேர உணவு அளிக்கும் பெண்ணின்பத்திலும் இருந்த ஆசை முற்றிலும் நீங்கவில்லை. அவ்வாசை தம்மிடம் மிகுந்த அளவில் வேர் கொண்டிருந்ததாகக் குறித்துள்ளார். இறைவன் ஆட்கொண்ட காலத்து இந்திரியம் என்னும் பறவைகள் அஞ்சி ஓடின என்பது உண்மையே. ஆனால், அப்பறவைகள் மீண்டும் அவரை நாடி வந்து வருத்தின: ஆற்றங்கரையில் வளரும் மரம்போல் தம்மிடம் ஐம்புலநாட்டம் வேர் கொண்டதாகவும், மத்தினால் சிதறும் தயிர் போல் புலனின்பத் தீயினால் தாம் கலங்கியதாகவும் தெரிவிக்கிறார். பெண்ணின் துடிக்கும் உதடுகளையும், ஆடை அவிழ்ந்த நிலையினையும், முகத்தில் வேர்வை அரும்பியதனையும் உணர்ந்து தாம் கெட்டதாகத் தெரிவிக்கிறார்.(62) நீத்தல் விண்ணப்பம், அடைக்கலப் பத்து, அற்புதப் பத்து ஆகியவற்றில் சில பாடல்களில் இறைவன் ஆட்கொள்வதற்கு முன்பும், ஆட் கொண்ட பின்பும் தாம் பெண்ணின்பத்தால் மிகவும் அழிந்ததனை உருக்கமாகக் குறித்துள்ளார். மாணிக்கவாசகர் இத்துணைப் பெண்ணின்பத்தில் நாட்டமுடையவரா என்னும் ஐயம் எழும் வகையில் பாடல்கள் உள்ளன. அவர் தம்மிடம் அரும்பிய காம நாட்டத்தை அருளாளர்களுக்கே உரிய வகையில் மிகைப்படுத்திக் கூறுகிறார் என்று விளக்கம் தந்துள்ளார் முனைவர் திருமதி இராதா தியாகராஜன். அது ஏற்புடையதாகவே தோன்றுகிறது.

திருவடியைச் சிக்கெனப் பிடித்தல்

இறைவனைக் கூடாமல் இவ்வுலகில் பிரிந்துறைவதை எண்ணித் தவிக்கிறார்; அழுகிறார். தம் நெஞ்சும் பொய், தம் அன்பும் பொய் என்று தம்மை இகழ்ந்து கொள்கிறார். அவன் தம்மைப் பிறப்பொழித்துத் திருவடிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கதறுகிறார். திருத்தோணிபுரத்தில் பாடப்பட்டதாகச் சொல்லப்படும் பிடித்த பத்தில் தம்மை ஆட்கொண்ட இறைவன் திருவடிகளைத் தாம் பற்றிக் கொண்டதனைத் தெரிவிக்கிறார்.

"உம்பர்கட்கு அரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊத்தையேன் தனக்கு
வம்புஎனப் பழுத்துஎன் குடிமுழு தாண்டு
வாழ்வுஅற வாழ்வித்த மருந்தே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செம்பொருள் துணிவே சீருடைக் கடலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது னியே '' (536)

இது எப்பொழுது பாடப்பட்டது என்பது அறுதியாகத் தெரியாவிட்டாலும் திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப்பட்ட பின்பு திருக்கழுக்குன்றில் மீண்டும் இறைக்காட்சி பெறுவதற்கு முன்பு பாடப்பட்டிருத்தல் வேண்டும். திருப்பெருந்துறையில் இருந்து திருக்கழுக்குன்றுக்குச் செல்லும் வழியிலேயே சோழ நாட்டில் சீகாழியும் தில்லையும் உள்ளன. ஆதலின் சீகாழி, திருக்கழுக்குன்றம் ஆகியவற்றை வழிபட்டு இறுதியில் தில்லையை அடைந்து நிலையாகத் தங்கினார் என்று கொள்வதே பொருந்தும்.

இப் பாட்டில் 'சீருடைக் கடலே' என்பதற்கு மாறாகச் 'சீருடைக் கழலே' என்னும் பாடமே மர்ரே பதிப்பு உள்ளிட்ட எல்லாப் பதிப்புகளிலும் காணப்படுகிறது. இஃது ஏடு எழுதுவோரால் நேர்ந்த பிழை. இது குறித்து ஆராய்ந்த அறிஞர் மு. அருணாசலம் அவர்கள், ''சைவ இலக்கியங்களில் இறைவ னாகிய சிவபெருமானது முழுவடிவத்தைச் சுட்டி விளித்துப் பேசுவதே மரபு. சிவபெருமானுடைய அங்கங்களில் ஒன்றை மட்டும் சுட்டிப் பேசுவதாகச் சமய நூல்களில் (திருமுறைகளில்) கண்டதில்லை. திருமுகமே, திருக்கரமே, திருவடியே என்று யாரும் பாடியதில்லை'' (திருவாசகக் குறிப்புகள் ப.129) என்று தெரிவித்து ''மிகப் பழமையான இரண்டு ஏடுகளை நாம் சமீபத்தில் பரிசோதித்து வந்தபோது அவ்விரண்டு ஏடுகளிலும் ''சீருடைக்கடலே'' என்பதே பாடமாகக் காணப்பட்டது. ''கடலே என்ற தொடரால் மாணிக்கவாசகர் ஆண்டவனைப் பல இடங்களில் அழைக்கிறார். பிடித்த பத்து இரண்டாம் பாடலில் கூட, ''கடவுளே, கருணைமா கடலே'' என்று கூறுகிறார். கடலே என்று அமைப்பதில் மரபு வழு எதுவும் இலது. ஆராய்ந்தபோது பின்னும் பல ஏடுகளிலும் இப்பாடம் இருப்பது தெரியவந்தது'' என்று குறித்துள்ளார் (ப.131). இப்பாடத்தை ஏன் எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது விளங்கவில்லை.

'' வந்துஎனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை ''
மால் அமுதப் பெருங்கடலே '' (30)
'' கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ '' (223)
'' பருகற்கு இனிய பரம்கருணைத் தடம்கடலை '' (249)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே "
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே " (369)
" ஐயனே அரசே அருட்பெருங் கடலே " (398)
" கயிலை மாமலை மேவிய கடலே " (407)
" மாளா இன்ப மாகடலே " (490)

என்று மாணிக்கவாசகர் இறைவனைக் கடலாகவே உருவகம் செய்து பல இடங்களில் பாடியுள்ளார். எனவே, கடலே என்பது தான் செம்மையான பாடம். இதனை இன்னும் திருவாசகத்தைப் பதிப்பிப்போர் ஏற்காது இருப்பது வியப்பாகவே உள்ளது.

பெண்ணாய் மாறி இறைவன் பெருமை பேசுதல்

மாணிக்கவாசகர் தாமான தன்மையில் இறைவனை ஏத்திய தோடு மட்டுமல்லாமல் பெண்களோடு தாமும் ஒரு பெண்ணாய் மாறிநின்று அவன் பெருமைகளைத் திருவெம்பாவை, திரு அம்மானை, திருச்சாழல் முதலியவற்றில் பாடினார். தலைமகளாக மாறி அவன் சிறப்புகளைப் பிதற்றி நின்றார். இப்போக்கில் அமைந்ததே அன்னைப் பத்து. குயிலை நோக்கி அவன் தம்மிடம் வருமாறு கூவும்படி வேண்டுகிறார். கிளியிடம் அவன் பத்து அங்கங்களைப் பற்றிப் பேசி மகிழ்ந்தார். இவையெல்லாம் பிரிவினை ஆற்றி இருக்கும் வழிகளாக அவருக்கு அமைந்தன.

உடலின் இழிவு உரைத்தல்

தமக்குப் பிறப்பு இன்னும் அறவில்லையே என்று ஏங்குகிறார். அவருக்கு இவ்வுடல் ஊனால் ஆகிய சுவராகவும், புழுக்கள் நிறைந்து உளுத்து நீர் கசியும் பொய்யான கூரையாகவும், சீ ஒழுகி ஈக்கள் மொய்க்கும் அழுக்கொடு இயங்கும் சிறுகுடிலாகவும் தோன்றியது. அது சிதைய வேண்டும் என்று இறைவனை வேண்டினார்.

பிறரை அழைத்தல்

திருக்கழுக்குன்றத்தில் அவருக்கு மீண்டும் இறைக்காட்சி கிட்டியது. தம்மைப்போல் பிறரும் இறையருளைப் பெற வேண்டும் என்று விழைந்தார். அதனால் மற்றவர்களை,

" திருமால் அறியாத் திருப்புயங்கள்
திருத்தாள் சென்று சேர்வோமே " (612)

என்று அழைத்தார். அவன் அருளைப் பெறுவதற்கு முந்துங்கள் என்று பணித்தார். இறைவனால் ஆட்கொள்ளப்பெற்று அவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவடியை அடைந்து நிரந்தர இன்பம் துய்க்கத் துடித்து அலைந்தார். இந்நிலையினை அருளுருவமாகக் கருதலாம்.

இன்புருவம் ஆதல்

பின்னர்த் தில்லையை அடைந்தார். அங்குத் தம் பிறப்பறுத்து ஆட்கொண்டவனும் ஆனந்த வடிவாகத் திகழ்பவனுமாகிய பெருமானைக் கண்டு மகிழ்ந்தார். அவன் திருவடியைக் கூடினால் தமக்கும் அடியார்க்கும் கிட்டும் பேற்றினை அகக்கண்ணால் கண்டார். அது திருப்படையாட்சியாக வெளிப்பட்டது. அங்கேயே நிலையாகத் தங்கினார். அவன் தம்மைச் சிவமாக்கி ஆண்டு கொள்வான் என்னும் உறுதிப்பாடு உண்டாயிற்று. அதனையே 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே' என்று இறந்த காலத்தில் பாடி மகிழ்ந்தார். இறுதியில் உரிய காலத்தில் இறையருளில் கலந்தார். அவருடைய ஆன்ம யாத்திரை தில்லைக்கூத்தன் திருவடிகளில் நிறைவடைந்தது. இதுவே அவ்வர் பெற்ற இன்புருவமாகும்.

அழுது அடி அடைந்த அன்பர்

மாணிக்கவாசகர் தம் சிறுமையை எண்ணி இறைவன் அருளுக்காக ஓயாமல் அழுது இறுதியில் அவன் திருவடிகளைப் பெற்றார். அவர் சிவன் கழலை அடையக் கைக்கொண்ட ஆயுதம் அழுகையே ஆகும். இதனால்தான் பரஞ்சோதி முனிவர் தம் திருவிளையாடலில் மாணிக்கவாசகருக்கு வணக்கம் பாடும்பொழுது,

" எழுதரு மறைகள் தேறா
இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத்து என்றும்
பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேல் ஏறத்
துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன்
அடியவர்க்கு அடிமை செய்வாம் "

என்று பாடியுள்ளார்.

மனிதராய்ப் பிறந்தோர் ஒவ்வொருவரும் தம் சிறுமையை எண்ணி நைந்து உருகுவதும், இறைவன் உயர்வை எண்ணி வியந்து போற்றுவதும், அவனையே தஞ்சமாகக் கொண்டு மன்ம் மொழி மெய்களால் வணங்குவதுமே உய்வதற்குரிய வழி என்பதே மாணிக்கவாசகர் வாழ்வும் வாக்கும் நமக்கு உணர்த்தும் செய்தியாகும்.

❀

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

காரைக்கால் அம்மையார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

காரைக்கால் அம்மையார்

பொருளடக்கம்

1. அம்மையார் பற்றிய நூல்கள் - 1

2. அம்மையார் வரலாறு - 3

3. அம்மையார் காலச் சமுதாயம் - 27

4. அம்மையார் அருளிய நூல்கள் - ஒரு பார்வை - 37

5. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் - 41

6. திருக்கூத்து - 63

7. திருவாலங்காட்டுப் பேய்கள் - 71

8. இலக்கிய நயம் - 78

9. திருத்தலச் சிறப்பு - 93

10. அம்மையார் அருளிய நூல்கள் - 98

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

காரைக்கால் அம்மையார்

1. அம்மையார் பற்றிய நூல்கள்

திருத்தொண்டத் தொகை

சுந்தரர், ''பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்'' என்று அம்மையாரைப் போற்றுகிறார். காரைக்கால் அம்மையார் பேய்வடிவை இறைவனிடம் வேண்டிப் பெற்றவர்.

'' பொற்புடைச் செய்ய பாத புண்டரீகங்கள் போற்றும்
நற்கணத்தி னில்ஒன் றானேன் ''

(காரை. அம்.பு.52)

என்னும் அம்மையார், தம்மைக் 'காரைக்கால்பேய்' என்றே தம் பாடல்களில் (அ.தி. 101, தி.மூ.தி. 1-11, 2-11) அறிவித்துக் கொள்கிறார். அம்மையாரின் திருவுள்ளம் அறிந்தே சுந்தரர் அம்மையாரின் இயற்பெயரையோ, 'அம்மையே' என இறைவன் அழைத்த பெயரையோ குறியாது, 'பேயார்' எனக் குறிப்பிட்டு அவருக்கு நான் அடியனாவேன் என்கிறார்.

திருத்தொண்டர் திருவந்தாதி

திருத்தொண்டத் தொகையில் கூறப்படும் ஒவ்வோர் அடியார் வரலாற்றையும் நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் ஒரு பாடலில் தருகிறார்.

'' நம்பன் திருமலை நான்மிதியேன் என்று தாளிரண்டும்
உம்பர் மிசைத்த லையானடந் தேறவுமை நகலும்
செம்பொன் உருவன் என்னம்மையெனப் பெற்றவன் செழுந்தேன்
கொம்பினுகு காரைக்காலினில் மேய குலதனமே ''

(திரு. தொ. 28)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அம்மையார் காரைக்காலில் பிறந்தமை, கயிலைக்குத் தலையால் நடந்தமை, 'அம்மை' என இறைவனால் அழைக்கப்பட்டமை ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன.

திருத்தொண்டர் புராணம்

சுந்தரர் எழுதிய தொகையினையும், நம்பியாண்டார் நம்பி எழுதிய திருவந்தாதியையும் அடிப்படையாகக் கொண்டு சேக்கிழார் திருத் தொண்டர் புராணம் எழுதினார். காரைக்கால் அம்மையார் பற்றி விரிவாக அறிந்து கொள்ளப் பெரிதும் துணை செய்வது இந்நூலே. இறைவனால் 'அம்மையே' என அழைக்கப்பெற்ற சிறப்புடையவர். ஆதலின் அவர்பற்றிய புராணத்திற்குக் 'காரைக்கால் அம்மையார் புராணம்' எனப் பெயரிட்டார். சேக்கிழார் அறுபத்தாறு பாடல்களில் அம்மையார் பெருமையை விளக்கிக் கூறுகின்றார்.

திருத்தொண்டர் புராண சாரம்

இந்நூலின் ஆசிரியரான உமாபதி சிவம் அம்மையாரை,

" நன்கு புகழ் காரைக்கால் வணிகன்மிக்க தனதத்தன் தரும்
புனிதவதியார் மாவின்
செங்கனிகள் திருவருளால் அழைப்பைக்கண்டு திகழ்
கணவன் அதிசயித்துத் தேசம் நீங்க
அங்க உடல் இழந்து முடிநடையால் ஏறி அம்மையே என
நாதன் அப்பா என்று
பொங்கு வடகயிலை பணிந்து ஆலங்காட்டில் புனிதன்நடம்
அனவரதம் போற்றினாரே "

(திரு. பு. சா. 28)

எனப் போற்றுகின்றார். இப்பாடலில் அம்மையாரின் வரலாறு சுருக்கமாகக் காணப்படுகிறது. அம்மையாரின் பிறப்பு, மாங்கனி நிகழ்ச்சி, பெற்ற பேய்வடிவம், கயிலைக்குத் தலையால் நடந்தமை, இறைவனால் 'அம்மையே' என அழைக்கப் பெற்றமை, திருவாலங்காட்டில் பெற்ற பேறு ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. அம்மையார் வரலாறு

வளம்பெருகு காரைக்கால்

காரைக்கால் சோழநாட்டுத் திருப்பதியாகும். இது பல வளங்கள் நிறைந்த கடற்கரைப் பட்டினமாகும். இங்கு வளைவுகளையுடைய சங்குகளைக் கடல் அலைகள் சுமந்து வந்து கரைமேல் ஏறி, அடுத்துள்ள கழிக்கானல்களில் அவற்றை விட்டு மீளும்.

அக்காரைக்கால், மானம் மிகுந்த தருமநெறியில் நின்று வாய்மையினின்று தவறாத சிறப்புடைய பெருவணிகர் குடிகள் நெருங்கி விளங்கும் பதியாகும். இதனைச் சேக்கிழார்,

" மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில் சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் காரைக்கால். "

(பா.எண்.1)

என்பர். வணிகராவர் ஏனை மூன்று திறத்தார்க்கும் பொருள் செய்து உலகம் நிலைபெறத் துணையாய் நிற்பவர். எனவே உலக நலம் கருதி அறவழியில் அருளுடன் ஒழுகுதல் அவர் கடனாம். அதனால் கொள்வதூஉம் மிகைபடாது கொடுப்பதூஉம் குறைபடாது வாணிகம் செய்தனர். இவ்வாறு அறத்து வழி நின்று வாணிகம் செய்யும் போது, அதற்குத் தாழ்வு ஏற்படுமாயின், உயிரையும் பொருட்படுத்தமாட்டார். அதனால்தான் 'மானம்மிகு தருமத்தின் வழிநின்று', என்கிறார் சேக்கிழார். 'எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாம்' என மானத்திற்கு விளக்கம் தருவர் பரிமேலழகர்.

வணிகர்கள் தமக்கென வகுத்த தருமங்களின்று தவறாது வாழ்ந்து வந்தனர். சிறப்பாக, கருணை என்னும் வித்திலிருந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முளைத்த 'கொல்லாமை'யை முதலாகக் கொண்டனர். எந்த உயிர்க்கும் தீங்கு செய்யாமல் வாழ்ந்தனர். உணவுப் பொருள் களையும் உட்படுத்தியது வணிகம். ஆதலால், அப்பொருட்களை விற்பதில் தவறு ஏற்படின் உயிர்கள் வருந்தும் என்று அஞ்சி ஒழுகினர்.

தருமத்தைச் செய் : சத்தியத்தைப் பேசு (தர்மம் சர : சத்தியம் வத) என்று வேதம் கூறும். அவ்வேதத்தில் கூறியாங்கு வாழ்ந்தனர் காரைக்கால் வணிகர். மானம் படவரின் வாழாமை போலவே வாய்மை நெறியினையும் உயிர்போலக் கருதினர்.

இவ்வாறு இயற்கைக் கடற்கரை வளமும், நெறிதவறா வணிகர்களின் தொழில் வளமும் சேர்ந்ததால் அவ்வூர் வளம்பெருகு காரைக்கால் ஆயிற்று.

அம்மையாரின் பிறப்பும் வளர்ப்பும்

கலங்கள் நிறைந்த கடற்கரைப் பட்டினமாகிய காரைக்காலில் வாழ்ந்து வரும் வணிகர்க்கெல்லாம் தலைவனாக விளங்கியவர் தனதத்தன் என்பவர். 'தத்தன்' என்பது வணிகர்க்குப் பெருமை சேர்க்க வழங்கும் மரபுப் பெயர். செல்வத்தில் சிறந்தவராகவும், வணிகராகவும் விளங்கியதால் அவருக்குத் தனதத்தன் என்று பெயர். அவர் செய்த தவத்தால் அவர் குடும்பத்தில் திருமடந்தை வந்து அவதரித்தாள் என்று சொல்வதுபோலப் பொங்கிய பேரழகுடன் ஒரு பெண் குழந்தை பிறந்தது. பெற்றோர் குழந்தைக்குப் 'புனிதவதி' எனப் பெயரிட்டனர். அம்மையாருக்குப் பராசக்தியார்தாம் உவமையாவர் என்ற தன்மையால் 'திருமடந்தை அவதரித்தாள் போல' என ஆசிரியர் குறிப்பிடுகிறார். திருமடந்தை என்னும் சொல் பராசக்தியைக் குறிக்கும் எனச் சிறப்புரை எழுதுவர் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார்.

குழந்தை மிக அழகாகப் பிறந்தது என்பதைப் 'பொங்கிய பேரழகு மிக' என மூன்று அடைமொழிகளால் சேக்கிழார் சிறப்பிக்கிறார். அம்மையார் அன்பின் திறத்தால் உலகைத் தூயதாக்குபவர் என்பதால் 'புனிதவதி' என்ற பெயர் பொருத்தமாகவே அமைந்துள்ளது. சிவயநம என்ற ஐந்தெழுத்து மந்திரம்போல் அமைந்த அப்பெயர் அம்மையாரின் சைவச் சிறப்பை உணர்த்துவதாகவும் அமைந்துவிட்டது.

பெற்றோர் குழந்தையைக் கண்ணின் மணியாக வளர்த்தனர். வணிகர் குலம் தழைக்க, குழந்தை வளர்ந்து தளர் நடையிட்டது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மயில் போன்ற மென்மைச் சாயலுடையதாய், யாழ்போல் மழலை பேசியும், குயில்போல் பாடியும் அம்மையார் அனைவரையும் மகிழ்வித்தார். பருவந்தோறும் மகளுக்குச் செய்ய வேண்டிய எல்லாச் சடங்குகளையும் தந்தையார் செய்தார். சிறுமியாய் வளர்ந்த பருவத்திலே வண்டலிட்டுத் தோழியருடன் விளையாடினார். அப்பருவத்திலேயே அம்மையார் பாம்பணியும் பெருமான் திருவடிகளில் கனிந்த அன்புடையவராய் விளங்கினார். இறைவனைப் பற்றிய சொற்களையே பேசினார். எப்போதும் இறைவன் திருப்பெயரை உச்சரித்துக் கொண்டிருப்பார். சிவனடியார்களைக் காணின் அவர்களைத் தொழுது வணங்குவார். சிவபிரான் மீது கொண்ட அன்போடு, அழகின் கொழுந்து வளர்ந்தாற் போல் வளர்ந்தார். உள்ள நிலையும் உடல் நிலையும் ஒருங்கே வளர்ந்த வளர்ச்சியை 'விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்தெழுவதென வளர்வார்' என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அம்மையார், இளம் பருவத்திலேயே இறைவன்மீது தமக்கிருந்த பற்றினைத் தாம் பாடிய அற்புதத் திருவந்தாதியில் முதல் பாடலாகவே அருளியுள்ளார்.

" பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் "

(அ.தி.1)

'மண்ணில் பிறந்து பேசத் தொடங்கிய காலமுதல் அன்பின் முதிர்ச்சியால் இறைவா நின் திருவடியையே எண்ணினேன்' எனக் கூறுதல் காண்க. சிவபிரானைத் தொழுதலும், சிவனடியாரைப் பேணுதலும் வினை நீக்கத்திற்கு துணையாகும் என அம்மையார். திருவிரட்டை மணிமாலையில் கூறுதலையும் காணலாம்.

" கழற் கொண்ட சேவடி காணலுற்றார் தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா வினைநிகர் ஏதுமின்றித்
கழற்கொண்ட சோதிச் செம்மேனி எம்மானைக் கைம்மா மலர்தூய்த்
தொழக்கண்டு நிற்குமோ துன்னி நம்மடும் தொல்வினையே "

(தி.இ.ம.மா.11)

திருமணப் பேச்சு

அம்மையார் பெண்மை நலம் கனிந்த பருவத்தை அடைந்தார். இப்பருவத்தே மகளிரை வீட்டைவிட்டு வெளியே செல்லவிடாது பாதுகாத்தல் முந்தையோர் கைக்கொண்ட முறையாகும். இதனை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'இல் இகவாப் பருவம்' எனச் சேக்கிழார் குறிப்பிடுகிறார். இதனை 'இற்செறித்தல்' என அகப் பொருள் நூல்கள் பேசும்.

'உற்று நோக்கி எம் மெல்லியலைப் போய் விளையாடல் என்றாள் அன்னை' (திருக்கோவை - 133) என்று மாணிக்கவாசகரும் 'இற்செறிவு அறிவித்து வரைவு கடாதல்' பற்றிக் கூறியுள்ளார். பெற்றோர் அம்மையார்க்குத் திருமணம் செய்ய முற்பட்டனர்.

சிறப்பு மிக்க நாகப்பட்டினத்தில் நிதிபதி என்ற பெயருடைய வணிகர் ஒருவர் இருந்தார். அவர் வணிகர் குலத்தில் பெருமையும் புகழும் கொண்டவராய் விளங்கினார். அவருக்குப் 'பரம தத்தன்' என்னும் பெயர்கொண்ட ஒருமகன். அவர்தம் குலமகனுக்கு ஒத்த மரபில் சிறந்த பெண்ணொருத்தியைத் தேடிக் கொண்டிருந்தார். அக்காலத்தில் வயதில் முதிர்ந்த சான்றோர்கள்தாம் பெண்பார்க்கச் செல்வர். நிதிபதியும் தம் மகனுக்குப் புனிதவதியாரை மணம்பேச மாடமாளிகைகள் நிறைந்த காரைக்காலுக்கு முதறிஞர்களை அனுப்பி வைத்தார்.

புகழனாரிடம் கலிப்பகையார்க்குத் திலகவதி அம்மையாரை மகட் கொள்ள வேண்டிச் சான்றோர் சென்றதையும், புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரிடம் சுந்தரருக்கு மகள்பேச மேலோர் சென்றதையும் அவ்வடியார்கள் வரலாறு நமக்கு உணர்த்தும்.

பரமதத்தன் அனுப்பிய மூதறிஞர்கள் தனதந்தர் இல்லம் அடைந்தனர். தனதத்தரும் அவர்களை இனிது வரவேற்றார். சான்றோர்கள் மகள் தந்தையிடம் 'நீ பெற்ற மகளை நிதிபதி மைந்தன் பரமதத்தனுக்கு முந்தையோர் மரபிற்கேற்ப மணம்புரிந்து தருவாயாக' எனக் கேட்டனர். மணமகன் குலமும், மரபும் தமக்கு ஏற்புடையதாக இருந்ததால் தனதத்தன் தம் மகளைப் பரமதத்தனுக்கு மணம்முடிக்க இசைவினைத் தெரிவித்தார். அது கேட்டுச் சான்றோர் மகிழ்ந்தனர். நாகை சென்று நிதிபதியிடம், தனதத்தர் மகள் தர இசைந்ததைத் தெரிவிக்க, நிதிபதியும் பெரும் சிறப்புப் பெற்றவர்போல மகிழ்ந்தார். சுற்றத்தாருடன் சேர்ந்து திருமண வேலைகளைச் செய்யலானார்.

திருமணம்

திருமண நாள் குறித்து ஓலை எழுதப்பட்டது. மணமகன் வீட்டார் ஓலையை மணமகள் வீட்டாருக்கு அனுப்பினர். மங்கல நாள் நெருங்க, மணச்சடங்கிற்குரிய எல்லாச் சடங்குகளும் செய்யப்பட்டன. குறித்த நாளில் மணமகளை மணக்கோலம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

புனையும் அணிகளால் அழகுபடுத்தி, மணமுரசு முதலிய இசைக் கருவிகள் முழங்க, மணஎழுச்சி எழுந்து நிதிபதியும் சுற்றத்தாரும் மணமகனுடன் காரைக்காலுக்கு வந்தனர். தனதத்தன் அவர்களை வரவேற்று, தங்கும் இடமளித்து உபசரித்தார்.

தனதத்தன் மாடமாளிகையில் சிவாகமங்கள் கூறியவண்ணம் திருமணச் சடங்குகள் அனைத்தும் செவ்வனே நடைபெற்றன. தளிர்போன்ற அடிகளையும், மென்னகையினையும், மயிலன்ன சாயலையும் உடைய புனிதவதியார்க்கும், காளை போன்ற பரமதத்தனுக்கும் சுற்றத்தார் போற்ற ஊரார் மகிழத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இதனைச் சேக்கிழார்,

" அளிமிடைத்தார்த் தனதத்தன் அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே செயல்முறைமை செய்தமைத்துத்
தளிரடிமென் னகைமயிலைத் தாதவிழ் தார்க்காளைக்குக்
களிமகிழ் சுற்றம்போற்றக் கலியாணஞ் செய்தார்கள் ."

(பா.எண்.11)

என்கிறார். இங்கு மயில், காளை என்பன உவமை ஆகுபெயராய் புனிதவதியாரையும், பரமதத்தனைய்யும் குறித்தன. தளிரடி - மென்னகை-மயில் இவை அம்மையாரின் இயற்கைச் சிறப்பை உணர்த்தின.

சாயலுக்கு மயிலையும் பெருமித நடைக்குக் காளையினையும் உவமை கூறுதல் இயல்பு. ஆனால் மயிலும் காளையும் பொருந்தாத உயர் சாதிகள் எனச் சோதிடம் கூறுவதாகக் கூறுவர். சேக்கிழார் இந்த உவமையினைப் பயன்படுத்தியிருப்பது. பின்னர் நிகழ இருக்கும் நிகழ்ச்சிகளை முன்னர் அறிவிக்கும் உத்தியாகவும் இருக்கலாம். மயிலைக் கண்டு காளை மருள்வது இயல்பு. மணமகன் பின்னர் அம்மையாரைக் கண்டு அஞ்சி விலகப்போகிறான் என்பதைக் குறிப்பாக ஆசிரியர் உணர்த்துகிறார் எனலாம். மேலும் மயில் ஒரு காலம் வந்தால், தோகையை உதிர்த்துவிடும். அம்மையாரும் ஒரு காலத்தில் தம் அழகை உதிர்த்துவிடுவார் என்பதையும் காணப்போகிறோம்.

காளை ஒரு கரையில் மேய்ந்து கொண்டிருக்கையில், அக்கரையைப் பார்க்கும். 'அக்கரை பச்சை' என எண்ணி அக்கரைக்கு ஓடிப்போதலும் உண்டு. பரமதத்தனும் அம்மையாரை விடுத்து வேறொருவரை நாடிச் செல்வான் என்பதைக் குறிப்பாக உணர்த்துவதாகவும் கொள்ளலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேக்கிழார் தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரர் திருமணம் பற்றி இருபத்தொரு பாடல்களால் பாடுகிறார். திருஞான சம்பந்தர் திருமணம் எழுபது பாடல்களால் பாடப்பெற்றது. சுந்தரர் சடையனார் மகளைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஞான சம்பந்தர் திருமணம் நடைபெற்றதும் சோதியில் கலந்துவிடுகிறார். காரைக்கால் அம்மையாரின் திருமண நிகழ்ச்சிகளை ஆறுபாடல்களில் முடித்துவிடுகிறார். திருமணம் என்பது அம்மையாரின் வாழ்வில் ஒரு சிறுபகுதியே, அவர் வாழ்வின் பெரும்பகுதி ஆண்டவனுக்கு உரியது என்பதை உணர்த்தவே சேக்கிழார் சுருக்கமாகப் பாடியுள்ளார் என எண்ணத் தோன்றுகின்றது.

இல்லறம்

திருமணம் முடிந்ததும் தந்தையார் தம்மகளை நாகப்பட்டினத்திற்கு அனுப்பவில்லை. அவர் தங்கள் குலத்திற்கு ஒரே மகள் ஆதலால் காரைக்கால் நகரிலேயே தனிவீடொன்று மணமக்களுக்கென அமைத்துக் கொடுத்தார். அவர்கள் இல்லறம் நடத்துவதற்குத் தேவையான பொருள், ஆடை, பசு, நிலம், ஏவலர் என வேண்டிய செல்வங்களை அளித்து மகிழ்ந்தார். பரம தத்தனும் தன் குடிமரபிற்கேற்ப வாணிகம் செய்து, செல்வம் பெருக்கி மேன்மையாக வாழ்ந்து வரலானான்.

பரமதத்தனின் வாழ்க்கைத் துணையாய் அம்மையார் இல்லறத்தின் பண்பு பிறழாது வாழ்ந்து வந்தார். இதனைச் சேக்கிழார்,

" ஆங்கவன்தன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரு மனைஅறத்தின் பண்புவழா மையில் பயில்வார் "

(பா.எண். 14)

எனப் பாடுகிறார். அம்மையார் பரமதத்தனுக்குக் 'கிடைத்தற்கரிய துணை' என்பதால் 'அருந்துணையாய்' என்கிறார். மனையறத் திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையவராய் இல்லறம் நடத்தி வந்தார்.

புனிதவதியார் இல்வாழ்வில் ஈடுபட்டாலும் சிவபிரான்மீது அன்பு குறையாமல் ஒழுகி வந்தார். சிவனடியார்கள் தம் இல்லம் நாடி வந்தால் அவர்களுக்கு நல்லமுதினை அளித்துச் செம்பொன்னும், நவமணிகளும், நல்ல ஆடைகளும் கொடுத்து உபசரித்தார். இதனை ஆசிரியர்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" நம்பர்அடி யார்அணைந்தால் நல்லதிரு அமுதுஅளித்தும்
செம்பொன்னும் நவமணியும் செழுந்துகிலும் முதலான
தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவ கொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக ஒழுகும் நா'ள்' "

(பா.எண்.15)

என்பார். வீட்டிற்கு அடியவர்கள் வந்தால் அம்மையார் விருந்திடுவார். காரணம் கணவன் சிவனடித்திறம் பேணும் குணநலன் பெற்றவனல்லன். ஆதலால் அவன் சென்று அடியாரைத் தேடிச் சென்று அழைத்து வருதல் நடைபெறாது. அம்மையாரும் இல்லம் விட்டு வெளியே சென்று அறியாதவராதலின், அவர் வெளியே போய் அழைத்து வரவும் இயலாது. அதனால்தான் 'நம்பர் அடியார் அணைந்தால்' என ஆசிரியர் குறிப்பிடுகிறார். அறுசுவையோடு கூடிய உணவைப் படைத்தார் என்பது 'நல்ல திரு அமுது' என்ற தொடரால் புலனாகிறது.

அடியார்கள் பொன்னையும் நவமணிகளயும் விரும்பாத வர்கள். அவை அவர்களுக்குத் தேவையுமில்லை. திருநாவுக்கரசர் உழவாரப்பணி செய்யும் இட்ங்களில் காணும் பொன்னையும் நவமணிகளையும் பருக்கைக்கற்களோடு ஒன்றாக மதித்து அவற்றை வாவியில் வீசி எறிந்தார் என.அவர் வரலாறு கூறும். அத்தகைய அ்டியார்க்கு அம்மையார் பொன்னையும், மணிகளையும் ஏன் அளித்தார் என்ற கேள்வி பிறக்கிறது அல்லவா? அடியார்கள் தங்கள்பால் வேண்டிய பிறர்க்கு உதவும் பொருட்டே அம்மையார் அவற்றை அவர்களுக்கு அளித்தார். மேலும் அணைந்த அடியார்களின் வயது, திருமேனி முதலிய நிலைகளின் தகுதியறிந்தும், தமது தகுதிக்கேற்பவும் குறிப்பால் அறிந்து பொருளைக் கொடுத்தார்.

திருவீழிமிழலையில் வறுமையால் மக்கள் பசியால் வருந்த, அப்பசியைப் போக்க நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் இறைவனால் படிக்காசு பெற்றனர். எல்லோரும் 'உண்ண வருக' எனப் பறைசாற்றிக் காலையிலும் மாலையிலும் அடியார்களுக்குச் சோறிட்டனர். இதனை,

" அல்லார்"கண்டத் தண்டர்பிரான் அருளால் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரமன் அடியாரானார்கள்
எல்லாம் எய்தி உண்கஎன இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத் திட்டார். "

எனச் சேக்கிழார் அப்பர் வரலாற்றில் கூறியுள்ளார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

1. கணவரிடமிருந்து வந்த கனிகள். 2. அடியார் திருவமுது செய்தல். 3. பரமனை வேண்டிப் பெற்ற கனி.
4. பரமதத்தன் வாணிபம் செய்யப் பிரிந்து போதல். 5. பரமதத்தனும் இரண்டாம் மனைவியும் அம்மையாரை வணங்குதல்.
6. அம்மையார் வேண்டிப் பெற்ற பேய் வடிவில் கயிலை சேர்தல்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிறர் துயர்துடைக்க அடியவர்களுக்கும் பொன்னும் பொருளும் தேவைப்படுகின்றன என இதனால் அறியமுடிகிறது.

கணவன் அனுப்பிய மாங்கனிகள்

இங்ஙனம் இருவரும் வாழ்ந்து வரும் நாளில், ஒரு நாள் பரமதத்தன் வழக்கம்போல் கடைக்குச் சென்றான். அவனைத் தேடி வந்த சிலர் அவனுக்கு இரண்டு மாங்கனிகளைத் தந்தனர். அவர்கள் வேண்டிய காரியங்களைப் பரமதத்தன் செய்து கொடுக்க அவர்களும் அவனிடம் விடைபெற்றுச் சென்றனர். கனிகளை ஏவலர்களை அழைத்துக் கொடுத்துப் பழங்களை வீட்டில் தருமாறு அனுப்பிவைத்தான். கணவன் அனுப்பிய மாங்கனிகளை அம்மையாரும் பெற்றுக்கொண்டார்.

அடியார்க்கு இன்னடிசில்

அப்போது பாம்பணியும் பெருமானின் திருத்தொண்டர் ஒருவர் உணவருந்தும் வேட்கையுடன் வீட்டிற்குள் நுழைந்தார். அம்மையார் வேதங்கள் மொழிந்த சிவபிரான் மெய்த்தொண்டரின் பசிகண்டு 'நாதன் தன் அடியாரின் பசி தீர்ப்பேன்' என எண்ணி அவர் பாதங்களை விளக்க நீர் அளித்தார். உண்ணும் வாழை இலையைத் திருத்தமாக இட்டு, அடியவரை நல்விருந்தினராக ஏற்று இன்னடிசில் படைக்க எண்ணினார். இல்லத்தில் திரு அமுது மட்டுமே தயாராக இருந்தது. கறியமுது இன்னும் சமைக்கப்படவில்லை. எனினும் அடியவர்க்கிட்ட இலையில் அமுதை இட்டார். இறைவன் அடியாரை விருந்தினராகப் பெறுதல் பெறுதற்கரிய பேறாகையால், தம் கணவர் அனுப்பிய மாங்கனிகள் இரண்டனுள் ஒன்றை இலையில் வைத்து அமுது செய்வித்தார்.

> '' இல்லாளன் ''வைக்க''எனத் தம்பக்கல் முன்இருந்த
> நல்லநறு மாங்கனிகள் இரண்டினில்ஒன் றைக்கொண்டு
> வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்
> அல்லல்தீர்ப் பவர்அடியார் தமைஅமுது செய்வித்தார் ''
>
> (பா.எண்.20)

என அம்மையாரின் விருந்தோம்பலை ஆசிரியர் விளக்குகிறார். இப்பாடலில் 'இல்லாளன்' என்பது இல்லத்தை ஆள்பவன், வீட்டுக்கு உடையவன் என்று பொருள் தரும். எனினும் இச்சொல் மற்றொரு பொருளையும் குறிப்பாகச் சுட்டுவதாகக் கருதலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாங்கனி இரண்டும் தனக்கேயாக்கி, மனைவிக்கும் மற்றவர்க்கும் இல்லையாக்கிக் கொண்டவன்; அதன் பயனாக, அந்த இல்லமும் 'தனக்கில்லாதவனாவன்' எனவும் பொருள் கொள்ளலாம்.

நல்ல நறு மாங்கனிகள் என்பதில் இரண்டு அடைமொழிகள். அக்கனிகள் பயன்படும் தன்மை ஒட்டி, நல்ல கனி ஒன்று, நறுங்கனி ஒன்றாகக் கொள்ளலாம். இவற்றுள் முறையே 'நல்லகனி' முதலில் நல்விருந்தாகிய நம்பர் அடியார்க்கும் மற்றை 'நறுங்கனி' மதுரம் மிக வாய்ந்து நாவின் இனிய சுவையை ஒட்டி அமைந்ததாய் உடம்பினோடு கழியும் சுற்றமாகிய கணவனுக்கும் பயன்படும் நயத்தையும் காணலாம்.

முதுமையின் தளர்ச்சியாலும் பசி மிகுதியாலும் வந்த அடியவர் வாய்க்கினிய சுவைமிகு இன்னடிசிலை மாங்கனியோடு இனிது அருந்திப் பசியாறினார். அம்மையாரின் அன்பையும் விருந்தோம் பலையும் பாராட்டிச் சென்றார்.

இன்னொரு கனியும் இடுக

சிவனடியார் சென்றபின், நண்பகற்பொழுதில் பரமதத்தன் இல்லம் வந்தான். நன்னீராடினான். உணவு உண்பதற்கு அமர்ந்தான். புனிதவதியாரும் கணவனுக்கு உணவிட, வாழை இலையை இட்டு, திரு அமுதுடன் கறிவகைகளையும் படைத்தார். தம் கணவன் கடையிலிருந்து அனுப்பிய மாங்கனிகளுடன் எஞ்சிய ஒரு கனியை இலையில் இட்டார்.

மனைவி படைத்த மதுரம் மிக்க கனியைச் சுவைத்த வணிகன் அதன் சுவையால் மகிழ்ந்தவனாய், மனைவியிடம் 'மற்றொரு பழமும் இருக்குமே, அதையும் எடுத்துவந்து இடுக' என்றான்.

" மனைவியார் தாம்படைத்த மதுரம்மிக வாய்த்தகனி
தனை நுகர்ந்த இனியசுவை ஆராமைத் தார்வணிகன்
இனையதுஒரு பழம் இன்னும் உளதுஅதனை இடுகஎன
அனையதுதாம் கொண்டுவர அணைவார்போல் அங்ககன்றார் "
(பா.எண்.24)

என்கிறார் சேக்கிழார். கணவன் விரும்பிய கனி இல்லை என்று அம்மையாரால் கூறமுடியவில்லை, கனி கொண்டு வரும் துணிவும் இல்லை. இறைவன் நினைத்தபடி நடக்கட்டும் என்ற மனநிலையில் அவ்விடம்விட்டு அகன்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரமதத்தன் மற்றொரு கனியைக் கேட்டிருத்தல்கூடாது. தான் அனுப்பிய மாங்கனிகள் இரண்டனுள் தான் உண்டது நீங்க, எஞ்சிய மற்றொன்று வீட்டில் உள்ளதா அல்லது பயன்படுத்தப் பட்டதா என்று கேட்டிருத்தல் வேண்டும்.

அப்படியே பயன்படுத்தப்படாது இருப்பினும், கனியின் இனிய சுவையைத் தான் நுகர்ந்தது போலத் தன் மனைவியும் சுவைக்க வேண்டும் என எண்ணியிருக்க வேண்டும். பழம் இரண்டனுள் ஒன்று தன் பங்காக மற்றொன்று மனைவியின் பங்குக்குரியது. தனது நன்மை தீமைகளிலும் உடைமைகளிலும் மனைவியும் சரிபங்குக்கு உரியவர் என்று எண்ணியிருக்க வேண்டும். தான் மட்டுமே இரண்டு கனிகளைச் சுவைக்க நினைத்தது தன்னலமாகும். உலகநிலையில் ஒரு கணவன் எண்ணவேண்டியன இவை. இதில் வணிகன் தவறிவிட்டான்.

உயர்நிலையில் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று திருமூலர் கூறியாங்குத் தான் இன்புற்றதுபோலவே பிறரும் இன்புறுவதை விரும்பவேண்டும். அத்தகைய பண்பு வணிகனிடம் இல்லை. மாறாக இவ்வணிகள், ''அழுக்குடை புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி, வளைவாய்த் தூண்டிலின் உள்ளிரை விழுங்கும் பன்மீன்போலவும்'' (கோயில் நான்மணிமாலை - 28) என்றபடி நாவின்புலனுக்கு அடிமைப்பட்டு நன்னெறி இழந்தான். அதனால் இனி, நல்மனைவியாய் வாய்த்துத் தன்னை மேல்நெறியில் செலுத்தவல்ல அரும்பெறல் தெய்வமாகிய அம்மையாரையும் இழக்க உள்ளவன் ஆயினான்.

அதிமதுரக் கனி

கனி கொணர்வார்போல் உள்ளே சென்ற அம்மையார், கணவன் கேட்ட அருங்கனிக்கு என்ன செய்வது எனத் திகைத்தார். மனம் தளர்ந்து தம்மையும் மறந்து நின்றார். அல்லல் உற்ற போது சிவபிரான் திருவடிகளை மனத்தில் நினைத்தார். இறை அருளால் அம்மையாரின் கரங்களில் அதிமதுரக்கனி ஒன்று வந்து பொருந்தியது. இவ்வியத்தகு செயலை,

'' அம்மருங்கு நின்றயர்வார் அருங்கனிக் கங்குஎன் செய்வார்?
மெய்ம்மறந்து நினைந்து இடத்துதவும் விடையவர்தாள்
தம்மனம் கொண்டு உணர்தலுமே அவரருளால் தாழ்குழலார்
கைம்மருங்கு வந்திருந்தது அதிமதுரக் கனியொன்று ''

(பா.எண். 25)

எனச் சேக்கிழார் பாடுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இறைவனிடம் அம்மையார் மாங்கனி வேண்டும் எனக்கேட்கவில்லை. எனினும் அவர் துயர்அறிந்து துயர் போக்கினன் இறைவன். இறைவனிடம் நாம் அது வேண்டும், இது வேண்டும் எனக் கேட்கத் தேவையில்லை. அவனே நம் நிலை உணர்ந்து அருள் செய்வான் என்பது புலனாகிறது.

வணிகன் முதலில் உண்டது. மதுரம் மிக்க கனி. இப்போது அம்மையார் கையில் வந்தது அதிமதுரக்கனி. அதிமதுரம் என்பது ஒருவகை மருந்துப்பொருள். அது மதுரம் மிக்கதாயினும் தாகத்ததைத் தணிக்க வல்லது. அவ்வாறே இந்த அதிமதுரக்கனியும் வணிகனது அம்மையாருடன் அமைந்த இல்வாழ்க்கைத் தாகம் தவிர்க்கப்படும் என்பது குறிப்புப் பொருள்.

முன்பு வணிகன் உண்டகனி, இனிய சுவைமிகுதியால் மேலும் ஒரு கனியை உண்ணும் ஆவலைத் தூண்டியது. இங்கு வந்த அதிமதுரக்கனியை அவன் உண்ணவும் புலன் இன்பத்தின் வேறாகிய தெய்வநலத்தின் உணர்வும், அம்மையாரை வழிபடும் முதற்பேறும் பெறுவதையும் ஆசிரியர் உய்த்துணர வைக்கிறார்.

பெற்றது 'வேறு' எங்கு?

இறைவனால் பெற்ற கனியை அம்மையார் நாயகனுக்குப் படைத்தார். அதைச் சுவைத்த பரமதத்தன் தான் முன்பு அருந்திய மாங்கனியினும் இக்கனி சுவைமிக்கதாக இருப்பதை உணர்ந்து 'இந்தக் கனியின் சுவை அமுதத்தினும் மேலாக உள்ளதே! நான் முன்பு தந்த மாங்கனியன்று. இது மூவுலகிலும் பெறுவதற்கரியது. இதனைப் பெற்றது வேறு எங்கு' என வினவினான்.

" முன்தரு மாங்கனியன்று, மூவுலகில் பெறற்கரிதால்
பெற்றது வேறெங்கு என்று பெய்வளையார் தமைக்கேட்டான் "
(பா. எண். 26)

பெற்றது எங்கு என்று கேட்டிருக்கலாம். பெற்றது வேறு எங்கு என்கையில் யார் கொடுத்தது - என்னிடம் பெற்றதன்று - வேறு எவரிடம் பெற்றது' எனப் பொருள் படுதலை அம்மையார் உணர்ந்தார்.

வணிகன் கூறியதைக் கேட்ட அம்மையார் கலங்கினார். இறைவன் திருவருளையும் பிறர்மாட்டு வெளிப்படுத்தக்கூடாது. அதே சமயம் கற்புநெறியால் கணவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாது இருப்பதும் தக்கதன்று என்று தவித்தார். நடந்தது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நடந்தவாறே கூறிவிடுதலே கடமை எனத் துணிந்து சிவபிரானை மனத்தில் வணங்கி, அக்கனி கிடைத்த வரலாற்றை உள்ளது உள்ளபடி கூறினார். அப்போதும் பரமதத்தனுக்குத் தெளிவு ஏற்படவில்லை. அம்மையாரை நோக்கி 'இக்கனி சிவபிரான் திரு அருளால் பெறப்பட்டது என்பது உண்மையாயின் இது போன்ற கனி ஒன்றை அவர் அருளால் பெற்றுத்தருவாய்' என்றான்.

" ஈசனருள் எனக் கேட்ட இல்லிறைவனது தெளியான்,
வாசமலர்த் திருவனையார் தமைநோக்கி மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான் திருவருளேல் இன்னமுமோர்
ஆசில்கனி அவனருளால் அழைத்தளிப்பாய் "

(பா.எண். 29)

என மொழிந்தான்.

பரமதத்தன் சிவனருள் தன்மையில் பயிலாதவன் ஆதலால் 'அருள் தந்ததாகில் இன்னுமொரு கனி அழைத்து அளி' என்றான். திருவருளில் அவநம்பிக்கை கொண்டதனால் 'திருவருளேல்' என்றான். அதனோடு அதைத் தெளிவுபடுத்துவதற்கு இன்னொரு கனியைச் சான்றாக அழைக்கவும் வேண்டினான்.

இவ்வணிகன் சிவனடித் திறமும் பண்பும் சிறிதும் பயிலாதவன் என்பதை ஆசிரியர் உய்த்து உணர வைக்கிறார்.

திலகவதி அம்மையாருக்குப் பேசிய மணமகனைப் பற்றிப் பேசுகையில் 'குணம் பேசி, குலம் பேசி' என்றும் 'வேளாண்குடித் தலைவர் மின்னார் செஞ்சடையண்ணல் மெய்யடிமை விருப்புடையார் என்றும் கூறிய ஆசிரியர் பரமதத்தனைக் குறிக்கையில் 'புகழ் வணிகன் பயந்த குலமைந்தனுக்கு.... மகட்பேச' என்றும் 'நிதிபதி மைந்தன் பரமதத்தனுக்கு' என்றும் குலம்பற்றிய அளவில் மட்டுமே கூறுகிறார். அவன் குணம் பற்றிக் கூறுகையில் 'முன்னீராடிப் புகுந்து அடிசில் புரிந்தயில' என நீராடியபின் வேறு நியமங்கள் ஒன்றுமின்றிச் சோறு உண்பவன் என்ற குறிப்பும், இவ்வணிகன் நல்ல குலத்தில் வந்தவனாயினும் பண்டைத் தவத்தால் நிதிபடைத்தவனாயினும் திருநீறு இடுதல் போன்ற பண்புகளைப் பயிலாதவன் என்ற நிலையினையும் பெறவைத்த ஆசிரியர் நுட்பம் போற்றத்தக்கதாம்.

மறைந்த மாங்கனி

அம்மையார் அவ்விடம் விட்டுச் சென்று பாம்பணியும் பெருமானை வணங்கி நின்றார் 'மாங்கனி ஒன்று அளித்து அருள்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செய்யாவிடில் தான் கூறியது பொய்யுரை ஆகிவிடுமே' என வேண்டினார். இறைவன் திருவருளால் ஒரு மாங்கனி அவர்கையில் வந்து பொருந்தியது. கனியை வணிகன் கையில் கொடுக்க அவனும் அதனை வியந்து கையில் வாங்கினான். வாங்கிய உடனே அக்கனி மறைந்து போயிற்று.

முந்தைய கனியைத் தான் அனுப்பிய கனி என நினைத்ததால் அஃது அவனுக்கு உணவாயிற்று. இப்பொழுது அவனுக்கு அவ்வுணர்வு இல்லாமையாலும், அக்கனியைத் தெய்வீகக்கனி என வியந்ததாலும் அக்கனி மறைந்தது.

கனி மறைந்ததும் வணிகன் அச்சத்தால் தடுமாறினான். 'இவள் மானிடப் பெண் அல்லள்; 'தெய்வப்பெண்' என்று கருதினான். தெய்வமாகிய அவள் தனக்குப் பணிவிடை செய்வது பாவம் என நினைத்தான். அவளது பெருமை அறியாது நடந்து கொண்ட தன் சிறுமையை நினைத்து வருந்தினான். அம்மையாரை விட்டுப் பிரிந்து வாழ்வதே தக்கது என்று கருதினான். ஆனால் அதனை எவரிடமும் சொல்லவில்லை. அன்றுமுதல் அம்மையாரிடம் தொடர்பு இன்றி வாழ்ந்து வந்தான்.

அம்மையாரைப் பிரிதல்

அம்மையாரை விட்டு நீங்கத் துணிந்ததால் பரமதத்தன் தான் கடல் கடந்து சென்று பொருளீட்டிவர விரும்புவதாகச் சொன்னான். சுற்றத்தார்களும் இசைவு தெரிவிக்க அதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டான். வணிகர்கள் மரக்கலம் சமைக்க அவர்களுடன் கலங்களில் கடல்கடந்த நாடுகள் விரும்பும் பண்டங்களை ஏற்றிக்கொண்டு கப்பலைச் செலுத்தும் மீகாமன், மற்றும் ஏவலர் பலருடன் நல்ல நாளில் கடல் தெய்வத்தை வணங்கிப் பயணம் மேற்கொண்டான். கடல்கடந்து செல்கையில் ஆடவர் மகளிரை அழைத்துச் செல்லல் மரபில்லை ஆதலால் பரமதத்தன் உள்நோக்கம் எவரும் அறிந்திலர்.

வணிகன் தான் விரும்பிய தேசங்களுக்குச் சென்று, தான் கொணர்ந்த பல பொருட்களை விற்றுப் பொருள் ஈட்டினான். அதற்கீடாகப் பல வளங்களைத் தன் கப்பலில் ஏற்றிக்கொண்டு தாய்நாடு திரும்பினான். மனைவி இருக்கும் காரைக்காலுக்குச் செல்லாமல், பாண்டிய நாட்டில் ஒரு கடற்கரைப் பட்டினத்தின் பக்கம் வந்து சேர்ந்தான். 'படர்புனல் கன்னி நாட்டோர் பட்டின மருங்கு சார்ந்தான்' எனக்கூறிய ஆசிரியர் பட்டினத்தின் பெயரைக் குறிப்பிடவில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அம்மையாரை விட்டு அவன் வந்தமையாலும், அங்குத் தானே சென்று வாழச் சென்றபோதும் அம்மையாரை ஏற்காமையாலும், இதன் மருங்கு நின்றே பேய்வடிவுடன் அம்மையார் நீங்கியதாலும் இந்நகரின் பெயரைக் கூறவேண்டா என ஆசிரியர் விடுத்தனர் போலும். மேலும் வரலாற்றிற்குப் பயன்படாதது என்பதாலும் பெயர் குறிக்கவில்லை எனலாம்.

புதிய வாழ்க்கை

பாண்டிநாட்டின் ஒரு பகுதியில் வந்திறங்கிய பரமதத்தன், வெளிநாடுகளிலிருந்து தான் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் விற்று ஒப்பற்ற செல்வனானான். ஊர்மக்கள் விரும்பும் வண்ணம் ஒரு வணிகன் மகளையும் திருமணம் செய்து கொண்டான். வாழ்க்கை நெறியில் தவறாது மிக்க மகிழ்ச்சியுடனும் புகழொடும் வாழ்ந்து வந்தான். ஆனால் தான் புனிதவதியாரை மணந்த செய்தியை வெளியிடாமல் மறைத்து வாழ்ந்து வந்தான். அந்நிலையில் அவனுக்கு ஒளிவிளக்குப் போல அழகிய பெண்குழந்தை பிறந்தது. குழந்தைக்குப் பெயர்சூட்டும் மங்கலச் சடங்குகளைச் செய்தவன், தான் வழிபடுவதற்குரிய தெய்வத் தன்மை உடையவர் என்ற துணிவால் தன் காதல் மகளுக்குப் 'புனிதவதியார்' எனப் பெயர் சூட்டினான்.

" மடமகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்பு
உடனுறை வஞ்சிநீத்த ஒருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுல மென்றே கொண்டு
கடனமைத் தவர்தம் நாமம் காதல்செய் மகவை யிட்டான் "

(பா.எண்.38)

என்பர் சேக்கிழார்.

பாண்டி நாடு செல்லல்

காரைக்கால் அம்மையார் கற்புநெறி தவறாது, தமக்குரிய கடமைகளைச் செய்து கொண்டு மனையறம் பேணிவந்தார். தம் கணவர் பொருளீட்டக் கடல்கடந்து சென்றுள்ளதாக எண்ணிக் கணவர் வரவை எதிர்பார்த்திருந்தார்.

கடல்கடந்து சென்ற பரமதத்தன், பல வளங்களைப் பெருக்கிப் பெருஞ் செல்வனாகப் பாண்டிநாட்டில் ஒரு பெருநகரில் வாழ்ந்து வருவதைப் பார்த்தவர்கள் அம்மையாரிடம் அச்செய்தியினைக் கூறினர். அச்செய்தியைக் கேட்டு வருந்திய உறவினர், உண்மை நிலை அறிந்துவர நெருங்கிய சுற்றத்தினரை அனுப்பினர். சென்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வந்தவர்களும் அச்செய்தியை உறுதிப்படுதினர். சுற்றத்தினர் அம்மையாரை அழைத்துச்சென்று பரமதத்தனிடம் சேர்த்து விடுவதே தம் கடன் என எண்ணினர்.

அழகிய பல்லக்கில் மடமயில் அன்ன அம்மையாரைத் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருவினைப் போல அமரச்செய்தனர். சுற்றிலும் அழகிய திரையால் மூடினர். அன்புடைய சுற்றத்தார்களும் இன்மொழியுடைய தோழியரும் உடன்வர, பல நாட்கள் பயணம் செய்து பாண்டிய நாட்டை அடைந்தனர். பரமதத்தன் வாழும் மாநகர் மருங்கு வந்து சேர்ந்தனர். குலமுதல் மனைவியாரைத் தாம் அழைத்து வந்துள்ள செய்தியைப் பரமதத்தனுக்குச் சொல்லி அனுப்பினர்.

பரமதத்தன் செயல்

அச்செய்தியைக் கேட்ட பரமதத்தன் மனத்தில் அச்சங்கொண்டு 'அவர்கள் இங்கே வருவதற்கு முன்னர் நானே செல்வேன்' எனக் கருதித் தன் மனைவியினையும் குழந்தையினையும் அழைத்துக் கொண்டு புனிதவதியாரும் சுற்றத்தினரும் தங்கியிருக்கும் இடம் சேர்ந்தான்.

தன் மனைவியோடும் தளர்நடைக் குழந்தையோடும் இளம் பெண்மான் போன்ற அம்மையாரின் கால்களில் விழுந்து வணங்கினான். பின்னர் எழுந்து 'யான் உமது அருளால் வாழ்வேன்; இந்தக் குழந்தைக்கு உமது திருநாமத்தையே சூட்டியுள்ளேன்' எனச் சொல்லிப் பணிந்து மீண்டும் நிலமுற வீழ்ந்தான்.

" தானுமம் மனைவி யோடும் தளர்நடை மகவினோடும்
மானிளம் பிணைபோ னின்றமனைவியா ரடியில் தாழ்ந்தே
யான் உமதருளால் வாழ்வேன்; இவ்விளங்குழவி தானும்
பான்மையா லுமது நாமம் என்றுமுன் பணிந்து வீழ்ந்தான் "

என்பர் சேக்கிழார். (பா.எண்.45)

புனிதவதியார் தம் காலில் வீழ்ந்து விடுவாரோ என்ற அச்சத்தாலும், தெய்வமான அவர் தம் காலில் வீழ்தலைத் தவிர்க்க எண்ணியதாலும் பரமதத்தன் தான் முற்பட்டு அவர் காலில் வீழ்ந்தான்.

பரமதத்தன் கூற்றும் அம்மையார் நிலையும்

கணவன் தன்னை வணங்குவதைக் கண்ட புனிதவதியார், தம் பக்கத்தே நின்றிருந்த சுற்றத்தார்பால் அச்சத்துடன் ஒதுங்கினார். பரம

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தத்தன் செயலைக் கண்ட சுற்றத்தினர் வெட்கமுற்று 'நீ உன் மனைவியை வணங்கியது என்ன?' எனக் கேட்டனர்.

பரமதத்தன் சுற்றத்தார்களைப் பார்த்து, 'இவர் மானிடப் பிறவியர் அல்லர்; நற்பெருந்தெய்வமாவார். அவர் தெய்வமாதலை அறிந்து நான் அவரைவிட்டு நீங்கினேன். மீண்டும் வந்தபின்பும் அத்தெய்வத்தின் பெயரையே என் குழந்தைக்குச் சூட்டியுள்ளேன். ஆதலால் அவர் பொற்பாதங்களை வணங்கினேன். நீவிரும் அவரைப் போற்றுமின்' என்றான்.

வணிகன் கூறியதைக் கேட்ட சுற்றத்தினர் 'இது என்கொல்' என்று ஒன்றும் தோன்றாமல் நின்றனர். அம்மையாரும் வணிகன் கூறியதைக் கேட்டுச் சிவபிரான் திருவடிகளைப் போற்றி, தம் சிந்தையைச் சிவன்பால் வைத்தார். அம்மையாரின் அப்போதைய நிலையை,

" மன்றலங் குழலினாரும் வணிகன்வாய் மாற்றம் கேளாக்
கொன்றைவார் சடையினார் தம்குரைகழல் போற்றிச் சிந்தை
ஒன்றிய நோக்கின் மிக்கஉணர்வு கொண்டுரை செய்கின்றார் "

என்பர் ஆசிரியர். (பா.எண். 48)

'வேறெங்கும் செல்லவிடாது, சிந்தையினை இறைவன்பால் ஊன்றவைத்து உள்ளே அழுந்திய உணர்வு' என்பதைச் 'சிந்தை ஒன்றிய நோக்கின் மிக்க உணர்வு' என்ற தொடர் குறிக்கிறது.

" நான் என்றும், தான் என்றும் நாடினேன் நாடாலும்
நான என்று தான் என்று இரண்டு இல்லை என்பது
நான் என்ற ஞான முதல்வனே நல்கினான்
நான் என்று நானும் நினைப்பு ஒழிந்தேனே. "

(திரு. ம. 2782)

என்று திருமூலர் கூறியபடி பாசஞானம், பசுஞானம், இரண்டினையும் அறவே களைந்து பதிஞானமொன்றிலே ஒன்றி 'நான்' என்று உணரும் நினைப்பு அறவே நீங்கிய நிலையில் அம்மையார் இருந்தார். இறைவனையே தஞ்சம் அடைய எண்ணினார்.

புனிதவதியார் இறைவனிடம், 'இங்கு இவ் வணிகன் தன் மனத்தின் எண்ணமிது. இனிமேல் இவனுக்காகத் தாங்கிய வனப்பு மிக்க தசைபொதிந்த சுமையை இங்கேயே கழித்துவிட்டு, என்றும் நின் பாதங்களைப் போற்றும் சிவகண உருவாகிய பேய்வடிவத்தை அருள்வாயாக' என வேண்டி நின்றார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" ஈங்கிவன் குறித்த கொள்கை யிது இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று பரமர்தாள் பரவிநின்றார் "

(பா.எண். 49)

அம்மையாரின் வாழ்க்கை மாற்றம் காட்டும் பாடல் இது. கணவன் என்ற தொடர்பு அற்றுவிட்டதாலும், சிவனையும் சிவனடியார்களை மட்டுமே சிந்திக்கும் உயர்நிலையில் நின்றதால் வணிகனை ஒரு சாதாரண மனிதனாகக் கருதியதாலும், அம்மையார் கணவனை 'இவன், இவனுக்காக, என ஒருமையில் குறிப்பிட்டார் எனலாம். ஆசிரியரும் இவ்வரலாறு முழுவதும் வணிகனை ஒருமையில் வைத்தே கூறி வந்துள்ளார்.

அம்மையார்க்கு வணிகன் தொடர்பும் சுற்றத்தார் உறவும் நீங்கின. இறைவன் தொடர்பை மட்டுமே அவர் விரும்பினார். 'உற்றாரை யான் வேண்டேன், ஊர்வேண்டேன் (திருவாசகம்) என்றபடி உலகஉறவுகள் விடுத்து, உறவு ஆவார் உருத்திரப்பல் கணத்தினார்கள்' (தேவாரம்) என்றபடி சிவகணங்களின் தொடர்பையே வேண்டிநின்றார்.

கணவன் பொருட்டே ஊனையும், அதைப் பற்றுக் கோடாகக் கொண்ட வனப்பையும் அம்மையார் தாங்கி நின்றார். அக்கணவனே தன்னை விட்டுப் பிரிந்தபின், தசைப்பொதியும் அழகும் தேவையில்லை என உதற முற்பட்டார்.

அம்மையார் தமக்குப் பேய்வடிவம் வேண்டும் என்று கேட்டது வாயு, உடம்புடன் கூடி மக்களை அலைத்துவரும் பேய்வடிமன்று. அவர் வேண்டியது மானிட உடம்பினுள் தலை ஒழித்து எலும்புக் கூடு மட்டுமே உள்ள வடிவம். காற்றுப்போல் கடிது செல்லும் தன்மையுடைய வடிவம். களிம்பு நீங்கிப் பொன்னிறமான செம்புபோலப் பாசம் நீக்கித் தூய்மையாக்கப்பட்ட சுத்த மாயா உருவம். ஆனால் மக்கள் கண்களுக்குப் புலப்படுவதாகிய ஓர் ஒளிபெற்ற உடம்பு.

அம்மையார் இவ்வாறு வேண்டி நிற்கையில் அம்பலத்துள் ஆடுவார் அருளினால் அவர் வேண்டியதைப் பெற்றார். உடம்பில் தசையும், அதனை இடமாகக் கொண்ட அழகும் நீங்க, எலும்புக் கூடே உடம்பாகியது. வானுலகும் மண்ணுலகும், வணங்கத்தக்க பேயாகிய சிவகணநாதர் வடிவம் ஆனார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அப்போது எங்கும் மலர்மழை பொழிந்தது. தெய்வத் துந்திபியின் நாதம் உலகெலாம் நிறைந்து பெருகியது. தேவர்களும் முனிவர்களும் குலவி மகிழ்ந்தனர். சிவகணங்கள் எல்லாம் குணலைக் கூத்தாடின. முன்னால் நின்ற பல சுற்றத்தினரும் அவரைத் தொழுது அஞ்சி நீங்கினர். இந்நிலையை,

" மலர்மழை பொழிந்த தெங்கும்; வானதுந் துபியி னாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம உம்பரும் முனிவர் தாமும்
குலவினர்; கணங்க ளெல்லாம் குணலை யிட்டன; முன்னின்ற
தொலைவில்பல் சுற்றத்தாரும் தொழுதஞ்சி அகன்று போனார் "

(பா.எண்.51)

என்பர் சேக்கிழார். (குணாலை - மகிழ்ச்சி மிக்கபோது பாட்டுடன் கூடிய ஒருவகைக் கூத்து).

அற்புதத் திருவந்தாதியும் இரட்டை மணிமாலையும்

மனத்திலே தோன்றி வெளிப்பட்ட ஞானத்தினால் அம்மையார் அப்பொழுதே சிவபிரான்மீது 'அற்புதத் திருவந்தாதியை' அருளிச் செய்தார். 'நின் அழகிய சிவந்த பாத தாமரைகளைப் போற்றுகின்ற சிவகணங்களுள் நானும் ஒன்றாயினேன்' என நயந்து பாடினார்.

அடுத்து இறைவன்மேல் 'இரட்டை மணிமாலை'யினையும் அந்தாதித் தொடையாகப் பாடிப் போற்றினார்.

அற்புதத் திருவந்தாதியும் திரு இரட்டை மணிமாலையும், அம்மையார் இறைவனது அருட்கோலங்களில் திளைத்தும் வியந்தும் போற்றிப் பாடியனவாகும்.

கயிலைப் பயணம்

சிவபிரான்மீது மேன்மேலும் அன்பு பெருகிட, திரிபுரங்களை எரித்த அப்பிரான் எழுந்தருளியுள்ள பெரிய கைலாய மலையைக் காண விரும்பினார். திருவருள் கூட, அம்மையார் கயிலை நோக்கித் தம் பயணம் மேற்கொண்டார். அம்மையார் தாம் விரும்பி ஏற்றுக் கொண்ட பேய்வடிவில் சென்றார். அவ்வேடத்தின் தன்மையைக் கண்டவர்கள், வியப்படைந்து, அச்சமுற்று, அவ்விடம் விட்டு நீங்கி ஓடுவாராயினர். அவ்வேடம் கண்டவர்கள், பிறர்க்குத் தாம் கண்டவாறு கூறினர். அதைக் கண்ணுற்ற அம்மையார் 'எல்லாத் தேவர்களுக்கும் நாயகராகிய சிவபிரான் என்னை அறிவாராகில், உண்மைநிலை அறியாத நிலையிலுள்ள ஐயறிவுடைய மாக்களுக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நான் எந்த உருவத்தைத் தாங்கியவளாகக் காணப்பட்டாலும் அதனால் ஆவது என்ன? ஒன்றுமில்லை' எனப் பற்றற்று விளங்கினார்.

கயிலை மலையை நோக்கிப் புறப்பட்டவராதலின் வடக்கு நோக்கிச் செல்வாராகி, வடதிசைத் தேயங்களை மனோவேகத்தை விட விரைவாகக் கடந்து சென்றார். திருப்பருப்பதம் உள்ளிட்ட மலைகள் அடர்ந்த நாடு, தெலுங்கு நாடு, கன்னடம், மாளவம், இலாடம், மத்திமனபதிரம், கங்கை நாடு, கற்சுரம் என்பன அவர் கடந்து வந்த பகுதிகளாகும். இறுதியில் திருக்கயிலைமலையின் பக்கம் வந்தார்.

திருநாவுக்கரசர் கயிலை நோக்கிப் பலநாள் திருமேனி முழுவதும் வருந்த வழிநடந்து சென்றதாகச் சேக்கிழார் கூறுவார். ஆனால் அம்மையாரோ மனத்தினும் கடிது சென்று கயிலைபால் அணைந்தார். காரணம் அம்மையார் பேய்வடிவம் பெற்ற பெற்றியால் ஆகியது எனலாம். அன்பு மிகுதிப்பாட்டினாலும் கடிது சென்றிருக்கலாம். அதுபற்றியே அப்பர் பெருமானது கயிலைப் பயணத்தைப் பத்துப் பாடல்களால் அறிவித்த ஆசிரியர் அம்மையார் செய்த அதே கயிலைப் பயணத்தைப் பாதி விருத்தத்தில் அருளிக் காட்டினார்.

தலையால் நடந்த நிலை

திருக்கயிலை இறைவன் தலமாதலால் காலால் நடந்து செல்லல் தகுதியன்று என்று கருதித் தலையால் நடந்து சென்றார்.

கயிலை சிவபிரான் எழுந்தருளியுள்ள தலமாதலின் அதன் அடிவாரமானது சிவனது அடி எனக் கருதப்படும். அவனது திருவடியில் தமது தலை பொருந்த நடத்தலே தகுதி என்ற 'தாடலை' என்ற சாத்திரக் கருத்துக்கிசைய அம்மையார் தலையால் நடந்தார் எனலாம். மேலும் புண்ணியத் தலத்தைக் காலால் மிதித்தல் ஆகாது என்பது விதியாதலின், தலையால் நடந்தார் எனவும் கொள்ளல் வேண்டும். இது கருதியே திருவாலங்காட்டிலும் அம்மையார் தலையால் நடந்து சென்றதும் காணலாம்.

திருநாவுக்கரசர் திருத்தொண்டு செய்த புண்ணியத் தலமாகிய திருவதிகையை மிதிக்க அஞ்சி, ஆளுடை நம்பிகள், புறத்தே சித்தவட மடத்துத் தங்கிய வரலாறும், அம்மையார் தலையால் நடந்த திருவாலங்காட்டை மிதித்து அடைய அஞ்சி, ஆளுடைய பிள்ளையார் புறத்துத் தங்கிய வரலாறும் இங்கு நினைவு கூரத்தக்கன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கயிலைக் காட்சி

அம்மையார் தலையினால் நடந்து கயிலை மலைமீது ஏறிச் செல்கையில் அவர் மனத்தில் மகிழ்ச்சியும் அன்பும் மேன்மேலும் பெருகின. பிறைத் திங்களைச் சூடிய சிவபிரானின் ஒரு பாகத்தே வீற்றிருந்த பார்வதி தேவியின் திருக்கண் பார்வை அம்மையார்மேல் பட்டது. இவ்வரிய காட்சியை,

" தலையினால் நடந்து சென்று, சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மே லேறும்போது மகிழ்ச்சியா லன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக் கண்ணுதல் ஒருபா கத்துச்
சிலைநுதல் இமய வல்லி திருக்கண்நோக்கு உற்றதன்றே "

எனச் சேக்கிழார் அருமையாகப் பாடியுள்ளார். (பா. எண். 56)

காலினாலும் கடந்து செல்வதற்கரிய மலைமீது தலையால் ஏறிச் சென்றும், மகிழ்ச்சியும், அன்பும் பொங்க நின்றார் எனில், அம்மையாரின் பேரன்பின் திண்மையும், பெற்றுக் கொண்டே பேயுருவின் திறமையும் இனிது புலனாகும்.

உமை அம்மையார் இறைவனது அருள் சக்திஆவர். அம்மையப்பர் இருவருள் உமை அம்மையாரின் நோக்கம் முதலில் அம்மையார் மேல்பட்டது என்பது அருள் கிடைத்தது என்பதை உணர்த்தும். 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்றவாறு அருள் சேர்ந்த பின்னரே சிவனைக் காணுதல் கூடுமாதலின் முதலில் அருட்சக்தி பதிந்தது' என்பர்.

சிவபிரான் பக்கமிருந்த இமயவல்லி அதிசயித்து, 'தலையினால் நடந்து இங்கு ஏறும் ஓர் எலும்பு உடம்பு பெற்ற இதன் அன்பு என்னே?' என்று கேட்டார்.

அம்மையே

சிவபெருமான், 'உமையே இங்கு வரும் இவள் நம்மைப் பேணிப் போற்றும் அம்மை ஆவாள். பெருமைமிக்க இப்பேய் வடிவத்தையும் இவள் நம்மிடம் வேண்டிப் பெற்றுக் கொண்டனள்' என்று கூறினார். அம்மையார் சிவனை நெருங்கி வந்ததும், 'அம்மையே' என்கின்ற செம்மை மிக்க ஒரு மொழியை உலகமெல்லாம் உய்யும் பொருட்டு அருளிச் செய்தார். அது கேட்ட அம்மையார் 'அப்பா' எனக் கூறி அவர் திருவடித்தாமரைகளில் வீழ்ந்து வணங்கினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" வரும் இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே 'மற்றுஇப்
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்' என்று பின்றை
அருகு வந்தணைய நோக்கி அம்மையே என்னும் செம்மை
ஒருமொழி உலக மெல்லாம் உய்யவே அருளிச் செய்தார் "

(பா.எண்.58)

" அங்கணன் அம்மையே என்று அருள் செய 'அப்பா' என்று
பங்கயச் செம்பொன் பாதம் பணிந்து வீழ்ந்து எழுந்தார் "

(பா. எண். 59)

எல்லோர்க்கும் தாயும் தந்தையுமாய் விளங்கும் இறைவனைத் 'தாயுமிலி' 'தந்தையுமிலி', 'தான் தனியன்' என்பர் மணிவாசகர். அக்குறை நீக்குதற்பொருட்டு அம்மையார் அவருக்கு 'அம்மை' ஆயினர் போலும். அம்மையார் காட்டும் அன்பு தாயன்பினை ஒத்ததாகும். அம்மையார் தாயன்பு பூண்டவர் என்பதை "நம்பர் அடியார் அணைந்தால் நல்திரு அமுது அளித்தும்வேண்டுவ கொடுத்தும்" உபசரித்த செயலில் முன்னரே கண்டோம்.

இறைவன் எல்லோர்க்கும் தாயும் தந்தையுமாய் விளங்குதலின் 'அப்பா' என அன்போடு அழைத்தார்.

இப்பாடலில் 'அப்பா' என்றது 'உலகெலாம் தோன்றி ஒடுங்குததற்குக் காரணமானவன்' என்ற பொருளையும் தந்து நின்றது. தம்மைப் பேணிய அன்பின் தன்மைபற்றி 'அம்மையே' என இறைவன் அருள, 'உனது படைப்பில் வந்து நின்று மீள உன்னிடம் வந்து ஒடுங்குகிறேன்', நீயே முதல்வன் என்று அம்மையார் கூறும் குறிப்பும் காணப்படுகிறது. 'ஒடுங்கி மலத்துளதாம்' எனச் சிவஞானபோதமும், 'உலகமெலாம் ஈன்றவனே' என நம்பி தேவாரமும், 'யாவர்க்கும் தந்தை தாயெனும் அவர்' எனத் திருஞானசம்பந்தர் புராணமும் (69) கூறுதலை ஈண்டு ஒப்புநோக்கலாம்.

அம்மையார் கேட்ட வரம்

அம்மையாரை நோக்கி இறைவன் 'இங்கு நம்மிடம் வேண்டுவது என்ன?' என்று கேட்டார். அம்மையார் இறைவனிடம் 'உம்மிடம் என்றும் நீங்காத இன்ப அன்பு வேண்டும்; பிறவாமை வேண்டும்; ஒரு கால் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்; நீர் ஆடும்போது நும் திருவடியின்கீழ் இருந்து மகிழ்வுடன் பாடிக்கொண்டிருக்க வேண்டும்' என வேண்டினார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க"

என்றார். (பா.எண். 60)

இன்பமும் அன்பும் பிரிக்கமுடியாதபடி இணைந்த இரு தன்மைகள். ''இன்பமே என்னுடைய அன்பே'' என்பது திருவாசகம். 'அன்பினால் இன்பம் கிடைக்கும். அதனால் அழியாத பேரின்பத்தைத் தரும் அன்பு வேண்டும்' என முதற்கண் கேட்கிறார்.

பிறவியால் வரும் துன்பம் கருதிப் பலரும் பிறவாமையை வேண்டுவது இயல்பாகும். 'மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே' என்று திருவாசகமும்

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது"

என்று திருக்களிற்றுப்படியாரும் (40) கூறுதல் காண்க. அம்மையாரும் 'யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்' எனத் தாம் அருளிய அற்புதத்திருவந்தாதியில் (பா.எண்.7) உரைத்தலையும் காண்க.

வினைப்பயன் முடியவில்லையெனில் பிறத்தல் நேரிடும். அப்போது நினைப்பும் மறப்பும் எல்லாப் பிறவிகளிலும் நிகழும். அவ்வாறு தமக்குப் பிறவி ஏற்பட்டால் எந்நிலையிலும் இறைவனை மறவா வரம் வேண்டும் என்கிறார். அடியவர்கள் பிறப்பதற்குக்கூட அஞ்சுவதில்லை. இறைவனை மறந்துவிடுவோமோ என்று தான் அஞ்சுவர். 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை' என்று சுந்தரரும் 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம் தரல் வேண்டும்' என்று நாவுக்கரசரும் இறைவனை மறவாத வரம் கேட்கின்றனர்.

பிறவாமை, மறவாமை என்ற இருநிலைகளையும் கடந்து, இறுதியில் பெறக்கூடிய பயனையும் அம்மையார் கேட்கிறார். பிறத்தலும், மறத்தலும் இறைவன் வயத்தன; தன் வயத்தன அல்ல. அதனால் இவற்றுள் எதுவரினும் திருவடிக்கீழ் என்றும் நீங்காது பாடிக் கொண்டிருப்பதை வரமாகக் கேட்கிறார். இறைவன் திருவடிக் கீழ் நின்று சிவானுபவம் துய்த்தலே ஆன்மா பெறத்தக்கது என்பதால் இவ்வரத்தை வேண்டினார்.

சிவபெருமான் அம்மையாரிடம் 'அம்மையே! தென்திசையில் பழையனூர்த் திருவாலங்காட்டில் நாம் ஆடுகின்ற நடனத்தைக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்டு, எப்போதும் ஆனந்தத்துடன் நம்மைப் பாடிக் கொண்டிருப்பாயாக' என்று திருவருள் செய்தார்.

பரமன் ஆடும் திருவாலங்காடு

இறைவன் அருளைப் பெற்று அம்மையார் வேதமெய்ப் பொருளாம் இறைவனிடம் விடைபெற்றுக்கொண்டு, அன்புமிக, திருவாலங்காடு என்னும் தலத்தைத் தலையாலே நடந்து சேர்ந்தார். கோயிலுள்புகுந்து இறைவன் திருமுன்பு நின்றார். எம்பெருமான் அண்டங்களில் பொருந்த திருவடியைத் தூக்கி ஆடிய ஊர்த்துவதாண்டவக் கோலம் கண்டு மகிழ்ந்தார். திருவாலங்காட்டுப் பெருமானைக் 'கொங்கை திரங்கி' எனத் தொடங்கும் பாடலுடன் பதினொரு பாடல்களால் வழிபட்டார்.

இறைவன் திருக்கூத்தைக் கண்டு மகிழும் காதல் மேன்மேலும் எழுந்ததால் வியப்பினால் 'எட்டியிலவம்' என எடுத்து மற்றொரு பதினொரு பாடல்கள் பாடினார். இப்பாடல்கள் மூத்த திருப்பதிகங்கள் எனப்பட்டன. இப்பதிகங்கள் திருவாலங்காட்டு அப்பனின் ஆடல் சிறப்பையும், அவன் ஆடிய இடுகாட்டின் தன்மையினையும் பேய்களின் இயல்பையும், காட்டுவன.

அம்மையார் திருவாலங்காட்டில் அம்பலவாணரின் ஆனந்தத் திருவடியின்கீழ் என்றும் அருள் இன்பவடிவமாக விளங்கு வாராயினார்.

அளக்கலாகாப் பெருமை

சிவபிரானால் 'அம்மையே' என மதுரமாக அழைக்கப் பெற்றவரும், அண்டமுற ஆடுகின்ற திருக்கூத்தைக் கண்டு சேவடிக்கீழ் என்றும் நீங்காதிருக்கும் பேறு பெற்றவருமான அம்மையாரை எவ்வாறு சிறப்பித்துப் போற்றுவது? அவர் பெருமை அளவில் அடங்காதது. இது அற்புதம் எனச் சேக்கிழார் பெருமானே

" மடுத்தபுனல் வேணியினார் 'அம்மை'யென மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவிய தாண்டவத்திலவர்
எடுத்தருளுஞ் சேவடிக்கீ ழென்றுமிருக் கின்றாரை
அயடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவா யினதம்மா "

(பா.எண். 65)

என வியந்து பாடுகிறார்.

❀

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. அம்மையார் காலச் சமுதாயம்

வாழ்க்கையின் விமர்சனமே இலக்கியம் என்றும் காலத்தின் கண்ணாடி இலக்கியம் என்றும் கூறுவர். கவிஞர்கள் படைக்கும் இலக்கியத்தில் காலத்தின் சாயலும், சமுதாய, வாழ்வியல் நிலைகளும் இடம்பெறுதல் இயல்பாகும். அவ்வகையில் அம்மையார் வரலாற்றில் காணலாகும் சமுதாய நிலையினையும் வாழ்வியல் நெறிகளையும் காணலாம்.

வாணிகம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைபவர் வணிகர்கள். பொருள் செய்து உலகம் நிலைபெறத் துணையாய் இருத்தலால் அவர்கள் உலக நலம் கருதி அறத்துவழியில் அருளொடு நடந்துகொள்ளல் வேண்டும். வணிகர்களின் இன்றியமையாமையை வள்ளுவர் 'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு'' (731) என உணர்த்துகிறார். 'தாழ்விலாச் செல்வர்' என்பவர்கள் 'கலத்தினும் காலினும் அரும்பொருள் தரும் வணிகர்' என்பர் பரிமேலழகர். காரைக்காலம்மையார் வணிகர் குடியில் பிறந்தவர். அக்கால வணிகர்களின் சிறப்பைத்தான் சேக்கிழார் தம் பாடலில் முதலில் குறிப்பிடுகிறார்.

> '' மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
> ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி ''
>
> (பா.எண். 1)

எனக் காரைக்காலின் பெருமையைக் காட்டுகிறார். வணிகர் மானம் காத்து, 'தருமம் பேணி' வாய்மை நெறியில் நின்றனர். மானம் என்பது 'எஞ்ஞான்றும் தன்னிலையில் தாழாண்மையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும்மாம்' என்பர் பரிமேலழகர். காரைக்கால் வணிகரும் தம் நிலைக்குத் தாழ்வு வராமல் வாணிகம் செய்தனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தமக்குரிய நூல்களை ஓதுதல், வேள்வி செய்தல், ஈதல், உழுவித்தல், பசு காத்தல் என்பன வணிகர்க்குரிய தருமங்கள் என்கிறது தொல்காப்பியம். காரைக்கால் வணிகரும் தமக்கென விதிக்கப்பட்ட தருமநெறிகளிலிருந்து தவறாது வாழ்ந்தனர்.

தருமம் என்பது கொல்லாமை, பிறர்க்குத் தீங்கு செய்யாமை, உண்மை பேசுதல் என்ற பொருள்களையும் குறிக்கும். உயிர் வாழ்க்கைக்குத் தேவையான உணவு முதலிய பண்டங்களை விற்பவர்களாதலின், அவற்றில் தவறு செய்தால் உயிர்கள் வருந்தும் என்றஞ்சி வாணிகம் செய்தனர். விற்கும் பொருள்களின் தரம் குறைந்தால் அவர்களின் வாழ்க்கைத் தரமும் தாழ்ந்துவிடும் அல்லவா? மேலும் அவர்கள் வாய்மை தவறாதும் தொழில் புரிந்தனர். பொருட்களைத் தாம் வாங்கிய விலை, விற்கும் விலை, இதுவெனக் கூறிப் பண்டை வணிகர்கள் வணிகம் செய்ததாகத் தெரிகிறது.

வணிகர்களுள் இப்பர்-கவிப்பர்-பெருங்குடியர் என்ற வகையினர் இருந்தனர் என்பதை ‘வணிகர் பெருங்குடி’ என்ற தொடரால் அறியலாகும். இத்தகு வணிகர்களால் காரைக்கால் ‘ஓங்கு பதியாக’ விளங்கியது.

கடல் வாணிகம்

‘திரை கடலோடியும் திரவியம் தேடு’ என்பது பழமொழி. உள்நாட்டில் மட்டுமன்றிக் கலம் ஏறிக் கடல் கடந்து சென்றும் பொருளீட்டினர். அம்மையாரைப் பிரிய எண்ணிய பரமதத்தன் தான் கடல் கடந்து பொருளீட்டச் செல்வதாகச் சொல்லித்தான் பிரிந்தான்.

" விடுவதே எண்ண மாக மேவிய முயற்சி செய்வான்
படுதிரைப் பரவை மீது படர்கலங் கொண்டு போகி
நெடுநிதி கொணர்வேன் "

எனப் பரமதத்தன் கூறுவதைக் காண்க. (பா.எ.32)

கடல்மீது செல்லுதல் பொருட்டுச் சுற்றத்தினர்களும், மற்ற வணிகப் பெருமக்களும் கப்பலைச் செய்தனர். கடல் கடந்த நாடுகளில் விற்கக்கூடிய பொருட்களைக் கப்பலில் ஏற்றினர். நல்ல நாளில் கடல் தெய்வத்தை வழிபட்டு, கப்பலைச் செலுத்துதற்குரிய மீகாமன், முதலிய தொழில் செய்வார்களுடன் பரமதத்தன் கடல்மீது சென்றான்.

சென்ற தேயங்களில் தான் கொணர்ந்த பொருட்களை விற்றுப் பொருளீட்டிச் சிலநாட்களில் மீண்டும் கப்பலில் ஏறி நாடு திரும்பினான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" கலம்சமைத் ததற்கு வேண்டும் கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப ஏற்றிச்
சலந்தரு கடவுள் போற்றி தலைமையா நாய்கன் தானும்
நலந்தரு நாளில் ஏறி நளிர்திரைக் கடல்மேல் போனான். "

(பா.எ.33)

" கடல்மிசை வங்க மோட்டிக் கருதிய தேயந்தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங் களவில்பல் வளங்கள் முற்றி
இடைசில நாட்கள் நீங்க மீண்டும் அக்கலத்தி லேறிப்
படர்புனல் கன்னிநாட்டோர் பட்டின மருங்கு சார்ந்தான். "

(பா.எ.34)

என்ற பாடல்கள் அவன் கடல் வணிகம் செய்ததைப் புலப்படுத்தும்.

பொருள் ஈட்டச் செல்கையில் மகளிரை அழைத்துச் செல்வது மரபு அன்று. 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்பது தொல்காப்பியம். அம்மரபு அம்மையார் காலத்தும் இருந்தது. அதனால் பரமதத்தன் மனைவியின்றித் தான்மட்டுமே செல்ல முடிந்தது.

தமிழர்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே கடல்கடந்து பிற நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்ததை வரலாற்று நூல்களும் இலக்கியங்களும் நமக்குத் தெரிவிக்கின்றன. மேலும் பெய்யும் மழைபோல நிலத்திலிருந்து கப்பலுக்கும், கப்பலிலிருந்து நிலத்திற்கும் அளந்தறியாப் பண்டங்களை ஏற்றியிறக்கியதாகக் கூறும் பட்டினப் பாலை (வரிகள் 128-131). காவிரிப் பூம்பட்டினத்தின் கடைத்தெருக்களில் பலநாட்டுப் பொருள்கள் குவிந்திருந்ததை,

" நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெறிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு. "

(ப.பா. 185-193)

என்ற அடிகளால் அறிவிக்கிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குடும்ப வாழ்க்கை

மக்கள் அன்பும் அறனும் பொருந்திய இல்லற வாழ்க்கையை நடத்தினர். தனதத்தன் குடும்பத்திலோ, நிதிபதியின் குடும்பத்திலோ எந்தப் பிரச்சனையும் இல்லை. ஒருவர்க்கொருவர் ஆதரவு காட்டி அன்பான குடும்ப வாழ்க்கையே பொதுவாக அமைந்திருந்தது.

பெண் குழந்தை

இல்லறத்தில் மக்கட்பேறு சிறந்த பேறாகக் கருதப்பட்டது.

" மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு " (குறள் 66)

அல்லவா? பெற்றோர்கள் இன்ன குழந்தைதான் வேண்டும் என்று விரும்பியதாகத் தெரியவில்லை. பெண் குழந்தை பிறந்துவிட்டால், அந்தக் குழந்தையைத் தமக்குக் கிடைத்த பெரும்பேறாக எண்ணிப் போற்றினர். அக்குழந்தையின் பிறப்பை,

" தங்கள்குலத் தலைவனார் தனதத்த னார் தவத்தால்
அங்கவற்பால் திருமடந்தை அவதரித்தா ளெனவந்து
பொங்கியபே ரழகுமிகும் புனிதவதியார் பிறந்தார். "

என்று அறிவிக்கிறார் ஆசிரியர். (பா.எண். 2)

தனதத்தனார் செய்த தவத்தால், திருமடந்தையே வந்து அவதரித்தாள் போலப் புனிதவதியார் பேரழகுடன் பிறந்தார் என்பதில் பெறுதற்கரிய பெண் குழந்தையைப் பெற முற்பிறப்பில் பெற்றோர் தவம் செய்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

'வணிகர் பெருங்குலம் விளங்க வந்து பிறந்து' என மீண்டும் சேக்கிழார் கூறுவதால் அக்குழந்தையால் வணிகர் குலம் முழுவதும் பெருமை அடையும் எனச் சுட்டுகிறார். பரமதத்தனின் இரண்டாம் மனைவி பெற்றெடுத்ததும் பெண் குழந்தைதான்.

" பெருகொளி விளக்குப் போலோர் பெண்கொடி அரிதிற் பெற்றான் "
(பா.எண். 37)

என்கிறார் சேக்கிழார்.

ஒவ்வொரு பெண்மகவும் ஒவ்வொரு குடியினை விளக்கம் செய்பவளாதலின் 'பெருகொளி விளக்கு' - என்று சேக்கிழார் சிறப்பிக்கிறார். முதல் மகவு பெண்ணாய்ப் பிறந்தால் குடிபெருகும் என்பது உலக வழக்கு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குழந்தை வளரவளரப் பெற்றோர் பல மங்கலச் சடங்குகளைச் செய்வர் என்பதும்

" பல்பெரு நற்கிளையுவப்பப் பயில்பருவச் சிறப்பெல்லாம்
செல்வமிகு தந்தையார் திருப்பெருகுஞ் செயல்புரிய "

என்ற அடிகளால் புலனாகிறது. (பா.எண்.4)

பெயர் சூட்டுவிழா

பெற்றோர் தமக்கு விருப்பமான பெயரைக் குழந்தைகளுக்கு வைப்பர். அவ்வாறே தனதத்தனர் தம் மகளுக்குப் 'புனிதவதியார்' எனப் பெயர் சூட்டினார். அன்பின் திறத்தால் உலகைத் தூயதாக்குபவர் என்ற பொருளில் இப்பெயரை வைத்திருக்கலாமோ என எண்ணும் வகையில் 'பொருள் பொதிந்த பெயராக' அப்பெயர் அமைந்துவிட்டது.

பரமதத்தன் தன்குழந்தைக்குத் தான் தெய்வமாக நினைத்த அம்மையாரின் பெயராகப் 'புனிதவதியார்' எனப்பெயரிட்டான். தெய்வத்தின் பெயரை வைத்தால் 'துன்பம் நேராது தெய்வத்தை மகிழ்விப்பது போலாகும்' என எண்ணி அப்பெயரை வைத்திருக்கலாம்.

பாம்புகள் முதலியவற்றின் அதிதெய்வங்களுக்குப் பொங்கலிட்டு, 'அவற்றால் தமக்குத் தீங்கு வருதல் கூடாது' என வழிபடும் சிறுதெய்வ வழிபாட்டுமுறை நம் நாட்டில் உண்டு. அவ்வகையில் அச்சத்தாலும் வணிகன் தன் குழந்தைக்குப் 'புனிதவதியார்' பெயரைக் சூட்டியிருக்கலாம். அல்லது அவர்மீது கொண்ட மதிப்பாலும் வைத்திருக்கலாம்.

குழந்தை வளர்ப்பு

அம்மையார் தளர்நடைப் பருவத்திலேயே சிவபிரான் மீது அன்பு கொண்டவராய் வளர்ந்தார். விளையாடும் போதும் இறைவனைப் பற்றிப் பேசியும் போற்றியும் சிவனடியார்களைக் கண்டால் தொழுவதும் செய்வார். அம்மையார் இயல்பாகவே இப்பண்புகளைப் பெற்றிருந்தார் என்றாலும், பெற்றோர்களின் வளர்ப்பு முறையும் இதற்குக் காரணமாகும். சைவப்பற்று மிக்க குடும்பமாக இருந்ததால் வணிகத்தை மட்டும் நோக்காமல் கடவுள் பக்தியைக் குழந்தைகளிடத்தில் வளர்ப்பதிலும் கவனம் செலுத்தினர் எனக் கொள்ளலாம். அதனாலன்றோ அம்மையார்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'' பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன் ''

என அற்புதத் திருவந்தாதியில் பாடுகிறார்.

இல் இகவாப் பருவம்

பெண் தன் பெண்மையை உணரும் பக்குவ காலமே அவள் பருவம் அடையும் காலமாகும். அப்பருவம் அடைந்தவுடன் தம் பெண்ணைப் பெற்றோர்கள் வெளியில் அனுப்புதல் இல்லை. இதுவே 'இல்இகவாப் பருவம்'. 'இற்செறிவு அறிவித்து வரைவுகடாதல்' என இதனை அகப்பொருள் இலக்கணம் கூறும். இந்தப் பருவமே பெண்கள் திருமணம் புரிந்து கொள்ளுதற்குரிய காலமாகக் கருதப்பட்டது.

திருமணம் பேசல்

புனிதவதியாரைப் பெண்கேட்டு மகன் வீட்டார் பக்கமிருந்து அறிவுடைப் பெரியோர்கள் வந்தனர். நிதிபதியின் மகனுக்கு அம்மையாரை மணம் முடித்துத் தருமாறும் கேட்டனர். தனதத்தன் ஒப்புதல் அளிக்க, அச்செய்தியைப் பெரியோர்கள் நிதிபதியிடம் கூற, திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

அக்காலத்தில் முதறிஞர்களே திருமணம் பேசினர். மரபும், குலமும், குடியும், தொன்மையும் பொருந்துமா எனப் பார்த்து முடிவு எடுத்தனர். மகள் வீட்டிற்கு முதலில் செல்பவர்கள் அவர்களே. ஒப்புதல் அறிந்து மகன் வீட்டிற்குச் செய்தியைக் கூறுவார்கள். இரு வீட்டார்க்கும் பொதுவாக முதறிஞர்கள் திருமணப் பேச்சில் செயல்படுவர் எனத் தெரிகிறது.

திருமணம்

'திருமண நாள்' குறிக்கப்படும். திருமண ஓலைகள் சுற்றத்தினர்க்கும் பிறர்க்கும் அனுப்பப்படும். திருமணத்தை ஒட்டி நடைபெறவேண்டிய சடங்குகள் நடக்கும். மணநாள் அன்று மணமகனை அணிகலன்களால் அழகு விளங்கச் செய்து, மணமுரசு முதலிய இசைக்கருவிகள் முழங்க 'மண எழுச்சி' பெற்று மணமகள் நகர்க்குச் செல்வர். மணமகள் இல்லத்தில் சைவ ஆகம நெறியோடு திருமணம் நடைபெறும்.

மேற்கூறிய முறைப்படியே புனிதவதியார், பரமதத்தன் திருமணம் நடைபெற்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமணத்தை 'மகட்கொடை' என்றும் சடங்குகளை 'மங்கல மணவினைகள்' என்றும் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

தனிக் குடித்தனம்

பெற்றோர்கள் ஒரே மகளைப் பெற்றவர்களாயின், தம்பெண்ணை அவர்கள் தம் ஊரைவிட்டு அனுப்புதல் இல்லை. தாம் வாழும் ஊரிலேயே ஒரு வீடு எடுத்து, இல்லத்திற்கு வேண்டிய எல்லாப் பொருட்களையும் கொடுத்துத் தனியாக வாழுமாறு செய்கின்றனர். எத்துணைச் செல்வர்களாயினும் மகளை வீட்டோடு வைத்துக்கொள்ளும் வழக்கம் இல்லை.

பரமதத்தனும் திருமணம் முடிந்ததும் அம்மையாருடன் தனி வீட்டிலேயே தன் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டான்.

திருமணத்திற்குப்பின் கண்ணகி, கோவலன் இல்லறம் நடத்த, கண்ணகியின் பெற்றோரும் தனி வீடு அமைத்துக் கொடுத்ததை

" வாரொலி கூந்தலைப் பேரியற்கிழத்தி
மறப்பரும் கேண்மையோடு அறப்பரிசாரமும்
விருந்து புறந்தரூ உம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோடு ஒருதனி புணர்க்க "

(சில. 84-89)

என்ற அடிகள் உணர்த்துவதை ஈண்டு ஒப்புநோக்கலாம்.

மனையறம்

கற்புநெறி தவறாது மகளிர் கணவருடன் இணைந்து இல்லறம் நடத்தினர். அம்மையாரின் இல்லறவாழ்வைப் 'பாங்கில் வரு மனையறத்தின் பண்பு வழாமையில் பயில்வார்' (14) எனச் சேக்கிழார் பாராட்டுவார்.

மற்றொரு மாங்கனியும் தருக என்றபோதும் 'கணவன் கேட்டு இல்லை எனச் சொல்வது கடமையன்று' என்றுதான் அம்மையார் நினைத்தார்.

இரண்டாவது கனியைச் சுவைத்தபின்னர் 'இக்கனியைப் பெற்றது வேறெங்கு' எனக் கேட்டபோதும் உண்மையைக் கூறுதலே ஏற்றது எனக் கணவனிடம் நடந்தது நடந்தபடி கூறிவிட்டார். இங்கு அம்மையாரின் நிலையைக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" கைவரு கற்புடை நெறியால் கணவன் உரை காவாமை
மெய்வழியன்று' என விளம்பல் விடமாட்டார் "

என அழகாகக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

கணவன் தன்னைப் பிரிந்து வாழ்ந்த நிலையிலும், உண்மை அறியாத அம்மையார் மனையறங்களை வழுவாமல் காத்து வந்தார்.

" மன்னிய கற்பினோடு மனையறம் புரிந்து வைக " (39)

என்பர் சேக்கிழார்.

மகளிரது இல்லறச் சிறப்பு இதனால் புலனாகிறது. மகளிர் அழகாக இருக்க நினைப்பதும் கணவர்க்காகவே என்பதையும் அம்மையார் வரலாறு உணர்த்துகிறது. கணவன் தன்னை ஏற்கவில்லை என்றதும், அவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி நீங்கிப் பேய்வடிவு வேண்டிப் பெற்றார். அவர் அவ்வடிவு பெற்றதும் பிறர் நெஞ்சு புகாக் கற்பு நெறிக்காக எனலாம்.

விருந்தோம்பல்

" இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு " (81)

என்பர் வள்ளுவர்.

விருந்தோம்பலை அக்காலத்தே சிறந்த அறமாகவே போற்றினர். வீட்டிற்கு வந்தவர்களைப் பெறுதற்கரிய நல்விருந்தினர் என மகிழ்ந்து போற்றினர். அம்மையார் தம் இல்லம் வரும் அடியார்க்கு அமுது படைத்தும், பொன்னும், நவமணியும், துகிலும் கொடுத்து உபசரித்தார். அடியவர்கட்கு அமுது செய்வித்தலை, மண்ணில் பிறந்தார் பெறும் பயன்களுள் முதலாவதாகும் என்கிறார் சேக்கிழார். (ஞான சம்பந்த புராணம் பா.எண் 1087). ஆயிரக்கணக்கான வீடுகளை அந்தணர்களுக்குக் கட்டிக் கொடுப்பதும், ஆயிரக்கணக்கான கோபுரங்கள் கட்டுவதும் ஒரு பகற்பொழுதில் ஞானி ஒருவர்க்கு உணவளிப்பதற்கு ஈடாகாது என்கிறார் திருமூலர்.

" அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகல்ஊண் பலத்துக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந் தானே "

(திரு. ம. 1839)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விருந்தினர் வந்த வேளையில் கறியமுது இல்லையெனின் பழம் வைத்தும் உபசரிப்பர் என்பதை அம்மையார் உபசரிப்பால் அறியமுடிகிறது.

அக்காலத்தில் விருந்து படைக்கும் முறையையும் கவனித்தல் வேண்டும். வந்த அடியார்களின் பாதங்களைத் தூய்மைப்படுத்த முதலில் நீர் கொடுத்தனர். பின்னர் உண்பதற்குப் பரிகலம் (வாழை இலை) இட்டு, அதில் அமுது படைத்து, கறி வகைகளைப் பரிமாறினர். வந்த அடியார்களின் பசிபோக்குதலைத் தம் கடமையாகக் கொண்டனர்.

விருந்தினரையும் அடியாரையும் உபசரிப்பது மனைவியர் கடமையாக இருந்தது. அதற்கு அவர்கள் கணவர் சொல்லை எதிர் பார்க்க வேண்டிய தேவைஇல்லை. தம் கணவர் உண்பதற்கு முன்னேயும் அடியார்கள் உபசரிக்கப் பெற்றார்கள் என்பது அம்மையார் வரலாற்றில் காணப்பெறும் உண்மை ஆகும்.

மேலும் எத்துணைச் செல்வராயினும் கணவர்க்கும், வந்த விருந்தினர்க்கும் ஏவலாட்கள் கொண்டு படைக்காமல் தாமே உணவு படைக்கும் வழக்கம் இருந்தது.

பிரிந்தாரைச் சேர்த்தல்

கணவன் மனைவி பிரிந்திருந்தால் அவர்களை ஒன்று சேர்க்கவே அனைவரும் முயன்றனர். பரமதத்தன் அம்மையாரைப் பிரிந்து வேற்றூரில் வாழ்கிறான் என்பதை அறிந்த சுற்றத்தினர், அவரை அழைத்துச் சென்று கணவனிடம் சேர்க்கவே விரும்பினர். (பா.எண்.41) அவரை அழைத்துச் சென்றதும், அவர் வருகையைக் கணவனுக்கும் சொல்லிவிட்டனர்.

" குலமுதல் மனைவியாரைக் கொண்டு வந்தணைந்த தன்மை
தொலைவில் சீர்க் கணவனுக்குச் சொல்லி முன் செல்லவிட்டார் "

என்பர் ஆசிரியர். (பா.எண். 43)

குடும்பத்தில் கணவன், மனைவி பிரிந்திருப்பின், சுற்றத்தினர் முயற்சி மேற்கொண்டு அவர்களை இணைத்து வைப்பதில் ஈடுபடும் நல்ல பழக்கம் இருந்தது அறியப்படுகிறது.

குறை வேண்டுவோர்

பெரியோர், அரசர் முதலானோரிடத்துத் தம் குறையைத் தீர்த்துக்கொள்ள விரும்புவோர் பழம் முதலியன அன்பளிப்பாகக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொடுத்தனர். மரியாதைப் பொருட்டும், கொடுத்ததாகக் கொள்ளலாம். பரமதத்தனிடம் குறைவேண்டிச் சென்றோர் அவனுக்கு இரண்டு மாங்கனிகளைத் தந்தனர். பரமதத்தனும் அவர்கள் வேண்டியதைச் செய்து கொடுத்தான்.

மகளிர் பாதுகாப்பு

மகளிரை வேற்றூர்களுக்கு அழைத்துச் செல்கையில் அவர்களைப் 'பல்லக்கில்' ஏற்றிச் செல்வது ஒரு மரபாக இருந்து வந்துள்ளது. அம்மையாரைப் பல்லக்கில் ஏற்றித் திரையிட்டு மறைத்துத் தோழியரும் உறவினரும் உடன்வர, பாண்டிய நாட்டிற்குச் சென்றனர். (பா.எண். 42) என்பதே சான்று.

பெரியாரை மதித்தல்

அடியார்கள் அவதரித்துப் பணி செய்த புண்ணியத் தலங்களைக் காலால் மிதித்து நடப்பதற்குப் பெரியோர் அஞ்சுவர். அம்மையார் கயிலைமலை மீது தலையால் நடந்து சென்றார். கயிலை மலை சிவபிரான் எழுந்தருளியுள்ள மலையாதலின் அதன் அடிவாரம் சிவனடியாகக் கருதினார். அவனது திருவடியில் தம் தலை பொருந்த நடந்தே சென்றார். அவ்வாறே திருவாலங்காட்டிற்கும் தலையால் நடந்து சென்றார்.

அம்மையார் காலத்தில் சமுதாய நிலையும், வாழ்வியல் நெறிகளும் உயர்ந்த நிலையில் இருந்தன என அறிகிறோம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

4. அம்மையார் அருளிய நூல்கள் - ஒரு பார்வை

காரைக்கால் அம்மையார் அருளிய நூல்கள் அற்புதத் திருவந்தாதி. திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகங்கள் இரண்டு என்பன.

அற்புதத் திருவந்தாதி

தம் கணவர் தம்மைத் துறந்ததை அறிந்ததும், இறைவன் அருளால் பேய் வடிவம் பெற்று, அப்போது தம் மனத்தெழுந்த ஞானத்தினால் சிவபிரானைப் பாடிய முதல் நூல் அற்புதத் திருவந்தாதி. இதனை,

" உற்பவித்து எழுந்த ஞானத்து ஒருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந்தாதி அப்பொழுது அருளிச்செய்தார். "

(காரை அம்.புரா. 52)

எனச் சேக்கிழார் கூறுகிறார்.

அற்புதம் என்னும் சொல் வியப்பு, அழகு, ஞானம் எனப் பலபொருள் கொண்டது. அம்மையார் தாம் பெற்ற அடிமைத்திறத்தை வியந்து பாடியதால் இஃது அற்புதத் திருவந்தாதி ஆயிற்று. அற்புதம் என்றால் ஞானம். சிவபிரானை 'அற்புத மூர்த்தி' என்பர். எனவே ஞானமே திருமேனியாக உடைய சிவனைப் பாடியதால் 'அற்புதத் திருவந்தாதி' எனப்பெறும் என்றும் கூறுவர்.

இந்நூல் அந்தாதி முறையில் அமைந்துள்ளது. அந்தாதி என்பது முதல் செய்யுளின் இறுதியிலுள்ள சொல், அடுத்த செய்யுளில் முதலில் வருவது. அற்புதத் திருவந்தாதியில் முன்பாட்டின் இறுதிச் சொல் அடுத்த பாட்டின் முதலில் அமைந்துள்ளது. இவ்வாறு அந்தாதி முறையில் பாடிய நூலாதலின் அற்புதத் திருவந்தாதி எனப்பட்டது. மேலும் இந்நூலின் முதல் பாட்டின் முதற்சொல் 'பிறந்து' என்பது கடைசிப் பாட்டின் இறுதிச் சொல்லான 'பிறந்து' என்பதோடு ஒன்றி வந்துள்ளது. இவ்வாறு அமைவதை மண்டலித்தல் என்பர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அற்புதத் திருவந்தாதி 101 வெண்பாக்களைக் கொண்டது.

இந்நூல் சிவபிரானின் முழுமுதற் தன்மையினையும், பேராற்றலையும் விளக்கிக் கூறுகிறது. இறைவனுக்கு அம்மையார் ஆட்பட்டதிறமும், அம்மையார் பிரானிடம் காட்டிய தாயன்பின் திறமும் இந்நூலில் காணப்படும். சைவ சித்தாந்தக் கருத்துக்கள் தன்னகத்து அடக்கியது இந்நூல். கருத்துக்களை அம்மையார் நகைச்சுவைபட, இலக்கிய நயத்துடன் கூறியுள்ளார். மனிதர் உய்வதற்குரிய நெறிகளை அறிவுரைகளாக அம்மையார் தந்துள்ளார். இறைவனின் அருட்கோலங்களில் திளைத்தும் வியந்தும் பாடிய நூல் அற்புதத் திருவந்தாதி.

இறுதிப் பாட்டில் 'இந்நூலைப் பயில்வோர் ஆராத அன்பினோடு அண்ணலைச் சென்று ஏத்துவார்' என்று நூற்பயனும் கூறப்படுகிறது.

திரு இரட்டை மணிமாலை

அம்மையார், அற்புதத் திருவந்தாதியை அடுத்துப் பாடியது திரு இரட்டை மணிமாலை. இதனை, 'ஆய்ந்த சீர் இரட்டை மாலை அந்தாதி எடுத்துப் பாடி,' என்பர் சேக்கிழார். அற்புதத் திருவந்தாதி பேய் வடிவம் பெற்றவுடன் அத்தன்மையின் திறத்தைப் புகழ்ந்து பாடியதெனின், அத்தன்மையைத் தனக்குத் தந்த இறைவனது சிறப்புக்களைப் பாடியது இரட்டை மணிமாலை. இவை இரண்டும் பாண்டிய நாட்டில் பாடியன ஆகும்.

இரண்டு வெவ்வேறு மணிகளை மாறி, மாறி அமைத்துக் கட்டப்பெறும் மாலை போல, கட்டளைக் கலித்துறை முன்னும், வெண்பா பின்னுமாக மாறி மாறி வருமாறு, அந்தாதித் தொடையால் மாலைபோல் அமையப் பாடப்பெற்றதால் இந்நூல் 'திரு இரட்டை மணி மாலை' ஆயிற்று. இது இருபது பாடல்கள் கொண்டது.

இறைவனின் பெருமைகளைக் கூறி, இறைவனைத் தொழுதலே உய்வதற்குரிய வழி என இந்நூலில் அம்மையார் அறிவுரை கூறுகிறார்.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்

திருக்கயிலையில் இறைவன் கூறிய ஆணைப்படி, திருவாலங்காடு சென்று அங்கு அண்டமுற நிமிர்ந்தாடும் பெருமானின் திருக்கூத்தைக் கண்டபோது பாடியது, ''கொங்கை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திரங்கி'' என்று தொடங்கும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். அதன்பின் அருளியது ''எட்டிஇலவம்'' என்று தொடங்கும் திருப்பதிகம்.

ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், நான்கடிமுதல் எட்டடிவரை வரும் வெண்பா ஆகியவற்றால் அமைந்து பத்து அல்லது இருபது பாடல்களைக் கொண்டது ''பதிகம்'' எனப் பன்னிரு பாட்டியல் கூறும். அம்மையாரின் பதிகங்கள் திருக்கடைக்காப்பு நீங்கலாக பத்துப் பாடல்கள் கொண்டன. மொத்தம் விருத்தப்பாவில் 22 பாடல்கள் காணப்படுகின்றன.

பதிகம் என்ற அமைப்பில் உள்ள எல்லா நூல்களுக்கும் இது காலத்தால் முந்தியது என்பதாலும், மூத்த முழுமுதற் பொருளாகிய சிவபிரானைப் பாடுவதாலும், திருவாலங்காட்டில் பாடப் பட்டதாலும் இப்பதிகங்கள் 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்' எனப்பட்டன.

திருவாலங்காட்டில் பேய்கள் சூழ இடுகாட்டில் சிவபிரான் ஆடிய கூத்தினை அம்மையார் கண்டு களித்தார். முதல் திருப்பதிகம் திருத்தலத்தைப் போற்றிப் பாடியது. ஒவ்வொரு பாடலும் இறுதியில் அப்பன் ஆடும் இடம் திரு ஆலங்காடே என முடியும். அடுத்துப் பாடிய திருப்பதிகம் திருநடனத்தைப் போற்றியது.

முதல் திருப்பதிகம் நட்டபாடை என்னும் பண்ணில் அமைந்தது. அடுத்த பதிகம் 'இந்தளம்' என்னும் பண்ணில் அமைந்தது.

பதிகங்களின் இறுதிப் பாடல்கள் நூற்பயனைக் கூறுகின்றன. அம்மையார் பாடிய பதிகப் பாடல்கள் பத்தும் வல்லவர்கள் பாவம் நீங்க, சிவகதி சேர்ந்து இன்பம் எய்துவர் என்று நூல்பயன் கூறப்படுகிறது.

பன்னிரு திருமுறைகளின் தொகுப்பில் அம்மையார் நூல்கள், பதினொன்றாம் திருமுறையில் திரு ஆலவாயுடையார் திருமுகப் பாசுரத்தை அடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

சிறப்பியல்புகள்

1. திருமுறை ஆசிரியர்களுள் காரைக்கால் அம்மையார் ஒருவரே பெண்பாற் புலவர்.
2. அந்தாதி, திருவிரட்டை மணிமாலை, பதிகம் என்ற அமைப்பில் முதன்முதல் பாடியவர் அம்மையாரே.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. அற்புதத்திருவந்தாதி, திருப்பதிகங்கள் ஆகியவற்றுள் உள்ள இறுதிப் பாடல் பதிகப் பலனைக் கூறுகின்றன. இவ்வமைப்பு முறை பின்வந்த திருஞானசம்பந்தர் தம் திருக் கடைக்காப்பைச் செய்வதற்கு முன்னோடியாக உள்ளது.

4. அம்மையாரின் பதிகங்களில் காணலாகும் பேய், காட்டு வர்ணனைகள் பிற்காலத்தில் தோன்றிய பரணி நூல்களுக்கு வழிகாட்டியாக விளங்குவன.

5. 'கொங்கை திரங்கி' எனத் தொடங்கும் திருப்பதிகம் 'நட்டபாடை' என்னும் பண்ணிலும் 'எட்டிஇலவம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் 'இந்தளம்' என்னும் பண்ணிலும் அமைந்தன.

   திருஞானசம்பந்தர் அருளிய முதல் திருமுறையின் முதல் திருப்பதிகம் நட்டபாடைப் பண்ணிலும், இரண்டாவது திருமுறையின் முதல் திருப்பதிகம் இந்தளப் பண்ணிலும், சுந்தரர் அருளிய முதல் திருப்பதிகமாகிய 'பித்தா பிறைசூடி' என்னும் பதிகம் இந்தளப் பண்ணிலும் அமைந்திருந்தலை ஈண்டு ஒப்பு நோக்கலாம்.

6. ஏழு சுரங்களில் இசை பயில வாத்தியக்கருவிகள் முழங்க இறைவன் நடம்புரிந்தார் என்று அம்மையார் பாடும் பாடல் (தி.மு.தி.1.9) அவரது இசைப்புலமையைப் புலப்படுத்துகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5. சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

நாயன்மார்கள் சிவவழிபாட்டாலும் சைவ சமயம் சார்ந்த செயல்களாலும் சைவ மதம் தழைக்கச் செய்தனர். அவர்கள் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இத்திருமுறைகள் சிவபிரானின் பெருமையினையும், அவனை அடையும் நெறிகளையும் உணர்த்துகின்றன. எனவே, சைவசித்தாந்தக் கொள்கைகளை வகுக்க அவையே அடிப்படையாக அமைந்துள்ளன. அவ்வகையில் அம்மையார் பாடல்களில் காணலாகும் சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் காணலாம்.

சைவ சித்தாந்தம் உணர்த்தும் முதன்மையான பொருள்கள் மூன்று. அவை பதி (இறைவன்), பசு (உயிர்), பாசம் (தளை அல்லது கட்டு) என்பன. இவற்றுள் அறிவிக்காமலேயே அறியும் பொருள் பதி; அறிவித்தால் அறியும் பொருள் பசு; அறிவித்தாலும் அறியாத பொருள் பாசம்.

இவை மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுவன அல்ல; ஒவ்வொன்றும் அதன் அதன் அளவில் வியாபகமாகவே உள்ளது. காலத்தினாலும் இடத்தினாலும் கட்டுப்படாதவை. இவற்றிற்குத் தோற்றமும் இல்லை. எனவே அழிவும் இல்லை. இம்மூன்றும் என்றும் உள்ளவை என்கிறது சைவ சித்தாந்தம்.

" பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி " (திரு.ம.113)

" அறிவுஅறி வென்ற அறிவும் அனாதி
அறிவுக் கறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி "

எனும் திருமூலர் கூற்றாலும் அறியலாம். (திரு.ம.2378)

பதி

இம்முப்பொருள்களுள் பதியே உயர்ந்த உண்மைப் பொருளாகும். எல்லா உயிர்களுக்கும், அனைத்துப் பொருட்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

களுக்கும் தலைவனாக விளங்குவதால் இறைவன் 'பதி' எனக் குறிக்கப்படுகிறான். சைவ சித்தாந்தத்தில் சிவபிரான் அரன் என்றும் சிவன் என்றும் ஈசன் என்றும் குறிக்கப்படுகிறான். உயிர்களின் கட்டுகளை நீக்குபவன் என்பதாலும் உலகம் அவனிடம் ஒடுங்குகிறது என்ற பொருளாலும் அவன் 'அரன்' ஆவான். பேரின்பமாக விளங்குவதால் 'சிவன்' எனப் பெயர் பெறுகிறான். அனைத்திலும் கலந்து இருப்பதால் 'இறைவன்' என்றும் எல்லா ஐசுவரியங்களையும் உடையவன் என்பதால் 'ஈசன்' என்றும் போற்றப்படுகிறான். இப்பெருமானைப் பற்றிய அரிய செய்திகள் பலவற்றை அம்மையார் பாடல்களில் காணலாம்.

இறைவன் முழுமுதற் கடவுள்

இறைவன் மேலானவன் என்னும் பொருள்பட, அம்மையார் இறைவனை ஈசன் என்றும், பிரான் என்றும், அரன் என்றும் குறிப்பதைக் காணலாம்.

'ஈசன்' - (அ.தி.10, 23, 53; தி.இ.ம.மா.; 2, 3)

பிரான் - (அ.தி.10, 22, 45, 61; தி.இ.ம.மா.; 3)

அரன் - (அ.தி. 17)

எல்லோர்க்கும் முற்பட்டவன் என்பதால் 'முதற்கண்ணான்' (அ.தி. 32) என்றும், எல்லோரினும் பெரியவன் என்னும் கருத்தில் 'பெரியானை' (அ.தி.85) என்றும் தேவர்கட்கெல்லாம் தலைவனாதலின் 'வானோர்பிரான்' (அ.தி. 1, 44) என்றும் எல்லா உலகங்கட்கும் தலைவனாதலின் 'மூவேழ் உலகம் ஆள்பவன்' (அ.தி.19) என்றும் இறைவனைப் போற்றுகிறார். 'ஈசன் அவனலாது இல்லை' (தி.இ.ம.மா.2) எனச் சிவனைத்தவிரப் பிறதெய்வங்கள் இல்லை என அவனது மேம்பட்ட நிலையை உணர்த்துகிறார்.

> " சிவனோடொக் குந்தெய்வம் தேடினு மில்லை
> அவனோடொப் பாரிங் கியாவரும் இல்லை " (திரு. ம. 5)

என்று திருமூலர் கூறுவதையும் காண்க.

இறைவன் நிகரற்றவன்

சிவபிரானுக்கு நிகர் எவரும் இல்லை என்பது சித்தாந்தக் கருத்து. அம்மையாரும் சிவபிரானை 'ஒப்பினை இல்லவன்' (தி.மூ.தி. 1.11) 'நிகர் ஏதுமின்றித் தழல் கொண்ட சோதி செம்மேனி எம்மான்'

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

(தி.இ.ம.மா.11) எனக் குறிப்பிடுகிறார். இறைவனுக்கு நிகர் அவனே என்பதால் 'தன்னைத் தானே ஒப்பான்' என்னும் பொருளில் 'தன்னோடே ஒப்பான்' (அ.தி.49) என்று பாராட்டுகிறார். உமாபதிசிவம் தம் 'திருவட்பயனில்' 'நிகரில் இறை' (செய். 1) என்றும் திருமூலர் ''தன்னை ஒப்பார் என்றும் இல்லாத தலைமகன்'' (திரு. ம. 6) என்றும் கூறுவதை ஈண்டு ஒப்புநோக்கலாம்.

இறைவன் ஞான வடிவினன்

வேதங்களை உணர்ந்தவனும் வேதப் பொருளாக இருப்பவனும், வேதங்கள் தோன்றக் காரணனும் சிவபிரான் என்பதால், அம்மையார் இறைவனை,

> '' வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்கு
> ஆதியனை '' (திரு. இ. ம.மா.8)

என்கிறார். அவன் ஞானத் தலைவனாய் விளங்குவதால் 'ஞானத்தான்' (அ.தி.6), 'ஞான மயனாகி நின்றானும்' (அ.தி.21) என வியக்கிறார்.

இறைவனின் அப்பாற்பட்ட நிலை

சைவசித்தாந்தக் கருத்துப்படி சிவன் பழம்பெரும் சமயத்தின் முப்பெரும் கடவுளரான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோரையும் பிற கடவுளரையும்விட மேலானவன் எனக் கருதப்படுகிறான். உருத்திரனைச் சிவனுடன் ஒருமைப் படுத்தினாலும், சிவன் ஏனைய கடவுளரினும் உயர்ந்தவன். ஏனெனில் அழிவுக் காலத்தில் உருத்திரன் மட்டுமே எவ்விதப் பாதிப்புமின்றி இருக்கிறான். அழிவுக் காலத்தில் பிரம்மாவும், விஷ்ணுவும் செயலற்று இருக்க, சிவனின் செயல்களான படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியன அனைத்துக் காலங்களிலும் தொடர்கின்றன. விஷ்ணுவும், பிரம்மாவும் சிவனின் ஆணைப் படியே காத்தல், படைத்தல், தொழிலகளைச் செய்கின்றனர். எனவே பிற கடவுளர் சிவனுக்கு அடுத்தே உள்ளனர் என்பதும் சிவபிரான் அவர்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதும் சித்தாந்தக் கருத்தாகும். இந்த உண்மையை 'உருத்திரன் ஒருவரே கடவுளாவார். அவனைத் தவிர வேறு கடவுள் இல்லை. அவன் தன் ஆணைச் சக்தியால் எல்லா உலகங்களையும் ஆள்கிறான். அவுன் எல்லா உயிர்களையும் படைக்கிறான்; காக்கிறான்; காலமுடிவில் அவைகளை ஒருமிக்க ஒடுக்குகிறான்;' என்று சுவேதாசுவர உபநிடதமும் உறுதி செய்கின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருநாவுக்கரசர் எண்ணற்ற பிரம்மாக்களும், விஷ்ணுக்களும் இருந்து செல்ல, சிவன் மட்டும் அழிவில்லாதவனாக என்றும் இருக்கிறான் எனக் குறிப்பிடுகிறார்.

" நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்கனே
ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறிலா தவன் ஈசன் ஒருவனே " (தேவா. 5-100.3)

அனைவர்க்கும் அப்பாற்பட்டவன் சிவன் என்பதை அம்மையாரும் பாடுகிறார்.

" அரன் என்கோ? நான்முகன் என்கோ? அரிய
பரன் என்கோ? பண்புணர மாட்டேன் " (அ.தி. 18)

''நின்னை உருத்திரன் (அழித்தல் செய்யும் கால ருத்திரன்) என்பேனோ? பிரம்மதேவன் என்பேனோ? அப்பாற்பட்ட விஷ்ணு என்பேனோ? எம்மானை இன்ன பண்புடையவன் என உணரமாட்டேன்'' என்று கூறுகையில் முப்பெருங் கடவுளராகி, மூவர்க்குள்ளும் நிறைந்து அவ்வவர் தொழில்களைச் செய்வித்தும் அதற்கப்பாற்பட்டும் அறியமுடியாது நிற்பவன் சிவபெருமான் என்பதை உணர முடிகிறது.

இறைவனின் பொது இயல்பு

இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாயும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாயும் நின்று அவற்றைச் செயற்படுத்துவான்.

சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரத்தில் வரும் 'அவையே தானேயாய்' என்னும் தொடர் இதனை உணர்த்துகிறது. இத்தொடரை முதலில் 'அவையேயாய்', 'தானேயாய்' என இரண்டு தொடராகவும், பின்னர் 'அவையே தானேயாய்' என ஒரு தொடராகவும் பொருள் கொள்வர். இவற்றுள் 'அவையேயாய்' என்பது இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாதலை உணர்த்தும். 'தானேயாய்' என்றது அவ்வாறு கலந்து நின்ற நிலையிலும் பொருள்தன்மையால் வேறாய் நிற்றலை உணர்த்தும். 'அவையே தானேயாய்' என்றது உள்ளிருந்து இயக்கும் தன்மையால் உடனாய் நிற்றலை உணர்த்தும். அம்மையாரின்,

" என்னை உடையானும் ஏகமாய் நின்றானும்
தன்னை அறியாத தன்மையனும் " (அ.தி.92)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்ற பாடலில் 'என்னை உடையானும்' என்றது ஒன்றாயிருத்தலையும் 'ஏகமாய் நின்றான்' என்றது வேறாயிருத்தலையும், 'தன்னை அறியாத் தன்மையன்' என்றது உடனாய் இருத்தலையும் குறிக்கும் என்பர்.

வேதங்கள் கூறும் இறைவன்

கடவுள் என்ற சொல்லில் 'கட' என்பது அனைத்தையும் கடந்து நிற்பது என்பதையும் 'உள்' என்பது கலந்து நிற்பது என்பதையும் உணர்த்தும். சிவன் உலகத்தோடு அத்துவிதமாய்க கலந்தும் உள்ளான். அனைத்தையும் கடந்தவனாகவும் உள்ளான். வேதங்கள் இறைவனை விசுவகாரணன் (உலகப் படைப்புக்குக் காரணன்) என்றும் விசுவமயன் (படைப்பு மயமானவன்) என்றும் விசுவாதீதன் (படைப்பு முழுமைக்கும் அற்பாற்பட்டவன்) என்றும் விசுவஅந்தர்யாமி (படைப்பு முழுமையில் உள்ளுறைபவன்) என்றும் போற்றுகின்றன.

" .... தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரன் " (அ.தி. 17)

என்று அம்மையார் உலகப் படைப்பிற்குக் காரணமாக இறைவன் (விசுவகாரணன்) விளங்குவதை உணர்த்துகிறார்.

" மூவேழ் உலகங்கள் ஆள்வான் " (அ.தி.19)

என்கையில் இறைவன் (விசுவமயன்) உலகமாய் நிற்றலைக் காட்டுகிறார்.

" பிறர் அறியலாகப் பெருமையரும் தாமே " (அ.தி.30)

என்பதால் சிவபிரானின் உலகைக் கடந்த நிலையினையும் புலப்படுத்துகிறார். உலகப் பொருள்களோடும், உயிர்களோடும் அவர் கலந்திருப்பதே அவரது 'விசுவ அந்தர்யாமி' நிலையாகும்.

இறைவனின் உள்ளுறை நிலை

உள்ளுறை நிலையில் சிவபிரான் நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம், இருசுடர், உயிர்கள் எனும் இவற்றில் நீக்கமறக் கலந்து, அவற்றை இயக்கிவருகிறான். அவற்றையே தன் வடிவமாகக் கொண்டு 'அட்டமூர்த்தியாய்' விளங்குவான் என்பர்.

" விரிசுடர் பார் ஆகாயம் அப்பொருளும் தானே " (அ.தி.20)

எனப்பாடிய அம்மையார்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" அவனே இருசுடர் தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற்றாவான் - அவனே
இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய் " (அ.தி.21)

என்று இறைவன் அட்டமூர்த்தியாய் விளங்குதலை உணர்த்துகிறார். இங்கு இயமானன் என்றது உயிரைக் குறிக்கும். இறைவன் அட்டமூர்த்தியாய் விளங்குவதைக் கீழ்க் காணும் நூல்களும் உணர்த்துகின்றன.

" எட்டுக் கொண்டார் " (திருவுந்தியார். செய். 24)

" நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான் "
(திருவாசகம் தி.நோ. 5)

இறைவன் திருமேனி

உயிர்கள் மெய்யுணர்வு பெற்று உய்தல்பொருட்டு இறைவன் உருவம் கொண்டு நிற்பன். அவ்வுருவம் அருவத்திருமேனி, அரு உருவத்திருமேனி, உருவத்திருமேனி என மூன்று வகையில் அமையும். இறைவன் உயிர்கள் மீது காட்டும் அருளாலே, தன்னை மனிதர்களுக்குக் குறிப்பிட்ட உருவில் வெளிப்படுத்திக் கொள்கிறான். இறைவனின் உருவ நிலைகளைப் பலவகையாகச் சைவ சித்தாந்திகள் குறிப்பிடுகின்றனர். இறை அருளால் இறைவனை அறிய முடியும் என்பதை

" அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே "

என்று திருநாவுக்கரசர் குறிப்பிடுதல் காண்க.

காரைக்கால் அம்மையார் கண்ட இறைவனின் உருவத் திருமேனியைக் காண்போம். சிவபிரான் சிவந்த மேனியன். (அ.தி. 4, 44). மின்னலைப் போல் ஒளிமிகுந்த சடையினன் (அ.தி. 15, 37). அவன் ஆடுகையில் சடைமுடி தாழும் (தி.மூ.தி. 10). கங்கையொடு திங்களைத் திருமுடியில் சூடியவன் (அ.தி.11) கொன்றை மலர்களும் வன்னிமாலையும் தலையினை அழகுசெய்வன (அ.தி.7) வெண்ணீறு பூசிய மேனியன் (அ.தி.7). அவனது கண்டம் மேகமெனக் கறுத்திருக்கும் (அ.தி. 23, 89). நீலமணி மிடற்றனாய்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

விளங்கினான் (அ.தி. 33). பகையாகிய பிறையும், அரவும், புனலும் அனலும் சூடும் இறைவன் (அ.இ.தி.147). பாம்பை அணியாக அணிபவன் (அ.தி.14).

மேற்கூறிய இறைவன் திருமேனியை வர்ணிக்கும் அம்மையார் இறைவனிடம் பல பாடல்களில் பாம்பை அணிகலனாகக் கொள்ளாதே எனத் தாயன்போடு இறைஞ்சுவதையும் காண்கிறோம்.

சிவபிரான் உகந்தேறும் ஊர்தியாகிய காளையைப் போற்றிப் பாடுகிறார்.

" நடக்கில் படிநடுங்கும் நோக்கின் திசைவேம்
இடிக்கில் உலகனைத்தும் ஏங்கும் - அடுக்கல்
பொரும் ஏறோ? வானேறோ? பொன்னொப்பாய்! நின்னே
உருமேறோ? ஒன்றா வுரை " (அ.தி.100)

'பொன்னார் மேனியனே! உமது இடப ஏறு நடந்தால் உலகம் நடுங்கும். சினந்து பார்த்தால் அத்திசை வெந்துபோகும். ஊங்காரம் செய்தால் உலகமெல்லாம் அஞ்சும். அதனால் அது சிங்கம்தானா? இடபம்தானா? இடிஏறோ, உரைப்பாயாக என்பது பாடலின் பொருளாகும்.

ஆய பசுவும் அடலேறென நிற்கும் (திருமந்திரம்) என்றபடி இடபம் பசுவைக் குறிப்பதாகும். பதியின் ஆணையின் வழியே அது நடத்தல், நோக்கல், இடித்தல் என்று தொழில் படுங்காலத்து 'மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம் சாய அமுக்கி' (உண்மை விளக்கம்-36) என்றபடி மும்மலங்களையும் களைந்து அருள்பெற்று ஆனந்த வாரியில் மூழ்கும் என்ற பொருள் தொனிப்பதாகச் சிறப்புரை கூறுவர் திரு. சி.கே.சுப்பிரமணிய முதலியார்.

சிவபிரான் பார்வதிக்கு ஒரு பாகம் அளித்த கோலத்தையும் அம்மையார் காட்டுகிறார்.

" இருவடிக்கண் ஏழைக்கு ஒரு பாகம் ஈந்தான் " (அ.தி. 47)

" .... மெல்லியலோர் கூற்றானை " (திரு. ம.மா.12)

இதனால் சிவனும் சக்தியும் இணைந்து ஒரே உருவில் இருப்பதைக் காண்கிறோம். சிவசக்தியின் இந்த இயைபைத் ''தாதான்மியம்'' என்பர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருமால் இறைவனின் ஒரு பாகத்தில் இருப்பதை அம்மையார்

" ஒருபால் உலகளந்த மாலவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் - இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டேமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து " (அ.தி.41)

என்று பாடுகிறார். இப்பாடலில் இறைவனுடைய நிறம் எது எனத் தமக்குத் தெரியவில்லையே என்கிறார். திருமால் இறைவனின் சத்தியாதலின் அவர் ஒரு பாகத்திற்கு உரியவர். சங்கர நாராயணர் கோவிலில் இத்திருவுரு வழிபடப் படுகின்றது. இறைவன் ஆணைப்படி காத்தல் தொழிலைச் செய்யும் திருமாலின் வடிவத்தையும் இறைவனுக்குச் சக்தி வடிவமாக அம்மையார் உபசரிக்கின்றார் எனலாம்.

இறைவன் அடியார் விரும்பும் உருவத்திலும் காட்சியளிக்கக் கூடியவன், அதனால் அம்மையார் 'சிவபிரான் எவ்வுருவினர் என மயங்குதல் வேண்டா. அவரை எந்தக் கோலத்தில் எந்த உருவத்தில் காண விரும்புகின்றனரோ அந்தந்தக் கோலத்தில் - வடிவில் காட்சி தந்து அருள் செய்வான் என்பதையும் உணர்த்துகிறார்.

" எக்கோலத்து எவ்வுருவாம் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே யாம் " (அ.தி.33)

என்ற அடிகளால் இதனை அறியலாம். இக்கருத்தை,

" ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய்
நிற்கின்ற அருள் " (தேவாரம்)

" யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வம் ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர் " (சிவஞான சித்தியார்)

என்னும் பாடலடிகள் வலியுறுத்தல் காண்க.

இறைவன் எண்குணத்தன்

சைவசித்தாந்தம் இறைவன் எண் குணங்களை உடையவன் என்று கூறும். அவ்வியல்புகளாவன : தன் வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்று முணர்தல், இயல்பாகவே தளைகளற்று இருத்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றுலுடைமை, வரம்பில் இன்பமுடைமை. அம்மையார் பாடல்களில் அக்குணங்கள் உணர்த்தப்படுகின்றன. 'மெய்ப் பொருளும் தானே' (அ.தி.20) என்னும் தொடர் 'தன்வயத்தனாதல்'

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பண்பையும், 'மின்னும் சுடர்உரு' (அ.தி.24) 'மூவா நுதற்கண்ணான்' என்பன தூய உடம்பினனாதல் பண்பையும் 'அறிவான்' (அ.தி.20) அறிவினையே பற்றினால்' (அ.தி.87) என்பன முற்றுமுணர்தல், இயற்கை உணர்வினனாதல் பண்புகளையும் உணர்த்துவன. 'என்றும் தீர்ப்பது இடர்' (அ.தி.1) 'வெந்துயரம் வந்தால் அது மாற்றுவான்' (அ.தி.5) என்னும் தொடர்கள் அவனது பேரருளைக் காட்டுவன. 'வல்லாளன்' (திரு. இ.ம.மா.4) என்றது இறைவனது ஆற்றலை உணர்த்தும். இடுகாட்டில் அவன் ஆடும் செயல் அவனது தளைகளற்ற நிலையினையும் வரம்பில் இன்ப நிலையினையும் காட்டி நிற்கும். 'எட்டுக்கொலாம் அவர் ஈறில் பெருங்குணம்' என்பர் நாவுக்கரசரும். இறைவனை எண்குணத்தினன் எனக் கூறினாலும் அவன் அனைத்து நற்பண்புகளுக்கும் இருப்பிடமானவன். அவன் குணங்களுக்கு எல்லை இல்லை.

அறிவிப்பானும் அறிகின்றானும்

இறைவனது அறிவு அறிவிக்கின்ற அறிவு, உயிர்களின் அறிவு அறியும் அறிவு. உயிரின் அறிவு சிற்றறிவாகும். எனவே உயிர்க்கு இரண்டு உபகாரங்களை இறைவன் செய்கிறான். கண் காணும் இயல்பைப் பெற்றிருப்பினும் ஒளியின் உதவியின்றிக் கண் காண இயலாது. அவ்வாறே உயிரும் இறைவன் உதவியின்றி எதையும் அறியமுடியாது. கண் ஒரு பொருளைக் காண வேண்டுமாயின் கதிரவன் ஒளியோ அல்லது வேறு ஒளியோ அப்பொருளை விளக்கிக் காட்டல் வேண்டும். அதுபோல இறைவன் உயிர் அறிவை விளக்கி அறியச் செய்கிறான். அது, காட்டும் உபகாரம் ஆகும். சூரிய ஒளியோ பிற ஒளியோ விளக்கிக் காட்டினால் மட்டும் போதாது. கண் அப்பொருளைக் காணும்போது உயிர் அறிவும் வேறு சிந்தனையின்றி உடனிருந்து காண வேண்டும். அதுபோல இறைவன் உயிர் அறிவை விளக்கிக் காட்டினால் மட்டும் போதாது. உயிர் ஒன்றினை அறியும்போது தானும் உடன்நின்று அறிகின்றான். இதனைக் காணும் உபகாரம் என்பர். எல்லாவற்றையும் அறிந்தவனாம் இறைவன் உயிர்களுக்கு அறிவைக் காட்டுபவனாகவும் உடனிருந்து காண்பவனாகவும் விளங்குகிறான். இறைவன் காட்டும் இந்த இரு உபகாரங்களை அம்மையார் பாடலில் காணலாம்.

" அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே. " (அ.தி.20)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இப்பாடலில் 'அறிவிப்பான்' என்பது உயிர்கட்குக் காட்டுபவன் என்பதால், அஃது இறைவன் செய்யும் காட்டும் உபகாரத்தைக் குறிக்கும். அறிவாய் அறிகின்றான் என்றது அறிவினுள்ளே அத்துவிதமாகக் கலந்து நின்று உயிர்கள் அறியும்படி தானும் அறிபவன் எனப் பொருள்படுவதால், அஃது உயிர்கள் அறியும்போது தானும் உடன்நின்று அறிகின்ற 'காணும் உபகாரத்தைக்' குறிக்கும்.

" காணும் கண்ணுக்கு காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்ட லின். " (சிவ.பாதம். சூத். *11*)

என்ற சூத்திரத்தின் சிறப்புரையில் சிவஞானமுனிவர் மேற்காட்டிய பாடலை மேற்கோளாக எடுத்தாள்கிறார்.

இறைவனின் தொழில்கள்

இறைவன் உலக உயிர்கள் உய்யும் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழில்களை ஆற்றுவதாகச் சைவ சித்தாந்தம் கூறும்.

" இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கம் செய்வான் - இறைவனே
எந்தாய் என இரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான். " (அ.தி.*5*)

என்ற பாடலில் 'எவ்வுயிரும் தோற்றுவிப்பான்' என்ற தொடர் படைத்தல் தொழிலையும், 'இறக்கம் செய்வான்' என்ற தொடர் அழித்தல் தொழிலையும், 'வெந்துயரம் வந்தால் அது மாற்றுவான்' என்ற தொடர் காத்தல் தொழிலையும் குறிக்கின்றன.

சைவ சித்தாந்தத்தில் 'அழித்தல்' என்பதற்கு ஒடுக்குதல் என்று பொருள் கொள்ள வேண்டும். உயிர்கள் நித்தியமாதலின் அவற்றிற்குத் தோற்றமும் அழிவும் இல்லை. உயிர்களை செய்த வினைகளுக்கேற்ப உடலோடு கூடிய கருவி களோடு சேர்ப்பித்தலே தோற்றுவித்தலாகும்.

அம்மையார் சிவபிரானை நோக்கி 'உன்னை உருத்திரன்' என்பேனோ? பிரமன் என்பேனோ? அப்பிரமனுக்கும் அப்பாற்பட்ட திருமால் என்று கூறுவேனோ, உன் பண்பு உணரமாட்டேனே (அ.தி.*18*) என்று பாடுவது சிவன் ஒருவனே மூவர்க்குள்ளும் நிறைந்து முத்தொழில் செய்வித்தலை உணர்த்தவே என அறிய முடிகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" மூவுருவும் போர்த்து உகந்த எம்மான் " (திரு. ம.மா.16)

என்று அம்மையார் அயன், அரி, அரன் என்ற மூன்று நிலையும் கூடிய உருவம் கொண்டுள்ளான் இறைவன் என்பதை உணர்த்துகிறார்.

" படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகளாயினை " (1.128-அடி 4)

" மூவருமாகி " (1-42 அடி 1)

என ஞான சம்பந்தர் கூறுவதையும் ஈண்டு ஒப்பு நோக்கலாம்.

இறைவனின் அருமையும் எளிமையும்

பெருந்தேவர்களுக்கும் கடவுளர்க்கும் அரியவனாகும் இறைவன் அடியவர்க்கு எளியவனாகிறான். தம்மை உண்மையில் காணவிரும்பினார்க்கு எளிதில் அறியப்படுபவனாய் விளங்குதலைப் பின்வரும் அடிகள் புலப்படுத்தும்.

" இன்று நமக்கெளிதே மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் " (அ.தி.19)

" பிறர் அறியலாகாப் பெருமையரும் தாமே
பிறர் அறியும் பேருணர்வும் தாமே " (அ.தி.30)

" .... என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க்கு எளிது " (அ.தி. 45)

சிவபிரானின் சடைமுடி சார்ந்தார்க்கு பொற்கொழுந்தாகவும், சாராதவர்க்குத் தீக்கொடிபோலும் தன்மையது (அ.தி.82) என்கிறார் அம்மையார்.

பசு

இறைவனுக்கு அடுத்தநிலையில் உயர்வாகக் கருதப்படுவது உயிர். இதனை ஆன்மா எனவும் கூறலாம். உயிர் அழிவில்லாதது. அஃது அறிவு, விருப்பம், வல்லமை ஆகியவற்றை உடையது. இயல்பிலே தளை உடையதும் வினைவழி உடல் எடுப்பதும் உயிராகும். செம்பைக் களிம்பு பற்றியிருப்பது போல ஆணவமலம் தொன்று தொட்டே ஆன்மாவைப் பற்றி நிற்கிறது. இதை உணர்த்தவே சைவ சித்தாந்திகள் ஆன்மாவைப் 'பசு' எனக் குறிப்பிட்டனர். பசு என்றால் கட்டுண்டது, தளையுண்டது என்பது பொருளாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உயிர்களின் வகை

உயிர்களிடத்து அறிவில் வேறுபாடுகள் காணப்படுவதாலும், வினைகளுக்கேற்ப உயிர்கள் பல உடல்களைப் பெறுவதாலும், இன்ப, துன்ப, நுகர்ச்சிகளில் வேறுபாடுகள் இருப்பதாலும், 'உயிர்கள் பல' என்கிறது சைவ சித்தாந்தம். அவ்வுயிர்களை மூவகைப்படுத்துவர்.

1. சகலர் - மும்மலங்களொடு சேர்ந்த உயிர். 2. பிரளயாகலர் ஆணவமும், கர்மமும் உடைய உயிர். 3. விஞ்ஞானகலர் - ஆணவம் மாத்திரம் உள்ள உயிர். அம்மையார் பாடலில் வரும் 'எவ்வுயிரும்' (அ.தி.5) என்ற தொடர் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் ஆகிய மூவகை உயிரைக் குறிக்கும் என்பர்.

உயிர்களின் எழுவகைப் பிறப்பு

பொதுவாக எழுவகைப் பிறப்புக்களைக் கூறுவர். தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, விலங்கு, பறப்பன, மனிதர், தேவர் எனக்கூறப்படும் எழுவகைப் பிறப்புக்களை அம்மையார்,

" அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் " (அ.தி.3)

என்ற அடிகளில் உணர்த்துகிறார்.

ஆன்மாவின் பொது இயல்பு

ஆன்மா எப்போதும் தனித்து நிற்பதில்லை. ஏதாவது ஒன்றைச் சார்ந்தே நிற்கும் தன்மையது. ஆன்மாவிற்கு இருவகைச் சார்புகள் உண்டு. ஒன்று பாசத்தைச் சார்ந்து அறியாமையால் மூழ்கியிருக்கும். அல்லது பதியைச் சார்ந்து இறை இன்பத்தைப் பெற்றிருக்கும். மேகத்திலிருந்து விழும் தூய மழைத்துளி தான் வீழும் நிலத்திற்கேற்ற வண்ணமும் இயல்பும் பெறுதல் போன்றது ஆன்மாவின் இயல்பு. இவ்விரு சார்புகளுள் மனிதஉயிர் பற்ற வேண்டியது பதியினையே என்கிறார் அம்மையார். 'நெஞ்சமே மனையாளையும் மக்களையும் தஞ்சமென்று கருதிக்கொண்டு, இறைவனின் அடித்தலமே ஒரு தஞ்சமென்று நினையாமல் விட்டுவிடாதே' (திரு.இ.ம.மா. 13) என அறிவுறுத்தலைக் காண்க.

உயிர்களின் இருவகை நிலை

உயிர்கள் உலகியல் நெறியில் உழலும் நிலையைக் கட்டுண்ட நிலை அல்லது பெத்தநிலை என்றும் சிவநெறியில் செல்லும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நிலையை 'முத்திநிலை' என்றும் உயிரின் இருநிலைகளைக் குறிப்பிடுவர். பெத்தநிலையில் உயிர்களுக்கு இறைவனைக் காணும் இயல்பு இல்லை. இதனை,

" அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் " (அ.தி.61)

எனும் அம்மையாரின் பாடல் அடிகளால் அறியலாம். இப்பாடலில் 'அன்று' என்றது அம்மையார் அருள் விளக்கம் பெறாது உலக இயலில் நின்ற நிலையைக் குறிக்கும். 'இன்று' என்பது இறை அருள்பெற்றுச் சிவபூதகணங்களுள் ஒன்றாகி உலகைவிட்டுத் திருக்கயிலையை அடையச் செல்லும் நிலையைக் குறிக்கும். முன்னது பெத்தநிலை; பின்னது முத்திநிலையைக் குறித்தது.

" இம்மைக்கும் மறுமைக்கும் எல்லாம் அமைந்தோம் " (அ.தி. 91)

என்ற இடத்தும் 'இம்மை' என்பது பிறப்பு நிலையினையும் (கட்டுண்ட நிலையினையும்) 'மறுமை' என்பது முத்தி நிலையினையும் குறித்தன.

பாசம்

ஆன்மாவின் கட்டுண்ட நிலையே பாசமாகும். எதனால் கட்டுண்டது என்றால் ஆன்மா கட்டுண்டது பாசத்தால் என்பர் சைவ சித்தாந்திகள். உயிர்கள் இறைவனை அறியாவண்ணம் தடுப்பது பாசமாகும். பாசத்தின் வகைகளாக ஆணவம், கர்மம், மாயை என்பன கூறப்படும். உயிர்கள் அறிவுடையனவாய், அழிவில்லாதனவாய் இருப்பினும் பாசத்தின் சேர்க்கையால் அவை இறுதியுடையனவாய், எல்லைக்குட்பட்டனவாய், சிற்றறிவு உடையனவாய்ச் செயல்படுகின்றன. ஆணவம் உயிருடன் தொன்று தொட்டு உடனிருந்து மயக்குவதால் அதனை இருள்மலம், மூலமலம் என்று குறிப்பிடுவர். உயிர், விருப்பு வெறுப்புகளால் தூண்டப்பட்டு வினை செய்கிறது. பாவ புண்ணியங்களைச் சேர்க்கிறது. பிறவி எடுத்த உயிர் தான் செய்த வினையின் பயனை அனுபவிக்க வேண்டும். வினைப்பயனே 'கர்மம்' எனக் கூறப்படுவது. மூன்றாவதாகிய மாயை மனிதனைப் பதியிடமிருந்து பிரித்துச் சிற்றின்பங்களுக்கு வழிவகுக்கிறது. ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்றும் உயிரினைப் பற்றியிருப்பது, அரிசியை உமி, முளை, தவிடு போன்றவை பற்றியிருப்பது போன்றது என்பர்.

ஆணவமலம் மிக்கெழுந்து வினைகளைச் செய்ய அது காரணமாக உயிர்கள் பிறவித் துன்பத்தை அடைகின்றன என்பதை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அம்மையார் 'கிளர்ந்து வெந்துயர் வந்தடும்' (திரு. இ.ம.மா. 1) என்ற பாடலடியால் உணர்த்துகிறார். பாசத்தை நீக்கினால் பிறவித்துயர் நீங்கி உயிர்கள் இறைவனை அடையும் என்பதை,

" பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு
பசுத்தன்மை நீக்கி, அப்பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே " (திரு.மந். 2379)

எனத் திருமூலர் கூறுவதை ஈண்டு ஒப்பு நோக்கலாம்.

வினை

சைவ சிந்தாந்திகள் வினைஸ்ய மூன்று கூறுகளாகப் பிரிப்பர். அவை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பன. பல பிறவிகளில் செய்து, பயன் அனுபவிக்கப்படாது சேர்ந்திருக்கும் வினைத் தொகுதிக்குச் 'சஞ்சிதம்' என்று பெயர். அத்தொகுதியிலிருந்து இப்பிறப்பில் அனுபவிப்பதற்கென எடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குப் பிராரத்தம் என்பது பெயர். இப் பிராரத்தத்தை அனுபவிக்கும்போது புதிதாக ஈட்டும் வினை 'ஆகாமியம்' எனப்படும். இவற்றை முறையே பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என்றும் குறிப்பிடுவார். வினை பற்றி அம்மையார் கூறும் கருத்துக்களைக் காணலாம். பல்வேறு அடைமொழிகளால் வினையின் இயல்பை அம்மையார் விளக்குகிறார்.

'வல்வினை'	-	(அ.தி. 34)
'மேலை இருவினை'	-	(அ.தி. 81)
'தொல்வினை'	-	(திரு. இ.ம.மா. 11, 12)
'எறிவினை'	-	(அ.தி. 87)
'வினைக்கடல்'	-	(அ.தி. 16)
'இடர்'	-	(அ.தி. 1, 16)

ஓர் உயிர் செய்த வினையின் பயன் அவ்வுயிரே அனுபவிக்க வேண்டும். ஒருவர் செய்த வினையின் பயனைப் பிறர் அனுபவிக்க முடியாது. எத்தனை பிறவிகள் எடுப்பினும் செய்த வினையின் பயனைச் செய்தவனே அனுபவிக்க வேண்டும். எனவே 'வினை' வலிமையுடையது எனும் பொருளில் 'வல்வினை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

வினை நல்வினை, தீவினை என இருவகைப்படும். இரண்டின் பயனையும் அவன் மேன்மேலும் அனுபவிக்க வேண்டி இருப்பதால் 'மேலை இருவினை' என்கிறார் அம்மையார். இரு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வினைகளையும் ஒப்பாக எண்ணிப் பற்றற்று இருந்தால்தான் துன்பங்கள் நீங்கும். பழைமை வாய்ந்த வினைகளின் தொகுதியான 'சஞ்சிதத்தை' உணர்த்தத் 'தொல்வினை' என்கிறார். வினையானது பிறவிதோறும் துன்பத்தைத் தருவது, தாக்கக்கூடியது என்னும் பொருள்பட 'எறிவினை' என்கிறார். வினையைக் கடலாகவும் உருவகித்து 'வினைக்கடல்' என நயம்படக் கூறுகிறார். வினையின் பயன் கடல் அளவினது என்பதாலும், கடல் அலைபோல் ஓயாது வந்து பயன் விளைப்பன என்பதாலும் வினையைக் கடலாகப் பார்க்கிறார்.

வினையால் வரக்கூடியது துன்பம் ஆதலால் வினையால் வரும் பயனை 'இடர்' எனக் குறிப்பிட்டுள்ளார். இது சைவ சித்தாந்தத்தில் 'பிராரத்தம்' என்று கூறப்படும். வினை காரணமாகப் பல பிறவிகள் தொடர்ந்து வருவதால் பிறவித் துன்பத்தையும் 'மீளாப் பிறவிக்கடல் (அ.தி.16) என்கிறார்.

வினை நீங்க

இருவினைப் பயன்களிலிருந்து ஆன்மா விடுதலை பெறவேண்டுமாயின் சிவபிரானின் பாதங்களைப் பற்றுதலே உரிய வழியாகும். தஞ்சம் என்று அடைந்துவிட்டால், அவர்களைப் பிறவிக் கடலில் ஆழ்ந்துவிடாதபடி அந்தணனாகிய சிவன் காத்தருள்வான் (திரு.இ.ம.மா.4). எனவே துன்பம் வருகையில் நெஞ்சமே! இங்கே தளர்ந்து இராது இறைவனை வணங்குவாய் என நெஞ்சிற்கு அறிவுரை (திரு.இ.ம.மா.1) கூறுகிறார் அம்மையார். மற்றோர் இடத்தும்,

" பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - அங்கொருநாள்
ஆவா என்றாழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை " (திரு. இ.ம.மா.6)

என நெஞ்சிற்கு அறிவுரை வழங்குதல் காண்க.

" நீற்றானை நெஞ்சே நினை " (திரு.இ.ம.மா.12)

" இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமா
இதுவன்றே என்றனக்கு ஓர்சேமம் " (அ.தி. 24)

" வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீ விரும்பி
உள்ளமே எப்போதும் ஓது " (அ.தி. 73)

" மெய்த்தமர்ந்து அன்பாய் நீ விரும்பு " (அ.தி. 93)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என வரும் அடிகளும் இறைவனைத் தஞ்சமடையும் உபாயத்தை அம்மையார் வற்புறுத்துவதைக் காண்கிறோம்.

" திருவடி நீழல் சரண் எனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே " (திரு. மந். 1437)

எனும் திருமூலர் கூற்றையும் காண்க.

சிவபிரானின் திருவடியைக் கண்டு கொண்டிருக்கும் அடியார்களைப் பேணுகின்ற அடியவர்களின் நிழலைக் கண்டபோதே தீவினைகள் நில்லாது நீங்கும் (திரு. இ.ம.மா. 11) என்கிறார். அடியாரைப் பேணுதலும் சிவனைத் தொழுவதுமே வினை நீங்குதற்குரிய உபாயம் என இங்கு விளக்கப்படுகிறது. இப்பாட்டு அம்மையார் வரலாற்றிற்கு அகச்சான்றாகிறது. தொண்டர் பாதம் தொழுதலையும் அல்லாதார் கூட்டம்ஒருவுதலையும் வினைப்பயன் நீக்கும் உபாயமாக அம்மையார் கூறுவதைத் 'தொழுதொண்டர் பாதம், உள்ளாதார் கூட்டம் ஒருவு' (அ.தி.40) என்ற அடி உணர்த்தும். சிவனடியார் தொடர்பால் மெய்ஞ்ஞானம் வரும்; அல்லாதார் கூட்டத்தால் அஞ்ஞானம் உணர்த்தப்படும் என்பதால் இவ்வாறு கூறுகிறார்.

சாதனம்

உயிர்கள் தம்மைப் பிணித்துள்ள பாசங்களிலிருந்து விடுபட்டுப் பதியினை உணரவேண்டும். அவ்வாறு உணர்வதற்கு உயிர்களுக்குச் சில பயிற்சி முறைகள் தேவைப்படுகின்றன. அந்தப் பயிற்சி முறையே சாதனம் அல்லது வழிபாடு எனப்படும்.

நம்மிடையே உள்ள பற்று நீங்கக் குரு, லிங்க, சங்க வழிபாட்டு முறை பயன்படும் என்பர். இவற்றுள் குருவழிபாடு என்பது நமது அஞ்ஞானத்தைப் போக்கும். ஞானாசிரியரை வழிபடுதலைக் குறிக்கும். இவர் உபதேசத்தால் ஆணவமலம் நீங்கும். லிங்க வழிபாடு என்பது இறைவனின் அருஉருவத்திருமேனியை வழிபடலாகும். இவ்வழிபட்டால் எல்லாம் சிவமயம் என்னும் உணர்வு ஏற்பட்டு, அதனால் கர்மநீக்கம் ஏற்படும். சங்கவழிபாடு என்பது சிவனடியார்களையே தெய்வமாக வழிபடலாகும். மாயை நீங்க இவ்வழிபாடு துணைபுரியும். இம் மூன்று வகை வழிபாட்டையும் அம்மையார் குறிப்பிடுவதைக் கீழ்க்காணும் பாடலில் காணலாம்:

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" காண்பார்க்கும் காணலாம் தன்மையனே கைதொழுது
காண்பார்க்கும் காணலாம் காதலால் - காண்பார்க்குச்
சோதியாய் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரன். " (அ.தி.17)

இப்பாடலில் 'காண்பார்க்கு' என்பது குருவைச் சிவமாகக் காண்பாரையும், கைதொழுது 'காண்பார்க்கு' என்பது சிவலிங்கத் திருமேனியில் சிவனைக் காண்பாரையும் உணர்த்தி நின்றன. சிவவேடத்தில் காணும் திருநீறு கண்டிகை இவற்றால் வசீகரப்பட்டுச் சிவனடியார்களைச் சிவமாகக் காண்பாரைக் 'காதலால் காண்பார்க்கு' எனக் குறிப்பிடுகிறார்.

'கைதொழுது காண்பார்' என்றது புறப்பூசையினையும், 'காண்பார்க்கும் காணலாம்' என்றது அகப்பூசையினையும் குறிப்பன எனவும், 'காண்பார்க்கும் காணலாம்' என்றது இவ்விருநிலையும் இன்றி அவ்வவர் தகுதிக்கேற்ற வழிபாட்டையும் குறிக்கும் என்பர்.

வழிபாட்டு முறைகள்

சைவ சித்தாந்தத்தில் நால்வகை வழிபாட்டு முறைகள் கூறப்படுகின்றன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சரியை என்பது புறவழிபாடு. கோயிலை அலகிடுதல், மெழுகுதல், மலர் மாலை தொடுத்தல், சிவனடியாரைப் பேணுதல் முதலியன. இதனைத் தாச மார்க்கம் என்றும் குறிப்பிடுவர். கிரியை என்பது அகவழிபாடு. இறைவனை அருச்சிப்பது, போற்றுவது, திருஐந்தெழுத்தை வாயால் கூறுவது போன்றவற்றைச் செய்வதாகும். இதனைப் புத்திர மார்க்கம் என்பர். யோகம் என்பது மனத்தினால் வழிபடுவதைக் குறிக்கும். தியானம், ஐந்தெழுத்து மந்திரத்தை உள்ளத்தால் எண்ணுவது போன்றவை இதில் அடங்கும். இதனைச் சகமார்க்கம் என்பர். இறைவன் அருளால் ஞானம் பெற்று, எங்கும் எதிலும் இறைவனைக் கண்டு வழிபடுதல் ஞானமார்க்க மாகும். இது சன்மார்க்கம் எனப்படும். தாசமார்க்கத்திற்கு நாவுக்கரசையும், புத்திர மார்க்கத்திற்கு ஞான சம்பந்தரையும், சக மார்க்கத்திற்குச் சுந்தரரையும், சன்மார்க்கத்திற்கு மாணிக்க வாசகரையும் உதாரணமாகக் காட்டுவர்.

சரியை, கிரியை, யோகம் என்னும் வழிபாட்டு முறையைத் திரிகரண (மெய், வாய், உள்ளம்) வழிபாடு எனலாம். இந்த வழிபாட்டு முறையை அம்மையார் பாடல்களில் காணமுடிகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" கண்ணாரக் கண்டும் என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும். விண்ணோன்
எரியாட என்றென்றும் இன்புறுவன் கொல்லோ " (அ.தி.85)

என்ற அடிகளில் 'கண்ணாரக் கண்டும், கையாரக் கூப்பியும்' என்னும் தொடர்கள் மெய்வழிபாட்டையும், 'எண்ணத்தால் எண்ணியும்' என்றது மனவழிபாட்டையும், விண்ணோனே, எரியாடி என்று போற்றியது வாய்வழிபாட்டையும் குறித்து நிற்கும்.

" நாமாலை சூடியும் நம்மீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்து அன்பாய் " (அ.தி.87)

மேற்காட்டிய அடிகளில் 'நாமாலை சூடியும்' என்றது வாய்வழிபாட்டையும், 'பூமாலை கொண்டு புனைந்து' என்றது மெய்வழிபாட்டையும் 'அன்பாய்' என்றது மன வழிபாட்டையும் குறித்தன.

" கண்டு எந்தை என்று இறைஞ்சி கைப்பணி செய்யேனேல் "
(அ.தி. 72)

என்ற அடியிலும் 'கண்டு' என்பது மனக் கண்ணால் காண்பதையும் 'எந்தை என்று இறைஞ்சி' என்றது வாயால் போற்றியதையும் 'கைப்பணி' என்றது மெய்யினால் பணி செய்தலையும் உணர்த்துகின்றன.

ஞானத்தின் படிநிலைகள்

சைவ சித்தாந்தம் ஞானத்தின் படிநிலைகளாகக் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்ற நான்கினைக் கூறும்.

'கேட்டலுடன் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கிளத்தலென ஈரிண்டாம் கிளக்கில் ஞானம்' (சுபக்கம் 276)

என்பது சிவஞான சித்தியார்

" ஒன்றே நினைத்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றே என் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றேகாண். "
(அ.தி.11)

என்ற பாடலில் நினைந்திருத்தல், துணிதல், உள்ளத்துள் அடைத்தல் என மூன்று படிநிலைகளைக் காண்கிறோம். இவற்றுள் துணிதல் என்பது கேட்டல், சிந்தித்தலையும், - துணிதல், தெளிதலையும் -

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உள்ளத்துள் அடைத்தல் - நிட்டை கூடல் என்பதனையும் குறிக்கும் என்பர். நிட்டை கூடும் தன்மையை,

" என் நெஞ்சத்தான் என்பன் யான் " (அ.தி.6)

" தனி நெஞ்சினுள் அடைத்து " (அ.தி. 96)

என்ற வரிகளும் உணர்த்தும்.

ஆன்மாவின் பக்குவமும் அடியார் நிலையும்

வழிபாட்டு நெறிகளை முறையாகக் கடைப்பிடிக்கையில் உயிரின் உணர்வில் விருப்பு, வெறுப்பற்ற நிலை ஏற்படும். இதனை 'இருவினை ஒப்பு' என்பர். அந்நிலையில் குற்றங்களாகிய மலங்கள் நீங்கும். அதற்கு 'மலபரிபாகம்' என்று பெயர். அதையடுத்து இறைவன் அருளை ஆன்மா பெறும். இதற்குச் 'சத்திநிபாதம்' என்று பெயர். இறைவனின் அருளின் துணை கொண்டே மெய்ப் பொருளைக் காணும் பக்குவம் ஆன்மா பெறுகிறது.

" அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் "
என இந்நிலையை அம்மையார் கூறுதலைக் காண்க. (அ.தி.9)

ஆன்ம பக்குவம் பெற்ற அடியார்களின் நிலை.

1. இறைவனுக்கு ஆட்பட்ட நிலை

" தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே "

என நாவுக்கரசர் பாடியவாறு, அடியார்கள் இறைவனது உடைமைகளாகின்றனர்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு, அடிமையாகி நிற்கும் அடியார் நிலையை அம்மையார் பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

' ஆளானோம் ' - (அ.தி. 4)
' அம்மானுக்கு ஆளாயினேன் ' - (அ.தி. 7)
' ஆயினேன் ஆள்வானுக்கு அன்றே ' - (அ.தி. 8)
' எந்தையர்க்கு ஆட்பட்டோம் ' – (அ.தி. 23)
' தனக்கே அடியனாய் ' - (அ.தி. 44)
' அடிமை கொண்டாடப் பெற்றோம் ' - (அ.தி. 69)
' எந்தையார்க்கு ஆட்செய்யப் பெற்ற ' - (அ.தி. 79)
' சேவடிக்கே ஆளாய் ' - (அ.தி. 91)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'என்னை உடையானும்' - (அ.தி. 92)

'அம்மானுக்கு ஆட்பட்ட அன்பு' - (திரு.இ.ம.மா. 16)

இப்பிறவியில் மட்டுமன்றி எழுபிறவிகளிலும், சிவனைத் தவிர பிறர் எவர்க்கும் ஆளாகமாட்டோம் என்று உறுதியுடன் கூறுகிறார்.

" அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநா மன்பாவ தல்லால் - பவர்சடைமேல்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்கு
ஆகாப்போம் எஞ்ஞான்றும் ஆள் " (அ.தி. 3)

இப்பாடலில் 'ஆளாவோம்', 'ஆகாப்போம்' என உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் கூறுதல் காண்க.

2. வீடும் வேண்டா நிலை

இறைவன், தம்முடைய பிறவித்துன்பத்தை நீக்காவிடினும், தம்மீது இரக்கம் காட்டாவிடினும், தாம் செல்ல வேண்டிய நெறியைக் காட்டாவிடினும், அவர்மீது செலுத்தும் அன்பு குறையாது என்கிறார்.

" இடர்களை யாரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியா ரேனும் - சுடர்உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறா தென்னெஞ் சவர்க்கு " (அ.தி. 2)

இடர்களைதல் போன்ற பயன்கருதித் தாம் அன்பு செய்யவில்லை என்கையில் அன்பு செய்தலே அதற்குப் பயனாகிறது.

" இறைவன் எமக்கு இரங்காரேனும் கறைமிடற்று
எந்தையார்க்கு ஆட்பட்டோம் " (அ.தி. 23)

என்று மற்றோரிடத்திலும் கூறுகிறார். அம்மையார் பிற அடியார்களையும் உளப்படுத்தியே இவ்வாறு பாடுகிறார்.

முத்தியினும் சிவானுபவம் பெறும் பேறே தாம் விரும்புவது என்பதை மேலும் ஒரு பாடலில் தெளிவாக்குகிறார். 'இறைவா உம்மை மனத்தில் கண்டு, எந்தையே என்று துதித்து வணங்கி, கைத்திருத் தொண்டு செய்யப் பெற்றிலேனேல். வீடுபெறுவ தாயினும் அதனை யான் வேண்டேன் (அ.தி. 72) என்று கூறுவதிலும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" பெறினும் பிறிது யாதும் வேண்டேன் " (அ.தி. 86)

எனச் சொல்வதிலும் அவரது தன்னலமற்ற அன்பு புலனாகிறது. இதனாலன்றே சேக்கிழார் பெருமான்,

" கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் "

எனவும்,

" ஈசன் பணியலது ஒன்றிலார் "

எனவும் அடியார்களைச் சிறப்பித்துப் போற்றினார்.

3. பரமே பார்க்கும் நிலை

சிவானுபவம் பெற்ற அடியார்கள் எங்கும் எதிலும் இறைவனையே காண்பர். அல்லும் பகலும் இடையறாது இறைவனையே நினைந்திருப்பதால் அவர்கள் பார்க்கும் இடமெங்கும் சிவனையே காண்பர். பார்க்கும் காட்சிகளும் சிவபிரானையே நினைக்கச் செய்யும்.

" காலை போன்றிலங்கு மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கு வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை - மாலையின்
வீங்கிருளே போலும் மிடறு. " (அ.தி.65)

நாளின் பல கூறுகளாகவே இறைவனது திருமேனிப் பகுதிகளைக் கண்டு போற்றுகிறார். எல்லாப் பொழுதுகளையும் அதாவது முழுநாளையும் சிவனாகக் கண்டு திளைக்கும் தன்மையை அம்மையாரிடம் இங்குக் காண்கிறோம். 'நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புன்சடையடிகள் நின்றவாறே' என அப்பர் பெருமானும் காலதத்துவத்துள் இறைவனைக் கண்டுள்ளார். இத்தகு அடியார்கள் இயல்பை,

" பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர்
பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் "(சிவ.சித்.சுப. 311)

எனச் சித்தியார் கூறுவதைக் காண்க.

பயன் : பாச நீக்கமும் சிவப்பேறும்

பாலில் உள்ள நெய்போல இறைவன் எல்லா உயிர்களிடத்தும் உள்ளான். அவ்வாறு இருப்பினும் பக்குவப்பட்டவர்களுக்கே அவன் வெளிப்படுகிறான். கதிரவன் உதித்ததும் எல்லாத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தாமரைகளும் மலர்வதில்லை. மலரும் பருவத்திலுள்ள மொட்டுக் களையே கதிரவன் மலர்விப்பான். அதுபோலப் பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு அவ்வவற்றின் பக்குவங்களுக் கேற்ப முத்தியை நல்குவான். சைவ சித்தாந்ததின்படி முத்தி என்பது துன்பம் இல்லாத எதிர்மறை நிலைமட்டுமன்றிப் பேரின்பம் பெறுதல் என்னும் உடன்பாட்டு நிலையுமாகும். அதாவது துன்ப நீக்கம், இன்ப ஆக்கம் என்பனவாகும். இவற்றையே பாசநீக்கம், சிவப்பேறு என்றும் குறிப்பிடுவர்.

" இனியோநாம் உய்ந்தோம் இறைவன் தாள்சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண் " (அ.தி.16)

" காலனையும் வென்றோம் கருநரகம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேரறுத்தோம் - கோல
அரணர் அவிழ்ந்தழிய வெந்தீஅம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து " (அ.தி.81)

மேற்காணும் இருபாடல்களும் உயிர்கள் பாச நீக்கமும் சிவப்பேறு பெறுதலையும் காட்டுகின்றன.

" ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொரு வல்வினை இன்றே "

என்ற சிவஞானபோதம் பத்தாம் சூத்திரம் 'பாசநீக்கம்' கூறுகிறது.

" அயரா அன்பின் அரன்கழல் செலுமே "

என்ற சிஞானபோதம் பதினோராம் சூத்திரம் 'சிவப்பேறு' உணர்த்துகிறது.

காரைக்காலம்மையார் பாடிய மூத்த திருப்பதிகங்களைப் படித்திட, பாசநீக்கமும் சிவப்பேறும் கிடைக்கும் என அம்மையாரே பதிகப் பலன் கூறியுள்ளார்.

" காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்கால் பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவ நாசமே. " (திரு. மூ.தி. 2-11)

" .... காரைக்கால் பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார் சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே "
(திரு. மூ.தி. 1 - 11)

அம்மையார் பாடல்கள் சைவசித்தாந்தக் கருத்துக்களின் பெட்டகமாக விளங்குவதை அறியமுடிகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

6. திருக்கூத்து

நாட்டியம் என்பது ஒரு தெய்விகக்கலை. உடலின் பல்வேறு உறுப்புக்கள் இணைந்து இசைக்கேற்ப, தாள லயத்தோடு தூய்மை எண்ணங்களை ஏற்படுத்தும் வகையில் இயங்குவதாகும். சிவபிரான் ஆட்டங்களின் தலைவனாவன். அவனது ஆட்டம் இல்லையெனில் அண்ட சராசரங்களும் இல்லை. எனவே அவன் நடராசமூர்த்தி, கூத்தப்பிரான், ஆடும் நாதன், ஆடலரசு என்றெல்லாம் போற்றப் படுகின்றான்.

தமிழ் இலக்கியத்தில் சிவதாண்டவம் பற்றி முதன்முதலாகக் கலித்தொகையில் காண்கிறோம். சிவபிரான் அனைத்தையும் அழித்தபின் ஆடுவது கொடுகொட்டி; திரிபுரம் எரித்தபின் அரக்கர்களின் சாம்பலைப் பூசிக்கொண்டு ஆடியது பாண்டரங்கம்; புலியைக் கொன்று அதன் தோலை அணிந்து கொண்டு, தோளில் கொன்றை மலர்களைச் சூடி, கையில் நான்முகனின் கபாலத்தை ஏந்தி ஆடும் ஆட்டம் கபாலம். இம்மூன்று ஆட்டங்கள் பற்றிய செய்திகள் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப்பகுதியால் அறியப்படுவன்.

சிவபிரானின் பல்வேறு தாண்டவங்களும், அவ்வத் தாண்டவங்களுக்கேற்ப அமையும் திருமேனியும், கைகளில் ஏந்தும் படைக்கலன் போன்ற பொருட்களும் பல்வேறு மெய்ப் பொருள் கோட்பாடுகளை விளக்குவன.

சிவபிரான் ஆடிய கூத்துகளாகச் சிவானந்தக் கூத்து- சுந்தரக் கூத்து. பொற்பதிக் கூத்து-பொற்றில்லைக் கூத்து. அற்புதக் கூத்து எனப் பல வேறு நடனங்களைத் திருமூலர் தம் நூலில் விளக்குகிறார்.

சிவன் 'அண்ட வெளியே உடலாகவும், மேகம் முயலகனாகவும், எட்டுத் திசையும் மேலாடை அணிந்த எட்டுத் தோள்களாகவும், கதிரவன், மதி, தீ என்ற மூன்று சுடர்களும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கண்களாகவும் கொண்டு நடனம் புரிகின்றான்' (2736) என்கிறார் திருமூலர்.

சிவபெருமான் முழக்கும் உடுக்கையில் படைப்பும், கையை அமைத்தலில் காத்தலும், ஏந்தும் தீயில் அழித்தலும், ஊன்றும் திருவடியில் மறைத்தலும், தூக்கிய திருவடியில் அருளலும் நிகழ்கின்றன என்பர். (திரு.ம.2761).

சிவபிரான் அருளிய திருக்கூத்தின் வகைகளையும், அவை ஒவ்வொன்றின் பெருமையையும் யார் கூறவல்லார் என வியப்பதைக் கீழ்க்காணும் பாடல் உணர்த்தும்.

" மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதி சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொன் கூத்தனை யார்உரைப் பாரே " (திரு.ம.2705)

இறைவன் ஆடிய திருத்தாண்டவங்களுள் ஏழினை மிகச் சிறப்பாகக் குறிப்பிடுவர். அவை : காளிகா தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரி தாண்டவம், சங்கார தாண்டவம், திரிபுர தாண்டவம், ஊர்த்துவ தாண்டவம், ஆனந்த தாண்டவம் என்பன. அவை முறையே ச-காளிகா தாண்டவம், ரி-சந்தியா தாண்டவம், க-கௌரி தாண்டவம், ம-சங்கார தாண்டவம், ப-திரிபுர தாண்டவம், த-ஊர்த்துவதாண்டவம், நி-ஆனந்த தாண்டவம் என எழுவகை இசைகளிலிருந்து தோன்றியனவாம். இந்த எழுவகைத் தாண்டவங் களையும் இறைவன் செய்தருளிய தலங்களும், அவற்றால் நடைபெறும் ஐந்தொழில்களும் வருமாறு:

காளிகா தாண்டவம்	–	திருநெல்வேலி-தாமிரசபை-படைத்தல்
சந்தியா தாண்டவம்	–	மதுரை-வெள்ளியம்பலம்-காத்தல் செயலில் உயிர்களின் நல்வினைக் குரிய இன்பம் அளித்துக் காத்தல்.
கௌரி தாண்டவம்	–	பாண்டி நாட்டுத் திருப்பத்தூர் - சிற்சபை - உயிர்களின் தீவினைக் குரிய துன்பத்தை அளித்துக் காக்கும் செயல்
சங்கார தாண்டவம்	–	இருண்ட நள்ளிரவு - அழித்தல்.
திரிபுர தாண்டவம்	–	திருக்குற்றாலம்-சித்திரசபை-மறைத்தல்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஊர்த்துவ தாண்டவம் – திருவாலங்காடு - இரத்தினசபை- அருளல்.

ஆனந்த தாண்டவம் – தில்லை பொன்னம்பலம் - ஐந் தொழில்களையும் ஒன்றாகச் செய்யும் செயல்.

மேற்காணும் தாண்டவங்களுள் அம்மையார் கண்டு களித்தது ஊர்த்துவ தாண்டவமாகும். இது காளியின் இறுமாப்பை அடக்க ஆடிய தாண்டவம் என்பதால் 'காளிகா தாண்டவம்' என்றும் அழைக்கப்படும். வேகமாகச் சுழன்று ஆடுவதால் இது சண்ட தாண்டவம் என்றும் ஒரு காலைத் தலைவரையில் மேலே தூக்கி ஆடியதால் இஃது 'ஊர்த்துவ தாண்டவம்' என்றும் கூறப்பெறும். வீடுபேற்றினைத் தருவதற்கு அருள்வதால் இதனை 'அனுக்கிரக தாண்டவம்' அல்லது 'அருள்நட்டம்' என்றும் குறிப்பிடுவர். இது மேலும் 'பெருங்கூத்து', 'செயற்கரிய திருநடம்' என்றும் போற்றப்படுகின்றது. ஒரு காலைத் தலைக்கு மேலே தூக்கி ஆடும் இத்தாண்டவ மூர்த்தம் திருவாலங்காட்டில் உள்ளது. ஐப்பசித் திங்கள் முழுநிலா நாளில் இத்தாண்டவத்தைக் காண்போர்க்கு அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களும் கிட்டும் என்பர்.

அம்மையாரின் பெருவிருப்பம்

சிவபிரானின் தாண்டவத்தை அல்லவா அம்மையார் காண விரும்பினார்? அவர் விருப்பத்தைக் கீழ்க்காணும் பாடல் உணர்த்தும்.

" எமக்கிதுவோ பேராசை யென்றும் தவிராது
எமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய் - அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன புரிசடையாய்! பொங்கிரவில்
ஏந்தெரி பாய்ந்தாடு மிடம். " (அ.தி.70)

எந்தையே, செறிந்த இரவில் நீ எரிபாய்ந்து ஆடுமிடத்தை எமக்கொரு நாள் காட்டமாட்டாயா? இந்தப் பேராசையை என்னால் தவிர்க்க முடிய வில்லையே என்று தம் பேராசையை வெளியிடுகிறார்.

இரவில் சிவன் ஆடும் களம் சாதாரண இடுகாடானால், அதனை எவரும் எளிதில் காணலாம். அதனைக் காட்டவேண்டும் என்பதில்லை. அதனால் 'இரவு' என்பது முற்றழிப்புக் காலத்தையும், இருகாடு என்பது சூக்குமமாகிய நிலையினையும் குறிக்கும் என்பர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அம்மையாரின் பேராசையை அறிந்த பெருமானும் 'ஆலங்காட்டில் நாம் ஆடுகின்ற நடனத்தையும் கண்டு எப்போதும் ஆனந்தமாக நம்மைப் பாடிக் கொண்டிருப்பாயாக' என்று அருள் புரிந்தான்.

அனலும் புனலும்

இறைவன் அருள் பெற்ற அம்மையாரும் திருவாலங்காட்டில் அவன் ஆடலைக் கண்டு பதிகம் பாடினார். அனலன்ன வெப்பமும் புனலன்ன குளிர்ச்சியும் இறைவனிடம் இணைந்தது எவ்வாறு என வியக்கிறார்.

" அங்கம் குளிர்ந்து அனலாடும் எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே " (தி.மூ.தி.1.1)

" ஆகம் குளிர்ந்து அனலாடும் எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. " (தி.1.3)

இங்கு 'அனல்' என்பது தீமைகளை அழிக்கும் சக்தியினையும், 'அங்கங் குளிர்ந்து' 'ஆகம் குளிர்ந்து' என்பன அருள் நிலையினையும் சுட்டுவதாகும்.

இடுகாட்டில் ஆட்டம்

இறைவன் இடுகாட்டில் நள்ளிரவுப்போதில் பேய்கள் சூழ ஆடுகிறான் என்பதை அம்மையார் தம் பதிகங்களில் கூறுகிறார். அற்புதத்திருவந்தாதியிலும்

" என்பே அணிந்து இரவில் தீயாடும் எம்மானார்
வன்பேயும் தாமும் மகிழ்ந்து " (அ.தி. 30)

" பேர்இரவில் ஈமப் பெருங்காட்டில் பேயோடும்
ஆரழல்வாய் நீ ஆடும் அங்கு " (அ.தி. 51)

என்று குறிப்பிடுகிறார்.

'இறைவா! நீர் ஆடுகின்ற நடனத்தை உமை காணவோ? அல்லது சுடுகாட்டில் பேய்க்கணங்கள் காணவோ? எமக்குச் சொல்வீராக' என்று கேட்பதையும் அற்புதத் திருவந்தாதியில் (99) காண்கிறோம். அம்மை காண ஆடுதல். மீளப் படைத்தல் பொருட்டு; பேய்கள் காண ஆடுதல் - சங்காரத்தின் பொருட்டு. உண்மையில் கூத்தின் இரண்டு திறங்களையும் அம்மையார் போற்றிப் பாடியதாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அம்மையாரே மற்றொரு பாடலில் ''இறைவனைக் காணாத நிலையில் இவ்விடத்தில் இருந்துகொண்டு இவ்வாறு பேசுவது எதற்கு? எம்பெருமான் பலி ஏற்பதும், இரவில் இடுகாட்டில் ஆடுவதும் எதற்கு என நாம் அவனைக் காணும்போது ஆராய்வோம்'' என்று சமாதானமும் கூறுகிறார். அப்பாடல் வருமாறு,

" இங்கிருந்து சொலலுவதென் எம்பெருமான் எண்ணாதே
எங்கும் பலிதிரியும் எத்திறமும் - பொங்கிரவில்
ஈமவனத் தாடுவதும் என்னுக்கென் றாராய்வோம்
நாமவனைக் காணலுற்ற ஞான்று " (அ.தி.25)

உலகமக்கள் எளிதில் உணரத்தக்க வகையில் 'சிவன் இடுகாட்டில் நடுஇரவில் பேய்கள் சூழ அனலிடை ஆடுகிறான்'' என்பர். உண்மையில் ஈமவனம் என்பது உலகம் முற்றும் ஒடுங்கிய நிலையினையும் சிவபிரான் ஆடல் சூக்கும நடனத்தையும் குறிக்கும். ஊழிக்கால இறுதியில் உலகமெல்லாம் ஒடுங்கியபொழுது, உடம்பும் கருவி, காரணங்களும் இன்றி இருளில் கிடக்கும் உயிர்களை மீண்டும் உடம்பொடும் கருவி, கரணங்களொடும் படைத்தல் வேண்டிச் சூக்கும நடனத்தைச் செய்கிறான் என்பதே உண்மைப் பொருள். இதனை உணராதவர்களே சிவன் இடுகாட்டில் ஆடுபவன் என்று இகழ்வர் என்பதனை அம்மையார் தம்பாடலில் அருளிச்செய்வார்.

" இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாம்
இவரை இகழ்வதே கண்டீர் " (அ.தி. 29)

நடனக் கோலம்

பேய்கள் சூழ உள்ள இடுகாடு சிவன் ஆடு அரங்காகும். புள்ளிமான் தோலை அரையில் உடுத்தி, புலித்தோலைத் தோளில் கொண்டிருப்பான். உடம்பு முழுமையும் சாம்பலைப் பூசி எலும்பு மாலையை அணிந்துகொள்வான். அவன் ஆடுகையில் எட்டுத் திசையிலும் சடை பரவிச் சென்று, எங்கும் தான் நிறைந்த தன்மையைக் காட்டும். பித்தன்போல் வேடம் பூண்டு நடனம் ஆடுகின்றான். (மூ.தி.தி.2.4.)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எடுத்த பாதம்

இடுகாடு அரங்கமாக, 'ஓம்' என்னும் வட்டத்தில் நின்று வளைந்தும், சுழன்றும், நிலைகள் மாற்றியும் ஆடி, காளியோடு வாதம் புரிந்தும், இறைவன் தன் காலை அண்டம் உற நிமிர்த்து ஆடுகிறான். இந்த ஆட்டத்தின் சிறப்பை,

" .... காட்டரங்கா
மண்டலம் நின்றங்கு உளாளம் இட்டு, வாதித்து, வீசி எடுத்த பாதம்
அண்டம் உறநிமிர்த்து ஆடும் எங்கள் அப்பனிடம் திரு ஆலங்காடே"

என அம்மையார் பாடிக் களிக்கின்றார். (தி.மூ.தி.1.4)

வீரக்கழல் ஒலிக்கும் ஓசையும், சிலம்பின் ஓசையும் சேர்ந்து ஒலிக்க, காலை உயர்த்தி, வலதுசாரி இடதுசாரி கொண்டு ஆடி, தீயினை உமிழ்ந்து சடை திக்கெட்டும் பரவ ஆடியதை மற்றொரு பாடலிலும் அம்மையார் பாடுகிறார்.

" கழலொலி ஓசைச் சிலம்பொலி ஒலிப்பக்
காலுயர் வட்டணை யிட்டு நட்டம்
அழல்உமிழ்ந் தோரி கதிக்க ஆடும்
அப்ப னிடம்திரு ஆலங் காடே" (தி.மூ.தி.1.7.)

இசையும் ஆட்டமும்

" துத்தம், கைக்கிளை, விளரி, தாரம்
உழை இளி ஓசை பண் கெழுமப்பாடிச்
சச்சரி, கொக்கரை, தக்கை யோடு
தகுணிதந், துந்துபி, தாளம், வீணை
மத்தளம், கரடிகை, வன்கை மென்தோல்
தமருகம், குடமுழா, மொந்தை வாசித்து
அத்தனை விரவினோ டாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங் காடே" (தி.மூ.தி.1.9.)

துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி, குரல் எனும் ஏழிசைப் பண்ணில் பாடல் பாட, அதற்கேற்ப சச்சரி முதல் மொந்தை ஈறான பல இசைக்கருவிகள் முழங்க, அவ்வொலிகளின் ஒத்திசையில் சிவபிரான் ஆடுகிறான். இசையில் வல்லவனாக, அனைத்து இசைக்கருவிகளின் வாசிப்பிற்கும் ஆடுபவன் என்பதால் அனைத்துப் பரதங்களையும் ஆடவல்லவன் பெருமான் என்பதை அம்மையார் புலப்படுத்த விரும்புகிறார் எனலாம். இப்பாடலில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அம்மையாரின் இசைத்திறமையும் புலனாகின்றது. பல இசைக் கருவிகள் பற்றியும் அறியப்படுகிறது.

இசைக்கேற்ப, இசைக்கருவிகள் ஒலிக்க ஆடுபவன் என்பதை,

" கொடுவெண் மழுவும் பிறையும் ததும்ப
கொள்ளென் றிசை பாடப்
படுவெண் துடியும் பறையும் கறங்கப்
பரம னாடுமே " *(தி.மு.தி.2.9)*

என்ற அடிகளும் உணர்த்தும்.

அமரர்களின் முழவோசை

இறைவன் ஆடலுக்கு ஈமக்கடன் செய்தவர்கள் வைத்துச்சென்ற செந்தீ விளக்காகிறது. அந்தி மாலையில் சிலம்பொலிக்க ஆடுகையில் அமரர்கள் முழவு வாசிக்கின்றனர். அவ்வோசை திசை எங்கும் முழங்குகிறது. கையில் அழலேந்தியும் ஆடுகிறான்.

" முந்தி அமரர் முழவினோசை திசைகது வச்சிலம் பார்க்க ஆர்க்க
அந்தியின் மாநடம் ஆடும் எங்கள் அப்ப னிடந் திரு ஆலங் காடே "
(தி.மு.தி. 1-10)

" முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழக னாடுமே " (தி.மு.தி. 2-7)

சிவபிரான் எழுந்தருளியிருக்கும் இடங்களில் எல்லாம் தேவர்களும் சென்று வாழ்த்துவதால், தேவர்கள் சுடுகாட்டிற்கும் சென்று இறைவனை வணங்குவர் என்பது புலனாகிறது.

பேய்களின் பக்கவாத்தியம்

அமரர்கள் மட்டுமன்று; பேய்களும் இறைவன் ஆடுகையில் பக்க வாத்தியம் வாசித்தல் உண்டு. ஒரு பேய் பாடுகிறது. இன்னொரு பேய் முழவைக் கொட்டியது. மற்றொருபேய் குழல் ஊதுகிறது.

" பேய்நின் றுபாட பெருங்கா டரங்காப் பெயர்ந்து
.... பறைபோல் விழிகண்பேய் " *(தி.மா.மா.தி. 15)*

" கொட்ட முழவம் கூடளி பாடக் குழகன் ஆடுமே " *(தி.மு.தி. 2-1)*

" கூளிக் கணங்கள் குழலோடு இயம்பக் குழகன் ஆடுமே. "
(தி.மு.தி.2.6)

பேய்களின் இசைக்கருவிகளின் ஒலிக்கேற்பவும் இறைவன் ஆடுதலை அம்மையார் காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருக்கூத்தின் பெருமை

பாம்பினை அணிந்த பிரான் தீயினைக் கையிலேந்திப் பிணங்கள் சூழ ஆடுகையில் காடும் கடலும் மலையும் மண்ணும் விண்ணும் சுழன்றிடும். (தி.மூ.தி.1.8) என்கிறார் அம்மையார்.

அம்மையார் இறைவனிடம், 'உம்து திருவடி பெயர்ந்தால் பாதாள உலகம் ஏழும் பெயரும்; திருமுடி பெயர்ந்தால் பெரிய அண்டமுகடு பெயரும்; கைகள் பெயர்ந்தால் பெரிய எட்டுத்திசைகளும் பெயரும்; இவ்வாறு அரங்கு தாங்காது; அதனை அறிந்து ஆடுவீராக என வேண்டுகிறார்.

" அடிபேரின் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்-கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்ற தரங்கு. " (அ.தி. 77)

எனத் திருக்கூத்தின் பெருமையைப் பாடுகிறார்.

பெருங்காட்டில் மாயன் ஆட மலையன் மகளாகிய பார்வதி வியந்து பார்ப்பார் (தி.மூ.தி.2.8) என்று ஐயன் நடனத்தை அம்மை காணுதலையும் குறிப்பிடுகின்றார்.

பேய்கள் சூழ்ந்த இடுகாட்டில் இரவுப்போதில் இறைவன் ஆடும் ஆட்டம் சாதாரணமக்களுக்குஅச்சத்தைத் தரவல்லது. ஆனால் அம்மையாருக்கோ அத்தாண்டவம் பெரும் ஆனந்தத்தை தந்தது. அதனாலன்றோ, 'அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்கும் பேறு எனக்கு வேண்டுமென்றார்.

காரைக்காலம்மையார் கேட்ட வரம் :
"நான் மகிழ்ந்து பாடி, அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க"

உலகின் இயக்கமே சிவபிரான் ஆட்டத்தில் உள்ளது என்பதை நாம் அறிய வேண்டியது.

❀

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

7. திருவாலங்காட்டுப் பேய்கள்

'பேய்கள், என்றாலே நமக்கு அச்சத்தைத் தரும் வடிவங்களும் செயல்களுமே நம் மனத்தில் எழும். இயல்பு நிலையில் ஒருவர் இறக்கவில்லையெனில் அவர்தம் வாழ்நாள் முடியும் நாள்வரை பேயாகத் திரிவர் என்று பொதுவாக மக்கள் நம்புகின்றனர். பேய்கள் பற்றிய நம்பிக்கை உலகில் எல்லாத் தரப்பட்ட மக்களிடமும் உண்டு. பேய்கள் பற்றிய ஆராய்ச்சியையும் சிலர் மேற்கொள்கின்றனர்.

பொதுவாகப் பேய்கள் சுடுகாட்டைத் தாம் தங்குமிடமாகக் கொள்வன. போர் நடைபெறும் காலங்களில் அவை போர்க்களத்தில் காணப்படும்.

தொல்காப்பியர் போர்க்களத்தில் காணும் பேய்களைப்பற்றி இலக்கணம் வகுத்துள்ளார். போர்க்களத்தில் இறந்துபட்ட வீரனைப் பேய் பாதுகாப்பது பேய்க்காஞ்சி என்னும் துறையாகும்.

" ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்
பேஎய் ஓம்பிய பேய்ப்பக்கமும். " (தொல்-புறம்)

பேய்களிடமிருந்து தன் கணவனை மனைவி பாதுகாத்திருக்கும் நிலை தொடாக் காஞ்சியாகும்.

" இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சி " (தொல்-புறம்)

பண்டைய இலக்கியங்களில் பேய்பற்றிய குறிப்புக்கள் பல காணப்படுகின்றன.

" நிணம் வாய்ப் பெய்த பேய்மகளிர்
இணையொலி இமிழ் துணங்கைச்சீர்ப்
பிணை யூபம் எழுந்தாட
அஞ்சு வந்த போர்க்களத்தான் ! " (மது.கா.25-28)

(யூபம்-குறைத்தலைப் பிணம்).

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" உலறிய கதுப்பில் பிறழ்பல் பேழ்வாய்
சுழல்விழி பசுங்கண் சூர்த்தநோக்கில்
....
....
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்" (திரு.முரு.47-51)

" நிறங்கிளர் உறவில் பேய்ப்பெண்டிர் " (புறம்.62)

" ஈம விளக்கின் பேஎய் மகளிரொடு " (புறம். 356)

" பேஎய் மகளிர் பிணந் தழூஉப் பற்றி " (புறம். 359)

சங்க காலத்தில் 'பேய்மகள் இளவெயினி' என்னும் பெயரில் ஒரு பெண்பாற்புலவர் இருந்தார்.

உயர்ந்தோர் பலரும் உண்டு என்று சொல்கின்ற ஒருபொருளை, தன் புல்லறிவால் இல்லை என்று சொல்பவன் மனிதன் அல்லன், உலகத்தில் காணப்படுவதொரு பேய் என்று கருதப்படுவான் என்கிறார். வள்ளுவர்.

" உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும் " (குறள்.850)

காரைக்கால் பேய்

காரைக்கால் அம்மையார் இறைவனிடம் வேண்டிப்பெற்ற வடிவம் பேய் வடிவம். கணவன் தன்னை ஏற்றுக்கொள்ள மறுத்த நிலையில், அவனுக்கென இதுநாள்வரை தாங்கிய அழகு நீங்க, எலும்பு உடம்பாய வடிவத்தை அவர் இறைவனிடம் வேண்டினார். ஆனால் இந்த வடிவம் உலகில் காணும் அச்சத்தை ஊட்டும் பேய்வடிவமன்று. களிம்பு நீங்கிப் பொன்மயமாய் விளங்கும் செம்புபோலப் பாசம் நீக்கித் தூய்மையாக்கப்பட்ட சுத்த மாயா உருவம். மக்கள் கண்களுக்குப் புலப்படக்கூடிய ஓர் ஒளிபெற்ற உடம்பு. அவர் பெற்ற வடிவத்தைச் சேக்கிழார்.

" ஊனடை வனப்பை எல்லாம் உதறிஎன் புடம்பே ஆக
வானமும் மண்ணும் எல்லாம் வணங்கும்பேய் வடிவம் ஆனார் "
(கா.அ.பு. 50)

என்கிறார். அம்மையார் அவ்வடிவம் பெற்றதும் எங்கும் மலர் மழை பொழிந்தது, வானத்தில் துந்துபியின் நாதம் நிறைந்தது. முனிவர்களும் தேவர்களும் மகிழ்ந்தனர். சிவகணங்கள் எல்லாம் கூத்தாடின. (கா.அ.பு.51)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'அம்மையாரும் தம்மைக் ''காரைக்கால்பேய்'' என்று குறிப்பிடலாயினர். மேலும்

'' மற்றொரு கண் நெற்றிமேல் வைத்தான்தன் பேயாய்
நற்கணத்தில் ஒன்றாய நாம். '' (அ.தி.86)

என்று பெருமைபடக் கூறுதலைக் காண்க. பேய்வடிவிலேயே அம்மையார் கடிது கயிலை சென்றார். இறைவன் அருளாணையால் திருவாலங்காட்டிற்கும் சென்று அண்டமுற நிமிர்ந்தாடும் அவன் ஆடலையும் கண்டு களித்தார். அங்குப் பாடிய பாடல்களே திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள். அவற்றில் இறைவன் ஆடிய இடுகாட்டின் இயல்பையும், இறைவனைச் சுற்றியிருந்த பேய்களைப்பற்றியும் அழகாகப் பாடியுள்ளார். முந்தைய இலக்கியங்கள் போர்க்களப் பேய்களைப் பாட, அம்மையார் இறைவன் தாண்டவத்தைக் கண்டு களிக்கும் சிவானுபவம் பெற்ற பேய்களைப் பற்றிப் பாடியுள்ளார். பிறர் பாட அஞ்சும் சுடுகாடுபற்றியும், பேய்கள் பற்றியும் சுவையான செய்திகள் பலவற்றைத் தந்துள்ளார். இயல்பான தன்மையில் பாடப்பெற்ற அப்பாடல்கள் தனி அழகுடனும் நயமுடனும் விளங்குகின்றன.

பேய்களின் தோற்றம், வகைகள், செயல்கள், மனநிலை ஆகியவற்றை அம்மையார் பாடல்களில் இனிக் காண்போம்.

அலறும் பெண் பேய்

வற்றிய கொங்கை, புடைத்த நரம்புகள் - குழிவிழுந்த கண்கள் - வெண்மையான பற்கள் - ஒட்டிய வயிறு - சிவந்த தலைமுடி - நீண்ட இரண்டு பற்கள் - பரடு உயர்ந்த நீண்ட கணைக்கால் - இவை பேயின் உறுப்பு 'நலன்'களாம்.

'' கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பல் குழிவயிற்றுப்
பங்கி சிவந்து இருபற்கள் நீண்டு பரடுஉயர் நீள் கணைக்கால் ''
(மூ.தி.1-1)

என்று பேயின் தோற்றத்தைத் காட்டுகிறார் அம்மையார். பசியால் வாடி மெலிந்த உடல் உடைய பேய்கள் உணவு தேடி எங்கெங்கோ சென்றன. ஆனால் ஒரு பெண் பேய்மட்டும் எங்கும் செல்லாது காட்டில் இருந்து அலறிக்கொண்டிருந்தது என்று ஒருபெண் பேயின் அவலத்தைக் காட்டுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தீயை அவிக்கும் பேய்

கள்ளிமரக் கிளைக ளிடையே ஒரு பேய் தலை நீட்டிக் கொண்டிருக்கிறது. அப்பேய் எரிந்து முடிந்த கொள்ளிக்கட்டை ஒன்றை எடுத்து, அதனை மசியாக்கி. அக்கரித்தூளை மையாகப் பூசிக் கொள்கிறது. சினங்கொண்டு வெடுவெடு எனச் சிரிக்கிறது. விலங்கு பார்ப்பது போல இருபுறங்களிலும் பார்க்கும். சுடுகின்ற பிணத்தீ அதனைச் சுட்டுவிட, அப்பேய் துள்ளிக்குதிக்கிறது. உடனே புழுதியைஅள்ளி வீசித் தன்னைச் சுட்ட தீயை அவிக்க முயல்கிறது.

இங்கு மைபூசித் தன்னை அழகுபடுத்திக் கொள்ளும் பேயின் செயலும், தீயை அணைக்கப் புழுதியை அள்ளிவீசும், அதன் புத்திசாலித்தனத்தையும் அம்மையார் கூறுகிறார்.

நரியைச் சினந்த பேய்

சுடுகாட்டில், இறுதிக்கடனாக ஓமகுண்டமாகிய குழியில் சோற்றையிட்டு வழிபட்டனர். அந்தச் சோற்றை அக்காட்டில் வாழும் குறுநரிகள் தின்னலாயின. இதைப் பார்த்த பேய்கள், இந்தச் சோற்றைமுன்னரே பார்த்திருந்தால் நரிகளை வெருட்டி விட்டுத் தாங்கள் தின்றிருக்கலாமே என எண்ணின. நரிகள் மீதிருந்த கோபத்தால் ஓரிடத்தில் நில்லாது அங்குமிங்குமாகக் கையைத் தட்டிக் கொண்டு ஓடின. சோறு கிடைக்காது அலைந்த பேய்களின் நிலையை

" குண்டில் ஓமக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரிதின்ன அதனை முன்னே
கண்டிலம் என்று கனன்று பேய்கள் கையடித்து ஓடிடுகாடு "

எனப் பாடுகிறார். (தி.மூ.தி. 1-4)

தாய் காணாது அழும் சேய் பிள்ளைப் பேய்

தாய்ப்பேய் ஒன்று தன் சேய்க்கு நல்ல கொழுப்புப் பொருந்திய நிணத்தை ஊட்டியது. அதற்கு வெள்ளிய தலைகளைக் கோத்த மாலையைக் சூட்டி அழகு பார்த்தது. தன் பிள்ளைக்குக் காளி என்று பெயரிட்டுச் சீராக வளர்த்து வந்தது. அதன் மேல் சிறிது புழுதி பட்டாலும் உடனே துடைத்துவிடும். அந்தத் தாய்பேய் ஒரு நாள் தன் பிள்ளையின் பசியை ஆற்றிவிட்டு, விரைவில் திரும்பி வரும் எண்ணத்தில் அக் காட்டை விட்டு வெளியே சென்றது. தாயின் வரவை எதிர்பார்த்துத் தாய் வருதலைக் காணாது. அப்பிள்ளைப் பேய் அழுது அழுது உறங்கிவிட்டது. (தி.மூ.தி. 2-5)

எல்லா உயிர்களிடத்தும் உள்ள குடும்பப் பாசத்தை, ஆசிரியர் பேய்கள் வழி உணர்த்துவதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாறுகாற் பேய்

பேய்களின் கால்கள் பிளவுபட்டனவாய் அமைந்திருக்கும். அப்பேய்கள் உயிரினங்களுக்குத் தீங்குசெய்யும் செயல்கள் புரிந்தன. தீத்தெய்வங்கள் ஆடுகின்ற சுடுகாட்டில் கூகைப் பேய்களும் குறுநரிகளும் குட்டிகளை ஈன்றன. பருந்தும், கூகையும், பகண்டையும், ஆந்தைகளும் முட்டையிட்டன. அவற்றைக் கண்ட பாறுகாற்பேய்கள் குட்டிகளையும் முட்டைகளையும் வீசி எறிந்தன. விலங்குகளும் பறவைகளும் உண்ணாது விட்டுச்சென்ற பிணங்களைப் புரட்டி பார்த்துக் குறுக்கும் நெடுக்குமாக ஓடலாயின. (தி.மூ.தி. 1-6)

அழல்வாய்ப் பேய்

நாடு நகரங்களில் நன்கு வாழ்ந்தவர்கள் நோய்வாய்ப்பட்டு, இறந்துவிட, அவர்களை இடுகாட்டில் இட்டு உரிய சடங்குகளைச் செய்துவிட்டு உறவினர் நீங்குவார். அவர்கள் நீங்கியவுடன் அழல்போல் விளங்கும் வாயையுடைய பேய்கள் பிணங்களை உண்ணக் கூட்டம் கூட்டமாகச் சூழ்ந்துகொள்ளும். (தி.மூ.தி. 1-8)

அழகற்ற அப்பேய்கள் சில போது காரணமில்லாமல் ஒன்றோடொன்று அடித்துக் கொள்ளுதலும் உண்டு. காரணமின்றி உரக்கக் கூச்சலிடுவதும் அவற்றின் பண்பாகும்.

அறிவில்லாப் பேய்

இடுகாட்டில் பிணம் ஒன்று கிடந்தது. அது இறந்து பட்ட உடல் என்று தெரியாமல், அறிவில்லாப் பேயொன்று ஒரு விரலால் அப்பிணத்தைத் தொட்டது. அச்சத்தால் உரக்கக் கத்திக் கொள்ளிக் கட்டை ஒன்று எடுத்து அதன்மீது வீசிவிட்டு, அஞ்சிப் பாய்ந்து ஓடியது. அத்துடன் நில்லாது தன் வயிற்றிலும் அடித்துக் கொண்டது. அதைக் கண்ட மற்றப் பேய்களும் அச்சத்தால் சிதறி ஓடின. பேயொன்றின் பேதைமையால் மற்றப் பேய்களும் அறிவிழந்த இந்நிலையைக் கீழ்க்காணும் பாடலில் அம்மையார் கூறுகிறார்.

" செத்த பிணத்தைத் தெளியா தொருபேய் சென்று விரல்சுட்டிக்
கத்தி உறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்து போய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்கமோதிப் பலபேய் இரிந்தோட
பித்த வேடங் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே "

(தி.மூ.தி.2-4)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிறு பேய்

சிலபோது பேய்கள் உணவு கிடைக்காது வருந்துதலும் உண்டு. அதிலும் சிறு பேய்கள் வலிமையற்ற காரணத்தால் உணவு தேடிச் செல்ல முடிவதில்லை. சுடுகாட்டில் பிணம் வராத காரணத்தால், உண்ணும் சோறு கிடைக்காது. சிந்தித்து இருந்து அப்படியே உறங்கிப் போன சிறு பேய் பற்றியும் (தி.மு.தி. 2.7) அம்மையார் குறிப்பிடுகின்றார்.

கூத்தாடும் பேய்கள்

நெருப்பின் வெம்மையால் நிணம் உருகி நிலத்தை நனைத்தது. அதுகண்ட நீண்ட பற்களையும் குழிந்த கண்களையும் உடைய பேய்கள் சுற்றிலும் பார்த்து யாரும் இன்மை அறிந்து, எரியும் ஈமச் சுடலையைக் கலைத்தன. பிணங்களை ஆரத்தின்று மகிழ்ந்த மனத்தனவாய்க் கூட்டம் கூட்டமாகக் கூடித் துணங்கைக் கூத்தாடின. (தி.மு.தி. 2.2)

மற்றொருபுறம் சுழல்கின்ற தீப்பாயும் விழிகளையுடைய கொள்ளிவாய்ப் பேய்கள், அங்குமிங்கமாக ஓடி ஆடி, ஈமத்தீயில் எரியும் பிணத்தினை இழுத்து, அதன் தசையினைத் தின்று மகிழும். அப் பேய்களும் துணங்கைக் கூத்தாடின. (தி.மு.தி. 1.7)

தாய்ப் பேயின் தாலாட்டு

காட்டைச் சார்ந்த மலைப்பகுதிகளில் உட்குழிந்த வயிற்றினையுடைய, வடிவில் சிறியன, பெரியனவாகிய பேய்கள் இருந்தன. இண்டஞ்செடி படர்ந்த இருள் சூழ்ந்த சுடுகாட்டிலும் கொள்ளிவாய்ப் பேய்கள் இருந்தன. அவற்றுள் குழந்தைகளை உடைய பேய்கள் அவற்றைத் தடவிக் கொடுத்து அன்பு காட்டின. சிலபோது அவற்றை அச்சுறுத்தி அடக்கின. 'கொள்'ளெனும் ஒலியுடன் இசைபாடிக் குழந்தையிடம் காட்டும் அன்பினை, தாலாட்டுப் பாடும் செய்தியினைப் பேய்களிடத்தும் காண்கிறோம். தாய்மை என்பது எல்லா உயிரினங்களிடத்தும் ஒரே போலவே உள்ளதை அம்மையார் பாடல் அழகாக விளக்குகிறது.

" குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கல்பேய்
இண்டை படர்ந்த இருள்சூழ் மயானத் தெரிவாய் எயிற்றுப்பேய்
கொண்டு குழவி தடவி வெருட்டிக் கொள்ளென் றிசைபாட "

(மு.த.தி.2.10)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கலைகளில் வல்ல பேய்கள்

எட்டிமரம், இலவமரம், இண்டஞ்செடி, சூரைச்செடி, காரைச்செடி ஆகியவை எங்கும் காணப்படும் சுடுகாட்டில் பிணங்கள் சுடப்படுகின்றன. அவற்றை நரிகளோடு பேய்களும் உண்ணலாயின. அப்போது பறை போன்ற கண்களையுடைய பேய்கள் முழவு கொட்டக் கூளிகள் (ஒரு வகைப் பேய்கள்) பாடவும் அழகனாகிய சிவபிரான் ஆடுகிறான் என்று பேய்களின் இசைக் கேற்ப, முழவொலிக்கேற்ப இறைவன் ஆடியதை அம்மையார் காட்டி அவற்றின் கலைத் திறமையை வெளிப்படுத்தியுள்ளார். (தி.மூ.தி.2.1)

மற்றொரு பாடலில் பேய்கள் குழலூதுவதைக் காட்சியாக்கியுள்ளார்.

" வாளைகிளர வளைவாய் எயிற்று வண்ணச்சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல் மயிர்க்கண் தழல்வாய் அழல்கண் பேய்
கூளிக் கணங்கள் குழலோடு இயம்ப குழகன் ஆடுமே. "

(தி.மூ.தி. 2.6.)

சுடுகாட்டில் வாள்போல் வளைந்த அலகுடைய சிறுகூகை மூளைத் தலையினையும் பிணங்களையும் விழுங்கி ஒலிஎழுப்பும். பனை இலை போல் விரிந்த தலைமுடியினை உடைய கொள்ளிவாய்ப் பேய்கள், பூதக் கூட்டத்தோடு குழல் ஊத, அழகனாய பெருமான் ஆடிநின்றான் என்கிறார் அம்மையார்.

சிவபிரான், ஆடலுக்குப் பாடிய, இசைக்கருவிகள் வாசித்த பேய்களையும் அம்மையார் பாடலில் காணமுடிகிறது.

அம்மையார் பாடிய திருப்பதிகங்களில் காணப்பெறும் காட்டு வர்ணனையும் பேய்களைப் பற்றிய செய்திகளும் பிற்காலத்தில் பரணிபாடுவதற்கு வழிகாட்டியாக விளங்கின. எனினும் அம்மையார் பாடலில் காணும் பேய் பற்றிய செயல்களுக்கும் பரணிப் பாடல்களில் காணலாகும் செய்திகளுக்கும் வேறுபாடு காணப் படுகிறது.

பரணிப் பாடல்களில் போர்க்களம் சிறப்பிடம் பெறுகிறது. அம்மையார் பாடல்களில் இறைவனின் திருக்கூத்தே மையப் பொருளாகும். அவைகளின் ஆட்டமும் பாட்டமும் இறைவன் திருநடனத்திற்காக அமைந்தன.

பரணியில் பேய்களுக்குத் தெய்வம் காளி. அம்மையார் பாடல்களில் சிவபிரானே முழுமுதற்கடவுளாகப் போற்றப்படு கின்றான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

8. இலக்கிய நயம்

கலைகளுள் சிறந்தது இலக்கியக் கலை. கவிஞர்கள் தம் வாழ்வில் கண்டு, கேட்டு உணர்ந்த அனுபவங்களின் விளக்கமே கலையாகிறது. கருத்து, உணர்ச்சி, வடிவம், கற்பனை ஆகியன சிறப்பாக அமைகையில் கவிதையும் சிறக்கிறது. அவ்வகையில் அம்மையாரின் உலகியல், முத்தியியல் அனுபவங்களும் சிறந்த இலக்கியமாக விளங்குகின்றன. பக்திச் சுவை கனிந்த அவர் பாடல்கள் கற்பார் நெஞ்சை நெகிழ்விக்கும் இயல்பின.

நடையில் எளிமையும் தெளிவும்

அம்மையாரின் பாடல்கள் இனிய எளிய நடையில் அமைந்துள்ளன. யாப்பிற்காகச் சொல்லைச் சிதைவுபடுத்தாது சொல்லும் பொருளும் ஒத்துச்செல்லும் நடையில் எழுதியுள்ளார்.

" இன்று நமக்கெளிதே மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை - என்றுமோர்
மூவா மதியானை மூவே ழுலகங்கள்
ஆவானைக் காணு மறிவு." (அ.தி.19)

மேற்கூறிய பாடலின் பொருள் ஓரளவு பயிற்சி உடையார்க்கும் எளிதில் விளங்கக் கூடியது. "அன்றும் திருமாலுக்கும், நான்முகனுக் கும் இறைவன் அளத்தற்கரியனானான். அத்தகையவனை - பிறைத் திங்களைச் சூடியவனை-மூவேழு உலகங்களாக இருப்பவனைக் காணும் அறிவு நமக்கு இன்று எளிதாயிற்று" என்று எளிதில் பொருள் கொள்ளமுடிகிறது. பெருந்தேவர்களுக்கு அரியனாயினும் அடியார்க்கு எளியவன் என்ற கருத்தும் புலனாகிறது. சிறிது ஆழ்ந்து சிந்தித்தால் அடியவர்கள் அடிமைத் திறத்தில் நிற்பதாலும், தேவர்கள் அவ்வாறு நில்லாமையாலும், இறைவன் முறையே எளியவனாக வும், அரியவனாகவும் விளங்குகிறான் என்பது புலனாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவ்வாறு சொல்லும் பொருளும் மலரும் மணமும் போல் இணைந்து செல்வதைக் காணலாம்.

கருத்து-நுட்பமும் திட்பமும்

அம்மையார் பாடல்கள் பல எளிமையாகக் காணப்பட்டாலும் ஆழ்ந்த பொருள் தருவன. சிந்திக்கையில் பல கருத்துக்கள் நுட்பமாகக் கூறப்பட்டிருப்பதை அறியலாம். பாலில் வெண்ணெய், நெய் என்பன அடங்கியிருப்பதுபோல இவர் பாடல்கள் செறிவுமிக்க கருத்துக்களை உள்ளடக்கியன. மிக உயர்ந்த சைவ சித்தாந்தக் கோட்பாடுகளையும், குறிப்புப்பொருள்களையும் பாடல்கள் வழிப் பெற முடிகிறது.

" ஏறலால் ஏறமற் றில்லையே யெம்பெருமான்
ஆறெலாம் பாயும் அவிர்சடையார் வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கடல் நஞ் சுண்டார் தமக்கு " (திரு.இ.ம.மா. 18)

'கங்கையாறு முழுமையும் பாயும் அவிர்சடையாரும், பண்டு அமரர்கள் சூழ்ந்த பாற்கடலில் பாம்பு உமிழ்ந்த நஞ்சை உண்டவருமான சிவபிரான் ஏறிவருவதற்கு ஏற்றினையன்றி (காளை) வேறு ஊர்தியில்லையே' என்பது பாடலின்பொருள்.

இப்பாடலில் 'இல்லையே' என்ற சொல்லிற்கு இல்லை என்று உடன்பாட்டுப் பொருளிலும் 'இல்லையோ?' என்று வினாப் பொருளிலும் பொருள் கொள்ளலாம். வேறு உயர்ந்த வாகனங்கள் இருக்க, காளையைத் தவிர வேறு எவையும் கிடைக்கவில்லையோ? என்ற எள்ளல் குறிப்பும் தொனிக்கிறது. காளையை வாகனமாகக் கொண்ட காரணம் என்ன எனச் சிந்திக்க வைக்கும் நிலையில் 'ஏகாரம்' அமைந்துள்ளது. அமரர்களுக்காக நஞ்சுண்டு கருணை காட்டியவர் சிவபிரான். அவ்வியல்பால் காளையை வாகனமாக்கிக் கொண்டாரோ என எண்ணத் தோன்றுகிறது.

'அடியவரை ஆட்கொள்ள வெளிப்படும் காலத்துப் புண்ணிய வடிவாயுள்ள இடபத்தினையே மேற்கொண்டு இறைவர் எழுந்தருளுவார்' எனச் சிறப்புற்ர கூறுவர் திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார். புண்ணிய வடிவம் என்பதால் அது சிவனின் வாகன மாகிறது எனலாம்.

கங்கையைத் தாங்கி மண்ணுலகத்தினரைக் காத்தமை, நஞ்சை உண்டு விண்ணோரைக் காத்தமை ஆகிய அருட்செயல் புரிந்தவர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிவபிரான். அவர் 'ஏற்றையே உகந்து ஏறுவது இயலாமையாலன்று; விரும்பாமையால்' என உரை விளக்கம் தருகிறார் திரு.வி. அருணை வடிவேலு முதலியார்.

மணிவாசகர் திருச்சாழலில் கூறும் கருத்தையும் காண்போம். யானையும், குதிரையும், தேரும் இருக்க, சிவபிரான் இடபத்தை ஏன் வாகனமாகக் கொண்டான் என ஒரு தோழி கேட்கிறாள். அதற்கு விடையாக மற்றொருத்தி 'முப்புரத்தையும் சிவன் எரித்தபொழுது திருமால் காளையாக வந்து சிவனைத் தாங்கினான்' என்கிறாள். இங்குச் சிவன் பெருமை பேசப்பட்டது.

" கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடி
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ "

(திருச்சாழல் 5)

திருமூலர், சிவாலயத்தில் பதி, பசு, பாசம் பற்றிக் கூறுகையில்

" ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறு எனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசமாம்
ஆய அரண்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே. "

(திரு.மந். 2384)

என்கிறார். 'சிவன் நிலையை அருள் அறிவு கொண்டு ஆய்ந்து, அனுபவத்தில் கொள்ளும் அடியார்க்கு, கோவிலில் பதியாக வீற்றிருந்து அருள்புரியும் சதாசிவ மூர்த்தி சிவலிங்கத் திருமேனி யாகும். அவன் திருவருளுக்குப் பாத்திரமாகிய பசு (உயிர்)' அவன் திருமுன்பு இடப தேவராக இருக்கிறது. அவ்வுயிர்க்குச் சிவானு பவத்தை விளைவித்து நிற்றலால், பாசம் (ஆணவமலம்) பலிபீடமாக உள்ளது' என்பது பாடலின் பொருள். இடபம், பசுவாக இருத்தலால் பசுவாகிய ஆன்மா, இறைவனது அடிமையாதலால், சிவபிரானைத் தாங்கி நிற்கிறது என்று பொருள்படுகிறது.

இவ்வாறு சிந்திப்பார் சிந்தனைக் கேற்பச் சிவன்பெருமை பேசப் படுவதை அறியலாம்.

" அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோன் உம்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவ மேது " (அ.தி. 61)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'அன்றும் நின் திருவுருவைக் காணேன். இன்றும் நின் திருவுருவத்தைக் காணேன்' என்று மேல்வாரியாகப் பொருள்கொள்ளின் அம்மையார் கூறவிரும்பும் கருத்துப் புலனாகாது. அன்று என்பது அருள் விளக்கம் பெறாமல் உலகில் நின்று ஆட்செய்த நிலை; இன்று என்பது இறைஅருள்பெற்றுச் சிவபிரானை அடையச் செல்லும் நிலை என்று பொருள்கொண்டால் முன்னது பெத்தநிலை (ஆன்மா கட்டுண்ட நிலை) பின்னது முத்தி நிலை (ஆன்மா தளை நீங்கிய நிலை) என்ற சைவ சித்தாந்தக் கோட்பாட்டை உணரலாம். முதல் நிலையில் தன்னையும் உலகையும் கண்டதால் இறைவன்உரு காணாதாயிற்று, பின்னர் நிலையில் தன்னையும் உலகையும் காணாமையால் இறைவன் உருவத்தைத் (சொரூபசிவன்) தனியாகக் காணமுடியாமல் போயிற்று என்று விளக்கம் காணவேண்டும்.

''உமது பெருமான் எந்த உருவத்தை உடையவன் என்று கேட்பவர்க்கு நான் என்ன சொல்வேன்? நின் உருவந்தான் யாதோ'' என்பது இப்பாடலின் இறுதி இரண்டடிகளின் பொருளாகும்.

உலகில் பல உருவங்களில் சிவ்ன் உருவம் காணப்படுகிறது. அரியும் அயனுமாய் உருவம்; உமையுடன் கூடிய ஓர் உருவம்; வெண்ணீற்று மேனியானாய் ஆடும் நிலையில் ஓர் உருவம்; காண்பார் கருத்திற்கேற்பப் பல உருவங்கள் எனப் பல வடிவங்களில் நாம் காணும் உருவ சிவன் தடத்த சிவனாவான். (தடத்தம்-பொது இயல்பு, செயற்கைத்தன்மை) சொரூப சிவன் (சொரூபம்-தன்னியல்பு, சிறப்பியல்பு-உன்மையியல்பு) அல்லன். தடத்த சிவனே கண்ணுக்குப் புலனாவான். சொரூப சிவன் உணர்வுக்கு மட்டுமே புலனாவான். இந்தச் சைவசித்தாந்தக் கருத்தையொட்டித் தான் அம்மையார் அன்றும், இன்றும் சிவனுருவைக் காண்கிலேன் எனப் பாடியுள்ளார். இவ்வாறு அம்மையாரின் பாடல்கள் கருத்துச் செறிவு மிக்கனவாய் விளங்குகின்றன.

வர்ணணைத் திறன்

கவிஞர்கள் தாம் கண்ட காட்சிகளை, செயல்களை எவ்விதப் புனைவுமின்றி அழகுபடச் சித்தரித்துக் காட்டுவதில் வல்லவர்கள். இயல்புத் தன்மையினின்று மாறாது உள்ளதை உள்ளபடி கூறுவதிலும் ஓர் உண்மை அழகு காணப்படுகிறது. காரைக் காலம்மையாரின் மூத்த திருப்பதிகப் பாடல்கள் இந்த வகையைச் சேர்ந்தன. அப்பாடல்களில் வரும் சுடுகாட்டு வர்ணனையும் பேய் களின் செயல்களும் மிக இயல்பாக உள்ளன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

காடு

'அகன்ற காடு. நடுஇரவு நேரம். காட்டு வாகை மரத்தின் வெண்மையான நெற்றுக்கள் வெயில் மிகுதியால் வெடித்து ஒலிக்கின்றன. கோட்டானுடன் ஆண்டலைப்புள் (மனிதன் தலைபோல் தலையுடைய ஒரு பறவை) பாட, அதைக் கேட்டு அஞ்சிய ஆந்தைகள் மரக்கிளைகளின் மேல் குதித்துச் சிறகினை வீசிப் பாய்கின்றன. எங்கும் இண்டங்கொடி படர்ந்துள்ளது. கள்ளிச் செடிகளின் நிழலைத் தான் காணமுடிகிறது. காட்டின் ஒருபுறம் ஈமச்சடங்குகள் நடைபெற்றன' என்று சுடுகாட்டு நிலையை இயல்பு நிலையில் பாடியுள்ளார்.

" வாகை விரிந்துவெள் நெற்றொ லிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையோடு ஆண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித் தோட வீசி
ஈகை படர்தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்டகத்தே " (மூ.தி. 1-3)

வாகைமரம், கள்ளிச்செடி, ஈகைக்கொடி இடுகாட்டில் காணத்தக்கன. கூகையும் ஆந்தையும், ஆண்டலைப் புள்ளும் காட்டில் வாழ்வன. சுடுகாடு என்பதால் ஈமச்சடங்கு நடைபெறலும் இயற்கையாகும்.

பேய்கள்

சுடுகாட்டில் பிணங்கள் எரிகின்றன. எரியும் உடம்பின் தசைகளிலிருந்து கொழுப்பு உருகி நிலத்தை நனைக்கிறது. இதனை நீண்ட பற்களையும் குழிந்த கண்களையும் உடைய பேய்கள் பார்க்கின்றன. உடனே கூட்டம் கூட்டமாகக் கூடிக் கூத்தாடுகின்றன. சுற்று முற்றும் பார்க்கின்றன. எவரும் கண்ணில் தென்படவில்லை. எரிகின்ற பிணங்களின் பக்கம் சென்று ஈமச்சுடலையைக் கலைக்கின்றன. பிணங்களை இழுத்து வயிறார உண்கின்றன. அதனால் மனம் களிக்கின்றன.

இவ்வாறு பார்ப்பவர் அஞ்சும் சுடுகாட்டில் பேய்களின் செயல்களை நேரில் கண்டவர்போலப் பின்வருமாறு பாடியுள்ளார்.

" நிணந்தான் உருகி நிலந்தான் நனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை யெரிந்து சூழ நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள் மாந்தி களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை யேந்தி அழகன் ஆடுமே "
(மூ.தி.2.2.)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவ்விரு பாடல்களில் காடு, பேய் வர்ணனைகள் இயல்பாக அமைந்திருப்பதைக் காணலாம்.

அணி நலம்

இலக்கிய நயத்திற்குக் கற்பனை மிகவும் தேவை. அழகிய நங்கை ஒருத்தி எவ்விதச் செயற்கை ஒப்பனை இல்லாதபோதும் அழகாக இருப்பாள். இருந்தாலும் அவள் ஒப்பனை செய்து கொள்ளாமல் இருப்பதில்லை. ஒப்பனையால் அவள் அழகு மேலும் சிறக்கும். இலக்கியமும் அத்தன்மையது.

கவிஞனின் கற்பனைக்குப் பெரிதும் உதவுவன அணிகள். செய்யுளை அழகுபடுத்துவன என்பதாலேயே அவை அணிகள் எனப்படுகின்றன. கவிஞன் தன் கருத்தை எளிதாகவும் சிறப்பாகவும் நயமாகவும் அறிவிக்க அணிகளைப் பயன்படுத்துகிறான். அம்மையார் தம் பாடல்களில் பல அணிகளைப் பயன்படுத்திக் கருத்துக்களை நயம்பட உரைத்துள்ளார்.

உவமை அணி

அணிகளுள் முதன்மையானது உவமை அணி. இச்சிறப்பு உணர்ந்தே தொல்காப்பியமும் தம் பொருள் இலக்கணத்தில் 'உவமை இயலை' ஓர் இயலாகவே அமைத்துள்ளார். அம்மையார் பாடல்களிலும் அதிகம் இடம்பெறுவது உவமை அணியாகும்.

சிவபிரான் மேனியும் மலையும்

" கொம்பினை ஓர்பாகத்துக் கொண்ட குழகன்தன்
அம்பவள மேனிஅது முன்னம் - செம்பொன்
அணிவரையே போலும் பொடியணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து " (அ.தி. 39)

சிவன் செந்நிறமேனியன் ஆதலின் அவன் திருமேனி பவள மலைபோல் விளங்கும். அணிகலன்களை அணிந்த பார்வதியை ஒரு பாகத்தில் கொண்டதால் பிரான் திருமேனி பொன்மலைபோல் விளங்கிற்று. அத்திருமேனி முழுவதும் வெண்ணீறு பூசப் பட்டுள்ளதால் வெள்ளிமலைபோலும் காட்சியளிக்கிறது. அம்மையார் சிவபிரானின் திருமேனியைப் பவள மலைக்கும், பொன் மலைக்கும், வெள்ளி மலைக்கும் உவமித்துக் கூறுகிறார். இது நிறம்பற்றி வந்த உவமை அணியாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பூணூலும் பிறையின் கதிரும்

" பெருகொளிய செஞ்சடைமேல் பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போர்ந்து ஒழுகிற்று ஒக்கும் - தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் தன்மார்பில் நூல். " (அ.தி. 32)

முதல்வனும், முப்புரம் எரித்தவனும், நெற்றிக்கண்ணனுமாகிய சிவபிரான் மார்பில் விளங்கும் பூணூலானது, அவரது செஞ்சடைமேலுள்ள பிறையாகிய ஒற்றைக்கலை இளகி வந்து மார்பில் ஒழுகியது போன்று அமைந்திருந்தது என்று பூணூலின் அழகை அம்மையார் கூறுகிறார். இப்பாடல் இளம்பிறை மார்பில் அணியும் பூணூலுக்கு உவமையாயிற்று.

பொன்முடியும் கார்காலமும்

" சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேணுலாவி
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப் - பேரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்ஈசன் பொன் முடிதான்
காண்பார்க்குச் செவ்வையோர் கார் " (அ.தி. 53)

சிவபிரான் தலையில் கொன்றைமலர் தழைத்து விளங்க, கங்கையாறு பெருவெள்ளமாய் அலைவீசுகிறது. இப்போது சிவபிரான் முடியைப் பார்ப்பவர்க்குக் கார்காலக் காட்சியாய்த் தெரிகிறது. கொன்றை மலர்தலும், ஆற்றில் நீர்ப் பெருக்கெடுத்து ஓடுதலும் கார்கால நிகழ்ச்சிகளாகும். எனவே கொன்றை மலர்களை யும் கங்கை ஆற்றையும் சூடிய இறைவன் திருமுடி கார்காலத் தோற்றத்தை ஒத்து விளங்கியது.

திருமேனியும் மேகக்கூட்டமும்

" மேலாய மேகங்கள் கூடியோர் பொன் விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே - மாலாய
கைம்மா மதக்களிற்றுக் காருரிவை போர்த்தபோது
அம்மான் திருமேனி அன்று " (அ.தி. 60)

இறைவனுடைய திருமேனி பொன்மலையை ஒத்து உள்ளது. அவன்தன் திருமேனியில் மதம்மிக்க யானையின் கரிய தோலைப் போர்த்துக் கொண்டபோது, அவன் திருமேனி பொன்மலையை மேகக்கூட்டம் மூடிமறைத்தாற்போல் இருந்தது என்கிறார். இப்பாடலில் நிறம்பற்றியும் தொழில்பற்றியும் உவமை காணப் படுகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பேயின் முடியும் பனை இலையும்

அழல்கின்ற கண்ணை உடைய ஒரு பேயின் தலைமுடியைக் கூறுகையில் ஆசிரியர் 'தாளிப் பனையின் இலைபோல் மயிர்க்கண் தழல்வாய்பேய்' எனக் குறிப்பிடுகிறார். பேயின் தலைமுடி தாளிப் பனையின் இலைபோல் விளங்கியது என நேரில் பார்த்தது போலக் கூறியுள்ளார். தாளிப்பனை என்பது விரிந்து மடல்களை உடைய ஒருவகைப் பனை இதனைக் கூந்தல் பனை என்றும் கூறுவர்.

உருவக அணி

உவமையின் மறுவடிவம் உருவகம். உவமைக்கும் பொருளுக்கும் உள்ள வேறுபாட்டை நீக்கி ஒன்றெனக் காட்டுதல் உருவக அணி.

" ஆர்வல்லார் காண்அரன் அவனை அன்பென்னும்
போர்வை அதனாலே போர்த்தமைத்து " (அ.தி.96)

என்ற அடிகளில் அன்பு போர்வையாக உருவகிக்கப்பட்டுள்ளது.

ஏகதேச உருவக அணி

ஒரு பாடலில் ஒன்றை உருவகித்து ஒன்றை உருவகிக்காமல் விடுவது ஏகதேச உருவக அணி.

" இனியோ நாம்உய்ந்தோம் இறைவன் தாள்சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக் கடலை ஆக்குவிக்கும் மீளாப்பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண் " (அ.தி.16)

இப்பாடலில் வினையைக் கடலாக உருவகித்துள்ளார். எனவே உருவகம். இப்பாடலில் ஏகதேச உருவக அணியும் அமைந்துள்ளது. 'இறைவன் திருவடிகளைச் சேர்ந்தோம். அதனால் பிறவியாகிய பெருங்கடலை நீந்தினோம்' என்பது பாடல்பொருள். இங்குப் பிறவியைக் கடலாக உருவகித்தவர். அதனைக் கடத்தற்குரிய இறைவன் திருவடியைத் தெப்பமாக உருவகம் செய்யாதுவிட்டதால் இஃது ஏகதேச உருவக அணியாம்.

தற்குறிப்பேற்ற அணி

கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

" மறுவுடைய கண்டத்தீர் வார்சடைமேல் நாகம்
தெறும் என்று தேய்ந்துழலும் ஆஆ - உறுவான்
தளர மீது ஓடுமேல் தான்அதனை அஞ்சி
வளருமோ பிள்ளை மதி " (அ.தி. 36)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'மறுவுடைய கண்டத்தீர். உமது சடைமேல் இருக்கும் பாம்பு தன்னை வந்து துன்புறுத்தும் என்று அஞ்சி, பிள்ளைமதி தேய்ந்து வருந்தும். அந்த மதிமேல் பாம்பு வந்து ஓடுமானால் அப்பிள்ளை அச்சத்தால் வளருமோ, வளராது' எனப் பிள்ளை மதிக்கு இரங்கிப் பாடுகிறார் அம்மையார்.

இறைவன் திருமுடிமேல் உள்ள பிறைநிலா வளராது. எனினும் அந்நிலா வளராமல் இருப்பதற்குப் பாம்பு ஒரு காரணமாக இருக்குமோ என்று தம் கற்பனைபடப் பாடுகிறார். நிலவுக்குப் பகை பாம்பு ஆதலின் இந்தக் கற்பனை பொருத்தமாகவும் படுகிறது.

பிறை வளராமைக்குக் காரணத்தைத் தற்குறிப்பேற்றமாகக் கூறுவதை அடுத்த பாடலிலும் காணலாம்.

" நேர்ந்தரவங் கொள்ளச் சிறுகிற்றோ? நீயதனை
ஈர்ந்தனவே கொண்டிசைய வைத்தாயோ? - போந்து
வளங்குழவித் தாய் வளர மாட்டாதோ? என்னோ?
இளங்குழவித் திங்கள் இது " (அ.தி. 42)

இறைவனின் திருமுடியில் இளம்பிறை வளர்ச்சியின்றி உள்ளது. அதனைப் பாம்பு தீண்டியதனால் மெலிந்துவிட்டதா? இறைவனே தன் முடிக்குப் பொருந்துமாறு அதனைப் பிளந்து அணிந்து கொண்டானோ? அல்லது இப்பிறைதான் வளர்தற்குரிய ஆற்றலை இழந்துவிட்டதா - என்று பல்வேறு காரணங்களைச் கற்பித்துக் கூறுவதால் இது தற்குறிப்பேற்றஅணி.

நிலவைக் சூடக் காரணம் கற்பித்தலைக் கீழ்வரும் பாடலில் காணலாம்.

" வடுவன் றெனக்கருதி நீமதித்தி யாயின்
சுடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய்-படுவெண்
புலால்தலையி னுள்ளூண் புறம்பேசக் கேட்டோ
நிலாத்தலையில் ஆடுவாய் நீ " (அ.தி. 56)

'திருநீறு அணிந்தவரே, பிரம்மனது மண்டையோட்டில் பலிஏற்று உண்டது குற்றமென்று புறத்தினுள்ளோர் பேசக்கேட்டோ நீ நிலாவைத் தலையில் சூடுவாய். மண்டையோட்டில் பலியுண்ணுதல் குற்றமன்று என்று கருதுவாயாயின் சொல்வீராக' எனக் காரணம் கேட்கிறார் அம்மையார். இறைவன் பிறைத் திங்களைச் சூடியிருத்தல் இயல்பாய் அமைந்தது. எனினும் நிலாவைக் சூடுதல், மண்டையோட்டில் பலி ஏற்றுண்டதற்கு ஒரு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரிகாரம் போல உள்ளது என்று கற்பனை செய்ததால் இது தற்குறிப்பேற்ற அணி.

" நிலாஇலங்கு வெண்மதியை தேடிக் கொள்வான்போல்
உலாவி உழிதருமோ கொல்லோ - நிலாவிருந்த
செக்கர்அவ் வானமே யொக்கும் திருமுடிக்கே
புக்கரவங் காலையே போன்று " (அ.தி. 64)

இப்பாடலில் 'சிவபிரானின் செவ்வானம் போன்ற திருமுடியில் பாம்பு ஊர்ந்து செல்கின்றது. அது அவ்வாறு செல்வது பிறையினைத் தேடிப் பற்றும்பொருட்டோ? காற்றுப் போல விரைந்து செல்கிறதே' என்கிறார் அம்மையார்.

மதியைப் பற்றுதல் பாம்பில் இயல்பாதலின், சடைமுடியில் உள்ள பாம்பும் காற்றைப் போல நிலவைப் பற்றச் செல்கிறதோ எனக் கற்பித்துக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி.

ஐய அணி

ஐயம் தோன்றுவகையில் அமைவது ஐயஅணி

" அரண் என்கோ? நான்முகன் என்கோ அரிய
பரன் என்கோ.... " (அ.தி.-18)

'இறைவனை உருத்திரன் என்பேனோ? நான்முகன் என்பேனோ? விட்டுணு என்பேனோ?' எவ்வாறு கூறுவது என ஐயம்பட உரைப்பதால் இது ஐய அணியாம்.

இவ்வாறே பின்வரும் பாடல்களில் இவ்வணி அமைந்திருப்பதைக் காணலாம்.

" இருளின்உரு என்கோ மாமேகம் என்கோ
மருளின் மணிநீலம் என்கோ - அருளெமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமேல் நக்கிலங்கு வெண்மதியம்
ஒன்றுடையாய் கண்டத்து ஒளி " (அ.தி. 88)

" அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல் சிவந்தவாறோ " (அ.தி. 98)

மயக்க அணி

ஒன்றை மற்றொன்றாக எண்ணி மயங்குவது மயக்க அணி

" திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக் கொழுந்தை நோக்கும் - ஒரு நாள்
இதுமதியென்று ஒன்றாக இன்றளவும் தேராது
அதுமதியொன் றில்லா அரா " (அ.தி. 48)

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அறிவில்லாத பாம்பு இறைவன் மார்பில் அணிந்துள்ள பன்றிக் கொம்பினைப் பார்க்கும்; இறைவன் திருமுடிமேல் சூடியுள்ள பிறைத்திங்களையும் பார்க்கும். இவ்விரண்டனுள் எது மதியென்று இன்றுவரை தெளிவு பெறாது மயங்குகிறது. எனவே மயக்க அணி.

உயர்வு நவிற்சி அணி

ஒன்றை மிகைப்படுத்திக் கூறுதல் உயர்வுநவிற்சி அணி.

" பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டங் கறுத்ததுவு மன்றியே - உண்டு
பணியுறுவார் செஞ்சடைமேல் பான்மதியி னுள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. " (அ.தி. 55)

பாம்புகளை அணிந்த இறைவன் முன்னொரு காலத்தில் தேவர்கள் அஞ்சும்படி கடலில் எழுந்த நஞ்சினை உண்டதால் அவன் கண்டம் கறுத்தது. அதுமட்டுமன்றிச் சடைமீது சூடிய பிறையினையும் தாக்கிப், பிறையிலும் மறுவாகிய வடு உண்டாயிற்று என்பது பாடற் பொருள். இங்குத் தமக்கேயன்றித் தம் உடைமைக்கும் மறு உண்டாயிற்று என்று விடத்தின் கொடுமை உணர்த்தியதால் உயர்வு நவிற்சி அணியாகும். உண்மையில் முழுநிலவிற்கே களங்கம் உண்டு. பிறைத்திங்களுக்கு மறு இல்லை.

சொல்பொருள் பின்வருநிலை அணி

ஒரு பாடலில் முன்னர் வந்த சொல் அதே பொருளில் பின்னரும் வருதல் சொல்பொருள் பின்வருநிலை அணி எனப்படும்.

" அவனே இருசுடர்தீ ஆகாச மாவான்
அவனே புவிபுனல் காற்றாவன் - அவனே
இயமானனாய் அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து. " (அ.தி. 21)

இறைவனே இருசுடர், தீ, ஆகாயமாக இருப்பவன், அவனே புவி, புனல், காற்றாக இருப்பவன். அவனே ஆன்மாவாகி, அட்ட மூர்த்தியாய் ஞானமயமாய் விளங்குகிறான் என்கிறார் அம்மையார். இப்பாடலில் 'அவனே' என்று சொல் மூன்றிடங்களில் வந்து 'இறைவன்' என்ற ஒரே பொருளைத் தந்ததால் இப்பாடல் சொற் பொருள் பின்வருநிலை அணி.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமாறு
இதுவன்றே என்றனக்கோர் சேமம் - இதுவன்றே
மின்னும் சுடருருவாய் மீண்டாய்என் சிந்தனைக்கே
இன்னும் சுழல்கின்றது இங்கு. " (அ.தி. 24)

இப்பாடலில் 'இதுவன்றே' என்ற சொல் மூன்று இடங்களில் வந்து இறைவன் திருவுருவத்தைக் குறித்து நிற்பதால் இப்பாடலிலும் இவ்வணி அமைந்துள்ளது.

" மிடற்றில் விடம்உடையீர் உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறோ-மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ
பைத்தாடும் நும்மார்பில் பாம்பு. " (அ.தி. 66)

இப்பாடலில் 'மிடறு' என்னும் சொல் 'கழுத்துப்பகுதி' என்னும் பொருளில் நான்கு முறை வருதலைக் காணலாம். எனவே சொற்பொருள் பின்வரு நிலை அணி அமைந்துள்ளது.

" நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டேமால்
நின்உருவோ மின்னுருவோ நேர்ந்து " (அ.தி. 41)

எனவரும் இரண்டடிகளில் 'உருவம்' என்ற சொல் வடிவம் எனும் பொருளில் தொடர்ந்து பயன்பட்டதால் இப்பாடலில் அமைந்துள்ள அணியும் சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

முரண் அணி

சொல்லாலும் பொருளாலும் முரண்அமையக் கூறுதல் முரண் அணி.

" அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் " (அ.தி. 61)

என்ற அடிகளில் அன்றைய நிலை, இன்றைய நிலை என முரண்பட அமைந்துள்ளது. உலகியலில் ஈடுபட்ட நிலை, உலக இயலைக் கடந்த நிலை என இருவேறு நிலைகளைக் அச்சொற்கள் குறிக்கின்றன. எனவே இப்பாடல் முரண் அணி அமைந்த பாடல்.

" ஏதொக்கும் ஏதொவ்வாது ஏதாகும் ஏதாகாது
ஏதொக்கும் என்பதனை யார் அறிவார்? " (அ.தி. 62)

என்பதில் முதலடி முழுவதும் முரண் நிலையில் காணப்படுகிறது. ஒக்கும் - ஒவ்வாது, ஆகும் - ஆகாது எனச் சொற்கள் முரண்பட அமைந்திருப்பதால் இதுவும் முரண் அணியாகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" பிறர்அறிய லாகாப் பெருமையரும் தாமே
பிறரறியும் பேருணர்வும் தாமே " (அ.தி. 30)

என்ற அடிகளில் முதலில் உள்ள 'பிறர்' என்பது அருட்கண் இல்லாதவர்களையும் , இரண்டாவது அடியில் வரும் 'பிறர்' என்பது அருட்கண் உடையவர்களையும் குறிக்கும். அருட்கண் இல்லாதவர் களால் அறியப்படாத பெருமையை உடையவன் இறைவன். அருட்கண் உடையவர்களின் பேருணர்வில் உணரப்படுபவன் இறைவன் என முரண் அமைய இப்பாடல் நயமுடன் விளங்குகிறது.

இல்பொருள் உவமை அணி

இல்லாத பொருளை உவமித்துக் கூறுவது இல்பொருள் உவமை அணி.

" அங்கண் முழுமதியம் செக்கர் அகல்வானத்து
எங்கும் இனிது எழுந்தால் ஒவ்வாதே - செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். " (அ.தி. 52)

திருமாலைப் பாகமாகக் கொண்ட சிவபிரான் தன் சிவந்த சடைமேல் தரித்துள்ள வெள்ளிய தலைகளை வரிசையாகக் கோத்த தலைமாலை, செவ்வானத்திலுள்ள முழுமதி பல உருவங்கள் கொண்டு எல்லாப்பக்கங்களிலும் ஒளிவீசுவதுபோல விளங்குகிறது என்கின்றார் அம்மையார். ஒன்றாகிய சந்திரன் பல வடிவுகொண்டு ஒரே இடத்தில் தோன்றுதல் இல்லை யாதலின் இப்பாடல் இல்பொருள் உவமைஅணி அமைந்தது.

வஞ்சப் புகழ்ச்சி அணி

பழிப்பதுபோலப் புகழ்தல் வஞ்சகப் புகழ்ச்சி அணி.

'எம்பெருமானே! பாம்பினையும் மதியினையும் ஈர்த்து இரைத்து ஓடும் கங்கை வெள்ளம் உமது சடைக்கற்றையை மீறப் பெருகி ஓடுமாயின் என் செய்வீர்? எமக்குச் சொல்வீராக' என அம்மையார் இறைவனின் வல்லமையைப் பழிப்பது போன்ற பொருளில் பாடல் தருகிறார்.

" கூறுஎமக்கீது எந்தாய் குளிர்சடையை மீதழித்திட்டு
ஏறமிகப் பெருகின் என்செய்தி - சீறி
விழித்தூரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்தோடும் கங்கைத் திரை. " (அ.தி. 90)

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இப்பாடலில், கங்கையைச் சடைக்குள் அடக்கிய பெருமானின் ஆணையைப் போற்றுதலே அம்மையாரின் உண்மையான நோக்க மாகும். கங்கையை அடக்கும் இறைவன் திறத்தை வியந்து பாடியதால் இது வஞ்சப் புகழ்ச்சி அணி.

தமக்கென்றும் இன்பணி செய்திருப்பேமுக்குத் தாமொருநாள்
எமக்கொன்று சொன்னால் அருளுங்கொலாம் இணையாதுமின்றிச்
சுமக்கின்ற பிள்ளை வெள்ளேறு ஒப்பதொன்று தொண்டைக்கனிவாய்
உமைக்கென்று தேடிப்பெறாது உடனே கொண்ட உத்தமரே."

(திரு.இ.ம.மா. 19)

இப்பாடலில் தனக்கெனக் காளையை வாகனமாகக் கொண்டவர், தம் தேவி பார்வதிக்கும் ஒரு வாகனத்தைக் கொடுத்திருக்கலாம். அவ்வாறு செய்யாது தேவியைத் தம் இடப்பக்கத்தில் வைத்துக் கொண்டு ஒரே வாகனத்தில் செல்கின்றார். இப்படியிருக்க இனிய பணிகளைச் செய்யும் அடியார்கள் ஒன்று வேண்டினால் இறைவன் அருள் காட்டுவாரா என ஐயுற்றுப் அம்மையார்.

உமாதேவிக்கே ஒரு வாகனம் கொடுத்து உதவாதவர், அடியார் களுக்கு எப்படி அருள்வார் எனப் பழிப்பது போலப் பேசுகிறார். உண்மையில் தேவியை வேறுபாடின்றித் தம்மொடு இணைத்துக் கொண்டதுபோல, அடியவர்களையும் தன் அருளுக்குப் பாத்திர மாக்கிக் கொள்வான் என்பதே பொருளாகும். இறைவன் அருளைப் பழிப்பது போலப் புகழ்ந்ததால் இதில் காண்பது வஞ்சப்புகழ்ச்சி அணியாகும்.

இவ்வாறு பல்வேறு அணிகளால் அம்மையார் தம் பாடல்களை நயம்படச் செய்துள்ளார்.

உள்ளம் உணர்த்தும் பாடல்

கவிஞர்கள் தாம் படைக்கும் இலக்கியத்தில் தம் பண்பை - உள்ள இயல்பை வெளிப்படுத்திக் கொள்ளாமல் பாடமுடியாது. அவ்வகையில் அம்மையாரிடம் காணப்படும் தாய்மை அன்பு பல பாடல்கள் வழி புலனாகிறது.

" உரைக்கப்படுவதும் ஒன்றுண்டு கேட்கில் செவ்வான் தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றும் தொடேல் ". (திரு.இ.ம.மா. 7)

என்ற விடத்து இறைவனைப் பாம்பு ஒன்றும் செய்யாது என்று அறிந்திருந்தும் பரிவினால் பாம்பினைத் தொடவேண்டா என

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேண்டுகிறார். அவர் உள்ளம் புலனாகிறது. இத்தகு பாடல்கள் கற்பார் நெஞ்சங்களை நெகிழ்விப்பனவாய் அமைகின்றன.

.... எண் தோளன் பைம்பொன் கழலே
தாழாதுஇறைஞ்சிப் பணிந்து பன்னாளும் தலைநின்மின் ''
(அ.தி.9)

எனக் கூறும் அறிவுரைப் பகுதிகளும் படிப்பவர் உள்ளத்தை உயர்த்தும் தன்மையன.

அம்மையாரின் படைப்பு நயம்மிக்க - தரம்மிக்க இலக்கியம் என்பதில் ஐயமில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

9. திருத்தலச் சிறப்பு

காரைக்கால்

காரைக்கால், அம்மையார் அவதரிக்கப்பெற்ற பெருமையுடைய தலமாகும். அதனால் அம்மையாரும் 'காரைக்கால் அம்மையார்' ஆனார். இத்தலம் சாகம்பரியின் பெருமையை விளக்கும் தலமாதலின் இது 'சாகம்பரிபுரம்' என்றும் வழங்கப்படும். ஒரு சமயம் மழை பெய்யாது, பஞ்சம் வந்தபோது, தேவர்கள் ஈசனை வேண்ட, பெருமான் பார்வதியைக் கானகம் சென்று தவம் செய்யச் சொன்னார். பராசர முனிவரின் உதவியுடன் அம்பிகை இத்தலத்தில் சாகம்பரியாக வந்து சிவவழிபாட்டைச் செய்து வந்தார். அவருக்குக் காட்சி அளிக்கக் கயிலையிலிருந்து பெருமான் வர, அதனால் அவர் கயிலைநாதர் ஆனார். நாட்டில் மழைபெய்து பஞ்சம் நீங்கியது. அதனால் அவ்வூர்ப் பெயர் சாகம்பரிபுரம் எனப்பட்டதாக வடமொழி பிரமாண்ட புராணம் கூறும். இதில் வரும் அம்மையாரின் வரலாறு, சேக்கிழார் கூறும் புராணத்திலிருந்து சிலமாறுதல்களுடன் காணப்படுகிறது. பிரமாண்ட புராணத்தில் தனதத்தன் மனைவி பெயர் தருமவதி என்றும், அம்மையார் பெயர் பூதவதி என்றும் வணிகன் வந்து சேர்ந்த இடம் பாண்டி நாட்டில் தாமிரபரணி கடலோடு கலக்கும் இடத்திற்கு அருகிலுள்ள கனகலம் என்றும் காணப்படுகிறது.

காரைக்கால் நகரம் சோழநாட்டைச் சார்ந்த கடற்கரைப் பட்டினம். இங்குள்ள அம்மையார் கோயிலும், திருஉருவங்களும் அழகுபட அமைந்துள்ளன. இவ்வூரில் அம்மையார் இறைவன் அருளால் அதிமதுரக்கனி பெற்ற நாள் 'மாம்பழத் திருநாள்' என்று ஆனிமாதம் பௌர்ணமி நாளில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அம்மையாரின் வாழ்க்கையை அப்படியே நிகழ்த்திக் காட்டும் விழாவாக விளங்குகிறது. அன்று இறைவன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிச்சாடணர் கோலத்தில் திருவீதியில் உலா வருவார். அன்று ஊர்முழுவதும் மாங்கனிகளைக் கூடை கூடையாக தெருவில் வீசுவர். அப்பழங்களைப் பெறுவோர் பல நலன்களையும் அடைவர் என்பர்.

எப்போதும் வீணையும் கையுமாகப் பாடிக் கொண்டிருக்கும் தும்புருவின் மகள் சுமதியே காரைக்காலில் துர்வாசமுனிவர் சாபத்தால் புனிதவதியாராகப் பிறந்தார் என்கிறது தலபுராணம்.

காரைக்கால் மாயவரம் - தரங்கம்பாடி இருப்புப்பாதை வழியில் உள்ளது. மாயவரத்தின்று செல்லப் பேருந்து வசதியும் உண்டு.

திருவாலங் காடு

இத்தலம் தொண்டை நாட்டுத்தலம். சிவபிரானது தூக்கிய திருவடியின்கீழ் நீங்காது இருந்து, பாடி அவன் ஆடலைக் கண்டு மகிழ்ந்து அம்மையார் சிவானுபவம் பெற்ற தலமாகும். 'எரி பாய்ந்து ஆடும் இடம் காட்டுவாய்' என வேண்டிய அம்மையார்க்குத் திருவாலங்காட்டைக் காணுமாறு செய்தார் சிவபிரான். இறைவன் ஆடலைக் கண்டு இங்கேதான் அம்மையார் திருப்பதிகங்கள் இரண்டு பாடி வழிபட்டார்.

இறைவன் உகந்த காடுகளுள் தனிச்சிறப்பு உடையது திருவாலங்காடு. தொடக்கத்தில் இங்கு ஆலமரங்கள் நிறைந்த காடாக இருந்ததால் இவ்விடம் வடாரண்யம் எனப் பெயர்பெற்றது. இக்காட்டில் வாழ்ந்த காளியின் செருக்கை அடக்கவே இறைவன் தாண்டவம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. இது குறித்த செய்தி வருமாறு:-

திருவாலங்காட்டில் வாழ்ந்து வந்த நிம்பன், கும்பன் எனும் இரண்டு அரக்கர்களைப் பார்வதிதேவி அழித்தார். அதனால் அசுரர்களின் உடன்பிறந்தாளின் மகன் இரத்தபீஜன் என்பவன் தேவியை எதிர்த்தான். இவ்வரக்கன், போர்க்களத்தில் இவன் உடம்பிலிருந்து சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் ஓர் அரக்கனாக மாறிவிடக் கூடிய வரத்தைப் பெற்றிருந்தான். போர்க்களத்தில் இவன் உடம்பிலிருந்து நிலத்தில் பட்ட இரத்தத் துளிகள் அரக்கர்களாகிப் போர்க்களம் எங்கும் இரத்த பீஜர்களே காணப்பட்டனர். அந்த அரக்கனை அழிக்கவே தேவி காளியைப் படைத்தாள். காளி அரக்கன் சிந்திய இரத்தத் துளிகளை எல்லாம், தன் திறந்த வாயால் விழுங்கிவிட, எல்லா இரத்தமும் இழந்து அரக்கன் அழிந்தான். காளியின் வலிமை இப்போது அதிகமானதால், அவள் தேவர்களைத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

துன்புறுத்த, தேவர்கள் பார்வதியிடம் முறையிட்டனர். தேவி காளியைச் சிவனோடு நடனத்தில் போட்டியிடுமாறு கூற, காளியும் சிவனோடு சேர்ந்து ஆடினாள். பெருமானின் காதணி கீழேவிழ, அதைக் காதில் பொருத்த சிவபிரான் காலை உயர்த்தி ஆடிட, அவ்வாறு காளியால் ஆட முடியாது போகக் காளி தோற்கிறாள். எனினும் சிவபிரான் அவன்மீது கருணை கூர்ந்து, 'இனிமேல் இவ்வூரில் முதல் பூஜையும் முதல் விழாவும் உனக்கு நடக்கட்டும்' என அருள் புரிந்தார்.

திருவாலங்காட்டைப் பற்றி மற்றொரு செய்தியும் வழங்கப் படுகிறது. காட்டில் முனிவர்களும், யோகிகளும், தேவர்களும் தவம் செய்து கொண்டிருக்கையில், அவர்கள் முன்னர் ஓர் ஆலமரமும் அதனடியில் ஓர் ஒளியும் தோன்றியது. அவ்வொளி இலிங்க வடிவாகக் காட்சி அளித்தது. அதைக் கண்ட முனிவர்களும் யோகிகளும் அதனைப் பவள மல்லிகையிட்டு வழிபட்டு வரலாயினர். அங்குத் தோன்றிய அரக்கன் ஒருவன் பூசைக்கு இடையூறு விளைவிக்க, அவர்களும் அதனைப் பொருட்படுத்தாது வழிபாட்டைத் தொடர்ந்து செய்து வந்தனர். ஒரு நாள் ஒளிமயமான லிங்கம் அவ்வரக்கனுக்கு, பெரியதொரு அரக்கனாகப் புலப்பட, அதைக் கண்டு அஞ்சி அவ்வரக்கன் அவ்விடம் விட்டு நீங்கினான். மகிழ்ந்த முனிவர்களும் யோகிகளும் சிவபிரானைத் 'தேவர் சிங்கமே' என வழிபடலாயினர். இதனைச் சுந்தரரும் தம் பாடலில் குறிப்பிடுகிறார்.

பழங்காலத்தில் திருவாலங்காடு பழையனூர்த் திருவாலங்காடு எனப்பட்டது. இங்குத்தான் பேய்கள் சூழ, துடியும், பறையையும் கறங்கப் பரமன் ஆடினான். பிரமன் தாளம்போட, விஷ்ணுவும் நந்தியும் மத்தளம் ஒலிக்க, மற்றத் தேவர்கள் பிற இசைக்கருவிகளை முழக்க, எடுத்த பாதத்துடன், எட்டுக் கரங்களுடன் இறைவன் ஆடல் புரிந்தான் என்பர்.

திருவாலங்காட்டில் உள்ள கோவிலில் இறைவன் - வடாரண்யேசுவரர். தேவர் சிங்கப்பெருமாள், ஆலங்காடு அப்பர்.

இறைவி	-	பிரம்மராம்பாள், வண்டார்குழலி
தலமரம்	-	பலா, ஆலமரம்
தீர்த்தம்	-	சென்றாடு தீர்த்தம், முக்தி தீர்த்தம்

இக்கோயிலைக் கார்க் கோடன், சுனந்த முனிவர் போன்றோர் வழிபட்டனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இறைவன் ஆடிய சபை இரத்தின சபை. இங்கு ஆடிய ஆட்டம் ஊர்த்துவ தாண்டவம். அண்டமுற நிமிர்ந்தாடும் பெருமான் 'இரத்தின சபாபதி' எனச் சிறப்பிக்கப்படுகிறார்.

இத்தலம் தேவார ஆசிரியர் மூவரால் பாடப் பெற்ற சிறப்புடையது.

" கேடும் பிறவியும் ஆக்கினாரும் கேடிலா
வீடும் நெறி விளம்பினாம் எம் விகிர்தனார்.
காடும் சுடலையும் கைக்கொண்டெல்லிக் கணப்பேயோடு
ஆடும் பழையனூர் ஆலங்காட்டெம் மடிகளே ".

(தேவா. 1.45.2)

" ஒன்றா உலகனைத்தும் ஆனோர்தாமே
ஊழிதொ றூழி உயர்ந்தோர்தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர்வளி தீஆகாசம் ஆனார்தாமே
கொன்றாடும் கூற்றறை உதைத்தார்தாமே
கோலப் பழனை யுடையார்தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார்தாமே
திருஆலங்காடு உறையும் செல்வரும்தாமே "

(தேவா. 6-78.1)

" முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டும் சிவனே தேவர்சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழையனூர் மேய
அத்தா ஆலங்காடா உன்அடியாங்கு அடியேன் ஆவேனே "

(தேவா. 7.52.1)

இங்ஙனமே ஆலங்காட்டு அப்பனை இராமலிங்கரும், அருணகிரி நாதரும் போற்றுவதைக் கீழ்க் காண்போம்.

" .... சொற்போரில்
ஓலங் காட்டும் பழையனூர்நீலி வாதடக்கும்
ஆலங்காட்டில் சூழ் அருள் மயமே " (திருவருட்பா)

" முடிமிசை சோமன் சூட்டி வடிவுள ஆலங்காட்டில்
முதிர்நட மாடுங் கூத்தர். " (திருப்புகழ்)

அம்மையார் தம் பதிகத்தில் 'அண்டமுற நிமிர்ந்தாடும் எங்கள் அப்பன் இடம் திரு ஆலங்காடு' எனப் பாடினார். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக் (கி.பி.1178 - 1218) கல்வெட்டில் திருவாலங்காட்டுக் கோயில் 'அண்டமுற நிமிர்ந்தாடும் லிங்க நாயனார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கோயில்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழக வரலாற்றிற்கு இக்கல்வெட்டு நல்ல சான்றாகும்.

பழையனூர் செல்லும் வழியில், திருவாலங்காட்டிலிருந்து சிறிது தொலைவில் (சுமார் ஒரு கிலோமீட்டர்) பழையனூர் வேளாளர் எழுபதுபேர் தீப்பாய்ந்து செட்டிப் பிள்ளைக்குத் தந்த வாக்குறுதியைக் காத்த 'தீப்பாய்ந்த மண்டபம்' உள்ளது. தீப்பாய்ந்த வேளாளர் மரபில் பழையனூரில் தற்போது உள்ளவர்கள் நாள்தோறும் திருவாலங்காடு சென்று இறைவனைத் தரிசித்துச் செல்லும் மரபை நெடுங்காலமாகக் கடைப்பிடித்து வருகின்றனர். இம்மரபைப் பிற்காலத்தவரும் அறியும் வகையில், 'கூழாண்டார் கோத்திரம் சதா சேவை' எனக் கல்லில் பொறித்து அக்கல்லைக் கோயில் முன் வாயிலில் உயர்ந்த படியைத் தாண்டியவுடன் முதல் படியாக வைத்துள்ளனர். இம்மரபினர் கோத்திரமே 'கூழாண்டார் கோத்திரம்' எனப்படும். அதாவது இவர்கள் கூழை உண்டு, விதைத்த நெல்லை இறைவனுக்குப் படைப்பவர்கள் என்பது பொருளாகும்.

சென்னையிலிருந்து திருவள்ளூர் வழியாக அரக்கோணம் செல்லும் பேருந்துப் பாதையில் இத்தலம் உள்ளது. சென்னையிலிருந்து திருவள்ளூர், அரக்கோணம் வழியாகச் சோளிங்கபுரம் செல்லும் பேருந்தும் இவ்வூர்வழியாகச் செல்கிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

10. அம்மையார் அருளிய நூல்கள்

அற்புதத் திருவந்தாதி

திருச்சிற்றம்பலம்

1. பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்

2. இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடர் உருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பறா தென்நெஞ் சவர்க்கு

3. அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தல்லால் - பவர்சடைமேல்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்கு
ஆகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்

4. ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டால்
கேளாத தென்கொலோ கேளாமை - நீளாகம்
செம்மையான் ஆகித் திருமிடறு மற்றொன்றும்
எம்மைஆட் கொண்ட இறை

5. இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் - இறைவனே
எந்தாய்என இரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

6. வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க - ஞானத்தான்
முன்னஞ்சத் தால்இருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பன் யான்

7. யானே தவமுடையேன் என்நெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானேயக்
கைமா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன்

8. ஆயினேன் ஆள்வானுக் கன்றே பெறற்கரியன்
ஆயினேன் அஃதன்றே யாமாறு - தூய
புனற்கங்கை ஏற்றா னோர் பொன்வரையே போல்வான்
அனற்கங்கை ஏற்றான் அருள்

9. அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானால் -அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு

10. எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று

11. ஒன்றே நினைத்திருந்தேன்; ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தி னுள்ளடைத்தேன் - ஒன்றேகாண்
கங்கையான் திங்கள் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது

12. அதுவே பிரான் ஆமாறு ஆட்கொள்ளு மாறும்
அதுவே யினியறிந்தோ மானால் - அதுவே
பனிக்கணங்கு கண்ணியார் ஒண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு

13. தகவுடையார் தாமுளரேல் தாரகலம் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர் - மிகவடா
ஊர்ந்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமே லேபாவம் தான்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

14. தானே தனிநெஞ்சந் தன்னை யுயக்கொள்வான்
தானே பெருஞ்சேமஞ் செய்யுமால் - தானேயோர்
பூணாகத் தாற்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழும்
நீணாகத் தானை நினைந்து

15. நினைந்திருந்து வானவர்கள் நீண்மலராற் பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார் - நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே என்கின்றேற்கு
என்செய்வான் கொல்லோ இனி

16. இனியோ நாம் உய்ந்தோம் இறைவன்தாள் சேர்ந்தோம்
இனியோர் இடர்இலோம் நெஞ்சே - இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப்பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண்

17. காண்பார்க்குங் காணலாந் தன்மையானே கைதொழுது
காண்பார்க்குங் காணலாம் காதலாற் - காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரன்

18. அரனென்கோ நான்முகன் என்கோ அரிய்
பரனென்கோ பண்புணர மாட்டேன் - முரண் அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை எம்மானை இன்று

19. இன்று நமக்கெளிதே மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை - என்றுமோர்
மூவா மதியானை மூவே மூலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு

20. அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பார் ஆகாசம்
அப்பொருளுந் தானே அவன்

21. அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல்காற் றாவான் - அவனே
இயமான னாய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

22. வந்திதனைக் கொள்வதே ஒக்கும்இவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினோ - வந்தோர்
இராநீர் இருண்டனைய கண்டத்தீர் எங்கள்
பிரானீர்உம் சென்னிப் பிறை

23. பிறையும் புனலும் அனல்அரவுஞ் சூடும்
இறைவர் எமக்கிரங்கா ரேனும் - கறைமிடற்ற
எந்தையார்க் காட்பட்டேம் என்றென் றிருக்குமே
எந்தையா உள்ளம் இது

24. இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமாறு
இதுவன்றே என்றனக்கோர் சேமம் - இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டயென் சிந்தனைக்கே
இன்னுஞ் சுழல்கின்ற திங்கு

25. இங்கிருந்து சொல்லுதென் எம்பெருமான் எண்ணாதே
எங்கும் பலிதிரியும் எத்திறமும் - பொங்கிரவில்
ஈமவனத் தாடுவதும் என்னுக்கென் றாராய்வோம்
நாம் அவனைக் காணலுற்ற ஞான்று

26. ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோல் மின்னுவன
போன்ற கடைமிடற்றான் பொன்மார்பின் - ஞான்றெங்கும்
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே
அக்கயலே வைத்த அரவு

27. அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள் - முரண்அழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பால் எய்தானே
பொன்னாரம் மற்றொன்று பூண்

28. பூணாக ஒன்று புனைந்தொன்று பொங்கதளின்
நாணாக மேல்மிளிர நன்கமைத்துக் - கோள்நாகம்
பொன்முடிமேற் சூடுவதும் எல்லாம் பொறியிலியேற்கு
என்முடிவ தாக இவர்

29 இவரைப் பொருள் உணர மாட்டாதார் எல்லாம்
இவரை இகழ்வதே கண்டீர் - இவர் தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி என்பணிந்த
பேய்க்கோலங் கண்டார் பிறர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

30\. பிறர்அறிய லாகாப் பெருமையரும் தாமே
பிறர்அறியும் பேருணர்வுந் தாமே - பிறருடைய
என்பே அணிந்திரவில் தீயாடும் எம்மானாம்
வன்பேயுந் தாமும் மகிழ்ந்து

31\. மகிழ்தி மடநெஞ்சே மானிடரில் நீயும்
திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தாய் - இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு

32\. பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போந்தொழுகிற் றொக்கும் - தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் தன்மார்பின் நூல்

33\. நூலறிவு பேசி நுழைவிழா தார்திரிக
நீலமணிமிடற்றான் நீர்மையே - மேலுலந்தது
எக்கோலத் தெவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத் தவ்வுருவே ஆம்

34\. ஆமா றறியாவே வல்வினைகள் அந்தரத்தே
நாமாள்என் றேத்தார் நகர்மூன்றும் - வேமா
ஒருகணையாற் செற்றானை உள்ளத்தால் உள்ளி
அருகணையா தாரை அடும்

35\. அடுங்கண்டாய் வெண்மதியென் றஞ்சி இருள்போந்து
இடங்கொண் டிருக்கின்ற தொக்கும் - படங்கொள்
அணிமிடற்ற பேழ்வாய் அரவசைத்தான் கோல
மணிமிடற்றின் உள்ள மறு

36\. மறுவுடைய கண்டத்தீர் வார்சடைமேல் நாகம்
தெறுமென்று தேய்ந்துழலும் ஆஆ - உறுவான்
தளரமீ தோடுமேல் தான்அதனை அஞ்சி
வளருமோ பிள்ளை மதி

37\. மதியா அடல்அவுணர் மாமதில்மூன் றட்ட
மதியார் வளர்சடையி னானை - மதியாலே
என்பாக்கை யால்இகழா தேத்துவரேல் இவ்வுலகில்
என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

38. ஈண்டொளிசேர் வானத் தெழுமதியை வாளரவம்
தீண்டச் சிறுகியதே போலாதே - பூண்டதோர்
தாரேறு பாம்புடையான் மார்பில் தழைத்திலங்கு
கூரேறு கார்ஏனக் கொம்பு

39. கொம்பினைஓர் பாகத்துக் கொண்ட குழகன்றன்
அம்பவள மேனி யதுமுன்னம் - செம்பொன்
அணிவரையே போலும் பொடிஅணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து

40. மறித்த மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுந்தொண்டர் பாதம் - குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்டு
உள்ளாதார் கூட்டம் ஒருவு

41. ஒருபால் உலகளந்த மாலவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் - இருபாலும்
நின்னுருவம் ஆக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து

42. நேர்ந்தரவங் கொள்ளச் சிறுகிற்றோ நீஅதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ - பேர்ந்து
வளங்குழவித் தாய்வளர மாட்டாதோ என்னோ
இளங்குழவித் திங்கள் இது

43. திங்கள் இதுசூடிச் சில்பலிக்கென் றூர்திரியேல்
எங்கள் பெருமானே என்றிரந்து - பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாம்விலக்க வல்லமே
தானே அறிவான் தனக்கு

44. தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவா றென்கொல் - மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான்

45. பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே வேண்டிப் - பிரானவனை
எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

46. எளியது இதுஅன்றே ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவிலீர் ஆஆ - ஒளிகொள்மிடற்று
எந்தைஅராப் பூண்டுழலும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழுந் திறம்

47. திறத்தால் மடநெஞ்சே சென்றடைவ தல்லால்
பெறத்தானும் ஆதியோ பேதாய் - நிறத்த
இருவடிக்கண் ஏழைக் கொருபாகம் ஈந்தான்
திருவடிக்கட் சேருந் திரு

48. திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும் - ஒருநாள்
இதுமதியென் றொன்றாக இன்றளவுந் தேராது
அதுமதியொன் றில்லா அரா

49. அராவி வளைத்தனைய அங்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய ஓடி - விரவுதலாற்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே
தன்னோடு ஒப்பான் சடை

50. சடைமேல்அக் கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே போலும் - முடிமேல்
வலப்பால்அக் கோலமதி வைத்தான்தன் பங்கின்
குலப்பாவை நீலக் குழல்

51. குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்து
எழிலாக வைத்தேக வேண்டா - கழல்ஆர்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டிற் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு

52. அங்கண் முழுமதியஞ் செக்கர் அகல்வானத்து
எங்கும் இனிதெழுந்தால் ஒவ்வாதே - செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர்

53. சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேண்உலவி
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப் - பேரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்ஈசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேயோர் கார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

54. காருருவக் கண்டதெங் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஒருருவராய் நின்னோடு உழிதருவான் - நீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணாமே பண்டு

55. பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டங் கறுத்ததும் அன்றியே - உண்டு
பணியுறுவார் செஞ்சடைமேற் பான்மதியின் உள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு

56. வடுவன் றெனக்கருதி நீமதித்தி யாயிற்
கடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய் - படுவெண்
புலால்தலையின் உள்ளூண் புறம்பேசக் கேட்டோம்
நிலாத்தலையிற் சூடுவாய் நீ

57. நீஉலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல்கண்டாய் - தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விடஅரவம் மேலாட மிக்கு

58. மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தால் ஒவ்வாதே - செக்கர்போல்
ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கவன்றன் பொன்உருவிற்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு

59. பண்புணர மாட்டேன்நான் நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைகண்டா - பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய் நீறணிவது
எவ்வுருவோ நின் உருவம் மேல்

60. மேலாய மேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே - மாலாய
கைம்மா மதகளிற்றுக் கார்உரிவை போர்த்தபோது
அம்மான் திருமேனி அன்று

61. அன்றுந் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்உருவம் ஏது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

62. ஏதொக்கும் ஏதொவ்வாது ஏதாகும் ஏதாகாது
ஏதொக்கும் என்பதனை யார்அறிவார் - பூதப்பால்
வில்வேடனாகி விசயனோ டேற்றநாள்
வல்வேடன் ஆன வடிவு

63. வடிவுடைய செங்கதிர்க்கு மாறாய்ப் பகலோ
நெடிதுலவி நின்றெறிக்குங் கொல்லோ - கடியுலவு
சொன்முடிவொன் றில்லாத சோதியாய் சொல்லாயால்
நீள்முடி மேல் திங்கள் நிலா

64. நிலா இலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போல்
உலாவி உழிதருமா கொல்லோ - நிலாஇருந்த
செக்கரவ் வானமே ஒக்குந் திருமுடிக்கே
புக்கவரங் காலையே போன்று

65. காலையே போன்றிலங்கும் மேனி கரும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு

66. மிடற்றில் விடமுடையீர் உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறோ - மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணங் கரிதாலோ
பைத்தாடும் நும்மார்பிற் பாம்பு

67. பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழ்அருவி தாங்குதலால் - ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடிவின் மேய சிலம்பு

68. சிலம்படியாள் ஊடலைத் தான் தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேற் செவ்வரத்தஞ் சேர்த்தி - நலம்பெற்று
எதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி

69. முடிமேற் கொடுமதியான் முக்கணான் நல்ல
அடிமேற் கொடுமதியோங் கூற்றைப் - படிமேற்
குனியவல மாமடிமை கொண்டாடப் பெற்றோம்
இனி அவலம் உண்டோ எமக்கு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

70. எமக்கிதுவோ பேராசை என்றுந் தவிராது
எமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய் - அமைக்கவே
போந்தெரிபாய்ந்த தன்ன புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடும் இடம்

71. இடப்பால வானத் தெழுமதியை நீஓர்
மடப்பாவை தன்னருகே வைத்தால் - இடப்பாகம்
கொண்டாள் மலைப்பாவை கூறொன்றுங் கண்டிலங்காண்
கண்டாயே முக்கண்ணா கண்

72. கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன் - துண்டஞ்சேர்
விண்ணாளுந் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈதென் கருத்து

73. கருத்தினால் நீகருதிற் றெல்லாம் உடனே
திருத்தலாஞ் சிக்கெனநான் சொன்னேன் - பருத்தரங்கம்
வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே எப்போதும் ஓது

74. ஓது நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்தட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் - பேதையர்கள்
எண்ணா திடும்பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம்

75. கலங்கு புனற்கங்கை யூடால லாலும்
இலங்க மதிஇயங்க லாலும் - நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேற் பாம்பியங்க லாலும்
விரிசடையாம் காணில் விசும்பு

76. விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடம் தேய்ப்ப - முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி யேபாவம் பொல்லாவாம்
அந்தா மரைபோல் அடி

77. அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும் - கடகம்
மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

78. அரங்கமாய்ப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய் - இரங்குமேல்
என்னாக வையான்றான் எவ்வுலகம் ஈந்தளியான்
பன்னாள் இரந்தாற் பணிந்து

79. பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை ஏத்தத் - துணிந்தென்றும்
எந்தையார்க் காட்செய்யப் பெற்ற இதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு

80. செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்
அரக்கனையும் முன்னின் றடர்த்த - திருத்தக்க
மாலயனுங் காணா தரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால்..

81. காலனையும் வென்றோம் கடுநகரம் கைகழன்றோம்
மேலை இருவினையும் வேர்அறுத்தோம் - கோல
அரணார் அவிந்தழிய வெந்தீஅம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து

82. சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
பேர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியவாம் - தேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிருஞ் சாயுந் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின்

83. மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலுங் காண்பார்கட் கென்றிரேல் - தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது

84. நெடிதாய பொங்கெரியும் தன்மதியும் நேரே
கடிதாங் கடுஞ்சுடரும் போலும் - கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும் வெந்தீ யினில் அழியக்
கண்டாலும் முக்கணாங் கண்

85. கண்ணாரக் கண்டும்என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் - விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

86. பெறினும் பிறிது யாதும் வேண்டேம் நமக்கீது
உறினும் உறாதொழியு மேனும் - சிறுதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நன்கணத்தில் ஒன்றாய நாம்

87. நாமாலை சூடியும் நம்ஈசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய் - நாமோர்
அறிவினையே பற்றினால் எற்றே தடுமே
எறிவினையே என்னும் இருள்

88. இருளின் உருஎன்கோ மாமேகம் என்கோ
மருளில் மணிநீலம் என்கோ - அருள் எமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமேல் நக்கிலங்கு வெண்மதியம்
ஒன்றுடையாய் கண்டத் தொளி

89. ஒளிவிலி வன்மதனை ஒண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தனையிற் சேர்வாய் - ஒளிநஞ்சம்
உண்டவா யஃதிருப்ப உன்னுடைய கண்டம்இருள்
கொண்டவா றென்இதனைக் கூறு

90. கூறெமக்கீ தெந்தாய் குளிர்சடையை மீதழித்திட்டு
ஏற மிகப்பெருகின் என்செய்தி - சீறி
விழித்தூரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்தோடுங் கங்கைத் திரை

91. திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்
உரைமருவி யாம்உணர்ந்தோம் கண்டீர் - தெரிமினோ
இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே
எம்மைப் புறம்உரைப்ப தென்

92. என்னை உடையானும் ஏகமாய் நின்றானும்
தன்னை அறியாத தன்மையனும் - பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்கு
அருளாக வைத்த அவன்

93. அவன் கண்டாய் வானோர் பிரானாவான் என்றும்
அவன்கண்டாய் அம்பவள வண்ணன் - அவன் கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பால் நன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன் பாய்நீ விரும்பு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

94. விருப்பினால் நீ பிரிய கில்லாயோ வேறா
இருப்பிடமற் றில்லையோ என்னோ - பொருப்பன் மகள்
மஞ்சுபோல் மால்விடையாம் நிற்பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ சொல்லாய் அவள்

95. அவளோர் குலமங்கை பாகத் தகலாள்
இவளோர் சலமகளும் ஈதே - தவளநீறு
என்பணிவீர் என்றும் பிரிந்தறியீர் ஈங்கிவருள்
அன்பணியார் சொல்லுமின்இங்கு ஆர்

96. ஆர்வல்லார் காண அரனவனை அன்பென்னும்
போர்வை யதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனிநெஞ்சின் உள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து

97. மறைத்துலகம் ஏழினிலும் வைத்தாயோ அன்றேல்
உறைப்போடும் உன்கைக்கொண் டாயோ - நிறைத்திட்டு
உளைந்தெழுந்து நீ எரிப்ப மூவுலகும் உள்புக்கு
அளைந்தெழுந்த செந்தீ அழல்

98. அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ - கழலாடப்
பேயாடு கானிற் பிறங்க அனல்ஏந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு

99. செப்பேந் திளமுலையாள் காணவோ தீப்படுகாட்டு
அப்பேய்க் கணமவைதாங் காணவோ - செப்பெனக்கொன்று
ஆகத்தான் அங்காந் தனல்உமிழும் ஐவாய
நாகத்தாய் ஆடும் நடம்

100. நடக்கிற் படிநடுங்கும் நோக்கின் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும் - அடுக்கற்
பொருமேறோ ஆனோறா பொன்னொப்பாய் நின்னேறு
உருமேறோ ஒன்றா உரை

101. உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினால் காரைக்காற் பேய்சொற் - பரவுவார்
ஆராத அன்பினோ டண்ணலைச் சென்றேத்துவார்
பேராத காதல் பிறந்து

திருச்சிற்றம்பலம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவிரட்டை மணிமாலை

திருச்சிற்றம்பலம்

1. கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி
நெஞ்சம் என்பாய்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்த்திகண்
டாய்தள ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்
திடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களும்எருக் கும்மிருக்
குஞ்சென்னி ஈசனுக்கே

2. ஈசன் அவன்அல்லா தில்லை எனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து - பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான்

3. பிரானென்று தன்னைப்பன் னாள்பர
வித்தொழு வார்இடர்கண்டு
இரானென்ன நிற்கின்ற ஈசன்கண்
டீர்இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க்
கிடந்துபொம் மென்துறைவாய்
அராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொன்
நீள்முடி அந்தணனே

4. அந்தணனைத் தஞ்சமென் றாட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன்-கொந்தணைந்த
பொன்கண்டாற் பூணாதே கோள்நாகம் பூண்டானே
என்கண்டாய் நெஞ்சே இனி

5. இனிவார் சடையினிற் கங்கையென்
பாளைஅங் கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணில்என்
செய்திகை யிற்சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும்வெந்
தன்றுசெந் தீயில்மூழ்கத்
தனிவார் கணைஒன்றி னால்மிகக்
கோத்தஎஞ் சங்கரனே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

6. சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - அங்கொருநாள்
ஆவாவென் றாழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை

7. உரைக்கப் படுவதும் ஒன்றுண்டு
கேட்கிற்செவ் வான்தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றுந்
தொடேல்இழிந் தோட்டந்தெங்கும்
திரைக்கின்ற கங்கையுந் தேன்நின்ற
கொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித்
தலைவைத்த வேதியனே

8. வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்கு
ஆதியனை ஆதிரைநன் னாளானைச் - சோதிப்பான்
வல்லேன மாய்ப்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன மாஎன்றான் கீழ்

9. கீழா யினதுன்ப வெள்ளக்
கடல்தள்ளி உள்ளுறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென்
பீர்விர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டன்என்
தோளன்பைம் பொற்கழலே
தாழா திறைஞ்சிப் பணிந்துபன்
னாளுந் தலைநின்மினே

10. தலையாய ஐந்திணையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினஉணர்ந்தோர் காண்பர் - தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல்

11. கழற்கொண்ட சேவடி காணலுற்
றார் தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா
வினைநகர் ஏதுமின்றித்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தழற்கொண்ட சோதிச்செம் மேனிஎம்
மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி
நம்மடுந் தொல்வினையே

12. தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் - மெல்லியல்ஓர்
கூற்றானை கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை

13. நினையா தொழிதிகண் டாய்நெஞ்ச
மேஇங்கோர் தஞ்சமென்று
மனையா ளையும்மக்கள் தம்மையுந்
தேறியோர் ஆறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பன்நந்
தாதைநொந்த தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான் அண்ட
வாணன் அடித்தலமே

14. அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீமுரித்த வாறென் - முடித்தலத்தில்
ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ

15. நீநின்று தானவர் மாமதில்
மூன்றும் நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட
வாறென் திரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா
டரங்காப் பெயர்ந்து நட்டம்
போய்நின்று பூதந் தொழச் செய்யும்
மொய்கழற் புண்ணியனே

16. புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால் - திண்ணிய
கைம்மாவின் ஈருரிவை மூவுருவம் போர்த்துகந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

17. அன்பால் அடைவதெவ் வாறுகொல்
மேலதோ ராடரவம்
தன்பால் ஒருவரைச் சாரஒட்
டாதது வேயும் அன்றி
முன்பா யினதலை யோடுகள்
கோத்தவை ஆர்த்துவெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கோர்
ஏறுகந் தேறுவதே

18. ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான்
ஆறெலால் பாயும் அவிர்சடையார் - வேறோர்
படங்குலவு நாகம்உமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு

19. தமக்கென்றும் இன்பணி செய்திருப்
பேமுக்குத் தாம்ஒருநாள்
எமக்கொன்று சொன்னால் அருளுங்கொ
லாம்இணை யாதுமின்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறொப்ப
தொன்றுதொண் டைக்கனிவாய்
உமைக்கென்று தேடிப் பெறாதுட
னேகொண்ட உத்தமரே

20. உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரம் அடுக்கித் தீயாமுன் - உத்தமனாம்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து.

திருச்சிற்றம்பலம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் - I

திருச்சிற்றம்பலம்

1. கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலறுகாட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே

2. கள்ளிக் கவட்டிடைக் காலைநீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை
விள்ள எழுதி வெடுவெடென்ன
நக்கு வெருண்டு விலங்குபார்த்துத்
துள்ளிச் சுடலைச் சுடுபிணதீச்
சுட்டிட முற்றுஞ் சுளிந்து பூழ்தி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே

3. வாகை விரிந்துவெண் ணெற்றொலிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே
கூகையொ டாண்டலை பாடஆந்தை
கோடதன் மேற்குதித் தோடவீசி
ஈகை படர்தொடர் கள்ளிநீழல்
ஈமம் இடுசுடு காட்டகத்தே
ஆகங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே

4. குண்டிலோ மக்குழிச் சோற்றைவாங்கிக்
குறுநரி தின்ன அதனை முன்னே
கண்டிலோம் என்று கனன்று பேய்கள்
கையடித் தோடிடு காடரங்கா
மண்டலம் நின்றங் குளாளம் இட்டு
வாதித்து வீசி எடுத்தபாதம்
அண்டம் உறநிமிர்ந் தாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5. விழுது நிணத்தை விழுங்கியிட்டு
வெண்டலை மாலை விரவப்பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளியென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலைகொடுத்துப்
போயின தாயை வரவுகாணாது
அழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்
அப்பன் இடந்திரு வாலங்காடே

6. பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய்
பருந்தொடு கூகை பகண்டை ஆந்தை
குட்டி யிடமுட்டை கூகைப்பேய்கள்
குறுநரி சென்றணங் காடுகாட்டிற்
பிட்டடித் துப்புறங் காட்டில் இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே
அட்டமே பாயநின் றாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே

7. சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடிஆடித்
தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்
தான்தடி தின்றணங் காடுகாட்டிற்
கழல்ஒலி ஓசைச் சிலம்பொலிப்பக்
காலுயர் வட்டணை இட்டநட்டம்
அழல் உமிழ்ந் தோரி கதிக்க ஆடும்
அப்பன் இடந்திரு வாலங்காடே

8. நாடும் நகரும் திரிந்துசென்று
நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத் திட்டமாடே
முன்னிய பேய்க்கணம் சூழச்சூழக்
காடுங் கடலும் மலையும் மண்ணும்
விண்ணுஞ் சுழல அனல்கையேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

9. துத்தங்கைக் கிள்ளை விளரிதாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிச்சம் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கைமென்றோல்
தமருகங் குடமுழா மொந்தைவாசித்து
அத்தனை விரவினோ டாடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே

10. புந்தி கலங்கி மதிமயங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில்இட்டுச்
சந்தியில் வைத்துக் கடமைசெய்து
தக்கவர் இட்டசெந் தீவிளக்கா
முந்தி அமரர் முழவின்ஓசை
திசைகது வச்சிலம் பார்க்க ஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே

11. ஒப்பினை இல்லவன் பேய்கள்கூடி
ஒன்றினை ஒன்றடித் தொக்கலித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டைபாடப்
பாடிருந் தந்நரி யாழ் அமைப்ப
அப்பனை அணிதிரு வாலங்காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும்வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே.

திருச்சிற்றம்பலம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மூத்த திருப்பதிகம் - II

திருச்சிற்றம்பலம்

1. எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழகன் ஆடுமே

2. நிணந்தான் உருகி நிலந்தான் நனைப்ப நெடும்பற்
குழிகட்பேய்
துணங்கை எறிந்து சூழும்நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள் மாந்திக்களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே

3. புட்கள் பொதுத்த புலால்வெண் டலையைப்புறமே நரிகவ்வ
அட்கென் றழைப்ப ஆந்தை விச அருகே சிறுகூகை
உட்க விழிக்க ஊமன் வெருட்ட ஓரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே

4. செத்த பிணத்தைத் தெளியாதொருபேய் சென்று விரல்சுட்டிக்
கத்தி உறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பலபேய் இரிந்தோட
பித்தவேடங் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே

5. முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றிவெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோலொன் றுடுத்துப் புலித்தோல்
பியற்கிட்டுப்
பள்ளி இடமும் அதுவே ஆகப் பரமன் ஆடுமே

6. வாளை கிளர வளைவாள் எயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப்பனையின் இலைபோல் மயிர்க்கட் டழல்வாய்
அழல்கட்பேய்
கூளிக்கணங்கள் குழலோ டியம்பக் குழகன் ஆடுமே

7. நொந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்தங் குறங்குஞ் சிறுபேய் சிரமப்படு காட்டின்
முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

8. வேய்கள் ஓங்கி வெண்முத் துதிர வெடிகொள் சுடலையுள்
ஓயும் உருவில் உலறு கூந்தல் அலறு பகுவாய
பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி அணங்கும் பெருங்காட்டின்
மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே

9. கடுவன் உகளுங் கழைசூழ் பொதும்பிற்கழுகும் பேயுமாய்
இடுவெண் டலையும் புகையும் எழுந்த பெருங்காட்டிற்
கொடுவெண் மழுவும் பிறையுந் ததும்பக்
கொள்ளென்றிசைபாடப்
படுவெண் துடியும் பறையுங் கறங்கப் பரமன் ஆடுமே

10. குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டை படர்ந்த இருள்சூழ் மயானத்தெரிவாய்
எயிற்றுபேய்
கொண்டு குழவி தடவி வெருட்டிக் கொள்ளென் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள் தாழ விமலன் ஆடுமே

11. சூடு மதியம் சடைமேல் உடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய் தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே.

திருச்சிற்றம்பலம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சொல் சுருக்க விளக்கம்

அ. தி.	-	அற்புதத் திருவந்தாதி
காரை. அம். பு.	-	காரைக்கால் அம்மையார் புராணம்
சில.	-	சிலப்பதிகாரம்
ப.பா.	-	பட்டினப்பாலை
பெரு. பு	-	பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம்
ம.கா.	-	மதுரைக் காஞ்சி
தி.மு.தி. 1	-	திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 1
தி.மு.தி. 2	-	திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 2
திரு. ம.	-	திருமந்திரம்
திரு.இ.ம.மா.	-	திரு இரட்டை மணிமாலை
திரு. தி.	-	திருத்தொண்டர் திருவந்தாதி
திரு.பு.சா.	-	திருத்தொண்டர் புராண சாரம்
திருமு.	-	திருமுருகாற்றுப்படை
திரு. தி.நோ	-	திருவாசகம் திருத்தோள் நோக்கம்
திரு. தொ	-	திருத்தொண்டத் தொகை
தேவா.	-	தேவாரம்
தொல்.புறம்	-	தொல்காப்பியம் புறத்திணை இயல்
பா.எண்	-	பாடல் எண்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேக்கிழார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேக்கிழார்

பொருளடக்கம்

1. தெய்வச் சேக்கிழார் - 1
2. பெரியபுராணம் - 8
3. சமயப் பணிகள் - 17
4. சமூகப் பணிகள் - 67
5. அரிய தொடர்கள் - 107
6. நாயன்மார் பற்றிய குறிப்புகள் - 114

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேக்கிழார்

1. தெய்வச் சேக்கிழார்

அருண்மொழித் தேவர்

தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்பெறும் சமயம் சைவம். சைவத்தின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அடித்தளம் இரண்டு. ஒன்று கற்கோயில்கள்; மற்றொன்று சொற்கோயில்கள். இருபத்தேழு அருளாளர்களால் அருளிச்செய்யப்பெற்ற பன்னிரு திருமுறைகள், தமிழ்நாட்டுச் சைவர்களின் 'மூல நூல்களாக'ப் போற்றப் பெறு கின்றன. பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப் பெற்றிருக்கும் நூல் திருத்தொண்டர்புராணம் என்பது. இதனைப் பெரியபுராணம் என்றே அழைக்கின்றனர். இந்நூலை இயற்றியளித்தவர் சேக்கிழார். ''தெய்வம் மணக்கும் செய்யுள் எல்லாம்'' என்று இந்நூல் போற்றப்பட்டது. இது குறித்து இவரைச் சைவர்கள் தெய்வச் சேக்கிழார் எனப் போற்றுவர். இவரது 'இயற்பெயர்' அருண்மொழித் தேவர்.

சேக்கிழார் புராணம்

சேக்கிழாரின் வரலாற்றை அறிய உதவும் நூல் திருத்தொண்டர் புராண வரலாறு. இந்நூலைச் சேக்கிழார் புராணம் என்றும் கூறுவர். இந்நூலை இயற்றியவர் சைவ சாத்திர நூல் ஆசிரியர்களுள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார். இந்நூல் பாயிரம் உட்பட நூற்று மூன்று செய்யுள்களால் பாடப் பெற்றுள்ளது. சேக்கிழார் புராணம் அல்லாது, இவரது வரலாற்றைத் தொகுக்கச் சில கல்வெட்டுக்களும் சான்றுகளாகக் கிடைத்துள்ளன. வேறு சில

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நூல்களும் சிறு சிறு குறிப்புக்களை வழங்குகின்றன. இவற்றின் துணை கொண்டு சேக்கிழார் வரலாறு முதற்கண் விரித்துரைக்கப் படுகிறது.

ஊரும் பேரும்

பாலாறு பாய்ந்து வளம் சுரப்பது தொண்டைநாடு. தொண்டை நாடு, இருபத்து நான்கு கோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒன்று புலியூர்க் கோட்டம். இக்கோட்டத்தில் இடம் பெற்றிருந்த வளநாடுகளுள் ஒன்று குன்றை வளநாடு. இதன் தலைநகரம் குன்றத்தூர். ஒருகாலத்தில் சோழ மன்னன் ஒருவன், குன்றத்தூர்ப் பகுதியில், நாற்பத்து எண்ணாயிரம் வேளாளர் குடும்பங்களைக் குடியேற்றினான். தொண்டைநாட்டு வேளாளர் களுள் ஒரு குடியினர் 'சேக்கிழார்' மரபினர் எனச் சுட்டப்பட்டனர். இம்மரபில் அருண்மொழித் தேவரும், அவர் தம்பி பாலறாவாயரும் உதித்தனர். இளமையிலேயே, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய அருண்மொழித் தேவரை, அக்காலத்தில் சோழநாட்டை ஆண்ட மன்னன் தருவித்து,அவரைத் தலைமை அமைச்சராக்கிக் கொண்டான். அவருக்கு 'உத்தம சோழப் பல்லவன்' என்ற பட்டமும் வழங்கினான்.

சேக்கிழார், திருநாகேச்சரம் என்ற திருத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவன்பால் பெரிதும் பத்திமை பூண்டு வாழ்ந்துவந்தார். தாம் பிறந்த குன்றத்தூரிலும், சிவனுக்கு ஆலயம் ஒன்றை அமைத்து, சிவனை எழுந்தருள்வித்து 'நாகேச்சுவரர்' எனப் பெயர்சூட்டி மகிழ்ந்தார்.

சீவக சிந்தாமணி

சேக்கிழார் காலத்தில், திருத்தக்கதேவர் என்ற சமணர் ஒருவரால் இயற்றப்பெற்ற, சீவக சிந்தாமணி என்ற பெருங் காப்பியம், தமிழ்மக்களைப் பெரிதும் ஈர்த்திருந்தது. அக்காலத்தில் நாடாண்ட சோழவேந்தனும், இக்கதையில் ஈடுபாடு கொண்டு, புலவர் வாயிலாக, அந்நூலின் சுவை கேட்டு மகிழ்ந்திருந்தான். சைவத்தில் பற்றுறுதி கொண்டிருந்த சேக்கிழார், இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயக்கவல்ல, சிவகதைகள் பல இருக்க, அவகதை ஒன்றைக் கேட்டு மன்னன் காலம் கழிப்பதை அறிந்து பெரிதும் வருந்தினார். தக்க தருணத்தில், சோழனுக்குத் தம் கருத்தை எடுத்துரைத்தார். கேட்ட மன்னன், தாங்கள் கூறவந்த சிவ கதை யாது? அதனை எனக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிவ கதைகள்

சோழ மன்னனுக்குச் சேக்கிழார், நாயன்மார் அருள் வரலாறு வந்த முறைமை எடுத்துரைத்தார். தில்லைச் சிற்றம்பலவன், சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருத்தொண்டத் தொகை பாட அடி எடுத்துக் கொடுத்தமை: அவர், அதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு, சிவன் அடியார் வரலாறுகளைப் பதினொரு பாடல்களில் பாடியமை: திருநாரையூரில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள், திருத்தொண்டத்தொகையில் குறிக்கப்பெற்ற சிவன் அடியவர் வரலாறுகளை விரித்துக் கலித்துறை யாப்பில், திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூல் ஒன்றை இயற்றியமை: அந்நூல் பெருமைகளைத் திருமுறைகண்ட இராசராசன், சிவாலய தேவன் முதலியோர் கேட்டு மகிழ்ந்திருந்தமை முதலிய யாவற்றையும், சேக்கிழார் மன்னனுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

சோழன் வேண்டுகோள்

சோழமன்னன், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மற்றும் நம்பி யாண்டார் நம்பிகளால் விரித்துரைக்கப்பெற்ற நாயன்மார் வரலாறு களைத் தமக்கு எடுத்துரைக்குமாறு சேக்கிழாரை வேண்டினான். சேக்கிழாரும், தில்லைவாழ் அந்தணர் வரலாறு முதலாகத் திருநீலகண்டத்துப் பாணர் ஈறாக அமைந்த திருத்தொண்டத் தொகை வரிசைமுறைப்படி, அறுபது தனியடியார், ஒன்பது தொகையடியார் வரலாறுகளைத் தாம் உணர்ந்தவாறு சோழன் மனம் மகிழ விரித்துரைத்தார். மன்னன், மங்கைபாகராகிய சிவனாரின் திருவருளையும், நாயன்மார்கள் தொண்டு செய்து பேறுபெற்ற சிறப்பையும் கேட்டு நெஞ்சம் தழைத்தான். சேக்கிழாரை நோக்கி, நாயன்மார் அருள் வரலாறுகளை விரித்துரைக்கும், நூல் ஒன்றை இயற்றித் தருமாறு வேண்டிநின்றான்.

சிற்றம்பலவன் அருள்

மன்னன் இட்ட கட்டளைக்கு மனம் மகிழ்ந்த சேக்கிழார், அவன் வழங்கிய செல்வங்களுடன், தில்லையைச் சென்று சேர்ந்தார். சிற்றம்பலவன் திருமுன்பு சென்று உள்ளமுருக வழிபட்டார். சிவன் அடியார்களாகிய நாயன்மார்களின் வரலாறுகளை விரித்துரைத்துக் காப்பியம் ஒன்றை இயற்றத் தில்லைச் சிற்றம்பலவனை, முதல் அடி எடுத்துத்தருமாறு வேண்டிப் பணிந்தார். சிவனருளால் 'உலகெலாம்' என்ற பேரொலி சிற்றம்பலத்திலிருந்து புறப்பட்டுச் சேக்கிழார் உள்ளிட்ட அனைவர் செவிகளையும் நிறைத்தது. தில்லை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மூவாயிரவரும், திருமடங்களின் தலைவர்களும், மற்றுமுள்ளோரும் இப்பேரொலி கேட்டுத் தலைமீது கைகுவித்து, உள்ளம் உருகினர். தில்லைவாழ் அந்தணர்கள், தில்லைக் கூத்தனுக்கு அணிவித்த மாலை, திருநீறு, பரிவட்டம் முதலியனவற்றைச் சேக்கிழாருக்கு வழங்கிப் பெருமைசெய்தனர்.

திருத்தொண்டர் புராணம்

சேக்கிழார், நாயன்மார் வரலாறுகளை விரித்துரைப்பதற்கு முன்பாகத் திருநெறி கண்ட திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலிய மூவரையும் நெஞ்சில் வைத்து வணங்கிப்போற்றி, திருநீறு முதலிய சிவ சாதனங்கள் அணிந்தார். தில்லைத் திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபம் சார்ந்த சேக்கிழார், சிவன் அடி எடுத்துக் கொடுத்த 'உலகெலாம்' என்ற தொடரை முதன்மையாகக் கொண்டு,

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்று, தில்லை அம்பலவானைப் போற்றி, திருத்தொண்டர் புராணம் என்னும் அருளியல் காப்பியத்தை இயற்றினார்.

விண்ணில் எழுந்த ஒலி

சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் இயற்றி, நிறைவித்தமை, சோழ மன்னனுக்குத் தெரியவந்தது. சோழன், தன் பரிவாரங்களுடன் தில்லை சேர்ந்தான். சேக்கிழாரும், தில்லைவாழ் அந்தணர்களும், தவம் பெருக்கும் சீலர்களும், மன்னனை எதிர்கொண்டு வரவேற்றனர்.

அரங்கேற்ற ஏற்பாடுகள்

அரங்கேற்றத்திற்கு நாள் குறித்து சோழன் சிவன் அடியார்கள் அனைவருக்கும் திருமுகம் அனுப்பினான். திருமுறைகளில் வல்லவர்கள், சிவாகமச் செல்வர்கள், வேதவிற்பன்னர்கள், தமிழ் இலக்கிய - இலக்கணங்களில் வல்லவர்கள் எனப் பலரும் மன்னன் அழைப்பினை ஏற்றுத் தில்லை வந்து சேர்ந்தனர். தில்லை அம்பலவன் திருமுன்பு, திருத்தொண்டர்புராண அரங்கேற்றத்திற்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குரிய பணிகள் யாவும் குறைவற நிறைவேற்றப்பெற்றன. இருபத்தேழு விண்மீன்களுள் ஒன்றாகிய 'திருவாதிரை' சிவனுக்கு உகந்த ஒன்று. சீர்காழியில் திருஞானசம்பந்தர் அவதாரம் செய்ததும், உமையம்மை அருளிய ஞானப்பால் பருகி, அவர் சிவஞானசம்பந்தராகியதும் திருவாதிரை நாளில்தான். இச் சிறப்புடைமை கருதி ஒரு சித்திரை மாதத் திருவாதிரை நாளில் புராண அரங்கேற்றம் தொடங்கியது.

தொண்டர் சீர் பரவுவார்

சேக்கிழார், தாம் இயற்றிய திருத்தொண்டர்புராணத்தின் நுட்பங்களையெல்லாம், கற்றவர் அவையில், ஓராண்டுக் காலம் விரித்துரைசெய்தார். அடுத்துவந்த, சித்திரை மாதத் திருவாதிரை நாளில், புராண அரங்கேற்றம் நிறைவிற்கு வந்தது. சோழனும், ஏனையோரும், புராண விரிவுரை கேட்டு அகமகிழ்ந்தனர். தில்லை வாழ் அந்தணர்கள், தொண்டர் புராணத்தைச் 'சிவம்' எனக் கருதிப் போற்றிச் சிவமூலமந்திரத்தால் அருச்சனை செய்து வணங்கினர். சோழன், சேக்கிழாரையும், திருத்தொண்டர் புராணத்தையும், யானைமீது இருத்தித் தான் பின்னால் அமர்ந்து, தன் இரு கைகளாலும் வெண்சாமரம் வீசி, திருவீதி உலா வரச்செய்தான். தில்லையம்பலவன்முன் சார்ந்து, புராணத்தைச் சேக்கிழார் நடராசப்பெருமான் திருமுன்பு வைத்து வணங்கினார். சோழன் சேக்கிழாருக்குத் 'தொண்டர் சீர் பரவுவார்' என்று பட்ட மளித்துப் போற்றினான். தில்லையில் குழுமியிருந்தோர் எல்லாரும், சேக்கிழாரை உளம் உருகிப் போற்றி நின்றனர். 'அநபாயன்' என்ற பெயர் கொண்ட அச்சோழமன்னன், திருத்தொண்டர் புராணத்தைச் செப்பேட்டில் எழுதச்செய்வித்து, முன்னரே தொகுக்கப் பெற்றிருந்த, பதினொரு திருமுறைகளுடன் சேர்த்துச் சிறப்புச் செய்தான். அன்றுமுதல், சேக்கிழார் அருளிய இத் திருத்தொண்டர் புராணம், பன்னிரண்டாம் திருமுறை · எனப் போற்றப் பெறுவதாயிற்று.

பாலறாவாயர்

மூத்தவராகிய சேக்கிழாருக்குச் சிறப்புச் செய்த அநபாயன், அவர் இளவல் பாலறாவாயரைத் தருவித்து, அவருக்குத் 'தொண்டைமான் என்ற பட்டம் வழங்கி, அவரைத் தன் அரசவையில் அமைச்சராக்கி மகிழ்ந்தான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேக்கிழார், தில்லை நகரிலேயே சிலகாலம் தங்கியிருந்தார். தேவார மூவர்களையும், அவர்களால் போற்றப்பெற்ற அடியார் களையும் தாமும் போற்றி, சிவனடியார்களுடன் தலை நிலையி லிருந்து, தில்லையம்பலவன் தாள்மலர்களில் கலந்தார்.

இரண்டாம் குலோத்துங்கன்

பிற்காலச் சோழர்களில் ஒருவன், இரண்டாம் இராசராசன் என்பான். இவன் இரண்டாம் குலோத்துங்கனின் மகன். இவன் மகனே மூன்றாம் குலோத்துங்கன். இரண்டாம் இராசராசசோழன் ஆட்சியின் 17 ஆம் ஆண்டில் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று, திருமழபாடி ஆலயத்தில் உள்ளது. இதில், ஐயங்கொண்ட சோழ மண்டலத்துக் குன்றத்தூர் நாட்டுக் குன்றத்தூர்ச் சேக்கிழான் மாதேவடிகள், இராமதேவனான, உத்தம சோழப் பல்லவராயன் என்பான், திருமழபாடி ஆலயத்திற்குத் தொண்ணூறு பேராடுகளை நிபந்தமாக வழங்கிய செய்தி பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில், நிபந்தம் வழங்கியவராகக் குறிக்கப்படுபவர், சேக்கிழாரே என்பது ஆராய்ச்சியாளர் பலருக்கும் உடன்பாடாக உள்ளது. எனவே, மேற்குறித்த இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியின் பிற்பகுதி தொடங்கி, இரண்டாம் இர்ாசராச்ன், மற்றும் அவன் மகன் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியின் முற்பகுதி வரை சேக்கிழார் வாழ்ந்தவர் என்பது புலனாகிறது. சேக்கிழாரைத் திருத்தொண்டர் புராணம் பாட வேண்டிய, 'அநபாயன்' இரண்டாம் குலோத்துங்கன் என்றும், சேக்கிழார் காலம், கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து சுட்டியுள்ளனர்.

பாராட்டுரைகள்

திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரை, உமாபதி சிவம், தாம் பாடிய திருத்தொண்டர்புராண வரலாற்றில்,

" தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார்பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி "

என்று போற்றி வணங்குகின்றார். மாதவச் சிவஞானமுனிவர் என்ற பெருங்கவிஞர், சேக்கிழாரை,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கியப் பயனாப் பதிகுன்றை வாழ்
சேக்கிழா னடி சென்னி இருத்துவாம் "

என்று வணங்கித் துதிக்கிறார். 'கவிராட்சசர்' என்று போற்றப் பெறும் கச்சியப்ப முனிவர்,

" ....மற்றனெனத்
தகையா அன்பின் விரித்துலகோர் தம்மை அடிமைத் திறப்பாட்டின்
வகையா நின்ற சேக்கிழான் ஒளிர்பொற் கமலத் தாள்பணிவாம் "

என்று தாமும் வணங்கி, ஏனையோரையும் வணங்குமாறு அழைக்கிறார். நாயன்மார் வரலாறு விரித்துரைத்த சேக்கிழாரை, யாழ்ப்பாணத்து நல்லூர் தவத்திரு. ஆறுமுக நாவலர் 'சேக்கிழார் நாயனார்' என்று அழைத்து மகிழ்ந்தார். தமிழ்நாட்டுச் சைவர்கள் திருவள்ளுவரை அடுத்துச் சேக்கிழாரைத் ''தெய்வச்சேக்கிழார்'' என்று அழைத்து மகிழ்கின்றனர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

2. பெரியபுராணம்

மாக் கதை

சேக்கிழாரின் பெரியபுராணம், தமிழில் எழுந்த பெருங் காப்பியங்களுள் ஒன்று.'உள்ளோன் தலைவனாக உள்ளது புணர்த்தல்' என்ற வகையில் எழுந்த வரலாற்றுப் பெருநூல் இது. இந்நூல், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய பதினொரு பாடல்களால் இயன்ற, திருத்தொண்டத்தொகை என்ற நூலைப் பதிகமாகக் கொண்டும், நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத் தொண்டர் திருவந்தாதியை வகை நூலாகக் கொண்டும், சேக்கிழாரால் விரிநூலாகப் பாடப்பெற்றுள்ளது. சேக்கிழார் இந்நூலுள் எடுக்கும் மாக் கதை என்ற தொடரை ஆண்டுள்ளார். மாக் கதை என்பதே 'பெரிய கதை' எனப் பொருள்பட்டு, பிற்காலத்தே 'பெரிய புராணம்' என வழங்கலாயிற்று என்றும் கூறுவர். செயற்கரிய செயல் செய்வாரைப் 'பெரியர்' என்று திருவள்ளுவர் குறிப்பர். நாயன்மார் பலரும், செயற்கரிய செயல் செய்த பெரியராதலான், இந்நூல் 'பெரியர் புராணம்' எனப் போற்றப்பெற்றுப் பின்னர்ப் 'பெரிய புராணம்'' எனத் திரிந்தது என்பாரும் உளர்.

பின்புலங்கள்

சேக்கிழாரின் பெரியபுராணம் தோன்றுவதற்குப் பின்புலமாக அமைந்த, அக்காலச் சமூகம், மற்றும் சமயச்சூழல்களை ஆராய்ந்து தெளிவது, பெரிதும் நலம்பயக்கும். திருத்தொண்டர் புராண வரலாற்றில், அக்காலச் சோழமன்னனும், மக்களும், சீவகசிந்தா மணியின் மேல், பெரு விருப்பம் கொண்டிருந்தமையை மாற்றவே, சேக்கிழார் பெரியபுராணம் பாட நேர்ந்தது என்ற குறிப்புக் காணப் படுவது முன்னரே சுட்டப்பெற்றது. வளமும், அமைதியும் நிறைந்த நாடுகளுள், மக்கள், கேளிக்கை நாட்டம் கொண்டு வாழ்வர் என்பது

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பொதுவான ஒரு மதிப்பீடு. பழையாறையில் ஒடுங்கிக் கிடந்த சோழர்கள், விஜயாலயன் நிகழ்த்திய திருப்புறம்பயப் பெரும்போருக்குப் பின், மீண்டும் தலை எடுத்தனர். நானூறு ஆண்டுக்காலம் பிற்காலச் சோழர் ஆட்சி நிலை கொண்டது. காவிரி தந்த வளனும், சோழர் தந்த பாதுகாவலும் காரணங்களாக, மொழி, சமயம், கலைகள் யாவும் வளர்ந்தன. கவலைகள் இல்லாத சோழநாட்டுச் சமுதாய வாழ்வில், மக்கள் கேளிக்கை நாட்டம் கொண்டு, சமணநூல் என்றும் பாராது, சீவகசிந்தாமணியின் சிருங்காரச் சுவையில் திளைத்திருக்கலாம் என்பது ஏற்கத்தக்கதே ஆகும்.

ஆடவர் ஒழுக்கம்

சமண சமயநூல் என்பதற்காகமட்டு மல்லாமல், சிவாலயங்கள் பல எழுந்தும், திருமுறைகள் பல தோன்றியும், தம் நாட்டு மக்கள், சீவக சிந்தாமணியின் சிருங்கார ரசத்தில் திளைத்து, பக்தி நெறி மறந்தமையின், அவர்களைச் சைவநெறியில் திருப்ப வேண்டும் என்ற எண்ணமும், சேக்கிழாருக்கு இருந்திருத்தல் கூடும். சிலப்பதிகாரம், பெரியபுராணம் முதலிய ஒன்று இரண்டு நூல்களைத் தவிர, தமிழில் எழுந்த பெருங்காப்பியங்கள் பலவும், கதைக் கருவைத் தமிழ் மண்ணில் தேர்ந்துகொள்ளாமல், நடையிட்டதற்குக் காரணம், நன்கு ஆராயப்படவேண்டும். சமூக ஒழுங்கை விரும்பிய தமிழ்ப் பெருங்கவிஞர்களுக்கு, நெறி திறம்பிய, ஆடவர் வாழ்வைக் கதைக் கருவாகத் தேர்ந்துகொள்ள விருப்பம் இல்லாது இருக்கலாம்.

மனிதகுல ஒருமை

சோழ நாட்டில், காவல்மிக்க நல்லாட்சியும், வளமும் இணைந் திருந்தும், தொழில்வழி வந்த சாதியம், சமூக நல்லிணக்கத்திற்குத் தடையாக நின்றது. உறவு, சாதி, மொழி என்பவனவற்றிற்கெல்லாம் மேலாக மனித குலத்தைப் பேதமில்லாது, ஒரு வட்டத்துக்குள் கொண்டுவருவதற்குச் சமயம் பெரிதும் துணை செய்யவல்லது என்ற சேக்கிழாரின் நல்லெண்ணம்கூடப் பெரிய புராணத் தோற்றத்திற்கு, ஒரு காரணமாக இருந்திருக்கலாம். தேவார ஆசிரியர்கள் வாழ்விலும், சாதியக் கட்டுக்களைத் தகர்க்கும் பல கூறுகள் அமைந்துகிடந்தமை, சேக்கிழாரைச் சிந்திக்க வைத்திருக்கலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின், திருத்தொண்டத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தொகைப் பதிவுகள், இடம் பெற்றிருந்த நாயன்மார் குல மரபுகள், சிவன் சந்நிதியில் மனித குலத்தை ஒருங்கிணைக்க இக்கதை உதவும் என்ற நம்பிக்கையைச் சேக்கிழாருக்குத் தந்திருக்கலாம். சேக்கிழார், இத்தடத்தில் பதித்த அழிக்க ஒண்ணாத முத்திரைகள் பல. அவை பின்னர் விரிவாக இந்நூலுள் விளக்கப்படவுள்ளன.

வரலாற்று ஆய்வு

மூன்றாவதாகப் பெரியபுராணம் குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் தோற்றம் கொண்டதற்கு உரிய வேறு ஒரு காரணமும் உண்டு. தமிழில் சங்க இலக்கியங்கள் பலவும், மனிதனை மையப்படுத்தி, மானுடத்தைக் கருவாகக் கொண்டே எழுந்தன. இறையவர்கள், சங்க நூல்களில், பாட்டுடைத் தலைவர்களின் அருளையும் ஆற்றலையும் விளக்க, உவமையாகவே முன்னிறுத்தப்பட்டனர். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சமய எழுச்சிக்காலம் பிறந்தது. அதுமுதல், சேக்கிழார் வாழ்ந்த கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை, ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள், தமிழ்க் கவிதைகளிலிருந்து, மானுடம் அகற்றப்பட்டு, இறையவர்கள் முன்னிறுத்தப்பட்டனர்.

காதலால் விளைந்த கதை

தென்தமிழ்நாடு செய்த தவப்பயனால், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அவதரித்தனர். சமணத்தை வீழ்த்தி, சைவத்திற்குப் புதுவாழ்வு தந்தனர். தமிழ் மொழி தளிர்த்தது. தமிழ்க் கலைகளாகிய இசையும் கூத்தும் மீண்டும் தலை எடுத்தன. சைவசமயம் முடிசூடிக் கொண்டது. இத்தனை இருந்தும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திரு அவதாரத்திற்கான காதலைச் சொல்லவந்த சேக்கிழார். மாதவம் செய்த தென் திசை வாழவும், தீதில்லாத அடியவர் வரலாறு கூறும் திருத்தொண்டத் தொகை, தமிழ் மண்ணில் பிறக்கவுமே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காதல் அரும்பிற்று என்று அழகிய பதிவு ஒன்றைத் திருமலைச் சருக்கத்தில் பதிவு செய்கிறார். மேற்குறித்த தொடர்கள், சைவ சமய வரலாற்றில் நன்கு உற்று நோக்கி ஆராயப்பட வேண்டுவன.

சிவனார் திருவுள்ளம்

ஆண்டவன் அருளும் புகழும் பாடுவதிலும் மேலாக, அவன் பெயரால் சிற்றுயிர்களுக்கும் மனித குலத்திற்கும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அருந்தொண்டாற்றிய மாமனிதர்கள் போற்றப்பெற வேண்டும் என்பதே சேக்கிழாரின் பெருவிருப்பம் என்பது உறுதியாகிறது. சமூக நலம் கலவாத சமய வாழ்வைச் சேக்கிழார் பெரிதாகப் போற்றவில்லை. சிவனார் திருவுள்ளம்கூடத் தம்மைப் பாடுவதிலும், தம் அடியார்களைப் பாடுவதிலேயே மகிழ்ந்தது என்பதைப் பெரிய புராணத் தோற்ற வரலாறு காட்டுகின்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முதன் முறை 'பித்தா' என்றும், இரண்டாம் முறை அடியவர் புகழ் தொகுக்கத் 'தில்லை வாழ் அந்தணர்' என்றும் அடி எடுத்துக் கொடுத்ததோடு, சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என அசரீரி பிறப்பித்ததும் கூர்ந்து நோக்கத்தக்கன.

மானுடத்திற்கு முதன்மை

எனவே, அளவற்ற பத்திமையில் தலைநின்று, சடங்குச் சமயம் நிலைகொண்டு எழுவதைச் சேக்கிழார் உணர்ந்திருக்க வேண்டும். மனிதர்களும் மனிதமுயற்சிகளும் அவர்தம் பேராற்றல் களும், உலகவர்முன் நிறுத்தப்பட வேண்டும். ஆண்டவன் நிகழ்த்திய அற்புதங்கள் கேட்டு அதிசயித்து, அந்நியப்பட்டு நிற்பவர்களைத் தன் ஒத்த மனிதன் ஒருவன் நிகழ்த்திய அற்புதங் களைச் சுட்டுவதன் மூலம், அவர்களோடு இணைந்து, நடையிட வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக மாற்றச் சேக்கிழார் உளம் கொண்டிருத்தல் வேண்டும்.

மூன்று காரணங்கள்

மேற்குறித்தவற்றை உற்று நோக்கினால், சேக்கிழாரின் பெரிய புராணம் தோற்றம் கொண்டதற்கான சமூக-சமயத் தாக்கங்களை இனங்காண முடியும். நெறி திறம்பிய ஆடவர் வாழ்வை நேர்படுத்தி, ஒழுக்கம் மிக்க சமயவாழ்விற்கு அவர்களை மடைமாற்றுவது ஒன்று. இரண்டாவது, மனித குலத்தைச் சாதியக் கட்டுக்களிலிருந்து விடுவித்து, ஓர் இறைவன் பெயரால் ஒருங்கிணைப்பது. மூன்றாவது, கவிதைகளில்மட்டு மல்லாது, சமூகத்திலும் இறைவனுக்கு இணையாக, சற்று மேலாக, மனிதத்தை முன்னிறுத்தி, மக்களைத் தொண்டு நெறிக்கு அழைத்துச் செல்வது. இவை காரணங்களாகவே இறைவனும் மனிதர்களும் இணைந்து நடையிடும் தம் காப்பியத்திற்கு, இறைவன் பெயரை முன்னிறுத்தாது, திருத்தொண்டர் புராணம் என மானுடத்தை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

முன்னிறுத்திச் சேக்கிழார் பெயர் சூட்டியிருக்க வேண்டும் என்பதை உணர முடிகிறது.

திருத்தொண்டத் தொகை

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணக் காப்பியக் கட்டமைப்பை ஒரு சிறிது காணலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத் தொகை, நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதி என்பன திருத்தொண்டர் புராணம் பாட உந்துதலாக அமைந்தமை முன்னரே குறிக்கப்பட்டது. திருத்தொண்டத்தொகை பதினொரு பாடல்களால் இயன்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவர் வாழ்ந்த கி.பி. எட்டாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னாகவும் வாழ்ந்திருந்த சிவத் தொண்டர்களின் செய்திகளை அரிதின் முயன்று திரட்டித் தம் திருத்தொண்டத் தொகையில் பதிவு செய்துள்ளார். ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளில் வாழ்ந்திருந்த சிவநெறிச் செல்வர்களை, ஒருசேரப் பதிவு செய்ததன் வழி, தமிழக வரலாற்றில், வரலாற்றுக் கண்ணோட்டத்திற்கு முதல் முயற்சி மேற்கொண்ட பெருமை, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அமைகிறது. தனித்தொண்டு ஆற்றியவர்களைமட்டும் திரட்டாது, ஒன்பது குழுவினரையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிவு செய்துள்ளார். முன்னவர்கள் 'தனி அடியார்கள்' என்றும். பின்னவர்கள் 'தொகை அடியார்கள்' என்றும் குறிக்கப்பெற்றனர்.

பாராட்டுரைகள்

சைவ இலக்கிய வரலாற்றில், பெரும் திருப்பத்தை விளைவித்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், அவர் வடித்தளித்த திருத்தொண்டத் தொகையையும், அருமை உணர்ந்த பின்வந்தோர் பெரிதெடுத்துப் போற்றியுள்ளனர். சேக்கிழார், தம் நூலின் மும்மையால் உலகாண்ட சருக்கத்தின் நிறைவில்,

" நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல் வணங்க வந்தபிறப்பை வணங்குவாம் "

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளை நெஞ்சார வணங்கி மகிழ்கிறார். இவ்வாறே, தம் நூலுள் சேக்கிழார், இம்முதல், தமிழ் வரலாற்றுப் பதிவை நெஞ்சாரப் போற்றி,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத்தொகை "

என்றும்,

" தீதிலாத் திருத் தொண்டத் தொகை "

என்றும்,

" புற்றிடத்து எம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த் திருத் தொண்டத் தொகை "

என்றும்,

" மூலமான திருத்தொண்டத் தொகை "

என்றும் பலவகையில் ஏற்றுப் போற்றுவதைக் காணமுடிகிறது.

திருத்தொண்டர் திருவந்தாதி

ஒன்றிரண்டு நாயன்மார்களைத் தவிர, ஏனை நாயன்மார் வரலாறுகள் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் மிகச் சுருக்கமாகவே திருத்தொண்டத் தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு, சரியான வரலாற்றை அறிதல் மிகவும் கடினம். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சின்னஞ்சிறு பதிவுகளுக்குத் தம் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலால் ஒளியூட்டியவர் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்திருந்த, நம்பியாண்டார் நம்பிகள். தம் நூலுள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சேரமான்பெருமாள், கோச்செங்கட் சோழர் என்பவர்களுக்குமட்டும் தலா இரண்டிரண்டு பாடல்களால் வரலாறு வகுக்கிறார். எஞ்சியோர் வரலாறுகள் ஒவ்வோர் பாடலால் விரிக்கப்பட்டுள்ளன. சுந்தரர் வரலாறு மட்டும், பதினொரு பாடல்களால் இடையிடையே விரிக்கப்பட்டு உள்ளது. வேறு சில செய்திகளையும் பேசி, இந்நூல் எண்பத் தொன்பது கட்டளைக் கலித்துறைகளால் நிறைவு பெறுகிறது.

புகழுரைகள்

வரலாற்றுத் தேடலில் கள ஆய்வு மேற்கொண்டு, திருத் தொண்டத் தொகைக்கு ஒளியூட்டிய நம்பியாண்டார் நம்பிகளைத் திருத்தொண்டர் திருவந்தாதியின் இறுதியில் காணப்படும் தனிப்பாடல் ஒன்று, திறம் தெரிந்து போற்றுகின்றது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" பொன்னி வடகரை சேர்நாரையூரில் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதி, தேம், மரபு, செயல்
பன்ன அத்தொண்டத் தொகை வகை பல்கும் அந்தாதி தன்னைச்
சொன்ன மறைக்குல நம்பி பொற்பாதம் துணை துணையே, "

சேக்கிழார்

" அந்த மெய்ப் பதிகத்து அடியார்களை
நந்தம் நாதனாம் நம்பியாண்டார் நம்பி
புந்தியாரப் புகன்ற வகையினால்
வந்தவாறு வழாமல் இயம்புவாம் "

என்று மனவணக்கம் செய்து, நூல் விரிக்கிறார். என்றாலும், முற்றிலுமாக நம்பியாண்டார் விரிக்கும் வரலாறுகளை ஏற்றுப் போற்றாது, சில வரலாறுகளில், அவரோடு முரண்படவும் செய்கிறார். என்றாலும், நம்பியாண்டார் நம்பிகள் முயற்சி உன்னதமானது என்பதில் ஐயமில்லை.

காப்பிய உருவாக்கம்

சேக்கிழாரின் பெரியபுராணம் மேற்குறித்த இரண்டு நூல்களின் விரிநூலாக - ஒரு பெருங்காப்பியமாக மலர்ந்தது. அக்காலத்தில், கதை நிகழ்த்துவதற்கு உரிய யாப்பாக விருத்தப்பாக்கள் கண்டு தெளியப்பட்டிருந்தன. சேக்கிழாருக்கும் பெரிதும் இவ் யாப்புப் பயன்பட்டது. தம் பெருங்காப்பியத்தை இரண்டு பெருங் காண்டங்களாகப் பகுத்துக்கொண்டார். திருத்தொண்டத் தொகை யின் பதினொரு பாடல்களின் தொடக்கங்களை உள்வைத்துச் சருக்கங்களுக்குப் பெயராகச் சூட்டினார். தனியே, முதற்கண் கதை நடத்த ஏதுவாகத் திருமலைச் சருக்கம் ஒன்றையும் - பதின்மூன்றாவதாகக் கதை முடிக்க, வெள்ளானைச் சருக்கம் ஒன்றையும் இணைத்துக் கொண்டு, சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தை நிறைவித்தார். நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு பாடல்களால் நூல் நிறைவு பெற்றது. விருத்தப்பாக்களோடு, தரவு கொச்சகக் கலிப்பா, கலிநிலைத்துறை, கலி விருத்தம், வஞ்சி விருத்தம் முதலிய யாப்புக்களும் சேக்கிழாரால் ஏற்றுப் போற்றப்பெற்றன.

பாதுகாவல் உணர்வு

திருத்தொண்டத் தொகை குறித்த, தனியடியார் அறுபதின்ம ரோடு, அன்னார் வரலாற்றைப் பதிவு செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், அவர்தம் பெற்றோர் இருவரையும் இணைத்து,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தனியடியார் தொகையை, அறுபத்து மூன்றாகச் சேக்கிழார் உயர்த்திக் கொண்டார். சுந்தரமூர்த்திகளின் வரையறையைத் தமக்குப் பாதுகாவலாகக் கொண்ட சேக்கிழார், தம் காலத்துக்கு முற்பட்டவராக வாழ்ந்திருந்த மாணிக்கவாசகர் முதலியோர் வரலாற்றைப் பாடாது விடுத்தார்.

காப்பியக் கட்டமைப்பு

தமிழ்ப் பெருங்காப்பியம் ஒன்றை முன்னிறுத்தித் தமிழில் எவரும் காப்பிய இலக்கணம் படைத்திருக்கவில்லை. வடமொழியிலிருந்து, தண்டி முதலியோர் படைத்த காப்பிய இலக்கணம், தமிழிலும் நிலவியிருந்தது. தன்னேரிலாத தலைவன் ஒருவன், பெருங்காப்பியத்திற்கு வேண்டும். பல அங்கங்கள் பாடப் பெற வேண்டும். 'அறுபத்து மூன்று சிறுகதைகளின் தொகுப்புப் போல் தோன்றாமல், பெரிய புராணத்தை ஒரு காப்பியக் கட்டமைப்புக்குள் கொண்டுவந்த சேக்கிழாரின் புலமைத் திறம் வியப்பைத் தருகிறது. திருத்தொண்டத் தொகை வழங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காப்பியத் தலைவராக முன்னிறுத்தி, அவர் வரலாறு புனையும் நோக்கில், அவரால் போற்றி வணங்கப் பெற்ற அடியவர் வரலாறுகளைச் சுவை குன்றாது நிரலே புனைந்து, நடுவிலும், நிறைவிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறே நாட்டிக் காப்பியம் நிறைவித்திருப்பது தமிழ்க் காப்பிய உலகிற்கு முதலாகவும் அதுவே இறுதியாகவும் நிற்கிறது. சேக்கிழாரின் பெரிய புராணம், கடந்த எண்ணூறு ஆண்டுகளில் தமிழ்மொழி, தமிழ்க்கலைகள், தமிழர் சமயமாம் சைவம், தமிழ்ச் சமுதாயம் முதலியவற்றின்மேல் பதித்த அடிச்சுவடுகளும் விளைத்த மாற்றங்களும் அடுத்து வரும் பகுதிகளில் விரிவாக விளக்கப்படவுள்ளன.

பதிப்புக்கள்

பெரிய புராண வருகையைத் தொடர்ந்து நாயன்மார் சிறப்பு உரைகளும் கவிதை நூல்களும், உரைநடை நூல்களும், ஆராய்ச்சி நூல்களும் தமிழில் பலவாகத் தோன்றின. சேக்கிழாரின் பெரிய புராணத்திற்குச் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம், திருப்பனந்தாள் காசி மடம், சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம் முதலியன நல்ல மூலநூல் பதிப்புக்களை வெளிக் கொண்டுவந்தன. நாவலர் பதிப்பையே புதிய பதிப்பாகக் கோலாலம்பூர்ச்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சைவ சிந்தாந்த நிலையம் அழகுற வெளியிட்டுள்ளது. சிவக் கவிமணி திரு.சி.கே.சுப்பிரமணிய முதலியார் மிக விரிவான முறையில் உரை கண்டு பல தொகுதிகளாக வெளிட்டார். அமரர் திரு.அ.ச. ஞானசம்பந்தன் பெரிய புராணத்தைப் புதிய கோணத்தில் ஆராய்ந்து பல நூல்களை வெளியிட்டார். ஈழப்பகுதியில் பெரிய புராணம் பெரிதும் நிலைகொள்ளத் தவத்திரு. ஆறுமுக நாவலர் எழுதிய பெரிய புராண சூசனம் துணை நின்றது. அவற்றின் திறம் விரிக்கின் பெருகும்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

3. சமயப் பணிகள்

காப்பியப் பணி

கவிஞர்கள், பெரிதும் சமூக நோக்குப் படைத்தவர்கள். தம் படைப்பின்வழி, சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும் என்ற பெருநோக்கு தமிழ்க் கவிஞர்கள்பால் நிறைந்து நின்றது. காப்பியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற் பொருளையும் கற்பாரை அடையச் செய்ய வேண்டும் எனப் பிற்காலத்தார் இலக்கணமும் வகுத்தனர். காப்பியம் உணர்த்தும் தலையாய ஒன்றைப் 'பாவிகம்' என்று வடநூலார் குறித்தனர். தமிழில் கவிஞர் சிலர், சில குறிக்கோள்களை முன்னிறுத்திக் கொண்டு, அவற்றை வற்புறுத்தும் நோக்கிலேயே, தம் நூலை ஆக்கினர். சிலப்பதிகாரம் அதற்கு ஒரு சான்றாக உள்ளது. பெரும்பாலான தமிழ்க் கவிஞர்கள், கதை நடத்தும் போக்கில், தம் சமூகத்திற்கு நல்லறிவு கொளுத்தும் பணியை விருப்போடு செய்துள்ளமையை அறிய முடிகிறது. இவ்வகையில், சேக்கிழார் தம் பெரியபுராணக் காப்பியத்தின் வாயிலாக நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ்ச் சமுதாயத்தை நெறிப்படுத்தும் அரிய முயற்சியை மேற்கொண்டார். அவர் காப்பியப் பணியில் சைவ சமயமும் தமிழர் சமுதாயமும் தமிழ் மொழியும் தமிழ்க் கலைகளும் பெரும் வளர்ச்சி பெற்றன.

வரலாற்றுக் காப்பியம்

சேக்கிழார் அருளிய பெரிய புராணம், அடிப்படையில், ஒரு சமயப் பெருங்காப்பியம். தம் தாய்ச் சமயமாகிய சைவ சமயத்தை உயர்நிலைக்கு எடுத்துச்செல்வதில், அவர் பெரு நாட்டம் கொண்டிருந்தமையை அறிய முடிகிறது. இறைமைக் கோட்பாட்டை ஏற்றுப் போற்றும் சமயங்கள் பலவும், நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே, தத்தம் சமய உண்மைகளை நிலை நாட்ட முயன்றன. சில நடைமுறைச் சம்பவங்களின்மேல், அவை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பெரிதாகக் கற்பனைகளை உலவவிட்டன. இதனால், அவற்றின் நம்பகத்தன்மை ஐயத்திற்கு உரியனவாயின. தமிழிலும், பல சமயச் சார்பு இலக்கியங்களுக்கு மேற்குறித்த நம்பகத்தன்மை இல்லாமலேயே போயிற்று. சேக்கிழாரின் பெரிய புராணம் இறைமைக் கோட்பாட்டை ஏற்றுப் போற்றியபோதும், அதன் வரலாற்றுப் பின்புலத்தால், நம்பகத்தன்மை மிக்கதாக உயர்ந்தது. தமிழில் சிறப்பித்துக் கூறப்படும் முப்பெரும் சைவச் சார்புப் புராணங்களில் பெரிய புராணத்திற்குமட்டுமே வரலாற்று உண்மை பேசும் காப்பியம் என்ற அங்கீகாரம் கிடைத்தது. நாயன்மார்கள் வாழ்ந்த காலம் தொடங்கி, தம் காலம் வரையிலான, ஏறத்தாழ ஓர் ஆயிரம் ஆண்டுக்காலத் தமிழ்நாட்டுச் சைவ - சமய வரலாற்றைச் சேக்கிழாரின் பெரிய புராணம் பதிவு செய்து நிற்கிறது. நம்பகமான, ஒரு வரலாற்றுப் பதிவைப் பெரியபுராணத்திற்கு இணையாகப் பதிவு செய்த தமிழ் நூல் வேறு ஒன்றும் இல்லை.

வாய்ப்புகள்

சோழப் பேரரசர்களின் அவையில், முதலமைச்சராகப் பணியாற்றிய வாய்ப்பு, சேக்கிழாருக்கு நாயன்மார் வரலாறுகளைத் தொகுப்பதில் பெரிதும் உதவியாக அமைந்திருக்க வேண்டும். அறுபத்து மூன்று நாயன்மார்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, சைவப்பணியாற்றிய இடங்கள் பலவற்றையும், சேக்கிழார், நேரில் சென்று காணும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார். நாயன்மார்கள் வாழ்ந்த நாட்டுப் பிரிவு, நகர் அமைப்பு, குலமரபு, குடிமரபு முதலியனவற்றைப் பதிவு செய்வதில் அவர் நிகழ்த்திய கள ஆய்வு முயற்சிகளைப் பெரியபுராணப் பதிவுகள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. சேக்கிழாரின் வரலாற்றுப் பார்வையின் சிறப்பினை, நாம் அறிந்து மகிழப் பெரிய புராணத்துள், அளவற்ற பதிவுகள் நிறைந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைக் காணலாம்.

வரலாற்றுப் பதிவுகள்

மெய்ப்பொருள் நாயனார், அறுபத்து மூவருள் ஒருவர். அவர் அருள் வரலாறு தொடங்கும் முதற்பாடலிலேயே சேக்கிழார்,

> " சேதி நன்னாட்டு நீடு திருக்கோவலூரின் மன்னி
> மாதொரு பாகர் அன்பின் வழிவரு மலாடர் கோமான் "

என நாயனாரின் நாடு, நகர், மரபுகளைப் பதிவு செய்து காட்டுகிறார். அவர் நாடு சேதி நாடு என்றும், அதன் தலைநகர் திருக்கோவலூர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்றும், அவர் மலைநாட்டு அரசர் மரபாகிய 'மலாடர்' மரபில் வந்தவர் என்றும், மேற்குறித்த பதிவு வரலாற்றை அறியத் துணையாகிறது. அமர்நீதி நாயனார் வரலாற்றுத் தொடக்கத்தில்,

" சீரில்நீடிய செம்பியர் பொன்னி நன்னாட்டுக்
காரின் மேவிய களிஅளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமை சேர்பதி பழையாறை "

என்ற பாடல் இடம் பெற்றுள்ளது. அமர்நீதி நாயனார் பிறந்த பழையாறை, பொன்னி நன்னாடு என்று பெயர் பெற்ற காவிரி வளங்கொழிக்கும் சோழநாடு என்பதும், பழையாறை மலர்ப் பொழில்களால் சூழப்பட்டிருந்தது என்பதும், தேர் ஓடும் அகன்ற வீதிகள் கொண்டது என்பதும், வரலாற்றுப் பெருமை மிக்கது என்பதும் இப்பாடல்வழி அறியவருகின்றன.

அகச்சான்று காட்டல்

குங்குலியக் கலய நாயனார், பிறந்த ஊர் திருக்கடவூர். சமய வரலாற்றில், தம் அன்பராகிய மார்க்கண்டேயர்மேல் வந்த எமனைச் சிவன், காலால் உதைத்துக் காத்தருளிய தலம், திருக்கடவூர் என்று குறிக்கப்படும். ஆட்சியாளர் சிறப்பு உரைப்பது போல், சேக்கிழார், சில ஊர்களுக்குச் சமய வரலாற்றுச் சிறப்புக்களையும் உரைத்துச் செல்வார்.

" தோய்ந்த நீள் சடையார் பண்டு தொண்டர் மேல் வந்த கூற்றைக்
காய்ந்த சேவடியார் நீடி இருப்பது கடவூராகும் "

என்ற பாடல் வரிகளில், மேற்குறித்த சமய வரலாற்று உண்மை சேக்கிழாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனைப் போலவே, திருஞானசம்பந்தர், திருக்காளத்தி ஆலயத்துள் புகுந்து, சிவனை வணங்கி எழுந்து, தம் இரு கைகளையும் தலைமேல் கூப்பி நின்றதும், அவர் கண்களில், அன்பே வடிவாக வாழ்ந்திருந்த கண்ணப்ப நாயனார் திருமேனி பதிந்தது என்று சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்தில் ஒரு பதிவை அமைக்கிறார்.

" சூழ்ந்து வலம்கொண்டு இறைவர் திருமுன்பு எய்தித்
தொழுது தலைமேற்கொண்ட செங்கை போற்றி
வீழ்ந்து எழுவார் கும்பிட்ட பயன் காண்பார் போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார் "

என்ற வரிகளில் திருக்காளத்தி, கண்ணப்ப நாயனார் வாழ்ந்திருந்த ஊர் என்பதும், ஞானசம்பந்தர் காலத்திலேயே காளத்திநாதன்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சந்நிதியில் கண்ணப்ப நாயனார் திருமேனி அமைந்திருந்தது என்பதையும், சிவனை வணங்கி எழுந்த சம்பந்தர், கண்ணப்பர் திருமேனி கண்டு, மீண்டும் வீழ்ந்து, அவரை வணங்கினார் என்பதும் தெரியவருகின்றன.

குலமரபு காட்டல்

நாடு நகரப் பதிவுகள், ''சிவத்தல வரலாற்றுப் பின்னணிகள் பேசுவது போன்றே, சேக்கிழார், பல நாயன்மார் வரலாறுகளில், அன்னார் குலம், குடி மரபுகளையும் பதிவு செய்துள்ளார். திருத்தொண்டத் தொகையும் திருத்தொண்டர் திருவந்தாதியும் வழங்கிய சிறு குறிப்புக்களின்மேல் சேக்கிழார் அரிதின் முயன்று, தேடி, நாயன்மார் குலமரபுகளை ஒளியூட்டுகின்றார். சாதி, குல பேதம் பாராட்டும் நோக்கம் சிறிதும் இன்றி, வரலாற்றுப் பதிவுக்குத் தேவைப்படுவனவற்றைமட்டுமே சேக்கிழார் எடுத்துரைக்கிறார். திருநீலகண்டர் என்ற பெயரில் நாயன்மார் இருவர் இருப்பதால், வேறு பிரித்துக் காட்டச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம் திருத்தொண்டத்தொகையில் 'திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்' என்று குலமரபு சுட்டிச் செல்கிறார். சேக்கிழாருக்குப் பிறப்பால் வரும் பேதமின்றி, அனைத்துச் சாதியினரும் சிவனுக்குத் தொண்டு செய்து ஒரு குலமாக வாழ வேண்டும் என்ற பெருநோக்கு உண்டு. அந்நோக்கம் நிறைவேறத் தேவையான அளவே, அவர் நாயன்மார் குலமரபுகளைப் பதிவு செய்கிறார்.

நனி நாகரிகம்

சுந்தரர் 'குயவர்' என்று குறித்த திருநீலகண்டரைச் சேக்கிழார் 'வேட்கோவர் குலத்து வந்தார்' என்று செம்மைப்படுத்துகின்றார். இயற்பகை நாயனாரை, சாதிப்பெயர் ஒன்றும் சுட்டாது, வருண அடிப்படையில், 'அக்குலப்பதிக் குடி முதல்வனார்' எனவே காட்டி நிறைகிறார். விறல்மிண்ட நாயனாரை, 'அப்பொற் பதியிடை வேளாண் குலத்தை விளக்க அவதரித்தார்' என்று பொதுப்பட 'வேளாளர்' என்று சுட்டுகின்றார். வேளாளர் சிலரைச் சூத்திரக் குடியினர் என்று குறிக்கும் போக்கும் பெரியபுராணத்துள் உண்டு. 'ஆயர் குலத்தை விளக்கிட வந்து உதயம் செய்தார்' என்று ஆனாய நாயனாரை 'ஆயர்' என்று சுட்டுகிறார். நந்தனார் வாழ்ந்த இடத்தைப் 'புலைப்பாடி' என்றும், 'கடைஞர் இருப்பு' என்றும் பதிவு செய்யும் சேக்கிழார், அவரை 'ஊர்ப் புலைமை ஆன்ற தொழில் ஆயத்தார்' என அறிமுகப்படுத்துகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையார் சடையனாரை 'மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செய்யும் வேதியர்' என்று குறித்து நிற்கிறார். பூசலாரை 'அருமறைமர'பில் வந்தவர் என்று சுட்டுகின்றார். பிற்காலத்தார் குலமரபு பற்றிப் பேசிய சாதியச் சுட்டுக்கள் பலவும் சேக்கிழாரால் நனி நாகரிகமாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் உற்று நோக்கத்தக்கது.

சமயப் போராட்டங்கள்

சேக்கிழார் வாழ்ந்திருந்த கி.பி. 12-ஆம் நூற்றாண்டில், வைதிக சமயங்களாகிய சைவமும் - வைணவமுமே சிறப்புற்று நின்றன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், தண்டியடிகள், கணம்புல்ல நாயனார் முதலியோர் நிகழ்த்திய போராட்டங்களால், புறச் சமயங்கள் என்று சுட்டப்பட்ட சமணமும் பௌத்தமும் தலை சாய்ந்து தேய்ந்தன. நாயன்மார் வரலாறுகளை விரித்துரைக்கும் போக்கில், அவர்கள் காலத்தில் நிலவிய சமயங்களின் நிலை குறித்தும் அவை தம்முள் நிகழ்த்திய போராட்டங்கள் குறித்தும் உரிய பதிவுகளைச் சமய வரலாற்றைப் பிற்காலத்தார் அறிந்து கொள்ளுமாறும் சேக்கிழார் பல பதிவுகளைப் பெரிய புராணத்துள் அமைத்துள்ளார். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில், தமிழகத்தின் வடபகுதியாகிய பல்லவர் ஆட்சிப் பகுதிகளில் அரசியல் சமயமாகச் சமணம் நிலைகொண்டிருந்தது. தென்பாண்டி நாட்டில் பாண்டியன் சமண குருமார்கள் அறிவுரை கேட்டே ஆட்சி செய்திருந்தான். திருப்பாதிரிப் புலியூரிலும் மதுரையை அடுத்த ஆனைமலைப் பகுதிகளிலும் சமணர்களும் சமண மடங்களும் நிலவியிருந்தன. மதுரையை அடுத்தும் சிதம்பரம் பகுதியிலும் பௌத்தர்கள் பெருமளவில் வாழ்ந்திருந்து சமயப் போராட்டங்களிலும் வாக்குவாதங்களிலும் ஈடுபட்டு வந்தனர். 'காபாலிகம்' முதலிய வட புலத்துச் சமயத்தாரும் தமிழகத்தில் ஆங்காங்கே வாழ்ந்திருந்தனர். குறிஞ்சி நிலப் பகுதிகளில் முருக வழிபாடு சிறந்திருந்தது. இம் மதங்கள் பலவும் இடையறாது, ஒன்றோடு ஒன்று மோதிக்கொண்டு, சமூக அமைதிக்கு இடையூறு செய்துவந்தன. ஆட்சியாளர்கள் - அமைச்சர் சொற்கேட்டு ஆளாது, மத குருமார்களின் ஆலோசனை பெற்று, மதச்சார்பு அரசியல் நிகழ்த்தி வந்தனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் நிகழ்த்திய போராட்டங்களுக்குப்பின் சமணமும்-பௌத்தமும், வலியிழந்தன. வைதிக சமயமாகிய சைவம், பெரிதும் சீர்மை பெற்றது.

அகச்சான்று காட்டுதல்

தமிழகச் சமய வரலாறு குறித்த மேற்காணும் உண்மைகள் யாவும் சேக்கிழாரால் பெரியபுராணத்துள் விரிவாகப் பதிவு செய்யப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பெற்றுள்ளன. திருநாவுக்கரசர் தம் தாய்ச் சமயமாகிய சைவத்தை விடுத்துச் சமணம் சார்ந்த செய்தியைச் சேக்கிழார்,

" நல்லாறு தெரிந்து உணர நம்பர் அருளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும் அமணசமயம் குறுகினார் "

என்று குறிப்பிடுகிறார். கொல்லாமை என்பதைத் தம் சமயத்தின் உயிர்நாடிக் கொள்கை என்று கூறிக்கொண்டு, கொலைத் தொழிலை மறைந்து செய்யும் கொடியவர்களாகச் சமணர்கள் அக்காலை வாழ்ந்திருந்தமை இக்குறிப்பால் புலனாகிறது. சமணக் குருமார்களின் பொய்யுரை கேட்டு, நாடாண்ட பல்லவனும்,

" அருள்கொண்ட உணர்வின்றி நெறிகோடி அறிவென்று
மருள் கொண்டு "

வாழ்ந்திருந்தான் என்பதைப் பெரிய புராணம் இனம் காட்டுகிறது. சீர்காழியில் திருஞானசம்பந்தரின் பெற்றோர் புறச் சமயங்களை அழித்தொழிக்கும் திறம் கொண்ட பிள்ளை ஒன்று வேண்டும் என்று சிவனை நினைவு கூர்ந்து விண்ணப்பித்துள்ளனர்.

" ....பரசமயம் நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார் "

எனவரும் பெரியபுராணத் தொடர் சிந்திக்கத்தக்கது.

சமண - பௌத்தம்

சமணத்திலிருந்து, மீண்டும் தம் தாய்ச்சமயத்திற்கு மீண்ட திருநாவுக்கரசருக்குப் பல்லவ மன்னன் பல கடும் தண்டனைகளைத் தந்தான். சிவனருளால் நாவுக்கரசர் அவற்றினின்றும் உய்ந்தார். பல்லவன் மனம் திருந்திச் சமணம் விடுத்துச் சைவம் சார்ந்தான். சமணப் பள்ளிகளும் பாழிகளும் இடிக்கப்பட்டன. இதனைச் சேக்கிழார்

" வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத்திரத்தில் அமண்பள்ளியொடு பாழிகளும்
கூட இடித்துக்கொணர்ந்து குணபர ஈச்சரமெடுத்தான் "

எனப் பதிவு செய்துள்ளார். திருஞானசம்பந்தர் புராணத்தில், பாண்டியன் மனம் மாறி, சைவம் மீண்டபின் சமணக் குருமார்கள் பலரும் கழுவேறி மாய்ந்தமை குறிக்கப்பட்டுள்ளது. திருவாரூரில் கண்பார்வையற்ற தண்டியடிகள் என்ற சிவனடியார் நிகழ்த்திய, கோயில் திருக்குளம் தூர்வாரும் பணிக்குச் சமணர்கள் இடையூறு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செய்தமையும் சேக்கிழார் பதிவில் உள்ளது. சோழ நாட்டுப் போதிமங்கையில் புத்த நந்தி என்பாரொடு திருஞான சம்பந்தர் வாதமிட்டு வென்ற செய்தியும் பதிவில் உள்ளது.

போராட்டம் ஏன்?

சமண, பௌத்த மதங்களுக்கு எதிரான, நாயன்மார்களின் போராட்டங்கள் - வெறும் சமயச் சண்டைகள் அல்ல என்பதும் தமிழ்மொழி, கலைகள், கலாசாரக் கூறுகள், பண்பாடு, பெண்மை இவற்றுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டிருந்த, அன்னாரை வீழ்த்துவதன்வழி மீண்டும் தமிழகத்தை மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கையின் வழிப்பட்டதே என்பதைச் சேக்கிழார் தம் நூலுள் தெளிவுபடுத்தியுள்ளார். சமண, பௌத்தர்கள் தமிழ்மொழி நிலை கொண்டிருந்த பகுதிகளில் பாலி, மற்றும் சமஸ்கிருத மொழிகளை, நிலைபெறச் செய்தனர். தமிழ்க் கலைகளாகிய இசையும் - கூத்தும், காமத்தைத் தூண்டுவன என்று மக்கள்முன் பேசினர். புனித நீராடல், தல யாத்திரை, உருவ வழிபாடு என்று வாழ்ந்துவந்த தமிழர் கலாசாரங்கள் ஏளனப்படுத்தப்பட்டன. தமிழர் பண்பாட்டுக் கூறுகளாகிய திருவிழாக்கள் - கேளிக்கைகள் - நகை அணிந்து அலங்கரித்துக்கொள்ளல் யாவும் இகழப்பட்டன. பெண், காமத்தைத் தூண்டுபவளாகவும், தவத்துக்கு எதிரியாகவும் சித்திரிக்கப்பட்டாள். பெண்ணாகப் பிறந்த பிறவியில் வீடுபேறு இல்லை என்றும் மீண்டும் ஒரு முறை அன்னார் ஆணாகப் பிறந்தே வீடு பெற இயலும் என்றும் அவர்களால் கூறப்பட்டது. தேவாரங்களின் துணையோடு இவற்றிற்கெல்லாம் சேக்கிழார் தம் நூலுள் பரவலாக மறுப்புரைத்துக் காப்பியம் நடத்தியுள்ளார்.

அரிய சான்றுரைகள்

சேக்கிழாரின் மேற்குறித்த மறுப்புரைகளுக்கான சில அரிய தொடர்களை இங்கே எடுத்துக்காட்டுவது பொருத்தமாக அமையும். தமிழ் மொழியின் மேன்மையைச் சேக்கிழார்.

" ஞாலமளந்த மேன்மைத் தமிழ் "

என்றும்

" அசைவில் செழும் தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறை வெல்ல "

என்றும் குறித்துக் காட்டுகின்றார். திருஞானசம்பந்தரைச் 'சந்தமுத் தமிழ் விரகர்' என்றும், 'இயலிசைத் தலைவனார்' என்றும் குறிக்கிறார். திருநாவுக்கரசரைத் 'தமிழ் மொழித்தலைவர்' என்றும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'இன்தமிழ்க்கு மன்னனான வாகீசத் திருமுனி' என்றும் சிறப்பிக்கிறார். இசைக்கலை மேன்மையை, 'அன்பு ஊறி மிசைப் பொங்கும் அமுத இசை' என்றும், 'எவ்வுயிரும் என்பூடு கரைந் துருக்கும் இன்னிசை' என்றும் சிறப்பித்துரைக்கிறார். தமிழ்க் கலாசாரக் கூறுகளுள் ஒன்றாகிய விருந்தோம்பலை இளையான் குடி மாற நாயனார், மற்றும் அப்பூதி அடிகளார் வரலாற்றில் விரிவாகப் பேசுகிறார். தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஆடவர் ஒழுக்கத்தைச் சிறுத்தொண்ட நாயனார் வரலாற்றில் ஆடவர்கள் இல்லத்தில் இல்லாமல், பெண்டிர் மட்டும் தனித்திருக்கும் இல்லத்தில் வேற்று ஆடவர் புகுவது நாகரிகம் அன்று என்று குறித்துக் காட்டுகிறார். ஓர் ஆதீனத் தலைவருக்கு நிகராகப் பிற மதத்திலிருந்து திரும்பும் ஒருவருக்கு உலகத்தார் பார்வையில், வாழ்விழந்தவராகக் காணப்படும் ஒரு பெண், திருநீறு கொடுத்து, வரவேற்கும் உரிமை உடையவர் என்பதை உறுதி செய்கிறார். இவற்றின் திறமெல்லாம் பின்னர் விரிவாகப் பேசப்படவுள்ளன.

வரலாற்றுப் புலம்

மேலும், பெரியபுராணத்துள் காணப்படும் பல அரிய வரலாற்றுப் பதிவுகள், இந்நூலை, ஒப்பற்ற ஒரு வரலாற்றுக் காப்பியம் என்று மெய்ப்பிக்கின்றன. தில்லைப் பொன்னம்பலத் திற்கு ஆதித்த சோழன் பொன் வேய்ந்தான். இமயநெற்றியில், சோழன் ஒருவன், புலிக்குறி பொறித்தான். ஒரு காலத்தில் பெண்ணையாறு, துறையூரின் தெற்கில் பாய்ந்து சென்றது. காஞ்சிபுரத்தைக் கரிகாலன் புதுக்கி அழகு செய்தான். சிறுத்தொண்ட நாயனார், வடபுலத்து வாதாபி நகரை வென்று தீயூட்டி மீண்டார். இவையும் இவைபோல்வன பிறவுமாகிய குறிப்புக்கள் பலவும் ஒருங்கிணைந்து, சேக்கிழாரின் பெரியபுராணத்தை வரலாற்று ஆய்வுக்கு இசைவுடையதாக ஆக்கி நிற்கின்றன. இத்தகு வரலாற்றுக் காப்பியத்தை ஏதீடாகக் கொண்டு, சேக்கிழார், தம் தாய்ச் சமயமாகிய சைவ சமயவளர்ச்சிக்கு, ஆற்றியுள்ள அரும்பணிகளை முதற்கண் இனம் பிரித்துக் காணலாம்.

நம்பிக்கை ஊட்டுதல்

கடவுட் கோட்பாட்டை ஏற்றுப் போற்றும் உலகச் சமயங்கள் பலவும் தத்தம் சமயக் கடவுளரின் அளப்பரிய கருணையையும், அருளிப்பாட்டையும் மக்கள் அறிந்து, ஈடுபாடு கொண்டு, தம் சமயத்தை நோக்கி வருமாறு, பல கதைகளைப் படைத்துக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொண்டன. அவற்றுள் பல, உண்மை நிகழ்வுகளின்மேல் பின்னப்பட்டன. சில, கற்பனையாக ஓர் உண்மையை உணர்த்தப் படைத்துக்கொள்ளப்பட்டன. வேறு சில, சிறு உண்மைச் சம்பவத்தின்மேல், விரிவான கற்பனை கலந்து வடிக்கப்பட்டன. கட்புலனுக்கு வாராத கடவுளை உணர்வதும் அறிவதும் கற்றவர்களுக்கேகூட எளிதானவை அல்ல. கல்வி அறிவற்ற, பாமரர்களைச் சமயத்தின்பால் ஈர்ப்பது பெரிதும் அரிதான செயல். ஆயினும், மேற்குறித்த இரு திறத்தாருக்கும் சமய வாழ்வில் ஈடுபாடும் நம்பிக்கையும் உண்டு. அவற்றை உறுதி செய்ய, இன்னார் ஒருவர், இன்னதைச் செய்து, இறையருள் பெற்றார் என்றோ இவ்வாறு நடந்துகொண்டவர்களை நாடி, இறைவன் அருள் செய்தான் என்றோ கதை ஒன்றை முன்னிறுத்தும்போது அது சாத்தியம் ஆகிறது. கற்றவர்கள், நம்பிக்கை இருந்த போதும் கதை நிகழ்வுகளின் மேல் வினா எழுப்புவர். கல்லாதார், நம்பிக்கையோடு ஏற்றுப் போற்றுவர்.

சேக்கிழார் சாதனை

சைவம் செய்த நல்வினைப் பயனாகத் தமிழகத்தில் சிவனருள் பெற்றுச் சிறந்த, நாயன்மார் சிலரைப் பட்டியலிட்டு வழங்கினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் குறித்த, அடியவர் வரலாறுகளை வெறும் கதைகளாக விரித்துரைக்காது, சமய வளர்ச்சிக்குரிய கூறுகளையும் உடன் இணைத்துச் சேக்கிழார் சைவ சமயத்திற்குப் பெரும் ஆக்கத்தைச் சேர்த்தார். முற்றிலும், அறிவாராய்ச்சிக்கு உட்பட்டதாகச் சமயத்துறையில் கதை புனைதல் இயலாது. எனினும், 'கடவுள் நம்பிக்கை உடையவராய்த் தம் சமயத்தை ஏற்றுப் போற்றுவாருக்கு இசைவுடையனவாகச்' சேக்கிழாரின் கதைப் புனைவுகள் அமைந்தன. சில மானுட எத்தனத்துக்கு உட்பட்டன. சில, இறைமைக் கோட்பாட்டுக்குமட்டுமே இசைந்து வருவன. என்றாலும், அவற்றுள்ளும் முரண்படாது ஏற்றுப் போற்றுமாறு சைவ சமய உண்மைகளை இணைத்துச் சேக்கிழார், பெரும் சாதனை புரிந்துள்ளார்.

முதல் நூல்

கி.பி. 12-ஆம் நூற்றாண்டுக்குப் பின், தமிழகத்தில் சைவ சமயம் பெற்ற பன்முக வளர்ச்சியில் சேக்கிழாரின் கொடை பெரிது. கற்பாரைச் சமய உணர்வோடு ஈர்த்து நின்று உயர்த்தும் அரிய கலை, சேக்கிழாருக்குக் கைவந்த ஒன்று. பக்திச் சுவை இழையோடும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவர்தம் கதைகளில், சமய உணர்வு படைத்தோர் கரைந்து நெகிழ்வர். சமய உண்மைகளோடு தனிமனித மேம்பாட்டுக் கூறுகளும் சமுதாய ஒழுங்குகளும் சேக்கிழாரால் கலந்தே பெரியபுராணத்துள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தைத் தவிரப் பிற மாநிலங்களிலோ பிற சமயங்களிலோ பெரியபுராணத்திற்கு நிகரான ஒரு கதை நூல் இல்லை. இது தமிழ் நாட்டுச் சைவர்களின் தவம்! சேக்கிழாரின் செந்தமிழ்க்கொடை! சேக்கிழார், இந் நூலைத் தாமே முயன்று, முதல் நூலாகப் படைத்தார். தழுவல் நூல் இது என்றோ, வேறு ஒரு மொழியிலிருந்து இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டது என்றோ கதைபுனைய முயன்றோர் தோற்றனர்.

சேக்கிழாரின் வெற்றி

இத்தகு பெருமைமிக்க தம் படைப்பாகிய பெரிய புராணத்தின் வழி சேக்கிழார் சைவ சமயப் பன்முக வளர்ச்சிக்கு அரிய கொடைகள் பலவற்றை வழங்கினார். தேவார மூவர் வருகைக்குப்பின் தமிழகத்தில் சிவாலயங்கள் புதிய எழில் பெற்றன. மூவர் பாடிய தலங்கள் என்று அவற்றைத் தனி எடுத்துச் சைவர்கள் போற்றத் தலைப்பட்டனர். நித்திய பூசைகளும் மாத வழிபாடுகளும் பெருந் திருவிழாக்களும் கோயில்கள்தோறும் நிகழ்த்தப்பட்டன. சேக்கிழார் காலத்துக்கு முன்வரை இல்லாத சிறப்பாகப் பெரியபுராண அரங்கேற்றத்திற்குப் பின், சிவாலயங்களில் செயற்கரிய செயல் செய்து பெரியரான நாயன்மார்களின் திருமேனிகள் எழுந்தருளச் செய்யப்பட்டு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. சைவ சமய வரலாற்றில் இதனை ஒரு பெரிய மாற்றம் என்றே கூறவேண்டும். ஏன் எனில், சில குலத்தில் பிறந்தவர்களைக் கோயிலுக்குள் நுழைந்து சிவனை வழிபடுவதற்கே மறுப்புத் தெரிவித்தவர்கள் மத்தியில், அதே குலத்தில் உதித்த ஒருவர், நாயனாராகி, ஆலய வளாகத்தில் வணங்கத்தக்கவராக உயர்ந்தமை சேக்கிழாரின் வெற்றி என்றே கருதப்பட வேண்டும்.

அடியவர் வழிபாடு

சிவ வழிபாடுமட்டுமே சிறந்திருந்த தமிழகத்தில் சேக்கிழாரின் வருகைக்குப்பின் அடியவர் வழிபாடும் சிறக்கலாயிற்று. திருநாவுக்கரசர் திருநாமம் ஒன்றைமட்டும் பற்றி நின்று, ஓர் அப்பூதி அடிகள் திருவருள் பெற்றார். திருஞானசம்பந்தருக்கு யாழ்மீட்டிய, தாழ்த்தப்பட்ட குலத்தவராகக் கருதப்பட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குக் கருவறைவரை சென்று யாழ் மீட்டும் பேறு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வாய்த்தது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் நட்புத் திறத்தால் சேரமான் பெருமாள் நாயனார் உடலோடு கயிலை சேரும் வாய்ப்பு அமைந்தது. அடியார்களுக்கு உணவளித்த அன்பில், இளையான் குடிமாறர் சிவனருள் வாய்க்கப்பெற்றார். பசித்தோர்க்குச் சோறிட்ட காரைக்கால் அம்மையார் சிவனால் 'அம்மா' என்று அழைக்கும் பேறு பெற்றார். சிவ வழிபாட்டுக்கு இணையாகக் கால்கொண்டு வளர்ந்த பெரிய புராண அடியவர் வழிபாடு, சைவ சமய வளர்ச்சியில் மேலும் சிறப்புச் சேர்ப்பதாக அமைந்தது. இறைவன் அருள்பெற, பக்தி ஒன்றே வழி என்று கூறப்பட்ட தமிழ்ச் சமுதாயத்தில் வேறு சில வாயில்களும் இறையருளுக்கு உண்டு என்று கண்டு கொள்ளப்பட்டது.

புதிய சிவ நெறி

கடைச் சங்க காலம்வரை, தமிழர் வழிபாட்டில் அன்பே முதன்மை பெற்றிருந்தது. புலால் உணவும் முருகனுக்கு ஆடு களைப் பலியிடும் பழக்கமும் ஓரளவு வழக்கில் இருந்திருக்கின்றன. வைதிக சமயம், பெரு வேள்விகளை முன்னிறுத்தி உயிர்களைப் பலியிட்டு அவற்றின் இரத்தங்களை வேள்வித் தீயில் இட்ட செயல்களில் தமிழ் மக்கள் முழு உடன்பாடு கொண்டிருக்கவில்லை. அக்காலை, வேத வேள்விகளுக்கு எதிராகவே, குறிப்பாக உயிர்க்கொலைகளைக் கண்டித்தே, சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் கால் ஊன்றின. அன்பு வழிபாட்டில் விருப்பம் கொண்டிருந்த பண்டைத் தமிழர்களுக்கு அன்பு வழி காட்டிய, சமண பௌத்த மதங்கள் விருப்பமுடையனவாயின. வேத வேள்விகளுக்கு ஏற்பட்ட எதிர்ப்பில் தமிழ் மக்களை மீண்டும் ஈர்க்க, வைதிக மதங்கள் உயிர்க் கொலை விடுத்துக் கருணையை மூலமாக ஏற்றுப் போற்றத் தொடங்கின. சமண - பௌத்த மதவாதிகளின் அடிப்படைக் கொள்கைகளுக்கு மாறான செயற்பாடுகளால், காலப்போக்கில் தமிழர்கள் மீண்டும் அவற்றை விடுத்து வைதிக மதங்களை ஏற்கத் தொடங்கினர். சமண, பௌத்தர்களின் தெளிவற்ற கடவுள் கோட்பாடுகளும் தமிழ் மக்களுக்கு ஏற்புடையனவாக அமையவில்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் திருஞானசம்பந்தர் வருகையால், வைதிக மதம், புதிய உயிர் இரக்கக் கோட்பாட்டுடன் தமிழகத்தில் நிலைபெறுவதாயிற்று. உயிர்ப்பலி கல்வாத, ஒரு புதிய சிவ நெறி, கருணையே மூல மந்திரம் என்று கொண்ட நன்னெறி தமிழகத்தில் உருக்கொண்டது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வேதவழிப்பட்ட சிவநெறியில் தாங்கள் இணைந்து நின்று, அந்நெறியைத் தமிழகத்தில் விதைத்துச் சைவப் பயிர் வளர்க்கத் தொடங்கினர்.

நான்கு வழிமுறைகள்

புத்துருக் கொண்ட சைவ சமயவளர்ச்சிக்குப் பெரியபுராணம் வாயிலாகச் சேக்கிழார் நான்கு வழிமுறைகளை முன் வைத்தார். திருமூலதேவ நாயனார் முதலிய சைவசமய முன்னோர் காட்டிய நெறிமுறைகளை உள்வாங்கிக்கொண்ட சேக்கிழார், நாயன்மார் வரலாறுகளை முன்னிறுத்தி, உயிர் இரக்கம், மனித நேயம், மனிதப் பண்பாடு முதலிய மூன்றோடும், வழிபாட்டையும் ஒன்றாக இணைத்துச் சைவ சமய வளர்ச்சிக்குப் புதிய வேகத்தை ஏற்படுத்தினார். கோயிலுக்குள்மட்டுமே வாழ்ந்திருந்த சடங்குச் சமயமாகிய சைவம், தளைகளை உடைத்துக்கொண்டு, சமூக வீதிக்கு வரவும், உயிர் இரக்கம் முதலிய செயல்களால் சைவம் புத்தழகு பெறவும், மனித நேயம் முதலியவற்றால் சைவம் உயிர்ப்புடையதாக மாறவும் சேக்கிழார் தம் நூலைப் பயன் கொண்டார். சைவ சமய வளர்ச்சிக்கான கூறுகளைக் கோயில்களை விடுத்து, வீதிகளில் தேடவேண்டும் என்ற எண்ணம் சேக்கிழாராலேயே முதன்முதல் தோற்றம் கொண்டது.

பக்தி மார்க்கம்

சேக்கிழார், தம் பெரியபுராணத்துரைக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்களையும் 'தொண்டர்' என்றும், அவர்தம் பணிகளைத் 'தொண்டு' என்றும் குறிக்கிறார். பெரிய புராணத்தில் ஊடுருவி நிற்கும் தலைமைப் பண்பு, 'தொண்டு' என்பதே. தொண்டர் புராணம் என்ற குறியீடும், சேக்கிழார், 'தொண்டர் சீர் பரவுவார்' என்று போற்றப்பெற்றதும் இங்கே நினைவுகூரத் தக்கன. சமூகத்தில் பிறந்து வாழும் ஒவ்வொரு மனிதனும் தொண்டு செய்யும் கடமை உடையவன். சேக்கிழார் நோக்கில் அத் தொண்டு இரண்டு வகையாகப் பிரிக்கப்படும். ஒன்று, சிவத் தொண்டு. மற்றொன்று, சிவன் பெயரால் மனித குலத்திற்குச் செய்யும் தொண்டு. சிவத்தொண்டு என்பது சிவாலயத்தைச் சார்ந்து நின்று, ஆலயப் பணிகளைச் செய்தல். ஆலய வளாகத்தை, திருவீதிகளைத் தூய்மை செய்தல், மலர் பறித்து மாலை கட்டித் தருதல் முதலான தொண்டுகள். இதனைச் 'சரியை' நெறி என்று சாத்திரக்காரர்கள் கூறுவர். இதனை, ஒரு நோக்கில், 'பக்தி மார்க்கம்' என்றும் கூறலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இத்தகு சரியைத் தொண்டு செய்தோர் பலர், பெரிய புராணத்துள் உள்ளனர்.

தொண்டர் இலக்கணம்

மேற்குறித்த, சரியைப் பணி செய்வாரை, 'அடியார்' என்றும், அவர்கள் செய்யும் பணி, 'இறைபணி' என்பதால், அன்னார் கூட்டத்தைத் திருக்கூட்டம் என்றும் சேக்கிழார் குறிப்பர். அத்தகு அடியார்கள் என்பவர் எத்தகையவர், அவர்தம் இலக்கணம் என்ன என்பனவற்றையும் சேக்கிழார் இனம் காட்டுவர். சிவத்தொண்டர் என்பாருக்குச் செல்வம்பற்றிய மகிழ்ச்சியோ, வறுமை பற்றிய துன்பமோ சிறிதும் இல்லை. மண் ஓட்டையும் பொன்பாளத்தையும் வேறுபாடின்றி ஒன்றெனக் கருதும் இயல்பினர். நெஞ்சில் பெருக்கெடுக்கும் அன்பால் சிவனை வழிபடுவதே அன்றி, அவ்வழிபாட்டின் பயனாக வீடுபேற்றையும் விரும்பாதவர். அன்னாரின் அணிகலன்கள் எல்லாம் உருத்திராக்க மாலைகளே. கந்தை ஆடைகளே அவர்கள் உடுப்பன. இறை பணியல்லாது, வேறு ஒரு குடும்பப் பாரம் இல்லாதவர். பரிவோடு கூடிய அன்பு வடிவினர்; யாதொன்றையும் பெற இயலவில்லையே என்ற குறை ஒன்றும் இல்லாதவர். இத்தகு இலக்கணம் படைத்து நின்ற அடியார் பலர் பெரியபுராணத்துள் இடம் பெற்றுள்ளனர்.

அகச்சான்று காட்டுதல்

மேற்குறித்த இலக்கணங்கள் இரண்டு பாடல்களால் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

" கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் "

என்ற தொடருக்கு இலக்கணமாகப் பலர் நின்றாலும், திருநாவுக்கரசர், நம் நெஞ்சத்தில் வருகிறார். திருப்புகலூரில், இறைவன் அளித்த பொன்னையும் மணியையும் கைகளால் தீண்டாது, உழவாரத்தால் எடுத்து வீசி எறிந்தார் நாவரசர். சேக்கிழார் அவர் நிலைமையை,

" புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடு இலாநிலைமை "

என்று குறிக்கிறார். தொண்டர் இலக்கணமாகச் சேக்கிழார்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் "

எனக் குறித்தமைக்கு ஏற்ப வாழ்ந்த காரைக்கால் அம்மையார்,

" இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும். "

எனச் சிவனிடம் விண்ணப்பித்ததாகச் சேக்கிழார் சுட்டுகிறார்.

" ஆரங் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அலது ஒன்றிலர் "

என்ற அடியார் இலக்கணம்,

" சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் "

என்ற நாவரசர் உருவ வருணனையுடன் இணைதல் சிந்திக்கத் தக்கது.

" ஈர அன்பினர் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ "

என்ற தொண்டர் இலக்கணம் கண்ணப்பர் இயல்புரைக்கும்

" அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ "

என்ற தொடரால் இனங்காட்டப்படுகிறது.

வளர்ந்த மனநிலை

இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பது, ஒருவகையில், மனித குலத்திற்குச் செய்யும் தொண்டாகவே வந்து நிறையும். ஆலயத்தை அலகிட்டு, மெழுக்கிட்டுத் தூய்மை செய்தால், வழிபட வருவாருக்கு அவை உதவியாக அமையும். உழவாரத்தால் நாவுக்கரசர் தில்லைத் திருவீதிகளைத் தூய்மை செய்தார் என்றால், வீதி வழி நடப்பவர் அனைவருக்கும் அது நன்மை பயப்பதாகவே அமையும். திருக்கடவூர் ஆலயத்தில் சிவன் சந்நிதியில், குங்குலியக்கலயர் தூபப் புகை எடுத்து நின்றார் என்றால், வழிபட வருவார் மனம் மகிழ, மணம் நுகர்வர் என்பதுதானே கருத்து. அரிவாட்டாயர் செந்நெல்லும், கீரையும், மாவடுவும் சிவனுக்கு நாள்தோறும் படையலிடும் நியதி கொண்டவர் என்றால், படையலிட்ட பொருள்கள் மனிதர்களுக்குத்தானே பயன்படப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

போகின்றன. ஒன்றுமில்லை என்ற மனோபாவம் தொலைந்து, ஏதோ ஒன்று இருக்கிறது என்று நம்புவதும், அதனை ஒருவடிவில், உருவில், திருமேனியில் காணமுடியும் என்று நம்புவதும், நாம் செய்யும் அன்பு உபசரிப்புக்களை அது ஏற்கும் என்று உளமார எண்ணுவதும், அதனை வழிபட்டால் நலம் பெருகும் என்று உணருவதும் எல்லாம்கூட, ஒரு வளர்ந்த மன நிலை என்பது புலனாகும். இந்த அன்பு, மெல்ல மெல்லச் சமுதாயத்தின்மீதும் சக மனிதர்கள்மீதும் படரத் துணை செய்யும் என்பதும் ஏற்கக் கூடியதே.

தொண்டில் ஊற்றம்

சரியை நெறி நின்று, கோயிற் பணி செய்வாரைப் புறக் கோலம் புனையாது, அன்னார் அடிமன உறுதியையே சேக்கிழார் பெரிதெடுத்துக் காட்டுகிறார். கரூரில் சிவகாமி ஆண்டார் என்ற ஓர் அந்தணர் வாழ்கிறார். பொழுது விடிவதன்முன் எழுவது, குளிர்ந்த நீரில் நீராடுவது, நந்தவனம் சென்று வண்டு மூசாமுன் மலர்களை விரல் நுனியால் பிரித்தறிந்து பறிப்பது, மாலை கட்டுவது, அவற்றை நாட்காலைப் பூசைக்குச் சிவாலயத்தில் சேர்ப்பது என்ற ஒரே பணியை, ஊற்றத்தோடு வாழ்நாள் முழுவதும் அவர் செய்து வருகிறார். ஒருநாள், அவர் பூக்கூடையைப் பறித்து, யானை தரை மீது தேய்க்கிறது பொறாது, சிறுபிள்ளை போல் தரைமீது புரண்டு அரற்றுகிறார் முதியவர். உலக அனுபவம் மிக்கவர்; வேறு மலர் பறித்துச் சூட்டலாம் என்று தம்மைத் தாமே சமாதானம் செய்து கொண்டிருக்கலாம். அலறிக் கூக்குரல் இடுகிறார். சேக்கிழார் சொல்ல வருவது ஒன்று உண்டு. பூத் தொண்டு இன்றியமையாதது தான்; என்றாலும், அத்தொண்டு இடையறவுபடுதல் கூடாது என்ற உறுதியும் இடையறவு பட்டுவிடும்போது கிளர்ந்தெழலும், தொண்டின் வழிவந்த மனவலிமைகள். அறவினை யாதாயினும் அவை இடையறவு படாது நிகழ்தல் வேண்டும் என்பது சேக்கிழார் திருவுள்ளம். பூசைக்குரிய நெல்லும், பிறவும், வயல் வெடிப்புகளில் சிதறிவிட, அரிவாட்டாயர் பொறாது தம் கழுத்தை அறுத்துக் கொள்ள முனையும் ஆவேசத்தில், அறம், இடையறவுபட்டுவிடுதல் கூடாது என்ற உணர்வே நாம் போற்றிக் கொள்ள வேண்டுவது.

வழிபாட்டின் பயன்

நாகப்பட்டினத்தில் வாழ்ந்திருந்த ஒரு மீனவர் அதிபத்தர். சிவன் தாள்களில் அன்பு பூண்டவர். மீன் விற்று வரும் செல்வத்தால் வாழ்ந்துவந்தவர். தம் சிவபக்தியின் வெளிப்பாட்டை,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவர் ஒரு புதிய வழியில் புலப்படுத்தினார். கடல் நடுவே பயணித்து, மீன் பிடிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்த அவருக்குச் சிவாலயம் சென்று, மலர் பறித்திட்டு வணங்கும் வாய்ப்பில்லை. நாள்தோறும், தான் வீசும் வலையில் அகப்படும் மீன்களுள் தலையாயது ஒன்றை, இறைவன் பெயர் நினைந்து, மீண்டும் கடலுள் விட்டு விடுவதையே, அவர் வழிபாடாகக் கொண்டிருந்தார். காலப்போக்கில், மீன் வளம் சுருங்கியது. வறுமை சூழ்ந்தது. மிக்க வறுமையில் வாடும் நாள்களில் ஒருநாள் வீசிய வலையில் விலை மதிக்க முடியாத பொன்மீன் ஒன்று அகப்பட்டது. அதனை எடுத்துத் தம் வறுமை நோக்காது கடலில் விடுத்தார். மறுபடியும், மறுபடியும் வீசிய வலையில், அதே பொன்மீன் மட்டுமே சிக்கியது. உடன் மீன்பிடிக்க வந்தவர்கள் சினம் கொண்டனர். தொடர்ந்து பொன்மீனைச் சிவனுக்கு என்று கடலுள் விடுத்தார். சிவன் காட்சி தந்து அருள்பாலித்தான். அதிபத்தர், அறுபத்து மூவரில் ஒருவரானார். மனிதப் பண்புகளை உறுதிபெறச் செய்யும் இத்தகு மனோபாவங்களையே, சேக்கிழார், வழிபாட்டின் பயன் என்று இனம் பிரித்துக் காட்டுகின்றார். இந்த மனநிலையும் உறுதியும் ஒவ்வொரு மனிதர் வாழ்விலும் கலக்கும்போது, அவை தரும் பயன்பாடு பெரிதாகும்.

சில படிப்பினைகள்

நாயன்மார் வரலாறுகளை விரித்துரைக்கும் சேக்கிழாருக்கு அவர்களை ஒளியூட்டிக் காட்டி மனித குலத்திற்குச் சில படிப்பினைகளை வழங்க வேண்டும் என்ற விருப்பம் இருந் திருப்பதை அறிய முடிகிறது. சமூகத்தில், சமயம் சார்ந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டிருப்போரை அதன் உண்மை உணராத சிலர் ஏளனம் செய்தல் உண்டு. சேக்கிழாரின் பெரியபுராணம், அத்தகையோரை நாண வைக்கும். சமய நாட்டமுடைய மக்கள் வாழும் நாடுகளில் மனித ஒழுக்கமும் சமூக இணக்கமும் நிறைந் திருப்பதையும், ஏனைய நாடுகளில் இவை இல்லாதிருப்பதையும் அன்னோர் அறிந்திருக்கவில்லை. தனக்கு மேல், உயர்ந்த பொருள் ஒன்று உள்ளது என்ற எண்ணமும், அது நம் செயல்களைப் பார்த்திருக்கும் என்ற உணர்வும், என்றென்றும் எங்கெங்கும் அது நமக்குத் துணையாகும் என்ற நம்பிக்கையும், மனித இனத்தை நேர்பட எடுத்துச்செல்லத் துணைபுரிவன. சேக்கிழார், இத்திறம் உணர்ந்த அறிஞர். சமயச் சார்புடைய வரலாறுகளிடையே, மானுடத்தை உயரச் செய்யும் பதிவுகள் பலவற்றை அவர் பொதிந்தே வைத்துள்ளார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருநீலகண்டம்

தில்லையில் மண்பாண்டம் செய்து விற்கும் குலாலர் மரபில் வந்த இளைஞர் ஒருவர் அறநெஞ்சினர். சிவ பக்தி மிக்கவர். தம்மால் இயன்ற அறமாகத் தம்மை நாடி வருபவர்களுக்கு, மண்ணால் செய்யப்பட்ட திருவோடு ஒன்றை வழங்கி வருகிறார். இறைவன் திருநாமங்களுள் ஒன்றாகிய, 'திருநீலகண்டன்' என்பதில் பேரீடுபாடு கொண்டு, அடிக்கடி அதனை உச்சரித்து வந்தவர் என்பதால், ஊரார் அவரைத் திருநீலகண்டர் என்றே அழைத்தனர். சமய வாழ்வு வாழ்வோர் தனி மனித ஒழுக்கம் காக்க அறிந்திருத்தல் வேண்டும் என்ற உண்மை அறியாத அவர், அழகும் இளமையும் இருக்கும் மனைவி இல்லத்தில் வாழவும், ஒருநாள், ஒரு பரத்தையோடு உறவாடி மீள்கிறார். குறிப்புக்களால், கணவர் பரத்தமை உணர்ந்த மனைவி, அவர், தம்மைத் தீண்ட நெருங்கும்போது, திருநீலகண்டத்தின் மேல் ஆணையிட்டு, 'எம்மைத் தீண்டாதீர்' என்று தடுக்கிறார். அக்கணத்திலேயே, கணவனார் மனம் மாறுகிறார். 'எம்மை' என்று மனைவி கூறிய காரணத்தால், அவரை மட்டும் அல்லாது, இப்பிறப்பில் வேறு எந்தப் பெண்ணையும் மனத்தாலும் தீண்டேன் என்று உறுதி பூண்கிறார். நான்கு சுவர்களுக்கு இடையே இருவரும் பல்லாண்டுகள் காமத்தை வென்று 'வாழ்ந்து காட்டுகின்றனர்.

தனிமனித ஒழுக்கம்

திருநீலகண்ட நாயனார் வாழ்க்கை, சமயநெறி நிற்போர் தனி மனித ஒழுக்கத்தில் தலைநிற்க வேண்டும் என்று வற்புறுத்தி நிறைகிறது. 'திருநீலகண்டம்' என்ற திருநாமத்தின்மேல் கொண்ட, அச்சம் காரணமாக அல்லாது, அந்நாமத்தின்மீது கொண்ட மிகப்பெரிய மரியாதை காரணமாகவே, அவர் மனமாற்றம் நிகழ்ந்ததாகச் சேக்கிழார் இனங்காட்டுகிறார். இறை அன்பும், இறைவன் திருநாமத்தின்மீதான பற்றுறுதியும் ஒரு மனிதனை ஒழுக்கநெறி நிறுத்த உதவின என்பதைப் பகுத்து உணரும்போது, சமயம் தனிமனித ஈடேற்றத்திற்கு அரிய பலனாற்ற இயலும் என்ற உண்மை வெளிப்படுகிறது.

பெண் உரிமைப் போராட்டம்

இவற்றிற்கெல்லாம் மேலாக, வேறு சில உண்மைகளையும் சேக்கிழார், இவ்வரலாற்றில் ஊடாகப் பதிவு செய்து, நம்மை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நெறிப்படுத்த முனைகிறார். தறிகெட்ட ஆடவர், காமம் சான்ற வாழ்க்கையைத் தட்டிக் கேட்கும் உரிமை இல்லாதிருந்தது தமிழ்ச் சமூதாயம். சங்க நூல்களிலும் சிலம்பிலும் இந்நிலையே நிலவி யிருந்தமை தெளிவு. சமூகமும் ஆடவர் காம வாழ்க்கைக்கு ஆதர வாகவே பேசி நின்றது. தான் ஓர் ஆண்மகனுக்கு உரியவளாக - அவனையே நினைத்து, நெஞ்சார, ஒழுக்க வாழ்க்கை வாழ்ந்துவரும் ஒரு மனைவி, தன் கணவனும், தன்னிடம் அவ்வாறே நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கும் உரிமை உடையவள். ஆடவனின் பரத்தமை வாழ்க்கைக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்திய முதல்பெண், தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே திருநீலகண்டரின் துணைவியாரே. இந்த உரிமைப் போராட்டக் களம் ஒரு சமய இலக்கியத்தில் நிலைகொண்டிருப்பது சைவம் தந்த சமூகக் கொடை.

திருநீலகண்டர் வரலாறு முதலியனவற்றில் சேக்கிழார் - சமய வாழ்வு, தனிமனித ஒழுக்கத்தோடு தொடர்பு கொண்டது என்பதை நிலைநாட்டுகின்றார்.

குறிக்கோள் வாழ்வு

தனி மனிதர்கள் சமய வாழ்வை மேற்கொள்ளும்போது தம் நிலைமைகளுக்கு ஏற்றவாறு ஏதேனும் ஒரு கொள்கையை வரித்துக்கொண்டு, அதில் ஊன்றி நிற்றல் வேண்டும் என்பது சேக்கிழாரின் விருப்பம். தான் கொண்ட கொள்கைக்கு ஊறு வாராது பாதுகாத்தலிலும் அதனைக் கொண்டுசெலுத்தும் போது எதிர்ப்படும் இடையூறுகளைத் தகர்த்தலிலும் மனிதன் உறுதி பூணுதல் வேண்டும். இத்தகு உறுதி பூண்டாருக்குச் சிவனருள் என்றென்றும் துணை நிற்கும் என்பது சேக்கிழார் ஊட்டும் நம்பிக்கை. இந்த உறுதிப்பாட்டில் தலைநின்ற நாயன்மார் பலர். அவருள் ஒருவர் சிறுத்தொண்ட நாயனார்.

சிறுத்தொண்டர்

பல்லவ மன்னனின் படைத்தளபதி பரஞ்சோதியார் சிவனிடம் பற்றுக் கொண்டவர். அவர் சிவனடியார் என்று உணர்ந்து, மன்னன் அவருக்குப் பணி ஓய்வு தந்து விடுவிக்கிறான். தம் சொந்த ஊராகிய, திருச்செங்காட்டங்குடி சேர்ந்து, சிவனடி போற்றி வாழ்ந்து வருகிறார். திருவெண்காட்டு நங்கை என்ற குலமகளை மணக்கிறார். சீராளன் என்ற மகன் ஒருவன் பிறந்து வளர்கிறான். சிவபக்தி மிக்க

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பரஞ்சோதியாரை ஊரவர்கள் அவர் பணிவு கண்டு சிறுத்தொண்டர் என்று அழைக்கின்றனர். செல்வமும் சிறப்பும் மிக்க சிறுத்தொண்டர் வாழ்வில், ஒரு கொள்கையை விரும்பி வரித்துக் கொள்கிறார். சேக்கிழார் இதனை,

" நறை இதழித் திருமுடியார் அடியாரை நாடோறும்
முறைமையினில் திருவமுது முன்னூட்டிப் பின் உண்ணும் "

நியதியோடு சிறுத்தொண்டர் வாழ்ந்திருந்ததாகக் குறிக்கிறார்.

அரிய செயல்

ஒவ்வொரு நாளும் ஒரு சிவனடியார்க்கு உணவிட்டு, அவர் உண்டபின், தாம் உண்ணும் நியதி மேற்கொண்டிருந்த சிறுத்தொண்டருக்கு, ஒரு நாள், உண்பதற்கு அடியார் எவரும் வாராத நிலைமை நேர்கிறது. பலவிடத்தும் தேடியும் சிவனடியாரைக் காணோம். உள்ளூர்க் கோயிலில் ஒரு சிவன் அடியார் அமர்ந்திருக்கக் கண்டு, அவரை உணவுண்ண அழைக்கிறார். அடியார் வேடத்தில் இருந்த சிவபெருமானே சிறுத்தொண்டர் மனஉறுதியை அறிவிக்க, அவர் மகனை அறுத்துப் படைக்கும் நிலைமைக்கு அவரை ஆட்படுத்துகிறார். அவரும், மனைவியும் கலந்து பேசி, கடைசியில் தம் குழந்தையையே அறுத்துக் கறி படைக்கின்றனர். இறைவன் அருள் பின்னர்க் கிடைக்கிறது. குழந்தை, பிழைத்து வருகிறான் என்று கதை நடையிடுகிறது.

சில வினாக்கள்

சைவ சமயத்தின் உயிர் இரக்கக் கோட்பாட்டுக்கு இக்கதை முரணானதுதான். இன்று, யாரும் இவ்வாறு செய்ய முன்வருவார் களா என்றால், வரமாட்டார்கள். அறுத்துக் கறியாக்கிய பிள்ளை, மீண்டும் உயிரோடு வருமா என்பது சந்தேகமே. நாம் இன்று கேட்கும் மேற்குறித்த கேள்விகள் யாவற்றையும் சேக்கிழார் தமக்குத் தாமே கேட்டு, விடைகண்டிருப்பார். அதன் பின்னரே இக்கதையை அவர் நடத்தியிருக்க வேண்டும் என்றால், இதில் ஏதோ ஒரு நுட்பத்தை, இனங் காட்டவே சேக்கிழார் விரும்பியிருக்கிறார் என்பது தெளிவு. அந் நுட்பம்தான் யாது? அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்தி வராத கதைகளில்கூடச் சில நீதிகளைப் பிரித்தறிவது நாம் அறிந்ததே.

வலிய கூறுகள் !

சிவ நெறி நின்று, சிவனடியாரைப் போற்றி வாழும் நெறியினர் சிறுத்தொண்டர். வாழ்க்கையில் அவரே வரித்துக்கொண்ட அந்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நியதிக்கு ஒரு தடை வருகிறது. குறித்த நாளில், சிவனடியார் வரவில்லை என்றால், அடுத்த நாள் இருவருக்குச் சோறளித்து விடலாம் என்று சமாதானப்படுத்திக் கொண்டு உண்டிருக்கலாம். அல்லது, சிவனடியாரின் கோரிக்கைகளை ஏற்காது சைவ உணவு மட்டுமே வழங்க இயலும் என்று மறுத்திருக்கலாம். சிறுத்தொண்டர் அவற்றில் ஒன்றும் செய்திலர். தாம் கொண்ட கொள்கையில் தலை நின்று, தம் மகனை இழக்கவும் துணிகிறார். இந்தக் கொள்கைப்பிடிப்பும் இழப்பும் அதனை ஏற்றுப் போற்றும் பக்குவமும் இறைநெறி போற்றி வாழும் வாழ்க்கை தந்த அருட்கொடை அல்லவா என்பது சேக்கிழார் நம்முன் வைக்கும் வினா. எனவே, சமயமும் சமய நம்பிக்கையும் சமயத்தின்பால் வைக்கும் பற்றுறுதியும் மக்களை வெற்றுச்சடங்குச் சமய வாழ்வில் நிறுத்தாமல் குறிக்கோள் வழியில் செலுத்தும் வலிய கூறுகள் என்பது புலனாகிறது.

இறைவன் கருணை

இத்தகு கொள்கை வழி நிற்பாருக்கு இறைவன் அருள் உண்டு என்பதோடு அமையாது, மேலும் ஒரு படிமேலே போய்ச் சேக்கிழார் அன்னார் தம் கொள்கையிலிருந்து வழுவாது வாழத் தானும் துணை நிற்பான் என்பதையும் புலப்படுத்துகிறார். பிள்ளைக்கறி படைக்கப்பட்ட இலையின்முன் அமர்ந்த சிவன் அடியார் தலைக்கறி வேண்டுகிறார். அதுவும் படைக்கப்படுகிறது. சிவன் அடியார் ஒருவர் உடன் உண்ண வேண்டும் என்கிறார். சிறுத்தொண்டர் தாமே ஓர் இலையில் அமர்கிறார். அமர்ந்த சிறுத்தொண்டர் மனம் பேதலித்தவராய் சிவனடியார், வேறு ஒன்றும் கேளாமுன், தாமே உண்ணத் தொடங்க நினைத்து, கறிகலந்த சோற்றை வாயருகில் எடுத்துச் செல்ல, சிவனடியார், சிறுத் தொண்டர் கையை இறுகப் பற்றுகிறார். 'ஆறு மாதத்திற்கு, ஒரு முறை உண்ணும் நான் பொறுத்திருக்க, தினம் உண்ணும் உனக்கு என்ன அவசரம்' என்று வினவுகிறார்.

தோன்றாத் துணை

சேக்கிழார் சொல்லவரும் நுட்பம் அரியது; உணர்ந்து மகிழத் தக்கது. சிறுத்தொண்டர் கொண்டிருக்கும் கொள்கை, சிவனடியாரை முன்னூட்டித் தாம் பின் உண்பது. இன்று, மனப் பேதலிப்பில் தாமே தம் கொள்கை மறந்து முன்னே உண்ணத் தலைப்படுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இறைவன் கருணையாளன். 'சொந்தக் கொள்கையை நிலை நாட்ட, மகனை இழந்த இவன், இன்று பேதலிப்பில், குறிக்கோள் நெறி பிறழ்கிறான். இவனை, இவன் கொள்கை வழி நிறுத்த வேண்டும்' என்ற கவலை சிவனைப் பற்றிக்கொள்கிறது. சிறுத்தொண்டர் கையைப் பற்றித் தடுக்கிறான் சிவன். உயரிய மானுட எத்தனங்கள் வெற்றி பெறத் தானும் துணையாகும் சிவனருள், சேக்கிழாரால் இனம் காட்டப்படுதல் நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

சில கடமைகள்

ஓர் இறைவனை வரித்துக்கொண்டு, அவனை வணங்கி அருள்பெற விழையும் அன்பன் ஒருவனுக்கு, வழிபாட்டுடன் கூட, வேறு சில கடமைகளும் உண்டு என்பதைச் சேக்கிழாரும் வழிமொழிந்து போற்றுகின்றார். ஆன்மிக நாட்டம் கொண்டவனுக்கு வழிபாடு என்பது முதன்மையானது. அடுத்தடுத்து அவனுக்குச் சமூகம் சார்ந்த சில கடமைகளும் உண்டு. முதல் கடமை உயிர் இரக்கம் என்பது. 'தயை' அல்லது 'கருணை' என்பதை முதன்மை அறம் என்று திருநாவுக்கரசர் போற்றுகின்றார். இறைவனே, கருணை வடிவானவன். அவன், சிற்றுயிர்கள்பால் கழிவிரக்கம் கொண்டு, அவற்றிற்கு அருள் பாலித்த வரலாறுகள் பல திருவிளையாடற் புராணத்துள் பரக்கப் பேசப்பட்டுள்ளன. பெரிய புராணத் துள்ளும் சேக்கிழார் உயிர் இரக்கக் கோட்பாட்டை விருப்போடு பதிவு செய்து, சைவ சமயத்திற்குப் புதிய வலிமை சேர்க்கிறார்.

அறிவு சிறத்தல் எப்படி?

வாழ்நாளில் ஒரு மனிதன் ஈட்டிக் கொள்ள வேண்டிய முதன்மையான ஒன்று எது என்று வினவினால், திருவள்ளுவர், அது அறிவே என்கிறார். வேறு உடைமைகள் எல்லாம், அறிவுடையானுக்குத் தாமே வந்து இணையும் என்னும் கருத்தின ராய், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று உறுதிபடப் பேசுகிறார். அப்படிப் பேசிய திருவள்ளுவரே, ஓர் இடத்தில், 'அறிவினான் ஆகுவது உண்டோ' என்று வினா எழுப்புகிறார். நாம் வியக்கிறோம். நீ, ஈட்டிக் கொண்டிருக்கும் அறிவு, பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதும் உணர்வைத் தரவில்லை என்றால், அதனால் ஒரு பயனும் இல்லை என்கிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன் நோய்போல் போற்றாக் கடை "

என்பது வள்ளுவரின் பதிவு. பிறர் நோய் என, உயர்திணை மேல் வைத்து உரையாது, 'பிறிதின் நோய்' என்று அஃறிணை மேல் வைத்து உரைத்த திருவள்ளுவரை, நன்கு நாம் ஆராய வேண்டும். பிற மனிதன் துயர் கண்டு இரங்குவது மட்டும் அறிவின் அடையாள மாகிவிடாது. பிற சிற்றுயிரின் துயரம் கண்டும் இரங்கும் மன நிலையில்தான் அறிவு அடைய்ாளப்படுத்தப்படும் என்கிறார் திருவள்ளுவர்.

தொன்னூல்களில் உயிர் இரக்கம்

உயிர் இரக்கத்தை முன்வைத்துத் தம் கொள்கைகளைப் பரப்பிய சமண-பௌத்த சமயங்களுக்கு முன்னாகவே தோற்றம் கொண்ட தமிழ்த் தொன்னூல்களில் உயிர் இரக்கம் குறித்த அரிய பதிவுகள் பல உள்ளன. முல்லைக்குத் தேர் தந்தான் பாரி என்பது வெறும் கொடையாக மட்டும் நின்று விடாது. பாரி கண்களில், தழுவ ஒரு கொழுகொம்பு கிடைக்காமல், காற்றில் அசைந்த முல்லைக்கொடி, ஓர் உயிரின் பரிதவிப்பாகப் பட்டிருக்க வேண்டும். நீந்தத் தெரியாது தண்ணீரில் தத்தளிப்பவன் துயர் தீர்க்க, உடன் உதவ முற்படுவது போல் பாரி ஒரு கணம் கூட முல்லையின் துன்பத்தைப் பொறுக்கமாட்டாதவன் ஆனான். அங்கே, அறிவினும் மேலாக, உணர்வு தலைப்பட்டிருந்தது. மயிலுக்குப் போர்வை அளித்த பேகனும் அதே உணர்வில் நின்றவன். அன்பில், அளப்பரிய பரிவில், அறிவு தலை சாயும்போது, அது மேலும் புத்தழகு பெறுவதாகவே தோன்றுகின்றது. இவை அனுபவத்தில் உணரத் தக்கவை.

சிற்றுயிர்கள்பால் நேயம்

ஒரு புறாவின் துயர் நீக்கத் தான் துலாத் தட்டில் ஏறி அமர்ந்த, கருணையாளன் சிபி என்பதைத் தொன்னூல்கள் குறித்துக் காட்டுகின்றன. நம்மைச் சுற்றி வாழும் சிற்றுயிர்களுக்கும் இன்ப துன்பங்கள் உண்டு. அவை, அவற்றை வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. ஒரு பெண்குரங்கு தன் துணையான ஆண், மலையடிவாரத்தில் வீழ்ந்து உயிர் துறந்ததை அறிகிறது. பிரிவுத் துயர் பொறாது, தன் குட்டியைச் சுற்றத்தார்பால் அடைக்கலப்படுத்திவிட்டு, அப்பெண்குரங்கு, தன் துணை உயிர் நீத்த, மலை முகடு ஏறிக் கீழே குதித்து, உயிர் நீத்தது என்று, சங்க அக இலக்கியத்தில் ஒரு பதிவு வருகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வறண்ட நிலத்தில், சிறிதளவு கிடைத்த தண்ணீரைத் தான் உண்ணாது, உண்பது போல் காட்டித் தன் துணையை உண்ணவைத்தது, ஓர் ஆண் யானை என்று அகநூல் ஒன்று பேசிக் காட்டுகின்றது. இவ்வாறான வேறு சில பதிவுகளும், தமிழ்த் தொன்னூல்களில் காணப்படுகின்றன. கொல்லாமை, புலால் மறுத்தல் முதலிய அறநூல் பதிவுகள் சிற்றுயிர்கள்பால் கொண்ட நேயத்தால் கிளைத்தன.

சைவம் என்பது....?

'சைவம்' என்ற சொல், 'சிவனது நெறி' என்ற பொருளில் வருவது. உலக வழக்கில் இன்று, சைவம் என்பது, புலால் அல்லாத உணவு கொள்வாரைச் சுட்டி நிற்கிறது. இந்தப் பொருள் மாற்றம், சைவ சமயம் நிகழ்த்திய நீண்ட போராட்டங்களால் ஏற்பட்டது. உயிர்க் கொலை செய்வாரையும் புலால் உண்பாரையும் சைவ சமயம் புறந்தள்ளிவிடவில்லை. நல்ல நாள், பெரிய நாள் என்றும், விரதங்கள் என்றும், நோன்புகள் என்றும் கூறி அன்னாரை மெல்ல மனமாற்றம் கொள்ளுமாறு சைவம் தடம் வகுத்து வளர்ந்தது. உயிர் இரக்கத்தை எல்லாச் சமயங்களும் ஏற்றுப் போற்றவே செய்தன. சைவத்தின் உயிர் இரக்கக் கோட்பாட்டுக்குப் புதிய அழகுகள் பல, சேக்கிழாரால் புனையப்பட்டன.

மனு வரலாறு ஏன் ?

மனுநீதிச் சோழன், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவன் அல்லன். சங்க நூல்களிலும், சிலப்பதிகாரத்திலும் அவன் குறிக்கப் பெற்றான். சண்டேசுர நாயனார் வரலாற்றில், உயிர் இரக்கம் பற்றிப் பேச, சிறு களம் அமைந்திருந்தபோதும் அது போதுமானதாகாது என்று சேக்கிழார் கருதியிருக்க வேண்டும். எனவே, காப்பிய மரபுகளைப் புறந்தள்ளிவிட்டுத் திருத்தொண்டத் தொகை பிறந்த, சோழநாட்டுத் தலைநகராகிய, திருவாரூர் நகரச் சிறப்புரைக்கும் போது, சேக்கிழார் மனுநீதிச் சோழன் வரலாற்றை அங்கே பதிவு செய்கிறார். மனுநீதிச் சோழன் வரலாறு நகரப்படலத்துள் சேக்கிழாரால் பதிவு செய்யப்பட்டமை குறித்துப் பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. என்றாலும், 'பிறிதின் நோய் தன் நோய் போல்' போற்றும் மனப் பண்பைச் சைவ நெறி நிற்பார் பெறுதல் வேண்டும் என்ற உயர் எண்ணமே இவ்வரலாற்றுப் பதிவுக்குக் காரணமாதல் கூடும் என்று கருதுவது பொருந்தும். சமயநெறி வாழ்வாரை, மனித நேயத்திற்கும் மனிதப் பண்பாட்டில் தலை நிற்பதற்கும் பழக்கும் உயரிய முயற்சியால் இவ்வுயிர் இரக்கம் ஓர் அடிமைத்தனம் போன்றது என்று சேக்கிழார் எண்ணுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தீர்வு வேண்டுதல்

சோழ நாட்டைத் திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு, பன்னெடும் ஆண்டுகளுக்கு முன், ஒரு மன்னன் ஆண்டுவந்தான். அவன், பழைய மனுநெறி ஒன்றை, மேல்வரிச் சட்ட மாகக் கொண்டு நாடாண்டதால், 'மனு நீதிச் சோழன்' என்று அழைக்கப்பட்டான். சோழ இளவரசன் வீதிவிடங்கன் என்பான், ஒருநாள், தேர் ஓட்டிச் செல்கையில் இளைய பசுமாட்டின் கன்று ஒன்று தேர்க்காலில் பட்டு மடிந்தது. கன்றின் பிரிவை ஆற்றாத தாய்ப்பசு, அரண்மனை முற்றம் சேர்ந்து தன் கொம்புகளால் ஆராய்ச்சி மணியை அடித்து, மன்னனுக்குத் தன் துயரை உணர்த்தி, நீதி கேட்டது. அரசன் அமைச்சரொடு கலந்து, நீதி வழங்கத் தீர்வு தருமாறு கேட்டுக்கொண்டான். அமைச்சர்கள், பழைய நடைமுறைகளை எடுத்துக்காட்டி, கோவதை செய்தார்க்கு அந்தணர்கள் விதித்திருந்த பிராயச்சித்த வகைமைகளை முன் மொழிந்தனர். மனுச்சோழனுக்கு அமைச்சர் உரைத்தன ஏற்பு உடையனவாக இல்லை.

மன்னன் மனநிலை

அமைச்சர்கள் உரைத்த பிராயச்சித்தங்கள், பாவம் நீக்க வேண்டுமானால் உதவுதல் கூடும்! ஆனால், கன்றை இழந்து அலறும் இத்தாய்ப் பசுவுக்கு அது எப்படி நீதி வழங்கியதாக அமைய முடியும் என்று வினாத் தொடுத்தான்.

" வழக்கென்று நீர் மொழிந்தால்
மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறும்
கோவுறு நோய் மருந்தாமோ "

என்பது சேக்கிழாரின் அரிய பதிவுகளில் ஒன்று. அமைச்சர்கள் மனுநெறி நின்று, சட்ட நுணுக்கங்களையும், எழுதப்படாத சட்டங்களாகிய மரபுகளையும் எடுத்துரைத்தனர். ஆயினும், சட்டங்களுக்கும் மேலானது ஒன்று; அது தருமம். அதன் நெறியை அமைச்சர்கள் உணர்ந்திருக்கவில்லை என்று சினம் கொண்டான் மனு வேந்தன். இறுதியில், மனு நெறியில் இல்லாத, மரபுகளுக்கு மேலான ஒரு நீதியை வேந்தன் அவையில் அறிவித்தான்.

அதீத நிலை

கன்றை இழந்த பசு, மனமழிந்து நிற்கிறது. அதன் மனத் துயரத்திற்கு மந்திரிகள் ஒருவரும் தீர்வு காட்ட முன்வரவில்லை. இப்பசுவின் மனத் துயரத்தை அகற்றும் வழி ஒன்றும் காண

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மாட்டாத நிலையில், அப்பசு உற்ற துயரத்தைத் தானும் உறுவதே முறை என்று மனுச் சோழன் அறிவித்தான்.

" ....மற்று இதனுக்கு இனி இதுவே செயல் இவ்வான்
மனமழியும் துயரகற்ற மாட்டாதேன்: வருந்தும் இது
தனதுறு பேரிடர் யானும் தாங்குவதே தருமம் "

என்பது மன்னன் உரைத்த வாசகம். பசு உற்ற துயரத்தை மன்னன் தானும் பெறுவேன் என்றது தன் மகனைத் தான் இழக்கத் துணிந்த அதீத நிலை. அமைச்சர்கள், உடன்படாது அகன்றனர். அரச குமாரனைத் தேர்க்காலில் கிடத்தித் தேர் ஓட்ட அமைச்சர்கள் உடன்பட்டிலர். இறுதியில், மனுச்சோழன் தன் மகனைத் தேர்க்காலில் தானே கிடத்தித் தேர் ஊர்ந்து பசுவுக்கு நீதி வழங்கினான் என வரலாற்றைச் சேக்கிழார் நிறைவிக்கிறார்.

அறத்தின் சிறப்பு

'பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றுதல்' என்ற குறள் வரிக்கு, ஓர் இலக்கியம் பிறக்கிறது. மனு நெறிச் சட்டங்களுக்கும் மேலான நீதி முறை தமிழகத்தில் உண்டு என்ற பெருமிதம் சேர்கிறது. மாறுபடும் சட்டங்களுக்கும் மரபுகளுக்கும் மேலானது மாறுபடாத அறம் என்பது நிலை நாட்டப்படுகிறது. சிற்றுயிர்களுக்கே, இத்தகு நீதி என்றால், மானுடத்திற்கு இதனினும் மேலான நீதி வழங்கப்பட வேண்டும் என்ற உள்ளுறை மலர்ச்சி பெறுகிறது. சிவநெறி நிற்பார் உள்ளம், அறநெறியில் தங்கும் என்பது இனங் காட்டப்படுகிறது. நாடாள்வார்க்கு மட்டுமல்லாது, சிவ நெறி நிற்பார் யாவருக்கும், இத்தகு நீதியொடு இயைந்த அருள் நெஞ்சம் வேண்டும் என்பது சேக்கிழாரின் விருப்பமாகிறது. தவறுகளுக்கு உரிய தண்டனைகளைத் தமக்குத் தாமே வழங்கிக் கொள்ளுவதும், அதற்கு உடன்பாடாகத் தம் மன நிலையை ஆயத்தப்படுத்திக் கொள்வதுவும் அருமை உடையன என்பதில் ஐயமில்லை. மனுநீதிச் சோழன் வரலாற்றில் உரைக்கப்பட்ட நீதிமுறை பெரியபுராண நூல் முழுதும் வேறு வேறு தோற்றம் கொண்டு உயிர்த்து நிற்பதை ஊன்றிக் காண்பார் அறிதல் கூடும். புகழ்ச் சோழர் வரலாற்று நிகழ்வுகளும் கழற்சிங்க நாயனார் முதலியோர் நிகழ்த்திய அதீதச் செயல்களும் ஒரு சில எடுத்துக்காட்டுக்கள்.

தமிழர் உயிர் இரக்கம்

தமிழர்கள், காலங்காலமாகவே சிற்றுயிர்கள்பால் நேயம் பூண்டு வாழ்ந்தவர்கள். மாடுகள் அவர்களின் செல்வத்தின்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அடையாளங்களாக விளங்கின. ஒருவன் செல்வம் அவனிடம் இருக்கும் மாடுகளை வைத்தே ஒரு காலத்தில் கணக்கிடப்பட்டது. 'மாடல்ல மற்றையவை' என்ற வள்ளுவர் பதிவும் இதனை உறுதி செய்கிறது. பால்பயனுக்காகப் பசுக்கள் போற்றி வளர்க்கப்பட்டன. பசும்பால் சிறப்புக் கருதிப் பசுவை மற்று மொரு தாயாகக் கருதிக் கோமாதா என்று போற்றிவந்தனர். எருதுகள், உழவர்களுக்கு உற்ற தோழர்களாக விளங்கின. தமக்கு உதவிய அவற்றைச் சிறப்பிக்க என்றே தமிழர்கள் 'மாட்டுப் பொங்கல்' கொண்டாடி மகிழ்ந்தனர். ஆடு, கோழிகள் அன்புடன் வளர்க்கப்பட்டன. நாயும், பூனையும் செல்லப் பிராணிகளாக வலம் வந்தன. பயன்பாடற்று முதிர்ந்த நிலை யிலும் விலங்குகளைத் தமிழர்கள் போற்றியே வாழ்ந்தனர்.

சிற்றுயிர்களும் சைவமும்

சமயத் துறையில் தமிழர்கள் விலங்குகள், மற்றும் பறவை இனங்களுக்கு, உரிய இடம் தந்து போற்றினர். பசுவைக் 'காமதேனு' என்று போற்றினர். காளை, சிவன் ஏறிச் செலுத்தும் வாகனமாகக் கொள்ளப்பட்டது. 'இடபம்' என்றும் 'நந்தி' என்றும், காளைகளைச் சிவன் கொடிகளில் எழுதி நின்றனர். மயில் முருகனுக்கு வாகனமாயிற்று. சேவல் அவன் கொடியில் எழுதப்பட்டது. சிறிய மூஞ்சுறு, விநாயகர் வாகனம் என்று கூறப்பட்டது. புலிமீது ஐயனாரை இருத்தினர். சிங்கம் உமையம்மையின் வாகனமாயிற்று. அன்ன வாகனமும் அவளுக்கு உரிமையானது. எருமைகூட எமனுக்கு வாகனம் என்று போற்றப்பட்டது. குரங்கு மற்றும் கருடனுக்கு வைணவத்தில் உரிய இடம் தரப்பட்டது. காவல் தெய்வங்களோடு குதிரைகள் இணைக்கப்பட்டன. இவைகள் எல்லாம் தமிழ் மக்களின் உயிர்இரக்கப் பண்பின் வெளிப்பாடுகள் என்பதை ஆழ்ந்து நோக்குவோரால் அறிய முடியும். கடவுள்மீது கொண்ட அன்பு அல்லது அச்சம் காரணமாக கடவுளர் வாகனங்களாக அமைந்த சிற்றுயிர்களுக்கும் ஒருவிதப் பாதுகாவல் அமைந்தது.

சண்டேசுர நாயனார்

சண்டேசுவரர் புராணத்தில் உயிர் இரக்கம் குறித்த இன்னொரு பதிவைச் சேக்கிழார் அமைக்கிறார். சேய்ஞலூரில் மறையோர் குலத்தில் வந்தவர் விசார சருமர். வேத ஆகமங்களைக் கற்றுச் சிறந்தார். உபநயனமும் நடந்தேறியது. சிவனடிகளில் நாட்டம் கொண்டு, வாழ்ந்துவந்தார். ஒரு நாள் கிடைமாடுகள் வீதி வழியே

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

நடந்து சென்றுகொண் டிருந்தன. அவற்றுள் ஒரு பசு, மாடுகளை மேய்ப்பவனைக் கொம்பால் கீறியது. வெகுண்ட அவன், விசார சருமர் காண, அப்பசுவைக் கோல் கொண்டு நையப் புடைக்க முயன்றான். அளவற்ற உயிர் இரக்கம் கொண்ட இளைஞர் விசார சருமர் மாடு மேய்ப்பானை இடை விலக்கி ஆவினச் சிறப்பை அவனுக்குப் பலபட எடுத்துரைத்தார்.

ஆவினச் சிறப்புக்கள்

பசுக்கள், உலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் மேலானவை. புனிதத் தீர்த்தங்கள் என்று சொல்லப்படுவன யாவும், பசுவுக்குள் அடைக்கலம் புகுந்துள்ளன. அவற்றின் ஒவ்வோர் அங்கத்திலும் அமரர்களும் முனிவர்களும் நிலைகொண்டு வாழ்ந்துவருகின்றனர். இச்சிறப்புக் கருதியே சிவபெருமானுக்குப் பசுவிடமிருந்து பெறப்பட்ட ஐந்து பொருள்களாலான 'பஞ்சகவ்யம்' சிறந்த திருமஞ்சனமாகக் கருதப்படுகிறது. சிவன் உடலெங்கும் அணிந்து மகிழும் திருநீறு பசுக்களிடமிருந்தே கிடைக்கிறது. சிவனும் உமையும் விரும்பி ஏறிவரும் இடபத்தைப் பயந்தன இப்பசுக்களே ஆகும். நீ, இப்பசுவினைத் துன்புறுத்தல் வேண்டாம். ஆநிரைகளை மேய்ப்பது சிற்றம்பலத்தில் ஆடும் சிவனை வணங்குவதற்கு நிகரானதாகும். எனவே, 'இனி நீ இவற்றை மேய்க்க வேண்டா: நானே மேய்ப்பன்' என்று விசார சருமர் அவனிடம் கூறியதாகச் சேக்கிழார் வரலாறு நடத்துகின்றார்.

> " கன்று பயில் ஆன் நிரைகாக்கும் இதன் மேல் இல்லை கடன் இதுவே.
> மன்றுள் ஆடும் சேவடிகள் வழுத்தும் நெறியாவதும் "

என்ற தொடர், சிற்றுயிர்களைக் காப்பது சிவ வழிபாட்டுக்கு நிகரானதாகும் என்ற உண்மையை வெளிப்படுத்தி நிற்கிறது. இசையால் ஆநிரைகளை வசமாக்கி நின்ற வரலாற்றை, ஆனாய நாயனார் வரலாறு விரித்துரைக்கிறது.

மனித நேயம்

வழிபாடு, உயிர் இரக்கம் என்பனவற்றை அடுத்துச் சேக்கிழார், சைவ சமய வாழ்வின் மூன்றாவது கூறாக, மனித நேயத்தை முன்னிறுத்துகின்றார். பெரிய புராணத்தில் பெரிதும் எடுத்துப் பேசப்படுவது மனித நேயமேயாகும். பல வரலாறுகளில் வெவ்வேறு கோணங்களில் மனிதநேயம் பெரிய புராணத்தில் இனங்காட்டப்பட்டுள்ளது. மனித நேயத்தின் மூலக்கூறு,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பசித்தாருக்குச் சோறிடுவதேயாகும். நாயன்மார் வரலாறுகளை ஏதிடாகக் கொண்டு, சேக்கிழார், மனித நேயத்தின் மாண்பினைப் பல பட எடுத்துரைத்து மகிழ்கிறார். பசித்தார்க்குச் சோறும் நோயுற்றாருக்கு மருநதும் திக்கற்றவர்களுக்கு அடைக்கலமும் அறியாமை மிக்கார்க்குக் கல்வியும் வழங்குவதைச் சைவம் பெரிதாகப் போற்றிநின்றது. மனித நேயத்தைப் புலப்படுத்தப் பொருள் வசதி வேண்டும் என்பதுகூட இல்லை. நல்ல மனம் இருந்தால் போதும் என்கிறார் சேக்கிழார். 'ஒல்லும் வகையான் அறவினை' செய்தாரையும், அவற்றை இயன்ற இடங்களி ளெல்லாம் இடையறவு படாது செய்தாரையும் சேக்கிழார் தலைமேல் வைத்துப் போற்றுகின்றார்.

இளையான் குடிமாறர்

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்பது அறநூல் வாசகம். அத்தகு வேளாண்குடியில் வந்த ஒருவர் இளையான் குடிமாறனார். தில்லைச் சிற்றம்பலவன் திருவடிகளில் அன்பு பூண்டவர். உழவுத் தொழிலில் தலை நின்றவர். பெருஞ்செல்வர். சிவனடியார்களுக்கு உணவு படைத்து மகிழும் பண்பினர். சிவனடியார்களுக்குமட்டு மல்லாது தம் இல்லம் நாடி வந்தவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கும் உணவளிக்கும் விருப்பினர். இதனைச் சேக்கிழார்,

> " ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதொர் தன்மையால்
> நேர வந்தவர் யாவராயினும் "

என்ற தொடரால் குறிப்பிடுகிறார். நாயன்மார்கள் அருள் வரலாற்றில், அன்னார் அன்னம் பாலிப்பது, நெற்றியில் திருநீறு பூசிய சைவ அடியார்களுக்குமட்டும்தானா? அல்லது, பசித்தோர் அனைவருக்குமா என்ற, வினாவிற்கு விடை கூறுவார் போல், 'நேரவந்தவர் யாவராயினும்' என்ற தொடரை முன் வைக்கிறார்.

ஈர மென்மொழிகள்

அறஞ்செய்வார் பலருக்கும் அறஞ்செய்தல் தொடர்பான பெருமிதத்தால் ஒரு செருக்கு உள் எழுதல் இயல்பே. இளையான் குடி மாறனாரிடம் செருக்கின் சாயலே சிறிதும் இல்லை. அடியார் இல்லம் வரும்போது நெஞ்சில் அன்பு மீதூரும். அன்னாரைக் கைகள் கூப்பி எதிர்கொள்வார். அவர்கள் உள்ளம் மகிழுமாறு மெல்லிய அன்பு மொழிகளால் அன்னாரை உசாவி அறிவார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இவற்றைச் சேக்கிழார்,

" ... நத்தமாகிய பத்திமுன்
கூரவந்து எதிர்கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்து
ஈரம் மென் மதுரப் பதம் பரிவெய்த முன்னுரை செய்தபின் "

என்று அழகுபட எடுத்துரைக்கிறார். சிவனடியாருக்குச் சோறிட்டார் என்பதே கூறவந்தது. ஆனால், சைவ சமயத்தில் அன்னம் பாலிப்பார் மேற்கொள்ள வேண்டிய பண்பாட்டு நெறிமுறைகளைச் சேக்கிழார் இனங்காட்டி மகிழ்கிறார். அறஞ்செய்வான் திறம் கூறும் அழகிய பகுதி இது.

சைவப் பெருமிதங்கள் !

தம்கீழ்ப் பணியாற்றும் பணியாளர்களை ஏவி, அன்னதானம் செய்விப்பது ஒரு முறை. தாமே முன்னின்று செய்வது பிறிதோர் முறை. பின்னதை 'மாகேசுர பூசை' என்பது சைவ மரபு. சைவத்தின் முப்பெரும் பூசை முறைகளில் அடியார்களுக்குச் சோறு படைப்பதை ஒரு பூசை என்று குறித்த சைவ மரபு, பெருமைக்கு உரியது. அடியார்களை இளையான்குடி மாறனார் உண்பிக்கும் முறை குறித்துச் சேக்கிழார் விரிக்கும் பாடல் பெருஞ்சிறப்பு மிக்கது. பசித்து உண்ண வந்தவன் ஏழை என்று எண்ணாது, தம் அன்னதானத்தின் புண்ணியப்பேறு இவன் வாயிலாக அன்றோ வாய்த்தது என்று கருதும் பண்பாட்டைச் சேக்கிழார் நினைவு கூர்கிறார்,

" கொண்டு வந்து மனைப் புகுந்து
குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆசனத்திடை
வைத்து அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தில் ஆறு
சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர்
இச்சையில் அமுதுசெய்ய அளித்துளார். "

சொல்லுக்குச் சொல் சைவப் பெருமிதம் பேசும் பாடல் இது.

மண்ணின் மரபுகள்

காப்பியம் நடத்தும் கவிஞர்கள் கதையின் ஊடாகக் கதை நடக்கும் மண்ணின் மரபுகளை இடையிடையே பொதிந்து வைப்பர். இளையான்குடி மாற நாயனார் அடியார்களுக்கு அளித்த உணவு,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

ஏதோ பசிக்குச் சோறு என்று இல்லாமல், நாளும் பெரு விருந்தாகவே அமைந்தது. உணவு வகைகளில், விருந்தில் அறுசுவை படைக்கப் பட்டது எனக் கேட்டிருக்கிறோம். அறுசுவை நாம் அறிந்ததே. புதிதாகச் சேக்கிழார், உண்டி நாலு விதத்தினில் அமைந்திருந்ததாகக் கூறுகிறார். இது பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உணவில் நான்கு வகை உண்டு. அவை உண்டல், தின்றல், பருகுதல், நக்குதல் என்பன. நாலு வகையும், ஆறுசுவையும் கலந்த உணவையும் தாம் விரும்பியவாறு தயாரிக்காது வந்து உண்பார் விருப்பம் அறிந்து தயாரித்துப் படைத்தார் என்பதைத் 'தொண்டர் இச்சையில் அமுது செய்ய' என்ற தொடரால் சேக்கிழார் உணரச் செய்கிறார்.

பெரியபுராண உண்மை

இளையான்குடி மாற நாயனார் முதலியோரின், அன்னதான முயற்சிகளைச் சேக்கிழார் அவை, இறைவன் திருவுளப் பாங்கில் நிகழ்வனவாகவே கருதுகிறார். செல்வம் ஒருவனிடம் நிறைகிறது என்றால், அது இறைவன் அருளால் வாய்ப்பது. செல்வம் நிறைந்தவர்கள், அதன்மேல் பற்று அற்றவர்களாய்த் தம்மை அச்செல்வத்திற்கு ஓர் அறங்காவலராகவே கருதி வாழ்தல் வேண்டும். செல்வத்தை இறைவன், 'இரப்பவர்க்கு ஈய வைத்தார்; ஈபவர்க்கு அருளும் வைத்தார்' என்று திருநாவுக்கரசர் குறிக்கிறார். இறைவன் தந்த செல்வத்தை இறை அடியார்கள் பசி தீர்க்கப் பயன்படுத்து கின்றோம் என்ற உணர்வு மீதுரப் பெற்றவர்களாகவே, பெரிய புராண அடியவர்கள் வாழ்ந்திருந்தமை சேக்கிழாரின் பதிவுகளால் புலனாகிறது. செல்வம் மிக்க காலத்தில்மட்டும் அல்லாது வறுமை சூழ்ந்த காலத்தும் இளையான் குடிமாறனாரைப் போன்றோர் வாளா இருந்துவிடுவ தில்லை. ஒல்லும் வகையான் தம் தொண்டினை அவர்கள் தொடரவே செய்தனர் என்பது பெரியபுராணம் காட்டும் உண்மையாகும். மனஉறுதி உடையார் முன் வறுமை வெற்றி கொள்வதில்லை.

உலகறியச் செய்தல்

இளையான்குடி மாற நாயனார் சிவனடியார்களுக்கு நாளும் உணவளித்தார் என்பதில் அன்னார் வரலாற்று நுட்பம் முடிந்து விடவில்லை. கொடையாலும் மேலான மனஉறுதி உடையராய் அன்னார் வாழ்ந்திருந்தனர் என்பதை நாட்டுவதே சேக்கிழாரின் விருப்பம். இறைவன் அன்னார் மனஉறுதி அறிவான். அறியாத உலகவரை அறிவிக்கத் திருவுளம் கொண்டு இளையான் குடி மாறனாரின் செல்வ வளங்களைச் சுருங்கச் செய்கிறான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" செல்வம் மேவிய நாளில் இச்செயல்
செய்வதன்றியும் மெய்யினால்
அல்லல் நல்குரவு ஆனபோதிலும்
வல்லர் என்று அறிவிக்கவே
மல்லல் நீடிய செல்வம் மெல்ல
மறைந்து நாள்தொறும் மாறிவந்து
ஒல்லையில் வறுமைப்பதம் புக
உன்னினார் தில்லை மன்னினார் "

நாயன்மார், உளஉறுதி அறிவான் சிவன். அவன், அவர்களைச் சோதித்தான் என்று சேக்கிழார், ஓரிடத்தும் கூறவில்லை. அடியார் மன உறுதியை உலகம் அறிய வேண்டும் என்பதே இறைவன் விருப்பமாக இருந்தது என்பது குறிக்கத்தக்கது.

வழிதேடுதல்

இளையான்குடி மாறனார் வளங்கள் மெல்ல மெல்லச் சுருங்கின. ஆயினும், அவர் மனம் சுருங்கிவிடவில்லை. உடைமைகளை விற்றும் சோறளிக்கும் தொண்டில் தலைநின்றார். யாதொன்றும் இல்லாத ஒரு நாள். நாயனாரும் துணைவியாரும் பலபொழுது உணவின்றிப் பட்டினியால் வாடிக்கிடக்கும் ஓர் இரவு. சிவன், ஒரு முதிய அடியார் வடிவெடுத்து, கொட்டும் மழையில் நனைந்தவாறு நள்ளிருள் நேரத்தில் நாயனார் இல்லம் சேர்கிறான். நாயனாரும் துணைவியாரும் அவரை வரவேற்று, ஈரம் நீக்கி, அவர் வாட்டம் கண்டு, மிகப் பசித்திருக்கிறார் என்று உணர்ந்து, செய்வதறியாது தவித்தனர். மனைவியிடம் இவரை உண்பிக்கும் வழி யாது என்ற யோசனை கேட்கிறார். அம்மையார் நீளச் சிந்தித்து 'அண்டை அயலாரிடம் இனிப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. பொழுதும் நள்ளிரவாகிவிட்டது. நம் வறுமை நீங்க, மாலை, நம் வயலில் விதைத்த விதை நெல்லை, எடுத்து வர இயலுமானால், இயன்றவாறு உணவு படைக்கலாம்' என்று கூறுகின்றார்.

பெண்களின் பங்களிப்பு

பெரியபுராண நாயன்மார் பட்டியலில், பெண்களுக்கு மூன்று இடங்கள்மட்டுமே உண்டு. காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார், சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பெற்றெடுத்த இசைஞானியார். மங்கையர்க்கரசியார் வரலாறு திருஞானசம்பந்தர் வரலாற்றோடு இணைந்து நடையிடுகிறது. இசைஞானியாருக்கு என்று தனியான வரலாறு ஒன்றும் இல்லை. காரைக்கால் அம்மையார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வரலாறு மட்டுமே, பெரிய புராணத்துள் தனித்துப் பேசப்படும் வரலாறாகும். என்றாலும், பட்டியலிடப் படாத பல பெண்கள் பின்புலமாக நின்று, இயங்கியும் இயக்கியும் ஆடவர்களை நாயன்மார் நிலைக்கு உயரச் செய்துள்ளனர். தம் தொண்டுகளுக்கு உலகத்தாரை ஆயத்தப்படுத்துவது ஒரு நிலை. அதனினும் மேலானது, தம் இல்லத்தாரைத் தம் தொண்டுகளுக்கு இசைந்தவராக உருவாக்குவது. நாயன்மார் பலரும் இத்திறத்தில் பெரு வெற்றி பெற்றனர். திலகவதியார், கமலவதி, திருவெண்காட்டு நங்கை, அப்பூதி அடிகளாரின் துணைவியார், இளையான்குடி மாற நாயனாரின் இல்லத்தரசியார் முதலியோர் எல்லா வகையிலும் நாயன்மார்களுக்கு நிகரானவர்களே.

இவர்கள் இல்லையென்றால்....?

திலகவதியார் உலகியலுக்குப் பயந்து தீப்புகுந்திருந்தால், திருநாவுக்கரசர் சைவம் சார்ந்திருப்பாரா என்பது ஐயமே. கமலவதி, பிரசவ வேதனைக்கு அஞ்சியிருந்தால் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டிய கோச்செங்கட்சோழன் உருப்பெற்றிருக்க மாட்டான்! 'உங்கள் கொள்கைக்காக, என் மகனை அறுக்க ஒப்ப மாட்டேன்' என்று திருவெண்காட்டு நங்கை மறுத்திருந்தால், சிறுத்தொண்டர் உருப்பெற்றிருக்க இயலாது. மூத்த திருநாவுக்கரசின் மரணத்திற்குக் கலங்கிக் கதறியிருந்தால், நாவரசரை விருந்தேற்கும் வாய்ப்பு அப்பூதி அடிகளுக்கு இல்லாதே போயிருக்கும். இளையான்குடி மாற நாயனாரின் மனைவி, 'நாமே பட்டினியால் வாடுகிறோம்; நள்ளிரவில் செய்ய ஒன்றுமில்லை' என்றிருந்தால், மாற நாயனார் வரலாறு பெரியபுராணத்தில் இடம் பெற்றிருக்காது.

எது செல்வம்?

தக்க நேரத்தில் ஒருவரால் வழங்கப்படும் நல்ல ஆலோசனைகள் கூட நல்ல ஒரு பெருஞ்செல்வம் கிடைக்கப்பெற்றதற்கு நிகரானது என்பது சேக்கிழாரின் அரிய பதிவுகளுள் ஒன்று. இளையான் குடி மாற நாயனாரின் மனைவி,

> " செல்லல் நீங்கப் பகல்வித்திய செந்நெல்
> மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
> வல்லவாறு அமுதாக்கலும் ஆகும் "

என்று ஆலோசனை வழங்குகிறார். அதுவரை வேறு வழி காணாது தடுமாறி நின்றிருந்த இளையான்குடி மாற நாயனாருக்கு, அது ஒரு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சரியான ஆலோசனையாகப் படுகிறது. சேக்கிழார், மாறனாரின் மனமகிழ்ச்சியை,

" மற்றம் மாற்றம் மனைவியார் கூறலும்
பெற்ற செல்வம்எனப் பெரிது உள் மகிழ்ந்து "

எனக் குறிக்கிறார்.

இளையான்குடி மாறனார்

வேளாண் மரபுரைத்தல்

ஓர் உண்மையை இங்கே நாம் இனம் கான வேண்டும். முதல்நாள் மாலைதான் விதைநெல் மாறனார் வயலில் விதைக்கப் பட்டிருந்தது. அன்று காலை முதல் இருவரும் உணவுக்கு வழி யின்றிப் பட்டினி கிடந்திருக்கின்றனர். தற்போது, வயலில் விதைத்த நெல்லைக் கொண்டுவந்தால், அடியாருக்கு அமுதாக்கிப் படைக்கலாம் எனத் துணைவியார் வழிகாட்ட, நாயனாரும் அதற்கு இசைகிறார். அவர்கள் இருவரும் விரும்பியிருந்தால், விதைப்பதற்கு முன் ஒரு குறுணி நெல்லை விதைக் கோட்டையிலிருந்து எடுத்து வைத்துக் கொண்டு, எஞ்சியதை விதைத்திருக்கலாம். எடுத்து வைத்த விதை நெல்லைக் குற்றி உலையிலிட்டுச் சோறாக்கி உண்டிருக்கலாம். ஆனால், அவ்வாறு அவர்கள் செய்யாமல் பட்டினி கிடந்தது ஏன் என்ற எண்ணம் எழலாம். இது மரபுபற்றிய ஒரு செய்தி. எந்தச் சூழ்நிலையிலும் வேளாளர்கள் விதை நெல்லைக் குற்றி உண்ண மாட்டார்கள். அது ஒன்றுக்குப் பத்தாகும் மூலம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்பதால் அதனை 'வித்து' என்று முன்னோர் குறித்தனர். 'விரகின்மையின் வித்தட்டு உண்டனை' என எமனைச் சினந் துரைக்கும் கவிதை புறநானூற்றில் உண்டு. சேக்கிழாரும் 'செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல்' என்று குறிப்பர். வறுமையைத் தொலைக்கும் மூலம், விதை என்பது புலனாகிறது. வேளாண்குடி மரபில் வந்த சேக்கிழார், குடிமரபுரைப்பது நினைந்து மகிழத்தக்கது.

வேடிக்கை மனிதர்கள்

ஆனால், தாம் விதையைக் குற்றி உண்பதில்லை என்ற வைராக்கியம் இருந்தபோதும், பிறர் பசி நீக்கத் தம் குலமரபைத் துறக்கத் துணியும் மாறர் தம்பதியரின் உளப்பாங்கு நமக்கு வியப்பைத் தருகிறது. 'இலன் என்னும் எவ்வம்' உரையாத மாறனாரின் குலச் சிறப்பை விளக்கும் பகுதி இது. 'ஒல்லும் வகையான் அறவினை' என்ற குறள்நெறியும் இங்கே வாழ்வாக விரிகிறது. 'இது நிகழுமா? இவ்வாறுகூடச் செய்வார்களா' என வினா எழுப்புவாருக்கு ஒன்று சொல்ல வேண்டும். நாம், எது நடக்காது என்றும் எவை இயலாதன என்றும் கருதுகிறோமோ, அவற்றை நடக்கும் என்றும் இயலும் என்றும் நிருபணம் செய்தவர்கள் மாமனிதர்களாக உயர்ந்து இலக்கிய வாழ்வு பெறுகிறார்கள். ஐயம் எழுப்புவார், வேடிக்கை மனிதர்களாகவே நின்று மறைகிறார்கள். நம் அறிவெல்லை சிறிது! நமது அறிவின் எல்லைக்கு எட்டாத மேலான ஒரு உலகம் உண்டு என்று நம்மில் பலர் நம்ப மறுப்பதே குறை.

மனிதநேய வரலாறு

பிறகென்ன? சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழ்கின்றன. நள்ளிரவில் தம் வயல் நாடிச் சென்று, கொட்டும் மழையில் நனைந்தவாறு, விதை நெல்லை அரித்து ஒரு கூடையில் நிரப்பிக் கொண்டு மாறனார் இல்லம் வருகிறார். துணைவியார் வாசலில் எதிர்கொண்டு நெற்கூடையைப் பெற்று நெல்லைத் தூய்மை செய்ய, விறகுக்காக நாயனார் வீட்டைத் தாங்கி நிற்கும் கூரை அலகு ஒன்றை, அறுத்து வீழ்த்துகிறார். விதை நெல்லை வறுத்துக் குற்றிச் சோறாக்குகிறார் துணைவியார். கொல்லையில் குழி நிரம்பாத, கீரைகளைப் பறித்து வந்து ஒன்றுக்கு இரண்டாகத் தொடு கறிகளை ஆக்கி, அன்னம் பாலிக்க முயலும்போது சிவனடியார் மறைகிறார். கதையும் நிறைகிறது. நள்ளிரவில் இல்லம் தேடிவந்தவர், முன்பின் அறிமுகமானவரும் அல்லர். உறவினரும் அல்லர். இறைவன் என்றும் அறிந்திருக்கவில்லை. வந்தவர் 'பசி' என்றோ, 'உணவிடுக' என்றோ இரக்கவும் இல்லை. அவர், சிவனடியார் என்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அடையாளப்படுத்தும் திருநீறும் மழையில் கரைந்து விட்டிருக்கும். இவற்றுக்கு அப்பாற்பட்ட மாபெரும் மனித நேயத்தை அடையாளப்படுத்தும் ஓர் அரிய வரலாறு இது.

படிப்பினைகள்

'தனக்கு மிஞ்சித்தான் தான தருமம்' என்று யாரோ ஒரு பழமொழி படைத்து உலவவிட்டிருக்கின்றார். இயலாத மனிதர்கள், தங்கள் மாட்டாமைக்கு இதனைப் பயன்படுத்திக்கொள்கின்றனர். தனக்கு ஒன்றும் இல்லாத நேரத்திலும் தான தருமம் செய்ய முடியும் - மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பனவற்றை நிறுவும் சைவப் பெருமிதம் இந்த வரலாறு. விரத நாட்களில், தான் பட்டினி கிடந்தபோதும் கணவனுக்காகவும் குழந்தைகளுக்காகவும் உணவு சமைத்துப் பரிமாறும்போதும் கணவன் விருப்பங்களுக்கு இசைந்தொழுகும்போதும் சைவ மாதர்கள் வாழ்வில் இளையான்குடி மாற நாயனார் நிழலாடுகின்றார். சைவ சமயத்தின், முப்பெருங் கடமைகளுள் ஒன்றாகிய மனித நேயத்திற்கு இளையான்குடி மாற நாயனார் வரலாறு ஓர் அரிய சான்றாக நிற்கிறது.

காரைக்கால் அம்மையார்

ஒன்றும் அற்ற நிலையில் பூத்த மனித நேயம் இது என்றால், எல்லாம் இருக்கும் நிலையில், இதனை மேலும் சிறப்பாக வெளிப்படுத்த இயலும் என்பதைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றில் வைத்துச் சேக்கிழார் காட்டுகிறார். வெறும் சோறு மட்டும் போட்டுப் பசி நீக்குவதோடு அமையாது, வந்த அடியவர்களுக்கு விலைமதிப்புடைய பொருள்களையும் அளித்து அனுப்பும் உயர்பண்பு காரைக்கால் அம்மையாரிடம் குடி கொண்டிருந்தது.

" நம்பர் அடியார் அணைந்தால் நல்ல திருஅமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியும் செழும் துகிலும் முதலான
தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின் வேண்டுவன கொடுத்தும் "

அவர் அன்பு எய்தியிருந்தார் என்பது, சேக்கிழார் வாக்கு. ஒரு நாள் சிவனடியார் ஒருவர், பசிக்குச் சோறு வேண்டி அம்மையார் இல்லம் நாடி வருகிறார். அவர் மிகப் பசித்திருக்கிறார் என்பது அவர் தோற்றத்தாலேயே அம்மையாருக்குப் புலனாகிவிடுகிறது. சோறு மட்டுமே வடித்துக் கவிழ்க்கப்பட்டிருக்கிறது. கறிவகைகள் ஏதும் தயாராகாத ஒரு முற்பகல் அது. கணவரும் உண்ணுவதற்கு இல்லம் வரவில்லை. அம்மையார்மட்டும் தனித்திருந்தாரா அல்லது பணியாளர்கள் உடன் இருந்தார்களா என்று புலப்படவில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தாய்மைச் சிறப்பு

தாய்க்கு மட்டுமே, குழந்தை மொழி புரியும். அதனால்தான் தன் முன் நின்று, அடியார், மௌனமாக வெளிப்படுத்தும் துன்பங்களை, நீக்கியருளும் இறைவனுக்கு நிகராகத் தாயை ஒப்புமை கூற அருளாளர்கள் துணிந்தனர். ஒரே அழுகையை ஒரு தாய், பசிக்கான அழுகை இது, ஈரப்படுத்தியதால் வந்த அழுகை இது, எறும்பு கடித்ததால் வந்த அழுகை என வேறுபடுத்தி அறிகிறாள். இவை தாய்மையின் மாபெரும் அருளாற்றல். நீங்களும், சிவன் முன்பு நின்று, அழுதால் போதும், ஒன்றும் நீங்கள் உரைக்காமலேயே அவன், உங்கள் குறையறிந்து நீக்கி அருள்வான். ‘அழுதால் உன்னைப் பெறலாமே’ என்ற தொடர் எவ்வளவு பொருள் பொதிந்தது! அதுநாள்வரை தாய்மைப் பேறு எய்தாத அம்மை யாருக்குப் பசித்தவன் முகம் கண்டு, தாய்மை தலை காட்டுகிறது.

இளிவரவுகள்

எல்லாம் இருந்தும், இருப்பதை எடுத்து வழங்கச் சோம்பல் கொண்டு, இல்லை என்பார் ஒரு வகை. கணவரிடம் பெரு மதிப்புடையார் போன்று, ‘ஐயா இன்னும் உண்ணவில்லை’ என்று கணவன்மேல் பழி போடுவார் ஒரு வகை. ‘ஐயா, அடுத்த வீடு பாருங்கள்’ என ‘இல்லை’ என்பதை நாகரிகமாக வெளிப்படுத்துவது ஒரு வகை. ‘கைவேலையாக இருக்கிறேன்’ என்று கூறித் தப்புவது ஒரு வகை. இவற்றைத்தான் ‘இல்லை என்பார் கூறும் இளிவரவுகள்’ என்று ஒரு திருக்குறள் உரைகாரர் குறித்தனர் போலும். இவற்றுள் ஒன்றையும் செய்யாது, பசித்தான் மெலிவு நோக்கி, உள்ளதைக் கொண்டு, உடன் அவன் பசி நீக்குவேன் என்று துணிகிறார்.

ஏதம் தீர் நல்விருந்து

அடியாரை இல்லத்துள் அழைக்கிறார். கால் கழுவ நீர் வழங்குகிறார். அவரை ஆசனத்தில் அமரச் செய்கிறார். இலை விரிக்கிறார். வடித்த சோற்றை இலையில் பரப்பி, நல்ல தயிர் பெய்கிறார். தொடுகறி தயாராகாததால், கணவன் அனுப்பி வைத்த மாங்கனிகளுள் ஒன்றைப் படைக்கிறார். அடியார் உண்டு மகிழ்கிறார். இதனைச் சேக்கிழார் ‘நல்விருந்து’ என்று குறித்து, நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். வெறும் தயிர்ச் சோறும், மாம்பழமும் கலந்த உணவு, நல்விருந்தாதல் எப்படி. என்று நம் நெஞ்சம் வினா எழுப்புகிறது. பசித்தவனை மேலும் ஒரு மணி நேரம் பசிக்க வைத்து,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அறுசுவை உணவு படைப்பதைவிட, உடனடியாகப் பசிநீக்க, அம்மையார் இட்டசோறு அறுசுவை விருந்துக்கு நிகரானது என்பது சேக்கிழார் திருவுள்ளம். இது குறித்தே இதனைச் சேக்கிழார் ஒரு சொல் முன் இணைத்து, 'ஏதம் தீர் நல் விருந்து' என்று மொழிகிறார்.

சிவனுக்குத் தாயாதல்

'தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி' என்பது மணிவாசகம். சிவனுக்குத் தாய் தந்தையர் இலர். அவன் கருவிலிருந்து பிறவாத தான்தோன்றி; சாவா மூவாப் பெரியோன். அப்பெருமானை நாடி அருள் வேண்டிக் காரைக்கால் அம்மையார், தலைகீழாக நடந்து, கயிலாயம் செல்கிறார். அவர் எலும்பு வடிவம் கண்டு, வியந்த உமையம்மை, சிவனாரை நோக்கி

" .....தலையினால் நடந்திங்கேறும்
எம்பெருமான் ஓர் என்பின்யாக்கை அன்பெண்ணே"

என்று வினவுகிறார். சிவன் 'இவர் என் அடியாருள் ஒருவர்' என்றோ அல்லது பெயர் சுட்டிக் காரைக்கால் அம்மை என்றோ உரைத்திருக்கலாம். மாறாகச் சிவன்,

" வரும் இவள் நம்மைப் பேணும் அம்மை காண்"

என்று அறிமுகம் செய்கிறார். 'என் அம்மை' என்று பிரிக்காது, 'நம்மைப் பேணும் தாய்' என்றது உமையம்மைக்கும் அவளே தாய் எனக் குறித்த நுட்பம். காரைக்கால் அம்மையார், எப்போது சிவனைப் பேணினார்கள்? சிவனடியார் ஒருவரை ஒரு நாள் பசிக்குச் சோறிட்டு மட்டுமே அம்மை பேணி நின்றார். அதுதான் அவர் செய்தது. ஒன்று புரிகிறது. அடியாரைப் பேணுவது நம் ஆண்டவனைப் பேணுவதற்குச் சமம் என்பது சேக்கிழார் கூற வந்தது. எனவே, வரலாற்றில் முன் 'பரமனார் திருத்தொண்டர்' என்று சேக்கிழார் குறித்திருந்தாலும், அடியார் வடிவில் வந்து, அன்னை பேண நின்றவன் ஆலவாய் அரனே என்று உறுதி செய்ய வைக்கிறார் சேக்கிழார். அதுபற்றியே பெருமான் காரைக்கால் பேயாரை அருகில் வந்ததும், அன்பு மீதூர 'அம்மையே' என்று அழைத்து மகிழ்கிறார்.

மனிதப் பண்பு

சடங்குச் சமய நிலையிலிருந்து சைவத்தை உயிர்ப்புடைய வாழ்க்கைச் சமயமாக உயர்த்திப் பிடிக்கும் முயற்சியில் சேக்கிழார்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உயிர் இரக்கம், மனித நேயம் என்ற இரண்டையும் அடுத்து மனிதப் பண்பாட்டை முன்னிறுத்துகிறார். பெரியபுராணப் பதிவுகளை உற்று நோக்குவாருக்கு ஒன்று நன்கு புலனாகும். அறம், பொருள், இன்பம் என்று மூன்று பாலாக வள்ளுவர் நூல் பிரித்துப் பேசப்பட்டாலும், வள்ளுவத்தின் ஊடே இறையோடும் தலைமைப் பண்பு அறம் என்பதை நாம் உணர்ந்ததைப் போல், பெரிய புராணத்தின் ஊடே இறையோடும் தலைமைப் பண்பு 'பண்பாடு' என்பதுதான். பெரியபுராணத்தை ஒரு 'பண்பாட்டு இலக்கியம்' என்று குறிப்பது, பெரிதும் பொருத்தமானதாகும். மனிதப் பண்பாட்டின் அடித்தளம் பிறர்பால் பேசும் 'இன்சொல்' என்ற ஒன்றிலிருந்தே விரிந்தெழ வல்லது. அதுபற்றியே, 'யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே' என்றார் மூலரும்.

இன்சொல்

உலகத்தை யெல்லாம் நட்பாக்கிக்கொள்வதற்குக் கொடையும், இன்சொல்லும் போதுமானவை என்பர் வள்ளுவர். மனிதநேயம் கொடையாலும், மனிதப் பண்பு இன்சொல்லாலும் சிறக்கும். இறைவழிபாடும் சமய நாட்டமும் ஒருவனை இன்சொல் வழங்கப் பழக்க முடியவில்லை என்றால், அவை சமயம் என்று கூறும் அருகதை உடையது அல்ல.

" கற்க மிக முயன்று கற்றதெல்லாம் கற்றவர்பால்
தர்க்கமிட்டு நாய்போலச் சள் எனவோ "

என்று வினாத் தொடுக்கிறார், சைவத் திருமடத்துத் தலைவர் ஒருவர். இன்சொல், இனிய மனத்திலிருந்துதான் பிறக்கும். இனிய மனம், இனிய செயல்களைச் செய்யத் தூண்டும். வரலாறு நடத்தும் போக்கில், இன்சொல்லின் சிறப்பைப் பல இடங்களிலே அழுத்தமாக இனங் காட்டிச் செல்கிறார்.

இன்சொல் சிறப்பு

இளையான்குடி மாறனார், தம் இல்லம் நாடிவரும் அடியார்கள் மகிழுமாறு 'செவிப்புலத்து ஈரமென் மதுரப் பதம் பரிவு எய்த முன்னுரை' செய்வார் என்பது முன்னரே எடுத்துக் காட்டப்பட்டது. சேக்கிழார் குலச்சிறை நாயனார் புராணத்துள் அவர் பண்பை விரித்துரைக்குமிடத்து,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" காரணம் கண்ணுதற்கு அன்பர் என்னவே
வாரமாகி மகிழ்ந்து அவர்தாள் மிசை
ஆரும் அன்பொடு வீழ்ந்து அஞ்சலி முகிழ்த்து
ஈர நன்மொழி எய்த இசைத்துளார் "

என்று பாடுகிறார். தென்பாண்டி நாட்டில் மங்கையர்க்கரசியார் வழிநின்று, சைவப்பயிர் வளர்த்த மதி யமைச்சர், குலச்சிறையார். தொகையடியார்களாகக் குறிக்கப்பட்ட ஒரு குழுவினர் 'பத்தராய்ப் பணிவர்'. அன்னாரின் பொது இயல்பு விரிக்க வரும் சேக்கிழார்,

" ஈசருக்கே அன்பானார்; யாவரையும் தாம் கண்டால்
கூசி மிகக் குதுகுதுத்துக் கொண்டாடி மனம் மகிழ்வுற்று
ஆசையினால் ஆவின்பின் கன்று அணைந்தால்போல் அணைந்து
பேசுவன பணிந்தமொழி இனியனவே பேசுவார் "

என்று குறிக்கிறார். சமயத்தை முன்னிறுத்தி, சமூகத்தை ஒருங் கிணைக்க முயல்வாருக்கு அடிப்படையாக வேண்டுவது இன் மொழி பேசுதலே என்பதைச் சேக்கிழார் பல இடங்களிலும் இனம் காட்டிச் செல்கிறார்.

முதற் பாடல்

சேக்கிழாரின் சைவப் பணிகள் குறித்து, நிறைவாகச் சில செய்திகள் குறிக்கப்படல் வேண்டும். திருமுருகாற்றுப்படையை அடுத்து, 'மேன்மை கொள் சைவநீதி' உலகெலாம் விளங்க வேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்ட சேக்கிழார், பெரிய புராணத்துள் தொடக்கத்தையும் நிறைவையும் 'உலகெலாம்' என்ற தொடரால் அமைத்து மகிழ்கிறார். அவரது காப்பியத்தின் முதற்பாடல் சிவன் வாழ்த்தாகவே அமைகிறது. விநாயகர் வணக்கம், மூன்றாவது பாடலாகவே இடம் பெறுகிறது. பின்வந்த சைவக் கவிஞர்கள் பலரும் தம் நூல் சிவன், உமை மற்றும் முருகன்மீது பாடப்பட்டிருந்தபோதும், முதல் பாடலாகக் காப்பு என்று அடையாளமிட்டு விநாயகரையே வகுத்தனர். உலகெலாம் என்ற முதற்பாடல் ஒற்று நீக்கி எண்ணினால் அறுபத்து மூன்று எழுத்துக்களாலும், சேர்த்து எண்ணினால் எழுபத்திரண்டு எழுத்துக்களாலும் அமைந்திருப்பது-தனியடியார். தொகை யடியார் எண்ணிக்கைகளுக்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தில்லைச் சிறப்பு

அம்பலத்து ஆடுவானாகிய தில்லைச் சிற்றம்பலவன் வாழ்த்தாகவே முதற்பாடல் அமைகிறது. திருநாகேச்சரத்துச் சிவன் தாள் மலர்களில் சேக்கிழார் ஈடுபாடு கொண்டவர். ஆயினும், சைவர்களுக்கு முதல் தலம் தில்லை என்பதாலும் தம் நூல் தோற்றம் கொண்ட சிறப்புக் கருதியும் தில்லையைச் சிறப்பிக்கிறார். வேறு வேறு தலங்களில் சிவபக்தி பூண்டு வாழ்ந்திருந்த நாயன்மார்களை அறிமுகப்படுத்தும் போதெல்லாம், அன்னார் தில்லைக் கூத்தன்பால் பத்திமை பூண்டிருந்தனர் என்றே குறிப்பது சேக்கிழாரின் பழக்கம். இளையான்குடி மாறனாரை 'அம்பொன் நீடிய அம்பலத்தினில், ஆடுவார் அடி சூடுவார்' என்று அறிமுகப்படுத்துவார். அப்பூதி அடிகளாரைத் 'தாண்டவம் புரியவல்ல தம்பிரானாருக்கு அன்பர்' எனக் குறிப்பர்.

உறவுத் தடங்கள்

தொடக்கக் காலங்களில் சைவத்தில் இறைவனுக்கும் அவனை வழிபடுவாருக்கும் இடையிலான உறவு 'ஆண்டான் அடிமை' உறவாகவே நிலவி வந்தது. முதன் முதலாகத் திருமூலர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என இறைவனை அடையும் வழிகளாக நான்கைக் குறித்தார். மூவர் வரலாற்றைப் பாட வந்த சேக்கிழார் சிவன் - திருஞானசம்பந்தருக்கு இடையே நிலவிய உறவைத் தந்தை - மகன் உறவு என்று கண்டு காட்டினார். சிவன் - திருநாவுக்கரசர் இடையிலான உறவை ஆண்டான் - அடிமை நிலை என்று உறுதி செய்தார். சிவன் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் உறவைத் - நட்பு உறவாக அடையாளப்படுத்தினார். இவை முறையே மகன்மை உறவு என்றும், அடிமை உறவு என்றும், நட்பு உறவு என்றும் குறிக்கப் பட்டன. இவற்றை வடநூலார் சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம், சகமார்க்கம் எனக் குறித்தனர். திருமூலர் குறித்த நான்கு நெறிகளில், மூன்றை எளிதாக அறிந்து பின்பற்ற, மூவர்முதலிகள் வரலாற்றை, அவற்றொடு இணைவித்த பெருமை சேக்கிழாரையே சாரும். பின்னர், மாணிக்கவாசகர் இறைவனோடு கொண்டிருந்த உறவைக் காதலன் - காதலி உறவு எனக் காட்டி, அதனைச் சன்மார்க்கம் என்று போற்றினர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கை முறை எவ்வாறு யோகம் என்ற நெறியில் அடங்கும் என்ற ஐயத்தை நீக்கும் முகமாகச் சேக்கிழார்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" தென்னாவலூர் மன்னன் தேவர்பிரான் குருவருளால்
மின்னாரும் கொடிமருங்குல் பரவை என்னும் மெல்லியல்தன்
பொன்னாரும் முலை ஓங்கல் புணர்குவடே சார்பாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார் "

என்று ஒரு பதிவை முன்வைத்து, நம்மை உய்த்துணர வைக்கிறார். அதன் திறம் விரிப்பின் பெருகும்.

சைவ சித்தாந்தம்

சிவாகமங்களின் ஞானபாகப் பகுதிகளின் பிழிவாகத் தமிழில் சைவ சித்தாந்தச் சாத்திரங்கள், உருக் கொண்டு எழுந்தன. தோத்திரப் பாமாலைகளின் இடையே மூவர் முதலிகள், சில சாத்திர மூலங்களை ஆங்காங்கே பதிவு செய்து சென்றனர். சேக்கிழாரும், சாத்திரம் உருக் கொள்ளுவதற்கு உதவுமாறு சைவ சித்தாந்தச் சாத்திர உண்மைகள் சிலவற்றைத் தம் நூலுள் இடையிடையே பதிவு செய்துள்ளார். சாக்கிய நாயனார் புராணத்துள்,

" செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் "

என, அரிய குறிப்பொன்றைச் சுட்டிச் செல்கின்றார். சமணர்கள், ஒரு பிறப்பில் ஒருவன் செய்த வினை அடுத்த பிறப்பில், வினை செய்தானைச் சென்று சார்ந்து, உரிய பலனைத் தந்துவிடும் என்று சாதித்தனர். பசுக்கள் நிறைந்த மந்தையில், ஒரு கன்று, தானே நாடிச்சென்று, தன் தாயை அறிந்து, அதன் மடியில் பால் குடிப்பதை உவமையாகக் கூறினர். வினை என்பது உயிர்ப்பொருள் அன்று. அது அறிவற்ற ஜடம். செய்வினையின் பயனைச் செய்வானை நுகர வைக்க இடைநின்று கூட்ட ஒருவர் வேண்டும் என்றும் அவரே 'இறை' என்றும் நான்காவதாக ஒரு பொருளைத் தருக்கரீதியாகச் சைவ சித்தாந்தம் முன்னிறுத்தச் சேக்கிழாரின் இந்தப் பதிவு துணையாக அமைந்தது.

ஐந்தெழுத்துச் சிறப்பு

பல்லவ வேந்தன் ஏவியவாறு நாவுக்கரசரை ஏவலர்கள் கல்லோடு பிணைத்துக் கடலில் வீசினர். 'சொற்றுணை வேதியன்' என்று தொடங்கிக் 'கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயமே' என்று அவர் பதிகம் பாடினார். கல் மிதந்தது. நாவரசர் கரை சேர்ந்தார் என்பது பெரிய புராண

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

வரலாறு. தத்துவப் பார்வையில், இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார், நாவரசர் புராணம் பாடும்போது பதிவு செய்கிறார். ஐந்தெழுத்தின் சிறப்புரைக்கும் இப்பகுதி, சைவ - சித்தாந்த உண்மை விளக்கமாகவும் அமைகிறது.

" இருவினைப் பாசம் மும்மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட
அருளும்மெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்
ஒரு கல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ "

என்ற பாடலில் அவர் ஒரு வினாத் தொடுத்து விடையை உணர வைக்கிறார். மும்மலம் என்ற கல்லில் உயிர்களை வைத்து, நன்மை தீமை என்ற இருவினைகளாகிய கயிறுகளால் கட்டி, பிறப்பு என்ற கடலில் வீசும்போது அவை நமசிவாய என்ற ஐந்தெழுத்தைப் பற்றி நின்றால், அது, அவர்களைப் பிறவிக் கடலிலிருந்து கரையேற்று கிறது. அத்தகைய வலிமை பெற்ற ஐந்தெழுத்து எம் நாவுக்கரசரை இந்தச் சாதாரண உவர்க் கடலிலிருந்து கரையேற்றுவதில் வியப்பு ஒன்றுமில்லை என்பது, உயரிய சாத்திரப் பதிவுகளுள் ஒன்றாக அமைகிறது.

சிவலிங்க வழிபாடு

திராவிட நாகரிகத்தின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் அடை யாளமாகத் திகழ்வது சிவலிங்க வழிபாடு. சிவலிங்க வழிபாடு, தமிழ்நாட்டில் பெரிதும் சிறந்திருந்தது. கடவுளை ஒரு வடிவத்தில் அமைத்து வழிபடுவது உருவ வழிபாடு. எந்த உருவமும் இல்லாது மனத்தளவில் நிறுத்தி வழிபடுவது உருவமற்ற அருவ வழிபாடு. இவ்விரண்டுக்கும் மேலான, ஓர் அரிய வழிபாட்டு நிலையைத் திராவிடர்கள் உருவாக்கினர். உருவத்தையும், அருவத்தையும் ஒருங்கிணைத்து 'அருவுருவம்' என்ற ஒரு புதிய நிலை. கண்டறியப்பட்டது. உருவமும் அன்று; அருவமும் அன்று; அவற்றின் வேறும் அன்று என்று நாட்டப்பட்ட இந் நிலைபற்றிய முதல் விளக்கம் சேக்கிழாரால் பெரிய புராணத்துள் தரப்பட்டது.

" காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம் "

என்ற வரிகள் சைவத்திற்குப் புதுவரவு; வரலாற்றுக் கொடை; சேக்கிழாரின் சமயப்பணிகளுள் குறிக்கத் தக்க ஒன்று.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அன்பு வழிபாட்டின் சிறப்பு

சைவம், வேத சாரமாக அமைந்த சமயம் என்பது சேக்கிழாரின் அடிப்படைக் கோட்பாடு. ஆகம நெறியையும் அவர், ஏற்றுப் போற்றுகிறார். ஆகம வழிபாட்டின் சிறப்புகளைப் பல நாயன்மார் புராணங்களுள் சிறந்தெடுத்து ஓதும் சேக்கிழார், கண்ணப்ப நாயனார் புராணத்துள் அன்பு வழிபாட்டுக்கு ஈடு இணை இல்லை என்று பேசுகிறார். காளத்திநாதன் கண்களில் குருதி பெருகிய போது, சிவகோசரரியாரின் அறிவு நெஞ்சம், 'இது இறைவன் நிகழ்த்தும் நாடகம்' என்று அமைதி கொள்கிறது. கண்ணப்பரின் அன்பு நெஞ்சம் பதைக்கிறது. பிற நாயன்மார் வரலாறுகளை, நூலாசிரியராக நின்று எழுதும் சேக்கிழார், கண்ணப்பர் வரலாற்றில் தாமும் கரைந்து போகிறார். கண்ணப்பரை 'என்னை ஆளும் கானவர்க்கு அரிய சிங்கம்' என்று பேசி நெகிழ்கிறார். கண்ணப்பர் செயல்களை

" அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்
அவனுடைய சொல்லெல்லாம் நமக்கு இனியவாம் என்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ "

என, ஆகம நெறி நிற்கும் சிவகோசரியாருக்குச் சிவன் எடுத் துரைப்பது, அன்பு வழிபாடே யாவற்றிலும் உயர்ந்தது என்பதை நிலைநாட்டும் பகுதியாகும்.

தோத்திரப் பகுதி

காப்பியம் ஒன்றைப் பாடப் புகுந்த சேக்கிழாருக்குக் கதை நடத்த வேண்டிய கடமை இருப்பதால், தேவார ஆசிரியர்களைப் போல், சிவ தோத்திரங்களைப் பாடும் வாய்ப்பு இலதாயிற்று. என்றாலும், அளவற்ற சிவ ஈடுபாடு கொண்ட சேக்கிழார், தேவாரப் பனுவல்களுக்கு ஈடான பல அரிய தோத்திரப் பாமாலைகளைத் தம் கூற்றாகவும் பாத்திரங்களின் கூற்றாகவும் அமைத்து மகிழ்ந்துள்ளார். 'உலகெலாம் உணர்ந்து' என்று தொடங்கும் வாழ்த்துப் பா முன்னரே குறிக்கப்பட்டது. தில்லை வாழ் அந்தணர் புராணத்தின் முதல் இரு பாடல்கள் நடராசர் துதியாகப் போற்றத் தக்க பொருள் பொதிந்த தோத்திரப் பாமாலைகளாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று,

" கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி, "

என அமைகிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அழகிய கவிதைகள்

எறிபத்த நாயனார் வரலாற்றில், பட்டத்து யானையால் சிவகாமி ஆண்டார் சிவனுக்குச் சாத்த எடுத்துச் சென்ற பூக் குடலை மண்ணில் சிந்தப்படுகிறது. சிவனை அறைகூவி முறையிட்டு அவர் அரற்றுகிறார். 'செப்பரும் துயரம் நீடிச் செயிர்த்து முன் சிவதா என்பார்' என்று கதை நடத்தும் சேக்கிழார், தோத்திரம் புனைய இடம் ஒதுக்கிக்கொள்கிறார். மூன்று நல்ல தோத்திரப் பாடல்களை இப்பகுதியில் காண முடிகிறது.

" களியானையின் ஈர் உரியாய் சிவதா
எளியார் வலியாம் இறைவா சிவதா
அளியார் அடியார் அறிவே சிவதா
தெளிவார் அமுதே சிவதா சிவதா. "

என்றும்,

" தஞ்சே சரணம் புகுதும் தமியோர்
நெஞ்சேய் துயரம் கெடநேர் தொடரும்
மஞ்சே என வீழ் மறலிக் கிறைநீள்
செஞ்சே வடியாய் சிவதா சிவதா "

என்றும் வருவனவும், இவை போல்வனவும் பல உள்ளன.

சேக்கிழாரின் சைவ சமயப் பணிகளுள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அரிய பணி ஒன்று உண்டு. தம் காலத்துக்கு முற்பட்ட சைவ-சமயத் தோத்திர நூல்களுக்கு அவரே ஒரு வரலாற்றுப் பின்புலத்தை உருவாக்கி அளிக்கிறார். மூவர் தேவாரங்களைப் பெரிய புராணத்தைப் படிக்காமல் ஒருமுறை படித்தறிந்தவர்கள் சேக்கிழார் காட்டும் வெளிச்சத்தோடு படிக்கும்போது முற்றிலும் வேறாக உணருவர். பல அரிய பதிகங்கள் பிறந்த ஊர், பதிகம் எழுந்த சூழல், பதிகத்தின் தனிச் சிறப்புக்கள், சந்தம், உரை விளக்கம், பண்கள், பாவகை எனப் பல அரிய செய்திகளைப் பெரிய புராணம் குறித்துச் செல்கிறது. சேக்கிழாருக்கு முற்பட்ட சைவ இலக்கிய வரலாற்றை உருவாக்கச் சேக்கிழாரைப் போல் உதவுவார் எவரும் இலர். ஒன்றிரண்டு செய்திகளைக் கண்டு, மேலே செல்லலாம்.

சமய இலக்கிய வரலாறு

காரைக்கால் அம்மையார் வரலாற்றில் பல குறிப்புக்களைச் சேக்கிழார் பதிவு செய்கிறார். பேய்வடிவம் வேண்டிப் பெற்றவுடன், முதன் முதலாகக் காரைக்கால் அம்மையார் பாடியது அற்புதத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருவந்தாதி, இரண்டாவதாகத் திருஇரட்டை மணிமாலை என்பது சேக்கிழார் பதிவுகளால் புலனாகின்றன.

" உற்பவித்து எழுந்த ஞானத்து ஒருமையின்
உமைகோன் தன்னை
அற்புதத் திருவந்தாதி அப்பொழுது
அருளிச் செய்வார் "

என்றும், 'ஆய்ந்தசீர் இரட்டைமாலை அந்தாதி எடுத்துப் பாடி' என்றும் வரும் குறிப்புக்கள் நோக்கத்தக்கன. இறைவன் அம்மையாரை 'வட திருவாலங்காடு சேர்ந்து எம்மைப் பாடுக' என்று கேட்டுக்கொண்டார் என்றும், அவ்வாறே, அங்குச் சேர்ந்து வழிபட்டு, அம்மையார் மூத்த திருப்பதிகம் அருளினார் என்றும் சேக்கிழார் குறிக்கிறார்.

" நீடுவாழ் பழனமூதூர் நிலவிய ஆலங்காட்டில்
ஆடுமா நடமும் நீ கண்டு ஆனந்தம் சேர்ந்து எப்போதும்
பாடுவாய் நம்மை "

என்றும்,

" ஆலங்காடு அதனில் அண்டமுற நிமிர்ந்து ஆடுகின்ற
கோலங்காண் பொழுது 'கொங்கை திரங்கி' என்றெடுத்து அங்கு
மூலம் காண்பரியார் தம்மை மூத்த நற்பதிகம் பாடி "

என்றும் வரும் தொடர்கள், சைவ - இலக்கிய வரலாற்றை உருவாக்கும் நல்ல முதன்மைத் தரவுகளாக அமைவதை அறிய முடிகிறது.

வரலாற்று மூலங்கள்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய காரிநாயனார், தமிழ்க் கோவை நூல் ஒன்று பாடினார் என்ற குறிப்பு அவர் வரலாற்றில் காணப்படுகிறது. அக்கோவை நூல் 'காரிக்கோவை', என்று அறியப்பட்டது. இன்று அந்நூல் கிடைத்திலது. அவ்வாறே ஐயடிகள் காடவர் கோன் என்பார், சிவத்தலங்கள் பலவற்றுக்கும் சென்று வழிபட்டு, ஒவ்வோர் வெண்பாப் புனைந்தார் என்ற சேக்கிழாரின் பதிவு, 'சேத்திரக் கோவை வெண்பா' என்ற நூல் வரலாற்றை அறிய உதவுகிறது. கழறிற்றறிவார் என்று குறிக்கப்படும் சேரமான் பெருமாள் நாயனார் அருளிய திருவுலாப்புறம்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வேண்டியவாறு, திருக்கயிலையில் சிவன் முன்னர் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்றும், திருக்கயிலையில் அக்காலை இருந்த மாசாத்தனார் என்பார் அந் நூலைக் கேட்டு, நிலவுலகில் அந்தணர்கள் வாழும் திருப்பிடவூரில் வெளிப் படுத்தினார் என்றும் சேக்கிழார் பதிவுகள் அமைகின்றன.

திருமந்திரத் தோற்றம்

திருமூல நாயனார் வரலாற்றில் திருமந்திர மாலையின் தோற்றப் பின்புலம் விரித்துரைக்கப்பட்டுள்ளது. திருவாவடுதுறையில் ஓர் அரச மரத்தின்கீழ் அமர்ந்து, ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் ஆண்டுகளில் தமிழ் மூவாயிரம் பாடினார் என்றும், அந்நூலுக்குப் பெயர் திருமந்திரமாலை என்றும், அது ஞானம் முதலிய நான்கு நெறிகளை விரித்துரைப்பது என்றும் சேக்கிழார் குறித்துள்ளார்

" ......உலகத்தோர் உய்ய
ஞானம் முதல் நான்கும் மலர் நல் திருமந்திரமாலை
பான்மை முறை ஓராண்டுக்கு ஒன்றாகப் பரம்பொருளாம்
ஏன எயிறு அணிந்தாரை 'ஒன்றவன்தான்' என எடுத்து "

என்றும்,

" முன்னிய அப்பொருள்மாலைத் தமிழ் மூவாயிரம் சாத்தி
மன்னிய மூவாயிரத் தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்து "

என்றும் வரும் திருமூலநாயனார் வரலாற்று வரிகள் திருமந்திர நூல் வாலாறு தொகுக்கத் துணையாக அமைகின்றன.

மூவர் தேவாரச் சிறப்புரைத்தல்

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாறுகளில் இத்தகு அரிய குறிப்புக்கள் நூற்றுக் கணக்கில் அமைந்துள்ளன. அவை தனியே ஆராயத்தக்க பெருஞ்சிறப்புடையன. ஒன்றிரண்டைமட்டும் கண்டு மேற் செல்லலாம். நாவரசரின் முதல் பதிகம் 'கூற்றாயினவாறு' என்ற தொடக்கமுடையது: அது திருவதிகைவீரட்டானத்தில் பாடப் பெற்றது; தமிழ் பாடும் உணர்வை அவருக்கு அங்குத்தான் இறைவன் வழங்கினான். அது பாடிய பின்னரே நாவரசரைப் பற்றி நின்ற சூலை நோய் நீங்கியது. அப்பதிகம் எவ்விதக் குறையும் இல்லாத 'கோதில் பதிகம்' என்றெல்லாம் நாவரசர் வரலாற்றில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேக்கிழார் குறித்துள்ளார். பொதுப் பதிகங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டு, மறுமாற்றத்திருத்தாண்டகம் என்று குறிக்கப்படும் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற பதிகம் பல்லவனின் அரச சுற்றத்தார் அழைத்த பொழுது பாடப்பட்டது என்பதைச் சேக்கிழார் குறித்திடவில்லை யெனில் அறிய இயலாது. 'மாசில் வீணையும்', மற்றும் 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' என்னும் பதிகங்களின் தோற்றம் குறித்தும் சேக்கிழார் தரும் பதிவுகள் பெரும் பயனாய் அமைந்து, அப்பதிகங்களுக்குப் புதிய ஒளி சேர்த்தன.

சம்பந்தர் பதிக அமைப்பு விளக்கம்

திருஞானசம்பந்தர் பதிகங்களில் பதினொரு பாடல்கள் இடம் பெற்றிருக்கும். அவற்றுள் கடைசி நான்கு பாடல்களிலும், நிரலே, ஒரே கருத்து மட்டும் பதிவு செய்யப்பட்டிருக்கும். எட்டாம் பாட்டில் இராவணன் கயிலாயத்தைப் பெயர்த்தமை, ஒன்பதாம் பாட்டில், மாலும் அயனும் அடி முடி தேடி இளைத்தமை, பத்தாம் பாட்டில், சமண-பௌத்தர்கள் இயல்பு, பதினொராம் பாட்டில் பதிகப் பயன் என்பன இடம் பெற்றிருக்கும். இப்பதிக அமைப்பின் நுட்பங்களைச் சேக்கிழார் ஓர் உரையாசிரியரைப் போல் திகழ்ந்து விரித்துரைக்கிறார். இராவணனைப்பற்றிய குறிப்பு அவனை இகழவோ, புகழவோ அமைந்தது அன்று. கயிலாய மலையைப் பெயர்த்து எடுத்துச் சிவன் கால் விரலால் ஊன்ற, அதன் அடியில் சிக்குண்டு, பிழை உணர்ந்து இராவணன் 'சாமகானம்' பாடச் சிவன் அருள் பாலித்தார் என்பதற்குப் பின்னாக, ஓர் அருளிப்பாடு உண்டு என்பதைச் சேக்கிழார் பதிவு செய்கிறார்.

" மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணைக் கைக்கொள்ளும் எனக் காட்ட "

என்ற அரிய தொடர், குற்றம் பொறுக்கும் குணத்தினன் இவன் என்பதை, இனங்காட்டி நிற்கிறது. இது சமயத் துறையில் நம்பிக்கையூட்டும் அரிய முயற்சி. அன்பில்லாது, ஆணவம் கொண்டார்க்குச் சிவனருள் கிட்டாது என்பதை மால் அயன் வரலாறு பேசிச் சம்பந்தர் குறிப்பிக்கிறார் என்பதும், ஒன்பதாம் பாட்டின் விளக்கமாகிறது. சமண-பௌத்த நெறிகள் சிவநெறி போல் உய்தி தாரா என்பதும் பத்தாம் பாடல்களின் உள்ளீடு என்பது சேக்கிழாரால் விளக்கப்பட்டுள்ளது. பதினொராம் பாடல்களுக்கு ஆசிரியர் சேக்கிழார் 'திருக்கடைக்காப்பு' என்று பெயர் சூட்டுகிறார். மதுரையில் சைவ சமயத்தை நிலை நாட்டத் திருஞானசம்பந்தர்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அருளிய அரிய பதிகம் 'வாழ்க அந்தணர்' என்று தொடங்கும். ஏடு எதிர் ஏற இறுதி வெற்றி தந்த பதிகம் இது. இப்பதிகத்தின் அருமைப்பாடு கருதி அப்பதிகப் பொருட் சிறப்புக்களையெல்லாம் அப்பதிகத்துக்கு உரை காண்பார் போலச் சேக்கிழார் வ ித்துரைப்பது சைவத்திற்குக் கிடைத்த அரிய நிதியமாக அமைகிறது.

அகச்சான்று காட்டுதல்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் 'தில்லை வாழ் அந்தணர்' - என்ற தொடக்கம் கொண்ட பதிகம் திருவாரூரில் பாடப்பெற்றது என்பதுவும், சுந்தரர் வேண்டியவாறு சிவனே இப்பதிகத்திற்கு முதல் அடி எடுத்துக் கொடுத்தான் என்பதுவும் இப்பதிகத்திற்குத் திருத்தொண்டத் தொகை என்பது பெயர் என்பதுவும் சேக்கிழார் தரும் வரலாற்றுக் குறிப்புக்களாக அமைகின்றன. திருக்கோலக்காவில் திருஞானசம்பந்தருக்குச் சிவன் பொற்றாளம் வழங்கிய செய்தி திருஞானசம்பந்தர் வரலாற்றில் கூறப்பட்டது. சுந்தரர் பின்னாளில் திருக்கோலக்கா சென்று பதிகம் பாடியபோது, தம் பதிகத்தில் சிவன் ஞானசம்பந்தருக்குப் பொற்றாளம் வழங்கிய கருணையை வியந்து போற்றிப் பாடினார். தாம் ஞானசம்பந்தர் வரலாற்றில் திருக்கோலக்கா நிகழ்வு தொடர்பாகச் செய்த பதிவை உறுதி செய்ய விரும்பும் சேக்கிழார், சுந்தரர் தேவாரத்தைத் துணைக் கொண்டு,

" திருஞானசம்பந்தர் திருக்கைகளால் ஒற்றிப்
பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனார் கண்டிரங்கி
அருளாலே திருத்தாளம் அளித்தபடி சிறப்பித்துப்
பொருள்மாலை திருப்பதிகம் பாடியே போற்றிசைத்தார் "

எனக் கூடுதல் சான்று காட்டி மகிழ்கிறார்.

மரபுக்கேற்ற தொண்டு

வேதமும் ஆகமமும் கற்றுத் தேர்ந்து, பூவும் நீரும் கொண்டு சென்று, திருக்கோயில் வழிபாடு நிகழ்த்துவோருக்கே சிவன் அருள் கிட்டும் என்ற நம்பிக்கை நேரிதன்று என்று சேக்கிழார் கருதுகிறார். அன்பு நிறைந்த நெஞ்சினராய் ஐந்தெழுத்து ஓதி, மரபுக்கு ஏற்ற தொண்டு செய்வார் யாவருக்கும் சிவனருள் கிட்டும் என்பதைச் சேக்கிழார் உறுதி செய்கிறார். திருநீலகண்டத்துக் குயவனார் ஓடளித்து அருள் பெற்றமை - திருநாளைப் போவாராகிய நந்தனார் யாழுக்கும், வீணைக்கும் நரம்புகள் அளித்தும், அருச்சனைக்குக் கோரோசனை அளித்தும் வாழ்வு பெற்றமை-முதல் மீனைச்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிவனுக்கு என்று கடலில் விட்டுச் சிவன் தாள் சேர்ந்த அதிபத்தரின் தொழிலுக்கு ஏற்ற தொண்டின் மேன்மை-தயிலவினைத் தொழில் செய்த கலிய நாயனார் விளக்கீட்டுக்கு எண்ணெய் வழங்கி ஞானம் பெற்றமை-துணி நெய்யும் தொழில் மேற்கொண்டிருந்த நேசநாயனார், அன்பர்களுக்குக் கீளும் கௌபீனமும் அளித்துத் திருவருள் கூடியமை போல்வனவாகிய பல பதிவுகளில் இவ்வுண்மையைச் சேக்கிழார் நிறுவிக் காட்டுகின்றார்.

கல்வியின் பயன்

கல்வியின் நிறைந்த பயன், அறிவைக் கூர் தீட்டிக் கொள்ளுதலே ஆகும். அறிவின் கூர்மையைக் கொண்டு, உலகியல் இன்பங்களை நாடாது மேலான பரம்பொருளைத் தேடிக் காணுதல் வேண்டும். வள்ளுவரும்,

" கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் "

என வினாத் தொடுத்துச் சிந்திக்க வைக்கிறார். சேக்கிழார்,பெரிய புராணத்துள், கல்வியின் நிறைந்த பயன், சிவன்கழல்களைச் சார்தலே என்பதை உறுதிபட எடுத்துரைக்கிறார். சிறுத்தொண்ட நாயனார், கலைகள் பல கற்றுத் தேர்ந்தார். கற்றலும் அறிதலும் கடந்து உணர்தல் நிலை வந்த போது கல்வியின் பயன் சிவன் கழல் சேர்தலே என்பதை நன்கு உணர்ந்தார். இதனைச் சேக்கிழார்,

" உள்ளம் நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளி வடித்து அறிந்த பொருள் சிவன் கழலில் செறிவன்றே "

எனப் பதிவுசெய்து காட்டுகிறார்.

" அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடும் கழலே "

என்றும்,

" செய்யுள் நிகழ் சொல் தெளிவும் செவ்விய நூல் பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே எனத் துணிந்து விளங்கி ஒளிர்
மைஅணியும் கண்டத்தார் மலர் அடிக்கே ஆளானார் "

என்றும்,

" தென் தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றின் இடை நடம் புரியும் வள்ளலையே பொருளாக'க் "

கொண்டன என்றும் வரும் பெரிய புராணப் பகுதிகள் பெரிதும் சிந்தனைக்கு விருந்தாக அமைவன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தாம் படைக்க முனைந்த ஒரு பெருங்காப்பியத்தை ஏதிடாகக் கொண்டு, இயன்றவாறெல்லாம், காப்பியத்தோடு இயைபுடைய தாகிய தம் தாய்ச் சமயமாகிய சைவத்தை உயர்த்திப் பிடிக்கும் பணியைச் சேக்கிழார் பெரிய புராணத்துள் நிறைவாகவே செய்துள்ளார். சடங்குகள் நிறைந்த ஒரு சமய வாழ்வை விடுத்து, உயிர்ப்புடைய மனித நேயம் மிக்க சமய வாழ்வைச் சைவ சமயிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற தம் உள்ளக் கிடக்கையைச் சேக்கிழார் நிறைவாகவே தம் நூலுள் பதித்துள்ளார். சைவ சமயப் பணிகளாகக் குறிக்கத் தக்க வேறு பலவும் பெரிய புராணத்துள் ஆங்காங்கே உள்ளன. இன்றியமையாத சில முதன்மைக் கூறுகள் மட்டும் இங்கே எடுத்துக் காட்டப்பட்டன. விரிவான நூல் செய்யும் காலை அவையெல்லாம் விளக்கம் பெறும்.

❀

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

4. சமூகப் பணிகள்

சமயமும் - சமூகமும்

சேக்கிழாரின் வாழ்வையும் பணியையும், இவற்றின் இடையே இழையோடும் அவரின் உயிர்ப்புடைய வாசகங்களையும் கண்டு தெளியும் முயற்சியில் இரண்டாவதாகிய அன்னாரின் பணிகளுள் ஒன்றாகிய சமயப்பணிகளை ஆராய்ந்த நாம், இனி அவர்தம் சமூகப் பெரும்பணிகளை இனங்கண்டு மகிழலாம். கோயிலுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த சமய வாழ்வைச் சமூக வீதிக்குக் கொண்டு வர முயன்ற சேக்கிழாரின் முதல் முயற்சிகள் முன்னரே அடையாளப்படுத்தப்பட்டன. சமயமும், சமுதாயமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளாமல் தனித்தனியே இயங்குமாயின், அதனால் இரண்டுக்கும் வரு பயன் ஒன்றுமில்லை. சமூகத்தின் ஓர் அங்கமாகவே, சமயத்தைக் கருதவேண்டும். சமூகம், சமயத்திற்கு உரிய காவலும் அதன் வளர்ச்சிக்கு ஆக்கமும் தரவேண்டிய கடப்பாடு உடையது. சமயம், சமூகத்தில் நல்லறங்களும் ஒழுக்கங்களும் சிறக்க அரண் அமைத்தல் வேண்டும்.

சேக்கிழார் சிந்தனைகள்

சமயங்கள் மனிதவாழ்வுக்கு வேண்டத்தக்கன என்று கண்டு தெளிந்த நல்லறங்களில் பல காலப்போக்கில் சமூகச் சட்டங்களாக மாறுகின்றன. சமூகத்தைச் சட்டத்தின் பெயரால், அமைச்சர் முதலியோர் துணையுடன் அரசன் அல்லது ஆட்சித் தலைவன் நெறிப்படுத்துகிறான். இன்னொரு பக்கத்தில் சமயம் நல்லறங்களின் பெயரால் நல்ல குருமார்களின் வாயிலாகச் சமூகம் நெறி நிற்கத் துணை செய்கிறது. ஆட்சித் தலைவன் ஒட்டுமொத்தச் சமூக நிலத்தை முதன்மையாகக் கருதுகின்றான். சமயம், ஒவ்வொரு தனி மனிதனையும் நல்வழிப்படுத்துவதன்வழி சமூக நலத்தைப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பேணி வளர்க்கின்றது. சமய - சமூக நல் இணக்கம் வேண்டும் என்று கருதினாலும் அவை ஒன்றை ஒன்று ஆட்சி செய்ய முயல்வதைச் சேக்கிழார் விரும்பவில்லை. அரசில், சமயம் ஆதிக்கம் செலுத்துவதை முற்றாகச் சேக்கிழார் வெறுத்து ஒதுக்குகிறார். அது போல், தனிமனிதன்மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமை ஆட்சியாளர்களுக்குக் கூடாது என்பதிலும் அவர் திடமான கருத்துக் கொண்டுள்ளார்.

அறநெறிப் பாடம்

சமய நூலாசிரியராக இருந்துகொண்டு, தாம் ஆட்சித் தலைமை பூண்டிருந்த அமைச்சர் என்பதையும் கருத்தில் கொண்டு, சமூகத்தில் நல்லாட்சி நிகழ நல்ல அறிவுரைகளைச் சேக்கிழார் வழங்குகிறார். ஆட்சிக் கட்டில் என்பது, இனிமை பயக்கும் ஒன்றன்று என்பதை அவர் உணர்ந்தேயிருக்கிறார். அது தெரிந்தும், அதன்மேல் அமரத் துணிவாருக்குச் சேக்கிழார், அறநெறிப் பாடம் நடத்துகிறார். அவர், வள்ளுவர், பழைய மனுப் போல்வாரைப் போல், அறநூல் ஆசிரியரும் அல்லர். பொருள் நூல் உரைத்த கௌடில்யர் போல்வாரும் அல்லர். சேக்கிழார், ஒரு சமயநூல் ஆசிரியர். தம் எல்லை இன்னது என்பதை வரையறுத்துக்கொண்டு, அதனுள் நின்று, அவர் வெளிப்படுத்தும் சமூக அறவுரைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. சமண, பௌத்த மதங்கள்மீது காட்டுகின்ற சேக்கிழாரின் கோபம், தத்துவத் தொடர்பானது அன்று. அம்மதங்களின் உயரிய கொள்கைகளைப் போர்வை யாக்கிக்கொண்டு, மறைந்து அவற்றுக்கு எதிராகச் செயற்படும் போலிச் சமயவாதிகளையே அவர் சாடுகிறார். அவை இரண்டும் தமிழர் கலை-கலாசாரம் மற்றும் மொழி இவற்றின்மீது ஆதிக்கம் செலுத்துவதைச் சேக்கிழார் ஏற்க மறுக்கிறார்.

சமூகக் கொடைகள்

தம் காப்பியத்தின் தொடக்கத்திலேயே ஒரு நாடாளும் மன்னன் அருள் நெஞ்சம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதைச் சேக்கிழார் வற்புறுத்தத் தொடங்கிவிடுகிறார். தாம் அமைச்சியற்றும் சோழர் குலத்தைச் சிறப்பிக்கும் கருத்திருக்குமானால், சேக்கிழார் மனுநீதிச் சோழன் வரலாறு அல்லாத ஒரு வரலாற்றைத் தேர்ந்து கொண்டிருக்க முடியும். ஆட்சியாளன், அறநெஞ்சம் இல்லாத கொடியவனாக இருந்தால், சமய வாழ்க்கை உரிய சிறப்பினைப் பெறுதல் இயலாது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவன் நெஞ்சில் ஈரம் தங்கியிருந்தால்தான் சமயம் தன் பெருமிதங்களை நிலை நாட்டிக் கொள்ள இயலும். மனுநீதிச் சோழன் வரலாறு வாயிலாக ஆட்சியாளர்களுக்கு அவர் வழங்கும் அறவுரைகள் சைவத்தின் பெயரால் முன்வைக்கப்பட்ட சமூகக் கொடைகளாகும்.

புதுவரவு

மனுவேந்தன், சூரிய மரபில் வந்தவன். அக்காலை ஆட்சி செய்திருந்த அநபாயனின் குல முதல்வன். அவன், உலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் தலைவன் என்று உரையாமல், சேக்கிழார் மனு வேந்தனை,

" மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கு எல்லாம்
கண்ணும் ஆவியுமாம் பெருங்காவலன் "

எனக் கூறி, ஆட்சியாளன் உயிர்க்குலத்திற்கெல்லாம் உறுப்புகளி லெல்லாம் சிறந்த கண்களாகவும், அவற்றின் உள்ளே இயங்கும் ஆவியாகவும் சுட்டுவது வியப்பாக்குகிறது. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று அவனை உயிராகக் கூறும் மரபொடு அவன் கண்கள் வழியாகவே சமூகம் யாவற்றையும் காணும் என்ற உண்மை உணர்ந்தவராய், அவனைக் கண் போன்றவன் என்று குறிப்பது ஒரு புதுவரவாகவே நிற்கிறது.

தமிழர் பெருமிதம்

மனுவேந்தன் நாடாண்ட திறம் கூறவந்த சேக்கிழார், அவன் ஆட்சித்திறத்தைப் போற்றி உரைக்கிறார்:

" அறம் பொருள் இன்பமான அறநெறி வழாமல் புல்லி
மறம் கடிந்து அரசர் போற்ற வையகம் காக்கும் "

என்பன சேக்கிழாரின் பதிவுகள். அறம் முதலிய மூன்றன்வழி, மன்னன் தானும் நின்று, தன் சமூகத்தையும் நிற்கவைக்க வேண்டிய கடப்பாடு உடையவன். நாட்டில் அறனல்லாத மறச் செயல்கள் நிகழாமல் காக்கும் கடப்பாடும் அவனுக்கு உண்டு. பிறநாட்டு அரசர்கள் போற்றுமாறு அன்னான் ஆட்சி அமைதல் வேண்டும் என்பன சேக்கிழாரின் விருப்பங்கள். மனு வேந்தனின் அளப்பரிய உயிர் இரக்கம் குறித்த செய்திகள் முன்னரே விரிவாக விளக்கப்பட்டன. தொன்மரபுகளை உடைத்தும், பழைய மனுநீதிக்கு மேலான புது நீதிநெறி ஒன்றை நிலைநாட்டியும்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவன் ஆற்றிய செங்கோல் ஆட்சி தமிழர்களின் பெருமிதங்களில் ஒன்றாக நிற்கிறது. 'நீ யார்' என்று கேட்ட பாண்டியன்முன், நான் மனு ஆண்ட நாட்டுக்குச் 'சொந்தக்காரி' என்று கண்ணகியைப் பேசவைத்த சமணம் சார்ந்த இளங்கோவடிகளை நாம் நினைவு கூரவேண்டும்.

ஐந்து வகை அச்சங்கள்

பெரிய புராணத்துள் வரும் ஆட்சியாளர்க்கான அறிவுரைகள் பலவற்றிலும் சிறந்தது, மனுச்சோழன் வரலாற்றில் வரும் 'மாநிலங் காவலன் ஆவான்' என்று தொடங்கும் பாடல். இப் பாடலைத் தம் கூற்றாகவோ அமைச்சர் பெறும் அறிவுரையாகவோ அமைக்காமல் நீதி உணர்ந்த அரசன் ஒருவன் சமூகத்திற்கு உரைப்பதாக அமைத்த சேக்கிழாரின் சமூக நலப்பண்பு வியப்பூட்டுகிறது. நாடாளும் அரசன் ஒருவன் நாடு காக்கும் காலைத் தன்கீழ் வாழும் உயிர்க் குலங்களுக்கு ஐந்துவகைக் காவலை உறுதி செய்யவேண்டு மென்கிறது அந்தப் பாடல். 'ஆன பயம் ஐந்து', என்று அவர் குறிக்கும் அழகிய பாடல்,

" மாநிலங் காவலன் ஆவான் மன்உயிர் காக்கும் காலைத்
தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தரல்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ "

என இவ்வாறு அமைகிறது. உலக வரலாறுகளை உற்று நோக்கி அறிவார்களுக்கு மேற்குறித்த ஐந்து காவலில் ஒன்று குறைந்த காலை, உயிர்க்குலங்களுக்கு ஏற்பட்ட பேரழிவுகள் புரியவே செய்யும்!

சமூக நீதி

ஒரு குலம், ஓர் இனம் என இவற்றிற்கு ஒரு நீதி உ்ரைக்கும் நீதி நூல்களை அறநெஞ்சம் கொண்ட அறிஞர் உலகம் போற்றல் செய்யாது. மனிதகுலம் முழுமைக்கும் ஒரே நீதி என்பதுதான் நாகரிக உலகின் அடையாளமாகக் கருதப்படும். ஒரே குற்றம் புரிந்த ஒருவனுக்கு ஒரு தண்டனை; அதே குற்றத்தைச் செய்த மற்றொருவனுக்கு அவன் பிறந்த குல உயர்ச்சி காரணமாக இல்லை என்றால், அது அறநெறியும் ஆகாது; அதனை ஏற்பாரும் இலர். தன் மகனே கன்றின் சாவுக்குக் காரணம் என்பது அறிந்து 'உரிய தண்டனை இவனுக்கு யாது' என்று மனுச்சோழன் அமைச்சர்களைக் கேட்கிறான். அவர்கள், அரச நீதி இது என்னாது, அந்தணர்கள் விதித்த முறை காட்டிப் பிராயச்சித்தம் கூறுகின்றனர். மன்னன் சினக்கிறான்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'என் மகன் செய்த குற்றத்திற்குப் பிராயச்சித்தம் செய்துவிட்டு, இதே குற்றம் புரியும் என் குடிமகன் ஒருவனுக்கு நான் தண்டனை தந்தால், என் நீதி முறை இகழப்படும் என்பதை நீங்கள் ஏன் அறியவில்லை' என்று வினவுகிறான். சேக்கிழார் பதிக்கும் அரிய சமூக நீதிப் பகுதி இது:

" என் மகன் செய் பாதகத்துக்கு
இருந்தவங்கள் செய இசைந்தே
அன்னியன் ஓர் உயிர் கொன்றால்
அவனைக் கொல்வே னானால்
தொன்மனு நூல் தொடைமனுவால்
துடைப்புண்டது எனும் வார்த்தை
மன்னுலகில் பெறமொழிந்தீர்
மந்திரிகள் வழக்கு என்றான் "

சோழநாட்டில், ஒருவனை ஒருவன் கொன்றால், கொன்றவனுக்கு மரண தண்டனை. 'அதுவும் ஓர் உயிர் இதுவும் ஓர் உயிர்' என்பது உணரப்பட்டால் நீங்கள் தெரிவிக்கும் பிராயச் சித்தம் உங்களுக்கே நகைப்பைத் தரும் என்பது வேந்தன் உள்ளம் என்று அறியமுடிகிறது.

அரசியல் அனுபவம்

ஆட்சித் தலைவன் நீதி வழங்கும்போது உறவு, நட்பு எனப் பார்த்தல் அறமன்று. அறம், தன் பாதையில் பயணிப்பதற்குத் தடைபயக்கும் அதிகாரம் ஆட்சியாளனுக்கு இல்லை. அதனை நாடாளுவோன் உணர்தல் வேண்டும். மனுநீதிச் சோழன், அதனை நன்கு உணர்ந்திருந்தான். இவ் வுணர்வு, மனு நீதி அறிந்த அரசியல் அறிவால்மட்டும் வாராது, சிவன் தாள் மலர்களில் கொண்டிருந்த பத்திமையின் ஊற்றத்தால் சிறந்தது என்று கோடலே நியாயமானது. இவற்றையெல்லாம் உள்ளடக்கிய அரிய சிறப்பமைந்த பாடல் ஒன்று மனுச் சோழன் வர்லாற்று நிறைவில் அமைகிறது.

" ஒருமைந்தன் தன் குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்
தருமம் தன் வழிச் செல்கை
கடனென்று தன் மைந்தன்
மருமம்தன் தேராழி.
உறஊர்ந்தான் மனு வேந்தன். "

என்று வியந்து நின்றதோடு அமையாமல், சேக்கிழார்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" அருமந்த அரசாட்சி அரிதோ
மற்று எளிதோ தான் "

என்று வினாத் தொடுக்கிறார். அறநெறி நின்று ஆளவேண்டும் என்று வற்புறுத்திய சேக்கிழார், அது எளிய செயல் அன்று என்றும் குறிப்பித்தல் அவரது அரசியல் அனுபவத்திற்குச் சான்றாக அமைகிறது.

ஆட்சியாளர் பண்பு

சமுதாய உணர்வின்றிக் கதை நடத்த நினைத்திருந்தால், மேற்குறித்த பதிவுகள் ஒன்றுமின்றி, அவரால் கதை நடத்த முடிந்திருக்கும். முடிமன்னர் ஆட்சிக்காலத்திலேயே ஆட்சியாளர் களுக்கு அறிவுரை கூற ஒரு தகுதியும் துணிவும் வேண்டும். அவை, சேக்கிழாருக்கு அமைந்தே இருந்தன என்பதை அவருடைய பதிவுகள் நிலைநாட்டி நிற்கின்றன.

திருநாவலூர்த் திருவீதியில், சிறு தேர் உருட்டி விளையாடும் நம்பியாரூரரின் அழகில் மயங்கிய நாடாளும் மன்னன் நரசிங்க முனையரையன் அக்குழந்தையை மகன்மை கொள்ள விழைகிறான். விரும்பியிருந்தால் கட்டளையிட்டு அக்குழந்தையை அடைந்திருக்க முடியும்! மன்னன் அணுகுமுறையில் காணப்பட்ட ஆட்சியாளர் பண்பாட்டைச் சேக்கிழார் இனம் காட்டுகின்றார்

" நரசிங்க முனையர் என்னும்
நாடுவாழ் அரசர் கண்டு
பரவரும் காதல் கூரப்
பயந்தவர் தம்பால் சென்று
விரவிய நண்பினாலே
வேண்டினர் பெற்றுத் தங்கள்
அரசிளங் குமரர்க் கேற்ப
அன்பினால் மகன்மை கொண்டார் "

என்ற அழகிய பாடலில் வரும் 'பயந்தவர் தம்பால் சென்று' என்றும், 'விரவிய நண்பினாலே வேண்டினர் பெற்று' என்றும் வரும் தொடர்கள் ஆட்சியாளர் பண்பாட்டிற்குச் சான்று கூறி நிற்பன.

எறிபத்தர் வரலாறு

எறிபத்த நாயனார் அருள் வரலாற்றில் சேக்கிழாரின் பதிவுகள் நம்மை விண்ணில் எழச் செய்கின்றன. பெருமிதம் நம்மைத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

தொற்றிக்கொள்கிறது. சிவப்பணி செய்துவந்த அந்தணர் ஒருவரின் பூக்குடலையைப் பறித்துப் பட்டத்து யானை மண் மீது சிந்திவிடுகிறது. கருவூரில் சிவனடியார்களுக்குப் பாதுகாவலராக வாழ்ந்திருந்த எறிபத்தர் என்பார் அரச யானை என்றும் பாராது, அதனையும் பாகர் இருவரையும் காவலர் மூவரையும் வெட்டி வீழ்த்துகின்றார். புகழ்ச் சோழன் அறிந்து, நாற்பெரும் படையுடன் வருகிறான். பகைப் படையைக் காணாமல், யானை அருகே நின்றிருந்த சிவனடியாராகிய எறிபத்தரைக் கண்டு, அவர்தான் யானையை வெட்டியவர் என்று உணராமல் சினத்துடன் அமைச்சர்களை நோக்கி, 'யார் வெட்டியவர்' என்று வினவுகிறான். அமைச்சர்கள் நடுந்தன கூறி நிற்கின்றனர். பட்டத்து யானையை வெட்டிய செயல் அரசனின் தன்மானத்தோடு இணைந்தது. அவன், முறையாக வெட்டியவர் ஒரு சிவனடியார் என்று அறிந்த பிறகும் சினந்து எறிபத்தருக்குத் தண்டனை வழங்கியிருக்க வேண்டும். மன்னன் நீதியும் சைவம் சார்ந்த அறநெறியும் கற்றவன். அவன் நெஞ்சில் சினம் மறைகிறது.

வியப்பூட்டும் மன்னன்

சமயவாதிகள்பால் ஆட்சியாளர்கள் காட்ட வேண்டிய மரியாதை பெரிது. சமய வெறி கொள்ளாது, சமயம் சார்ந்த நல்லறிவு கொண்ட ஆட்சியாளர் சிந்தனையும் செயல்களும் எவ்வாறிருக்கும் என்பதைச் சேக்கிழார் இனங்காட்டுகின்றார். யானையை வெட்டிய எறிபத்தர்மீது கொண்ட சினம் நீங்கப் புகழ்ச் சோழன் தன்னுள் ஒரு நினைவை முன்னிறுத்துகிறான். ஒரு சிவ பக்தர் ஒரு யானையை வெட்டியுள்ளார் என்றால், அதில் ஒரு நியாயம் இருக்கவே செய்யும். ஏன் எனில், சிவனடியார்கள் நெஞ்சில் உண்மையும் நியாயமும் குடிகொண்டிருக்கும். யானை, ஏதோ ஒரு பிழை செய்திருக்க வேண்டும். இல்லையென்றால், இச்செயலை நாயனார் செய்திருக்க மாட்டார் என்று திடமாக நம்புகின்றான்.

" குழையணி காதினானுக்கு
அன்பராம் குணத்தின் மிக்கார்
பிழைபடின் அன்றிக் கொல்லார்
பிழைத்தது உண்டு "

என்று தெளியும் அறிவில், ஆட்சியாளர்கள் சிவனடியார்கள்பால் கொண்டிருந்த உயர் மதிப்பின் அளவை அறிய முடிகிறது. மேலும், அவன் உள்ளே ஒரு மகிழ்ச்சி பிறக்கிறது. சேக்கிழார் பதிவு நம்மைச் சிலிர்க்க வைக்கிறது. 'நல்ல வேளை: சிவனடியாருக்கும், யானைக்கும் நடைபெற்ற போராட்டத்தில் யானை வீழ்ந்தது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

யானையால் சிவனடியாருக்கு ஒரு தீங்கும் வாராது போயிற்றே! அது நான் செய்த தவம் போலும்' என்று எண்ணி, நிறைகிறான். வியப்பூட்டும் மன்னர் பண்புகளுள் இதுவும் ஒன்று.

அன்பின் முடி

படைகளை ஓரிடத்தில் நிறுத்திவிட்டுச் சோழ மன்னன், உடைவாளோடு எறிபத்தர் இருக்கும் இடத்திற்குத் தனியே நடந்து சேர்கிறான். படை வரவும், மன்னன் வரவும் நாயனார் கண்டு, மேலும் சினத்தின் உச்சிக்குச் சென்றிருக்க வேண்டும். அருகில் வந்து, 'என்ன நடந்தது' என்று மன்னன் வினவுகிறான். எறிபத்தர் நடந்தன விரித்துரைக்கிறார். மன்னன், பண்பின் உச்சிக்கே சென்றுவிடுகிறான். எறிபத்தரை நோக்கி, 'யானை, பாகர், காவலர் செய்த பிழைக்கு, அன்னாரைக் கொன்றது போதாது. அந்த யானைக்கு, உரிமையுடையவன் நான். ஆதலால், என்னையும் நீங்கள் கொல்ல வேண்டும்' என்று பேசி, நாயனாரைக் கரையவைக்கிறான். 'நீங்கள் கையில் வைத்திருக்கும் கருவியோ, சிவனுக்கு உகந்த மழு ஆயுதம் ஆகும், அதனால் என்னைக் கொல்லாமல் இதோ, இந்த உடை வாளால் என்னைக் கொல்லுங்கள்' என்று வாளை நீட்டுகிறான்.

" அங்கணர் அடியார் தம்மைச்
செய்த இவ்வபராதத்துக்கு
இங்கிது தன்னால் போதாது
என்னையும் கொல்ல வேண்டும் "

என்ற நீதி நிறைந்த உரைப்பகுதியும்,

" மங்கல மழுவால் கொல்கை
வழக்கும் அன்று இதுவாம் என்று
செங்கையில் உடைவாள் வாங்கிக்
கொடுத்தனர் தீர்வு நேர்வார் "

என்ற சமயமரபு போற்றும் பண்பாடும் நம்மை நீளச் சிந்திக்க வைக்கின்றன.

அன்பின் வெற்றி

அன்பு ஒன்றுமட்டுமே ஆத்திரத்தை அழிக்கவல்லது என்பதைச் சேக்கிழார் நிறுவுகிறார். மன்னன் பண்பில் கரைந்த எறிபத்தர், விரைந்து மன்னன் நீட்டிய வாளை வாங்குகிறார். 'அதனை வாங்க, நாம் சிறிது நேரம் தாமதித்தால் எங்கே மன்னன், அவ்வாளால், தன்னைத் தானே மாய்த்துக்கொண்டுவிடுவானோ'

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்ற பரிவை எறிபத்தர் எய்துகிறார். கொல்ல நினைத்தவனைக் காக்க நினைக்கும் மனமாற்றத்தைத் தந்தது எது? அன்பு - அன்பு ஒன்றால்மட்டுமே, அறநெறிகளைத் தழைக்கச் செய்ய முடியும் என்பதை மீண்டும் ஒரு முறை சேக்கிழார் நிறுவிக் காட்டுகிறார்.

" ...கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்கு அளவின்மை கண்டேன் என்று
தந்தவாள் வாங்கமாட்டார்: தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற்று அஞ்சி வாங்கினார் தீங்கு தீர்ப்பார். "

சேக்கிழாரின் வளர்ச்சி மயமான சித்திரிப்புகளுள் ஒன்று இது.

குறளுக்கு விளக்கம்

எதிர்பாராத திருப்பம் ஒன்று, அன்பில் மேலும் ஒரு பிரிக்க முடியாத முடிச்சைப் போடுகிறது. தன்னைக் கொல்ல வேண்டி உடைவாளை வழங்கிவிட்டு, மன்னன் குனிந்து நிற்கிறான். ஒரு நொடிக்குள் எறிபத்தர் உள்ளத்தில் ஒரு விபரீத முடிவு பிறக்கிறது. 'இத்தகு பண்பாளன் சாக வேண்டியவன் அல்லன்; அவசரப்பட்டு, இவனுக்குத் தீங்கு நினைத்த நானே சாக வேண்டியவன்' என்று கருதி, மன்னன் தந்த உடைவாளால் எறிபத்தர் தம் கழுத்தைத் தாமே அரியத் துணிகிறார். அது கண்டு பொறுக்காத மன்னன், அவர் கைகளை இறுகப் பற்றித் தடுக்கிறான். இறைவன் திருக்காட்சி யாவரும் காண விண்ணில் எழுகிறது. கற்போர் கண்கள் குளமாகின்றன. 'அளவிலாப் பரிவில் வந்த இடுக்கண்' என்று சேக்கிழார் இருவர் அன்பையும் வியக்கிறார்.

" அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை "

என்ற புரியாத குறளுக்கு ஓர் இலக்கியம் கிடைக்கிறது. நாடாள்வார் உயர் பண்பில்தான், தூய வாழ்வில் பெருமிதம் மலரும் என்பதைச் சேக்கிழார் அதி அற்புதமாகப் பதிவு செய்திருக்கும் பகுதி இது.

கற்க வேண்டுவன

'இப்படியெல்லாம் நடக்குமா? இப்படியெல்லாம் நடந்து கொள்வார்களா? இது எப்படிச் சாத்தியமாகும்' என்று இதன்மேல் வினா எழுதல் இயல்பே! புகழ்ச் சோழனின் தனிமனிதப் பண்புகளின் உச்சியில் பூத்த கருணைமலர் இது. சராசரி மனிதர்களுக்கு அரிதாகத் தோன்றும் நிகழ்வுகள், உயர்ந்த நிலை நிற்பார்க்கு உரியவாறு புலனாகவே செய்யும். நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எட்டாதன யாவும் உண்மை அல்ல என்பதோ நம்ப மறுப்பதோ சரியான மதிப்பீடாக முடியாது. ஆயிரம் ஆண்டுக் காலத்தில், இப்படி வாழ்ந்த ஒருவரைத்தானே சேக்கிழார் இனம் காட்டுகின்றார். அத்தகையோர் மாமனிதர்கள்; 'செயற்கரும் செயல் செய்த தீரர்கள்'! அதனால்தான், அன்னார் பெரியராக நம் முன்னே உயர்ந்து நிற்கின்றனர். அத்தகு உயர்நிலைக்கு நாம் சென்று சேர்தல் அரிதாயினும் அன்பு செய்தலும் மன்னித்தலும் விட்டுக் கொடுத்தலும் மேற்கொள்ளத்தக்க மானுடச் செயல்களே என்று உணர வேண்டும். இப்பண்புகளில் நீங்கள் பயணிக்கும்போது, புகழ்ச்சோழன் அருகில் நீங்கள் சென்றடைதல் உறுதி.

விடை தரும் பாங்கு

அரிதான செயல் செய்த நாயன்மார் வரலாறுகளை நிறைவிக்கும் இடத்திலெல்லாம் சேக்கிழார், நம்மை ஒத்தவர் எழுப்பும் வினாக்களை நம் சார்பாகத் தாமே எழுப்பிக்கொண்டு, விடையும் பகர்கிறார். எறிபத்தர் போன்றோர்க்குப் பட்டத்து யானையை வெட்டுதல் போன்ற செயல்கள் இயன்றிருக்குமா? அவர், தம் கழுத்தில் தாமே வாள்பூட்டி அரிய முனைவாரா? மன்னன் செயல் நம்புமாறு இல்லையே என்றெல்லாம் வினாத் தொடுப்பாருக்குச் சேக்கிழார், வரலாற்றின் நிறைவில் ஒரு விடை தருகிறார். மேற்குறித்த இருவர் உளப்பாங்கை இறைவனையன்றி, நிலவுலகில் உள்ளவாறு மதிப்பிடவல்லார் எவரும் இலர் என்கிறார்.

'' ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக் கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமை தானும்
நாளும் மற்று அவர்க்கு நல்கும் நம்பர்தாம் அளக்கில் அன்றி
நீளும்இத் தொண்டின்நீர்மை நினைக்கில் யார் அளக்கவல்லார் ''

என்ற அரிய பாடல் சேக்கிழாரின் அருளியல் மற்றும் உளவியல் கண்ணோட்டத்திற்குச் சான்றாக அமைகிறது.

நேரிய ஆட்சி முறை

நாடாளும் ஆட்சித் தலைவன் யாதானும் ஒரு சமயத்தைப் பற்றி நின்று வாழ்தலைச் சேக்கிழார் ஏற்கிறார். என்றாலும், பிற சமயங்களைத் தழுவி வாழ்வார்க்கு உரிய மரியாதை தருவது மன்னவன் கடமை. தான் சார்ந்து நிற்கும் சமயத்தை அவன் அரசியலொடு கலப்பதைச் சேக்கிழார் உடன்படவில்லை. ஆட்சி குறித்த செயற்பாடுகளில், மன்னன், அமைச்சர் அறிவுரை கேட்டலே அறம். அதனை அவன் சமயவாதிகளிடம் கேட்க முனையும்போது,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பிற சமயங்களை ஏற்றுப் போற்றுவார்க்குத் தீமை சேர்கிறது. எனவே, சமயச் சார்பற்ற, நேரிய ஆட்சி முறை ஒன்றைக் காணவே அவர் விரும்புகிறார். மன்னன் ஏதேனும் ஒரு சமயத்தை வரித்துக் கொண்டு, பிற சமயங்களுக்கு எதிராக நடந்தால், எத்தகு சமூகத் தீமைகள் விளையும் என்பதைச் சேக்கிழார் இரண்டு வரலாறுகளில் விரித்துரைக்கிறார். ஒன்று, நாவரசர் வரலாறு. மற்றொன்று, ஞானசம்பந்தர் வரலாறு.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர், இளமையில் சைவத்தை விட்டுச் சமணம் சார்கிறார். சமண நூல்களைக் கற்று, ஆராய்ந்து, தலைமைக் குருவாக உயர்கிறார். பௌத்தர்களோடு வாதம் நிகழ்த்தி வெற்றி பெறுகிறார். சமணர்கள் அவருக்குத் 'தருமசேனர்' என்று பெயர் சூட்டுகின்றனர். பல்லாண்டுகளுக்குப் பிறகு, தருமசேனரைச் சூலை நோய் வாட்டுகிறது. சமணர்கள் தந்த மருந்துகள், செய்த மந்திரங்களால் நோய் கட்டுப்படவில்லை. மரணம் நெருங்குவதாக உணர்ந்த அவர், தம் தமக்கை திலகவதியாரைக் கடைசியாக ஒருமுறை பார்க்க விரும்பி அழைத்துவரத் திருவதிகைக்கு ஆள் போக்குகிறார். திலகவதியார், சமணர் வாழிடம் வர மறுத்துவிடுகிறார். கட்டுப்பாடுகள் காரணமாகத் தருமசேனர் உதவியாளர் ஒருவர் துணையுடன் இரவில் புறப்பட்டுத் திருவதிகை சேர்கிறார். தமக்கையை வணங்குகிறார். அவர் திருநீறு தர, வாங்கி அணிய, சூலை நோய்க் கொடுமை தணிவதாக உணர்கிறார். திருவதிகை வீரட்டம் ஆலயத்துட் சென்று சிவனைப் பணிகிறார். பாடும் உணர்வு தலைப்படுகிறது. தம் அல்லல் குறித்துக் 'கூற்றாயின வாறு' என்று தொடங்கிப் பதிகம் பாடுகிறார். சூலை அகல்கிறது. இறைவன், 'நாவுக்கரசு' என்று நாமம் சூட்டுகின்றான். மனமாற்றம் அடைந்த தருமசேனர் சமணத்தைத் துறந்து மீண்டும் சைவம் சார்கிறார்.

வரலாற்று நிகழ்வுகள்

திருப்பாதிரிப்புலியூர், சமணர் பள்ளிகளில் வாழ்ந்திருந்த ஏனைய சமணக் குருமார்கள் கலக்கம் அடைகின்றனர். சமண சமயத்தில் கற்றறிந்த மந்திரங்களால் நோய்நீக்கம் பெற்ற தருமசேனர், சைவத்தில் சென்று சேர விரும்பி, ஒரு நாடகத்தை நிகழ்த்தியிருப்பதாக அவர்கள் நாடாளும் பல்லவனிடம் கூறுகின்றனர். மன்னனும் ஆராயாது அதனை உண்மை என்று நம்பி, தருமசேனரை அழைத்துவரப் பணியாளர்களை அனுப்புகிறான். நாவரசர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

எடுத்துரைத்து, செல்ல மறுக்கிறார். மறுபடியும் அமைச்சர்கள் வந்து வற்புறுத்த, அவர்கள் நலம் கருதித் திருப்பாதிரிப்புலியூர் சேர்கிறார். எந்த விசாரணைகளும் இன்றிச் சமணக் குருமார்கள் சொற்கேட்டு, மன்னன் அடுத்தடுத்து அவர் இறக்குமாறு நான்குவகைக் கொடிய தண்டனைகளைத் தருகிறான். சிவனருள் துணையால் அவற்றிலிருந்து நாவரசர் விடுபடுகிறார். மன்னன், உண்மை உணர்ந்து சமணத்தைத் துறந்து சைவம் சார்கிறான். பாடலிபுத்திரத்தில் இருந்த சமணப் பள்ளிகள் இடிக்கப்படுகின்றன. இடித்த கற்களைக் கொண்டு, திருவதிகைக் கோயிலைப் பல்லவன் புதுப்பித்தான் என்பன வரலாற்றின் போக்காகச் சேக்கிழாரால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அடியவர் செய்கை

தந்தை இறக்க, உடன் தாயும் இறக்க, வருந்தியிருந்த சிறுபிள்ளையாகிய மருள்நீக்கியாருக்குத் தமக்கை திலகவதியாரின் மண வாழ்க்கையும் தடைப்பட்டமை ஆறாத் துயரத்தைத் தந்திருக்க வேண்டும். அதுபற்றி, அவர் தம் தாய்ச் சமயமாகிய சைவத்தின் மேல் நம்பிக்கை இழந்திருக்கலாம். நிலைபேறில்லாத உலகியல் கண்டு, மனத்தளவில் அவர் துறவை வரித்து, சமணம் சார்ந்திருக்கலாம். வேறு பெரிதான காரணங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை. சேக்கிழார், அவர் மதமாற்றத்துக்கான காரணம் எதையும் குறிக்கவில்லை. நல்ல வழி காட்ட வேண்டிய சிவனார் உரிய அருள் காட்டத் தவறியதனால், மருள் நீக்கியார் சமணம் சார்ந்தார் என்று பழியைச் சிவன்பால் சுமத்துகிறார்

" நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால்
கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகுவார் "

என்பது சேக்கிழாரின் பதிவு. இறைவன்மேல் பழி சுமத்தினாலும் தவறில்லை. அடியார் செயல்களில் குறைகாணல் கூடாது என்பது சேக்கிழார் கொள்கை. சமணர்கள், கொல்லாமை என்ற கவசத்துக்குள் இருந்துகொண்டு, மறைவாகக் கொலைத் தொழிலே செய்பவர்கள் என்று சேக்கிழார் குற்றம் சாட்டுகிறார்.

ஆட்சியாளர்களுக்கு அறவுரை

சைவத்தின்மீது நம்பிக்கை இழந்த நிலையில், சமணம் சார்ந்த மருள் நீக்கியார், சமணத்தைக் கற்றுத் தேர்ந்து முதன்மை பெற்றார். எதைச் சைவத்திலிருந்து பெற முடியவில்லையோ அதனைச் சமணத்திலிருந்து பெற அவர் விரும்பினார். சூலை நோய்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

உரைகல்லாக அமைந்தது. சமண சமய மந்திரங்கள் சாதிக்க இயலாத ஒன்றைத் திருவதிகையில் திலகவதியார் ஐந்தெழுத்து ஓதிக் கொடுத்த திருநீறு சாதித்தது. எவ்வித வற்புறுத்தலும், யாருடைய தூண்டுகோலும் இல்லாது, தரும சேனர் மனமாற்றம் சீர்தூக்கிப் பார்க்கும் அவரது மனத் தெளிவால் உண்டாயிற்று. தற்போது, சைவம், அதுவும் தன் தாய்ச் சமயம் நம்பிக்கையூட்ட, அவர், சமணம் விடுத்துச் சைவம் சார்ந்தார். இதில் குற்றம் காண ஒன்றுமில்லை. ஆயினும் சமணர்கள் தருமசேனருக்கு மரண தண்டனை விதிக்க அறிவுரை கூறப் பல்லவனும் அதை ஏற்கிறான். சேக்கிழார், சினத்துடன், மன்னன் செயலை இகழ்ந்துரைக்கிறார்.

நாடாளும் மன்னனுக்கு, அருள் உணர்வு வேண்டும். அவன் முறை திறம்பல் கூடாது. அறியாமையையே அறிவாகக் கருதும் பிழை அவன்பால் இருத்தல் அழகன்று. இவை ஒன்றும் அறியாதவனாகப் பல்லவன் வாழ்ந்திருந்தான் என்று அவனைக் குற்றம் சாட்டுவார்போன்று ஆட்சியாளர்களுக்கு அறிவுரை பகர்கிறார் சேக்கிழார்.

" அருள்கொண்ட உணர்வின்றி, நெறிகோடி அறிவென்று
மருள் கொண்ட மன்னன் "

என்பன சேக்கிழாரின் அரிய வரிகள்.

சேக்கிழாரின் கோட்பாடுகள்

மக்களுக்காக மதமே தவிர, மதங்களுக்காக மக்கள் என்ற எண்ணம் சமயவாதிகள் உள்ளத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். ஆட்சியாளர்கள் சமயச் சார்பற்ற ஆட்சியை உறுதி செய்தல் வேண்டும். சமயச் சார்பற்ற ஆட்சி என்பதற்கும் சமய நம்பிக்கையற்ற ஆட்சி என்பதற்கும் இடையிலான வேறுபாடு, நன்கு உணரப்படவேண்டும். பொய்யான நம்பிக்கை யூட்டலும் போலியான வாதங்களை முன்வைப்பதும் சமயத்திற்கு உண்மையான அரண்கள் ஆகா என்பது, சமயவாதிகளுக்குப் புரிந்தாக வேண்டும். தத்தமக்கு விருப்பமான - நம்பிக்கை தரும் சமயம் ஒன்றைத் தேர்ந்துகொள்ளும் தனி மனித உரிமைக்குத் தடைபோட எவர்க்கும் உரிமை இல்லை என்பதையும் சமூகம் உணர வேண்டும்.

சேக்கிழாரின் சித்திரிப்புகளிலிருந்து பிரித்தெடுத்துக்கொண்ட அவரது சமயம் சார்ந்த சமூகக் கோட்பாடு மேலே தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அரசன் கடமை

அரசன் ஆளுகைக்கு உட்பட்டதே சமயம். சமயவாதிகளும் அவன் ஆட்சியின்கீழ் வருவர். எனினும், அவர்களுக்கு உரிய மரியாதை தர வேண்டுவது ஆட்சியாளர்களின் தலையாய கடமை. பரஞ்சோதி என்ற பெயரில், பல்லவன் படையில் தளபதியாகத் திகழ்ந்தவர் சிறுத்தொண்ட நாயனார். வாதாபி மீது படைநடத்தி, அவர் பெருவெற்றி பெற்றுத் திரும்புகிறார். எல்லாப் போர்களிலும் பரஞ்சோதியார் பெற்றுவரும் வெற்றிக்கான மூல காரணம் யாது எனப் பல்லவன் அமைச்சர்களை வினவுகிறான். போர் ஆற்றலுடன் சிவன்பால் கொண்ட பத்திமையால் வந்த ஊக்கமும் இணைய, இவர் வெற்றி சிறக்கிறது என்று அமைச்சர்கள் விடை தருகின்றனர்.

" மதியணிந்தார் திருத்தொண்டு
வாய்த்த தவ வலிமையினால்
எதிர் இவருக்கு இவ்வுலகில்
இல்லை என எடுத்துரைத்தார் "

என்பது மேற்குறித்த, விடைக்கான இலக்கிய வரிகள். கேட்ட மன்னன், நுணுக்குற்றுச் சிவன் அடியார் என்று அறியாது, அவரைப் போர்முனையில் விடுத்துத் தான் குற்றமிழைத்துவிட்டதாக வருந்தி, அவரிடம் பொறுத்தருளுமாறு வேண்டி, அவரைப் போர்த் தொழிலிலிருந்து விடுவித்து, பெரும் பொருள் வழங்கி, திருச்செங்காட்டங்குடி சென்று விரும்பியவாறு சமயப் பணியாற்ற வழி திறக்கிறான். சமூகத்தைச் சமயத்தின் பெயரால் அறநெறியில் நிறுத்தும் சமயவாதிகளுக்கு அவர்களை இனங் கண்டு உரியவாறு மதிப்பும் மரியாதையும் காட்டி, அவர்களைத் தத்தம் சமயப்பணியாற்றி மகிழ மன்னன் துணை நிற்க வேண்டும் என்பதைச் சேக்கிழார் இப்பகுதியில் விளக்கம் பெற வைக்கிறார்.

அமைச்சர் திறம்

நாடாளும் அரசனுக்குக் கண்களாகத் திகழ்பவர்கள் அமைச்சர்கள். பெரியபுராணம் ஒரு சமய இலக்கியமாயினும், அதன்வழித் தமது சமூகப்பொறுப்புணர்ச்சிகளைச் சேக்கிழார், வாய்ப்பு அமையும் போதெல்லாம் எடுத்துரைக்கத் தவறுவது இல்லை. மனு நீதிச் சோழனின் அமைச்சர்கள், அமைச்சிலக் கணங்கள் யாவும் நிரம்பப் பெற்றவர்கள். சோழன் மகன் வீதிவிடங்கன் தேர்க்காலில் மோதிப் பசுங் கன்று இறக்கிறது. தாய்ப்பசு கலக்கமுற்று நீதி வேண்டி அரண்மனை வாயிலில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கட்டப் பெற்றிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்புகளால் அசைத்து ஒலி எழுப்பி மன்னன் கவனத்தை ஈர்க்கிறது. அரசன் அச்சமுற்றுப் பதைத்து வாயில் சேர்கிறான். பக்கத்தில் நின்ற அமைச்சரை மன்னன் இகழ்ந்து நோக்க, அமைச்சன் உடன் நடந்தன எடுத்துரைக்கிறான். அமைச்சன் இயல்பைச் சேக்கிழார்,

" முன்னுற நிகழ்ந்த எல்லாம்
அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்
தொன்னெறி அமைச்சன் மன்னன்
தாளிணை தொழுது சொல்வான் "

என்று குறிக்கிறார். நிகழ்ந்தனவற்றை விரைந்து அறிந்து உணர்த்தும் திறம், முதிர்ந்த சட்டம் குறித்த கேள்வி ஞானம், நல்ல மரபில் வருதல் முதலியன அமைச்சன் இலக்கணங்களாகச் சுட்டப்பட்டுள்ளன.

மனுச்சோழன் அமைச்சர்கள்

அமைச்சனின் பதில் உரை திட்பநுட்பம் நிறைந்த, சட்டத்தின் வரம்புக்கு உட்பட்ட நயஉரையாக அமைகிறது.

" வளவ நன் புதல்வன் ஆங்கோர்
மணிநெடும் தேர்மேல் ஏறி
அளவில் தேர்த்தானை சூழ
அரசுலாம் தெருவில் போங்கால்
இளைய ஆன்கன்று தேர்க்கால்
இடைப்புகுந்து இறந்ததாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து
விளைத்தது இத்தன்மை என்றான் "

நின்புதல்வன் என்றதனால் கருணையோடு அணுக வேண்டும் என்பது குறிக்கப்பட்டது. மணி நெடும் தேர் என்பதால், ஒலி எழுப்பிக் கொண்டே தேர் சென்றது என்பது உரைக்கப்பட்டது. அளவில் தேர்த் தானை சூழ என்பதால், முன்னும் பின்னும் பல வாகனங்கள் வந்துகொண்டிருந்தன என்பது உணர்த்தப்பட்டது. அரசுலாம் தெரு என்பதால் கன்றுக்கு அங்கு வேலை இல்லை என்பது தெரிவிக்கப்பட்டது. இளைய ஆன்கன்று என்றதனால் பின்விளைவு அறிய இயலாத அதன் பிள்ளைமை குறிக்கப்பட்டது. தேர்க்கால் இடைப்புகுந்து என்றதனால் இளவரசன் பார்வையில் படாமல், இது நடந்துவிட்டமையால் அது கன்றின் குற்றமே என்பது உணர்த்தப்பட்டது. அமைச்சர் திறம் குறித்த இப் பதிவு ஒரு நாட்டின் முதலமைச்சராகிய சேக்கிழாரால் பதிவு செய்யப் பட்டிருப்பது நம் நம்பிக்கைக்கு உரியதாக உயர்கிறது.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

குடிமக்கள் திறம்

சேக்கிழாரின் சமுதாயப்பணிகளில் அவர் ஆட்சியாளர் அமைச்சர் திறமுறைத்தாற்போல், சமூகத்தின் அங்கங்களுள் ஒன்றாகிய குடிமக்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கி, அவர்களை உயர்த்தும் திறம் ஆராயப்படவேண்டுவது. ஒரு சிறந்த நாட்டில் வாழும் குடிமக்கள் நல்லறங்களைப் போற்றி நின்று அமைதியான வாழ்க்கை வாழ்வதில் விருப்பம் காட்ட முன்வரவில்லை யென்றால், ஆட்சியாளர்களின் பணிகள் வெற்றி பெறா. தாம் மேற்கொண்ட தொழில் யாதாயினும், அதில் தலை நின்று தம் கடமைகளை முறையாக நிறைவேற்றி, ஒல்லும் வகை சமூகத்திற்கும் தொண்டாற்றக் குடிமக்கள் முன் வர வேண்டும் என்பது அவரது விருப்பமாகக் காணப்படுகிறது.

சைவ சமயம் என்ற அடிப்படைமேல் நின்று, அவர் நிகழ்த்த முனைந்த சமுதாயப்பணிகள் மிகப் பலவாக விரிந்தன. சிலவற்றை மட்டும் காணலாம்.

இல்லறச் சிறப்பு

இல்லறம், துறவறம் என்ற இரு நெறிகளையுமே சைவம் ஏற்றுப் போற்றியது. சேக்கிழார், இவ்விரண்டினுள் இல்லறத்திற்கே முதன்மை தருகிறார். சைவம், சமண - பௌத்தங்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தபோது பெண்மை உயர்ச்சி மற்றும் இல்லறச் சிறப்புக்களையே முன்னிறுத்தின. அம்மை அப்பராகவே உலகத்தைக் கண்டு காட்டினர் தேவார மூவர்.

" மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே "

என்று, இல்லறவாழ்வு இம்மை மறுமைப் பேறுகள் இரண்டற்கும், தடையாக இராது என்று நம்பிக்கையூட்டினர். 'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்தான்' என்று அம்மையப்பர் இணைந்திருந்த கோலத்தை, அதற்கு மேற்கோள் காட்டுகிறார். 'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்' என்று அண்ணாமலை அண்ணலைச் சுட்டுகிறார். 'நங்கடம்பனைப் பெற்றவள் பாங்கினன்' என்று நாவுக்கரசரும் முருகனை ஈன்ற உமையொடு கூடியவனாகக் கடம்பூரில் சிவன் காட்சி தருவதாகச் சுட்டுகிறார். 'மாதர் பிறைக் கண்ணியானை - மலையான் மகளொடும்' தாம் திருவையாற்றில் கண்டதாக நாவரசர் பதிவு செய்கிறார். சுந்தரர் தேவாரத்திலும் இத்தகைய பதிவுகள் உள்ளன.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சில பதிவுகள்

திருநீலகண்டத்துக் குயவனாரை அறிமுகம் செய்யும்போது அவர்,

" வையகம் போற்றும் செங்கை மனையறம் புரிந்து வாழ்வார் "

என்று போற்றி உரைக்கிறார். ஆணும் பெண்ணும் கூடிவாழும் இல்லற வாழ்வே தலையாயது என்பதை வள்ளுவரும் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று சிறப்பிப்பார். துறவறம் பிற்ர் பழிக்காது நிகழ்த்தப்படுமானால், அதுவும் சிறந்ததே என அதற்கு அடுத்த இடமே அவர் வழங்குவார். சைவத்தில் சிவன் திருமேனி தீண்டிப் பூசிக்கும் உரிமை சைவ ஆசாரியர்களுக்குக்கூட மணம் முடித்தாலேயே அமையும் என்று கூறப்படுகிறது. இயற்பகை நாயனார் புராணத்துள் இல்லறத்தை

" மாறிலாத நன்னெறியினில் விளங்கும் மனையறம் "

என்று சிறப்பிக்கின்றார்.

மரபு போற்றிய மணம்

திருஞானசம்பந்தர் அருள் வரலாற்றில் ஆணும் பெண்ணும் கூடிவாழும் இல்லறச் சிறப்புப் பெரிதாக எடுத்துக் கூறப்பட்டு உள்ளது. புண்ணியப் பதினாறு ஆண்டுகள் நிரம்பப் பெற்றார் சம்பந்தர். தல யாத்திரைகள் யாவும் நிறைவுற்றுச் சீர்காழி சேர்கிறார். பெற்றோரும் மறையவரும் கூடிக்கலந்து, ஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்துகொள்வதற்குரிய பருவம் வந்துவிட்டது என்பதை அவரிடம் தெரிவிக்க வேண்டி அவரிடம் சென்றனர். சேக்கிழார் ஓர் அரிய தொடர் அமைக்கிறார். வேத நெறியாகிய, 'நாட்டுமறை முறை ஒழுக்கம்' எனப்படும் திருமணம் கூட்ட வேண்டும் என்ற கருத்தினராய்,

" .....கோதில் மறை நெறிச் சடங்கு
காட்டவரும் வேள்விபல புரிவதற்கோர் கன்னிதனை
வேட்டருள வேண்டும் "

என்று ஞானசம்பந்தரிடம் விண்ணப்பித்தனர். மனைவி அருகில் இருக்கவே, வேள்வி இயற்ற வேண்டும் என்பது வேதக்கொள்கை. முன்னரே சிவனருள் பெற்று, அவர் ஏவலின் நிலவுலகில் வந்து அவதரித்தவர் ஞானசம்பந்தர் என்பதனால், வயது கூடிற்று ஆயினும், திருமணம் வேண்டேன் என்று விடை தந்தார். மறையவர் மீண்டும் ஞானசம்பந்தருக்குத் திருமணத்தின் சிறப்பை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" இருநிலத்து மறைவழக்கம் எடுத்தீர் நீர் ஆதலினால்
வருமுறையால் அறுதொழிலின் வைதிகமா நெறியொழுகும்
திருமணம் செய்தருளுதற்குத் திருவுளம் செய்யும் "

என்று எடுத்துரைத்து வற்புறுத்தினர். 'மறைவழக்கம் திருமணம் என்பதைத் தாங்கள்தாமே, உலகுக்கு எடுத்துரைத்தீர்கள். அம்முறையில், வேத நெறியாகிய இல்லறம் ஏற்கத் தாங்கள் இசைந்தருள வேண்டு' மென்றனர்.

சிவனார் துணை

திருஞானசம்பந்தர் ஒருவாறு திருமணத்திற்கு இசைகிறார். வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் அவதரித்தவர் அவர். எனவே, வேதங்கள் வாழ்வு பெறவும் அந்தணர்தம் வாய்மை, ஒழுக்கம், பெருகும்துறை பலவும் வாழவும் வேண்டி ஞானசம்பந்தர் திருமணத்திற்கு இசைந்தார் என்று சேக்கிழார் சுட்டுவன நினைவுகூரத்தக்கன. சுந்தர மூர்த்திகள் கயிலாயத்தில் அநிந்திதை, கமலினி என்ற அம்மையின் தோழிகள்மேல் கொண்ட காதலால் மாதவம் செய்த தென்திசை வாழ்வு பெற்றதாகவும், அதன் விளைவாகவே தீதற்ற திருத்தொண்டத் தொகை தமிழ் மண்ணிற்குக் கிடைத்தது என்றும் மகிழ்பவர் சேக்கிழார். திருவாரூரில் சுந்தரர் பரவையார் திருமணத்தை முன்னின்று நடத்திய புற்றிடங்கொண்ட புனிதனின் திருவுள்ளத் தையும் திருவொற்றியூரில் சுந்தரர் - சங்கிலியார் திருமணத்தை நட்புக்குரிய தோழனாக நின்று கெழுதகைமையோடு நடத்தி வைத்த ஒற்றியூர் உடைய கோவின் கருணையையும் பெரிய புராணத்துள் படித்து வியவாதார் யார்? ஆணும் பெண்ணும் கூடிவாழும் வாழ்க்கை அளவுக்கு அதிகமான ஊடலால் முறிந்துவிடக் கூடாது என்ற பேருள்ளத்தோடு வேதங்களும் தேவர்களும் அறியாத தம் திருவடிகள் திருவாரூர்த் தேர்வீதியில் தோய, ஒன்றுக்கு இரண்டு முறை பரவையார் இல்லத்துக்குத் தூது நடந்து தம் நண்பர் சுந்தரரோடு அவரை இணைத்துவைத்த பெருங்கருணைத்திற மெல்லாம் கற்பார் நெஞ்சில் கசிவு தோன்றுமாறு பெரிய புராணத்துள் சேக்கிழாரால் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

இல்லற உறுப்பினர்கள்

சமூக அறங்கள் நிலைநாட்டப்படுவதற்கு இல்லறம் சிறந்த துணை செய்ய வல்லது என்று நிறுவிய சேக்கிழார், இல்லற உறுப்பினர்களாகிய கணவன், மனைவி, மகள், மகன்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பணியாளர்கள் என்று பலரும் எவ்வாறு வாழ்தல் வேண்டும் என்பதையும் சமூக நாட்டத்தோடு எடுத்துரைக்கிறார். கணவன், இல்லறத்தில் அரசன் என்றால், மனைவி அமைச்சருக்கு நிகரானவள் என்பது சேக்கிழாரின் கணிப்பு. இளையான்குடி மாற நாயனாருக்கு, நள்ளிரவில் வந்த அதிதிக்கு உணவு படைப்பதற்கு உரிய வழிமுறைகளை எடுத்துரைத்த அவர் துணைவியாரின் கூர்த்த அறிவுடைமை முன்னரே எடுத்துக் காட்டப்பட்டது. அப்பூதி அடிகள் வரலாற்றில் திருநாவுக்கரசர், அப்பூதி அடிகள் வேண்டிக் கொண்டவாறு, அவர் இல்லத்தில் நண்பகல் உணவருந்த இசைகிறார். இந்த மகிழ்ச்சியை அப்பூதி அடிகளார் முதற்கண் மனைவியோடு பகிர்ந்துகொண்டமையைச் சேக்கிழார் குறிக்கிறார்.

கபாலி வடிவில் சிவபெருமான்

" செய்தவர் இசைந்தபோது திருமனையாரை நோக்கி
எய்திய பேறு நம்பால் இருந்தவாறு என்னே "

எனப் பேசி மகிழ்கிறார். மகிழ்ச்சியான தருணங்களில் முதலில் அதனைத் துணைவியோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது சேக்கிழாரின் எண்ணம். அதேபோல் துன்பத்தின் உச்சியிலும் இருவரும் இணைந்தே தக்க முடிபு காணவேண்டும் என்பதை அப்பூதி அடிகளாரின் மூத்தமகன் பாம்பு கடித்து இறந்த தருணத்தில் இனங்காட்டுகிறார். வாயிலில் வாராது வந்த விருந்தினர் நாவுக்கரசர். கொல்லையில் மூத்த மகன் பிணம். இயற்கையாக மெல்லிய உள்ளம் கொண்ட தாய் கலங்குவாள். இத்தகு தருணங்களில் விருந்தோம்பல்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மேற்கொள்ளுதல் அரிது. ஆனால், இங்கே இருவரும் இணைந்தே ஒரு முடிவுக்கு வருகின்றனர்.

" தளர்ந்துவீழ் மகனைக் கண்டு தாயரும் தந்தையாரும்
உளம்பதைத்து உற்று நோக்கி உதிரஞ்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீழ்ந்தான் என்று
துளங்குதல் இன்றித் தொண்டர் அமுது செய்வதற்குச் சூழ்வார் "

நல்ல குடும்பங்களில் கணவன் தான் செய்யும் நல்லறங்களுக்கு இசைந்தவளாக மனைவியையும் பயிற்ற வேண்டும் என்பதை இப்பகுதி எடுத்துக்காட்டுகிறது.



'நம்மைக் காக்க வரும் மணி'

திருவெண்காட்டு நங்கை

சிறுத்தொண்டர் வரலாற்றில், அவர் செய்த செயற்கரிய செயலில் சரி பாதிப் பெருமை அவர்தம் துணைவியார் திருவெண்காட்டு நங்கைக்கும் உண்டு. 'தீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கை' என்றும், 'மனையறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை' என்றும், சேக்கிழார் அவர் பெருமை பேசுவார். 'அடியேனுக்கு இதுவும் அரிதன்று' என்று வடபுலத்துக் காபாலி வடிவில், கணபதீச்சரம் ஆலயத்துள் ஆத்தியின்கீழ் இருந்த இறைவனுக்கு, அவன் இறைவன் என்று உணராதே, பிள்ளைக்கறி படைக்க இசைவளித்துவிட்டுச்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சிறுத்தொண்டர் இல்லம் சார்கிறார். வாசலில் நின்று அவரை வரவேற்கிறார் துணைவியார். மனைவியாரிடம், சிவனடியார் வேண்டியன யாவும் உரைத்துத் தாம் அதற்கு இசைந்தவாறும் உரைக்கிறார். அம்மையாருக்குச் சிவனடியார் வைத்த குறி நம் ஒரே மகன் மேல்தான் என்று ஒரு நொடியில் புரிகிறது. உணவு படைக்க இசைந்தவராய் அம்மையார் ஒரு குடிக்கு ஒரு மகனை நாம் பெறுவது எவ்வாறு என்று வினாத் தொடுக்கிறார் .

வெற்றிக்குத் துணை

ஒரு குடிக்கு ஒரு மகனை, விருப்பம் நிறை பொருள் கொடுத்துப் பெற்றுவிடவும் முடியும். ஆனால், அவனை அரியும் துணிவுடைய தந்தை - தாயர் உலகில் இல்லை. எனவே, நான் உய்யுமாறு நீ பெற்றெடுத்த மகனை அழைப்போம் என்று வழி திறக்கிறார் சிறுத்தொண்டர். சிறிதும் சலனமின்றி அம்மையார் பேசுகிறார்.

" நம்மைக் காக்க வரும் மணியைச்
சென்று பள்ளியினில் கொண்டு வாரும் என்றார் திருவனையார் "

என்பது திருவெண்காட்டு நங்கை உரைத்தது. சிறுத்தொண்டர், 'நான் உய்ய நீ பயந்த மகன்' என்றார். அம்மையார் ஒருபடி மேலே போய் 'நம்மைக் காக்கவரும் மணி' என இருவரையும் இணைக்கிறார். 'திருவனையார்' என்றது மேற்குறித்த நிகழ்வுகளால் கலங்காது நின்ற பெண்மைப் பொலிவை எடுத்துரைப்பதாக அமைகிறது. ஒருவர்பால் ஒருவர் கொண்ட ஈடுபாடும் ஒத்த உள்ளமும் ஒருவரை ஒருவர் கலந்துகொண்டு செயலாற்றலும் இல்லறத்தின் வெற்றிக்குத் துணையாவன என்பது சேக்கிழாரின் கணிப்பு.

மங்கையர்க்கரசியார்

கணவன் மனைவிக்கு இடையே கருத்தொற்றுமை இல்லை என்றால், வாழ்க்கை சிறவாது என்பதைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றில் சேக்கிழார் இனம் காட்டுகிறார். தேவையற்ற விபரீத ஐயங்கள் இல்லற அமைதியைக் கெடுத்துவிடும் என்பதும் அம்மையார் வரலாற்றால் புலப்படுத்தப்படுகிறது. கணவன் நெறி திரும்பிய காலை, நெறிப்படுத்தும் கடமை மனைவிக்கு உண்டு என்பதை, முன்னரே திருநீலகண்டத்துக் குயவனார் வரலாற்றில் கண்டோம். புறச்சமயம் சார்ந்து, சமணக் குருமார்கள் சொற் கேட்டு, ஞானசம்பந்தர் திருமடத்தில் தீவைக்க இசைந்த கூன் பாண்டியனின் அழிவு மங்கையர்க்கரசியாரால் தடுத்து நிறுத்தப்பட்டது. தாம் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீ வைக்கப்பட்டதற்கு மூல காரணம் கூன் பாண்டியனே என உணர்ந்த திருஞான சம்பந்தர், அத்தீயைப்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பாண்டியன் மீதே திரும்ப ஏவினார். 'செய்யனே திரு ஆலவாய் மேவிய ஐயனே' என்று தொடங்கித் தீயை, 'பையவே சென்று பாண்டியற்கு ஆகவே' என்று பணித்தார். பையவே என்றதனால், பாண்டியன் உடலில் அத்தீ வெப்பு நோயாகச் சென்று பற்றியது. 'பையவே' என்று ஆணையிடாதிருந்தால் பாண்டியன் எரிந்து சாம்பலாகியிருப்பான். சேக்கிழார் 'பையவே' என்று ஞானசம்பந்தர் உரைத்தமைக்கான காரணத்தை ஆராய்ந்து வெளிப்படுத்துகிறார்.

" பாண்டி மாதேவியார் தமது பொற்பில் பயிலும்
நெடுமங்கல நாண் பாதுகாத்து "

திருஞானசம்பந்தர் 'பையவே' என்று பணித்தார் என்கிறார் சேக்கிழார். துணைவியார் வாயிலாகக் கணவன் வாழ்வு பெற்ற வரலாறாக இது அமைகிறது.

அன்னையர் தியாகம்

கணவருக்கு ஈடாகவும், சில சமயங்களில் சற்று மேலாகவும் குல மகளிர்கள் செயற்கரும் செயல் செய்து நின்ற குடும்ப வரலாறுகளையும் சேக்கிழார் பெரியபுராணத்துள் இனம் காட்டு கின்றார். சோழர் குடியில் ஒரு மன்னன் ஆண்டிருந்தான். அவன் பெயர் சுபதேவன். அவன் துணைவி கமலவதி. அவள் கரு வாய்த்தாள். கருவுயிர்க்கும் நேரமும் வந்தது. அக்காலைக் காலத்தைக் கணித்து உணர்த்தும் அரண்மனைச் சோதிடன் 'இக்குழந்தை இப்பொழுதே பிறக்காமல் ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமானால் மூன்றுலகங்களையும் ஆளும்' என்று உரைத்தான். கமலவதி காதுகளுக்குச் செய்தி சென்றடைந்தது. உயிர்க்கு இறுதி பயக்கும் என்று அஞ்சாது, சேடியரை அழைத்து 'என் இரு கால்களையும் பிணைத்துத் தலைகீழாக என்னை ஒரு நாழிகை தூக்கிப் பிடியுங்கள்' என உத்தரவிட்டாள். ஒரு நாழிகை கழித்துப் பெரியபுரான அடியவருள் ஒருவனாகிய கோச்செங்கட் சோழன் பிறந்தான். கமலவதி உயிர் நீத்தாள். அச்சோழனே காவிரிக் கரையில் யானைகள் புக இயலாத வாயிலொடு கூடிய எழுபது சிவாலயங்களை எடுப்பித்தான். ஓர் அன்னையின் தியாகத்தால் பிள்ளை நாயனாராக உயர இயன்ற திறமும் சேக்கிழராலே விளக்கப் பெற்றுள்ளது.

பகைமறந்த பண்பு

தம் கணவர் ஏயர்கோன் கலிக்காமர், சுந்தரர் தம் இல்லம் நாடி வருகிறார் என்பதை உணர்ந்து, உடைவாளால் வயிற்றிடைக் குத்திக்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கொண்டு உயிர் நீத்தார் என்பதை அறிந்து, துயரடைகிறார் அன்னார் மனைவி. அதற்குள் ஏவலர்கள் ஓடி வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் இல்லத்தை நோக்கி வந்துகொண்டிருப்பதை எடுத்துரைக்கின்றனர். கணவர் உடலை ஒரு வெள்ளைத் துணியால் போர்த்து இல்லத்துள் உட்புறத்தில் ஒருபால் கிடத்தச் செய்கிறார். மேலும், சுந்தரர் வரும்போது இல்லத்தை மணமனை போல் நன்கு அலங்கரித்து அவரை எதிர்கொண்டு அழைத்து வருமாறு அரச சுற்றத்தாரைப் பணிக்கிறார். இல்லத்து வாயிலில் தீபம் ஏற்றி, பூரண கும்பம் எடுத்து, மலர் மாலைகளைத் தொங்கவிட்டு, அலங்கரித்து அவரைத் தாமே எதிர்கொள்ள முன் செல்கிறார். கணவர் இறந்துகிடந்த நேரத்திலும் 'அதனை வெளிப்படுத்திக்கொள்ளாது தம் இல்லம் நாடி வந்தவரை வரவேற்பது தமிழ்ப்பண்பு என்று நிறுவிக் காட்டிய இல்லறப் பெண்மையையும் சேக்கிழார் நம்முன் நிறுத்துகின்றார்.

இயற்பகை நாயனார்

இயற்பகை நாயனார் அருள் வரலாற்றில் பெண்மை உணர்வுகள் மதித்துப் போற்றப்படவில்லை என்று குறை கூறுவாரும் உண்டு. அவ்வரலாறு அதீதமானது. நம்மனோரால் புரிந்துகொள்ள இயலாத நுட்பம் மிக்கது. தமிழ்ச் சமுதாயப் பண்பாடு மற்றுள்ள மரபுகளோடு ஒத்துச் செல்லாதது என்பதால்தான் அவரை 'இயற்பகை' எனக் குறித்தனர். பூம்புகாரில் தூர்த்த வேடம் கொண்டு இயற்பகையார் இல்லத்திற்குச் சிவன் வருகிறான். சிவனை, நாயனார் இன்னார் என்று அறியாதே வரவேற்று யாது வேண்டும் என்று வினவுகிறார். உன்னிடம் ஒன்றைப் பெற வந்தேன். தருவதற்குச் சம்மதித்தால் கேட்பேன் என்கிறார். என்னிடம் எந்த ஒரு பொருள் இருந்தாலும் அது சிவனடியார்களுக்கு உரியது என்கிறார் இயற்பகை. ''என்றால், உன் காதல் மனைவியைத் தா'' எனக் கேட்கிறார். சிறிதும் யோசிக்காது, இயற்பகையார் உள் புகுந்து, மனைவியை அழைத்துவந்து, சிவனடியார் முன் நிறுத்தி, மனைவியைக் கலந்து ஆலோசிக்காமல், ''உன்னை இம் மெய்த்தவருக்குக் கொடுத்தேன்'' என்கிறார். துணைவியார் திகைக்கிறார்.

மனைவி நினைவு

மனைவியார் என்ன கருதுகிறார் என்பதுதான் நாம் கவனிக்க வேண்டுவது. அம்மையார் கலங்கி மனம் தெளிந்தார் எனச்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேக்கிழார் குறிக்கிறார். கலக்கம் கதுமென நிகழ்ந்த நிகழ்வு குறித்து வந்தது. தெளிவு, தம் கணவர்மீது கொண்ட நம்பிக்கைபற்றி எழுந்தது. மேலும், அம்மையார் கணவரை நோக்கி, ''என் உயிருக்குத் தலைவரே! இன்று நீங்கள் எனக்கு இட்ட கட்டளை இதுவானால், நீர் உரைத்த ஒரு செயலை ஏற்றுப் போற்றி இயற்றுதலைச் செய்வேன். அதைத்தவிர வேறு உரிமை எனக் கிருப்பதாக நான் கருதவில்லை'' என்று கணவரை வணங்கி விடைபெற்று, வந்திருந்த சிவனடியார் அருகில் சென்று நின்றார். சேக்கிழாரின் மேற்குறித்த சித்திரிப்பு உன்னதமானது. கணவன் மனைவி இடையே நிலவும் உறவு முறைமை குறித்து அந்நியரால் முற்றிலுமாக ஒன்றும் உணர இயலாது. இத்தகு உயரிய பெண்களின் ஒத்துழைப்புமட்டும் கிடைக்காதுபோனால் இயற்பகை போன்றோர் செயற்கரும் செயல் செய்தல் இல்லை.

மானக்கஞ்சாறர்

இல்லறத்தின் வெற்றிக்குக் கணவன் மனைவி இடையே நிலவும் புரிந்துகோடலும் நேயமும் தேவைப்படுதல்போலக் குழந்தை களின் நற்பண்புகளும் துணையாகும் என்பது சேக்கிழாரின் கருத்து. ஆண்பிள்ளைகள்மட்டு மல்லாது பெண்மக்களும் தியாகம் செய்த வரலாறும் பெரியபுராணத்துள் இடம் பெற்றுள்ளது. கஞ்சாறூர் என்ற ஊரில் வாழ்ந்த சிவனடியார் மானக்கஞ்சாறர். வேளாளர். சேனாபதியாகக் கடமை ஆற்றுபவர். தம்மை நாடிவந்த சிவனடியார்களுக்கு அவர் வேண்டுவன குறிப்பறிந்து கொடுத்து வந்தார். அவர் துணைவியார் பெருங் கற்பினர். அவர் கற்புத் திறத்தை 'மழைக்குஉதவு பெருங்கற்பு' என்கிறார் சேக்கிழார். அவர்கள் ஈன்றெடுத்த ஒரே மகளுக்கு விடிந்தால் திருமணம். பெருமான் ஒரு சிவனடியாராக நாயனார் இல்லம் வருகிறார். மணக்கோலம் பூண்டிருந்த மகளை அழைத்து வந்து, சிவனடியாரைப் பணிந்து, ஆசிபெறுமாறு தந்தை பணிக்க, அவரும் சிவனடியார் தாள்களில் வீழ்ந்து வணங்குகிறார். நீண்டு வளர்ந்திருந்த மணப்பெண்ணின் கூந்தலைப் பார்த்து, அதனை வழங்குமாறு சிவனடியார் நாயனாரை வேண்டுகிறார். நாயனாரும் மறாது, மணப்பெண் என்றும் பாராமல் மகள் கூந்தலை அறுத்துக் கொண்டுவந்து அடியார் கைகளில் வழங்குகின்றார்.

பலரது ஒத்துழைப்பு

இத்தகு வரலாறுகளில் அடியார்கள் பெற்ற வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அன்னாரது குடும்ப உறுப்பினர்களும் ஒத்துழைத்த

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திறம் உற்று நோக்கத்தக்கது. அப்பூதி அடிகளார் வரலாற்றில் மூத்த திருநாவுக்கரசு செய்த தியாகம் அப்பூதி அடிகளாரை நாவுக்கரசர் தேவாரத்துள் வைத்துப் பாடும் உயர்ச்சியைத் தந்தது. சிறுத்தொண்டர் வரலாற்றில் சந்தனத் தாதி என்ற பணிமகள் தக்கநேரத்தில் வழங்கிய தலைக்கறி சிறுத்தொண்டரின் வெற்றிக்குத் துணையாயிற்று. சமூக மேன்மைக்கு நல்ல குடும்பங்கள் உருவாதலின் இன்றியமையாமையைச் சேக்கிழார் பல வரலாறுகளில் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கிறார். சேக்கிழாரின் சமுதாயப்பணிகளில் காப்பியத்தை ஏதிடாகக் கொண்டு, அவர் முன்னிறுத்தும் நல்ல குடும்பங்கள் நமக்கு வழிகாட்டுவனவாக அமைகின்றன.

பண்பாட்டுத் தடம்

ஒரு சமுதாயத்தின் உயர்ச்சிக்குக் காரணங்களாக அமையும் பலவற்றுள் அச்சமூகம் பற்றி நிற்கும் பண்பாட்டுக்கு உயரிய இடம் உண்டு. தமிழ்ச் சமுதாயம் ஒரு பண்பாட்டுச் சமுதாயம். தமிழர் பண்பாடு, உலகில் வாழும் பல இன மக்களையும் ஈர்த்துவருதல் கண்கூடானது. சேக்கிழார், தம் பெரியபுராணம் வாயிலாக உணர்த்தும் பண்பாட்டுப் பதிவுகளுள் சில முன்னைய பகுதிகளில், தேவைக்கு வேண்டுமாறு இனங் காட்டப்பட்டன. எஞ்சி நிற்கும் அரிய பண்பாட்டுப் பதிவுகளை இப்பகுதியில் காணலாம். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றி வளரும் காதல் குறித்த பல பண்பாட்டுப் பதிவுகளைச் சங்க நூல்களிலும் திருக்குறள் காமத்துப் பாலிலும் ஏனைய தமிழ்ச் சாயல் கொண்ட இலக்கியங்களிலும் காண முடியும். சேக்கிழாரும் சமய நூலாயினும் காதலை விரிக்கும் காலங்களில் தமிழர் பண்பாட்டை மரபுகளின் மேல் நின்றும் மரபுடைத்தும் எடுத்துக் காட்டுகிறார்.

உலாமரபு உடைத்தல்

சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கும் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியார் திருமகளாருக்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. முதல்நாள் மாப்பிள்ளை அழைப்பு. குதிரைமீது பேரழகரான சுந்தரர் மேலும் அலங்கரிக்கப்பட்டவராய் மணப்பந்தல் நோக்கி வீதி வழி வருகிறார். வீதிகளின் இருபக்கமும் உயர்ந்து நின்ற மாடங்களின் நிலாமுற்றங்களில் நின்றவாறு இளம் பெண்கள் மாப்பிள்ளை ஊர்வலத்தைக் கண்டு மகிழ்கின்றனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் எழில்கண்டு அவர்கள் உரைத்த வாசகங்கள் உயரிய தமிழர் பண்பாட்டை விளக்குவனவாக அமைகின்றன. பண்ணொடு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

கீதம்பாடி ஆடியவர்களாய் அவ்வூர்ப் பெண்கள் சுந்தரரின் எழில் கண்டு,

" கண்கள் எண்ணிலாத வேண்டும் காளையைக் காண என்பார்
பெண்களில் உயர நோற்றாள் சடங்கவிபேதை என்பார்
மலர்களிடை வந்த மணம் கண்டு வாழ்ந்தோம் என்பார் "

என்று மகிழ்ந்து உரைத்தனர். 'இவன் அழகைக் காண எம் தோழி சடங்கவிப் பேதைக்குக் கண்கள் பல வேண்டும். இவள் நோற்ற நோன்பின் பயனாகவே இத்தகு அழகன் மணாளனாக அமைந் துள்ளான். இம்மண்ணுலகம் மகிழுமாறு நடைபெறும் திருமணத்தைக் கண்டு நாங்கள் வாழ்வு பெற்றோம்' என்றனர்.

குலமகளிர் இயல்பு

மேலும், அவர்கள் எண்ணங்களின் வெளிப்பாட்டைச் சேக்கிழார் பதிவுசெய்து காட்டுகிறார். இம் மணமகன் கண்களி லிருந்து புறப்படும் அருள் நிறைந்த பார்வையாகிய வெள்ளத்துள் நாங்கள் அலைக்கழிந்தோம் என்கின்றனர். ஆபரணம் அணிந்த இவனே புண்ணிய மூர்த்தியாவான் என்கின்றனர். இப்பதிவுகளில் என்ன புதுமை உண்டு என்று வினவத் தோன்றலாம். தமிழில் தோற்றம் கொண்ட உலா இலக்கியங்கள் யாவும் ஏறத்தாழ ஒரே அமைப்புடையன. பாட்டுடைத்தலைவன் உலாப் போகும்போது மாளிகைகளின்மேல் நின்று அவனைக் காணும் பேதை முதல் பேரிளம்பெண் ஈறாக ஏழு பருவத்தினரும் அவன் அழகு கொண்டு பித்தேறிப் பலவாறு பிதற்றி மயங்குவதாகவே அவை புனைந்து நின்றன. இவ்வாறு ஒருவனைக் கண்டு பல பருவப் பெண்களும் மயங்குவதாகச் சித்திரிப்பது குலமகளிர்களுக்கு இழுக்கல்லவா என்ற வினா எழுந்தபோது விடை கூற இயலாதவர்கள், அவர்கள் குலமகளிர்கள் அல்லர் கணிகையர்கள் என்று மேன்மேலும் பழி சூழ்ந்தனர்.

புது மரபு படைத்தல்

சேக்கிழார் இந்த உலா இலக்கிய மரபை உடைத்துத் தகர்க்கிறார். வீதியின் இரு மருங்கும் நின்று மணவாளர் வலம் கண்டவர்கள் குல மகளிர்களே என்று நாட்டுகிறார். ஒருத்திக்குப் பேசி முடிக்கப்பட்ட ஆடவன் ஒருவன் அழகைக் கண்டு மகிழலாமே அன்றி அவனை விரும்புதல் பண்பாடன்று என்ற வளர்ச்சி மேலிட்ட பெண்கள், பண்பாட்டு எல்லைக்குள் நின்று உரைக்கும் வார்த்தைகள் சேக்கிழாரால் நனி நாகரிகமாகப் பதிவு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

செய்யப்பட்டுள்ளன. இவனை மணக்கப்போகும் பெண் செய்த தவம் என்னை என்பதும், மணமகன் கண்களிலிருந்து புறப்படும் அருள் வெள்ளத்துள் நனைந்தோம் என்பதும், இவன் புண்ணியத்தின் வடிவாக வந்தவன் என்பதும் தமிழ் உலா இலக்கிய மரபு காணாத புதிய பண்பாட்டு வரவுகள்.

களவிலக்கியங்கள்

தொல்காப்பியம் உள்ளிட்ட தமிழ் இலக்கண நூல்கள் பலவும் களவிலக்கணம் உரைக்க வந்தபோது ஒற்றைச் சார்பு நிலையை மேற்கொண்டன. தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் முதன்முதலாகக் காணும்போது சுற்றுச்சூழல் எழில் காரணமாக ஐயம் கொள்ளுதல் இயல்பே. தமிழ் அக இலக்கணங்கள் யாவும் தலைமகன் தலைமகளைக் கண்டு 'இவள் விண்ணுலக மகளோ, வித்தியாதரர் மரபினளோ, அல்லது மண்ணுலக மகள்தானோ' என்று வியந்து, பின் அறிவால் 'இவள் மானுட மகளே' என்று தீர்மானிப்பான் என்றாலும், ஆண்மகனை அவ்வாறு ஐயுறுதலும் தெளிதலும் பெண்ணுக்கு இல்லை என்று அவர்கள் கூறினர். மன்மதனோ, முருகனோ என்று பெண் ஐயுற்றால், அவள் அறிவுக் குறைபாடு காரணமாக அவள் உள்ளத்தில் அச்சம் பிறக்குமே அன்றிக் காதல் பிறவாது என்று அன்னோர் வாதிட்டனர்.

மரபு காத்தல்

நெடுநாள் போற்றப்பட்டு வந்த இந்தக் காதல் இலக்கண மரபைச் சேக்கிழார் தகர்த்து எறிந்து புதுமரபு படைக்கிறார். திருவெண்ணெய் நல்லூரில் சிவனால் தடுத்து ஆட்கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் தலயாத்திரை மேற்கொண்டு திருவாரூர் சார்கிறார். ஆரூர்ப் பெருமானைத் தரிசித்துவரும் நாளில், பேரெழில் மிக்கவராகிய நங்கை பரவையார் தோழியரொடு ஆரூர்ப் பெருமான் ஆலய வழிபாட்டுக்கு ஒருநாள் வருகிறார். அவர் எழில்கண்ட சுந்தரர் 'இவள் யாராக இருக்கும்' என்று பலவாறு சிந்திக்கத் தொடங்குகின்றார்.

" கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவன் அருளோ அறியேன் என்று அதிசயித்தார் "

என்பது சேக்கிழாரின் அழகிய கவிதை. இவ்வாறு ஆடவன் ஐயுறுவதாகமட்டுமே பாடப்பட்டுவந்த அக இலக்கியக் காதல்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மரபின் கட்டுக்களை உடைத்துப் புதிய பண்பாட்டுத் தடம் காண்கிறார் சேக்கிழார்.

பரவையார் திறம்

கோயில் முற்றத்தில் வழிபாடு முடித்துத் திரும்பும் சுந்தரரைப் பரவையார் காண்கிறார். இதுவரை அவர் உணராத ஒரு வேட்கை அவருள் எழுகிறது. அச்சம் முதலிய நாற்குணங்களையும் அவ்வேட்கை தலைசாய வைக்கிறது. எதிரில் வரக் கண்டார்மீது காதல் பிறக்கிறது. 'யார் இவர்' என்று உள்ளத்துள் வினா எழுகிறது. இவன் யாராக இருப்பான் என்ற ஐயம் பரவையார் உள்ளத் துள்ளும் ஆடவனைப்போல், பிறக்கிறது.

" முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர் செஞ்சடை யண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ
என்னே என் மனம் திரித்த இவன் யாரோ என நினைந்தார் "

'இவ் வழகன் முருகனோ? அன்றி மன்மதனாக இருப்பானோ? வித்யாதரருள் ஒருவனோ? சிவனருள் பெற்ற ஒருவன்தானோ' என்று அடுத்தடுத்துப் பெண் மனத்தில் ஐயம் எழலும், நிறைவில் மானுட மகனே என்று ஐயம் தெளிதலும் பெண்மைக்கும் பெண்மைப் பண்புக்கும் பெருமை சேர்த்த சேக்கிழாரின் அரிய பதிவுகளுள் ஒன்றாகும்.

திருமணத்துக்கு முற்பட்ட உறவு

சங்க அக இலக்கியங்களும் அவற்றை விளக்க எழுந்த தொல் இலக்கணங்களும் திருமணத்துக்கு முற்பட்ட உடல் உறவை அறம் போலச் சித்திரித்துக் காட்டின. நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கலந்த தமிழ் அக இலக்கிய மரபில் தலைவனும் தலைவியும் களவுக் காலத்தில் தனியிடத்தில் சந்தித்து இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என உடலுறவு கொண்டிருந்ததாகச் சுட்டின. களவு, இரண்டு திங்களுக்குள் முடிவுக்கு வரவேண்டும் என்று எல்லையும் வகுத்தன. பலர் இந்தக் கற்பனை இலக்கியப் புனைவை நடைமுறை என்றே கருதித் தமிழர் நாகரிகம்பற்றித் தமக்குத் தோன்றியவாறு விளக்கம் தந்தனர். திருமணத்துக்கு முற்பட்ட உடல்உறவு தமிழர் நாகரிகத்துக்கு ஏற்புடையது அன்று என்று சிலர் சுட்டிக் காட்டியபோது, ஆய்வாளர் சிலர் இயற்கைப் புணர்ச்சி முதலியன வெறும் தழுவலே எனப் புதிய விளக்கம் தந்து ஒருவாறு

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சமாளித்தனர். கலைகளில், மக்கள் வாழ்க்கையில் நடைமுறையில் உள்ளனவற்றிற்கு மேலான சித்திரிப்பை எதிர்பார்த்தனர். வாழ்க்கையில் இல்லையாயினும் கலைகளிலாவது அது இருத்தல் வேண்டும் என்று விரும்பினர். கலைகள் சமூக நடைமுறை வாழ்வை அப்படியே சித்திரிக்காமல் கூடுதல் விருப்பங்களையும் கூட்டிக் கொண்டன. கலைகள் மக்களால் விரும்பப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

திருமருகல் நிகழ்வு

சேக்கிழார் இதுபற்றிச் சிந்தித்திருக்கிறார். நடைமுறைச் சமூக இலக்கியத்தில் இச்சிக்கல் குறித்து விடை தர முனைகிறார். அதனைத் தமது சமூகக் கடமை என்று அவர் கருதுகிறார். திருஞானசம்பந்தர் வரலாற்றில் அவர் தல யாத்திரை மேற்கொண்டு சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களுள் ஒன்றாகிய திருமருகலுக்கு ஒரு புலர்காலையில் வருகிறார். திருக்கோயில் வளாகத்தில், ஒரு பெண் இறைவன் திருநாமம் கூறித் தனித்து அழுது அரற்றும் குரல் ஞானசம்பந்தர் செவிகளில் விழுகிறது. அழுகுரல் வந்த இடம் நோக்கி அடியாரொடு செல்கிறார். பெற்றோருக்குத் தெரியாமல் மணம் செய்து கொள்ளும் விருப்போடு உடன்போக்கில் காதலனொடு வந்த ஓர் இளம் பெண் ஊர்ப் பொதுச் சத்திரத்தில் காதலன் பாம்பு கடித்து இறக்க, அவன் பிரிவுத் துயர் தாளாது அரற்றி அழுவதைச் சம்பந்தர் அறிகிறார். இரக்கமுற்று, அக் காதலன் உடலைச் சிவாலய முன்றிலுக்குக் கொண்டு வரச் செய்து, 'சடையாய்', என்று தொடங்கும் பதிகம் பாடி அருள் வேண்டுகிறார். இறந்த காதலன் உயிர் பெற்று எழுகிறான்.

ஐய வினாக்கள்

சமய நம்பிக்கை உடைய சிலர்கூட இன்று ஒரு வினா எழுப்புகின்றனர். ஞானசம்பந்தர் முதலியோர் பாடிய பாடல்களை ஓதினால், உரிய பலன் கிடைக்குமா என்று ஐயுறுகின்றனர். கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அருட்பனுவல்களை ஓதும் முறைமை இன்றும் சமயவாதிகளிடம் உள்ளது. இறந்தார் பிழைத்தார் என்பது பொய்ம்மை அன்று. சமய வாழ்வில் இது ஏற்கத் தக்கதே. என்றாலும், அறிவியல் போல நிரூபணம் செய்வது கடினம். ஆனாலும், சேக்கிழார் நம்மை நம்பிக்கையூட்டப் புதிய தடம் ஒன்றை அமைக்கிறார். காதலன் அருகே நின்று அழும் காதலியின் அழுகையின் ஊடே ஒரு சமூகப் பண்பைப் பதிய வைக்கிறார். தாய்மாமன் முறை கொண்ட அவன் பிணக்கோலம் கண்டு அரற்றும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

அவள் அழுகையின் இடையே ஒன்றைக் குறிக்கிறாள். சேக்கிழாரின் விளக்கம் இவ்வாறு வருகிறது:

" வாளரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாள் "

என்பது அத்தொடர். 'மாமனே நீ இறந்து கிடக்கிறாய். எங்கிருந்தோ வந்த பாம்புக்கு உன்னைத் தீண்டும் உரிமை இருந்தது. தீண்டிற்று; மாய்ந்தாய். உன்னை நம்பி உடன் வந்த நான், உன் அருகில் இருந்தும் உன் மேனியைத் தீண்டி அழும் உரிமை எனக்கு இல்லையே' என்று அவள் அழுதிருக்க வேண்டும். அவள் அழுகையின் உட்பொருள் சமூக மரபுகளுக்கு இசைவாகத் திருமண வினை நிகழாத காரணத்தால் அவனைத் தீண்டி அழும் உரிமை அவளுக்கு இல்லை என்பது. இதன்வழி சேக்கிழார், திருமணத்திற்கு முற்பட்ட உடல் உறவு தமிழர் நாகரிகச் சமுதாயத்தில் வழக்கமன்று என்பதை உறுதிப்பட நிறுவுகிறார்.

ஒழுக்க நெறியே, இறைநெறி

மேலும் ஓர் அழகு இந்நிலைக்களத்தில் உண்டு. மணம் புரிந்து கொள்ளும் விருப்போடு பெற்றோரைத் துறந்து இரவு நேரத்தில் தனி வழியே உடன்போந்த காதலன் - காதலி இருவரும், ஒருவரை ஒருவர் மனத்தால் தீண்டியிருந்தனரே அன்றி விரல் நகத்தாலும் தீண்டியிருக்கவில்லை என்பது சேக்கிழார் பதிவால் புலனாகிறது. திருஞானசம்பந்தர் காலத்தில் பலர் இறந்திருக்கக் கூடும். அவர்களை யெல்லாம் அவர் உயிர் பிழைக்கச் செய்தார் என்ற பதிவுகள் இல்லை. திருமருகலில் வணிகன் உயிர் ஞானசம்பந்தர் பதிகம் பாட மீண்டது என்றால், சமூகம் போற்றும் தலையாய ஒழுக்கத்தில் தலை நிற்பவர்களுக்கு எம்பெருமானின் அருள் என்றும் உண்டு என்பதை நிறுவும் சேக்கிழாரின் முயற்சியாகவே இதனைக் கருதி மகிழ வேண்டியுள்ளது. சமூகத்தில் மேலோர் விதித்த நல்லொழுக்க நெறி முறைகளுக்கும் இறையருளுக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது என்பதை நம்மால் உணர முடிகிறது.

ஆடவர் ஒழுக்கம்

திருஞானசம்பந்தர் வரலாற்றில் மேலும் ஒரு பண்பாட்டுப் பதிவைச் சேக்கிழார் செய்திருக்கிறார். சென்னையைச் சார்ந்த மயிலாப்பூரில் சிவநேசர் என்ற ஒரு வணிகர் வாழ்கிறார். பெருஞ் செல்வர்; ஒரே மகள்; பெயர் பூம்பாவை. இளமைக்காலம் தொட்டே சிவநேயச் செல்வியாக வளர்ந்துவரும் தம் மகளைத்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திருஞானசம்பந்தருக்கே மணம் முடிப்பதாக என்ற உறுதி பூணுகிறார் சிவநேசர்.

" சுற்றம் நீடிய கிளையெலாம் சூழ்ந்து உடன் கேட்பக்
கற்ற மாந்தர் வாழ்காழி நாடுடையவர்க்கு அடியேன்
பெற்றெடுத்த பூம்பாவையும் பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன் "

என்று மொழிந்தார்.

ஏழு வயதுப் பூம்பாவை பாம்பு கடித்து இறக்கிறாள். அவள் உடலை எரித்து, எந்த வடிவத்திலாயினும் இவளை ஞான சம்பந்தரிடம் சேர்ப்பேன் என்ற உறுதியுடன் சிவநேசர் எலும்பையும் சாம்பலையும் பாதுகாத்துவைத்து, அவர் வருகைக்காகக் காத்திருக்கிறார்.

மயிலாப்பூர் நிகழ்வுகள்

திருஞானசம்பந்தர் தொண்டைநாட்டு யாத்திரை மேற் கொண்டு திருவொற்றியூர் வந்து வழிபடுகிறார். சிவநேசர் ஒற்றியூருக்கும் மயிலாப்பூருக்கும் பந்தலிட்டு, துணிகளால் அலங்கரித்து ஞானசம்பந்தரை மயிலைக்கு அழைத்துவருகிறார். சிவநேசர் மகளுக்கு உற்றன கேட்டறிந்த சம்பந்தர் வழிபாடு முடித்து, எலும்பும் சாம்பலும் நிறைந்த குடத்தைத் திருக்கோயிலின் புறமதில் வாயிலுக்குக் கொண்டு வருமாறு சிவநேசரைப் பணிக்கிறார். சிவனை நினைந்து போற்றிச் சம்பந்தர் 'மட்டிட்ட புன்னையங் கானல்' என்று தொடங்கிப் பதிகப் பாமாலை பாடுகிறார். சிவன் அருளால் குடம் உடைய , திருமகள்போல் பன்னிராண்டுப் பருவ மகளாகப் பூம்பாவை எழுகிறாள். உலகவர் வியந்து போற்றுகின்றனர். சிவநேசர், தாம் முன்பு விரும்பியிருந்தவாறு பூம்பாவையை மணந்துகொள்ளுமாறு ஞானசம்பந்தரை வேண்டுகிறார். திருஞானசம்பந்தர் அதற்கு இசைந்திலர். 'சிவநேசரே! நீர் பெற்ற பெண் விடத்தால் மடிந்தாள். சிவன் அருளால் நான் தற்போது இவளை உயிர்பெறச் செய்திருக்கிறேன். பெண்ணுக்கு உயிர் தந்தவன் தந்தை அல்லவா? இவளை நான் மணக்குமாறு வேண்டும் உரை பொருந்தாது' என்று மறுக்கிறார்.

பண்பாட்டுப் பதிவு

சமயத்துறையில் தலைநின்றவர்கள் போற்றிய, சமூக ஒழுக்கத்தை இதன்மூலம் சேக்கிழார் உலகுக்கு அறிவிக்கிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

பெண்மையின் கற்பெலாம் ஆடவனின் ஒழுக்கச் சார்பால்தான் காவல் பெறும் என்பது சேக்கிழார் கருத்து. பிரமன்கூடத் தான் எண்ணி எண்ணித் திட்டமிட்டுப் படைத்த திலோத்தமை என்பவளின் அழகில் மயங்கி, தன் வயதையும் கருதாது அவள் பின்னே சென்று இரந்தான். தான், உயிர் பெறச் செய்த பெண் அழகு கண்டும், திருமண வயது அடைந்த ஞானசம்பந்தருக்கு எவ்விதச் சலனமும் ஏற்பட்டிலது. சிவனின் கருணை வெள்ளப் பெருக்காகவே பூம்பாவை ஞானசம்பந்தருக்குத் தோற்றம் தந்தாள் என்கிறார் சேக்கிழார்.

" எண்ணில் ஆண்டு எய்தும் வேதாப் படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான் அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினாறு ஆண்டு பேர் பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிரம் முகத்தால் கண்டார் "

சேக்கிழாரின் பண்பாட்டுப் பதிவுகளுள் இது குறிக்கத்தக்க ஒன்றாகும்.

சுந்தரர் பண்பாடு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் வரலாற்றிலும் ஓர் அரிய பண்பாட்டுச் செய்கை காணப்படுகிறது. திருவாரூரிலும் திருவொற்றியூரிலும் இரண்டு பெண்களை மணந்து இல்லறம் நிகழ்த்தியவர் சுந்தரர். பரவையார் ஊடிய காலை, பெரிதும் தளர்ந்து ஏக்கமுற்றுச் சிவனைப் பரவைபால் தூது போக்குகிறார். பெண் விழைவார்போல் புறத்தோற்றத்தில் காணப்படும் சுந்தரர் நெஞ்சில் தழைத்த பண்பாடு திருநாட்டியத்தான்குடியில் வாழ்ந்திருந்த பெரிய புராண நாயன்மார்களுள் ஒருவராகிய கோட்புலி நாயனார் இல்லத்தில் வெளிப்படுகிறது. தம் இல்லம் நாடிவந்த சுந்தர மூர்த்திகளை வரவேற்றுப் பணிந்து தம் இரு மகளிர்களாகிய சிங்கடியார், வனப்பகையார் இருவரையும் அழைத்துவந்து, சுந்தரர் தாள் மலர்களில் பணிய வைக்கிறார். பணிந்து எழுந்த இருவரையும், சுந்தரர் முன்னிருத்தி, 'என் மகளிர் இருவரையும் ஏற்றருள வேண்டும்' என்று விண்ணப்பிக்கிறார். சுந்தரர், அவர் வேண்டு கோளை ஏற்க மறுக்கிறார். பதினெட்டு ஆண்டுகளே நிரம்பிய சுந்தரர் அம்மகளிர் இருவரையும் தம் மகள்களாக ஏற்றுப் போற்றி மடிமீது இருத்தி உச்சி மோந்து கண்ணீர் சொரிந்தார். இதனை,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத்
தூய மக்கள் எனக்கொண்டு அப்
படியே மகண்மையாக் கொண்டார்
பரவையார்தம் கொழுநனார் "

என வரும் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. சைவத்தை ஏதீடாகக் கொண்டு, சமயம் கடந்த சமூக் வாழ்வில் ஒழுக்கநெறி நிலை நாட்ட இவ்வாறு சேக்கிழார் பல பண்பாட்டு நிகழ்வுகளை ஒளியூட்டி நிறைகிறார்.

மொழிப் பெருமை

சமுதாயத்தின் ஓர் அங்கமாகச் சமயம் திகழ்வதுபோல் மொழியும் சமூக வாழ்வில் ஓர் இன்றியமையாத ஊடகமாக நின்று சிறப்புப் பெறுகிறது. சைவத்தின்மேல் கொண்டிருந்த ஈடுபாட்டுக்கு இணையான ஈடுபாட்டைச் சேக்கிழார் தமிழ் மொழிமீதும் கொண்டிருந்தமையை நூல் முழுதும் பரக்கக் காண முடிகிறது. திருஞானசம்பந்தர் திரு அவதாரத்தால் விளைந்த பயன் கூறுமிடத்துச் சேக்கிழார், அவர் வருகையால்

" திசை அனைத்தின் பெருமை எல்லாம்
தென்திசையே வென்றேற
மிசை உலகும் பிற உலகும் மேதினியே
தனிவெல்ல
அசைவில் செழுந் தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறைவெல்ல... "

தமிழ்ச் சமுதாயம் மேன்மையுற்றதாகக் குறித்துக் காட்டுகிறார்.

தமிழ் ஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தரைத் தமிழோடு தொடர்புபடுத்தி அவர் பல அரிய தொடர்களைப் பதிவு செய்துள்ளார். சம்பந்தர் வருகையால் சைவத்திற்கு இணையாகத் தமிழும் கிளர்ந்தெழுந்ததாகவே சேக்கிழார் கருதுகிறார். சம்பந்தரை,

" மாமறைமுதல் கலை அகிலமும் ஓதாது உணர்ந்த முத்தமிழ் விரகன் "

" வண்தமிழால் எழுதா மறை மொழிந்த பிரான் "

" புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார் "

" மதுர முத்தமிழ் வாசகர் "

" சந்த முத்தமிழ் விரகர் "

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

'' இயலிசைத் தலைவனார் ''

'' ஏழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித்தனியே வாழவரும் அவர்''

''அருங்கலைக் கோன்''

என்றெல்லாம், முத்தமிழோடும் இணைத்துரைத்தல் தமிழ்மொழி வளர்ச்சிக்கு வித்திட்டவர் ஞானசம்பந்தரே என்பதை நிலை நிறுத்துவதாக அமைகிறது. நாவுக்கரசரையும் சுந்தரமூர்த்திகளையும் சேக்கிழார் தமிழோடு தொடர்புபடுத்திக் கதை நடத்துகின்றார்.

தமிழ்ப்பாடலே அருச்சனை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் தமிழின் சிறப்பு எடுத்துரைக்கத் தக்க வாய்ப்பு ஒன்று சேக்கிழாருக்கு அமைகிறது. திருமண நாளில் சிவன் கிழ வேதியராய் வந்து சுந்தரரோடு வல் வழக்காடுகிறார். வழக்கு வெண்ணெய் நல்லூர்ச் சான்றோர்முன் ஆராயப்பட்டு, வந்த வேதியருக்குச் சுந்தரர் அடிமை என்று உறுதி செய்யப்படுகிறது. மறையவர்கள் வேதியரை நோக்கி 'இவ்வூரில் தங்கள் இல்லம் எங்கே இருக்கிறது' என்று கேட்கின்றனர். 'என் பின்னே வாரீர்' என்று அவர் முன் செல்லச் சுந்தரரும், வேதியரும் அவரைப் பின் தொடர்ந்து செல்கின்றனர். திருவருட்டுறை எனப் பெயர் பெற்ற சிவாலயத்துள் சென்று, இறைவன் மறைகிறார். அனைவரும் திகைத்து நின்றனர். இறைவன் அசரீரி எழுகிறது. சுந்தரர் இறைவன் வலிய வந்து ஆட்கொண்ட திறத்தை வியக்கிறார். 'திருமன்றுள் நடமாடும் ஐயனே ! 'நீ வலிய வந்து ஆட்கொண்ட கருணைக்கு நான் என் செய்வேன்' என்று சுந்தரர் நெகிழ்கிறார். சிவனார் ஓர் அசரீரி தந்து, சுந்தரருக்கு 'வன்தொண்டன்' என்ற பெயர் சூட்டுகிறார். மேலும்,

> '' ...நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பில் மிக்க
> அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
> சொற்றமிழ் பாடுக ''

என்று பணித்தருளுகின்றார். சுந்தரர், 'நான் என் சொல்லி நின்னைப் பாடுவேன்' என்று கலங்கி உரைக்கிறார்.

மீண்டும் சிவன் 'முன்பு என்னைப் பித்தன் என்றே மொழிந் தனை: ஆதலாலே, என் பெயர் பித்தன் என்றே கொண்டு பாடுவாய்' என்று உரைத்தார். சுந்தரரும் 'பித்தா பிறைசூடி' என்று தொடங்கித் தமிழ்ப் பாமாலை பாடிச் சிவன் தாள் மலர்களில் சூட்டினார். இவ்வாறு கதை நடத்துகிறார் சேக்கிழார். அர்ச்சித்தல் என்ற சொல்லுக்குப் போற்றுதல், வாழ்த்துதல் என்பன பொருள்களாகும். அதுநாள்வரை சிவாலயங்களுள் வழிபாட்டின்போது வேத

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மந்திரங்களே ஓதப்பட்டு வந்திருக்க வேண்டும். 'இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்' என்றும், 'பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி.' என்றும் வரும் தொடர்களின் உண்மைப் பொருள் தெரிய வரவில்லை. அப்பர் பெருமான் திருத் தாண்டகத்துள், 'போற்றி! போற்றி' என நிறையும் பதிகங்கள் இடம் பெற்றுள்ளன. வேதங்களே வழிபாட்டில் முதன்மை இடம் பெற்றிருக்க வேண்டும். அருச்சனை என்பது இன்னது என்பதைச் சேக்கிழாரே வகைப்படுத்தி விளக்குகிறார். பாடல்களே அருச்சனை என்பது அவர் கருத்து. ஆதலால், 'சொற்றமிழ் பாடுக' என்ற தொடரால், அப்பாடல் தமிழ்ப்பாடல் ஆதல் வேண்டும் என்பது அவர் கருத்தாதலை உணர முடிகிறது.

திட்டமிட்ட பதிவுகள்

கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சுந்தரர் வரலாறு தமிழ் மண்ணில் விரிந்தது. அடுத்து நான்கு நூற்றாண்டுகளுக்குப்பின் சேக்கிழார் புராணம் பாடுகிறார். முன்னூல்களிலும் இறைவன் உரைத்த அசரீரி பற்றிய குறிப்புக்கள் இல்லை. அப்படி இருந்தும், ஒரு களம் அமைத்துக் கொண்டு, சேக்கிழார் இறைவன் கூற்றாகவே தமிழின் சிறப்புரைத்திருப்பது சிந்திக்கத் தக்கது. நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் அவதரித்துச் செந்தமிழ்ப் பண்ணிசைப் பதிகங்கள் பல அருளிய பிறகும் அவை இறைவன் சந்நிதியில் ஓதப்படாமல் வேதங்களே தொடர்ந்திருக்க வேண்டும். அந்நிலை மாறி, தமிழ் நாட்டுச் சிவாலயங்களில் தமிழிலேயே தேவாரப் பனுவல்களை ஓதி அருச்சனை நடைபெற வேண்டும் என்று சேக்கிழார் விரும்பியிருந்தமை தெளிவாகிறது. சொற்றமிழ் பாடுகென்றான் 'சிவன்' என்றோ, 'இறைவன்' என்றோ முடிக்காது 'தூமறை பாடும் வாயார்' என்று சொல்வது சிந்தனைக்கு உரியதாகிறது.

திருமறைக்காட்டு அற்புதம்

திருமறைக்காடு என்ற பழைமையான சிவத்தலத்தில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்து வழிபடச் சென்றனர். இறைவன் சந்நிதிக்கு எதிரே இருந்த வாயிற் கதவு மூடப்பட்டு அருகில் ஒரு தனிப்பாதை அமைத்தே அனைவரும் ஆலயத்துள் சென்று வழிபட்டுத் திரும்புதலை இருவரும் கண்டனர். வேதங்களால் அவ்வாயில் கதவு அடைக்கப்பட்டது என்றும், வேதம் வல்ல பெருகிய அன்புடையார் வந்து வேண்டினால் கதவம்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

திறக்கும் என்றும், அவ்வாறானவர் யாரும் இதுகாறும் இங்கே வந்திலர் என்றும், அதனால் ஒரு புடை சிறிய வாயில் திறக்கப்பட்டது என்றும் உள்ளூர் மக்கள் எடுத்துரைத்தனர். சேக்கிழார் தரும் பாடல் வரிகள் கவனிக்கப்பட வேண்டுவன.

" அருமறைகள் திருக்காப்புச் செய்துவைத்த
அக்கதவந்திறந்திட அம்மறைகள் ஓதும்
பெருகிய அன்புடை அடியார் அணைந்து
நீக்கப் பெறாமையினால்... "

என்பது சேக்கிழார் குறிப்பன. இதைக் கேட்ட ஞானசம்பந்தர் உள்ளத்தில் உறுதி பிறக்கிறது. இவ்வாயிலைத் திறந்து, அதன் வழியே ஆலயத்தின் உட்புகுந்து வழிபட விரும்புகிறார்.



மறைக்கதவும்

நாவரசர் தமிழ்

திருஞானசம்பந்தர் அருமறைத்தலைவர். வேதநெறி வாழ வந்தவர். வேதங்களால் திருக்காப்பிடப்பட்ட கதவுகள், வேதம் வல்ல அன்பர் ஒருவர் வாக்கால்தான் திறக்கும் என்று உள்ளூரார் உரைத்துள்ளனர். திருஞானசம்பந்தர், தம் பெருமை நிலைநாட்ட, தக்க தருணம் இது என்று கருதி, அவரே பாடியிருக்க வேண்டும். அவர் அங்ஙனம் செய்யாமல் தமிழ் மொழித் தலைவராகிய திருநாவுக்கரசரை 'மறைக்கதவம் திறக்கத் தாங்கள் பாடியருள வேண்டு' மென்று விண்ணப்பிக்கிறார். அப்பரை நோக்கி,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" ....நீரே இவ்வாயில் திருக்காப்பு நீங்குமாறு
மெய்ப்பொருள் வண்தமிழ் பாடி அருளும் "

என்று கேட்டுக்கொண்டதாகச் சேக்கிழார் குறிக்கிறார். நாவரசரும் அவ்வாறே தமிழ் பாட, மறைக்கதவம் திறக்கிறது. நாவரசர் தமிழ்ப் பண்ணிசைப் பாமாலையின் இன்பத்தைத் துய்த்திருந்த இறைவன், சற்றே காலந் தாழ்த்துத் திறந்தான். இருவரும் உள்ளே சென்று வழிபட்டு, மறைவாயிலை நண்ணினர்.

தமிழுக்கு முதன்மை

திருநாவுக்கரசர் சம்பந்தரை .நோக்கி, 'இனி வருங்காலங்களில் இக்கதவம் திறக்கவும் அடைக்கவும் ஏதுவாக, இக்கதவம் மீண்டும் அடைக்குமாறு நீங்கள் பாடவேண்டும்' என்று கேட்டுக் கொள்ளுகிறார். சம்பந்தரும் அவ்வாறே பாடக் கதவம் மீண்டும் அடைத்துக் கொள்கிறது. திருஞானசம்பந்தரின் செயலாகச் சேக்கிழார் விரிக்கும் பகுதிகள், தமிழ் மொழியின் மேன்மை உரைப்பதற் கென்றே பாடப்பட்டமை புலனாகிறது. மறைகளால் அடைக்கப் பட்ட கதவை, மறைவல்ல ஞானசம்பந்தரே பாடித் திறக்கச் செய்தார் என்று பாடாமல், நாவரசர் பாடித் திறந்ததாகப் பதிவு செய்தது, வேதத் தடைகளை வென்று தமிழ் முன்னேற வல்லது என்பதை நிறுவும் முயற்சியாகவே தோன்றுகிறது. வாய்மூரில், நாவரசருக்கு இறைவன் காட்சி தரத் தாமதித்தமைக்கான காரணம் விளங்கவில்லை. தமிழால் திறந்த கதவத்தை மீண்டும் அடைக்கப் பாடுமாறு பணித்த நாவரசர் செயல், தமிழறியும் பெருமாளாகிய சிவனுக்கு மனவருத்தத்தைத் தந்திருக்கலாம். நாம்அறியோம். எங்ஙனமாயினும் வேதத்துக்கும் மேலான இடம் தமிழ் மொழிக்கு உண்டு என்பதை நிலை நாட்டுவதில் சேக்கிழார் கொண்டிருந்த விருப்பம் உறுதியாகிறது.

தமிழ் ஆகமம்

திருமூலர் அருள் வரலாற்றில் தமிழ் மொழிச் சிறப்புரைக்க மேலும் ஒரு வாய்ப்புச் சேக்கிழாருக்கு அமைகிறது. இமய மலையிலிருந்து தமிழ்நாடு போந்த முனிவர் ஒருவர் பசுக்களின் துயர் நீக்க, மூலன் உடலில் தன் உயிரைச் செலுத்தி எழச் செய்து அவற்றின் துன்பம் துடைக்கிறார். பின் மீண்டும் வந்து, தம் உடலை அவர் தேடும்போது அது விட்ட இடத்தில் காணப்படவில்லை. உடல் மறைக்கப்பட்டதற்கான காரணத்தை ஞானத்தால் உணர்கிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

" தண்ணிலவார் சடையார்தாம் தந்த ஆகமப் பொருளை
மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்பக்
கண்ணிய அத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறந்த உணர்வுடையார் ஈசன் அருள் என உணர்ந்தார். "

சிவபெருமான் அருளிச் செய்தன சிவாகமங்கள். அவற்றைத் தமிழில் இடம் பெறச் செய்யச் சிவனே உளங்கொண்டு திருமூலரை அப்பணிக்கு நியமித்தான் என்கிறார் சேக்கிழார். திருமந்திரம், தமிழ் ஆகமம் என்பது உணர்த்தப்படுகிறது.

ஆனாய நாயனார்

ஆனாயர்

சேக்கிழாரின் பெரிய புராணத்துள் நுண்கலைகள் பற்றிய சில அரிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. அறுபத்து மூவரில் ஒருவரான ஆனாய நாயனார் துளைக் கருவிகளுள் ஒன்றாகிய வேய்ங்குழல் வாசித்த திறம் எடுத்துரைக்குமிடத்து, இசை நுணுக்கங்கள் சிலவற்றைச் சேக்கிழார் சுட்டிச் செல்கிறார். மாடு மேய்க்கச்சென்ற இடத்தில், பூத்துக் குலுங்கி நின்ற கொன்றை மரம் ஒன்றை அவர் சிவனாகவே கண்டு பூரிக்கிறார். சிவபெருமானுக்கு உரிய திருவைந்து எழுத்துக்களை உள்ளுறையாக அமைத்து ஆனாயர் குழலிசையை எழுப்பினார். முதலில் குறிஞ்சிப் பண்ணைப் பாடிய பிறகு, முல்லைப் பண்ணினை அமைத்துப் பாடினார். பாலை யாழுக்கு அமைந்த, தாரம், உழை என்னும் இரண்டு தாளங்களிலும், ஐந்தெழுத்தை வைத்து இசைத்தார். ஆயத்தம், எடுப்பு, உற்கிரகம், சஞ்சாரம், இடாயம் என்னும் ஐந்து துறைகளிலும், ஏற்ற முறையினை விளைவித்துப் பாடினார். மெலிவு, சமன், வலிவு என்ற மூவகைச் சுருதிகளின் முறைப்படி அளவு குறையாமல் இசை மாரி பொழிந்தார். இசை நூல்களில் கூறிய இலக்கணம் தவறாது அளவுபடுத்திய பெருவண்ணம்,

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இடைவண்ணம், வனப்பு வண்ணம் என்கின்ற இசை வேறுபாடு களுக்கு எல்லாம் ஏற்பப் பாணி, தாளம், இசை, தூக்கு, நடை முதலியவற்றுடன் இன்னிசை பரப்பினர்.

இசை நுணுக்கங்கள்

ஆனாய நாயனார் வரலாற்றில் குழல் இசை நுணுக்கங்களைப் பதிவு செய்த சேக்கிழார், திருஞானசம்பந்தர் வரலாற்றில் திருநீல கண்ட யாழ்ப்பாணரின் யாழ் மீட்டும் திறத்தையும் விளக்கம் பெறச் செய்தார். திருஞானசம்பந்தர், காரைக்காலை அடுத்த திருத் தருமபுரம் செல்கிறார். அவ்வூர் பாணனாரின் தாயார் பிறந்த ஊர். அவ்வூர் மக்கள் திருஞானசம்பந்தரின் பெருமை உணராது பாணர் மேல் கொண்ட அன்பு காரணமாக ஞானசம்பந்தரைக் குறைத்து மதிப்பிட்டு உரைத்தனர். சம்பந்தர் பதிகம் சிறப்புப் பெறுவதற்கும் பாணனாரின் யாழிசையே காரணம் என்பதுபோல் அன்னார் உரை அமைந்தது. பாணர் இதனை ஏற்காது, ஞானசம்பந்தரை அணுகி யாழில் அடங்காத இன்னிசைப்பா ஒன்றை வழங்கி எம் உறவினரை உண்மை உணரச் செய்ய வேண்டுமென்று வேண்டினார். சம்பந்தர் சிவபெருமான் முன்பு சென்று வணங்கி, திருப்பதிகத்தின் உண்மை இசை உலகினர் கண்டத்திலும் யாழிலும் இசை நூலில் கூறப்பட்ட பிற இசைக் கருவிகளிலும் அடங்காமையைக் காட்டும் பொருட்டு, 'மாதர் மடப்பிடி' என்று தொடங்கும் யாழ்முரித் திருப்பதிகத்தை எடுத்துப்பாடி நிறைவித்தார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர்

அடியவர்களும் தம் உற்றார் உறவினர்களும் காணப் பாணனார் ஞானசம்பந்தர் அருளிய பதிகத்தை யாழினுள் வைத்து வாசிக்கத் தொடங்கினார். அப்பதிக இசை, யாழ் நரம்புகளுக்குள் கட்டுப்படவில்லை. யாழ்ப்பாணர் வருந்தி, தம் கையில் இருந்த யாழைத் தரையில் மோதி உடைக்க முனைந்த போது சம்பந்தர் அவரைத் தடுத்து நிறுத்தி, அவரை நோக்கி 'ஐயரே! உமாதேவி யுடன் கூடிய சிவபெருமான் அருளிச்செய்த திருவருளின் பெருமை யெல்லாம் அறிவதற்கு நம்மிடமுள்ள இந்தக் கருவி போதுமானது அன்று. நம் இயல்புக்குத் தக்கவாறு இவ்வுலகத்தவர் அறியும் படியாக இந்தக் கருவியின் அளவைக்குள் அமையும் வகையில் அமைத்துப் பாடுதலே முறையாகும். மனத்தாலும் அளவுபடாத இசைப் பெருமை, செய்கையினால் அளவு படுமோ? நீர், இந்த யாழைக் கொண்டே முன்போல் திருப்பதிக இசையை

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இயன்ற மட்டும் வாசிப்பீர்' என்று அறிவுரை கூறி, யாழை அவரிடம் ஒப்படைத்தார்.

" செய்ய சடையார் அளித்த திருவருளின்
பெருமையெலாம் தெரிய நம்பால்
எய்திய அக்கருவியினில் அளவுபடுமோ"

என்றும்

" சிந்தையில் அளவு படா இசைப்பெருமை
செயலளவில் எய்துமோ நீர்
இந்த யாழினைக் கொண்டே இறைவர்
திருப்பதிக இசை இதனில் எய்த
வந்தவாறே பாடி வாசிப்பீர் "

என்றும் வரும் பகுதிகள் இசை குறித்த சேக்கிழாரின் பதிவுகளாக அமைகின்றன.

சேக்கிழார், தாம் படைக்க எடுத்துக் கொண்ட பெரிய புராணம் என்ற பெருங்காப்பியத்தை ஏதீடாகக் கொண்டு தம் தாய்ச் சமயத்தின் வளர்ச்சிக்கும் தாம் வாழ்ந்திருந்த தமிழ்ச் சமுதாயத்தின் உயர்ச்சிக்கும் ஆற்றிய உன்னதமான பணிகளை மேலே வகைப்படுத்திக் கண்டோம். சமூகத்தின் அங்கமான மொழி, கலைகள் குறித்த அவருடைய உயரிய பணிகளும் இனங் காட்டப்பட்டன. இவையல்லாது, சேக்கிழாரின் வேறு சில அரிய பகுதிகளையும் கண்டு மகிழ்ந்து நாம் நிறைவை அடையலாம்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

5. அரிய தொடர்கள்

நுட்ப வெளிப்பாடுகள்

காப்பியப் போக்கில் பொருள் பொதிந்த பல அரிய தொடர்புகளைச் சேக்கிழார், இனங்காட்டி மகிழ்விக்கும் இயல்பு படைத்தவர். திருநீலகண்டத்துக் குயவனார், மனைவியிருக்க பரத்தையரை நாடிச் சென்ற திறத்தை,

" இளமை மீதூர இன்பத்துறையில் எளியர் ஆனார் "

என்று ஒரே வரியில் பதிவு செய்து காட்டுவது, திட்டமும் நுட்பமும் செறிந்ததாக அமைகிறது. சிவன் இயல்புரைக்கும் இடத்து, எல்லாச் செல்வங்களையும் வழங்குபவனும் அவனே. அவற்றை இல்லையாகச் செய்பவனும் அவனே என்பதை,

" எல்லாம் தான் வைத்து வாங்க வல்லான் "

என்ற தொடரால் குறித்து, இறைமை இயல்பு பேசி மகிழ்வார். கணவன் பெயரை மனைவி கூறல் அக்காலத்து வழக்கில் இல்லை. இயற்பகை நாயனார் புராணத்தில், தூர்த்த வடிவில் வந்த இறைவன், ஊரவர் தம்மேல் வர, அஞ்சினார்போல் இயற்பகையார் மனைவியைப் பார்க்கிறார். அம்மையார், அவரைத் தேற்றுமுகத்தான்,

" இறைவனே அஞ்ச வேண்டா! இயற்பகை வெல்லும் "

என்று கணவர் பெயர் கூறுகிறார். கணவன் இறந்தால், மனைவி, அவன் பெயர் கூறலாம் என்பதைச் சிலப்பதிகாரம் காட்டியது. கணவன், தம்மைத் துறந்த போதும் கணவன் பெயர் கூறலாம் என்பதைச் சேக்கிழார் நாட்டுகிறார்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில், அடியார் போலப் பொய் வேடம் கொண்டு வந்த முத்த நாதன், மெய்ப்பொருளார் குனிந்தபோது, புத்தகத்துக்குள் வைத்திருந்த வாளை எடுத்து, அவர் கழுத்தில் பாய்ச்சினான். 'கொலை' என்பதைத் தம் நூலுள் யாண்டும் பதிவு செய்யாத சேக்கிழார்,

" பத்திரம் வாங்கித்தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய "

எனக் காட்டுகிறார். தான், என்ன நினைத்து வந்தானோ, அதனையே செய்தான் என்கிறார். அப்பூதி அடிகளார் வரலாற்றில் அவரைக்

மெய்ப்பொருள் நாயனார்

" களவு பொய், காமம், கோபம் முதலிய குற்றம் காய்ந்தார் "

என்று, அவர், பஞ்சமா பாதகங்களுள், ஒன்றும் செய்யாத பண்பினர் எனக் குறிக்கவரும் சேக்கிழார், பாதகங்களுள் நான்கை வெளிப்பட எடுத்துரைத்து, 'கொலை', என்பதை முதலிய என்ற சொல்லாலே தழுவி நிற்கிறார். ஏனாதி நாதரை அதிசூரன் வாளால் குத்த வந்தவிடத்து, அதனையும் வெளிப்படக் கூறாது

" முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான் "

என்று கூறிச் செல்கிறார்.

நளினமான தொடர்கள்

பெண் பூப்பு எய்தினாள் என்பதனை அக்காலச் சமூக மரபுகளை உணருமாறு காரைக்கால் அம்மையார் வரலாற்றில்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சேக்கிழார் ஒரு பதிவை அமைக்கிறார். அம்மையார் பூப்புஎய்திய செய்தியை 'இல் இகவாப்பருவம்' அடைந்ததாகக் குறிக்கிறார். பெண்கள் பருவம் எய்திய பிறகு, அவர்கள் இல்லத்தின் எல்லை கடந்து வெளியில் வருதல் இல்லை என்பது பழந்தமிழ்ச் சமூக வழக்கு. காரைக்கால் அம்மையாருக்கும் பரமதத்தனுக்கும் நடந்த திருமணம் மன ஒருமையொடு அமையாதது என்பதை,

> "தளிரடி மென் நகை மயிலைத் தாது அவிழ்தார்க் காளைக்குக்
> கடிமகிழ் சுற்றம் போற்றக் கலியாணம் செய்தார்கள்"

எனப் பதிவு செய்கிறார். மயில் - காளை எனக் குறித்தமை, பொருந்தாத இணை என்பதை அறிவிக்க வந்தது.

இறந்தான் என்பதைக் கூற விழையாத சேக்கிழார் அப்பூதி அடிகள் வரலாற்றில் அவர் மகன் மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்ததை உரையாது, அவன் எங்கே என்று நாவரசர் கேட்ட போது, இறந்தான் என உரையாது 'இப்போது இங்கு அவன் உதவான்' என உரைக்கச் செய்தது சேக்கிழாரின் பண்பாடு.

பெண்மையை உயர்த்துதல்

தமிழில் எழுந்த பிற காப்பியங்கள் பலவும் தம் கதை மாந்தர்களை 'அவன்' என்றும், 'அவள்' என்றும் ஒருமையில், 'ன'கர விகுதியும் 'ள'கர விகுதியும் போட்டுக் குறித்தன. மரியாதைக்குரிய நாயன்மார்களைத் தமிழ் மக்கள் உள்ளத்தில் உயரிய இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கில், அவர்களை ஒருமையில் சுட்டாது ஆண், பெண் பாத்திரங்களைப் பலர்பால் 'ர'கர விகுதி கொடுத்து, அவர் என்றே சேக்கிழார் குறித்திருப்பது பெருஞ்சிறப்பு. இறைவன் கூற்றாக வரும் இடங்களில்மட்டுமே அவன், அவள் என்ற ஒருமை பெரிய புராணத்துள் குறிக்கப்பட்டன. சேக்கிழார் தம் கூற்றாகக் கதை நடத்தும் இடங்களில் எல்லாம், இப் பாதுகாவலை மேற்கொள்கிறார். திருத்தொண்டத் தொகையிலும், திருத்தொண்டர் திருவந்தாதியிலும் பெரும்பாலான இடங்களில் நாயன்மார்கள் ஒருமையிலேயே குறிக்கப்பட்டனர். தம் கதைமாந்தர்களை ஒருமையில் கூறாது, மரியாதைப் பன்மை பெய்து கதை நடத்தியதாலோ என்னவோ தமிழ்ப்புலவர் வரிசையில் சேக்கிழாரை எவரும் ஒருமையில் அழைக்காது மரியாதைப் பன்மை பெய்தே அழைக்கின்றனர். பிறரை நாம் மரியாதைப்படுத்தினால், உலகம் நம்மை மரியாதைப் படுத்தும் என்பதை உணர முடிகிறது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நுண்ணிய பதிவுகள்

சேக்கிழார், பெரிய புராணத்துள் வியக்க வைக்கும் அருமைப்பாடு அமைந்த நுண்ணிய பதிவுகள் சிலவற்றையும் அமைத்துள்ளார். திருநாளைப் போவாராகிய நந்தனார் வாழ்ந்திருந்த காலத்தில், சில குறிப்பிட்ட மரபில் வந்தாரைத் திருக்கோயிலுக்குள் அனுமதிக்க மறுத்துள்ளனர். அவருக்குத் தில்லை அம்பலவனைத் தரிசிக்க விருப்பம். தான் பிறந்த குடிமரபு பற்றிய தாழ்வுணர்ச்சியால், கோயிலுக்குள் செல்ல அவர் முயலவில்லை. ஆனால், ஒரு வாய்ப்பு அவருக்கு இருந்தது. ஆண்டுக்கு இரு முறை நடராசப் பெருமான் கோயிலைவிட்டு எழுந்தருளித் தேர் வீதியில் காட்சி தருவான். பெருமானைக் காண்பதே விருப்பம் என்றால், நந்தனார் மார்கழித் திருவாதிரை நாளிலோ, ஆனி மகத்திலோ பெருமானைத் தரிசித்து மகிழ்ந்திருக்க முடியும். ஏன் அதை நந்தனார் முயலவில்லை என்ற வினா நம்முன் எழுகிறது. சேக்கிழார் நுட்பமாக ஒரு தொடர் அமைத்து, அவர் அடிமன விருப்பத்தை இனங் காட்டுகிறார்.

" .....மிக்கெழுந்த
சித்தமொடும் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்த பெருங்காதல் உணர்வு அழியாது வந்து உதிப்ப "

என்பது அவர் தரும் விளக்கம். நடராசப் பெருமானைத் தரிசிப்பது மட்டும் நோக்கமன்று. அப்பெருமானை அவன் நடனமாடும் திருமன்றுள் சென்று வணங்க வேண்டும் என்ற உறுதி அவர் உள்ளத்தில் இருந்ததைச் சேக்கிழார் நுண்மையாக இனங் காட்டுகிறார்.

பெண்மைக்கு வழிகாட்டல்

எல்லாப் பெண்களுக்கும் சமூகத்தில் அவர்கள் விரும்பும் நல்வாழ்வு அமைந்துவிடுவ தில்லை. வாழ்க்கையில் அன்னாருக்குச் சோதனைகள் பல வந்து இணைகின்றன. சேக்கிழார், சைவத்தின் கொடையாகச் சோதனைகளுக்கு ஆளாகும் பெண்களுக்கு மூன்றுவகைத் தீர்வுகளைத் தருகிறார். வாழ்க்கை தொடங்குவதற்கு முன்னரே தீய்ந்து போகுமானால், மறுமணம் புரிந்து கொள்ள விரும்பாத நிலையில் சிவாலயங்களைச் சார்ந்து துறவு நிலை மேற்கொள்ளாது, மனைத்தவம் புரிந்தவாறு இறைபணி செய்து செம்மாப்புடன் வாழலாம் என்பதைத் திலகவதியார் வரலாற்றில் வைத்து நம்பிக்கையூட்டுகிறார். கணவன் செயல்களில் விருப்பம் இல்லாது வெறுப்புத் தோன்றுமானால்,

Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அவனை உதறிவிட்டு, தம் கோலம் பிறர் மனத்தில் தவறான எண்ணங்களைத் தோற்றுவிக்காதவாறு எளிய உடைபூண்டு சிவத்தல யாத்திரைகளை மேற்கொண்டு விருப்பமான தலத்தில் தங்கிப் பணி செய்து வாழலாம் என்பதைக் காரைக்கால் அம்மையார் வரலாற்றை முன்னிறுத்தி நம்பிக்கை ஊட்டுகிறார். கணவன் தம் வாழ்க்கை விருப்பங்களுக்கு முரணானவனாக இருந்தால் தக்கவர்கள் துணையோடு அவனை மெல்ல மனமாற்றம் அடையச்செய்து இணைந்த வாழ்வை மேற் கொள்ளலாம் என்பதை மங்கையர்க் கரசியார் பெருமித வரலாற்றை முன்னிறுத்தி வழிகாட்டுகிறார்.

சத்தியாக்கிரகம்

முடியாட்சிக்கு எதிரான தனிமனிதப் போராட்டத்தையும் சத்தியாக்கிரகத்தையும் உண்ணா நோன்பையும் நாவரசர் வரலாற்றின்வழி முன்வைக்கிறார் சேக்கிழார். பல்லவன் அழைத்த போது நாவுக்கரசர் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று கூறி மறுத்த மன உறுதி மிகப் பெரிதாக ஆராயப்பட வேண்டும். பழையாறையில், சமணர்கள் சிவாலயத்தைக் குப்பை கூளங்களால் மூடி மறைத்தனர். அறிந்த நாவரசர், அங்கேயே உண்ணா நோன்பு மேற்கொண்டு, சோழன் கவனத்தை ஈர்க்கிறார். குப்பை கூளங்கள் அகற்றப்பட்டுச் சிவாலயம் வழிபாட்டுக்குத் திறந்து விடப்படுகிறது. காந்தியடிகளுக்கு முற்பட்ட, முதல் சத்யாக்கிரகி நாவரசரே என்பதை எடுத்துரைக்கத் தவறியவர்கள் நாம்தான்.

செல்வத்தின் பயன்

செல்வம் படைத்தவர்கள் இறைவன் பெயரால் உயிர்க்குலத் திற்குப் பல்வேறு நல்லறங்களை ஆற்ற வேண்டும் என்பது சேக்கிழாரின் பெருவிருப்பம். இளமைக் காலத்தில், உலகியலில் நாவரசருக்குப் பற்று அற்றது. செல்வமோ மிக்கிருந்தது. தேச நெறியும் நிலையாமையும் அவரால் உணரப்பட்டன. நல்லறங் களுக்குத் தம் செல்வத்தைப் பலவாறாகப் பயன் கொண்டார்.

> " காசினிமேல் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
> ஆசில் அறச்சாலைகளும் தண்ணீர்ப்பந்தலும் அமைப்பார் "

என்றும்,

> " காவளர்த்தும் குளம்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
> மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
> நாவலர்க்கு வளம் பெருக நல்கியும் நானிலத்துள்ளோர்
> யாவருக்கும் தவிராத ஈகை வினைத்துறை நின்றார் "

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

என்றும் அறங்களைச் சேக்கிழார் பட்டியல் இடுகிறார். நாவுக்கரசரையே தம் ஞானகுருவாக ஏற்றுப்போற்றிய அப்பூதி அடிகளாரும் தம் தலைவருக்கு விருப்பமான அறங்களையே தாமும் செய்தார் என்று இனங்காட்டுவது ஒப்பு நோக்கி மகிழத்தக்கது.

வாக்குச் சகாயம்

சமூக மனிதர்கள் தம்மால் இயன்றவாறு சகமனிதர்களுக்கு வாக்குத் தானமாவது செய்தல் வேண்டும் என்று சேக்கிழார் விரும்புகிறார். கதை நடத்தும் நோக்கம் ஒன்றுமட்டும் சேக்கிழார் கொண்டிருந்தால் இத்தகு பதிவுகள் பெரியபுராணத்துள் இடம் பெற்றிருக்க முடியாது. அப்பூதி அடிகள் வரலாற்றில், திங்களூர் சென்றடைந்த நாவுக்கரசர் தம் பெயரிட்டு ஒரு தண்ணீர்ப்பந்தல் அமைந்திருப்பது கண்டு, சிந்தையில் நயப்புற்று 'இப்பந்தல் இப்பெயரிட்டு இங்கு அமைத்தார் யார்' என்று வினவுகிறார். அப்பந்தல் யாரால் அமைக்கப்பட்டது என்பதை அறிந்த பண்பாளர் ஒருவர், அப்பூதி அடிகள் என்ற ஒருவரால் அமைக்கப்பட்டது என்று மட்டும் கூறாது,

" ...... ஆண்ட அரசு என்னும் பெயரால்
செப்பருஞ்சீர் அப்பூதி அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள சாலை குளம் கா என்றார் "

என்று விடைபகர்ந்து, நம்மைப் பெருமிதம் கொள்ள வைக்கிறார். தாம் வாழும் பகுதியில் நல்லறஞ் செய்வாரை இகழ்ந்துரைக்காது அவரைப் பெருமைப்படுத்துவது ஒரு பண்பாடு. இத்தகு அன்பு மொழிகள் அன்னாரை மேலும் மேலும் அறஞ்செய்ய ஊக்கம் தருவனவாக அமையும். பந்தர்மட்டு மல்லாது, வேறு பல அறங்களும், அப்பூதி அடிகளாரால் நிகழ்த்தப்படுகின்றன என்று காட்டி உரைத்த உள்ளூர் மனிதரின் பண்பாடு தற்காலத்து வாழ்வாருக்கு இனங் காட்ட வேண்டிய ஒன்றாகும்.

தேவையைத் தேர்தல்

சேக்கிழாரின் பெரிய புராணத்துள் இன்றைக்கு நம்மில் பலர் ஏற்க இயலாத பல பதிவுகள் உள்ளன. ஒரு சமயம் சார்ந்த இலக்கியத்தில் அத்தகைய பதிவுகள் அமைவதை அறிவு உலகத்தால் புரிந்து கொள்ள இயலும். பெண்மைக்கு எதிரான சில நிகழ்வுகளை நாம் ஏற்க இயலாது என்பதும் உண்மை. நிகழ்வை மட்டும் உற்று நோக்காது, பின்னே நிலை கொண்டிருந்த மனநிலையையும் சேர்த்துவைத்துக் காணும்போது, சிலவற்றை நம்மால் ஏற்கவும்

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

இயலும். சமயத்துறையில் கதை நடத்துவார் எவரும் தம் விருப்பம்போல் கதைகளில் மாற்றத்தைச் செய்தல் இயலாது. பல கட்டுப்பாடுகளும் மரபுகளும் அங்கே உண்டு. அத்தகு எல்லைகளுக்குள் தம்மை ஆட்படுத்திக்கொண்டே சேக்கிழார், வரலாற்றுக் காப்பியம் பாடுகிறார். முரண்பட்ட சமூக அமைப்புக்களுக்கு இடையே வாழ்ந்தாலும் தமக்குத் தேவையானவற்றை மட்டும் தேர்ந்து கொண்டு மகிழ்ந்து வாழக் கற்றவர்கள் நாம். முரண்பாடுகளைக் குறைகூறிக் காலம் கழிப்பதைவிடச் சாத்தியமானவற்றை இனம்பிரித்து ஏற்றுப் போற்றி வாழ்தல் வாழுங்கலையில் தலையாயது.

சேக்கிழாரின் வெற்றி

சைவம், உயிர்ப்புடைய உலகப் பெருஞ் சமயங்களுள் ஒன்று. காலப் பழமையும் சாலப் பெருமையும் கொண்டது அது; கடவுளின் பெயரால் உயிர்க்குலம் அனைத்தையும் வாழச் செய்ய வேண்டுமென்ற கருணையில் சிறப்பது. அத்தகு, உன்னத சமயத்தில் வாழ்ந்திருந்த பலர் இவ்வாறெல்லாம் வாழ்ந்திருந்து, இப்படி யெல்லாம் தொண்டு செய்தனர் என்பதைச் சேக்கிழார் போன்றவர்கள் எடுத்துக் காட்டும்போது நம் சிந்தனையும் விரிகிறது. இயன்றவாறு, பிறருக்கு உதவுவது என்பதை நம்மை அறியாமலேயே நம்மைச் செய்யவைக்கும் ஆற்றல் இத்தகு வரலாறுகளுக்கு உண்டு. சேக்கிழாரின் இந்த அரிய முயற்சி, கடந்த எண்ணூறு ஆண்டுகளில் வெற்றி பெற்றிருப்பதை நிறுவிக் காட்ட ஏராளமான சான்றுகள் உள்ளன.

புத்துலகம் காண்போம்

சேக்கிழார் ஒரு பண்பாட்டுச் செல்வர். சிவபக்தர். அளப்பரிய உயிர் இரக்கமும் மனித நேயமும் கொண்டு வாழ்ந்த மாமனிதர். சிக்கலான கதைப்பகுதிகள் பலவும் ஒரு பண்பாட்டு மாமனிதரால் கையாளப் பட்டதால் புது அழகு பெற்றன. இத்தகு மாபெரும் ஒரு பண்பாட்டுக் காப்பியம் சேக்கிழார் வாயிலாக வெளிப்பட வேண்டுமென்று உளங் கொண்ட சிவனருள் வணங்கத் தக்கது. நாயன்மார்கள் நம் முன்னோர்கள்; வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள்; நாம் நடையிடுவதற்கு இராஜபாட்டை அமைத்துத் தந்த தியாக சீலர்கள். சேக்கிழாரைச் சிந்தையில் வைத்துப் போற்றுவோம். நாயன்மார் காட்டிய நன்னெறியில் வாழ்ந்து, புத்துலகம் காண்போம்! சிவனருள் என்றென்றும் துணை நிற்கும். வாழ்க உலகெலாம்!

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

6. நாயன்மார் பற்றிய குறிப்புகள்

1. அதிபத்த நாயனார்: நுளையர் (மீன் பிடிப்பவர்) - சோழ நாடு - நாகப்பட்டினம் - நவரத்தினம் இழைத்த பொன்மீனைத் தாம் வைத்துக்கொள்ளாது கடலில் விடுத்துச் சிவார்ப்பணம் செய்தவர். காலம் தெரியவரவில்லை.

2. அப்பூதி அடிகள் நாயனார்: அந்தணர், சோழநாடு, திங்களூர் - மகன் இறந்ததையும் மறைத்துத் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு விருந்தளிக்கத் துணிந்தவர். கி.பி. 7ம் நூற்றாண்டு.

3. அமர்நீதி நாயனார்: வணிகர், சோழநாடு. பழையாறை. கௌபீனத்திற்கு நிறையாக மனைவி, மக்கள், சொத்துக்களுடன் தாமும் தராசுத்தட்டில் ஏறி அனைத்தையும் சிவனடியாருக்குத் தந்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

4. அரிவாட்டாய நாயனார்: வேளாளர், சோழநாடு, கணமங்கலம், சிவபெருமானுக்கு எடுத்துச்சென்ற நிவேதனப் பொருட்கள் தரையில் சிந்தியமைக்காகத் தம் கழுத்தை அரிந்துகொள்ள முயன்றவர். காலம் தெரியவரவில்லை.

5. ஆனாய நாயனார்: இடையர், மழநாடு, மங்கலவூர், பசுமேய்க்கும்போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் புகுத்தி வாசித்து அருள் பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

6. இசைஞானியார்: ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தாயார் கி.பி.9ஆம் நூற்றாண்டு.

7. இடங்கழி நாயனார்: அரசர், கோனாடு, கொடும்பாளூர். அடியார் வழிபாடு செய்ய நெல் திருடியவர்களுக்கு மேலும் நெல்லும் பொருளும் வழங்கியவர். காலம் தெரியவரவில்லை.

8. இயற்பகை நாயனார்: வணிகர், சோழநாடு, காவிரிப் பூம்பட்டினம். சிவனடியார் வேண்டியவாறு தம் மனைவியையே தானமாகக் கொடுத்தவர். காலம் தெரியவரவில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

9. இளையான்குடி மாற நாயனார்: வேளாளர், இளையான் குடி. நள்ளிரவில் வீடு தேடி வந்த சிவனடியாருக்கு, வயலில் விதைத்த நெல் மணிகளை அரித்து வந்து, உரியவாறு அமுது செய்வித்தவர். காலம் தெரியவில்லை.

10. உருத்திர பசுபதி நாயனார்: அந்தணர், சோழநாடு, திருத்தலையூர். இரவும் - பகலும் திருக்குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று ஸ்ரீருத்திர மந்திரம் செபித்தவர். காலம் தெரியவில்லை.

11. எறிபத்த நாயனார்: சோழநாடு, கருவூர். பூக்குடலையைச் சிவனடியாரிடமிருந்து பறித்துச் சிதறிய பட்டத்து யானையை வெட்டி வீழ்த்தியவர். காலம் தெரியவரவில்லை.

12. ஏயர்கோன்கலிக்காம நாயனார்: வேளாளர், சோழநாடு, திருப் பெருமங்கலம். சிவபெருமானைப் பரவை நாச்சியாரிடம் தூது விடுத்தமைக்காகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளை வெறுத்துச் சிவனருளால் பின்பு நட்புப் பாராட்டியவர். காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டு.

13. ஏனாதிநாத நாயனார்: சான்றார் (மரம் ஏறுபவர்கள்) சோழநாடு. எயினனூர். போர்புரியும் பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும், அவன் கைவாளால் வெட்டி மாயும்படி எதிர்க்காது நின்றவர். காலம் தெரியவரவில்லை.

14. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்: குறுநில மன்னர், தொண்டை நாடு, காஞ்சிபுரம், பதவியை வெறுத்துத் தலயாத்திரை மேற்கொண்டு, சேத்திரக்கோவை வெண்பா என்ற நூலைப் பாடியவர். காலம் தெரியவரவில்லை.

15. கணநாத நாயனார்: அந்தணர், சோழநாடு, சீர்காழி. திருஞானசம்பந்தரை வழிபட்டுச் சரியை நெறியில் நின்றவர்களுக்குப் பயிற்சி அளித்தவர். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு.

16. கணம்புல்ல நாயனார்: இருக்குவேளூர். புல்லறுத்து, நெய்வாங்கி விளக்கெரித்தவர். நெய்வாங்க இயலாத நிலையில் தம் தலை முடியையே விளக்காக எரித்தவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

17. கண்ணப்ப நாயனார்: வேட்டுவர். தொண்டைநாடு. உடுப்பூர். ஆறே நாளில் அளவற்ற பக்தி கொண்டு, காளத்தி இறைவனுக்குத் தம் கண்களைப் பெயர்த்து அப்பியவர். கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

18. கலிக்கம்ப நாயனார்: வணிகர், நடு நாடு, பெண்ணாகடம். தன்னிடம் பணியாற்றிய வேலையாள், சிவனடியாராக வந்த போது அவரை வழிபட்டதோடு, வழிபடாத தம் மனைவி கையை வெட்டியவர். காலம் தெரியவரவில்லை.

19. கலிய நாயனார்: செக்கார் (எண்ணெய் ஆட்டுபவர்) தொண்டை நாடு, திருவொற்றியூர். திருவிளக்கெரிக்க எண்ணெய் இல்லாகும் போது தம் இரத்தத்தால் விளக்கெரித்தவர். காலம் தெரியவரவில்லை.

20. கழறிற்றறிவார் நாயனார்: இவரைச் சேரமான் பெருமாள் நாயனார் என்றும் குறிப்பர். அரசர், மலைநாடு, கொடுங்கோளூர். நடராசப் பெருமான் சிலம்பொலி கேட்கச் சிறிது தாமதம் ஏற்பட, அதன் வழி சுந்தரமூர்த்தி சுவாமிகளை நண்பராகப் பெற்றவர். சிவபெருமான் பாணபத்திரர் என்ற இசைவாணருக்குத் திருமுகப் பாசுரம் கொடுத்து இவர்பால் அனுப்பினார். இவர் கயிலை சென்று 'திருக்கயிலாய ஞான உலா'ப் பாடிய சிறப்புடையவர். காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

21. கழற்சிங்க நாயனார்: குறுநில மன்னர். சிவபூசைக்குரிய பூவைத் தம் மனைவி மோந்ததற்காக அவள் மூக்கை அரிந்தார். இது போதாதென்று அவள் கையையும் வெட்டியவர். காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

22. காரி நாயனார்: சோழநாடு, திருக்கடவூர். 'காரிக்கோவை' என்ற நூல் பாடி, பொருள்பெற்று ஆலயப்பணி செய்தவர். காலம் தெரியவரவில்லை.

23. காரைக்காலம்மையார்: (பேயார்) வணிகர், சோழநாடு, காரைக்கால். சிவபெருமானை வேண்டி மாங்கனியும் பேய் வடிவும் பெற்றவர். வடதிருவாலங்காட்டில் சிவனார் ஆடல் கண்டவர். மூத்த திருப்பதிகம், திருவிரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பன இவர் பாடிய நூல்கள். காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

24. குங்குலியக்கலய நாயனார்: அந்தணர், சோழநாடு, திருக்கடவூர். மனைவியின் தாலியை விற்றுக் குங்குலியம் வாங்கிப் புகைத்து அருள் பெற்றவர். திருப்பனந்தாளில் சாய்ந் திருந்த சிவலிங்கத்தைக் கழுத்தில் பூமாலை பூட்டி நிமிர்த்தியவர். கி.பி 7-ஆம் நூற்றாண்டினர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

25. குலச்சிறை நாயனார்: பாண்டிநாடு - மணமேற்குடி. தம் அரசன் சமணசமயம் சார்ந்து வாழ்ந்த போதும் சிவபெருமானையும் சிவனடியார்களையும் வழிபட்டவர். திருஞானசம்பந்தரைச் சோழநாட்டிலிருந்து அழைத்துவந்து பாண்டியனையும் நாட்டினரையும் சைவநெறிக்குத் திருப்பியவர். கி.பி. 7ம் நூற்றாண்டு.

26. கூற்றுவ நாயனார்: குறுநில மன்னர், களந்தை. தில்லை வாழ் அந்தணர்கள் இவருக்கு முடிசூட்ட மறுத்ததனால் தில்லைப் பெருமான் திருவடிகளையே முடியாகச் சூடிக்கொண்டவர். காலம் தெரியவரவில்லை.

27. கோச்செங்கட் சோழ நாயனார்: அரசர், சோழநாடு. முற்பிறவியில் சிலந்தியாக இருந்து சிவனை வழிபட்டவர். 70 சிவாலயங்களைக் கட்டியவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

28. கோட்புலி நாயனார்: வேளாளர், சோழநாடு. திருநாட்டியத்தான்குடி. சிவ பூசைக்குரிய நெல்லையுண்ட சுற்றத்தாரையும், தாய் வயிற்றிலிருந்த சிசுக்களையும் வெட்டிக் கொன்றவர். தம் மகளிர் இருவரையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு மகளாக வழங்கியவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

29. சடைய நாயனார்: ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையார். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

30. சண்டேசுவர நாயனார்: அந்தணர், சோழநாடு திருச்சேய் ஏலூர். அபிஷேகப் பால் குடத்தை இடறிய தந்தையின் காலை வெட்டித் தொண்டர் தலைவரானவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

31. சத்தி நாயனார்: வேளாளர், சோழநாடு, விரிஞ்சியூர். சிவனடியார்களைக் குறை கூறுபவர்களின் நாக்கை அறுத்தவர். காலம் தெரியவரவில்லை.

32. சாக்கிய நாயனார்: வேளாளர், திருச்சங்கமங்கை. மறவாது நாள்தோறும் (அன்பு கொண்டு) சிவலிங்கத்தின் மீது கல் எறிந்து வழிபட்டவர். கி.பி.7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

33. சிறப்புலி நாயனார்: அந்தணர், சோழநாடு, திருஆக்கூர். சிவனடியார்களுக்கு உணவும், பொருளும் வழங்கியவர். காலம் தெரியவரவில்லை.

34. சிறுத்தொண்ட நாயனார்: மாமாத்திரர், சோழநாடு திருஞ்செங்காட்டங்குடி. சிவபெருமானுக்கு தம் ஒரே மகனைக் கறியாக்கி அமுது படைத்தவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

35. சுந்தரமூர்த்தி சுவாமிகள்: ஆதிசைவர், நடுநாடு, திருநாவலூர் பெரியபுராணம் தோன்ற முதல் நூலாகத் திருத்தொண்டத் தொகை பாடியவர். இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப் பட்டவர். முதலைவாய்ப் பாலகனை அழைத்தவர். பெரியபுராணக் காப்பியத் தலைவர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

36. செருத்துணை நாயனார்: வேளாளர், சோழநாடு, தஞ்சாவூர், கழற்சிங்க நாயனாரின் மனைவி சிவபூசைக்குரிய பூவை மோந்தமைக்காக அவர் மூக்கை அறுத்தவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

37. சோமாசிமாற நாயனார்: அந்தணர், சோழநாடு, திரு அம்பர். வேதவேள்விகள் செய்தவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

38. தண்டியடிகள் நாயனார்: சோழநாடு, திருவாரூர். பிறவிக் குருடராக இருந்தும், திருக்குளப் பணி செய்து, குருடு நீங்கப் பெற்றவர். சமணரை வென்றவர். காலம் கி.பி. 7ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

39. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்: ஏகாலியர் (வண்ணார்) தொண்டை நாடு. காஞ்சிபுரம். சிவனடியாருக்கு வாக்களித்தபடி, அவர் துணியைத் தோய்த்து உலர்த்தித்தர இயலாததால், தம் தலையைக் கல்லின் மீது மோதிக்கொண்டவர். கி.பி. 7ம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

40. திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்: அந்தணர், சோழ நாடு, சீர்காழி. உமையம்மையாரால் திருமுலைப்பால் ஊட்டப் பெற்றுச் சிவஞானம் பெற்றவர். எலும்பைப் பெண்ணாக்குதல் முதலிய பல அற்புதங்கள் நிகழ்த்தியவர். பாண்டிய நாட்டில் சைவத்தை நிலை நிறுத்தியவர். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

41. திருநாவுக்கரசு சுவாமிகள்: வேளாளர், நடுநாடு, திருவாமூர். சமணசமயம் சென்று, தமக்கையார் திலகவதியார் தவத்தால் சைவசமயம் மீண்டவர். உழவாரத்தால் கைத்தொண்டு செய்தவர். கல் தெப்பமாக மிதக்க, கரை சேர்ந்தவர். திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் பாடியளித்தவர். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

42. திருநாளைப் போவார் நாயனார்: (நந்தனார்) புலையர், சோழநாடு. ஆதனூர். தில்லையைக் காண விரும்பி, தீப்புகுந்து முனிவராய் எழுந்து சிற்றம்பலவன் திருமுன்பு மறைந்தவர். காலம் தெரியவரவில்லை.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

43. திருநீலகண்ட நாயனார்: குயவர், சோழநாடு, சிதம்பரம். அயலார் அறியாவண்ணம், மனைவியின் சபதத்துக்கு உடன்பட்டு, அவரைத் தீண்டாது, இளமையிலும், முதுமையிலும் இல்லறம் நடத்திச் சிவனருளால் இளமை பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

44. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்: பாணர், நடுநாடு. திரு எருக்கத்தம்புலியூர். திருஞானசம்பந்தருடன் தலங்கள் தோறும் சென்று யாழ் வாசித்துத் தொண்டு செய்தவர். கி.பி 7-ஆம் நூற்றாண்டு.

45. திருநீலநக்க நாயனார்: அந்தணர், சோழநாடு, சாத்தமங்கை. சிவலிங்கத் திருமேனி மீது வாயால் ஊதிய மனைவியை வெறுத்து, சிவனருளால் உண்மையை உணர்ந்தவர். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

46. திருமூல நாயனார்: இடையர், சோழநாடு, சாத்தனூர். மூலன் என்ற இடையர் உடலில் தாம் புகுந்து, யோகத்தில் தலை நின்று திருமந்திரம் என்ற நூலைப் பாடியளித்தவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

47. நமிநந்தி அடிகள் நாயனார்: அந்தணர், சோழநாடு, ஏமப்பேரூர். தண்ணீரால் விளக்கெரித்தவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

48. நரசிங்க முனையரைய நாயனார்: குறுநிலமன்னர், நடு நாடு. சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தவர், சிவவேடம் பூண்ட காமக் குறி மலர்ந்த தூர்த்தனையும் வழிபட்டவர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

49. நின்றசீர் நெடுமாற நாயனார்: அரசர், பாண்டி நாடு, மதுரை. திருஞானசம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்க, அவர் திருவருளால் கூன்நீங்கப் பெற்றுச் சைவரானார். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

50. நேச நாயனார்: சாலியர்-காம்பீலிநகரம். சிவனடியார்களுக்கு ஆடைகளைத் தாராளமாக வழங்கியவர். காலம் தெரியவரவில்லை

51. புகழ்ச்சோழ நாயனார்: அரசர், சோழநாடு, உறையூர். பகைவனது அறுபட்ட தலையில் சிவசின்னமாகிய சடையைக் கண்டு, அஞ்சி உயிர் நீத்தார். காலம் தெரியவரவில்லை.

52. புகழ் துணை நாயனார்: ஆதிசைவர், செருவிலிபுத்தூர். சிவபூசைக்கு உதவியாகப் பஞ்சகாலத்தில் இறைவனால் காசு அளிக்கப் பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

53. பூசலார் நாயனார்: அந்தணர், தொண்டைநாடு, திரு நின்றவூர். மனத்தினால் கோயில் கட்டிச் சிவவழிபாடு செய்தவர். திருஞானசம்பந்தர் காலத்திற்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தவர்.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

54. பெருமிழலைக் குறும்ப நாயனார்: பெருமிழலையூர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு, அவர் கயிலை செல்லுதல் அறிந்து, யோக நெறியால் தாமும் கயிலை சேர்ந்தவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

55. மங்கையர்க்கரசியார்: (மானியார்) அரசியார், பாண்டி நாடு. திருஞானசம்பந்தரை வரவழைத்துத் தம் கணவரையும், பாண்டிய நாட்டையும் சைவ நெறிக்குத் திருப்பியவர். காலம் 7-ஆம் நூற்றாண்டு.

56. மானக்கஞ்சாற நாயனார்: வேளாளர், கஞ்சாறூர், மணம் கொள்ள இருந்த மகள் தலைமுடியைச் சிவனடியார் வேண்டியவாறு அறுத்து வழங்கியவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

57. முருக நாயனார்: அந்தணர், சோழநாடு, திருப்புகலூர். பூத்தொண்டு செய்து, திருஞானசம்பந்தர் திருமணநாளில் சிவசோதியில் கலந்தவர். காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு.

58. முனையடுவார் நாயனார்: வேளாளர், சோழநாடு, திருநீடூர். கூலிக்குப் போர்செய்து, அக்கூலி கொண்டு சிவனடியார்களுக்கு உதவிகளைச் செய்தவர். காலம் தெரியவரவில்லை.

59. மூர்க்க நாயனார்: வேளாளர், தொண்டை நாடு, திருவேற்காடு. சூதாட்டத்தால் கிடைத்த வருவாயைக் கொண்டு சிவனடியார்களுக்கு உதவியவர். காலம் தெரியவரவில்லை.

60. மூர்த்தி நாயனார்: வணிகர், பாண்டியநாடு, மதுரை. சந்தனம் வழங்க முட்டுப்பாடு ஏற்பட்டபோது தம் முழங்கை எலும்பையே அரைக்க முனைந்தவர். திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி ஆகிய மூன்றால் உலகாண்டவர். காலம் தெரியவில்லை.

61. மெய்ப்பொருள் நாயனார்: குறுநில மன்னர், நடுநாடு, திருக்கோவலூர். வஞ்சித்துச் சிவவேடமணிந்து வந்த பகைவன் கைவாளால் வெட்டுண்டு, அவனை மன்னித்து உயிர்நீத்தவர். காலம் தெரியவரவில்லை.

62. வாயிலார் நாயனார்: வேளாளர், தொண்டை நாடு, மயிலாப்பூர். மனத்தினாலேயே ஞானபூசை செய்து சிவன் அருள் பெற்றவர். காலம் தெரியவரவில்லை.

63. விறல்மிண்ட நாயனார்: வேளாளர், மலைநாடு, செங்குன்றூர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகை பாடுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தவர். காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

CC-0. In Public Domain. Digtized by Muthulakshmi Research Academy

சான்றோர்களைப் பற்றி எழுதிய அறிஞர்கள்

1

திருஞான சம்பந்தர் *(மரபின் மைந்தன் முத்தையா)*
திருநாவுக்கரசர் *(பேராசிரியர் இராம.இருசுப்பிள்ளை)*
சுந்தரர் *(புலவர்மணியன்)*

2

மாணிக்கவாசகர் *(முனைவர் தெ.ஞானசுந்தரம்)*
காரைக்கால் அம்மையார் *(முனைவர் தரணி பாஸ்கர்)*
சேக்கிழார் *(முனைவர் செல்வக்கணபதி)*

3

ஆண்டாள் *(முனைவர் நிர்மலா மோகன்)*
குலசேகர ஆழ்வார் *(முனைவர் கா.அரங்கசாமி)*
திருமங்கையாழ்வார் *(முனைவர் அமுதன்)*

4

பெரியாழ்வார் *(முனைவர் தரணி பாஸ்கர்)*
நம்மாழ்வார் *(முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்)*
வேதாந்ததேசிகர் *(முனைவர் பிரேமா நந்தகுமார்)*

5

ஸ்ரீமத்வர் *(டாக்டர் சுதா சேஷையன்)*
ஸ்ரீராமானுசர் *(முனைவர் ம.பெ. சீனிவாசன்)*
வள்ளலார் *(முனைவர் ம.ரா.போ.குருசாமி)*

6

திருமூலர் *(முனைவர் அ.அறிவொளி)*
மெய்கண்டார் *(முனைவர் ந.இரா.சென்னியப்பன்)*
தாயுமானவர் *(முனைவர் இ.சுந்தரமூர்த்தி)*

7

வீரமாமுனிவர் *(முனைவர் ம.செ.இரபிசிங்)*
குணங்குடி மஸ்தான் *(முனைவர் தக்கலை பஷீர்)*
மகாகவி பாரதியார் *(முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்)*

8

சாந்தலிங்க சுவாமிகள் *(தவத்திரு.சாந்தலிங்க இராமசாமி அடிகளார்)*
கந்தசாமி சுவாமிகள் *(புலவர் ப.வெ.நாகராசன்)*
சுவாமி சித்பவானந்தர் *(வழக்கறிஞர் மு.மாரியப்பன்)*

9

சிவப்பிரகாசர் *(முனைவர் ம.மனோன்மணி)*
சிவஞான முனிவர் *(முனைவர் வே.செல்லாத்தாள்)*
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் *(முனைவர் நெல்லை ந.சொக்கலிங்கம்)*

10

ஆதிசங்கரர் *(எஸ்.வைத்தியநாத கிருஷ்ணன்)*
அருணகிரியார் *(முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்)*
குமரகுருபரர் *(முனைவர் இரா.மோகன்)*

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy